# ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி அவதாரத்தலம்

## அஞ்ஜனாத்ரி - திருமலை

புராண-இலக்கிய-கல்வெட்டு-வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபணம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

2022

# ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி அவதாரத்தலம்
# அஞ்ஜனாத்ரி - திருமலை

## புராண-இலக்கிய-கல்வெட்டு-வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபணம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
2022

# SRI ANJANEYASWAMY JANMASTHALAM, ANJANADRI - TIRUMALA

**Original Telugu Editor :** **Prof. V. Muralidhara Sharma**
Vice-Chancellor, National Sanskrit University,
Tirupati & President, Pandita Parishad.

**Tamil Editor :** **Dr. V. G. Chokkalingam,** M.A., P.hd.
Editor, Sapthagiri Magazine,
Tirumala Tirupati Devasthanams, Tirupati.

# ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி அவதாரத்தலம், அஞ்ஜநாத்ரி-திருமலை

**தெலுங்கு மூலம் ஆசிரியர் :** **பேராசிரியர் வி. முரளிதர சர்மா,**
துணைவேந்தர், ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம்,
திருப்பதி & தலைவர், பண்டித பரிஷத்.

**தமிழ் ஆசிரியர் :** **டாக்டர். வி.ஜி.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.**
ஆசிரியர், ஸப்தகிரி சமய மாத இதழ்,
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

**பிரதிகள் :** *500*

**விலை :** விலைமதிப்பற்றது.

**Published by**
**Sri. A.V. Dharma Reddy,** I.D.E.S.,
Executive Officer,
Tirumala Tirupati Devasthanams,
Tirupati - 517 507.

**D.T.P. :** Chief Editor Office & Publication Division,
T.T.D., Tirupati.

**Cover Page :** Chief Editor Office, T.T.D., Tirupati.

**Printed at :** T.T.D. Press, Tirupati.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி அவதாரத் தலம் உறுதிப்படுத்த நியமிக்கப்பட்ட அறிஞர் குழு

**தலைவர்**

01. பேராசிரியர் விரிவெண்டி முரளிதர சர்மா
துணைவேந்தர், ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம், திருப்பதி.
சிக்ஷா, வ்யாகரணம், உளவியல் இதிகாசம் ஆய்வு முறையில் நிபுணர்

**உறுப்பினர்கள்**

01. பேராசிரியர் ஜானமத்தி ராமகிருஷ்ணா,
ஓய்வு பெற்ற வ்யாகரண பேராசிரியர், ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம், திருப்பதி.
பன்மொழி சாத்திர நூல் எழுத்தாளர், புராண இலக்கிய ஆய்வாளர்

02. பேராசிரியர் ராணி சதாசிவ மூர்த்தி,
டீன், அகடமிக் அஃபைர்ஸ், ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம், திருப்பதி.
சமஸ்க்ருத சாஹித்ய விஞ்ஞான சாத்திர நிபுணர்

03. பேராசிரியர் சங்கர நாராயணன்
சாஹித்ய சாஸ்திர அத்யாபகர், ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம், திருப்பதி.
“தாம்ர சாசன நாயகர்” விருது பெற்றவர், சோழர் வரலாற்று ஆய்வு மையம், தஞ்சாவூர்

04. திரு. விஜயகுமார் ஜாதவ்,
ஓய்வு பெற்ற துணை இயக்குனர்,
ஆந்திர மாநில தொல்பொருள் மற்றும் கண்காட்சித் துறையில் ஓய்வு பெற்ற செயலாளர்

05. டாக்டர் ஆகெள்ள விபீஷண சர்மா,
சிறப்பு அதிகாரி, உன்னத வேதாத்யயன நிறுவனம்,இயக்குநர், அன்னமய்யா செயல் திட்டம், தி.தி.தே., திருப்பதி.
சமஸ்க்ருத சாஹித்ய, சாஸ்திரம் கற்றுத் தேர்ந்தவர், புகழ் பெற்ற உபன்யாசகர், பன்மொழி நூல் எழுத்தாளர்

தாய் அஞ்ஜனையுடன் பால அனுமன்
அஞ்ஜனாத்ரி, திருமலை



# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| வாழ்த்துரை | திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி | ..... | vii |
| முகவுரை | டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். | ..... | viii |
| பதிப்புரை – அஞ்சனாநந்தனம் வந்தே | திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். | ..... | xi |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப இராமாநுஜ பெரிய ஜீயர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xiv |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோவிந்த இராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xvii |
| ஜகத்குரு ஸ்ரீ ராமபத்ராசார்யர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xviii |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸித்தேஸ்வராநந்த பாரதீமஹா ஸ்வாமிகளுடைய திவ்ய அருளுரை | | ..... | xxii |
| மாதாஜிஸ்ரீ ரம்யானந்த பாரதீ ஸ்வாமிகளுடைய திவ்ய அருளுரை | | ..... | xxvi |
| பூஜ்யஸ்ரீ வித்யா ஸ்வரூபானந்த ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xxx |
| அகோபில மடத்தின் 46வது ஜீயர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xxxi |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ யதுகிரி யதிராஜ ஜீயர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xxxii |
| 1008 ஸ்ரீஸ்ரீஸ்ரீமத்ஸுபுதேந்த்ரதீர்த்த ஸ்ரீபாதாங்கர ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xxxiii |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்யாஸ்ரீச தீர்த்த ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xxxv |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸத்யாத்ம தீர்த்த ஸ்ரீ பாதுலவாரி திவ்ய அருளுரை | | ..... | xxxvi |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்தேஷ தீர்த்த ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | ..... | xl |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ 1008 சுஜயாநிதி தீர்த்த ஸ்ரீ பாதங்கலவாரு ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை | | .... | xli |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜகத்குரு ராமபத்ராசார்ய ஸ்வாமிகள் பூமி பூஜையின்போது ஆற்றிய திவ்ய அருளுரை | | ..... | xlii |
| விசாக சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர ஸ்வாமிகள் பூமி பூஜையின் போது ஆற்றிய திவ்ய அருளுரை | | ..... | xlv |
| விசாக சாரதாபீட உத்தராதிகாரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாத்மாநந்தேந்ர ஸ்வாமிகள் பூமி பூஜையின் போது ஆற்றிய திவ்ய அருளுரை | | ..... | xlvii |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோவிந் தேவ்ஜி மஹராஜ் ஸ்வாமிகள் பூமி பூஜையின் போது ஆற்றிய திவ்ய அருளுரை | | ..... | xlviii |
| விச்வ ஹிந்து பரிஷத் ஸ்ரீ கோட்டேஸ்வரசர்மா ஸ்வாமி பூமி பூஜையின் போது ஆற்றிய திவ்ய அருளுரை | | ..... | li |
| முன்னுரை | | ..... | lvii |

| அத். | தலைப்பு | மொழிபெயர்ப்பாளர்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புராணங்களின் பழமையும் சான்றுகளும் | – திருமதி ராதாராமநாதன் | 3 |
| 2. | ஶ்ரீ சங்கர பாஷ்யத்தில் புராணேதிஹாஸ வசனங்கள் | – திரு. லக்ஷ்மி நரஸிம்மன் | 23 |
| 3. | ஶ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம்–சான்றுகள் | – திருமதி வி. உஷா | 49 |
| 4. | ஶ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் மேலும் சில தகவல்கள் | – திருமதி வி. உஷா | 59 |
| 5. | ஶ்ரீ வேங்கடாசல இதிஹாச மாலை ஶ்ரீ வேங்கடேஸ்வர தத்துவம் | – திருமதி வி. உஷா | 67 |
| 6. | புராணச் சான்றுகள் | – திரு ல. வெங்கடேசன் – முனைவர். ஆ. அரங்கராஜன் | 73 |
| 7. | ஹனுமனின் பிறப்பிடம் திருமலை (புவியியல் ஆதாரங்களுடன்) | – திரு ல. வெங்கடேசன் – முனைவர். ஆ. அரங்கராஜன் | 103 |
| 8. | ஏழுமலைகள்–அஞ்ஜனாத்ரி – ஓர் தொல்பொருள் ஆய்வு | – திரு. வ.ஓ. சுரேஷ் | 117 |
| 9. | திருவேங்கடமுடையான் பக்தி இலக்கிய படைப்பில் அஞ்ஜனாத்ரி | – திரு. கே.எம். மணிவண்ணன் | 129 |
| 10. | இலக்கிய ஆதாரங்கள் | – திரு ல. வெங்கடேசன் – முனைவர். ஆ. அரங்கராஜன் | 139 |
| 11. | வைணவ இலக்கியங்களில் திருமலை – அஞ்ஜனாத்ரி | – திரு ல. வெங்கடேசன், முனைவர். ஆ. அரங்கராஜன் | 153 |
| 12. | ஏழுமலைகளில் அஞ்ஜனாத்ரியின் முக்கியத்துவம் | – திரு ல. வெங்கடேசன், முனைவர். ஆ. அரங்கராஜன் | 165 |
| 13. | ஹனுமனின் அவதாரத்தலம் குறித்து பல விதமான மக்களின் மாறுபட்ட கருத்துகள் | | 175 |
| 14. | ஶ்ரீ ஆஞ்ஜநேயர் சரித்திரத்தில் சில மிக முக்கியமான திருத்தலங்கள் | – டாக்டர் வி.ஜி. சொக்கலிங்கம் | 181 |
| 15. | ஐயமும்–பதிலும் | | 199 |
| 16. | பின்னிணைப்பு–1 :: சவால்–ஏ–ஜவாப் | | 202 |
| | பின்னிணைப்பு–2 :: கல்வெட்டுகள் | | 208 |
| | துணை நூற்பட்டியல் | | 230 |

**Y.V. SUBBA REDDY**
**Ex-M.P.**

**CHAIRMAN**
T.T.DEVASTHANAMS
TRUST BOARD

Cell : 98490 00916
Office : 0877-2263640
P.A. : 95055 59559 / 94911 94916
Res : 0864511111
e-mail : yvsubbareddymp@gmail.com
Office : Swarna Tirumala Rest House, T.T.D., Tirumala.
Res. : House # 12, Rainbow Villas, Navodaya Colony, Tadepalli, AMARAVATHI - 522 501.

# திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத் தலைவரின் வாழ்த்துரை

கலியுகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய கண்கண்ட அவதார வடிவம் திருவேங்கடமுடையான். அத்திருவேங்கடமுடையான் தன் கோயிலுக்கு வரும் பக்தர்களை பாகுபாடின்றி காப்பாற்றுகின்ற கருணை உள்ளம் கொண்டவன். பல மஹநீயர்கள் பிறப்பு எடுப்பதற்கும் அவதரிப்பதற்கும் திருமலை என்ற திவ்ய க்ஷேத்ரமே காரணமாக இருந்தது. த்ரேதா யுகத்தில் திருமலை திவ்விய க்ஷேத்திரத்தில் ஆகாச கங்கா பாய்கின்ற புண்ணிய தலத்தில் அஞ்ஜனா தேவி தவம் செய்து ஆஞ்ஜநேயரை பெற்றெடுத்த காரணத்தினால் இந்த க்ஷேத்திரத்திற்கு அஞ்ஜனாத்ரி என்னும் பெயர் உண்டானது என்ற உண்மையை வேதவியாஸர் எழுதிய புராணங்களில் சொல்லப்பட்டுள்ளதால், அப்படிப்பட்ட புராணங்களின் தொகுப்பான ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் என்னும் நூலினுடைய நம்பகத் தன்மையை பகவத் இராமாநுஜாசார்யர் உறுதிப்படுத்தினார்.

அஞ்ஜனாத்ரிதான் ஆஞ்ஜனேயருடைய பிறப்பிடம் என்று ஸ்ரீநிவாஸருடைய பக்தர்கள் அனைவருக்கும் புராணம் – இலக்கியம் – கல்வெட்டுகள் மற்றும் வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபிப்பதே இந்த “ஸ்ரீஆஞ்ஜநேய ஸ்வாமி அவதாரத்தலம் திருமலை” என்னும் நூலின் நோக்கம். திருமலை திருப்பதி தேவஸ்தானம் சிறந்த பண்டிதர்கள் மற்றும் பீடாதிபதிகளின் கருத்துக்கள் மற்றும் கட்டுரைகளுடன் இந்நூலினை வெளியிடுகிறது. இதில் உள்ள அனைத்து ஆய்வுக் கட்டுரைகள் ஸ்ரீஹனுமன் க்ஷேத்திரத்தின் மீதும், திருவேங்கடமுடையான் மீதும் நம்பிக்கை, சரணாகதி மற்றும் மிகுந்த பக்தி போன்றவற்றை வளர்க்க உதவும் என நம்புகிறேன்.

என்றும் ஸ்ரீவாரி சேவையில்

**ஒய்.வி. சுப்பா ரெட்டி**

(பொறுப்பாண்மைக்குழுத்தலைவர்)

தி.தி.தே. திருப்பதி.

**டாக்டர். கே.வி. ஜவஹர் ரெட்டி. ஐ.ஏ.எஸ்,**
செயலாட்சித் தலைவர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்.
கே.டி.ரோடு–517507. ஆ.மா.
தொலைபேசி எண் : 08772264977

## முகவுரை

*புத்திர்பலம் யஸோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா |*
*அஜாட்யம் வாக்படுத்வஞ் ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத் ||*

ஸ்ரீஆஞ்ஜநேயரை நினைத்தால் ஞானம், வலிமை, வெற்றி, துணிவு, அச்சமின்மை, உடல் நலம், விழிப்புணர்வு, பேச்சுத் திறன் ஆகியவை ஏற்படும் என்று வேதங்கள் கூறுகின்றன.

*“வேதங்களையே கற்களாகக் கொண்ட மலை”* என்று அன்னமய்யா போற்றியபடி திருமலை மிகவும் புனிதமான மலையாகும். இங்கே உள்ள ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு செடியும், ஒவ்வொரு கற்களும், ஒவ்வொரு அணுவும் பகவானுடைய உருவங்களே ஆகும்.

திருமலையில் உள்ள ஏழுமலைகளுக்கு க்ருத, த்ரேத, துவாபர, கலியுகத்தில் பல்வேறு பெயர்கள் இருப்பதாக ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் வாயிலாகத் தெரிகிறது. க்ருதயுகத்தில் வ்ருஷாத்ரி என்றும், த்ரேதாயுகத்தில் அஞ்ஜனாத்ரி என்றும், துவாபரயுகத்தில் சேஷஸைலம் என்றும், கலியுகத்தில் வேங்கடாத்ரி என்றும் பெயர்கள் இருப்பதாக பவிஷ்யோத்தர புராணம் உறுதிப்படுத்துகிறது. த்ரேதாயுகத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமி இந்த மலையில் அவதரித்ததனால் இம்மலைக்கு அஞ்ஜனாத்ரி என்று பெயர் வந்தது.

2020–ல் நான் பகவானுடைய அனுக்ரஹத்தால் தி.தி.தே. செயலாட்சித்தலைவராகப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே எனக்கு தொலைபேசி மூலமாக ஒரு தகவல் வந்தது. அதில் ஒரு அறிமுகமில்லாத நபர் ஸ்ரீஆஞ்ஜநேயருடைய உண்மையான அவதாரத்தலம் அஞ்ஜனாத்ரி என்றும், இந்த விஷயத்தை வெளி உலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய கடமை செயலாட்சித் தலைவராக உள்ள தங்களுக்கு இருக்கின்றது எனக் கூறினார். அது பகவானுடைய சங்கல்பமாக இருக்கலாம். அந்த சமயத்தில் தான் அயோத்யாவில் ஸ்ரீராம ஜென்ம பூமி ஆலய நிர்மாணம் நடந்து கொண்டு இருந்தது. ஆஞ்ஜநேயருடைய ஜன்ம பூமியை வெளி உலகிற்கு தெரியப்படுத்தும் பொறுப்பை பரமாத்மா எனக்கு அளித்துள்ளார் என்று நான் உணர்ந்தேன். மறுநாள் இத்தகவலை தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி அவர்களிடமும், அப்போதைய அன்னமாச்சார்ய திட்ட இயக்குனர் அவர்களிடமும் தெரிவித்தேன். அன்னமாச்சார்ய திட்ட இயக்குநர் இந்த விஷயத்தை நானும் சில புராணங்களில் கேட்டு இருக்கிறேன் இதை உறுதி செய்வதற்கு சில பண்டிதர்களை கொண்ட ஒரு ஆராய்ச்சிக் குழுவை அமைக்க வேண்டும் என்று

பரிந்துரைத்தார். அதன் பிறகு பிரபல உபந்யாஸகர் ஸ்ரீ ஆகெள்ள விபீஷண சர்மா அவர்களின் உதவியுடன் அன்றைய ராஷ்டீரிய சமஸ்கிருத வித்யாபீடத்தின் துணைவேந்தர் பேராசிரியர் விரிவெண்டி முரளிதர சர்மா தலைமையில் அன்றைய ராஷ்ட்ரீய ஸமஸ்கிருத வித்யா பீடத்தின் பேராசிரியர். ஜானமத்தி இராமகிருஷ்ணா, பேராசிரியர் இராணி சதாசிவ மூர்த்தி, பேராசிரியர் சங்கர நாராயணன், ஆந்திர மாநில தொல்பொருள் அருங்காட்சியகத்தின் ஓய்வு பெற்ற துணை இயக்குனர் திரு.விஜயகுமார் ஜாதவ், தி.தி.தே. உயர் வேதக்கல்வி நிறுவனத்தின் தலைவர் டாக்டர்.ஆகெள்ள விபீஷண சர்மா அவர்களுடன் கூடிய அறிஞர்கள் குழுவை உருவாக்கி, ஹனுமனின் பிறப்பிடத்தை தீர்மானிக்கும் பணியை ஒப்படைக்கப்பட்டது.

இக்குழுவினர்கள் மூன்று மாத காலம் புராணம், வரலாறு, புவியியல், கல்வெட்டு ஆதாரங்கள் முதலியவற்றை பரிசோதித்து திருமலையில் உள்ள ஆகாச கங்கை தீர்த்தம்அமைந்து இருக்கும் இடமான அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறப்பிடமாக உறுதிப்படுத்தி தம்முடைய கருத்துக்களையும் அதற்குண்டான காரணங்களையும் ஆதாரங்களுடன் கூடிய அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இந்த விஷயத்தை உலகத்திற்கு தெரிவிக்கும் முன்மொழிவை, ஸ்ரீ பிலவ வருடப் பிறப்பன்று அதாவது உகாதி அன்று செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து ஹனுமனின் பிறப்பிடம் பற்றிய ஆதாரங்களுடன் கூடிய சிறு துண்டு பிரசுரத்தை அச்சிட்டோம். நம்முடைய சங்கல்பம் ஒன்றாக இருந்தால் பெருமாளின் சங்கல்பம் வேறு ஒன்றாக இருக்கும். இந்த ஹனுமனின் பிறப்பிட விஷயத்தை உகாதிக்கு பதில் ஹனுமனின் ஸ்வாமியான ஸ்ரீ இராமபிரானின் அவதார தினமான ஸ்ரீராம நவமி அன்று திருமலை நாத நீராஜன மண்டபத்தில் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன. எதிர்பாராத விதமாக அன்றைய மேதகு தமிழக ஆளுனர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் திருவேங்கட முடையான் தரிசனத்திற்காக திருமலைக்கு வந்தார். இந்த அறிவிப்பு பற்றிய விஷயம் தெரிந்தவுடன் தாமும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன் என்று எங்களுக்கு ஊக்கமளித்தார்.

21.04.2021 ஆம் தேதி ஸ்ரீராம நவமி அன்று அன்றைய மேதகு தமிழக ஆளுனர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் முன்னிலையில், ஹனுமனின் பிறப்பிடத்தை உறுதிப்படுத்தும் அறிஞர்கள் குழுவினர் சேர்ந்து ஆய்வு செய்ததை திருமலை பெருமாளின் சன்னிதி முன்பு உள்ள நாதநீராஜன மண்டபத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள், பலவித பத்திரிகையாளர்கள், ஒளிப்பரப்பாளர்கள் முன்னிலையில் “ஹனுமனின் பிறப்பிடம் திருமலையில் உள்ள ஆகாச கங்கை அமைந்து இருக்கும் இடமான அஞ்ஜனாத்ரியே” என்று பலதரப்பட்ட ஆதாரங்களுடன் தெரிவிக்கப்பட்டது. எவருக்க ாவது ஆட்சேபங்கள் இருந்தால் தெரிவிக்கும்படி அவகாசம் கொடுத்து தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ஹனுமனின் பிறப்பிடம் திருமலையில் உள்ள ஆகாச கங்கை என்பது இப்போது எதற்கு வந்தது என்று சிலர் வாதிட்டனர். அதற்கு பதில் பகவத் சங்கல்பம், தொலைபேசி மூலமாக

வந்த விஷயம் என்னை ஊக்குவித்தது. அனேகமாக ஹனுமன் தன்னுடைய பிரபுவான இராமபிரானின் பிறப்பிடம் உறுதியான பிறகே தன்னுடைய பிறப்பிடம் உறுதிப்படுத்த வேண்டும் என்று நினைத்தது போல் அது இருந்தது.

2021 ஜூலை 30,31 தேதிகளில் திருப்பதி ராஷ்ட்ரீய ஸமஸ்க்ருத வித்யா பீடத்தின் தலைமையில் "ஹனுமத் ஜன்ம பூமி நிஜநிர்தாரண" "ஹனுமனின் பிறப்பிடம் பற்றிய உண்மை உறுதிப்பாடு" என்ற பொருளில் ஒரு இணையதள மாநாட்டை (வெப்னார்) ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் உலகம் முழுவதிலிருந்தும் பல அறிஞர்கள் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர். சித்ர கூட ஜகத்குரு ஸ்ரீராமபத்ராசாரிய ஸ்வாமிகள் மாநாட்டிற்கு மங்களாசாசனம் செய்து உரையாற்றும் போது திருமலையே ஹனுமனின் பிறப்பிடம் என்பதை நான் முழுமனதுடன் ஒப்புக்கொள்கிறேன். இது வாயு புராணம் போன்ற புராணங்களில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்று சொன்னார். சிலரிடமிருந்து எதிர்ப்புகள் வந்தாலும் அவை நியாயமானவை அல்ல என்பதால் அந்த எதிர்ப்புகள் நிலைக்காமல் போயிற்று.

நாத நீராஜன மண்டபத்தில் அன்று தெரிவிக்கப்பட்டபடி திருமலை ஆகாச கங்கை தீர்த்தம் அமைந்து இருக்கும் அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறப்பிடம் என்று உறுதிசெய்து இப்போது இப்புத்தகத்தை நியாயமான பலதரப்பட்ட ஆதாரங்களுடன் தி.தி.தே. தற்பொழுது நூலாக அச்சிடுகிறது. இதில் பல்வேறு பீடாதிபதிகளும், மடாதிபதிகளும் தங்களது மங்களாசாசன வடிவில் ஆகாச கங்கை தீர்த்தம் அமைந்துள்ள அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறப்பிடம் என்ற விஷயம் வலுப்பெற திவ்விய அருளுரை வழங்கியுள்ளனர்.

ஹனுமனின் பிறப்பிடமான ஆகாச கங்கை தீர்த்தம் அமைந்துள்ள அஞ்ஜனாத்ரியில் கோயில் கட்டுவதும் மற்றும் மேம்பாடு செய்வதற்குமான பூமி பூஜை 16 பிப்ரவரி 2022 அன்று வேத விதிகள் சொல்லியபடி அடிக்கல் நாட்டப்பட்டது. ஹனுமனின் பிறப்பிடத்தை உறுதி செய்யும் திட்டத்தில் பங்கேற்ற அறிஞர்குழு உறுப்பினர்களுக்கும், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி அவர்களுக்கும் மற்றும் உதவி செய்த பணியாளர்களுக்கும், ஆதாரங்களை கொடுப்பதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி செய்த அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் அனைவருக்கும் திருவேங்கடவனின் பரிபூரணமான அருள் கிடைக்க வேணுமாய் தேவதேவனான ஸ்ரீநிவாஸனை பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு

திருவேங்கடவனின் பாதபத்மாராதனையில்

**டாக்டர். கே.எஸ். ஜவஹர்ரெட்டி**

செயலாட்சித்தலைவர்.

திருப்பதி

தேதி : 08.02.2022

**திரு. ஏ.வி. தர்மாரெட்டி** ஐ.டி.இ.எஸ்.
கூடுதல் செயலாட்சித்தலைவர்

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**
கோகுலம் அலுவலகம், திருமலை – 517 507.
ஆந்திர மாநிலம் தொ.பேசி : 0877–2277777

## பதிப்புரை

## அஞ்ஜனாநந்தனம் வந்தே

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான திருவேங்கடவனின் இருப்பிடமான திருமலைகளில் அஞ்ஜனாத்ரியே ஆஞ்ஜனேய ஸ்வாமியின் பிறப்பிடம் என்று பல புராணங்களில் முன்பே கூறப்பட்டாலும், அவருடைய பிறப்பிடத்தைப் பற்றி மக்களின் மத்தியில் இப்பொழுது வரை அறியப்படாமல் இருப்பது, இப்போது அந்த விஷயம் தோன்றியதின் பின்னணியில் ஆஞ்ஜனேய ஸ்வாமியின் ஸங்கல்பமே காரணமென்று சமீபத்தில் தோன்றிய பரிணாமங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும் தன்னுடைய பிரபுவான ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் கோயிலை கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, தன்னுடைய பிறப்பிட இரகசியத்தை உலகுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்பது ஆஞ்ஜனேய ஸ்வாமியின் ஸங்கல்பம் போலும்.

ஸ்ரீராமரின் பிறப்பிடம் குறித்து இந்திய நாட்டின் உச்சநீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு வெளிவந்து, அதற்கு ஏற்ப மாண்புமிகு பாரதப் பிரதமர் அயோத்தியில் ஸ்ரீராமபிரானின் கோயில் கட்டுவதற்கு 05–08–2020 ஆம் தேதியன்று அடிக்கல் நாட்டிய பிறகே ஆஞ்ஜனேய ஸ்வாமியின் பிறப்பிடம் பற்றிய தீர்வுக்கு முயற்சி எடுக்கப்பட்டது. இது இப்படியிருக்க திருமலை வரலாற்றில் முதன் முறையாக பெருமாளின் முன்பு திருமலை நாத நீராஜன மண்டபத்தில் 11–6–2020–ல் இருந்து சுந்தர காண்டத்திலுள்ள ஒவ்வொரு சுலோகத்தின் பாராயணம், அர்த்தம் மற்றும் தாத்பர்யங்களுடன் தொடர் உபன்யாசம் நிற்காமல் தினந்தோறும் நடைபெற்றது. ஸ்ரீராமாயணத்தில் உள்ள காண்டங்களில் சுந்தரகாண்டத்திற்கு உள்ள உயர்ந்த இடம் பற்றியும், ஹனுமனின் உயர்வை பற்றியும் தெரிவிப்பது சுந்தரகாண்டமே என்ற விஷயம் எல்லோருக்கும் நன்றாக தெரிந்ததே.

இந்த பாராயணம் ஆரம்பித்த சில நாட்களிலேயே உயர்திரு செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஆஞ்ஜனேயரின் பிறப்பிடம் பற்றி தெரிந்து கொள்ளவேண்டுமென்ற நினைவு வருவது, நிபுணர்களான பண்டிதர் குழுவை ஏற்படுத்தி, தகுந்த ஆதாரங்களை சேகரிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைப்பது, அவர்களின் ஆணையின்படி, ராஷ்டீரிய ஸம்ஸ்க்ருத பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்களை நான் தொடர்பு கொண்டபொழுது அவர் உடனடியாக இந்த பெருங்காரியத்தை செய்ய ஒப்புக்கொள்வது, துணை வேந்தர் அவர்களின் தலைமையில் குழுவை ஏற்பாடு செய்வது, திருமலையே ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பிறப்பிடம் என்று அந்த குழு ஆதாரங்களுடன் நிரூபித்து, தங்களுடைய முதல்

அறிக்கையை ஸ்ரீராம நவமி அன்று (21–4–2021) நாதநீராஜனமேடையில் அவையோர்களின் முன்னிலையில் அன்றைய மேதகு தமிழக ஆளுனர் பன்வாரிலால் புரோகித் அவர்களின் முன்னிலையில் வெளியிடுவது, இந்த அபிப்ராயத்தின் மேல் மாறுப்பட்ட கருத்துகள் இருந்தால் ஆதாரங்களுடன் தெரிவிக்கலாம் என்று செய்தித்தாள்கள் மூலமாகத் தெரிவிப்பது, இவை உடனுக் குடன் நடந்தேறியது. இந்த பரிணாமங்கள் அனைத்தையும் பார்க்கும்பொழுது இது ஆஞ்ஜனேய ஸ்வாமியின் விருப்பத்தாலும் மற்றும் அவருடைய அருளால் மட்டுமே சாத்தியமானது என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை.

சுந்தர காண்ட உபன்யாசம் செய்த டாக்டர் ஆகெள்ள விபீஷண சர்மா அவர்கள், ஆஞ்ஜனேயரின் உபாசகரான பேராசிரியர் முரளீதர சர்மா அவர்கள் இப்படி ஆஞ்ஜநேய ஸ்வாமியின் அருளுக்கு ஏதோ ஒருவிதமாக இலக்கானவர்களே இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பது, அவர்கள் மூலம் ஹனுமனின் பிறப்பிடத்தை உறுதி செய்வது என்பது ஆஞ்ஜனேய ஸ்வாமி தன்னுடைய காரியத்தை தானே பூர்த்தி செய்து கொண்டார் என்று எடுத்துக்காட்டாக சொல்லிக் கொள்ளலாம்.

அதே விதமாக தி.தி.தே. (ஷோடஸதின) 16 நாட்கள் சுந்தர காண்ட பாராயண நிகழ்ச்சியான *''ராகவோ விஜயம் தத்யாத் மமஸீதாபதி: ப்ரபு: ராகவஸ்ய பதத்வந்த்வம் தத்யாத் அமித வைபவம்''* என்ற மந்திர ரூபமான வாக்கியத்தை அனுசரித்து கடபயாதி எண் கணிதப்படி இரண்டு முறை நடத்திவைக்கப்பட்டது. எப்படி ஆஞ்ஜனேய ஸ்வாமி இடையே நிற்காமல் இலங்கைக்குச் சென்று சீதா தேவியின் இருப்பிடத்தை தெரிந்து கொண்டு, ஸ்ரீராமபிரானுக்கு தெரிவித்தார் என்று சுந்தரகாண்டம் தெரிவிக்கின்றதோ, அதேபோல் பண்டித பரிஷத் தலைமையில் தர்மகிரியில் 31.5.2021 ஆம் தேதி சுமார் 18 மணி நேரம் சுந்தர காண்டம் முழுவதும் தி.தி.தே.பாராயணம் செய்தது. கொரோனா காரணமாக உலகமனைத்தும் முடங்கி இருந்தபோதிலும், இந்த நிகழ்வுகள் அனைத்தும் இடைவிடாமல் நடந்தது என்றால் அதற்குக் காரணம் ஆஞ்ஜனேய ஸ்வாமியின் பரிபூர்ண அருளே என்பதில் சந்தேகம் இல்லை.

பகவத் இராமாநுஜர் புராணப் பகுதிகளை எடுத்து ஒரு வரிசைக் கிரமத்தில் யாதவ ராஜ சபையில் வெளியிட்டார் என்றும், அந்த புராணப் பகுதிகள் அனைத்தும் “ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம்” என பிரசித்தி அடைந்ததென்று அனந்தாழ்வார் “இதிஹாஸ மாலை” என்ற நூலில் குறிப்பிட்டு உள்ளதாக இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

அப்படியே புராணங்களின் நம்பகத்தன்மை குறித்து இந்த புத்தகத்தில் பல இடங்களில் விவரமாக சொல்லப்பட்டுள்ளதால் இந்திய கலாசாரத்திற்கு ஆதாரமான புராணங்களை நம்பி திருமலை க்ஷேத்ரமே ஹனுமனின் பிறப்பிடம் என்று நன்கு சொல்லப்பட்ட புராண வசனங்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் கண்டிப்பாக உள்ளது. இந்த கருத்தோடு இணையதள

(வெபினார்) மாநாட்டில் கலந்து கொண்ட பீடாதிபதிகள், மடாதிபதிகள், பண்டிதர்கள், ஆய்வாளர்கள் என அனைவரும் ஒப்புக்கொள்வது விசேஷம்.

குழு ஏற்பாடு செய்த ஒவ்வொரு கூட்டத்திலும் நானும் கலந்து கொண்டு வழிநடத்தியதின் மூலமும், உறுப்பினர்கள் கேட்ட வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்ததன் மூலமும், உயர்திரு செயலாட்சித்தலைவர் அவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த பெரிய பொறுப்பை எடுத்து நிறைவேற்றினேன் என்று சொல்லிக் கொள்வதற்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது.

சிறந்த பண்டிதர்கள் குழுவில் இடம் பெற்று இந்த பெரிய யாகத்தில் சிறுதுரும்பாகி என்னால் முடிந்த முயற்சியை செய்தேன் என்பது என்னுடைய பூர்வஜென்ம புண்ணியமாக எண்ணுகிறேன். எனக்கு இந்த பெரிய வாய்ப்பை வழங்கிய ஸ்ரீவேங்கடாத்ரி ராமருக்கும், ஸ்ரீமத் ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கும் அனேக சாஷ்டாங்க நமஸ்காரங்களை சமர்ப்பித்துக் கொள்கிறேன். இந்த விரிவான புத்தகம் உருவாவதற்கு உறுதுணையாக இருந்த நிபுணர்களின் குழுத்தலைவர், உறுப்பினர்கள், உதவியாளர்கள், வலைதளமாநாட்டில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்த மதிப்பிற்குரிய பண்டிதர்களுக்கும், பிரமுகர்களுக்கும், ஓவியக்கலைஞரான திரு.கூசி அவர்களுக்கும், ராஷ்டீரிய ஸம்ஸ்க்ருத பல்கலைகழகத்தின் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இந்த பெரும்வாய்ப்பை தந்த உயர்திரு செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமை பட்டுள்ளேன்.

இதற்காக இரவு பகலாக கஷ்டப்பட்டு அதிக நேரத்தை செலவழித்து ஆரம்பம் முதல் முடிவு வரை தன்னுடைய சொந்த மேற்பார்வையில் பல நூல்களை விரிவாக ஆராய்ந்து இந்தப் புத்தகத்தை இவ்வளவு அழகாக சீரமைத்து தந்த பேராசிரியர் விரிவிண்டி முரளீதர சர்மா அவர்கள் புத்தக வெளியீட்டு விழாவின் பொழுது இல்லாதது அளவற்ற துயரத்தை அளிக்கிறது. இருப்பினும் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியை அவர் புண்யலோகத்தில் இருந்தே அனுக்கிரஹிக்க வேண்டும் என்று பகவானை மனதார வேண்டுகிறேன்.

திருமலை
தேதி : 09.02.2022

ஸ்ரீவாரி சேவையில்
**ஆள்ள வெங்கட தர்மா ரெட்டி.**



ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப இராமாநுஜ பெரிய ஜீயர் ஸ்வாமிகள்**

ஸ்ரீபெரிய ஜீயர்மடம்,

227, கோவிந்தராஜ ஸ்வாமி வடக்குமாடவீதி,

திருப்பதி – 517501

தேதி : 19–02–2022

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபயவேதாந்த
ப்ரவர்த்தகரான ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான
திருமலை திருப்பதி, திருநின்றஊர் தேவஸ்தானங்களின்
தர்மகர்த்தாவான பெரியகோவில் கேள்விஅப்பன்

## ஸ்ரீமந்நாராயணனை தியானித்து எழுதிய திவ்யஅருளுரை

**நமோ நாராயணாய!**

பகவத் இராமாநுஜர் தன்னுடைய 120 வயதிற்குள் 3 முறை திருமலைக்கு வந்திருந்து அனேக சிஷ்டாசாரங்களையும் கைங்கர்யங்களையும் ஏற்படுத்தி இப்பொழுது நமக்கு ஸ்ரீநிவாஸர் என்ற உயர்ந்த நிதியை அளித்துள்ளார்.

ஸ்ரீஇராமாநுஜர் திருமலை திருப்பதி ஆலயங்களில் நடக்கும் கைங்கர்யங்கள் மற்றும் உத்ஸவங்களை சம்ப்ரதாயத்தின் படியும், ஸ்ரீவைகானஸ பூஜை முறைப்படியும், ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் படியும் நடக்கும் படியாக கட்டுதிட்டமான நிர்வாகத்தை ஏற்பாடு செய்தார். அன்று முதல் இன்றுவரை அவரின் ஆணையின் படியே திருமலை திருப்பதி ஆலயங்களில் மிக உறுதியாக (சிறிதும் தவறாமல்) நிர்வகிக்கப்படுகிறது.

முன்பு ஒரு சமயம் திருவேங்கட மலையில் வீற்றிருக்கும் பெருமாளின் விஷயத்தில் மத அபிப்ராய பேதங்கள் ஏற்பட்ட பொழுது பகவத் இராமாநுஜர் யாதவ ராஜ சபையில் மற்ற மதத்தவர்களோடு திருமலையில் வீற்றிருப்பவர் சாக்ஷாத் ஸ்ரீவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீநிவாஸரே என்று பற்பல வேத – இதிகாச–புராண – திவ்யப்பிரபந்தகளை விவரித்து அவர்களுடன் வாதம் செய்து, நிர்ணயித்து, ஸ்ரீநிவாஸருக்கு அவருடைய (ஸ்ரீராமாநுஜரின்) யோக தபோ பலத்தால் சங்கு–சக்கரங்களை அலங்கரித்து இந்த உலகத்திற்கு அந்த மூர்த்தி ஸ்ரீநிவாஸரே என்று நிரூபித்து ஸ்ரீநிவாஸருக்கு ஆசாரியர் என்ற அதி உன்னதமான ஸ்தானத்தை அடைந்தார்.

இந்த விஷயங்கள் ஸ்ரீ ராமாநுஜருடைய சீடரான ஸ்ரீஅனந்தாழ்வான் 11ஆம் நூற்றாண்டில் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதிய “ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸமாலை” என்ற புத்தகத்தின் மூலம் நமக்கு தெரியவருகிறது.

இந்த புத்தகத்தில் ஸ்ரீ இராமாநுஜர் யாதவ ராஜசபையில் பிரம்ம –வாமன–கருட–வாயு–பத்ம–வராஹ– பிரம்மாண்ட– மார்கண்டேய– பவிஷ்யோத்தர புராணங்கள், ருக்வேதத்தில் 8வது அஷ்டகம், – ஹரிவம்ஸத்தைச் சேர்ந்த சேஷதர்மபுராணம்– ஸ்ரீ பாஞ்சராத்ர, ஸ்ரீ வைகானஸ முதலான பகவத் சாஸ்த்ரங்கள்–ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் அதில் முக்கியமான நம்மாழ்வார் அருளிச்செய்த “திருவாய்மொழி”யில் வேங்கடமலையையும், திருவேங்கடமுடையானைப் பற்றியும் சொல்லப்பட்ட விஷயங்களை விரிவாக விவரித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

இந்த நூலிலிருந்தே ஸ்ரீராமாநுஜர் ஏற்பாடு செய்த ஜீயர் ஸ்வாமிகளின் நிர்வாகம், அவர்களின் முன்னிலையில் நடக்கும் கைங்கர்யங்கள் அனைத்தும் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமாநுஜர் கூறிய வேங்கடேஸ்வர தத்துவத்தை இந்த நூல் நமக்கு அருளிச் செய்ததால் இந்த நூலை நாம் மிகவும் ஆதாரமானதாக எண்ணவேண்டும்.

***“ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத் குரு:”***

என்ற சுலோகத்தின் படி ஜகத்குருவான ஸ்ரீஇராமாநுஜருடைய வாக்கே (ஆணையே) எங்களுக்கு முதன்மையானது. வேத வாக்காகும்.

“திருமலை ஒழுகு” என்ற நூலின் மூலம் ஸ்ரீராமாநுஜர் திருமலையில் ஏற்பாடு செய்த விசிஷ்டாத்வைத சாம்ராஜ்யம், திருவேங்கடமுடையானுக்கு ஏற்படுத்தின கைங்கர்யங்கள் முதலிய அனைத்து விஷயங்களையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

## திருமலைக்கு சம்பந்தப்பட்ட வைபவங்களை வெளிப்படுத்தும் நூல்கள்:

வேங்கடாசல இதிஹாஸமாலை, திருமலை ஒழுகு, வேங்கடாசல மாஹாத்மியம் போன்றவற்றில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் புராண பாகங்களின் தொகுப்பு.

இராமாநுஜர் அனுக்ரஹித்த வேங்கடாசல இதிஹாஸ மாலையை ஆதாரமாகக் கொண்டு கி.பி. 1491ல் வேங்கடத்துறைவர் (இராமாநுஜ ஐயன்) 12 புராணங்களில் உள்ள ஸ்ரீ வேங்கடாசல க்ஷேத்திர மகிமைகளை வர்ணிக்கும் பகுதிகளை வேங்கடாசல மாஹாத்மியமாகத் தொகுத்தார்.

வேங்கடாசல மாஹாத்மியம் கிரீடாசல தோன்றலை திருவேங்கடவனின் அவதாரம் வரை எண்ணற்ற கதைகளைத் தெரிவிக்கின்றது. அதில் வேங்கடமலை ஏழுமலை சிகரங்களுடன் கூடியது என்று தெரிவித்து இருக்கிறது. அதில் ஸ்ரீராமாயண காலத்தில் வானர கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அஞ்ஜனாதேவி ஆண் குழந்தைக்காக இந்த மலையில் தவம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இந்த மலைக்கு அஞ்ஜனாத்ரி என்ற பெயர் வந்ததென்று நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த தவத்தின் பயனாக, வாயு தேவன் அருளால் அஞ்ஜனாதேவிக்கு ஹனுமன் பிறந்தார்.

ஸ்ரீராமருக்கு ஹனுமனைப்போலவே, திருவேங்கடமுடையானுக்கு ஜீயர் ஸ்வாமிகள் கைங்கர்யங்கள் செய்ய வேண்டுமாய் ஸ்ரீராமாநுஜர் நியமித்தார் என்று நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதற்காக ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி மடத்தில் ஸ்ரீசீதா ராமலக்ஷ்மணர்களை பிரதிஷ்டை செய்து

ஹனுமத் த்வஜம், ஹனுமன் முத்திரையை (சீல்) கொடுத்து வேங்கட மலையில் ஹனுமனின் சிறப்பு அம்சங்களை எடுத்துக் கூறினார்.

நமக்கு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸஹஸ்ர நாமத்தில்,

*''வாயுஸூனுக்ருத ஸேவாய நம:'',*

*''அஞ்ஜனாக்ருத பூஜாவதே நம'',*

*''அஞ்ஜனாத்ரி நிவாஸாய நம:'',*

என்றும், அஷ்டோத்தர ஸத நாமங்களில்,

*''ஸதஞ்ஜன கிரீஸாய ஸ்ரீ வேங்கடேஸாய நம:'',*

*''அஞ்ஜனாகோத்ர பதயே ஸ்ரீ வேங்கடேஸாய நம:'',*

என்றும் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்ரீமத்வேதமார்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்ய ஸ்ரீஇராமாநுஜரின் மறு அவதாரமான ஸ்ரீ மணவாள மாமுனிகளின் ஆணையின்படி பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம், பிரபத்தி, மங்களம் முதலிய ஸ்தோத்ர நாமங்களை அருளிச்செய்தார். அவர் கூட "அஞ்ஜனா சைல நாத ஸ்தோத்திரத்தில்" திருவேங்கடமுடையானை தோத்திரம் செய்தார். அப்படிப்பட்ட அஞ்ஜனாத்ரி நாதனான திருவேங்கடமுடையானின் வைபவங்களை நாம் அனைவரும் எப்போதும் நினைத்து ஆனந்தப்படுவோம்.

மங்களா சாஸனங்களுடன்.

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள்**

ஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமி மடம்

திருப்பதி.



ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

திருமலை திருப்பதி சிங்கராயகொண்ட வகையறா
தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாவான
**இளைய கோவில் கேள்வி அப்பன்**
**ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோவிந்த இராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமிகள்**
சின்ன ஜீயர் மடம், 161 கோவிந்தராஜ ஸ்வாமி சன்னிதி வீதி,
திருப்பதி – 517 501. தொலை பேசி எண் – 0877–2222575

## ஓம் நமோ நாராயணாய ஸ்ரீ மதே இராமாநுஜாய நம:

பகவத் இராமாநுஜர் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் நடக்கும் கைங்கர்யங்கள் மற்றும் உத்ஸவங்கள் (ஸம்ப்ரதாயப்படி) பாரம்பரியமாக ஸ்ரீ வைகானஸ ஆகம விதிகளின்படி நடக்கும் படியாக உறுதியான நிர்வாகத்தை ஏற்பாடு செய்தார். அன்று முதல் இன்று வரை அவரின் ஆணையின் படியே திருமலையில் கைங்கர்யங்கள் பாரம்பரியமாக நடைபெற்று வருகிறது.

அப்படியே முன்பு திருமலை க்ஷேத்திரத்தில் எழுந்தருளி இருக்கும் பெருமாளின் விஷயத்தில் சந்தேகம் ஏற்பட்ட போது பகவத் இராமாநுஜர் மிக சிரமப்பட்டு திருமலை மாஹாத்மியத்தை நிரூபிக்கும் புராணங்களை எடுத்து ஒரு முறையான வரிசையில் யாதவராஜ சபையில் எடுத்துக்காட்டி மலைமேல் எழுந்தருளி இருக்கும் ஸ்வாமி ஸ்ரீநிவாஸரே என்று நிரூபிப்பதற்கு வேண்டிய அனேக சிறப்பு அம்சங்களை புராணங்களிலிருந்து வெளிக் கொணர்ந்தார்.

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தின் பரிசீலனை,

*“தத்பர்வத-சாதாரண கதிபய- தர்மவிசேஷ-வ்யவஸ்தாபன -*
*வ்ருத்தாந்த: உச்யதே ஸ்ரீ வேங்கடாசல மஹாத்ம்ய-விஷய*
*புராண பகவான் ஸமன்தத:*
*பரிஸீலயன் பகவான் ராமானுஜ முநி:”* என்று இந்த வ்ருத்தாந்தத்தை உறுதிப் படுத்தினார்.

ஸ்ரீ இராமாநுஜர் ஸ்ரீநிவாஸரே என நிரூபிப்பதற்காக யாதவராஜ சபையில் எடுத்துரைத்த விஷயங்களை எடுத்து, அனந்தாழ்வார் “வேங்கடாசல இதிஹாஸ மாலை” என்ற நூலை எழுதினார். 300 வருடங்களுக்குப் பிறகு பலவித புராணங்களை ஆராய்ந்து அன்றைய பண்டிதர்கள் அந்த புராணப் பகுதிகளை வேங்கடாசல மாஹாத்மியம் என்று தொகுத்து வழங்கினார்கள்.

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தில் திருமலையில் உள்ள பலவித மலைகளின் உன்னத நிலையை விவரித்து உள்ளார்கள். அதில் அஞ்ஜனாத்ரியைப் பற்றி சொல்லும் போது அஞ்ஜனா தேவி திருமலையிலேயே தவம் செய்ததாக உள்ளது.

அஞ்ஜனா தேவி தவத்தின் பயனாலும், வாயு தேவனின் அருளாலும் உலக நன்மைக்காக ஸ்ரீராமரின் சேவகனாக ஆஞ்ஜநேய ஸ்வாமி அவதரித்தார் என்று புராண இதிகாசங்களின் மூலம் தெரிகின்றது.

மங்களாசாஸனங்களுடன்

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமிகள்**

சின்ன ஜீயர் மடம், திருப்பதி.

**जगद्गुरुरामभद्राचार्यदिव्याङ्गविश्वविद्यालय:**

चित्रकूट: - २१० २०४

उत्तरप्रदेश:

दूरवाणी 91-05198-224413



**श्रीश्रीश्री जगद्गुरु रामभद्राचार्य:**

व्यवस्थापक: कुलाधिपति:

पद्मविभूषणभूषितश्च

---

## श्रीमतां जगद्गुरूणां रामभद्राचार्याणां दिव्यसन्देश:

**अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् ।**
**कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयङ्करम् ।।**
**आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।**
**पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ।।**

धन्यं तत् स्थानं यत्र स्वयं वेङ्कटेश: श्रीनिवासो विराजते तत्र तस्य पर्वतस्य नाम **अञ्जनाद्रि:** इति सामान्यत: तु जना: विवदन्ते को नाम अञ्जनाद्रिरिति ? केचन हनूमतो जन्म कर्णाटके स्वीकुर्वन्ति, केचन गन्धमादने स्वीकुर्वन्ति। वस्तुतस्तु तिरुपतिस्थाने एव स पर्वतो वर्तते । स एव **अञ्जनाद्रि:** इत्यत्र केनापि संशीति: न कार्या। अस्मिन्नेव पर्वते तपस्यामाचचार भगवती हनूमतो माता अञ्जनादेवी। तस्यां तपस्यायां पूर्णायां स्वयमेव भगवान् शिव: निजतेजसा अञ्जनागर्भे आत्मानं सन्निवेशयामास । अत्रापि अञ्जना तु वायुतो हनूमन्तं लेभे । इदं तु सत्यम्। किन्तु किं मिथुनधर्मेण ? नैव । कदापि नैव । सप्तर्षय: अञ्जनाया: कर्णे राममन्त्रमुपदेष्टुम् आगता: । यदा ऋषीणां मुखात् फूत्काररूपेण वायु: अञ्जनाया: कर्णं गच्छन् आसीत् तस्मिन्नेव समये तत्र भगवान् शिव: आत्मानं स्थापितवान्। अर्थात् ऋषीणां मुखारविन्दनिर्गतवायुमाध्यमेन शिव एव तस्या: गर्भं प्राविशत् इति मदीया धी:। अत एव वाल्मीकि: अपि "अञ्जनासुप्रजा येन'' इति वारं वारं हनूमन्तम् आञ्जनेयं कथयति । वाल्मीकिरामायणे कुशलवमङ्गलाचरणे अपि ...

**उल्लङ्घ्य सिन्धोस्सलिलं सलीलं यश्शोकवह्निं जनकात्मजाया: ।**
**आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ।।**

**''अञ्जना सुप्रजा येन मातरिश्वा च सुव्रत'' - इति वाल्मीकिरामायणे**
हनुमान् चालीसायां **रामदूत अतुलित बलधामा अञ्जनीपुत्र पवनसुत**
**नामा हनुमान** ... एवं भगवत: आञ्जनेयस्य स्तुति: वर्तते ।

एवं हनूमत: जन्मस्थलरूपेण प्रसिद्धानि बहूनि स्थानानि सन्ति, किन्तु यत्र अञ्जना तपस्यां कृतवती स: पर्वत: क: इत्यत्र विवदन्ते विद्वांस: । किन्तु अहं तु पूर्णतया निश्चितवानस्मि अयमेव पर्वतो यत् तिरुमलक्षेत्रे विराजमान:

स्वयं वाल्मीकिरामायणस्य प्रसिद्धटीकायां मङ्गलाचरणमुखेन भूषणाख्यायां गोविन्दराजो ब्रवीति

**श्रीमत्यञ्जनभूधरस्य शिखरे श्रीमारुतेस्सन्निधौ**
**अग्रे वेङ्कटनायकस्य सदनद्वारे यतिक्ष्माभृतः।**
**नानादेशसमागतैर्बुधगणैः रामायणव्याक्रियां**
**विस्तीर्णां रचयेति सादरमहं स्वप्नेऽस्मि सञ्चोदितः ।।**

(अञ्जनाचलस्य शिखरे मारुतेः सन्निधौ भगवतः श्रीवेङ्कटेश्वरस्य आलयस्य समीपे नानादेशेभ्यः स
ज्ञजैः सह संचर्च्य रामायणकाव्यस्य विपुलव्याख्यानं रचयेति स्वप्नेऽहं भगवता समादिष्टः ।)

अस्मिन्नेव अञ्जनापर्वते हनूमान् जन्म लेभे । अत्रैव तत्रभवान् गोविन्दराजो भूषणटीकारचनायाः
। निष्कर्षतः अस्मिन् विषये केनापि नैव संशीतिः कार्या, न विचिकित्सा कार्या । एक एव निश्च
क्षेत्रे यः पर्वतो वर्तते स एव अञ्जनापर्वतः इति, तस्मिन्नेव पर्वते अञ्जना हनूमन्तं प्रसूतवती इति च
हं विरमामि ।

**ஜகத்குரு ராமபத்ராசார்ய மாற்றுத் திறனாளிகள் பல்கலைக் கழகம்**

சித்திரகூட் – 210 204. உத்திரபிரதேசம்.

தொ.எண்: 91–05198224413.




**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு ராமபத்ராசார்யர்**
நிறுவனர், துணைவேந்தர்,
பத்மவிபூஷன் விருது பெற்றவர்

# ஜகத்குரு ஸ்ரீ ராமபத்ராசார்யர் ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

திருவேங்கடமுடையான் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீவேங்கடாத்ரி பரம பவித்திரமான புண்ணியபூமி. அங்குள்ள மலைக்கு அஞ்ஜனாத்ரி என்று பெயர். பொதுவாக மக்கள் ஹனுமன் அவதாரத்தலம் எங்கே இருக்கிறது என்ற விஷயத்தில் வாத–பிரதிவாதங்களை முன் வைக்கின்றனர். ஹனுமன் அவதாரத்தலம் கர்நாடகத்தில் உள்ளதாக சிலர் கூறுகின்றார்கள்.

இன்னும் சிலர் கந்த மாதனத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். உண்மை என்னவென்றால் அது திருமலையிலேயே இருக்கின்றது. இந்த விஷயத்தில் எவருக்கும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆஞ்ஜனேய ஸ்வாமியின் அன்னையான அஞ்ஜனாதேவி இங்கேயே தவம் செய்தாள். அவள் தவம் பலிக்கும் சமயத்தில் பரமேச்வரன் அஞ்ஜனா தேவியின் கர்ப்பத்தில் புகுந்தார்.

வாயு தேவனால் அஞ்ஜனா தேவிக்கு மகன் பிறந்தான் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது ஸரீரஸம்பந்தத்தால் வந்தது அல்ல. ஸப்த ரிஷிகள் அஞ்ஜனா தேவிக்கு ராம நாம மந்திரத்தை உபதேசிப்பதற்காக வந்தார்கள். அப்போது அவர்களின் முகாரவிந்தத்திலிருந்து எழுந்த ஒலி (வாயு) காற்று மூலமாக சென்று கொண்டிருக்கும் போது அந்த காற்று மூலமாக பரமேச்வரனே அவளின் கர்ப்பத்தில் புகுந்தார். அதனால் ஸப்த ரிஷிகளின் வாயிலிருந்தே பரமேச்வரனே அஞ்ஜனா தேவியின் கர்ப்பத்தில் புகுந்தார் என்பது என்னுடைய கருத்து. வால்மீகி ராமாயணத்தில் கூட ஹனுமன் ஆஞ்ஜனேயன் என்றும், அவர் அஞ்ஜனா தேவியின் மகன் என்றும் சொல்லப்பட்டுள்ளது

*உல்லங்க்ய ஸிந்தோ ஸ்ஸலிலம் ஸலீலம்*
*யஸ்ஸோக வஹ்னிம் ஜனகாத்மஜாயா: |*
*ஆதாய தேனைவ ததாஹலங்காம் நமாமிதம்*
*ப்ராம்ஜலிர் ஆஞ்ஜனேயம் ||*

வால்மீகி ராமாயணத்தில் கூட "அஞ்ஜனா ஸு²ப்ரஜாயேன மாதரிஸ்வாச ஸு²வ்ரத" என்று சொல்லப்பட்டுள்ளது. ஹனுமான் சாலிஸாவில் கூட *'ராமதூத அதுலித பலதாமா அஞ்ஜனீ புத்ர பவன ஸு²த நாமா'* என்று ஆஞ்ஜனேயரின் ஸ்துதி உள்ளது. அதனால் ஆஞ்ஜனேயர் அஞ்ஜனா தேவிக்கு பிறந்த விஷயத்தில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆனால் அஞ்ஜனா தேவி தவம் செய்த மலை எங்கே இருக்கிறது என்ற விஷயத்தை குறித்து பலவித தவறான கருத்துகள் உள்ளன. இருப்பினும் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடம் திருமலையே என்பதை முழுமையான நம்பிக்கையுடன் நான் ஒப்புக் கொள்கிறேன். வாயு புராணம் முதலான புராணங்களில் இந்த விஷயம் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீ மத் வால்மீகி ராமாயண வ்யாக்யானமான 'பூஷண வ்யாக்யான'த்தில் உரையாசிரியரான கோவிந்த ராஜு² அவர்கள்,

*"ஸ்ரீ மத்யஞ்ஜன பூதரஸ்ய சிகரே ஸ்ரீ மாருதே ஸன்னிதௌ*
*அக்ரே வேங்கட நாயகஸ்ய ஸதனத்வாரே யதிக்ஷ்மாப்ருத:*
*நாநாதேஸஸமாகதைர்புதகணை: ராமாயணவ்யாக்ரியாம்*
*விஸ்தீர்ணாம் ரசயேதி ஸாதரமஹம் ஸ்வப்னே஽ஸ்மிஸஞ்சோதித:"*

"அஞ்ஜனாத்ரி சிகரத்தில் ஆஞ்ஜனேயரின் சன்னிதியில், திருவேங்கடமுடையானின் ஆலய வாயிலில் பல தேசங்களிலிருந்து வந்த பண்டிதர்களுடன் கலந்து இராமாயணத்திற்கு விரிவான வ்யாக்யானம் எழுதும்படி ஸ்ரீ ராமபிரான் கனவில் எனக்கு ஆணையிட்டார்" என்றும், கோவிந்தராஜர் திருமலையிலிருந்தே இந்த வ்யாக்யானத்தை எழுதியதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ப்ரமாணங்களின் மூலம் நான் திருமலையில் உள்ள ஏழுமலையில் ஒரு மலையே அஞ்ஜனாத்ரி என்றும், அங்கேயே ஹனுமன் பிறந்தார் என்றும் ஆதாரங்களுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெய் ஹனுமான்



# ஸ்ரீ சித்தேஸ்வரீ பீடம்

**குற்றாலம் - 627802 தென்காசி தாலுகா**

**தென்காசி மாவட்டம், தமிழ்நாடு**

மந்த்ர ஸ்வரூபமான, பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியர்
குற்றால ஸ்ரீஸித்தேஸ்வரீ பீடாதிபதிகள்,
ஜகத்குரு, நடமாடும் தெய்வம்

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸித்தேஸ்வராநந்த பாரதீமஹாஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

*"நாராயண ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।*
*அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥*

ஸித்தாஸ்ரம குருக்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். திருமலை திருப்பதி கோயில் நிர்வாகத்தினர் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தைப் பற்றிய அறிஞர்களின் கருத்தரங்குகள் மற்றும் அறிஞர்களின் மாநாடுகளை ஏற்பாடு செய்தனர். மேலும் அந்த முயற்சிகளை செய்தும் வருகின்றனர். திருமலையில் அஞ்ஜனாசலம் இருப்பதும், அங்கு ஆஞ்ஜனேய ஸ்வாமியின் கோயில் இருப்பதும், அங்கு வழிபாடு செய்வதும் இவைகளோடு அண்மை காலமாக எழுந்துள்ள சிலரின் விமர்சனங்களையும் கருத்தில் கொண்டு, திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது. இது அபூர்வமானதும் காலத்திற்கேற்ற அம்சமும் ஆகும்.

யோக வாஸிஸ்டத்தில் இராமர் ஒவ்வொரு கல்பத்திலும் வந்து கொண்டிருப்பார். இராமாவதாரம் ஒவ்வொரு கல்பத்திலும் நடந்து கொண்டு இருக்குமென்றும், இது வரை 12 முறை இராமாயணம் எழுதப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. எது எப்படி இருந்தாலும் இப்போதுள்ள காலத்தில் நடந்த இராம கதையே நமக்கு ப்ரமாணமாகும். அதற்கு வால்மீகியின் படைப்பே ஆதாரமாகும். வால்மீகி இராமாயணத்தோடு, புராண, இதிகாச, இலக்கியங்களில் பல இடத்தில் இராம கதை கூறப்படுகிறது. ஆகையால் நமக்கு ஆஞ்ஜநேயருடைய பிறப்பிட நிர்ணயத்தில் புராணங்களே சான்று ஆகும். வ்யாஸ மஹரிஷி ஸாக்ஷாத் நாராயணருடைய அம்ஸமாக அவதரித்த மஹாபுருஷராவார்.

*"விவித வேதத்த்வ வேதி வேதவ்யாஸுடாதி முனி பராசராத்மஜுன்டு"*

– ஆந்த்ர மஹாபாரதம், ஆதி பருவம் 1–32

ஆதிமுனிவர்வியாஸ மஹரிஷி, "முனீநாம் அப்யஹம் வ்யாஸ:" – முனிவர்களில் நான் வியாஸர் என்றார் ஸ்ரீ கிருஷ்ணர். ஈடு இணையற்ற மஹரிஷியாக இருப்பவர் வியாஸராக அவதரித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. அப்பேற்பட்ட ஞானத்தை உடைய மாபெரும் தபஸ்வி வியாஸராவார்.

வியாஸர் எழுதிய புராணங்கள் மிகவும் ப்ரமாணமானவைகளாகும். சாக்ஷாத் ஆஞ்ஜநேயரே இராமாயணம் எழுதியதாக வேறு ஒரு கதையும் உண்டு. போஜ, காளிதாஸர் கதைகளில் ஆஞ்ஜநேயர் எழுதியதாக ஒரு சுலோகம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. காளிதாஸர் ஆஞ்ஜனேயரை அழைத்த போது அவர் வந்து இந்த சுலோகத்தை நான் எழுதினேன் என்று கூறியதாக ஒரு புகழ்பெற்ற கதை இருக்கிறது.

*“சிவஸிரஸி ஸிராம்ஸி யானி ரேஜு:, சிவ! சிவ! தானிலுடந்திக்ருத்ரபாதே,*
*அயிகலு விஷம: புராக்ருதானாம் பவதி ஹி ஜந்துஷு கர்மணாம் விபாக:”*

ஸ்ரீராமரால் வதம் செய்யப்பட்ட பிறகு சிவனுடைய தலையில் பிரதிபலித்த இராவணாசுரனுடைய தலைகள் கழுகின் கால்களால் உதைக்கப்பட்டன அல்லவா என்று சொல்கிற இச்சுலோகம் ஹனுமனுடைய ராமாயணத்தில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. ஹனுமன் எழுதிய இராமாயணம் நமக்கு கிடைக்கவில்லை. அதன் பிறகு ராமகதைக்கு பிரதானமாக இருக்கின்ற ஆதாரம் புராணக் கதைகளே ஆகும். புராணக் கதைகள் அனைத்தும் ப்ரமாணமானவைகளே ஆகும். 18 புராணங்களில் பல இடத்தில் ராமருடைய கதைகளும் திருவேங்கடவனுடைய கதைகளும் இருக்கின்றன. திருவேங்கடமுடையானின் கதைகளில் பலவிதமான விசேஷங்கள், புராணங்களில் காணப்படுகின்றன.

ஆந்திர மக்களுக்கு பிரம்மாண்ட புராணம் என்றால் மிகவும் விருப்பமாகும். ஆதிகவியான நன்னய்யாவைப் பற்றி சொல்லும் சமயத்தில் “பிரம்மாண்டாதி நாநா புராண விஞ்ஞான நிரது’ (ஆந்திர மஹாபாரதம் ஆதிபருவம் 1–9) என்று கூறினர். ப்ராம்ஹீ தத்தவர ப்ரஸாதுண்டவுரு ப்ரஞ்ஞாவிசேஷோதயா ஜிஹ்மஸ்வாந்துண்ட வீஸ்வரார்சன கலாஸீலுன்டவப்யர்ஹித பிரம்மாண்டாதி மஹாபுராண செயதாத்பர்யார்த்த நிர்தாரித ப்ரஹ்மஜ்ஞான கலானிதானமவு நீ பாக்யம்பு ஸாமான்யமே” (ஸ்ருங்கார நைஸதம், 1–13) என்று ஸ்ரீ நாதரை பற்றி பேசும் போது கூட அவர் பிரம்மாண்ட புராணத்தை அறிந்தவர் என்று கூறினர். இப்படி பிரம்மாண்ட புராணம் என்றால் ஆந்திர மக்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று தெரிகிறது. அதனுள் திருவேங்கடமுடையானின் கதைகள் உள்ளன. பவிஷ்யோத்தர புராணத்தில் இருக்கிற திருவேங்கடமுடையானின் சரித்திரத்தில் வேங்கடாசலத்தைப் பற்றி நன்கு விவரிக்கப்பட்டுள்ளது.

*“க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி த்ரேதாயாம் அஞ்ஜனாசலம்*
*த்வாபரே சேஷஸைலேதி கலௌ ஸ்ரீ வேங்கடாசலம்*

– பவிஷ்யோத்தர புராணம், வேங்கடாசல மாஹாத்ம்யம் – 1–36

கிருதயுகத்தில் இந்தத் திருமலையை வ்ருஷாத்ரி என்று அழைத்தார்கள். த்ரேதா யுகத்தில் இங்கு அஞ்சனாதேவி தவம் செய்ததனால் இந்த மலைக்கு அஞ்ஜனாசலம் என்று பெயர் வந்தது. அப்படியே இந்த மலைக்கு துவாபர யுகத்தில் சேஷஸைலம் என்று பெயர் வந்தது. கலியுகத்தில் வேங்கடாசலம் என்று பெயர் வந்தது. அப்படிப்பட்ட தெய்வீகமான, உயர்ந்ததான இந்த மலை மீது

அஞ்ஜனா தேவி தவம் செய்து ஆஞ்ஜநேயரை பெற்றெடுத்தாள் என்று நமக்கு புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியச் செய்திகள் கூறுகின்றன.

"அஞ்ஜனே! த்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ்தப்த்வா ஸுதாருணம்
புத்ரம் ஸுதவதி தஸ்மாத் லோகத்ரைய ஹிதாயவை:"

–பிரம்மாண்ட புராணம், வேங்கடாசல மாஹாத்மியம், தீர்த்தகண்டம் – 5–64

ஓ அஞ்சனா தேவீ! நீ இந்த மலையின் மீது மிகவும் கடினமான தவம் செய்து உலக நன்மைக்காக ஆண் மகனைப் பெற்றெடுத்தாய்.

"ப்ரஸித்திம் வ்யாது ஸைலோऽயம் அஞ்ஜனே! நாம தஸ்தவ,
அஞ்சனா சல இத்யேவ நாத்ர கார்யா விசாரணா"

–பிரம்மாண்ட புராணம், வேங்கடாசல மஹாத்மியம் தீர்த்தகண்டம் – 5–65

அஞ்ஜனா! உன்னுடைய பெயரால் இனிமேல் இந்த மலை அழைக்கப்படும். இந்த விஷயத்தில் எந்த வித விவாதமும் செய்யத் தேவையில்லை. இதே விதமாக பிரம்மாண்ட புராணத்தில் இந்த திருமலைகளைப் பற்றி சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. சமீபத்தில் கிஷ்கிந்தையில் உள்ள ஒரு மலைக்கு அஞ்ஜனாத்ரி என்ற பெயர் இருப்பதாகவும், அங்கு ஹனுமன் அவதாரம் செய்தார் என்றும் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு சாஸ்திர ஆதாரங்களோ, புராண ஆதாரங்களோ இல்லை. அனைத்து புராணங்களிலும் திருமலையிலேயே ஆஞ்ஜநேய ஸ்வாமி அவதரித்தார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. மேலும் சுக்ரீவன் ஸ்ரீராம பிரானின் காரியத்திற்காக உலகெங்கும் உள்ள வானரர்கள் அனைவரையும் அழைத்த போது அஞ்ஜனாசலத்தில் இருப்பவர்களையும் அழையுங்கள் என்று கூறினார். கிஷ்கிந்தையில் பேசும் போது இந்த வார்த்தைகளை சொன்னார் என்றால் அஞ்ஜனாசலம் வேறொன்று இருக்கிறது என்று பொருள் அல்லவா. அந்த அஞ்ஜனாசலம் திருமலையில் உள்ள மலையே. இந்த விஷயத்தில் எந்த சந்தேகமும் இல்லை.

மஹனீயரான ஆஞ்ஜனேய ஸ்வாமி இன்றும் இமயமலையில் இருக்கிறார். இமய மலையில் உள்ள கைலாச மலையில் ஒரு குகைக்கு ஹனுமத் குகை என்ற பெயர் உள்ளது. அன்று இங்கு வேங்கடாசலத்தில் அவதரித்த அந்த மஹா புருஷர் கிஷ்கிந்தைக்கு போய் சுக்ரீவருக்கு மந்திரியாக இருந்து இராமருக்கு தாஸராகி கடும் போர் புரிந்தவர். அப்படிப்பட்ட மஹான், அவதார புருஷர், ருத்ராம்ஸம் பெற்றவர் ஆஞ்ஜநேயர்.

"மனோஜவம் மாருத துல்யவேகம் ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்!
வாதாத்மஜம் வானர யூத முக்யம் ஸ்ரீராம தூதம் சிரஸா நமாமி!!"

பரமேச்வரன், நாராயண ஸ்வரூபன், நாராயணபக்தன், ராமபக்தன், ராமதாஸரான அந்த ஆஞ்ஜனேய ஸ்வாமி திருமலையில் அஞ்ஜனாசலத்தில் அவதரித்தார் என்று சொல்வதில் எந்த வித சந்தேகமும் இல்லை. அதைப் பற்றிய விவாதங்கள் உண்மையில் தேவையில்லை. அடுத்த ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரு விஷயத்தைப் பற்றி உண்மையா? இல்லையா? என்று முடிவெடுக்க வேண்டுமென்றால் அவர் ஒரு பண்டிதராக இருக்க வேண்டும், அவருக்கு

சமஸ்க்ருதம் தெரிந்திருக்க வேண்டும். அவர் புராணங்களைப் பற்றி அறிந்தவராகவும், சாஸ்திரம் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். அந்த மனிதரே ஒரு பீடாதிபதியாக இருந்தால் இன்னும் அதிகமான உண்மைத் தன்மையை அது கொண்டிருக்கும்.

பிராதனமாக சாஸ்திர புராணங்களைப் பற்றி தெரிந்தவராக இருந்தால் மட்டுமே இந்த விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு தகுதி உண்டு. சம்ஸ்கிருதம் சரியாக தெரியாதவர்கள், புராணத்தைப் பற்றி தெரியாதவர்கள் அவர்களின் இஷ்டப்படி பேசிக் கொண்டிருந்தால் அவற்றிற்கு எந்தவித பலனும் கிடையாது. அதனால் திருமலையில் உள்ள அஞ்ஜனாசலத்திலேயே ஹனுமன் பிறந்தார் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. பலவித சாஸ்திரங்கள், புராணங்கள், கல்வெட்டுகளிலிருந்து உண்மையான ஆதாரங்களை எடுத்துக்காட்டி அஞ்ஜனாசலமே ஆஞ்ஜனேய ஸ்வாமியின் பிறந்த இடம் என்று நிரூபித்து, சமஸ்க்ருத, சாஸ்த்ர, புராண பண்டிதர்கள் எழுதிய இந்த ஆதாரபூர்வமான ஆய்வு கட்டுரைகளின் தொகுப்பான இந்த புத்தகம் உலக மனைத்திலும் உள்ள பக்தர்களின் ஆதரவினைப் பெறும் என்றும் அப்படியே ஹனுமனின் பிறப்பிடத்தை பற்றிய ஒரு நிலையான ஆய்வு நூலாகவும் இது இருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

**சுபம் பூயாத்**

**நாராயண நாராயண**




# ஸ்ரீ சக்தி பீடம்

ராயல செருவு அருகில், திருப்பதி – 517561
சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். கைபேசி எண் : 09160455255




மந்த்ர மஹேஸ்வரி, ஸ்ரீசக்தி பீடாதீஸ்வர்

## மாதாஜி ஸ்ரீ ரம்யானந்த பாரதீ ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

*நாராயண ஸமாரம்பாம், ஸங்கராசார்ய மத்யமாம்*
*ஸ்ரீ ஸித்தேஸ்வர பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்*

பரம பூஜ்யரான பரம ஹம்ச பரிவ்ராஜகாசார்யர் குற்றாலம் சங்கராசார்யர் ஸ்ரீ சக்தி பீடத்தை நிருவியரான ஜகத் குரு ஸ்ரீ ஸித்தேஸ்வரானந்த பாரதீ மஹா ஸ்வாமி அவர்களின் பாத கமலங்களை வணங்கிவிட்டு,

*ஆரக்த ஜிஹ்வாம் விகடாக்ர தம்ஸ்ட்ராம்*
*ஸுன்யாம் பராம் ஸுந்தர பீஷணாங்கீம்*
*கரத்ரிசூலாம் களமுண்டநாளாம்*
*காளிம் கராளீம் ஸததம் பஜாமி*

ஸ்ரீ சக்தி பீடத்தின் முக்கிய தெய்வம் எல்லையற்ற சக்தி ஸ்வரூபிணி, மஹாகால ஸ்வரூபிணியுமான, காளிதேவியின் பாதபத்மங்களில் நமஸ்காரம் செய்து கலியுக ப்ரத்யக்ஷ தெய்வமான திருவேங்கடமுடையானின் திருவடித்தாமரைகளுக்கு தெண்டனிட்டு ப்ரணாமங்களை சமர்ப்பிக்கிறேன்.

இப்பொழுது கலியுக வைகுண்டமாக பக்தர்கள் எல்லோராலும் போற்றப்படுகின்ற ஸ்ரீவேங்கடாசலத்தைப் பற்றி வியாஸ மஹரிஷி நிறைய விஷயங்களைச் சொன்னார். ஆதி காலத்திலிருந்தும் ஆதி யுகத்திலிருந்தும் கூட இந்த க்ஷேத்திரம் எவ்வளவு புனிதமானதோ, எவ்வளவு சக்தியுள்ளதோ என்பது பற்றி ஸ்ரீ வியாசருடைய வார்த்தைகளில் தெரிய வருகிறது.

*க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி*
*த்ரேதாயாம்அஞ்ஜனாசலம்*
*த்வாபரே சேஷசைலேதி*
*கலௌ ஸ்ரீ வேங்கடாசலம்*

கிருதயுகத்திலிருந்து இந்த மஹாக்ஷேத்திரம் என்னென்ன பெயர்களில் அழைக்கப்பட்டது என்பது நமக்கு தெரிகிறது. இப்பொழுது கலியுக வைகுண்டமாகப் புகழ் பெற்று தேவாதிதேவனான திருவேங்கடமுடையான் இங்கு இருந்து கொண்டு உலகத்தின் அனைத்து திசைகளில் இருந்து வரும் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டுள்ளார். அதற்குக் காரணம் என்னவென்றால் ருத்ராம்ஸத்தை உடைய ஆஞ்ஜனேயர் அஞ்ஜனாதேவி மூலம் அவதரித்த இடம்

இதுவே ஆகும். அதனாலேயே இந்த மலையை அஞ்ஜனாசலமென்று அழைத்தார்கள். ஹரி மற்றும் ஹரனுக்கும் இருவருக்கும் சம்பந்தம் உடைய அவதார விசேஷங்கள் இங்கு நமக்கு தெரிய வருகிறது. இவ்விருவரின் அவதார விசேஷங்களுக்கு பின்னால் ஒரு மாபெரும் சக்தி இருப்பதாகத் தெரிகிறது. இந்த சக்தி என்ன? அந்த மகாசக்தி எது? எங்கிருந்து வந்தது என்று பார்த்தால் பாசத்திலிருந்து தோன்றியதான திவ்ய சக்தி அந்த மாத்ரு சக்தி.

இப்பொழுது நமது ஆராதனைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையான் துவாபரயுகத்தில் கிருஷ்ணராக இருந்த பொழுது, யசோதாதேவியின் வேண்டுகோளை தீர்ப்பதற்காக அவளுக்கு வரத்தை கொடுத்தார். அதற்கு பலனாக யசோதா தேவி, வகுளா தேவியாக அவதரித்தார். வைகுண்டநாதனான அந்த நாராயணன் திருவேங்கடமுடையானாக அவதரித்து இப்பொழுது இங்கு நிரந்தமாக இருந்து கொண்டு இருக்கிறார். ஹனுமனின் விஷயத்தில் கூட நாம் பார்த்தால் தாய்ப்பாசம் அவரை இந்த பூமியின் மீது பிறக்கும்படி செய்தது. அஞ்ஜனாதேவி அதி தீவிரமாக செய்த தவத்தின் பலத்தாலும் பாசத்தை நிரம்பப் பெற்ற அஞ்ஜனாதேவியினுடைய ஆசையின் பலனாகவும், தாய்மையின் சக்தியின் பலனாகவும், ருத்ராம்ஸத்தையுடைய ஆஞ்ஜனேயர் அவதரித்தார்.

அஞ்ஜனாசலம் ஆனாலும் வேங்கடமலையானாலும் எந்த பெயரால் சேவிக்கப்பட்டாலும், இந்த மஹாக்ஷேத்திரத்தினுடைய புகழில் தாய்மை சக்திக்கு அதிக இடம் இருக்கிறது என்ற விஷயம் முப்போதுக்கும் நிரந்தரமாக இருக்கும். அந்த தாய்மை சக்தியினாலேயே தான் திருவேங்கடமுடையான் இங்கே இருக்கிறார். த்ரேதாயுகத்தில் அவதரித்த ஆஞ்ஜனேயர் சிரஞ்ஜீவியாக இமாலயத்தில் ஒளிர்ந்து கொண்டு பக்தர்களை காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்.

*யாதேவி ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா*
*நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:*

என்று சொல்லிக் கொண்டு இருக்கும் மந்திரத்துக்கு சமானமான இந்த சுலோகத்திற்கு உதாரணமாக நின்று உற்சாகத்தை ஏற்படுத்தும் க்ஷேத்திரம் இந்த வேங்கடாசலம். இப்படிப்பட்ட திருமலையில் த்ரேதாயுகத்தில் அஞ்ஜனாத்ரியில் ஹனுமன் அவதரித்தார்.

வால்மீகி மஹரிஷி எழுதிய இராமாயணம் ஆஞ்ஜனேயருடைய சிறப்புகளையும், ஸ்ரீராமருடைய சிறப்புகளையும் மிகவும் ஆதாரமாக எண்ணும் நூல். இதில் ராமர் மற்றும் ஹனுமன் தொடர்பான சிறப்புகள் நமக்கு தெரிகிறது. ஹனுமன் இங்குள்ள அஞ்ஜனாத்ரியில் அவதரித்தார். ஹனுமனுக்கும், இராமருக்கும் தொடர்புடைய சிறப்பு அம்சங்களை பார்த்தால் ஸ்ரீராமர் மற்றும் ஹனுமன் த்ரேதாயுகத்தோடு நின்றுவிடவில்லை என்று தெரிகிறது. ஸ்ரீ ராமர் மற்றும் ஹனுமன் புராண புருஷர்களாக மட்டுமே அல்லாமல் புராணங்கள் மற்றும் வரலாற்றுக்கு அதீதமாக இன்று பாரத தேசத்தில் உள்ள ஒவ்வொரு இந்துவின் மனதிலும் நிலைத்து இருக்கிறார்கள்.

நம்முடைய பாரத தேசத்தில் இராமர் கோவில் மற்றும் ஹனுமன் கோவில் இல்லாத கிராமங்களே இருக்காது. இவர்களின் படம் இல்லாத இந்துக்களின் வீடுகளே இருக்காது என்று

(மிகைப்படுத்தலும் இல்லை) சொல்வதில் எந்த விதமான ஆச்சரியமும் இல்லை. அதனால் அத்தகைய தேவர்களுக்கு தொடர்புடைய (விசேஷங்களை) சிறப்பு அம்சங்களை வியாச பகவானால் வழங்கப்பட்ட புராணங்களின் அடிப்படையில் பார்த்தால் ஹனுமனின் பிறப்பிடத்திற்கு தொடர்புடைய அம்சங்கள் நமக்கு மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஸ்காந்த-வராஹ-பிரம்மாண்ட-பவிஷ்யோத்தர புராணங்களில் வேத வியாச மஹரிஷி மிகத் தெளிவாக ஹனுமன் பிறந்த கதையையும், இந்த அஞ்ஜனாத்ரி தல மஹத்துவத்தையும், வேங்கட மலையினுடைய சிறப்பு அம்சங்களையும் குறிப்பிட்டுள்ளார். இராம பிரானின் வரலாறு அனைத்து பகுதி மக்களுக்கும், அனைத்து மொழிக்காரர்களுக்கும் தொடர்புடையது. ஒவ்வொரு மொழியிலும் இராமாயணத்தைப் பற்றிய நூல்கள் இருக்கின்றன. ஹனுமனின் பிறப்பிடத்திற்கு தொடர்புடையவை நமக்கு தெரிகிறது. நம்முடைய தென் இந்தியாவில் பலதரப்பட்ட மொழிகளில் உள்ள சிறப்பு அம்சங்களை பார்த்தால் தமிழில் பிரபலமான கம்ப இராமாயணம் இதே விஷயத்தை தெரியப்படுத்துகிறது. புரந்தர தாஸரும் தன்னுடைய கீர்த்தனைகளில் ஹனுமனின் பிறப்பிடமான அஞ்ஜனாத்ரி இந்த வேங்கட மலையின் மீதே உள்ளது என்று கூறியுள்ளார்.

இப்படி மொழிகளுக்கும், பகுதிகளுக்கும் சம்பந்தம் இல்லாமல் ஒவ்வொருவரும் இந்த அஞ்ஜனாத்ரிக்கு தொடர்புடைய சிறப்பு அம்சங்களை தெரிவித்தார்கள். ஆதிகாலம் முதல் இருக்கும் மஹரிஷிகள் அதன் பிறகு வந்த மஹான்கள் சொன்னதால் மட்டுமே அல்லாமல் பல சாசனங்கள் மூலமும், புவியியல் பரிசோதனைகள் மூலமும், அஞ்ஜனாத்ரி வேங்கடமலையின் மீதே உள்ளது என்ற விஷயம் மிகத் தெளிவாக நிரூபனமானது. தென் இந்தியாவில் ஹம்பி க்ஷேத்திரத்தில் மட்டுமே அல்லாமல் வட இந்தியாவில் உள்ள பல பகுதிகளில் ஹனுமன் அவதரித்தார் என்ற மக்களின் செய்தி (வாய்மொழி) நமக்கு ஒலிக்கிறது. இது சகஜமே! தலத்தின் புகழுக்கு தொடர்புடைய அம்சங்களில் மற்றும் தல புராணங்களுக்கு தொடர்புடைய கதைகளிலும் இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது ஹனுமனின் பிறப்பிடத்திற்கு தொடர்புடையது மட்டுமே இல்லை. சாதாரணமாக தல புராணங்களில் இப்படிப்பட்ட பல அபிப்ராய பேதங்கள் (கருத்து வேறுபாடுகள்) தென்படுகின்றன.

எனினும் அவற்றிற்கு நம்பகத் தன்மை என்ன? எவ்வளவு இருக்கிறது? இது உண்மையா? இல்லையா? மக்களின் பேச்சு, அவர்களுடைய பக்திக்கு தொடர்புடையது மட்டும் தானா? என்ற கோணங்களில் ஆராய்ச்சி நடக்க வேண்டும். ஆஞ்ஜனேயர் கோடிக்கணக்கான பாரத மக்களின் இதயங்களில் வீற்றிருக்கிறார். (உலகம் அனைத்திலும் உள்ள இந்துக்களின் மனதிலும் வீற்றிருக்கிறார்.) அப்படிப்பட்ட ஹனுமனுக்கு தொடர்புடைய எந்த விஷயமானாலும் மிகவும் கவனமாக ஒவ்வொருவருடைய கருத்துக்களுக்கும் (மதிப்பு கொடுத்து) சேதமில்லாமல் உண்மை நிலைகளை கவனமாக ஆராய்ந்து உறுதி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த பொறுப்பை ஏற்று உள்ளது. ஸ்ரீ பிலவ வருட ஸ்ரீராம நவமியின் போது இந்த செய்திகள் அனைத்தையும் சிறிய நூலாக வெளியிட்டுள்ளார்கள். அதன் பிறகு பலதரப்பட்ட

சாஸ்த்திரங்களில், புராணங்களில், இதிகாசங்களில், தொல்பொருள் துறை முதலியவற்றில் உள்ள அனைத்து அறிஞர்களையும் அழைத்து மாநாட்டை நடத்தினார்கள். அந்த அறிஞர்களால் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட உண்மையான ஆய்வுக்கட்டுரைகளை சேர்த்து ஒரு விரிவான நூலாக உருவாக்கினார்கள். இந்த விசேஷ நூலில் ஹனுமனின் பிறப்பிடத்திற்கு தொடர்புடைய எண்ணற்ற அம்சங்களும், எண்ணற்ற ஆதாரங்களும் இருக்கின்றன. இந்த மகிமை வாய்ந்த நூலை கவனமாக ஆய்வு செய்தால் ஹனுமனின் பிறப்பிடம் குறித்து எவருக்கும் இனிமேல் எந்த விதமான சந்தேகங்களும் இருக்காது. தார்மீக, புராணங்களின் விஷயங்களில் சந்தேகம் வந்தால் அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கு சாஸ்த்ர்ய முறைப்படி வழி இருக்கிறது.

இப்போது திருமலை திருப்பதி தேவஸ்தானம் பாரத தேசத்தில் மட்டுமே அல்லாமல் உலகமனைத்திலும் இந்து தர்மத்தை பரவச் செய்வதில் எவ்வளவோ முயற்சி செய்து வருகிறது. இந்து தர்மத்திற்கு முதுகெலும்பாக நின்று கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த க்ஷேத்திரத்திற்கு தொடர்புடைய மக்கள் அமைப்புகள், அறிஞர்கள் மற்றும் பண்டிதர்கள் விரிவாக ஆய்வு செய்து ஒரு ஆராய்ச்சி நூலை கொடுக்கும் போது அதை நாம் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திருமலை திருப்பதி தேவஸ்தான அறிஞர்கள் குழு கவனமாக பார்த்து பரிசோதனை செய்து இந்த உண்மை விஷயங்களை மக்களுக்கு அளிக்கும் பொறுப்பில் ஒரு பாகமாக இந்த வேலையை எடுத்துக் கொண்டார்கள். இதில் அவர்களுக்கு எந்த விதமான தனிப்பட்ட பலனும் இல்லை "மகிமை பொருந்திய மஹரிஷிகள் கொடுத்த ஞானத்தை உலகமறிந்த உண்மையாக நம்பி அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையான் அவதரித்த அஞ்ஜனாசலம் என்ற மலையே ஆஞ்ஜனேயருடைய பிறப்பிடம் என்று உறுதியாக நம்புகிறோம். சந்தேகமின்றி அஞ்ஜனாத்ரி திருமலை க்ஷேத்திரத்தில் தான் இருக்கிறது என்ற விஷயத்தில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆஞ்ஜனேயருடைய பிறப்பிடத்தின் ஆராய்ச்சி வேள்வி என்ற பெரும் பணியில் பங்கு பெற்ற அனைவருக்கும் அந்த ஹனுமனுடைய ஆசிகளும், அஞ்ஜனா தேவியினுடைய ஆசிகளும் நிறைவாக இருக்கட்டும் என்று ஆசிர்வதிக்கிறோம்.

மங்களம்

**ஸ்ரீ சுகப்ரஹ்மாஸ்ரமம்**
ஸ்வாமி வித்யா ப்ரகாஸானந்த நகர்
ஸ்ரீகாளஹஸ்தி – 517640
சித்தூர் மாவட்டம்

கைப்பேசி : 9505718452

ஸ்ரீகாளஹஸ்தி
06–02–2022

## பூஜ்ய ஸ்ரீ வித்யா ஸ்வரூபானந்த ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம் செயலாட்சித்தலைவர் டாக்டர். கே.எஸ். ஜவஹர் ரெட்டி அவர்களுக்கு – நாராயண ஸ்மரணத்துடன் கலியுக தெய்வமாக அழைக்கப்படும் திருமலையில் உள்ள ஏழுமலையில் ஒரு மலையான அஞ்ஜனாசலத்தில் ஆஞ்ஜநேயர் பிறந்ததாக பல புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஸ்ரீராமபிரானுடைய ஜன்ம பூமியைப்போல ஸ்ரீராமருடைய காரிய வெற்றிக்காக அவதரித்த ஸ்ரீ ஆஞ்ஜனேயருடைய அவதார தலத்திற்கும்கூட முக்கியத்துவத்தை ஏற்படுத்துவதற்கு தாங்கள் உறுதி செய்து கொண்டதால் நன்றிக் குறியவர்களானீர்கள். மிகச் சிறந்த அறிஞர்களுடைய பெரும் முயற்சியினால் மிகவும் பழைமையான நூல்களை ஆராய்ந்து ஆஞ்ஜனேயருடைய ஜன்ம பூமியை நிர்ணயம் செய்து நீங்கள் சிறந்த பெருமைக் குறியவர்களானீர்கள். இந்த சமயத்தில் தாங்கள் வெளியிட்ட இந்த நூல் எல்லா இடங்களிலும் நிறைந்த பயனைத் தரும். இந்த விஷயம் தொடர்பாக எங்களுடைய நல் ஆசிகளை நாராயணனை துதித்துக் கொண்டு இம்மடல் மூலம் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அஞ்ஜனாத்ரியில் பக்தர்கள் வருகைக்காக கட்டமைப்புகளை ஏற்பாடு செய்வது மிகவும் அர்த்தமுள்ளதாக உள்ளது. இது பகவானுக்கு உகந்த காரியமாகும்.

*“துஷ்டானாம் ஸிக்ஷனார்த்தாய ஸிஷ்டானாம் ரக்ஷனாய ச |*
*ராமகார்யார்த்த ஸித்யர்த்தம் ஜாத: ஸ்ரீ ஹனுமான் கபி: ||*

தீயவர்களை தண்டிப்பதற்காகவும், நல்லவர்களை காப்பதற்காகவும் ஸ்ரீ இராமருடைய காரியத்தை நிறைவேற்றுவதற்காகவும் ஸ்ரீ ஹனுமன் அஞ்ஜனாத்ரி மலையில் அவதரித்தார் என்று ரிஷிகளுடைய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இந்த மங்களகரமான ஆக்கபூர்வமான நிகழ்ச்சி தங்கு தடையின்றி விரைவில் நிறைவேற கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான ஸ்ரீநிவாஸன் அருள் புரிவானாக! அதன் மூலமாக ஸ்ரீ ஆஞ்ஜனேயருடைய பக்தர்களின் விருப்பங்கள் நிறைவேறட்டும்.

லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து (எல்லா உலகங்களும் இன்புற்று இருக்கட்டும்)

பகவான் சேவையில்

**ஸ்வாமி வித்யா ஸ்வரூபானந்த ஸ்வாமிகள்**

Sri Karyam

**SRI AHOBILA MUTT**



15th March 2022

## Divine Message

HH 46th Jeer felt very happy to know the initiatives taken by TTD to determine the birth place of Sri Hanuman who is one of the icons of Hindu mythological tradition. Anjanadri being one of the sacred hills among Saptagiri's is believed to be the birth place, according to TTD findings makes the Tirumala hills a more added sacredness to the already sanctified place by the presence of supreme Lord Srinivasa. There are Puranic references too in this regard and that strengthens the claim as well.

Differences of opinion may be here and there that cannot minimise the efforts of the TTD on the subject. HH 46th Jeer requests that the TTD may bring out more evidences regarding many such mythological references and beliefs in support of our glorious Dharmic tradition.

**By the order of 46th Jeer of Ahobila Mutt**

Dr. S. Padmanabhacharyar, Srikaryam, Sri Ahobila Mutt.



# SRI YADUGIRI YATIRAJA MUTT

(Moola samsthanam : Tirunarayanapuram-Melukote 571431)
Founder Acharya : Sri Ramanujacharya

## HH Yatiraja Jeeyar Swamyji's Divine Message

We are pleased to note that you are publishing a booklet of research articles contributed by reputed research scholars and eminent vidwans with regard to the birth place of Sri Hanuman (Sri Anjaneya) it is really a yeomen service of collecting the information from various puranas and sacred scriptures. Based on various puranas as refered by you, it is concluded that the Anjanadri hill one of the seven hills of Lord Sri Venkateswara is referred as birth palce of Sri Hanuman.

The TTD is taking all the steps to develop existing Hanuman temple with facilities to the pilgrims. it is really sacred work which will be remembered by generations to come. There is a proverb in kannada 'There is no village without a hanuman Temple'. Whatever project TTD will take, no doubt it will be a grand success because of the blessings of Lord Srinivasa. Anjanadri will become a spiritual sacred place. We would like to congratulate TTD for this wonderful initiative and pray Lord Srinivasa for the success of this project.

In the service of Acharya Ramanuja
**Yatiraja Jeeyar Swamy**

  

*ஸ்ரீமத் பரமஹம்ச பரிவாஜகாசார்ய பதவாக்ய ப்ரமான பாரவார பாரங்கத ஸர்வதந்த்ர ஸ்வதந்திர ஸ்ரீமத் வைஷ்ணவ சித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய ஸ்ரீமன் மூல ரகுபதி வேதவ்யாஸ தேவர திவ்ய ஸ்ரீபாத பத்மாராதக ஜகத்குரு ஸ்ரீமன் மத்வாசார்ய மூல மஹாஸம்ஸ்தானாதீஸ்வர ராத ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி கலவர மடத வேதாந்த்த ஸாம்ராஜ்ய திக்விஜய வித்ய ஸிம்ஹாநாதீஸ்வரராத ஸ்ரீமத் ஸுஸமீந்த்ர தீர்த்த ஸ்ரீபாதங்கலவர கரகமல ஸஞ்ஜாதராத ஸ்ரீமத் யதீந்த்ர தீர்த்த ஸ்ரீபாதாங்கலவர வரகுமாரக ராத*

## 1008 ஸ்ரீஸ்ரீஸ்ரீமத் ஸுபுதேந்த்ரதீர்த்த ஸ்ரீபாதாங்கர ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

ஸ்ரீ ப்லவ நாம ஸம்வத்ஸரம் மாக பஹுள சதுர்த்தசி மங்கள (செவ்வாய்) வாரம், தேதி 01–03–2022 திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் நல்ஆசிகள்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு திருமலையில் ஆலயம் நிர்மாணிக்கும் செய்தியை அறிந்து மகிழ்ந்தோம்.

பவிஷ்யோத்தர புராணத்தின் உள் பகுதியான ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் முதல் அத்யாயத்தில் இந்த மலைக்கு நான்கு யுகங்களில் வேறு வேறு பெயர்கள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அதில் த்ரேதா யுகத்தில் இம்மலைக்கு அஞ்ஜனாசலம் என்ற பெயர் எப்படி வந்தது என்று விவரிக்கும் சமயத்தில் கேசரி என்னும் வானரத் தலைவனின் மனைவியான அஞ்ஜனாதேவி தனக்கு குழந்தை இல்லாத காரணத்தால் மதங்க மஹரிஷியிடம் பிரார்த்தனை செய்து கேட்ட பொழுது இந்த மலையின் மேல் உள்ள ஆகாச கங்கை தீர்த்தத்தில் நீராடி விட்டு 12 வருடங்கள் தவம் செய்யும் படியும், அதன் மூலம் புத்ர சந்தானம் கிடைக்கும் என்றும் முனிவர் விடை கொடுத்தார்.

இங்கு 12 வருடங்கள் என்பதற்கு “த்வாதஸாப்தம்” என்ற சொல் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

***“ஸ்வாமி தீர்த்த ஸத: ஸ்னானம் அஸ்வத்தஸ்ய ப்ரதக்ஷிணம்***
***வராஹ தேவ நமனம் தத்தீர்த்தப்ராஸனம் ததா***
***சதுர்விதானாம் ஏதேஷாம் அப்தஸங்க்யாம் ப்ரகல்பயேத்”***

என்ற ப்ரமாணத்தை அனுசரித்து அஞ்ஜனாதேவி ஒவ்வொரு நாளும் ஸ்வாமி புஷ்கரணி ஸ்நானம், அரசமர பிரதக்ஷிணம், வராஹ ஸ்வாமி தரிசனம், தீர்த்த ப்ராஸனம் இவ்வாறாக நான்கு விதமான கார்யங்களையும் மூன்று வேளைகளிலும் 12 வருடங்கள் செய்ததன் பலனாக,

*"பூர்ணே ஸம்வத்ஸரே ஜாதே வாயுதேவோ மஹா பல:*
*பலமாதாய பக்ஷ்யர்தம் ப்ரத்யஹம் தாபயன் மருத்*
*அத கிஞ்சித்தினே வாயு: பலே வீர்யம் ப்ரபூரயத்*
*வீர்ய கர்ப பலம் தஸ்யா: ப்ராக்ஷிபத் கரஸம்புடே*

வாயுதேவன் ஒரு பழத்தில் தன்னை நிரப்பி, அஞ்ஜனா தேவியிடம் கொடுத்தார்: அந்த பழத்தை சாப்பிட்டதால் அஞ்ஜனாதேவி வாயுதேவனின் அருளால் கருவுற்று ஒன்பது மாதங்கள் முடிந்த பிறகு ஒரு அழகான ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அந்த குழந்தைக்கு ஹனுமன் என்று பெயரிட்டார்கள்.

*"அஞ்ஜனாவ்ருதமாஸ்தாய புத்ரப்ராப சிரீஸ்வரே*
*தஸ்மாதஞ்ஜன ஸைலோயம் லோகேவிக்யாத கீர்த்திமான்"*

இவ்வாறு அஞ்ஜனாதேவி இந்த மலையில் தவம் செய்து ஸ்ரீஆஞ்ஜநேயரை மகனாகப் பெற்றதால் இந்த மலைக்கு அஞ்ஜனாசலம் என்று பெயர் வந்தது என்று ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் முதல் அத்யாயத்தில் 7வது சுலோகத்தின் மூலம் தெரிகிறது. இவ்வாறாக கல்ப பேதத்தினாலும் அஞ்ஜனாதேவி இங்கு மகனை பெற்றாள் என்று தெரிய வருகிறது. இவ்வாறாக மிகவும் மகிமை பொருந்திய மூன்று கோடி தீர்த்தங்களுக்கும் பிறப்பிடமான வைகுண்டபதியான ஸ்ரீஸ்ரீநிவாசனுடைய திவ்ய ஸ்தானமான (திருத்தலமான) திருமலை க்ஷேத்திரம், சேவைகளையே குறிக்கோளாகக் கொண்டு அதிகாரிகளின் பெரும் முயற்சியால் ஒவ்வொரு நாளும் பெரும் வளர்ச்சியை அடைகிறது என்பது மிகைப்படுத்தி கூறியதாகாது (உண்மையாகும்).

இப்பொழுது திருமலையில் ஆகாச கங்கை தீர்த்தத்தின் அருகில் அவதரித்து இருக்கிற ஸ்ரீபால ஆஞ்ஜனேய ஸ்வாமியுடைய திருக்கோயில் பக்தர்களுக்கு மிகவும் விருப்பமுடையதாக இருக்கிறது. எண்ணற்ற பக்தர்கள் தாயாரான அஞ்ஜனா தேவியுடன் இருக்கிற பால ஆஞ்ஜநேய ஸ்வாமியை தரிசனம் செய்து கொண்டு அவர்களுடைய விசேஷமான அனுக்ரஹத்தைப் பெறுகின்றனர். ஆகையால் பக்தர்களுடைய வசதிக்காக அங்குள்ள பூமியை (சுற்றிடங்களை) பெரும் வளர்ச்சி அடையச் செய்து, பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். இந்த மிகவும் புனிதமான செயலில் பங்கு பெறுகின்ற அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் அனைத்து விதமான மங்களங்களையும் அருள வேண்டும் என்று என்னுடைய குருவையும், குருநாதருக்கு குருவான ஸ்ரீராகவேந்திரரையும், அவருடைய குருவான பாரதிரமணரையும் அவருக்கு பிராண நாதரான ஸ்ரீமந் மூலரகுபதி ராமரையும், வேதவியாசரையும் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸுபுதேந்த்ர தீர்த்த ஸ்ரீபாதர்**
மந்த்ராலயம்.



## SRI SRI VYASARAJA MUTT (SOSALE)

**SRI MOOLAGOPALAKRISHNA VIJAYATE**

**SRI SRI VYASARAJO VIJYATE**



# SriSriSri Vidyashreesha Teertha Swamiji's Divine Message

We feel immensely happy to learn that TTD is going to bring out a book containing research articles contributed by eminent scholars about the birth place of Lord Hanuman. We also learnt that the contributors having gone through various Puranas came to the conclusion that it was Anjanadri of Tirumala Hills where Anjana the mother of Hanuman, gave birth to him. Since, only the Puranas are to be considered as the authentic evidence regarding the birth place of Hanuman, We are of the view that the conclusion arrived by the eminent scholars has to be accepted by all.

We heartily congratulate The Executive Officer Sri K. Jawahar Reddy garu, Additional Executive Officer Sri A.V.Dharma Reddy garu and other officials for undertaking a sincere endeavor to establish the matter decisively.

We hope that the TTD will take suitable steps to develop a magnificent temple of Hanuman in Anjanadri.

With Narayana smaranas

Sri SriSri Vidyashreesha Teertha Swamiji
Peethadhipathi ,
Sri Vyasarama Mutt (Sosale).



**SRI DIGVIJAYARAMO VIJAYATE**
**SHRIMAJJAGADGURU MADHWACHARYA MOOLAMAHASAMSTHANA**
**UTTARADI MUTT**
Administrative Office: 4, Sri Satyapramoda Teertha Road,
5th cross, Shankarapuram, Basavanagudi, Bangalore-560004.
Camp''Bangalore.

Date- 04-03-2022

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸத்யாத்ம தீர்த்த ஸ்ரீ பாதுலவாரி அனேக நாராயண ஸ்மரணங்கள்

**விஷயம் : ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தைப் பற்றிய - ஓர் விவரணம்**

திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியில் ஆஞ்ஜனேயர் அவதரித்தார். இந்த விஷயத்தில் பலமான ஆதாரங்கள் இருக்கின்றது. வால்மிகி இராமாயணம் மற்றும் சங்க்ரஹ இராமாயணத்தில் ஹனுமன் மேரு மலையில் பிறந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஹம்பி க்ஷேத்திரத்தில் ஹனுமன் பிறந்ததாக சிலர் கூறுகிறார்கள். இந்த விஷயங்களைப் பற்றிய ஒரு விளக்கம்.

பிரம்மாண்ட, பவிஷ்யோத்தர புராணங்களை படித்தவர்களுக்கு திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியில் ஹனுமன் பிறந்தார் என்பது தெரியும். அந்த புராணங்களின் வசனங்கள் இங்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரம்மாண்ட புராணம், வேங்கடாசல மாஹாத்மியம் 5வது அத்யாயத்தில் இந்த சுலோகங்கள் இடம் பெறுகின்றன.

*''உதயாசல ஸம்ரூடம் ததர்ச ரவி மண்டலம்*
*நிதாந்தரக்த வர்ணேன பல புத்தி ரபூத்ததா*
*பலமித்யைவ மன்வானோ ரவிம் பக்ஷிது முத்யத:*
*க்ரஹிஷ்யாமீதி நிஸ்சித்ய ஸ்ரீ வேங்கட கிரேஸ் தடாத்*
*உததிஸ்டன்மஹாவேகாது தயாசல ஸேகரம்'' 47*

சூரியனைப் பிடிப்பதற்காக ராகு தயாரானார். அந்த ராகுவை எதிர்ப்பதற்காக, ஹனுமன் வேங்கட மலையிலிருந்து ஆகாயத்திற்குப் பறந்தார். அதனால் ஹனுமன் பிறந்தது வேங்கட மலையிலேயே என்பது இந்த வசனங்கள் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அதே புராணத்தில் இன்னொரு அவதார விஷயம். பிரம்ம தேவர், அஞ்ஜனாதேவி சேஷாசல மலையில் தவம் செய்து ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாய். அதனால் இம்மலை அஞ்ஜனாசலம் என்ற பெயருடன் விளங்கும் என்று வரம் அருளினார்.

*''அஞ்ஜனே த்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ்தப்த்வா ஸு தாருணம்*
*புத்ரம் ஸுதவதீ யஸ்மாத் லோகத்வய ஹிதாய வை'' 64*

*"ப்ரஸித்திம் யாது ஸைலோயம் அஞ்ஜனே நாம தஸ்தவா*
*அஞ்ஜனாசல இத்யேவ நாத்ர கார்யா விசாரணா"* 65

பவிஷ்யோத்தர புராணத்தில் உள்ள வேங்கடாசல மாஹாத்மியத்தில் கூட ஹனுமனின் அவதாரம் திருவேங்கட மலையிலேயே நடந்தது என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அங்குள்ள பிரமாண வசனங்கள் இப்படியுள்ளது.

*"அஞ்ஜனா வ்ரதமாஸ்தாய புத்ரம் ப்ராபகிரீஸ்வரே தஸ்மாத்*
*அஞ்ஜன ஸைலோயம் லோகே விக்யாத கீர்த்திமான்"* 1.77

அஞ்ஜனா தேவி இந்த வேங்கட மலையில் தவம் செய்து மகனைப் பெற்றதால் இந்த மலை அஞ்ஜனாத்ரி என்ற பெயருடன் புகழ் பெற்றது என இப்புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் "ப்ராப்த புத்ரா பவத்கிரௌ" என்ற பாட பேதத்தில் கூட ஹனுமனின் பிறப்பிடம் திருவேங்கடமலை என்று சொல்கிறது. இந்த வசனங்களை எல்லாம் பார்க்கும் போது ஹனுமனின் பிறப்பிடம் திருவேங்கட மலையிலேயே நடந்தது என்று தெரிகிறது. வால்மீகி இராமாயணம் உத்தர காண்டத்தில் 35வது ஸர்கத்தில் அஞ்ஜனா – கேசரி தம்பதிகளின் இருப்பிடம் மேரு பர்வதம் என்று சொல்லப்பட்டுள்ளது. அவதாரத்தைப் பற்றிய விஷயம் கூட அங்கேயே என்று சொல்லப்பட்டுள்ளது.

*ஸூர்ய தத்த வரஸ்வர்ண: ஸுமேருர் நாம பர்வத: ।*
*யத்ர ராஜ்யம் ப்ரஸாஸ்தஸ்ய கேஸரீ நாம வை பிதா ॥* 19

*தஸ்ய பார்யா பபூவைஸாஹி அஞ்ஜனேதி பரிஸ்ருதா ।*
*ஜனயா மாஸ தஸ்யாம் வை வாயுராத்ம ஜமுத்தமம் ॥* 20

சூரியனின் வரத்தால் மேரு மலை தங்கம் போல் மின்னியது. கேசரி என்ற வானர ராஜன் இந்த மேரு பர்வத ஸாம்ராஜ்யத்தை ஆட்சி புரிந்து வந்தார். அவரின் மனைவி அஞ்ஜனா. இந்த அஞ்ஜனா தேவி ஹனுமனை பெற்றெடுத்தாள். இந்த வசனங்களின் மூலம் ஹனுமன் மேரு மலையில் பிறந்தார் என்று தெரிகிறது.

நாராயண பண்டிதாசார்யர் எழுதிய சங்க்ரஹ இராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் முதல் ஸர்கத்தில் வால்மீகி இராமாயணத்தை அனுசரித்து இந்த விஷயத்தை தெரிவிக்கிறது. இந்த வசனத்தை கூட கவனிக்க வேண்டும்,

*"ப்லவங்க மானாம் கத ஆதிராஜ்யம் ப்லவங்கமஹ கேஸரீ நாம தேய: ।*
*மேரா உபாஸாஞ்ஜனய ஸுகாத்ரிய ஸவ்ய ஸவீகாந்த இவ த்யுலோகே" ॥* 1

*"அஸூதஸூனும் தமஸாம் வினாஸம் தம் அஞ்ஜனா ஸஜ்ஜன கஞ்ஜ பந்தும்!*
*அனர்க்ய மாணிக்ய மணிப்ரகாஸம் ப்ராசீவ தேவம் ஜகதீஸ தீபம்"!!* 7

இந்த வசனங்களின் மூலம் ஹனுமன் மேரு பர்வதத்தில் பிறந்தார் என்று சிலர் சொல்கிறார்கள். ஹனுமனின் கார்ய க்ஷேத்ரமாக ஹம்பி க்ஷேத்ரம் ப்ரஸித்தமானது.

ஸ்காந்த புராணத்தில் உள்ளீடான பம்பா மாஹாத்மியத்தில் ஹம்பி க்ஷேத்திரத்தின் மகிமை வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்த க்ஷேத்திரத்தை வர்ணிக்கும் போது மதங்காஸ்ரமம் அங்கு இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த மதங்க மஹரிஷியின் சொற்படி ஆசீர்வாதத்துடன் அஞ்ஜனாதேவி சேஷாசலத்தில் தவம் செய்தாள் என்ற விஷயம் ப்ரஸித்தமானது. இந்த சான்றுகளின் மூலமும் மற்றும் அந்த பகுதியின் கதைகளின் மூலமாகவும் ஹம்பிக்ஷேத்ரம் ஹனுமனின் கார்ய க்ஷேத்ரம் என்று தெரிய வருகிறது.

## யந்த்ரோத்தார ஹனுமன் ப்ரதிஷ்டைக்கு ஆரம்பம்

ஸ்ரீ வ்யாஸ ராஜர் அவர்கள் ஹம்பி க்ஷேத்திரத்தில் யந்த்ரோத்தார ஹனுமனை பிரதிஷ்டை செய்தார். இந்த இடத்தில் எதற்கு பிரதிஷ்டை செய்தார் என்ற விஷயத்தில் ஒரு வரலாறு சொல்கிறார்கள். வ்யாஸ ராஜரின் கனவில் ஹனுமன் இந்த இடத்திலேயே எனக்கு முதன் முதலாக ஸ்ரீ ராமரின் தரிசனம் கிடைத்தது. அதனால் இங்கு என்னுடைய விக்ரகத்தை ப்ரதிஷ்டை செய்ய வேண்டும் என்று சொன்னாராம். இந்த விஷயத்தை அனேகம் பேர் சொல்கிறார்கள். இவ்வாறான விஷயங்களால் ஹம்பி க்ஷேத்ரம் ஹனுமனின் கார்ய க்ஷேத்ரம் என்று தெரியவருகிறது.

சிலர் ஹனுமனின் அவதாரம் கூட ஹம்பிலேயே என்று சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் சான்றுகள் இருந்தால் அதை அங்கீகரிப்பதில் தவறு ஏதும் இல்லை.

ஹனுமனின் பிறப்பிடம் பற்றிய சான்றுகள் இப்படி பலவிதமாக இருப்பதால் சாதாரண பக்தர்களுக்கு ஹனுமனின் பிறப்பிடம் எது? எப்படி தீர்மானிப்பது என்ற சந்தேகம் வரும். இந்த சமயத்தில் கல்ப பேதங்களை அணுக வேண்டும். பலதரப்பட்ட சான்றுகளை கௌரவிக்க வேண்டும்.

## கல்ப பேதம் என்றால் என்ன

14 மன்வந்தரங்கள் மிக நீண்ட சமயமே கல்பம். கடவுள்கள் மற்றும் தேவர்களின் செயல்கள் ஒவ்வொரு கல்பத்திலும் ஒரே விதமாக இருக்கும். சில செயல்கள் முன்பின்னாக மாறும். உதாரணத்திற்கு ஒரு விஷயத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் விஷ்ணு வராஹமாக அவதாரம் எடுத்து இரண்யாக்ஷன் என்ற அசுரனை அழித்தார். இந்த விஷயம் சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்தவையே. ஆனால், சில புராணங்கள் இரண்யாக்ஷணை கோரை பற்களால் சம்ஹரித்தார் என்று சொல்கிறது. சில புராணங்கள் தன் கைகளால் காதுகளின் மீது அடித்து கொன்றார் என்று சொல்கிறது. இவை இரண்டில், இரண்டும் நிஜமாக முடியாது. அதனால் ஒரு கல்பத்தில் கோரை பற்களால் ஆதி இரண்யாக்ஷனை வராஹ ஸ்வாமி ஸம்ஹரித்தார், மற்றொரு கல்பத்தில் கஸ்யப–அதிதி தேவியின் குமாரனான இரண்யாக்ஷனை கையால் அடித்து ஸம்ஹரித்தார் என்று அறிந்து கொள்ள வேண்டும். சான்றுகளை கௌரவிக்க வேண்டும்.

இப்படியே ஒரு கல்பத்தில் திருமலையிலும், மற்றொரு கல்பத்தில் மேரு மலையிலும் ஹனுமன் பிறந்தார் என்று தீர்மானித்து கொள்ள வேண்டும். பிரம்மாண்ட, பவிஷ்யோத்தர மற்றும் இராமாயண சான்றுகளை கௌரவிக்க வேண்டும். அப்படியே ஹம்பி க்ஷேத்ரத்தில் ஹனுமன்

பிறந்தார் என்பதற்கு சான்றுகள் கிடைத்தால், மற்றொரு கல்பத்தில் ஹனுமன் ஹம்பி க்ஷேத்ரத்தில் பிறந்தார் என்று தீர்மானித்துக் கொள்ளலாம். இப்படி கல்ப பேதங்களை அனுசரித்து தீர்மானித்து கொண்ட சம்பவங்கள் நிறைய உள்ளன.

இந்த விஷயம் அதற்கு ஒரு உதாரணமாகக் கொடுக்கப்பட்டது. அப்படி சான்றுகளுக்கு தகுந்த விதமாக தீர்மானித்து கொள்வதே முறையானது.

இப்போது ஹனுமன் திருமலையிலேயே பிறந்தார் என்ற விஷயத்திற்கு சான்றுகள் இருக்கிறபடியால் திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியே ஹனுமன் அவதாரத்தலம் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

நாராயண ஸ்மரணமுலு

**ஶ்ரீஶ்ரீஶ்ரீ ஸத்யாத்ம தீர்த்த**

உத்தராதி மடம்

# SRI VIDYESHA TEERTHA SWAMIJI

**Sri Bhandarkeri Matha**
**Jagadguru Sri Madhwacharya**
**Maha Vedanta Peetham,**
**Udupi-Bengaluru, Karnataka. 560085**




## SriSriSri Vidyesha Teertha Swamiji's Divine Message

Happy to learn about the work done by TTD on ascertaining the birthplace of Sri Hanuman. We are also glad to know that you are bringing out a compilation of research articles in this regard in the form of booklet.

Evaluating the Puranic references that we have come across, it appears that Anjanadri in Tirumala is indeed the birth place of Sri Hanuman. Two reference in the Puranas are of great relevance in this aspect. First, the Tirumala hill came to be known as Anjanadri as Anjana performed penance and was blessed with Sri Hanuman as her son at that place. Second, Sri Hanuman's early childhood activities such as his famous fight towards Surya happened from the Venkatadri Hill.

We also recognize that the Hampi kshetra in Karnataka is also of great significance for the devotees of Sri Rama and Sri Hanuman for being the place where Sri Hanuman met Lord Sri Rama and did most important activites.

Therefore, unless encountered with stronger counter evidence, we believe that Anjanadri in Tirumala is in fact Sri Hanuman's birth place (Janma-Kshetra) : Hampi in Karnataka is the place of his major activities (Karya-kshetra) : and the both these places are sacred and important in their own ways. We wish that TTD undertakes further activities to continue fostering devotion towards Lord Sri Rama and Sri Hanuman.

With many reminiscences of the glory of Sriman Narayana,


**SriSriSri Vidyesha Teertha Swamiji,**
Sri Bhandarkeri Matha,
Jagadguru Sri Madhwacharya
Maha Vedanta Peetham,
Udupi-Bengaluru.
Karnataka.



# SRI 1008 SRI SUJAYANIDHI THEERTHA SWAMIJI

**Sri Padaraja Mutt,**
**Mulabagilu.**



*Srimathparamahamsa parirajakacharyathavadhyaneka Guna sampanna padavakyuaparamana Paravaraparina sarvathantra swathantra Srimadvaisnava siddhantha prathisthapanacharya Jagduguru Sriman Madhvacharya Moola Maha Samsthana Sri Padmanabha Theertha Parampara Sri Hayavadana Rangavitalathamaka Sri Sri Gopinathadivya Sripadapadmaradhaka Sri Sripadaraja Varavidyasimahasanadeesha*

Sri 1008 Sri Vijnananidhitheertha Sripadangala Karakamala sanjatha

Sri 1008 Sri Keshavanidi Theertha Sripaddangalavara vara kumararada

**SRI 1008 SRI SUJAYANIDHI THEERTHA SRIPADANGALAVARU**

## Sujayanidhi Theertha Sri Padangalavaru's Divine Message

We are filled with pleasure to note that TTD will be releasing a booklet comprising of research articles contributed by renowned scholars, about the contention of the birth place of Lord Hanuman. We also grasp that the contributions , after passing through various puranas, came to the conclusion that Hanuman's birth place, was Anjanadri on Tirumala hills where Anjana devi, the mother of hanuman gave birth to him. Since only the puranas can be weighed as authentic evidence about the birth place of Hanuman. As per our perspective, the conclusion arrived at by the reputed scholars, has to be accepted by one and all.

We heartily congratulate the Sri Dharmareddy along with other officials on their strive the issue decisively.

Sri 1008 Sri SUJAYANIDHI THEERTHA SRIPADANGALAVARU

SRIPADARAJA MUTT, MULABAGILU.



## ஜகத்குரு ராமபத்ராசார்ய ஸ்வாமிகளின் திவ்விய அருளுரை

*சித்திரகூட் – 210 204, உத்திரபிரதேசம்.*

நான் உண்மை பேசும் பழக்கம் உள்ளவன். விவாதம் என்று ஏற்படும்போது முடிவை யார் செய்கிறார். அந்த முடிவைச் செய்வது நமது சாத்திரங்களே. இதனை பகவத்கீதையும் குறிப்பிடுகின்றது. எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பதைக் கூறுவதற்கு சாட்சிகள் நமது சாத்திரங்களே. இந்த சாட்சிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று மறுக்க முடியாத சாட்சிகள்; மற்றொன்று மாறும் சாட்சிகள். மறுக்க முடியாத சாட்சிகள் என்னும்போது வேறு சாட்சிகள் எதுவும் தேவையில்லை. சான்றாக வேதங்கள் மற்றும் வால்மீகி ராமாயணம் ஆகியன. மாறும் சாட்சிகள் என்னும்போது ஹனுமனின் பிறப்பிடம் தொடர்பானது. ஹனுமனின் பிறப்பிடம் என்பது கர்நாடகமா? அல்லது திருமலையா?

நான் கர்நாடகத்தில் ஹனுமனின் பிறப்பிடத்தை தரிசித்தேன். இன்று இங்கே நிற்கிறேன். எதை ஏற்பது? சாத்திரம் சொல்வதைப் பற்றி விவாதம் தேவை. அவ்வாறு இல்லையென்றால் நமது கல்வியறிவு என்னாவது? நான் ஜகத்குரு ராமானந்தாசார்ய. நான் ராமானந்தாசர்ய என்ற நிலையில் சாத்திரங்கள் பற்றி சொல்ல வேண்டும். அதில் எழுதப்பட்டுள்ளதை நான் சொல்வேன். நான் ஒரு போதும் பொய் பேச மாட்டேன். சாத்திரம் சொல்வதைப் பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். அதில் எழுதப்பட்டுள்ளதை நான் சொல்வேன். நான் ஒருபோதும் பொய் பேச மாட்டேன். சாத்திரம் சொல்வதைப் பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். அனைத்து புராணங்களும் இதைத்தான் சொல்கின்றன. ஸ்காந்த புராணம், பிரம்மாண்ட புராணம் மற்றும் பல புராணங்கள் அஞ்ஜனையம்மையார் இங்கேதான் தவம் செய்தார். அவர் இங்குதான் தன் அருமை மகனான ஹனுமனைப் பெற்றெடுத்தார். அதனால்தான் தேவர்களெல்லாம் இந்த மலையை அஞ்ஜனாத்ரி, வராஹாத்ரி என்று சொல்கிறார்கள். எனவே இது தொடர்பாக கோவிந்தானந்த சரஸ்வதிக்கு உண்மை உறுதியாகி இருக்கலாம். ஒரு வேளை கர்நாடகம்தான் என்று எண்ணினால் எண்ணிக் கொள்ளுங்கள். கல்ப வேறுபாட்டில் கடவுளின் சரித்திரம் வேறுபடுகிறது.

பரசுராமர் தனுர் யாகத்திற்குப் பின்னர் மிதிலைக்கு வந்தார் என்று ராமசரித மானஸத்தை இயற்றிய கோஸ்வாமி துளசிதாசர் கூறுகிறார். அவரே தன்னுடைய ஜானகி மங்கல் என்ற நூலில் பரசுராமர் வழியில் சந்தித்தார் என்று குறிப்பிடுகிறார். கல்ப வேறுபாட்டின் காரணமாக இந்த இரண்டும் உண்மையாக இருக்கலாம். நீங்கள் மிக விரும்பினால் கர்நாடகம் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், பெரும்பாண்மையான சாஸ்திரங்கள் கூறுவதோ திருமலையைத் தான். இதை நான் உறுதியாகக் கூறுகிறேன். யாராவது தண்டனை தர விரும்பினால் எனக்கு தண்டனை கொடுங்கள். சாஸ்திரங்கள் குறிப்பிடுவதும் இதைத்தான். எனவே அந்த இடமோ அல்லது எந்த இடமோ நீங்கள் எதை ஏற்றுக் கொண்டாலும் எனக்கு எந்தத் தடையும் இல்லை.

இது தொடர்பாக ஒரு வெபினார் கூட்டம் நடந்தது. அதில் நான் பங்கேற்றேன். இது பற்றிய விவாதம் என்று எனக்குத் தெரியாது. அப்போது நான் என் உரையில் புராணங்களின்படி அஞ்ஜனாதேவி இந்தத் திருமலையில் தான் தவம் செய்தார் என்று குறிப்பிட்டேன். பூஷண்டீகா என்பது வால்மீகி ராமாயணத்தின் ராமாநுஜ சம்பிரதாயத்தின் வழியில் வந்த ஒரு உரை விளக்கமாகும். இதை எழுதியவர் கோவிந்தராஜ் என்பவர் ஆவார். அவர் தன் உரையை இந்தத் திருமலையில் பிரம்மோத்ஸவம் நடைபெற்ற சமயத்தில் இறைவனின் தூண்டுதலால் தான் எழுதியதாகக் கூறுகிறார். அவர் அந்த உரையில் பால காண்டத்தில் மங்களாசரணத்தின் இரண்டாம் சுலோகத்தில் அஞ்ஜன் என்ற மலை உள்ளது. அங்கே அஞ்ஜனைதேவி தவம் செய்ததால் அம்மலைக்கு அப்பெயர் ஏற்பட்டது என்று குறிப்பிடுகிறார். எனவே நான் எங்கே இராமாயணம் எழுதினேனோ அங்கே அஞ்ஜனாதேவி தன் அன்பு மகன் ஹனுமனைத் தவம் செய்து பெற்றாள் என்று கூறியுள்ளார். இன்றும் அந்த இடத்தில் ஹனுமன், அஞ்ஜனையின் மகன் பால ஆஞ்ஜநேயனுக்கு கோயில் உள்ளது. அந்த சந்நிதியில் வேங்கடவனின் வாசலில், சான்றோர்கள் தூண்டுதலில் நான் ராமாயண விளக்கத்தை தொடங்கினேன் என்று அவர் குறிப்பிடுகிறார். இது வரை நான் உங்களுக்கு புராண இதிகாசங்கள் கூறுவதை சொல்லிவிட்டேன்.

நான் இப்போது உங்களுக்கு மேலும் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். நான் உண்மை எதுவோ, அதையே சொல்வேன். பூஷண்காரரே சொன்ன பிறகு உங்களுக்கு அதற்கும் மேல் வேறு என்ன தேவை. வால்மீகி ராமாயணத்தின் கிஷ்கிந்தா காண்டத்தில் நாம் இப்போது உட்கார்ந்துள்ள இந்த சிறந்த மலை உச்சியை, அஞ்ஜனை மலையை, இந்த ஏழாவது மலை உச்சியை குறிப்பிட்டுக்கூறியுள்ளார். இந்த மலையிலிருந்துதான் ஹனுமன் அந்த சூரியனை விழுங்கிட ஓடினார். அவர் மீது இந்திரன் தன் வஜ்ராயுதத்தை ஏவினான். ஆனால் அதுவோ அவரைத் தாக்காமல் அவருக்கே சேவை செய்தது. அதைத் தொடர்ந்து ஹனுமன் சூரிய தேவனிடம் கல்வி கற்றார். அதற்குப் பிறகு குருவான சூரியன் தான் கற்பித்ததற்கு ஹனுமனிடம் தக்ஷிணை கேட்டார். அதற்கு ஹனுமன் என்ன தக்ஷிணை தருவது என்று கேட்டார். அதற்கு சூரிய தேவன், கிஷ்கிந்தையில் உள்ள என் மகன் சுக்ரீவன் வாலியால் மிகவும் துன்பமடைந்துள்ளான். எனவே, நீ இப்போது இந்த ஆந்திராவை விட்டு கர்நாடகம் சென்று சுக்ரீவனுக்கு உதவி செய் என்றார்.

இப்போது நீங்கள் ஒன்றை சிந்தித்துப் பாருங்கள். இந்த கோவிந்ததேவ் உங்களுக்கு என்றும் மாறாத சாட்சிகள் மூலமாக உண்மையை எடுத்துச் சொல்லியுள்ளேன். கௌதம சூத்திரம் நீதியில் நான்கு சாட்சிகள் உள்ளதாகக் குறிப்பிடுகிறது. அவை ப்ரத்யட்ச, அநுமான, உபமான, சப்த ஆகியன. இதில் முற்றிலும் ஏற்கத் தக்கவைகளை ஆப்த என்கிறோம். பதஞ்சலி கூறுகிறார். தமோ, ரஜோ குணங்களில்லாத ஒருவர் முக்காலத்தையும் உணர்ந்த ஞானியாவார். அவரது சொல்லே ஏற்கக் தக்கவை எனப்படும். அவ்வகையில் வால்மீகி முனிவரின் சொற்கள் ஏற்கத்தக்க வகையினைச் சேர்ந்தவை.

நீங்கள் குழந்தை ஆஞ்ஜனேயனைப் பற்றிக் கூறுகிறீர்கள். ஹனுமான் சாலீசாவை அதிக அளவில் பரப்பிய பின்னரே ஒவ்வொருவரிடமும் அதை பதியச் செய்த பின்னரே குழந்தை ஆஞ்ஜநேயனைப் பற்றி நாம் விவாதிக்க முடியும். அதில் துளசிதாசர் ஹனுமனை அஞ்ஜனை

புத்திரன், வாயுவின் மகன், ஹனுமனின் தாய் அஞ்ஜனை என்றெல்லாம் குறிப்பிடுகிறார். மேலும் ஸ்காந்த புராணம், பிரம்மாண்ட புராணம், மஹாபாரதம், வால்மீகி ராமாயணம் ஆகியவற்றில் வாயு தேவனின் ஸ்பரிசத்தால் ஹனுமன் பிறக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அஞ்ஜனை தவமிருந்தாள். இறைவன் அவளுக்கு சிறந்த மகன் பிறப்பான் என்று ஆணையிட்டார். சிவன் அத்ரியின் மூலமாக, ஏழு ரிஷிகளின் வாயிலாக அஞ்ஜனையின் காதில் ராம மந்திரம் ஓதினார். இவ்வகையில் சிவன் வாயு தேவனின் மூலமாக தானே அஞ்ஜனையின் வயிற்றில் கருவானார்.

சாஸ்திரங்கள் விவாதங்கள் முடிவுக்கு வரும் வகையில் தீர்த்து வைக்கின்றன. நீதிமன்றங்கள் மக்களின் விவாதங்களை தீர்த்து வைக்கின்றன. நாம் சிவில் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று மூன்று நீதிமன்றங்களைக் கொண்டுள்ளோம். நமது ஸ்மிருதிகள் மாவட்ட நீதி மன்றங்கள் போன்றவை, புராணங்கள் உயர் நீதிமன்றங்கள் போன்றவை. வேதங்கள், இராமாயணம் ஆகியவை உச்ச நீதிமன்றங்கள் போன்றவை. இந்த மூன்றும் ஹனுமன் பிறந்த இடம் இதுதான் என்று உறுதியாகக் கூறுகின்றன. எனவே இது தொடர்பாக சண்டையிட வேண்டாம் என்பதே என் பணிவான வேண்டுகோள்.

ராம ஜன்ம பூமி தொடர்பாக நடந்த வழக்கில் நீதிபதி இது தொடர்பாக ஏதாவது உறுதியான சாட்சிகள் உள்ளதா என்று என்னிடம் கேட்டார். உடனே நான் அதர்வண வேதத்தில் பத்தாம் காண்டத்தின் இருபத்தொன்றாம் பகுதியில் இரண்டாம் மந்திரம் ஒரு தெளிவான சாட்சியாகும் என்றேன்.

இங்கும் நான் சொல்வது என்னவென்றால் கர்நாடகத்திலும் சரி, இங்கும் சரி இந்த இரண்டு இடங்களிலும் வழிபாடு நடக்கட்டும். இரண்டும் மதிப்பு மிக்கவையே. ஆனால், பெரும்பாலான சாஸ்திரங்கள் இந்த இடத்தைத்தான் குறிப்பிடுகின்றன. எனவே இரண்டு இடங்களையும் ஏற்பதில் தவறில்லை. இருப்பினும் சாத்திரங்கள் இந்த திருமலைக்கே வலிமை சேர்க்கின்றன. எனவே இரண்டு இடங்களுக்கும் செல்லுங்கள்.

இந்தப் பெரு விழாவிற்கு என்னை அழைத்தீர்கள். பலர் என்னை இங்கு செல்ல வேண்டாம் என்று தடுத்தனர். இருப்பினும் நான் இங்கே வந்து விட்டேன். இதில் என் சுயநலம் ஏதும் இல்லை. ஆனால் ஒன்று, எங்கே விவாதம் எழுகிறதோ அங்கே நான் சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு என் கருத்துகளை முன் வைக்க ஒரு ஜகத்குருவாக நிச்சயம் வருவேன். எனவே உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இந்த முழக்கங்களுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

(ஸ்ரீபாலஹனுமன் ஆலய பூமி பூஜையின் போது ஸ்வாமிகள் ஆற்றிய உரையிலிருந்து...)



## விசாக சாரதா பீடாதிபதி
## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர ஸ்வாமிகள்

விசாக சாரதா பீடம், விசாகப்பட்டினம்

## விசாக சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர ஸ்வாமி திவ்ய அருளுரை

*ச்ருதி ஸ்ம்ருதி புராணானாமாலயம் கருணாலயம்*
*நமாமி பகவத் பாதம் சங்கரம் லோக சங்கரம்*
*சங்கரம் சங்கராசார்யம் கேசவம் பாதராயணம்*
*சூத்ர பாஷ்யக்ருதம் வந்தே பகவந்தௌ புந: புந:*
*வசுதேவ சுதம் தேவம் கம்சசாணூர மர்த்தனம்*
*தேவகீ பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்*
*ஸ்ரீ க்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:*

திருமலை திருப்பதி திருவேங்கடமுடையானின் திருப்பாதஸாக்ஷியாக இங்கு இன்று பூமி பூஜை நடைபெற்றது. இந்தியா முழுவதும் சனாதன தர்மத்துடன் கூடிய அஷ்டாதச சக்தி பீடங்கள், த்வாதச ஜ்யோதிர் லிங்கங்கள், எண்ணற்ற வைஷ்ணவ க்ஷேத்ரங்களுடன் கூடிய பரிபூர்ணமான சனாதன தர்மம்.

இராமேஸ்வரம் முதல் இமயமலை வரை உன்னதமான க்ஷேத்ரங்களும், தேவாலயங் களும், தீர்த்தங்களும், நதிகளும் நிரம்பப் பெற்ற இந்த பாரத தேசத்தில் மிகச் சிறந்த புண்ய பூமி எது என்றால் நம்முடைய இரண்டு தெலுங்கு மாநிலங்கள் மட்டுமே. ஏனென்றால் இவற்றிற்கு த்ரிலிங்கதேசம் என்று பெயர். தெலுங்கானாவில் காளேச்வரம், ஆந்திராவில் காளஹஸ்தி, ஸ்ரீசைலம் மூன்றினையும் சேர்த்து த்ரிலிங்கதேசம் என்பர். வேதங்களுக்கு பிறந்த வீடு எது என்றால் ஆந்திர பிரதேசமே. புத்தகம் பார்க்காமலும், ஸுஸ்வரங்களுடனும், கம்பீரமான குரல் வளமும் கொண்ட பிராம்மணர்கள் இருக்குமிடம் எது என்றால் அது ஆந்திரா மற்றும் தெலுங்கானாவே யாகும். பாரததேசம் மற்றும் உலகம் அனைத்திற்கும் அருள் புரிவதற்கென்றே சாக்ஷாத் பரமாத்மா திருமலையில் திருவேங்கடமுடையானாக அவதாரம் எடுத்து இருக்கிறார்.

ஆந்திராவிற்கு பெருஞ்செல்வம் எதுவென்றால் திருப்பதி திருவேங்கடமுடையான். அவரை தரிசித்தவர்கள் மீண்டும் மீண்டும் அவரை தரிசித்து அவரின் அருளைப் பெற வேண்டும் என்று நினைக்கக் கூடிய அளவிற்கு அனைவரையும் வசீகரிக்கக் கூடியவர் திருவேங்கடமுடையான் ஒருவரே. அப்படிபட்ட திருவேங்கடமுடையான் சன்னதியில் அவருடைய அருள் இல்லாவிட்டால் ஏதாவது நடைபெறுமா? அது இல்லையென்றால் நம்மால் எச்செயல்களையும்செய்ய முடியுமா. இதை ஒவ்வொருவரும் ஆலோசனை செய்ய வேண்டும். அறிஞர்கள் மற்றும் மேதாவிகள் முக்கியமாக ஊடகங்களின் பிரதிநிதிகளிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது என்னவென்றால் ஆந்திரதேசத்தில் உள்ள மிகவும் உயர்ந்ததான செல்வம் திருமலை திருப்பதி தேவஸ்தானம்.

மற்றும் அவருடைய மகிமை எல்லோருக்கும் தெரிந்ததே. அவருடைய ஆணையின்படி நாம் இங்கு அஞ்ஜனாத்ரியில் பூமி பூஜை செய்தோம். இதுவே அஞ்ஜனாத்ரி என்பதற்கு புராணங்கள், காவியங்கள், இதிகாசங்களில் உள்ள ஆதாரங்கள் மற்றும் திருவேங்கடமுடையானை சாக்ஷாத் காரம் செய்து கொண்ட தாள்ளபாக்கம் அன்னமய்யா, புரந்தரதாஸர் மற்றும் வெங்கமாம்பா போன்ற மஹானுபாவர்கள் தரிசித்து நமக்கும் காண்பித்தார்கள். அப்படிப்பட்ட மஹானுபாவர்கள் மூவரும் இதற்கு ஆதாரங்களாக இருக்கும்பொழுது இதைப்பற்றி நாம் சந்தேகப்பட வேண்டுமா? திருமலை திருப்பதி தேவஸ்தானம் நம்முடைய இரண்டு தெலுங்கு மாநிலங்களின் பூபாகத்தில் இருக்கிறது.

இந்த பூபாகத்தில் மூன்று பேர் அற்புதமாக கீர்த்தனை செய்து இந்த பிரதேசம் முழுவதையும் வருணித்து உள்ளார்கள். ஆகையால் இன்று திருவேங்கடமுடையானின் அருளினாலும், கிருபை யாலும், கருணையினாலும் இந்த விஷயத்தைப் பற்றி போராடி தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி அவர்களும், கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி அவர்களும் அஞ்ஜனாத்ரி பற்றிய வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து தெரிவிக்குமாறு அறிஞர்களின் குழுவை நியமித்து, அவர்களின் மூலம் இதை ஆய்வு செய்து முடிவு செய்தார்கள். இது ஒரு சாதாரண விஷயமல்ல. இது என்னுடைய தனிப்பட்ட கருத்துமல்ல. இது ஒரு பொதுவான விஷயமாகும். இப்படிப்பட்ட பொதுவான விஷயமானதால் ராம ஜன்ம பூமியை நிர்ண யம் செய்த மஹானுபாவரான சித்ர கூடம் ஜகத்குரு ஸ்ரீராமபத்ராசார்யா மஹாராஜ் ஸ்வாமிகள் கூட வந்திருந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நானும் ஒரு சிறுதுரும்பாக இருக்கிறேன் என்று கூறினார். ஸ்ரீராம ஜன்மபூமி பிரச்சனையைத் தீர்த்து வைத்த இவர் மூலமாகவே ஆஞ்ஜனேய ருடைய பிறப்பிடத்தைப் பற்றி தெரிவிக்கவும் சித்ர கூடத்திலிருந்து இவரை திருவேங்கடமுடையானே அழைத்துள்ளார்.

இந்த ஆலோசனை எங்களுடையதோ அல்லது உங்களுடையதோ கிடையாது. தேச காலங்களுக்கு அதீதமான பரமாத்மாவினுடைய நிர்ணயமாகும். இப்படியே கோவிந்ததேவ் கிரி ஸ்வாமிகள் அங்கிருந்து வந்து இதற்கு முழுமனதுடன் அவருடைய ஒத்துழைப்பை நல்கினார். விஸ்வ ஹிந்து பரிஷத் என்று சொன்ன உடனேயே கோட்டேஸ்வர ஸர்மா என்பார்கள். இவர் தர்மம், தேசம் மற்றும் மதத்திற்காக அளவற்ற தியாகங்கள் செய்து வாழ்ந்து வருகிறார். அப்படிப்பட்ட கோட்டேஸ்வர ஸர்மா அவர்கள் கூட இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நன்கு நடத்திக் கொடுத்துள்ளார்கள். எல்லாவற்றையும் விட சிறந்த விஷயம் என்னவென்றால் சித்ர கூடத்தில் இருந்து வந்து உள்ள ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ ராம பத்ராசார்ய மஹாராஜ் ஸ்வாமி ஸ்ரீராம ஜன்ம பூமி மற்றும் ஸ்ரீ ஹனுமத் ஜன்ம பூமியைப் பற்றி தீர்மாணம் செய்த மஹானுபாவர். இதை விட சான்று வேறு எதுவும் இல்லை. உங்கள் அனைவருக்கும் என்னுடைய பரிபூர்ணமான ஆசிர்வாதங்கள். இது உயர்ந்த அழகிய வனமாகவும், பக்தர்களுக்கு அதியற்புதமானதாகவும், மிகுந்த ஆற்றலை உடைய பக்தி நிலையமாகவும் இது தயாராக வேண்டுமென்று திருவேங்கடமுடையானை பிரார்த்தித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து முடித்துக் கொள்கிறேன்.

நாராயண......

(ஸ்ரீபாலஹனுமன் ஆலய பூமி பூஜையின் போது ஸ்வாமிகள் ஆற்றிய உரையிலிருந்து...)

# விசாக சாரதாபீட உத்தராதிகாரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாத்மாநந்தேந்ர ஸ்வாமிகள்



விசாக சாரதா பீடம், விசாகப்பட்டினம்

## விசாக சாரதாபீட உத்தராதிகாரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாத்மாநந்தேந்ர ஸ்வாமிகள் திவ்ய அருளுரை

*மனோம் மாருத துல்யவேகம் ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்*
*வாதாத்மஜம் வானர யூதமுக்யம் ஸ்ரீராம தூதம் சிரசா நமாமி*
*அஸ்மத் குரு சரணாரவிந்தாப்யாம் நம:*

ஸாக்ஷாத் வைகுண்டத்தைப் போல் உள்ள இந்தத் திருமலையில் திருவேங்கடமுடையானின் பாதாரவிந்தங்களை தொட்டு வணங்குகிறேன். இங்குள்ள அஞ்ஜனாத்ரி மலையில் ஹனுமனின் பிறப்பிடம் இருப்பது மிகவும் விசேஷம். இதை உறுதி செய்வதற்கு பாரத தேசத்திலேயே ஒரு உன்னத வேத பூமியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் இந்தத் திருமலை க்ஷேத்திரத்தில் அறிஞர்கள் குழுவை சேர்ந்தவர்கள் எண்ணற்ற புராணங்கள் மற்றும் இதிகாசங்களுடன் அன்னமய்யா கீர்த்தனைகள், திருமலை திருவேங்கடமுடையானை போற்றும் பிற கீர்த்தனைகளையும் அவர்கள் வெகு நாட்கள் ஆராய்ந்து நிர்ணயம் செய்தார்கள். இங்கு எழுந்தருளியிருக்கும் ஆஞ்ஜனேய ஸ்வாமியின் ஆலய ப்ராங்கணங்களை அபிவ்ருத்தி செய்து அழகுபடுத்துவதற்காக இன்று பூமி பூஜை செய்வது அதிலும் எங்களுடைய குருவான ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் தம் திருக்கரங்களாலும், அதே விதமாக மேடையில் உள்ள எண்ணற்ற மஹனீயர்கள் கூட இந்த பூமி பூஜை நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்பது அளவற்ற மகிழ்ச்சி அளிக்கும் விஷயம்.

எதற்காக என்றால் ஆஞ்ஜனேய ஸ்வாமி என்றால் ஸாக்ஷாத் ஸ்ரீராமச்சந்த்ரப் பிரபுவின் சிஷ்யர்களில் முதலானவர். த்ரேதாயுகத்தில் தீயவர்களை அழிப்பதற்காகவும், நல்லவர்களையும் தர்மத்தையும் காப்பாற்றுவதற்காகவும் ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீராமபிரானாக அவதரித்த போது, அவருடைய சேவைக்காக ஆஞ்ஜனேய ஸ்வாமி அவதரித்தார். அப்படிப்பட்ட ஹனுமன் அவதரித்த இடம் இந்த திருமலைகளில் இருப்பது, அதேபோல் இந்த உன்னத திவ்ய க்ஷேத்ரத்தில் த்ரேதா யுகத்தில் ஸ்ரீராமரிடமிருந்து கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையான் வரை சேவை செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று நினைத்து இங்கு ஆஞ்ஜனேய ஸ்வாமி அவதரித்து, இன்று வரை கூட அந்த திருவேங்கடமுடையானை சேவித்துக் கொண்டு இருக்கிறார். நம் எல்லோருடைய பூர்வ ஜென்ம புண்ணியம் இது. அப்படிப்பட்ட இந்த உயர்ந்த புண்ணிய பூமியில் கோயிலை அழகு படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த பூமி பூஜை நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் கலந்து கொண்டு சேவிப்பதென்பது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பரிபூர்ணமான அனுக்ரஹம் உங்கள் அனைவரின் மீதும் மழையாகப் பொழிந்தது என்று பரிபூர்ணமாக நம்புகிறேன். இந்த க்ஷேத்திரத்தை அளவற்றவர்கள் சேவிக்க வேண்டும். திருவேங்கட முடையானை சேவித்த ஒவ்வொருவரும் இந்த க்ஷேத்திரத்தில் ஆஞ்ஜனேய ஸ்வாமியை சேவித்து அவருடைய அருளைப் பெறுவார்கள் என்று முழுமனதுடன் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

நாராயண நாராயண நாராயண

(ஸ்ரீபாலஹனுமன் ஆலய பூமி பூஜையின் போது ஸ்வாமிகள் ஆற்றிய உரையிலிருந்து...)

# Divine Message of HH Sri Govind Devji Maharaj, Ayodhya



In this holy city of Lord Venkateshwara, some speak in the provincial language, some speak in the language of God, I want to speak in the national language. It is because, this message should be widespread. At the outset, I acknowledge the grace of T.T.D i.e. Tirumala Tirupati Devasthanam that it has invited me. Many years passed for having not done Lord Venkateshwara's darshan and this covid did not allow it to happen. I am indebted to you, for having had such a blissful darshan of Lord Venkateshwara. I am blessed after so many years, after so much separation. I am blessed to have felt the presence of God today. I deeply appreciate the holy work for which we are gathered here. I for sure, know what I should do in this matter, in my conscience and I want to convey the same message to you.

When I got the invitation from Tirupati Devasthanam that I am invited to be a part of the construction of a temple with regard to Lord Hanuman's birthplace, then my companions asked me how could it be, when we are still here. I myself have come, after visiting the birthplace of Kishkindha. I myself have come after seeing Sphatik Shila. As we have been doing these works in our pilgrimage. This topic was completely new to us and for any new thing, it takes time for one to be within oneself. When I thought of all the things happening around, there was a conflict in my mind. I experienced this conflict in my mind as well, heard it from others also and such thought arouse in me also that when we went to Kiskindha, which is the birthplace of Hanuman ji and today,where have we come today for the construction of this beautified temple. The truth behind this in my mind is "how can someone decide Hanuman's actual birth place"?

A low life like me finds himself incapable of doing this. Let me tell you two-three things. I don't know how much area is in front of you. In front of me, lies the entire Bharat mata from Himachal to Ramsetu, in front of me is the Indian nation and we are unable to decide even the smallest things. I will start with Maharashtra, where I am from. By the way, now I am a resident of Ayodhya, so Lord Shri Ram has sent me for your service. For the service of Hanuman ji. But in Maharashtra, you will see that the whole of Maharashtra considers Shri Dyaneshwar Maharaj as it's Guru. He was born 700 years ago. 700 years ago, whether he was born in Alandi or in your village could not be decided by the scholars of Maharashtra till date.

This is a matter of concern since 700 years. There is a dispute going on till now about the birth place of Sai Baba. It was 100 years ago, not very old. We shall talk about Jyotirlingas. Where is the Nageshwar Linga amongst the Jyotirlingas? One is Nagesh near Dwaraka, the other is Nageshwarlinga in Maharashtra and Aundha is in Nagnath.

Where is Vaidyanath Dham located? It is in Maharashtra, and you know it is also in today’s Chhattisgarh. So, we are not able to solve these disputes. So, Hanuman ji himself who existed thousands and thousands of years ago. Oh no, could you all tell me how many hundred centuries must have passed? But we are talking about Tretayuga in Kaliyuga. How could you decide? It is very difficult. Friends! I want to say one thing, wherever you go, whatever temple of Hanuman ji when built, participate in that temple and support, we need Hanuman ji today. Today we too need the awakening of Hanuma Shakti. There is a need for unity in the nation. There should be no dispute between us about these small things. Wherever there is faith, He could be worshipped there.

But Hanuman ji should be worshipped everywhere. Wherever I look, I should see Hanuman ji’s temple. Lord Adi Shankaracharya Maharaj says wherever I look, I should see Hanuman ji. If Bharat Mata is to be awakened, this nation has to be raised and the world is to be sought, then there is a need to awaken the Hanuma Shakti within us. There is a need to invoke Hanuma Shakti. Swami Vivekananda Maharaj used to say “I wish that in my Bengal” because at that time, in Bengal, there was an atmosphere to worship the omniscient Radha-Krishna and worship of Kali.

Swamiji said “I want the worship of Hanuman ji should be started everywhere in my Bengal, Hanuman ji should be established in every village”. Samarth Ramdas ji established Hanumanji, therefore the army of Chhatrapati Shivaji Maharaj stood up, it should be kept in mind, O brave men! We the people in the era of change, should ensure that there will be no dispute about any opinion of our country, regarding the community or temple. Wherever you go, worship Hanuman ji. Hey! Let me tell you, 100 Hanuman temples in Dang district are being constructed. On 20$^{th}$ of next month i.e. 20th March we are going there. Why? Worship of Hanuman ji is necessary for the tribals, for the forest dwellers, for the people of the countryside, because everything is attained by worshiping Hanuman ji, which our country needs. Describing Hanuman ji himself, Lord Shri Ram Prabhu told Agastya Muni that “I have not seen that there is anyone like Hanumanji”. All these qualities are in Hanuman ji.

As soon as we remember Hanuman ji, “Buddhirbalam Yasho Dhairyam nirbhayatvam Arogata” power awakens within us, the intellect is awakened, we become fearless, we become healthy, all these are due to the influence of Hanuman ji. The awakening of the power of that Hanuman ji happened in this country, we must keep in mind that the mark of Ayodhya was removed because of the power of Hanuman ji. It was the awakening of the power of Hanumanji. Otherwise, it would not have been possible to eradicate that from this country in a day. Hanuman ji should be awakened within everyone. That is much needed. That’s why I would say that you are building Hanuman ji’s temple. Bal Hanuman must have played here, Bal Hanuman must have performed pastimes here, how many mantras must have been taught here. Rama’s mission was accomplished because of that. Lord Shri Ram himself has said that if Hanuman ji had not done this work, I do not know whether I would have come to know about Bhagwati Janaki?

l

Lord Shri Ram says that “we will always be in your debt. I am not alone; my whole family will be in your debt”. When Lord Shri Ram tells Hanuman ji that “I will remain in debt only along with my family because you have done so many favours that I will have to give my life to repay each favour, even then the rest of the favours still remain”. Dear! Today we need to awaken such power with which the ten-headed Ravana, who is attacking our mother, India could be controlled. Don’t we hear that Ravan had ten faces? Hey! Many enemies from ten directions are ready to break this India into pieces. There should be no such thing happening with India. This India should be united.

The national consciousness of this entire nation from Himachal to Ramsetu, should be one. And to do this- If this has to happen, then there should be an awakening of Hanumad Shakti within all of us and to awaken this, we should be away from controversies. In the tradition of Maharashtra, the refuge of Hanuman ji is doubled in its result. God’s refuge is one time of the result, Hanuman ji’s refuge is doubled- Sant Tukaram Maharaj says that Hanuman ji Maharaj! I again and again come to your shelter, I come to show you the path of devotion, Hanuman ji has shown us the path of devotion and that is why we have to awaken the same devotion, then Narada’s bhakti sutra, there is a very sweet quote i.e, vado navalambyah not to dispute, not to dispute with anyone.

I have only one appeal to all the Hindus to stop arguing. Start working, work together, give up egoism, renounce identity, if we all Hindus will look in one direction, speak one voice, note it down! There is no other nation like us in the whole world, this will be proved immediately and therefore our enemy is our disunity. These disputes which happen within us, destroy us. Let us walk on the path of devotion to God with unity by giving up the controversies. Hanuman ji Maharaj has shown us this path. This is our direction.

The saints have arrived here. A question in Mahabharata says “what is dik”? Yaksha asked Dharmaraja that “what is called as the direction? - North, South, East, West, which is called as a direction? Dharmaraja replied - Santo Dik. There is only one direction which was shown by saints. The saints of our country have taught us the unity from Himachal to Ramsetu. Our saints have spoken of being non-controversial. Hence, Lord Shri Ram will be pleased, Hanuman ji’s work will be done and Lord Venkatesh Prabhu, who is the centre of the whole world, “Kalau Devah Venkateshah”, the one who inspires the entire Kali Yuga by abandoning the controversies and moving forward on the path of unity. God, due to His kindness on us, will be pleased with the people and will shower blessings on us. It is my belief. Thanks to everyone.

Hail Lord Venkatesha!

(ஸ்ரீபாலஹனுமன் ஆலய பூமி பூஜையின் போது ஸ்வாமிகள் ஆற்றிய உரையிலிருந்து...)

## விச்வ ஹிந்து பரிஷத் ஸ்ரீ கோட்டேஸ்வரசர்மா ஸ்வாமிகளின் திவ்ய அருளுரை

*மனோஜவம் மாருத துல்யவேகம் ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்*
*வாதாத்மஜம் வானர யூதமுக்யம் ஸ்ரீராம தூதம் சிரசா நமாமி*

மேடையில் வீற்றிருக்கும் பரம பூஜ்யரான ராமபத்ராசார்ய மஹராஜ் அவர்களுக்கும், பரம பூஜ்ய ஸ்வரூபானந்தேந்த்ர ஸரஸ்வதி மஹராஜ் அவர்களுக்கும், அவருடைய உத்தராதிகாரி மஹராஜ் அவர்களுக்கும், குருவுக்கு சமமான ஸ்ரீ கோவிந்த தேவ் குரு அவர்களுக்கும் என்னுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்களை செய்து கொண்டு மற்றும் மேடையில் வீற்றிருக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்களுக்கும், மரியாதைக்குரிய செயலாட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நமஸ்காரங்கள்.

ஹனுமனுடைய அவதாரத்தலம் அஞ்ஜனாத்ரி. இந்த அஞ்ஜனாத்ரியை அபிவ்ருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட உயர்ந்த நிகழ்ச்சியில் இன்று பூமி பூஜை நிகழ்விற்கு வந்திருக்கும் பக்த ஜனங்கள் அனைவருக்கும் என்னுடைய மனப்பூர்வமான நமஸ்காரங்கள்.

இப்போதே வெளியிடப்பட்ட புத்தகத்தை பார்க்கும் போதும் பிறகு கோவிந்த தேவ் கிரி அவர்கள் உரையாற்றிய பிறகு சதாஸிவ மூர்த்தி அவர்கள் பேசிய விஷயங்கள் ஸ்ரீராமபிரானின் அவதாரத்தலத்தின் போராட்டம் எனக்கு நினைவிற்கு வருகிறது. இராமர் இங்கேயே பிறந்தாரா என்று ஒருவரும், இராமர் என்பதே ஒரு கற்பனைப் பாத்திரம் என்று தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பிரமுகரும், இங்கில்லை வேறொரு இடத்தில் பிறந்தார் என்று ஒருவரும், இப்படி இராமரின் பிறப்பு மற்றும் பிறப்பிடம் குறித்து கருத்து வேறுபாடு வெளிப்பட்ட போது மற்றொரு பக்கம் இது எங்களுடையது, உங்களுடையது அல்ல என்ற மற்றொரு வாதமும் வெளிப்பட்டது.

இவற்றிற்கு நடுவில் ராம ஜன்ம பூமியைப் பற்றிய வழக்கு மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உயர்நீதி மன்றத்திற்கும், உயர்நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு வந்த சமயத்தில் எங்கெங்கிருந்தோ ஆதாரங்களையும், அவர்களுக்கு சமாதானங்களைச் சொல்லுவதற்காகத் தேடித் தேடி அலைந்தோம். ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வரலாற்று ஆராய்ச்சியாளரிடம் தொலைபேசி மூலம் ஒரு வார்த்தையைச் சொன்னார். அந்த புத்தகத்திற்காக கூகுளில் தேடிய பொழுது ஒரு நூலகத்தில் இருப்பதாகத் தெரிந்து கொண்டு அங்கு உள்ளவர்களிடம் பேசி நீதிமன்றத்தில் ஆதாரத்தை தெரிவிப்பதற்காக அந்த நூலை வரவழைத்தோம். எடுத்துக்காட்டினால் மட்டும் போதாது போட்டோ காபி வைக்க வேண்டும். வெளியிட்டவரின் போட்டோ காபியும் வைக்க வேண்டும். ஜெர்மன் பாஷையில் ஒரு யாத்ரிகர் ராம ஜன்ம பூமி இதுவே என்று எழுதினார் என்பதனால் அதை கூட வரவழைத்தோம். தொல்பொருள் ஆய்வாளர்கள் ராடார் கருவி மூலம் பரிசோதித்த போது இந்த பூமியின் அடியில் ஒரு விசாலமான கட்டிடம் தென்படுகிறது. அது கோயிலா இல்லையா என்று சொல்ல முடியாது. தோண்டிப்

பார்த்தால் தான் தெரியும் என்று சொன்னதால் தொல்பொருள் ஆய்வாளர்கள் தோண்டி காண்பித்தார்கள். அதை பார்த்த அவர்கள் இது 86 தூண்களுடன் கூடிய விசாலமான கோயில் என்று உறுதிப்படுத்தினார்கள். வேத காலத்தில் ராம ஜென்ம பூமியைப் பற்றி எங்கேனும் எவரேனும் சொல்லி உள்ளார்களா என்று தேடச் சொன்னோம். இவை எல்லாம் எனக்கு இப்போது வரிசையாக நினைவிற்கு வருகிறது. இதில் ஒவ்வொரு கட்டுரையும் எழுதியவர்களின் பெயரையும் அவர்களின் ஸப்ஜெக்டையும் பார்த்தால் மிகப் பெரிய பணிகளை செய்துள்ளார்கள். மிகவும் நன்றாக உள்ளது.

இதில் நாம் இரண்டு விஷயங்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று நம்முடைய வாதம் காலத்தை வெல்ல வேண்டும், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த பகுதியான அஞ்ஜனாத்ரி எல்லோருக்கும் தெரிந்த இடமாதலால் காலத்தை வெல்வோம். மக்கள் இதை எடுத்துக் கொள்வார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அடுத்ததாக ராம சேது என்பதே இல்லை, பாலம் கட்டவே இல்லை, அவரே பிறக்கவில்லை என்ற போது பாலம் எங்கே கட்டுவார். நகராட்சியில் அவருக்கு பிறப்புச் சான்றிதழ் ஏதேனும் உள்ளதா, இப்படியாகக் கேட்கும் எல்லோருக்கும் நம்மால் பதில் சொல்ல இயலாது.

நீதிமன்றத்தில் அவர்கள் கேட்ட ஆதாரங்களை நாங்கள் காண்பித்தோம். அப்படி நீதிமன்றத்திற்குச் சென்றால் இந்த விஷயம் நூற்றுக்கு நூறு சதவீதம் ராம ஜன்ம பூமி மாதிரியே ஏழு நீதி அரசர்களைக் கொண்ட குழுவை நியமித்தாலும், அல்லது ஐந்து நீதி அரசர்களின் குழுவை நியமித்தாலும், உச்சநீதிமன்றத்திற்குப் போனாலும் கூட வெற்றி பெறக் கூடிய விஷயங்களை ராணி சதாசிவ மூர்த்தி அவர்களும் அவருடைய குழுவினரும் சேகரித்துள்ளார்கள். அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். டில்லியை தலைமையகமாகக் கொண்டு ஒரு நிறுவனம் ராமர் அயோத்தியிலிருந்து இலங்கைக்குச் செல்வது, இலங்கையிலிருந்து அயோத்திக்கு வந்த வழி குறித்து ஆராய்ச்சி செய்து நடந்தே பதிமூன்று முறை எல்லா இடங்களிலும் சுற்றி அவை எல்லாவற்றையும் அபிவ்ருத்தி செய்ய வேண்டும் என்ற வேலையில் இருக்கிறது. அவர்கள் என்னை டில்லியில் பார்த்த போது எங்கள் ஊரில் கூட ஒரு பகுதி உள்ளது.

சீதா தேவி எங்கள் ஊர் அருகில் மலையின் மீது வன வாசத்திற்காகச் சென்ற பொழுது அபகரிக்கப்படுவதற்கு முன்பு சீதா தேவி தன்னுடைய புடவையை இங்கு காயவைத்தார் என்று சொல்லி ஒவ்வொரு வருடமும் எங்கள் ஊரனைத்தும் (குண்டூரு மாவட்டம்) திருநாளுக்குப் போவோம் என்றனர். இப்படியாக பலவிதமான இடங்களும், பக்தர்கள் எங்கு எவ்வடிவில் எப்போது பிரார்த்தனை செய்தாலும் அங்கு அவ்வடிவில் தோன்றி அருள் செய்வார். அதனால் த்வாதஸ ஜ்யோதிர் லிங்கங்கள் இரண்டிரண்டு இடத்தில் இருக்கின்றன. இரண்டிற்கும் போய் வருகிறார்கள், இரண்டிற்கும் மரியாதை கொடுக்கிறார்கள். நானும் இரண்டு இடத்திலும் சேவித்தேன். த்வாதஸ ஜ்யோதிர் லிங்கங்களின் ஒன்றை சேவித்தாலே பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்களையும் சேவித்ததாகக் கணக்கிடுவர். நாமெதற்கு பன்னிரண்டு இதுவா, அதுவா என்று நிர்ணயம் செய்ய வேண்டும். அவரே நிர்ணயம் செய்வார். நமக்கு பக்தி வேண்டும். இதே விதமாக பல இடங்களில் கந்த மாதன பர்வதம் எது என்று கூட நிறைய சந்தேகம் உள்ளது. மஹேந்த்ர

பர்வதம் எது, ஒரிசாவில் உள்ளதா இராமேஸ்வரத்தில் உள்ளதா, மத்ய ப்ரதேசத்தில் உள்ளதா என்ற சந்தேகமும் உள்ளது. பாரத தேசத்தின் வடகிழக்கில் இருந்தும், ஆக்னேய மூலையிலிருந்தும், ஆசியாவிற்கு ஆஸ்த்ரேலியா வழியாக போகும் போது ஸுரபய என்ற இராமாயணத்தில் வரும் கண்டங்களின் பெயர்கள் வருகின்றன. ஹனுமன் ஸமுத்ரத்தை தாண்டியபொழுது வந்த அந்த எல்லா பெயர்களோடு இப்போதும் பூகண்டங்கள் உள்ளன. இவை புவியியல் வரைபடத்தில் நமக்கு கிடைக்கிறது.

அவரவர் நம்பிக்கை அவரவர்க்கு. நம்முடைய நம்பிக்கையை நாம் முழுமையாக நம்பி பிறருடைய நம்பிக்கையை கண்டிப்பது அவசியமில்லை. இப்பொழுது சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் மதிப்பது மிகவும் அவசியமாகிறது. அதேவிதமாக ஹனுமனின் பிறப்பிடம் கூட கண்டிப்பாக வெற்றி பெறும் என்றும் வெற்றி பெற்றே தீர வேண்டும், நீதிமன்றங்களில் கூட ஜெயிக்கும் என்ற பரிபூர்ண விச்வாஸம் எனக்கு இருக்கிறது.

கோவிந்தகிரி அவர்கள் கூறியபடி ஹனுமனின் உபாஸனை நல்லது. நான் நேற்று விமானத்தில் வரும்போது இராமாயணத்தைப் பற்றி ஆலோசனை செய்தேன். இந்த விஷயம் எனக்கு நிஜமாகத் தெரியாது. ஆஞ்ஜநேயரின் அஞ்ஜநாத்ரியை அபிவ்ருத்தி செய்வது பற்றிய விஷயத்தில் இருந்தேன். என்ன பேசுவது என்று ஆலோசனை செய்த போது உலகத்தில் எங்கும் இல்லாத அளவிற்கு பாரததேசத்தில் இளைஞர்கள் இருக்கின்றனர்.

என்னுடைய சின்ன வயதில் தேர்வின்போது ஹனுமனின் கோயிலுக்குச் சென்று 40 ப்ரதக்ஷிணங்கள் செய் 40 நாட்களுக்கு செய், தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் அதற்காக ஹனுமன் சாலிசா படி என்று என்னுடைய அம்மா, அப்பா கூறுவார்கள். இளைஞர்களுடைய முன்னேற்றம் சமூகத்தின் முன்னேற்றம். சமூகத்தின் சக்தி இளைஞர்களின் சக்தி போன்றவற்றை இந்நாட்களில் அதிகரிக்க வேண்டும்.

தற்பொழுது இளைஞர்கள் தவறான வழியில் செல்வதால் குற்றங்கள் அதிகரிக்கின்றன. போதை மருந்துக்கு அடிமை ஆகிறார்கள். இதனால் பலவிதமான அடிப்படை வாழ்வுக்குத் தேவையான நல்ல விஷயங்களுக்கு குறைவு ஏற்பட்டுள்ளது. வீட்டிலேயும் சரி, பள்ளிக் கூடத்திலும் சரி உடன் உள்ளவர்கள் பழக்க தோஷத்தால் கெட்டுப் போகும் நிலையில் ஹனுமனை உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்த பொழுது எனக்கு "கராதே ஜூடோ" இவற்றிற்கு சம்மந்தமான விஷயங்கள் கூட நினைவுக்கு வந்தது.

முதல் முதலாக கராதே ஜூடோ நான்றாக செய்தவர் ஹனுமன். இவ்வாறாக ஹனுமன் இளைஞர்களின் சக்தி சாதனைக்கு உதாரணமாகத் திகழ்பவர். இந்த ஹனுமனுடைய தேவாலயத்தின் முன்னேற்றம் பற்றி ஆலோசனை செய்து வந்தேன். இந்த விஷயத்தில் கூட அப்படிப்பட்ட வெற்றி கிடைக்க வேண்டும். நீதிமன்றத்தில் வெற்றி பெற வேண்டும், வெற்றி பெற்றே தீருவோம் என்ற முழுமையான நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

ஜெய் ஸ்ரீ ராம்

**(ஸ்ரீபாலஹனுமன் ஆலய பூமி பூஜையின் போது ஸ்வாமிகள் ஆற்றிய உரையிலிருந்து...)**

அஞ்சனாத்ரி, திருமலை



மதங்க மகரிஷி அஞ்ஜனாதேவியிடம் ஸ்வாமி கொலுவுள்ள வேங்கடாத்ரியைக் காண்பித்து தவம் செய்வதற்கு இதுவே தகுதியான இடம் எனக் கூறுதல்



# முன்னுரை

# முன்னுரை

ஹனுமன் அனைத்து தெய்வங்களிடமும் அன்பானவர். அனைத்து தெய்வங்களின் அருளாளர். எல்லையில்லா சக்தி உடையவர். அற்புதங்களைக் காட்டினவர். மிகவும் மேலான இராமபக்தி, மஹா வீரத்தன்மை, நல்ல குணமுடையராக நம் மனதில் நிறைந்தவர். அபயம், ஆநந்தம் இவை இரண்டும் ஹனுமன் நம் எல்லோர்க்கும் கொடுத்த வரங்கள்.

அனுசரிக்கத்தக்க வெளிப்படும் தன்மை (வ்யக்தித்வம்), ஆராதிக்கும் படியான தெய்வத் தன்மை எல்லாம் ஒருசேர்ந்த தெய்வத்தன்மையே ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி. பயந்த சுக்ரீவனுக்கு அபயம் கொடுத்து ஸ்ரீராமபிரானோடு நட்பை ஏற்படுத்தியவர். பெருந்துன்பத்தில் ஆழ்ந்திருந்த சீதாப்பிராட்டிக்கு ஸ்ரீராமபிரானின் விஷயத்தைக் கேட்கச் செய்து, அப்பிராட்டியின் உயிரைக் காப்பாற்றி, பிராட்டியை மகிழும்படிச் செய்தார். இலக்குமணின் உயிரையும் நிலைக்கச் செய்து ஸ்ரீராமபிரானை சந்தோஷப்படுத்தினார். இவ்வாறு அபய ஆஞ்ஜநேயராய், ஆநந்த ஆஞ்ஜநேயராய், அனைத்து விருப்பங்களை (அபீஷ்டம்) அருள்பவராய் நம் அனைவருக்காக இம்மையிலே வெளிப்படும் தெய்வமாம் ஹனுமன்.

ஹனுமனுடைய முழுத்தன்மையான (ஸம்பூர்ணமான), மிகவும் அற்புதமான (வெளிப்படும் தன்மையான) உருவம், ஸ்ரீராமாயண காவியத்தில் மிக நன்றாக விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீராமாயணம் மந்திரத்துக்குள்ளீடான ஆதிகாவியம். விஷ்ணு ஒளி ஸ்ரீராமபிரானாக, சக்தி (பிராட்டி) ஒளி சீதாப்பிராட்டியாக, சிவ ஒளி ஹனுமனாக உருவெடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

## ஹனுமனின் பிறப்பு

ஸ்ரீராமாயண சுந்தர காண்டம், அநேக புராணங்கள், வேங்கடாசல மாஹாத்மியம், எத்தனையோ காவியங்கள் முதலானவற்றில் ஹனுமனின் பிறப்பைப் பற்றி மிக நன்றாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

1. சுந்தரகாண்டத்தில் தன் பிறப்பைப்பற்றி ஹனுமனே சீதாப்பிராட்டிக்குத் தெரிவித்துள்ளார். சம்பசாதன் என்னும் அரக்கனைக் கொன்ற கேசரீ என்னும் வானர வீரனுக்கும் அவனது மனைவி அஞ்ஜநாதேவிக்கும் வாயு தேவன் அருளால், தான் பிறந்ததாக ஹனுமனே தெளிவித்துள்ளார்.

*மால்யவாந்நாம வைதே$_3$ஹி கிரீணாமுத்தமோகிரி:*

*ததோ க$_3$ச்$_2$ச$_4$தி கோ$_3$கர்ணம் பர்வதம் கேசரீ ஹரி:*

*ஸ ச தே$_3$வர்ஷி பிர்திஷ்ட: பிதா மம மஹாகபி:*

*தீர்த்தே$_2$ நதீ$_3$பதே: புண்யே சம்ப$_3$ஸாத$_3$ந முத்$_3$த$_4$ரந்*

மால்யவந்த மலையானது மலைகளில் மேன்மையானது. இம்மலையிலிருந்து தேவரிஷிகளால் குறிக்கப்பட்டவனாய், கோகர்ணத்திற்குச் சென்றான் கேசரி என்ற வானர வீரன். அந்த வானர வீரனே எனது தந்தை. நதீபதி என்கிற அந்த புண்ணிய தீர்த்தத்தில் சம்பசாதனன் என்கிற அசுரனைக் கொன்றான்.

*யஸ்யாஹம் ஹரிண: க்ஷேத்ரே ஜாதோ வாதேந மைதி$_2$லி*
*ஹநூமானிதி விக்$_2$யாதோ லோகே ஸ்வேவை கர்மணா* [1]

–ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், சுந்தரகாண்டம் 35ஆம் ஸர்க்கம்ச்லோ 35-80-82.

ஓ மித்லாத்மஜா ! அந்தஹரி (குரங்குவீரன்) பூமியான (க்ஷேத்ரமான–பத்நியாகிய அஞ்ஜநாதேவிக்கு) மனைவிக்கு வாயுதேவனின் அருளால் நான் பிறந்தேன். என்னுடைய சேஷ்டை காரணத்தால் என்னை ஹனுமன் என்பது உலக வழக்கு.

2. கிஷ்கிந்தா காண்டத்தில் ஜாம்பவான் சமுத்ரத்தை (கடலை)த் தாண்டுவதற்காக ஹனுமனை உத்ஸாஹப்படுத்தி அவருடைய பிறப்பினை இவ்வாறாகத் தெரிவிக்கிறார். உங்களுடைய தாய் அஞ்ஜநாதேவி, பிறப்புக்குக் காரணம்

*அப்ஸராऽப்ஸரஸாம் ச்ரேஷ்டா$_2$ விக்$_2$யாதா புஞ்ஜிகஸ்த$_2$லா*
*அஞ்ஜநேதி பரிக்$_2$யாதா பத்நீ கேசரி ணோஹரே:*

அப்ஸரஸ்ஸில் (தேவ மாதா) மேன்மையானவளும், உலகப் புகழ் வாய்ந்தவளுமானவள் புஞ்ஜிகஸ்தலா என்பவள். அவள் அஞ்ஜநா என்ற பெயருடன் பிறந்து வானர வீரனான கேசரிக்கு மனைவியானாள்.

*விக்$_2$யாதா த்ரிஷு லோகேஷு ரூபேணா ப்ரதிமாபு$_4$வி*
*அபி$_4$சாபாத$_3$ பூ$_4$த்தாத! வாநரீ காம ரூபிணீ*

மூவுலகில் ஒப்பில்லாத வடிவழகையுடைய அவள் சாபத்தால் காமரூபிணியான வானரப் பெண்ணாய்ப் பிறந்தாள்.

*து$_3$ஹிதா வானரேந்த்$_3$ ரஸ்ய குஞ்ஜரஸ்ய மஹாத்மந:*
*மாநுஷம் விக்$_3$ரஹம் க்ருத்வா ரூப யௌவநசாலிநீ*
*விசித்ரமால்யாப$_4$ரணா கதாசித் க்ஷௌமதா$_4$ரிணீ*
*அசரத் பர்வத ஸ்யாக்$_3$ரே ப்ராவ்ருடம்புத$_3$ ஸந்நிபே$_4$*

மஹாத்மா, வானர அரசனான குஞ்ஜரன் என்பவனுக்கு மகளாகப் பிறந்த அவள் மிகுந்த வடிவழகு, வாலிபப் பருவத்தோடு கூடியவளாய், பட்டாடைகளை உடுத்தியவளாய், சித்திர, விசித்திரமான பூமாலைகளோடு, ஆபரணங்களோடு மழைக் காலமேகத்துக்கொப்பான நிறத்தையுடைய மலைமேல் திரிந்து கொண்டிருந்தாள்.

*தஸ்யா வஸ்தீரம் விசாலாக்ஷ்யா: பீதம் ரக்த த$_3$சம் சுப$_4$ம்*
*ஸ்தி$_2$தாயா: பர்வதஸ்யாக்ரே மாருதோऽதா$_2$ ஹரச்ச$_2$நை:*

அந்த மலையுச்சியில் விசாலமான கண்களையுடைய அவள் உடுத்தியிருந்த சிவப்பு கரை சேர்ந்த மஞ்சள் ஆடையை நிதாநமாக வாயுதேவன் நீக்கினான்.

*ஸத$_3$த$_3$ர்ச ததஸ்தஸ்யா வ்ருத்தாபூ ரூஸுஸம்ஹதெள*
*ஸ்த நெளச பீநெள ஸஹிதெள ஸுஜாதம்சாரு சாநநம்*

அவளுடைய உருண்டை வடிவமான தொடை, பருத்த மார்பகம் அழகிய முகத்தையும் வாயுதேவன் பார்த்தான்.

*தாம் விசாலாய தச்ரோணீம் தநுமத்$_4$யாம் யசஸ்விநீம்*
*த்ருஷ்ட்வைவ சுபஸர்வாங்கீம் பவந: காமமோஹித:*

பரந்த கடிபாகத்துடன் குறுகிய இடுப்போடு, உலகப் புகழ் பெற்ற அந்த மங்களகரப் பேரழகியைப் பார்த்து அவன் காமத்துக்காளானான்.

*ஸ தாம் பு$_4$ஜாப்யாம் தீ$_3$ர்க$_4$ாப்$_4$யாம் பர்யஷ்வஜத மாருத:*
*மன்மதா$_2$ விஷ்ட ஸர்வாங்கோ க$_3$தாத்மா தாம நிந்திதாம்.*

மன்மதலீலைக்கு வசப்பட்ட வாயுதேவன் தன்னுடைய மிக நீளமான தோள்களினால் மிகவும் சுத்தமான அவளை அணைத்துக் கொண்டான்.

*ஸாது தத்ரைவ ஸம்ப்$_4$ராந்தா ஸுவ்ருதா வாக்யமப்ரவீத்*
*ஏகபத்னீ வ்ரதமித$_3$ம் கோ நாசயிது மிச்ச$_2$தி*

அந்த வேதனையில் நிலைமை தடுமாறினாள். "ஒருவனுக்கே மனைவியாயிருக்கும் என்னுடைய பதிவிரதத்தை யார் அழிக்க நினைத்தது?" (என்றாள்)

*அஞ்ஜநாயா வச:ச்ருத்வா மாருத: ப்ரத்ய பாஷத*
*ஸ த்வாம் ஹிம்ஸாமி ஸுச்ரோணி மா பூ$_4$த்தே மனஸோப$_4$யம்*

அஞ்ஜநாதேவியின் அந்த வார்த்தையைக் கேட்டு அவன், "சுந்தரி! உனக்கு உடலால் நான் இன்னலைக் கொடுக்க மாட்டேன். உனக்கு மனதில் பயம் தேவையில்லை" (என்றான்)

*மனஸாऽஸ்மி க$_3$தோ யத்வாம் பரிஷ்யஜ்ய யசஸ்விநி*
*வீர்யவான் புத்$_3$தி$_4$ ஸம்பந்நஸ்தவ புத்ரோ ப$_4$விஷ்யதி*

உன்னைக் குறைந்தது மனத்தால் மட்டுமே விரும்பினேன்; காரணம் என்னவெனில் உனக்கு மஹாவீரன் அறிவுள்ளவனான மகன் பிறப்பான் (என்றான்)

*மஹா ஸத்வோ மஹாதேஜா மஹாப$_3$ல பராக்ரம:*
*லங்க$_4$னே ப்லவநே சைவ பவிஷ்யதி மயா ஸம:*

உயர்ந்த ஸத்வகுணவானாக, மேன்மையான ஒளிபடைத்தவனாக மிக்க பல பராக்ரமங்களை உடையவனாக, எவ்வளவு தூரமானாலும் தாண்டுவதிலும் தாவுவதிலும் எனக்குச் சமமானவனாக விளங்குவான்.

*ஏவமுக்தா ததஸ்துஷ்டா ஜநநீதே மஹாகபே!*

*கு$_3$ஹாயாம் த்வாம் மஹாபா$_3$ஹோ ! ப்ரஜ்ஞே ப்லவகர்ஷப$_4$*

–ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், உத்தரகாண்டம் 35-14

என்று சொன்னதும் "ஓ மஹா வானரமே ! உன்னுடைய தாய் பேறு பெற்றவளானாள், ஓ வானரரசே! அந்தக் குகையில் உன் பிறப்பை ஈந்தாள்" என்று ஜாம்பவான் ஹனுமன் பிறப்பைச் சொல்லி முடித்தான்.

## ஹனுமன் பிறப்பில் வாயுதேவனின் விஷய ரஹஸ்யம்

இந்த ஹனுமனின் பிறப்பு குறித்து இராமாயணத்தோடல்லாமல் மற்ற புராண நூல்களில் கூட வாயுதேவனின் விஷயம் உள்ளது. அஞ்ஜநாதேவி கேசரி தம்பதியின் தனயன் விஷயத்தில் வாயுதேவனுடைய உண்மை அவர்களுக்குப் பகையாகத் தோன்றலாம். ஆனால் தர்ம சாஸ்த்ரம், வைதீக ஸம்ப்ரதாயம் தெரிந்தவர்களுக்கு வியப்பு உண்டாகாது.

வைதீகக் கிரமத்தில் நடைபெறும் திருமணத்தைப் பற்றி துள்ளிய(ஸூக்ஷமம்)மாக ஆராய்ந்தால் ஒருத்தி கன்னியாக இருக்கும்போது, சோமன், கந்தர்வன், அக்னி காப்பாற்று கின்றனர். அவளுடைய காவலர்களாகையாலே கணவர்கள் என்று சொல்வது தகும். காப்பாற்றுபவன் காவலன் என்று பொருள். அவ்வாறே திருமணக்காலங்களில் அந்தக் கன்னியை அவளுடைய கணவரிடத்தே கைப்பிடித்துக் கொடுக்கும்போது சொல்லுகின்ற மந்திரத்தில் இல்லாளாக (மனைவியாக)க் காக்கும் பொறுப்பை சுக்ரி, அருணன் பகுனன், அர்யமன், சூரியன், மற்ற அதிதிகள், வாயு தேவன், ப்ரஜாபதி, விஷ்ணு, இந்திரன் முதலானவர்களுக்கு ஒப்படைப்பார்கள். அப்படி ஒப்படைக்கப்பட்ட அந்தக் கன்னி இல்லாள்தன்மையை, அவளைக்காக்கும் பதிகள் அந்தந்த காலங்களில் காப்பாற்றுகின்றனர். அவ்வாறு ஒப்படைக்கும் வேளையில் பாணிக்ரஹணமான(கைத்தலம் பற்றுதல்– நாச்சியார் திருமொழி 6–6) காலத்தில் ஓதுகின்ற மந்திரங்களில் ஒன்று.

*ய ஏதி ப்ரதி சஸ் ஸர்வா தீஸோம பவமாந:*

*ஹிரண்ய ஹஸ்த ஐரம்ம ஸ் ஸத்வா மந்மநஸம் க்ருணோது*

தன்னைத்தொழுபவர்க்குக் கொடுப்பதற்குக் கையில் பொன்னை அணிந்து கொண்டு எல்லாத்திசைகளிலும் சுழலும் அக்னி பகவானுக்கு நண்பனான வாயுதேவன் 'உன்னை என்னிடம் மனத்தால் என்னவளாக ஆக்குக!' (என்பது) மணமகன் சொல்லும் மந்திரம்.

## மந்திரம்!

இந்த மந்திரத்தில் சொல்லப்பட்டபடி அஞ்ஜநா தேவி கேசரியின் மகன் எல்லா உலகத்திலும் பூசிக்கப்படுபவன், தெய்வத்திருமகன், எல்லையில்லா சக்தியுடையவன், அதிக பல பராக்ரமனாகப் பிறப்பான் என்று தெரிவித்து அந்தக் குழந்தை தன்னுடைய சக்தியைப்

பெற்றிருப்பான் என்ற கருத்தே வேத தர்மஸாரமே ஹனுமனின் பிறப்பு வரை வாயுதேவன் அவளுக்கு காவல் கவசமாக இருந்தான். அதையே அணைப்பதாக வர்ணிக்கப்பட்டது. தெய்வ சேர்க்கை, மானிட சேர்க்கை போன்றதல்ல. அவர்கள் உடல் மீது அன்பு காட்டுபவர்கள் அல்ல. நினைத்த மாத்திரத்தாலே பார்வையால் சந்தானம் அனுக்ரஹிக்கும் மேன்மை உடையவர்கள். வாயுதேவனும் அப்படிப்பட்டவனே. அது பௌதிக காமம் என்று நினைக்கக் கூடாது. தெய்வங்களுக்கு கர்பதாரணம் என்பது சொல்லப்படவில்லை. நினைத்தமாத்திரத்தாலேயே சந்தானம் உண்டாவது அவர்களுக்கு சாதாரணமான விஷயம். அப்படியே தெய்வங்கள் அனுக்ரஹிக்கும் போது ஸத்ய: ஜநநம் என்பது கூட சாதாரண விஷயம்தான். அவ்வாறே க்ஷேத்ரம் (பிறப்பை ஈந்த பெண்) மானிடமோ அல்லது மிருகமோ கர்ப்பம் தரிக்கலாம்.

ஒரு மலையுச்சிக்குச் சென்று நிற்கும்போது வீசும் காற்றுக்கு எல்லாருடைய ஆடைகளும் பறப்பது (கலைவது) இயற்கை. அச்சமயம் அவர்களுடைய சுற்றுப்புறத்தே அந்தக் காற்றின் ஒலி காதில் புகுவதும் இயற்கை. அவ்வாறு சூழ்வது என்பது அணைப்பதைச் சொல்வது. இது உருவக அணியின் இனிமை. அதற்குமேல் சந்தேகத்தை வாயுதேவன் தீர்த்துவிட்டான். ஆகையால் உள்ளடங்கிய ரகசியத்தை வேதமந்திரம் ஓதுவதாகச் சொல்லப்படுகிறது.

3. இனி, ஸ்ரீவால்மீகி ராமாயண உத்தரகாண்டத்தில் ஸ்ரீராமச்சந்திரபிரபு அகஸ்த்யமுனிவரை ஹனுமனின் கதையை இவ்வாறு வருணிக்கிறார்.

*ராக$_4$வஸ்ய வச: ச்ருத்வா ஹேதுயுக்தம் ருஹி ஸ்தத:*
*ஹநூமத[1] ஸமக்ஷம்தமித$_3$ம் வசநம ப்ரவீத்*

இராகவனுடைய தக்கதும் தகாததுமான பேச்சைக் கேட்ட பிறகு அகஸ்த்யமுனி ஹனுமனின் எதிரிலேயே இவ்வாறு கூறினார்.

*ஸூர்ய த$_3$த்தவரஸ்ஸ்வர்ண ஸுமேருர்நாம பர்வத:*
*யத்ர ராஜ்யம் ப்ர சாஸ்த்யஸ்ய கேசரீ நாம வை பிதா*
*தஸ்ய பா$_4$ர்யா ப$_3$பூ$_4$வேஷ்டா அஞ்ஜநேதி பரிச்ருதா*
*ஜநயாமாஸ தஸ்யாம் வை வாயுராத்மஜ முத்தமம்[2]*

சூர்யனாலே வரம்பெற்ற 'சுமேரு' என்ற ஒரு மலையுள்ளது. அங்கு ஹனுமனின் தந்தையான 'கேசரி' என்ற பெயரையுடைய வானரவீரன் அரசாண்டிருந்தான். அவனுக்கு விருப்பமான 'அஞ்ஜநா' என்ற புகழ்பெற்ற மனைவி இருந்தாள். அவளிடம் வாயுதேவன் தன்னுடைய மறு உருவமான, உத்தமனான மகனைப் பெற்றான். அவனே ஹனுமன்.

(ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் வருணிக்கப்பட்ட சுமேரு மலை "வேங்கடாசலமே" *'மேரு புத்ரம் மஹாரண்யம் வேங்கடாசல ஸம்ஜ்ஞகம்''* என்று மேருமலை மகன் வேங்கடவன் என்றும், சுமேரு என்றும் பெயர்களையுடைவர். அந்த சுமேரு சேஷனுடைய அம்சமாகப் பிறந்தவன். மலையின் உருவம் ரிஷிகளுக்கும், தேவதைகளுக்கும், முக்தர்களுக்கும் பொன்னிறத்தில் காணப்படுகிறதென்று வேங்கடாசல மாஹாத்மியம் விவரிக்கின்றது.

இப்படி ஸ்ரீமத் ராமாயணத்தில் மூன்று இடங்களில் ஹனுமனுடைய தாய்தந்தையரைப் பற்றி வருணிக்கப்பட்டுள்ளன. ஆனால், பிறப்பிடத்தைப் பற்றி மட்டும் வருணிக்கப்படவில்லை. உத்தரகாண்டம், ஸ்ரீராமாயணத்தில் சேர்ந்ததே என்று ஒப்புக் கொள்பவர்க்கு இந்த மேற்படி ஆதாரம் பரமச் சான்றாகும். அதாவது சுமேரு மலையானது ஹனுமனின் தந்தையான வானரவீரன் கேசரி ஆண்ட, விசாலமான வானர அரசின் பாகமாக இருந்தது என்று மேலே தெரிவிக்கப்பட்ட ஆதாரத்தாலே தெரிந்து கொள்ளலாம். பிரம்மாண்ட புராணம் – ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தில் சொல்லப்பட்டபடி கேசரியின் மனைவி அஞ்ஜநாதேவி இங்கு தவம் செய்து மிகுந்த பலத்தையுடைய ஹனுமனை ஈன்றாள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஸ்காந்த புராணத்தில் மதங்க மஹா முனியின் உபதேசத்தால் அஞ்ஜநாதேவி இந்தத் திருமலையில் உள்ள ஆகாசகங்கையில் தவம் செய்து ஹனுமனுக்குப் பிறப்பைக் கொடுத்தாள் என்று உள்ளது. இதிகாச புராணங்களில் இவற்றை ஒருமித்த பார்வையில் காணவேண்டுமே தவிர கண்டிக்கத்தக்க பார்வையிலோ, மறுக்கத்தக்க பார்வையிலோ பார்க்கக்கூடாது. காரணம் நூறு ஆயிரமாண்டு கால இச்சான்றுகளை இல்லையென்று மறுக்க நம் நூறாண்டுகால வாழ்க்கையில் பத்து பதினைந்து அல்லது இருபதாண்டுகால அனுபவம் போதுமானதாகாது.

இன்னும் வியாஸரின் மஹாபாரதத்தில் பீமனுடன் உரையாடலின்போது

*அஹம் கேசரிணா: க்ஷேத்ரே வாயுநா ஜகதாயுஷா,*
*ஜாத: கமலபத்ராக்ஷ ஹநுமாந்நாம வானர:* [3]

தான் வாயுதேவனுடைய அருளால் கேசரி க்ஷேத்திரத்தில் மகனாகப் பிறந்ததாக ஹனுமன் தானே தெரிவிக்கிறார்.

இவ்வாறாக ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலாவது, வியாஸ பாரதத்திலாவது ஹனுமனுடைய தாய்–தந்தையைப் பற்றி வருணனை, வாயுதேவனுடைய விஷயமும் தெளிவாகக் காணப்படுகிறதே தவிர, அவர் பிறந்த இடத்தைப் பற்றி எங்குமில்லை.

ஆனால், ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பிறந்த இடம் பற்றி பவிஷ்யோத்தர, வராஹ, பிரம்மாண்ட, வாமன, ஸ்காந்த முதலிய அநேக புராணங்களில் தெளிவான வருணனை உள்ளது.

புராணங்களில் ஹனுமனுடைய பிறப்பிடத்தை வருணிக்கும் சுலோகங்கள் தி.தி. தேவஸ்தானம் மற்றும் ஜீயர் எஜுகேஷனல் ட்ரஸ்ட்டினர் பதிப்பித்த வேங்கடாசல மாஹாத் மியத்தில் வெளிப்படையாகக் காணப்படுகின்றன. ஆனால் அந்தச் சுலோகங்கள் அந்தந்தப் புராணங்களின் இப்போதைய அச்சுப் பிரதிகளில் காணப்படவில்லை. பழைய ஓலைச்சுவடி முதலியவற்றில் சில ஆயிரமாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்ட புராண சாஹித்யங்களில் மேலே குறிப்பிட்ட சுலோகங்கள் தவறாமல் இருந்தே தீருமாதலால் பகவத்ராமாநுஜர் ஸ்ரீவேங்கடாசல

மாஹாத்மியத்தில் அப்போது கிடைத்த இந்த புராணத்தை சான்றுகளாகக் கொண்டு ஏழுமலையில் எழுந்தருளின மூர்த்தி விஷ்ணு வடிவமே தவிர வேறு உருவம் இல்லை என்று தெளிவாகத் தீர்மாணித்தார். இவையெல்லாம் ஶ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் நன்றாக வருணிக்கப்பட்டது.

இப்போது ஹனுமனின் பிறப்பிடம் பற்றிய தீர்மானத்தில் அதே நூல்களிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட புராண சுலோகங்கள் சான்றுகளாக காட்டப்பட்டுள்ளன. ஆகையால் இந்தச் சுலோகங்களை ஹனுமனின் பிறப்பு தீர்மாணத்தின் சான்றுகளாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர இப்போது அவை அந்தந்தப் புராண நூல்களில் கிடைப்பதில்லை. ஆகையால் புராண சாஹித்யத்தில் இல்லாதவற்றை சொந்த கற்பனைகள் மற்றும் ஹனுமன் பிறப்பிட தீர்மானத்திற்காகப் புதியதாக உண்டாக்கப்பட்டது என்று சொல்வது எந்த விதத்திலும் ஒத்துக் கொள்ளப்படமாட்டாது.

## புராணங்களின் நம்பகத்தன்மை

கோட வேங்கடாசலம் போன்ற புகழ்பெற்ற இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டு வரலாற்றாளர்கள் இந்திய இதிஹாஸ படைப்புகளில் புராணங்களைச் சான்றுகளாக எடுத்துக் கொண்டார்கள். அவற்றில் சிலவற்றை மட்டும் இங்குக் கொடுத்துள்ளோம்.

1. *பீம்ளா சரண் லா* (Bimla Charan law)
2. *ஆசார்ய பலதேவ உபாத்யாய் புராண் விமர்ச்"*
3. *வாஸுதேவசரண் அகர்வால் – மார்க்கண்டேய புராணம் ஏக் ஸாம்ஸ்க்ருதிக் அத்யயந்*
4. *கோட வேங்கடாசலம் 'அக்னி வம்சபு ராஜுலு'*
5. *எம். எஸ். தத்*–(The Agni Puranam)
6. *டாக்டர் ஸாவித்ரி ஸக்ஸேனா* – (Geographical survey of the puranas)
7. *சி.ஆர்.க்ருஷ்ணமாசார்யுலு* – (The cradle of Indian History)
8. *பி.வி.காணே* – (History of Dharmasastra)
9. *கல்யாண் பத்ரிகா அவர்களின் புராண்கதாங்க்*
10. *பி.பி.லால்* –(Rama)
11. *என்.எல்.தே.* (N.L.Dey)
12. *பி.ஸி.லா* (B.C.Law)
13. *பி.ஸி. ஸிர்கர்* (D.C.Sircar) (Studies in the Geography of Ancient and Medieval india)
14. *புஷ்கர் பட்நாகர்* – (Dating the era of lord Rama)
15. *ஸரோஜ்பாலா, அசோக் பட்நாகர், குல்பூஷன் மிஸ்ர–வைதிகயுக ஏவம் ராமாயன்கால் கி ஐதிஹாஸிகதா*

16. *பி.பி.லால்* – (Excavations at Sringaverapura)

17. *டாக்டர் எச்.ஸி. ராய்சௌதரி* – (Studies of Indian Amtiquities)

## வெளிநாட்டு வரலாற்றாய்வாளர்கள்

*1.* கன்னிங்கம் – (Cunningham, A _ Bhilsa Topes. Geography of Ancient india)

*2.* (Forgussion - History of Kashmir)

*3.* (Rapson E.J - Ancient India)

*4.* (Sunith V. - Early History of India)

## நன்றியுரை

இப்பரந்த (தெலுங்கு)புத்தகத்தை உருவாக்குவதில் உடனிருந்த பண்டித பரிஷத்தார் மற்றும் ஸ்ரீ ஜம்முலமடக லக்ஷ்மீஸ்ரீநிவாஸ், (அஸிஸ்டன்ட் வி.ஸி. பேஷி, ராஷ்டீரிய ஸம்ஸ்க்ருத பல்கலைக்கழகம்) டாக்டர் எம். தத்தாத்ரேய சர்மா (அத்யாபகர், சிக்ஷாவிபாகம்), ராஷ்டீரிய ஸம்ஸ்க்ருத பல்கலைக்கழகம், டாக்டர் கங்கிசெட்டி லக்ஷ்மீநாராயண (தெலுங்கு அத்யாபகர்), ராஷ்டீரிய ஸம்ஸ்க்ருத பல்கலைக் கழகம், டாக்டர் டி. ஸ்ரீதேஜா (ஆகம அத்யாபகர், ராஷ்டீரிய ஸம்ஸ்கிருத பல்கலைக்கழகம்), புகழ்பெற்ற சித்திர கலைஞர் ஸ்ரீ கூசி அவர்களுக்கு எங்கள் தனிப்பட்ட நன்றி. இந்த ஸ்ரீஹனுமன் பிறப்பிடம் தேடுதல் மகா வேள்வியில் பங்குகொண்ட ஒவ்வொருவருக்கும் ஸ்ரீஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய அருள் கிட்டும் என்று நம்புகிறோம்.

திருப்பதி
*20.12.2021*

**பேராசிரியர் விரிவெண்டி முரளீதர சர்மா**
துணைவேந்தர்,
ராஷ்டீரிய சமஸ்க்ருத பல்கலைக்கழகம்

கபில தீர்த்தத்தில் அஞ்ஜனாதேவி கேசரி தம்பதியர் புனித நீராடுதல்



# அத்தியாயம் - 1

# 1. புராணங்களின் பழமையும் சான்றுகளும்

தெலுங்கு மூலம்
பேராசிரியர் விரிவெண்டி முரளீதர சர்மா

தமிழாக்கம்
திருமதி ராதாராமநாதன்

இறைவனின் மூச்சுக் காற்றாக விளங்கும் வேதங்களே இந்தியர்களின் வாழ்க்கைக்கும், தர்ம நெறிக்கும், தத்துவங்களுக்கும் ஆதாரமானவை. இவை சாதாரண மனிதர்களுக்கு எளிதில் புரியாதவகையில் மறை பொருளாக உள்ளன. அத்தகைய உயர்ந்த இரகசியங்கள் பல நமது வேதங்களிலும், புராணங்களிலும் புதைந்துள்ளன.

அத்தகைய வேதங்களின் சாரமாக அவதரித்தவையே இராமாயணம், பாரதம், பாகவதம். இவையே இந்திய ஸநாதன ஆதாரமாகவும் விளங்குகின்றன.

*இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்*

எனக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை, பண்பாட்டின் இயல்பை அழகாகத் தொகுத்து கலைநுணுக்கத்தோடு சித்தரிக்கும் நமது புராணங்கள் இந்திய பண்பாட்டை எடுத்துக் காட்டும் கண்ணாடி எனலாம்.

இத்தகைய மகோன்னதமான புராணங்களை ஏனைய சாஸ்திரங்களின் உதவியுடன் நன்கு அறிந்து கற்ற ஞானம் உடையவர்களே புராணங்களை பிறருக்கு எடுத்துச் சொல்வதற்கு அருகதையுடையவர்களாவர். ஏனையோர் புராணங்களைப் படிப்பதற்குக் கூட அருகதையற்றவர்கள். வேதாந்தத்தை அறிய வேண்டுமென்றால் எவ்வாறு ஷட்சாஸ்திரங்களைக் (ஆறுசாஸ்திரங்கள்) கற்க வேண்டுமோ அவ்வாறே புராணங்களை புரிந்து கொள்வதற்கு ஜோதிட சாஸ்திர ஞானம் அவசியம்.

இந்தியர்களின் வாழ்க்கை முறையை கவனித்தோமென்றால் எவ்வாறு புராணங்களின் தாக்கம் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இணைந்துள்ளது என்பதை நாம் உணர முடியும். இந்தியர்களின் ஸநாதன தர்ம நெறிக்கு வேதம் எவ்வாறு ஆதாரமாக அஸ்திவாரமாக உள்ளதோ அதே போன்று ஸ்ம்ருதி, புராண, இதிகாசங்கள் ஆதாரத்தூண்களாகும், மூலத்தூண்களாக இவை இருந்திராவிட்டால் ஸநாதன தர்மம் என்ற கட்டிடம் இன்று வரை நிலை பெற்றிருக்காது.

*ச்ருதி-ஸ்ம்ருதி புராணானாமாலயம் கருணாலயம்*

என்று நாம் ஆதி சங்கர பகவத் பாதரை துதித்து வணங்குகிறோம்.

## வேதங்களின் உபாங்கமே புராணங்கள்

*இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்*
*பி$_3$பே$_4$த்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரஹரிஷ்யதி* [1]

1. பத்மபுராணம் – சிருஷ்டி கண்டம் – 2–51

இதிகாச–புராணங்களின் வழியாக வேதார்த்தம் நன்கு விரிவாகத் தெளிவாகப் புலப்படுகிறது. புராணம் முதலியவற்றை கற்று அறியாதவன் வேதத்திற்கு பொருள் சொல்ல ஆரம்பித்தால் வேதமாதா என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று துக்கப்படுவாளாம். புராணம் என்றால் பழமையானது என்ற பொருளேயன்றி "பழமையானது ஆயினும் எப்போதும் புதுமையானதாகவே விளங்கும்" (புராஉபி நவம் புராணம்) என்ற பொருளும் இதில் ஒலிக்கின்றது.

சதயதபிராம்மணம், கோயதபிராம்மணம், ப்ருஹதாரண்ய உபநிஷத் ஆகிய வேதத்தின் பிரிவுகள் புராணங்களின் மகிமையைப் போற்றிப் புகழ்கின்றன.

*ஸ யதாSSர்த்ரைந்தா$_4$ க்னேரப்யாஹிதாத் ப்ருத$_2$க்தூ$_4$மா*
*வினிஸ்ச்சிர வம் வா அரேSஸ்ய மஹதோ பூ$_4$தஸ்ய நி:ஸ்வசித*
*மேதத்$_3$ யத்$_3$ ருக்வேதோ, யஜுர்வேத:, சாமவேதோ$_3$ உதர்வாங்கி$_3$ரஸ*
*இதிஹாஸ: புராணம், வித்யா, உபநிஷத: ச்லோகா:*
*சூத்ராண்யனு வ்யாக்யானானி வ்யாக்$_2$யான்யஸ்யை வைதானி நி:ஸ்வஸிதானி* [1]

நனைந்த விறகை எரித்தால் நெருப்புடன் சேர்ந்து புகையும் வருவது போல, சர்வ பூதாத்மாவான பரபிரம்மத்தின் மூச்சுக் காற்றினின்றே அனைத்தும் தோன்றின. ரிக், யஜுர், சாம, அதர்வணவேதம், இதிகாசம், புராணம், வித்யை, உபநிஷத்துகள், சுலோகங்கள், சூத்ரங்கள், அனுவாக்கியங்கள், வாக்கியங்கள் ஆகிய அனைத்துமே அந்த பரமாத்மாவின் மூச்சுக் காற்றேயாகும்.

## புராணங்கள் வேதசாஸ்திரங்களை விடப் பழமையானவை

வேதசாஸ்திரங்களை விட புராணங்கள் பழமையானவை என்று வாயு புராணம் கூறுகின்றது.

*ப்ரத$_2$மம் ஸர்வசாஸ்த்ராணாம் புராணம் ப்ரஹ்மணா ஸ்ம்ருதம்*
*அனந்தரம் ச$_1$ வக்த்ரேப்$_4$யோ வேதாஸ்தஸ்ய வினிஸ்ருதா:* [2]

பிரம்மா அனைத்து சாஸ்திரங்களுக்கும் முன்பே புராணங்களைத்தான் முதலில் படைத்தார். அதன் பிறகே அவரது முகத்தினின்று வேதங்கள் தோன்றின. அது மட்டுமேயன்றி வேதங்களில் காணக் கிடைக்காத எத்தனையோ இரகசியங்கள் புராணங்களில் இருக்கின்றன என்று வாயு புராணம் கூறுகின்றது.

*யன்ன த்$_3$ருஷ்டம் ஹி வேதேஷு தத்ஸர்வம் லக்ஷ்யதே ஸ்ம்ருதௌ,*
*உப$_4$யோர்யன்ன த்$_3$ருஷ்டம் ஹி தத்புராணை: ப்ரணீயதே*
*யோ வித்$_3$யாச்சதுரோ வேதான் சாங்கோ$_3$பநிஷதோ$_3$ த்$_3$விஜ:*
*ந சேத்புராணம் சம்வித்யான்னைவ ச ஸ்யாத்$_3$வி சக்ஷணா:* [3]

---

1. ப்ருஹதாரண்யக உபநிஷத் – 2-4-10
2. வாயு புராணம் – 1-60, 61
3. வாயு புராணம் – 1-199-1, பத்ம புராணம் தொகுதி 2, 50-2, சிவ புராணம் – தொகுதி 1, – 35

## புராணங்களின் கூற்று

வாயு புராணத்தில்,

*யஸ்மாத் புராஹ்யனதீதம் புராணம் தேன தத்ஸ்ம்ருதம்,*
*நிருக்தமஸ்ய யோ வேத சர்வபாபை: ப்ரமுச்யதே* [1]

பண்டைய காலத்தில் இது உயிர் ஊற்றுடன் இருந்ததால் இதனை புராணம் என்பர். இதன் பொருளையுணர்ந்தவர்கள் அனைத்துப் பாவங்களினின்றும் விடுதலைப் பெறுவர்.

## மஹாபாரதத்தில்...

*புராண ஸம்ஹிதா: புண்ய: கதா தர்மார்த்த சம்ஸ்ரிதா:* [2]

புராணங்களில் வர்ணிக்கப்பட்ட கதைகள் தர்மத்தை எடுத்துச் சொல்பவை.

இராமாயணம், மஹாபாரதம், இதிகாசங்கள் மற்றும் விஷ்ணு புராணம், வாயு புராணம், அஷ்டாதச புராணங்கள் யாவும் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிறது.

*இதிஹாஸ புராணம் ச பஞ்சமோ வேத உச்யதே* [3]
*இதிஹாஸ புராணம் பஞ்சமம் வேதானாம் வேத:* [4]
*"புரா அபி நவம் புராணம்"* பழமையானவற்றுள் எல்லாவற்றிற்கும் புதுமையானது புராணம்

"வேதங்களனைத்தும் புராணங்களிலேயே அடங்கியுள்ளன என்று நாரத புராணம் தெரிவிக்கின்றது.

*வேதா: ப்ரதிஷ்டிதாஸ்ஸர்வே புராணேஷ்வேவ ஸர்வத$_3$ா* [5]

சாதாரண மனிதர்களுக்கு புராண கல்வியே வேதங்களை விட எளிமையானது, ஸ்காந்த புராணம் புராணங்களை வேதங்களின் ஆத்மாவாகவே வர்ணிக்கிறது.

*ஆத்மா புராணம் வேதானாம் ப்ருத$_2$ க$_3$ங்கா$_3$னி தானிஷட்*
*யச்ச த்ருஷ்டம் ஹி வேதேஷு தத்ருஷ்டம் ஸ்மிருதிபி$_4$: கில* [6]
*வேதவன்னிகிலம் மன்யே புராணார்த்தம் த்$_3$விஜோத்தமா:*
*வேதா: ப்ரதிஷ்டி தாஸ்ஸர்வே புராணே நாத்ர சம்சய:* [7]

(ஓ பிராம்மணர்களே! வேதார்த்தமெல்லாம் புராணங்களிலேயே அடங்கியுள்ளன. வேதங்கள் அனைத்தும் புராணங்களில் மறைந்துள்ளன).

நாரதீய புராணத்தின்படி புராணங்கள் ஸர்வ வேதாந்த சாரம்.

*ஸர்வ வேதார்த சாராணி புராணாநீதி பூபதே* [8]

---

1. வாயு புராணம் 1-1-55
2. மஹாபாரதம்-ஆதிபர்வம் - 1-16
3. ஸ்ரீமத் பாகவதம் - 1-4-20
4. நியாய தர்சனம், வாத்ஸ்யாயன பாஷ்யம் 4-1-62
5. நாரத புராணம் - 24-18
6. ஸ்காந்த புராணம், அவந்தீ கண்டம் - 1-23
7. ஸ்காந்த புராணம், ப்ரபாச கண்டம் - 2-90
8. நாரதீய புராணம் - 1-9-97

## வேதங்கள் மற்றும் புராணங்கள்

வேதங்கள் மற்றும் புராணங்கள் அவற்றின் சான்றுகள் பற்றிய விவாதங்கள் புராண நூல்களில், தர்மங்களைக் குறித்த நூல்களில் மிகத் தெளிவாகக் காணக் கிடக்கின்றன. வேதார்த்தத்தின் உப பிரம்ஹணம் பல இடங்களில் இதை நிரூபிக்கின்றது. இக்கருத்தை ஆமோதித்து ஸ்ரீ ஜீவகோஸ்வாமி என்பார் "பூரணாத் புராணம்" – அதாவது "வேதார்த்தத்தை முடித்து வைப்பது புராணம்" என்று புதிதான ஒரு விளக்கம் கொடுத்துள்ளார். இதன் வழி வேத–புராணங்களின் தொடர்பும் ஒருங்கிணைவும் தெளிவாகிறது. வேதார்த்தோபனிஷத்தின்படி பூர்த்தி (புராணம்) என்று சொல்லப்பட்டது. இதன்படி புராணங்களுக்கு வேதத்வம் சித்திக்கிறது.

*இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ச முபப்ரம்ஹயேத். இதி*
*பூராணாத் புராணமிதி சான்யத்ர. ந சாவேதேன வேதஸ்ய பிரும்ஹணம் சம்ப$_4$வதி,*
*ந ஹி அபூர்ணஸ்ய கனகவலயஸ்ய த்ரபுணா பூரணம் யுஜ்யதே* [1]

## புராணங்கள் வேதங்களுக்கு சமமானவையே

புராணங்கள் வேதங்களுக்கு சமமானவையே என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. ஸ்காந்த புராணம் ப்ரபாஸ கண்டத்தில் இவ்வாறாக உள்ளது.

*யதா$_3$ தபச்ச சாரோக்$^3$ரமமராணாம் பிதாமஹ:*
*அவிர்பூ$_4$தாஸ்ததோ வேதா: ஸஷடங்க$_3$ பத$_3$க்ரமா:*
*தத: புராணமகி$_2$லம் ஸர்வ சாஸ்த்ரமயம் த்$_4$ருவம்*
*நித்யம் சப்த$_3$மயம் புண்யம் சதகோடி ப்ரவிஸ்தரம்*
*நிர்க$_3$தம் ப்ரஹ்மணோ வக்த்ராத்* [2]

(சிருஷ்டியின் ஆரம்பத்தில் பிரம்மா கடும் தவம் மேற்கொண்டார். அதன் பலனாக ஷடங்கங்கள், பதங்களுடன் கூடிய வேதங்கள் தோன்றின. அதன் பின்னர் அனைத்து சாஸ்திரங்களும், நித்ய சப்த மயங்கள், புண்யமளிக்கும் ஒரு கோடி சுலோகங்களுடன் கூடிய புராணங்கள் தோன்றின. புராணங்கள் கூட வேதங்களுடன் சேர்ந்து சமமாக பிரம்மாவின் முகத்திலிருந்தே தோன்றின)

"ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களை பிரம்மா தன் நான்கு முகங்களினின்றும் தோற்றுவித்தார். இதிகாச புராணங்களை தன் நான்கு முகங்களால் சிருஷ்டித்தார்" என்று பாகவத புராணம் சொல்கிறது.

*இதிஹாஸபுராணானி பஞ்சமம் வேதமீஸ்வர:*
*ஸர்வேப்$_4$ய ஏவ வக்த்ரேப்$_4$ய: சம்ஸ்ருஜே ஸர்வத$_3$ர்சன:* [3]

வேதங்களில் கிடைக்காத சில விஷயங்கள் புராணங்களில் கிடைக்கின்றன.

வேதங்களில் தெளிவாகக் கூறப்படாத சில விஷயங்களை நாம் புராணங்களிலிருந்து கிரகித்துக் கொள்ள வேண்டும். வேதங்களில் சொல்லப்படாத ஏகாதசி விரதம் புராணங்களில்

1. பாகவத சந்தர்ப்பஹ – பக்கம் 17
2. ஸ்காந்த புராணம், ப்ரபாஸ கண்டம் – 2-3, 4, 5
3. பாகவதம் – 3-12-39

சொல்லப்பட்டிருப்பதால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதே. அவ்வாறே வேதங்களில் கிரகங்களின் காலசுத்தி, திதிகளின் தேய்வு, வளர்ச்சி, பருவ காலங்கள் இவற்றை நிர்ணயமாகச் சொல்லவில்லை. ஆனால் இதிகாச, புராணங்களில் இவற்றை முன்னரே நிர்ணயித்துக் கூறியுள்ளனர். வேதங்களில் சொல்லப்படாதவை சிலவற்றை ஸ்ம்ருதிகள் எனப்படும் தர்ம நூல்களில் காணலாம். வேதம், ஸ்ம்ருதிகளில் கிடைக்காத விஷயங்களின் வர்ணனை புராணங்களில் கிடைக்கின்றன. பரமேசுவரன் பார்வதியிடம், "வேதார்த்தத்தை விட புராணார்த்தம் மிகவும் விரிவானது என்று நான் கருதுகிறேன். புராணங்களில் வேதங்கள் மிக மிக ஆழமாக மறை பொருளாக ஊன்றியுள்ளது" என்கிறார்.

*வேதா$_3$ர்த$_3$தி$_4$கம் மன்யே புராணார்த$_2$ம் வரானனே*
*வேதா: ப்ரதிஷ்டிதா: ஸர்வே புராணேஷ்வேவ ஸர்வதா*
*ந வேதே க்$_3$ருஹசஞ்சாரோ நசுத்தி: காலபோ$_3$தி$_4$னீ,*
*திதி$_2$ வ்ருத்தி க்ஷயோ வாபி பர்வக்$_3$ரஹவி நிர்ணய:*
*இதிஹாஸ புராணைஸ்து நிச்சயோஉயம் க்ருதஹ புரா,*
*யன்ன த்ருஷ்டம் ஹி வேதேஷு தத்ஸர்வம் லக்ஷ்யதே ஸ்ம்ருதெள,*
*உப$_4$யோர்யன்ன த்$_3$ருஷ்டம் ஹி தத் புராணை: ப்ரகீ$_3$யதே* [1]

மற்றுமோர் இடத்தில்,

*ச்ருதி ஸ்ம்ருதீ து நேத்ரே த்$_3$வே புராணம் ஹ்ருத$_3$யம் ஸ்ம்ருதம்,*
*ச்ருதிஸ்ம்ருதிப்$_4$யாம் ஹீனோஉந்த: காணா: ஸ்யாதே$_3$கயாவினா,*
*புராண ஹீனாத்$_3$ ஹ்ருச்சூன்யாத்காணாம்தா$_4$வபி தெளபரெள* [2]

ச்ருதி, ஸ்ம்ருதி இரண்டும் இரண்டு கண்கள் என்றால், புராணத்தை இதயம் எனலாம். ஒரு கண் இல்லை என்றால் குறைபாடு மட்டுமே, இரண்டு கண்களும் இல்லாதவன் குருடன். ஆனால், புராண அறிவு இல்லாதவன் இதயமே இல்லாதவன். இதயம் இல்லாதவனை விட இரண்டு கண்களையுடையவனே உத்தமன்.

மஹாபாரதம், புராணம் எவ்வாறு வேதங்களின் அங்கமாக விளங்குகின்றனவோ அதை ஒரு சிறிய வாக்கியத்திலேயே மிகவும் தெளிவாகக் கூறுகின்றது. புராண வடிவமான பூர்ண சந்திரன் ச்ருதி என்ற நிலவை ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்கிறான்.

*புராண பூர்ண சந்த்ரேண ச்ருதி ஜ்யோத் ஸ்னா: ப்ரகாசிதா:* [3]

## புராணங்களின் சான்றுகள்

வேதங்களுக்கு வேதங்களே சான்றுகளாகும். புராணங்களின் சான்றுகளைப் பார்வையாளர்கள் தனியாக விவரித்துள்ளனர். வாத்ஸ்யாயனர் எழுதிய நியாய பாஷ்யத்தில் அவரது கருத்தும் இவ்வாறு உள்ளது.

---

1. நாரத புராணம் – உத்ரார்த்தம் – அத்தியாயம் 24-8-18
2. ஸ்காந்த புராணம் – காசீ கண்டம் 4-1-2-97
3. மஹாபாரதம் – 1-1-86

*ய ஏவ மந்த்ர ப்ராஹ்மணஸ்ய த்ருஷ்டார:*
*ப்ரவக்தாரச்ச தே க$_2$ல்விதிஹாஸ*
*புராணஸ்ய தர்மசாஸ்தரஸ்ய ச்சேதி* [1]

(மந்த்ர பிராம்மண த்ருஷ்டர்கள், ஓதுபவர்களும் ஆன ருஷிமுனிகளே இதிகாச புராணங்களுக்கு கண்ட த்ருஷ்டாக்களும், வியாக்யானகாரர்களும் ஆவர்.)

### பகவத்பாத சங்கரரின் கருத்து

*சமூலம் இதிஹாஸ புராணம்* [2] இதிகாச புராணங்கள் வேர்களாகும், நிர்மூலமல்ல. அதாவது அவை ஆதாரத்துடன் கூடியவை. ஆசார்யர் சங்கரர் புராணங்களிலுள்ள சுலோகங்கள் “ஸ்மிருதிஸ்ச்ச பவதி” என்று உயர்த்திக் கூறுகிறார். அதாவது புராணங்களின் சான்றுகளை தர்ம நூல்களுடன் சேர்த்து நிலை நாட்டுகிறார்.

### புராணங்கள் வைத்த பெயரே - பாரத தேசம்

இந்த விஷயத்தில் புராணங்கள் அனைத்துமே பரதனின் பெயரால் ‘பாரதம்’ என்ற பெயர் சிறப்புப் பெற்றது என ஒரு முகமாகக் கூறுகின்றன. ஆனால் இந்த ‘பரதன்’ யார்? மிகவும் தொன்மையான விளக்கத்தைப் பார்த்தால் ஸ்வயம்புவ மனுவின் புத்திரன் ப்ரியவ்ரதன். அவனது புத்திரன் நாபி. நாபியின் மகன் ருஷபன். ருஷபனின் நூறு புத்திரர்களில் முதலாமவன் பரதன். பரதனே ராஜ சிம்மாசனத்தை ஏற்றான். அவன் காலத்திற்கு முன்பு ‘அஜநாபம்’ என்று அழைக்கப்பட்டு வந்த நம் தேசம் பரதனின் காலத்திற்குப் பிறகு ‘பாரததேசம்’ என்று புகழ் பெற்றது என புராணங்கள் ஒரு முகமாகக் கூறுகின்றன. துஷ்யந்தனின் மகன் பரதனின் காலத்திலிருந்து தான் பாரதம் என்ற பெயர் வந்தது என்பது தவறான கருத்து. ஆதாரமற்றது.

(அ) *ருஷபா$_4$த் ப$_4$ரதோ ஜக்ஞேயோவீரஹ புத்ர சதா$_3$க்ரஜ:*
*சோஉபி$_4$ஷிச்யாத$_2$ ப$_4$ரதம் புத்ரம் ப்ராவ்ராஜ்ய மாஸ்தித:*
*ஹிமாஹ்வம் த$_3$க்ஷிணம் வர்ஷம் ப$_2$ரதாய ந்யவேதேயத்,*
*தஸ்மாத்தத்$_3$ பா$_4$ரதம் வர்ஷம் தஸ்ய நாம்னா விது$_3$ர்பு$_4$தா$_4$:* [3]

(ருஷபனின் நூறு புத்திரர்களில் பரதன் முதலாகப் பிறந்தான். ருஷபன் பரதனுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்து விட்டு தான் சந்நியாசியானார். அவன் மேகங்களுடன் கூடிய இமாலயத்தின் தெற்கு பாகத்தை ஆட்சிபுரியுமாறு கொடுத்தார். அதனால் அப்பகுதி பரதனின் பெயரால் பாரத தேசமாயிற்று என்று கற்றவர்கள் தெரிந்து கொண்டனர்.)

(ஆ) *பரதஸ்து மஹாபா$_4$க$_3$ வதோ யதா$_3$*
*ப$_4$க$_3$வதா வனிதல பரிபாலனாய ஸஞ்சிந்திதஸ்ததனு சாஸனபர:*
*பஞ்சஜனீம் விச்வரூபது$_3$ஹிதரமுபயேமே....*
*அஜநாப$_4$ம் நாமைதத்வர்ஷம் பாரதமிதியத ஆரப்$_4$ய வ்யப தி$_3$சம்தி* [4]

---

1. பாத்ரசயான்தானுபபத்தேச்ச பலபாவ: - நியாய சூத்ரம் (4-1-62) பை வாதஸ்யயன பாஷ்யம்
2. ருஷீணாமபி மந்த்ர ப்ராஹ்மண தர்சினாம் சாமர்த்யம் நாஸ்மாதீயேன சாமர்த்யேனா மாதும் யுக்தம் தஸ்மாத் சமூலமிதிஹாச புராணம் இதி - சாரீக பாஷ்யம் 1-3-33
3. மார்கண்டேய புராணம் - 53-39, 40, வாயு புராணம் - 33-51, 52
4. பாகவதம் 5-7-1-3

மகாபாகவதனான பரதன் பகவானால் பூமண்டலத்தை ஆட்சி புரிய நியமிக்கப் பட்டவனாகவும் பகவத் ஞானனான விச்வ ரூபனின் மகளான பஞ்சஜனியை மணந்தான். அப்பொழுதிலிருந்து அஜநாபம் எனும் பெயர் கொண்ட இப்பாரத பகுதி பாரதம் எனப் புகழப்பெற்றது.

## புராணங்களில் விஞ்ஞானத் தகவல்கள் :

### வாஸ்து சாஸ்திரம்

மத்ஸ்ய புராணத்தில் (அத்தியாயம் 252–253), விஷ்ணு தர்மோத்தர புராணம் (இரண்டாம் பாகம் அத்தியாயம் 29, மூன்றாம் பாகம் அத்தியாயம் 94, 95), அக்னி புராணம் (அத்தியாயம் 93, 104–106) முதலானவற்றில் வாஸ்து சாஸ்திர தகவல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

### சிற்ப சாஸ்திரம்

புராணங்களில் அஷ்டம வசுப்புத்திரனான விஸ்வகர்மா அனைத்து சிற்ப சாஸ்திரங்களுக்கும் கலைகளுக்கும் (ஆசாரியர்) குருவாவர்.

*விஸ்வகர்மா ப்ரபா$_4$ஸஸ்ய புத்ர: ஸில்பீ ப்ரஜாபதி:*
*ப்ராசாதப$_4$ வனோத்யான ப்ரதிமாபூ$_4$ஷணாதி$_3$ஷு,*
*தடா$_3$கா$_3$ ராமகூபேஷு ஸ்ம்ருத: சோஉமரவர்த்க$_3$:* [1]

மத்ஸ்ய, விஷ்ணுதர்மோத்தர புராணங்களில் சிற்ப சாஸ்திரங்களைப் பற்றிய விவரங்களை விரிவாகக் காணலாம்.

### சித்திர சாஸ்திரம்

விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் மூன்றாவது கண்டத்தில் முதல், இரண்டாம் அத்தியாயங்களில் அவ்வாறே 35வது அத்தியாயத்தில் இருந்து 46வது அத்தியாயம் வரை தேவர்கள், ருஷிகள், கந்தர்வர்கள், பசு பட்சிகள் – உத்யான வனங்கள் இவற்றின் தோற்றங்கள், அவற்றின் உருவ அமைப்புகள், அவற்றை அமைக்கும் முறை, பலவித வர்ணங்களை உபயோகிக்கும் வழிமுறைகள் பற்றிய விவரங்களை விரிவாகக் காணலாம்.

### விக்ரகங்களைப் பற்றிய சாஸ்திரம் (ப்ரதிமை)

வழிபடுவதற்குரிய, அர்ச்சனைக்குரிய விக்ரகங்களின் இலட்சணங்கள், அளவுகள், தோற்றங்கள், அவற்றை தயார் செய்யும் வழிமுறைகள் முதலானவை இந்த சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றன. விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் (அ, 44–85, அ.96), அக்னி புராணம் (அ. 44–45), மத்ஸ்ய புராணம் (அ. 285–263) போன்று பலவிடங்களில் விக்ரக ஸ்தாபனம் பற்றிய விவரங்களைக் காணலாம்.

## புராணங்களில் பாரத பூமியின் புவியியல் அமைப்பின் விசேஷங்கள் :

பாரத தேசம் புராணங்களில் 9 பிரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவை தற்போது கூட 9 தீவுகள் என்றழைக்கப்படுகின்றன.

---

1. மத்ஸ்ய புராணம் 5-27-28, விஷ்ணு புராணம் 1-15-118-25 பிரம்ம புராணம் 1-153-159, வாயு புராணம் 2-5-23-30

*பா$_4$ரத ஸ்யாஸ்ய வர்ஷஸ்ய நவபே$_4$தா$_3$ன் நிபே$_3$ாத$_4$மே,*
*சமுத்$_3$ரான்தரிதா ஜ்ஞே யாஸ்தே த்வக$_3$ம்யா: பரஸ்பரம்,*
*இந்த்ர த்வீப: கசேரூமான் தாம்ரபர்ணீ க$_3$ப$_4$ஸ்திமான்,*
*நாக$_3$த்$_3$வீபஸ்ததா$_2$ சௌம்யோ கா$_3$ந்த$_4$ர்வோ வாருணஸ்ததா$_4$*
*அயந்து நவமஸ்தேஷாம் த்வீப: சாக$_3$ர சம்வ்ருத:*
*யோஜனானாம் சஹஸ்ரம் வை த்$_3$வீபோஉயம் த$_3$க்ஷிணோதத்ராத்* [1]

இத்தீவுகளின் தற்போதைய பெயர்கள் இவை

1. இந்த்ர த்வீபம் – அந்தமான் தீவு
2. தாம்ர வர்ணீத்வீபம் – ஸ்ரீலங்கா
3. நாகத்வீபம் – நிகோபார்
4. வாருணத்வீபம் – போனீயோ

*அயம்து - பா$_4$ரத வர்ஷம் நவமஸ்தேஷாம்* [2] – இத்தீவுகளின் ஒன்பதாவது தீவு பாரத தேசம். பாரத தேசம் குமாரத்தீவு என்ற பெயருடன் ராஜசேகரரின் காவ்யமீமாம்சை (17ஆம் அத்யாயம்), வாமன புராணம் (3–59), ஸ்காந்த புராணம், குமரீ கண்டம் இவற்றில் காணப்படுகின்றது.

## புராணங்களில் சொல்லப்பட்டுள்ள இந்திய மலைகள்

புராணங்களில் ஏழு மலைகளைப் பற்றிய குறிப்பு பல இடங்களில் காணப்படுகின்றன. அவை 1. மகேந்திர பர்வதம் 2. மலயபர்வதம் 3. சஹ்ய பர்வதம் 4. சுக்திமான் பர்வதம் 5. ருக்ஷ பர்வதம் 6. விந்திய பர்வதம் 7. பாரியாத்ர பர்வதம். இப்பர்வதங்கள் வெவ்வேறு பெயர்களுடன் அறியப்பட்டு வருகின்றன

*சப்த சாஸ்மின்மஹர்ஷே விச்ருதா: குலபர்வதா:*
*மகேந்த்$_2$ரோ மலய: ஸஹ்ய: சுக்திமான் ருக்ஷவானபி*
*விந்த்$_4$யஸ்ச்ச பாரியாத்ரஸ்ச்ச இத்யேதே குலபர்வதா:* [3அ]
*மஹேந்த்ரோ மலய: சஹ்ய: சுக்திமான் ருக்ஷ பர்வத:*
*விந்த்யஸ்ச்ச பாரியாத்ரச்ச சப்தைவாத்ர குலாசலா:* [3ஆ]
*மஹேந்த்ரோ மலய: சஹ்ய: சுக்திமான் ருக்ஷமான் கிரி:*
*விந்த$_4$யச்ச பார்யாத்ரஸ்ச்ச கிரிய: சாந்திதா$_3$ஸ்துதே* [3இ]

## மகேந்திர பர்வதம்

ஒடிசா மாநிலத்தில் மிகப் பழமையான மலைத் தொடர்களுக்கு இப்பெயர் வழங்கி வந்துள்ளது. இன்றும் கஞ்ஜாம் என்ற இடத்தில் மகேந்திர பர்வதமாகவே அழைக்கப்படுகிறது. பரசுராமர் இந்த மலையில் தவம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

---

1. மார்கண்டேய புராணம் 54-5-7, மத்ஸ்ய புராணம் 114-7-9, வாயு புராணம் 1-45-78-80, அக்னி புராணம் 219-54-56
2. 1) மார்கண்டேய புராண் – ஏக் ஸாம்ஸ்க்ருதிக் அத்யயன்–வாசுதேவசரண் அக்ரவால், பக்கம் 143–146
   2) புராண விமர்ஸ் – ஆசார்யா பலதேவ உபாத்யாய, பக்கம் 341–342
3. அ) மத்ஸ்ய புராணம், 114–17–18
   ஆ) மார்கண்டேய புராணம் 54–10, 11
   இ) அக்னி புராணம் 219–57, 58

## மலய பர்வதம்

தென்னிந்தியாவில் அமைந்துள்ள மலைத் தொடர் மலய பர்வதம் என்றழைக்கப்பட்டு வந்துள்ளது. அண்ணாமலை, ஏலமலை முதலானவை இவற்றில் அடங்கும். இங்கு கிழக்கு – மேற்கு தொடர்ச்சி மலைகள் இணைந்து ஒரு வளைவுடன் காணப்படுகின்றது.

## சஹ்யாத்ரி பர்வதம்

வட திசையிலிருந்து தெற்கு வரை பரந்து கிழக்குப் பள்ளத்தாக்கு வரை விரிந்துள்ள புகழ் பெற்ற மலைத் தொடர்கள். இன்றும் மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இப்பெயருடனேயே அழைக்கப்படுகின்றது.

## சுக்திமான் பர்வதம்

சஹ்யாத்ரி மலையின் வடக்கு பகுதியில் சிறிது முன்பாக இருந்து கிழக்கு முகமாக விரிந்துள்ள மலைப் பகுதி இது. பாணதேசத்தின் சிறிய சிறிய குன்றுகள், அஜந்தா பிரதேசம், ஹைதராபாத்தில் உள்ள கோல்கொண்டாமலை ஆகியவை சேர்ந்த பகுதி இது. இன்றைய பாண தேசத்தின் பழைய பெயர் ருஷிமுகம். சுக்திமான் பர்வதத்திலிருந்து பிரவகிக்கும் நதிகளில் “ருஷிகா” நதி முக்கியமானது.

## ருக்ஷ பர்வதம்

இம்மலைத் தொடர் சஹ்யாத்ரிக்கு வடக்கு பாகத்தில் தபதி நதியின் தென் மூலையில் இருக்கும் சாத்புரா மலையைத் தொட்டுக் கொண்டு மகாதேவ பர்வதம் வரை ஒரு தொடர்ச்சியான மலைத் தொடராக விளங்குகின்றது. இம்மலைத் தொடரின் மத்தியப் பகுதியிலிருந்து பிரவகிக்கும் நதிகளில் தபதி, வேன கங்கா ஆகியவை மலைத் தொடரின் ஒரு அணிகலனாக விளங்குகின்றது. ஒரிஸாவிலுள்ள ப்ராம்மணி, வைதரணீ நதிகளின் உற்பத்தி இங்கு தான் இருக்கின்றது. இம்மலை சோடா நாக்பூர் மலைத் தொடர் வரை பரவியுள்ளது.

ஒரிஸாவில் உள்ள ப்ராம்மணி, வைதரிணீ நதிகளின் உற்பத்திருக்ஷ பர்வதத்தில் இருந்தது. சோடா நாக்பூரிலிருந்து ராஞ்சி வரை பரந்துள்ள மலைத் தொடர்கள் ருக்ஷ பர்வதத்தைச் சேர்ந்தவையே.

## விந்திய பர்வதம்

ருக்ஷ பர்வதத்தின் கிழக்கு பாகத்திலிருந்து வடக்கு முகமாகத் திரும்பி காணப்படுவது விந்திய பர்வதம். இது நர்மதா நதியின் வடக்கு பகுதியில் உள்ள மலைத் தொடராகும். விந்திய மலையிலிருந்தே சோண, நர்மதா, மஹாநதி, மத்திய பாரதத்திலுள்ள தமசா, கசான் (தசார்ண) முதலான நதிகள் உற்பத்தியாகின்றன.

## பாரியாத்ர பர்வதம்

ஆரவளி மலை போபால் முதல் மேற்கே விந்த்யாசலத்தின் மேற்கு பாகம் முதல் ராஜஸ்தானிலுள்ள ஆரவளி பர்வதம் வரை பரந்துள்ள மலைத் தொடர்கள் பாரி யாத்ர மலை

எனப்படுகிறது. இதில் உற்பத்தியாகும் நதிகளிலிருந்து இது பாரியாத்ர மலை என்பது தெரிகிறது. புகழ் பெற்ற வரலாற்று ஆராய்ச்சியாளரான பார்ஜீடர் அவர்களின் கருத்து இது. இம்மலையிலிருந்து பர்ணாச (பனாசநதி), சரமண்வதி (சம்பல்), மஹீ, பர்வதீ, நேத்ரவதி ஆகிய நதிகள் அவற்றின் பழைய பெயருடனேயே பாய்ந்தோடுகின்றன.

*உத்தரோ விந்த்யாத் பாயாத்ர:* விந்திய பர்வதத்திற்கு வடக்கு பாகத்தில் உள்ளது பாரியாத்ரம் என சாகடாயன வியாகரண சூத்ரம் சொல்கிறது (2–2–75).

## மேலும் சில மலைத் தொடர்கள்

### கோலாஹல பர்வதம்

மஹாபாரதம் ஆதி பர்வத்தில் இம்மலை சுக்திமதி நதியின் அருகில் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. வரலாற்று ஆராய்ச்சியாளர் நந்தலால்டே என்பவர் இம்மலை புண்டேல்கண்ட்டில் உள்ள பாண்டேர் அருகிலுள்ள மலையென்றும், இம்மலையிலிருந்து சுக்திமதி அல்லது கேன என்ற நதி உற்பத்தியாகிறது என்கிறார்.

### மந்தர பர்வதம்

இது பாகல் பூரில் உள்ள மந்தாரகிரி. இமாலயத்திலுள்ள மந்தரமலை இதுவல்ல.

### தர்துரம்

இதன் தற்போதைய பெயர் நீலகிரி. தற்போதைய உதக மண்டலம் என்ற பெயரில் புகழ் பெற்றுள்ளது. மலய–தர்துர மலைகள் எதிரெதிராக அமைந்துள்ளமையை காளிதாஸ் தெற்கு திசையின் இரண்டு ஸ்தனங்களாக வர்ணித்துள்ளார்.

### ரைவதம்

தற்போதைய குஜராத் மாநிலத்தில் துவாரகாவின் அருகில் உள்ள (ஹலார் அருகில்) வரதா பர்வதமென்று பார்ஜிடரின் கருத்து.

மேற்குறிப்பிடப்பட்ட பர்வதங்களேயன்றி பெயர் பெற்ற பல மலைகளைப்பற்றிய வர்ணனை புராணங்களில் காணப்படுகின்றன.

*சதசோSன்யேச பர்வதா:*[1] அவையனைத்தும் இங்கு வர்ணிப்பது மிகவும் கடினமானது.

## புராணங்களில் தீர்த்தங்கள்

*தரதி பாபாதி$_3$கம் யஸ்மாத்* எதை வணங்கினால் மனிதர்கள் பாவங்களிலிருந்து விடுபடுகிறார்களோ அது தீர்த்தம் எனப்படுகிறது.

தர்ம சித்திக்காக நமது முன்னோர்கள் வணங்கி வந்த புண்ய பிரதேசங்களை சத்புருஷர்கள் தீர்த்தம் எனக் கொண்டாடினர்.

1. மார்கண்டேய புராணம் 57–15

*யத்தி$_4$ பூர்வதமை: சப்$_4$தி$_3$:, சேவிதம் த$_4$ர்ம சித்த$_4$யே,*
*தத்தி$_4$ புண்யதமம் லோகே சன்தஸ்தீர்த்தம் ப்ரசக்ஷதே[1]*

## தீர்த்தங்களின் எண்ணிக்கை

மூன்றரை கோடி தீர்த்தங்கள் தேவ – பூ – அந்தரிக்ஷங்களில் இருப்பதாக வாயுதேவனின் கூற்று.

*திஸ்ர: கோட்யோSர்த$_4$கோடீ ச தீர்த்தானாம் வாயுர ப்$_4$ரவீத்,*
*தி$_3$வி பு$_4$வ்யந்தரிக்ஷே ச தானி தே சந்தி ஜாஹ்னவி! [2]*

இந்திய ஸநாதன பண்பாடு பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வந்துள்ளமைக்கு தீர்த்தங்களின் வடிவான நதிகள், புண்யக்ஷேத்திரங்கள், தேவாலயங்கள் இவையே முக்கிய காரணங்களாகும். இவற்றின் மாகாத்மியம் அந்தந்த தீர்த்தங்கள், க்ஷேத்திரங்களில் செய்யப்படும் தர்ம காரியங்களால் ஏற்படும் புண்யங்கள், இத்தர்ம காரியங்களை ஆற்றும் வழிமுறைகள் முதலான அநேக விவரங்கள் விரிவாகவும், அவையே சான்றுகளாகவும் நமது புராணங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றைப் பற்றிய சரித்திரங்கள், ஆதாரங்கள், மகிமைகள் இவற்றை முழுமையாக அறிய வேண்டுமென்றால் புராணங்களையே சரணடைய வேண்டும்.

இங்கு புராணங்களில் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ள, தற்காலத்திலும் அவ்வாறே வணங்கப்பட்டு வரும் சில புகழ்பெற்ற தீர்த்தத் தலங்கள், நதிகள் இவற்றின் புவியியல் ஆதாரங்களைக் காட்டி புராணங்களின் சான்றுகளை நிரூபிப்பதே இதன் நோக்கம்.

## கங்காநதி

அனைத்து நதிகளையும் விட மிகவும் புனிதமாகக் கருதப்படும் கங்கா நதியின் தீர்த்தத்தில் கனகல, ஹரித்வார், ரிஷிகேஷ், பிரயாகை, காசி போன்ற பல புண்யக்ஷேத்திரங்கள் அமைந்துள்ளதால் இந்நதி மிகவும் புகழ்பெற்று விளங்குகிறது.

## கங்கை நதியின் பிறப்பு

மஹாபாரதம் (அனுசாஸன பர்வம் 26, 26–103), நாரதபுராணம் (உத்தரார்த்தம் அ–38–45, 51, 1–48), பத்மபுராணம் (அ.60, 1–127), அக்னி புராணம் (அ.100), மத்ஸ்ய புராணம் (180–185), பத்ம புராணம் (ஆதிகாண்டம் அ–33–37) ஆகிய இடங்களில் கங்காநதியின் சிறப்பைப் பலவாறாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

டெய்லர் என்ற மேல்நாட்டு அறிஞர் தன் ப்ரிமிடிவ் கல்சர் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்.

“நாம் அசைவற்றவையாகக் (அசேதனமாக) கருதும் நதிகள், பர்வதங்கள், மரங்கள், அஸ்திரங்கள், ஆயுதங்கள் இவற்றை அறிவுள்ளவையாக (சைதன்யம்) பூசித்து வழிபடுதல்,

---

1. மார்கண்டேய புராணம் 57-15

2. பவிஷ்ய புராணம் - உத்தர பர்வம் 123-6

அவற்றைப் போற்றிப் பாடுதல், அவற்றுடன் பேசுவது, அவற்றை தீய வழியில் பயன்படுத்து பவர்களை தண்டித்தல் அதற்கான வழிமுறைகள் இவை மிகவும் ஆச்சரியபடத்தக்கதாக உள்ளது” என்கிறார்.

## மஹாபாரதத்தின் வனபர்வத்தில் கங்கையின் மகிமை

*குருக்ஷேத்ரசமா கங்காயத்ர-தத்ரா வகா$_{3}$ஹிதா,*
*விசேஷோ வை கனக$_{2}$லே ப்ரயாகே$_{3}$பரமம் மஹத்*
*யத்$_{3}$யகார்யசதம் க்ருத்வாக்ருதம் கங்காபி$_{4}$ஷேசனம்*
*சர்வம் தத்தஸ்ய கங்காம்போ$_{4}$ த$_{3}$ஹத்யக்$_{3}$ னிரிவேந்தனம்* [1]

புராணங்கள் தீர்த்தங்களின் மகிமைகள், அவற்றின் சரித்திரம், புவியியல் அமைப்பு இவைகளைப் பற்றித் தெளிவாகவே குறிப்பிடுகின்றன. அத்தகைய தீர்த்தங்களில் மோட்சபுரிகளாகக் கருதப்படும் ஏழு க்ஷேத்திரங்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*அயோத்யா மது$_{2}$ராமாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா,*
*புரீ த்$_{3}$வாரவதீ சைவ சப்தைதா மோக்ஷ தாயிகா:* [2]

என்று கருடபுராணம் மோட்சபுரிகளைப் பற்றிக் கூறுகின்றது. இத்தீர்த்தங்கள் இன்றும் அதே பெயர்களுடன் புராணங்களில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் சில தீர்த்தங்கள் புராணங்களில் கூறப்பட்டுள்ள புவியியல் அமைப்பிற்கு சரியான ஆதாரங்களாக உள்ளன.

## காசி

கங்கையின் கரையில் விஸ்வநாதரின் தெய்வீகத் தன்மையுடன் ஒளியுடன் விளங்கும் காசிநகரம் வாரணாசி என்ற பெயரில் கூட சிறப்புற்றுத் திகழ்கிறது. புராணங்களில்கூட இங்குள்ள ஆலயம் காசி விசுவநாத ஆலயமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

*த்ரி பி$_{4}$ர் முஹூர்த்தை: ஸம்ப்ராப்தா காசீம் விஸ்வேஸ மந்திரம்* [3]

இந்த க்ஷேத்திரம் அவி முக்த க்ஷேத்திரமாக விளங்குகியது.

*முனே! ப்ரளய காலேஉபினதத் க்ஷேத்ரம் கதா$_{3}$சன,*
*விமுக்தம் ஹி சிவாப்யாம் யத$_{3}$விமுக்தம் ததோ விது$_{3}$:* [4]

காசியில் கங்காநதி வடக்கு முகமாகப் பிரவேசிக்கின்றது எனப் புராணங்கள் கூறுகின்றன.

*தஸ்மாஸ்ச்சத கு$_{3}$ணாகங்கா காஸ்யா முத்தர வாஹினி* [5]

காசி க்ஷேத்திரம் 5 தேசங்களில் பரந்துள்ளது என சிவபுராணம் தெரிவிக்கின்றது, காசிக்கு “பஞ்ச க்ரோசி” என்ற பெயரும் உண்டு.

---

1. மகாபாரதம், வனபர்வம் 85-88, 89
2. கருட புராணம் 2-38-5, நாரத புராணம் 1-27-35
3. நாரத புராணம் 2-29-1
4. ஸ்காந்த புராணம் 4-26-27
5. பத்ம புராணம் 5-127-48

*பஞ்ச க்ரோசீதி விக்யாதா காசீ ஸர்வாதி வல்லபா$_4$,*
*வ்யாப்தம் ச சகலம் ஹ்யேதத்ஜலம் விஸ்வதோ க$_3$தம்* [1]

ஸ்காந்த புராணத்தில் காசிகண்டம் என்ற அத்தியாயம் காசி க்ஷேத்ரமகிமையை மிக விரிவாகக் கூறுகின்றது. ஆனந்தவனம், ருத்ரா வாசம், மஹாஸ்மசானம், கோரீகானனம் என்ற பெயர்கள் கூட காசி க்ஷேத்திரத்திற்கு உண்டு என இப்புராணமே கூறுகின்றது. காசி க்ஷேத்திரத்தின் மகிமைகளை ஏனைய புராணங்களிலும் காணலாம்.

அயோத்யா நகர பரப்பளவு குறித்து ஸ்காந்த புராணம் மிக விவரமாகக் கூறியுள்ளது.

*சஹஸ்ர தா$_4$ராமாரப்$_4$ய யோஜனம் பூர்வதோதி$_4$சி,*
*ப்ரதீசீ தி$_3$சி ததை$_2$வ யோஜனம் சமந்தோவதி$_4$:*
*தக்ஷிணோத்ர பா$_4$கே$_3$ து ஸரயூ தமசாவதி$_4$:*
*ஏதத் க்ஷேத்ரஸ்ய ஸம்ஸ்தானம் ஹரேரந்தர் க்ருஹம் ஸ்திதம்.*
*மத்ஸ்யா க்ருதிரியம் விப்ர! புரீ விஷ்ணோ ருதீ$_3$ரிதா,*
*பச்சிமே தஸ்ய மூர்த்தாது கோ$_3$ப்ரதாராசிதா த்விஜ*
*பூர்வத: ப்ருஷ்டபா$_4$கே$_3$ ஹி தக்ஷிணோத்தர மத்யம:*
*தஸ்யாம் புர்யாம் மஹாபா$_4$க$_3$ நாம்னா விஷ்ணுர்ஹரி: ஸ்வயம்* [2]

ஸ்காந்த புராணம், ஸ்ரீமத் ராமாயணம் இவற்றில் அயோத்யா நகரம் ஸரயூ நதிக்கரையில் இருக்கின்றது என்கிறது. அயோத்யா நகரத்தின் முழுமையான விவரங்களை இராமாயணம், விஷ்ணு தர்மோத்தர புராணங்களில் காணலாம். அயோத்யாவின் மகிமை குறித்து ஸ்காந்த புராணம் அத்தியாயம் ஒன்றில் காணலாம்.[3]

## துவாரகா

துவாரகா கரையில் ஸ்ரீகிருஷ்ணரால் அமைக்கப்பட்ட இந்நகரம் கோமதி நதிக்கரையில் அமைந்துள்ளது என்று ஸ்காந்த புராணம் துவாரகா மாஹாத்மியம் என்ற பகுதியின் மூலம் தெரிய வருகிறது.

*த்வாரவத்யாம் ச தே த்$_3$ருஷ்ட்வா கோ$_3$மதீம் ஸாகரங்கமாம்* [4]

துவாரகா நகரம் பற்றி குறிப்பு வராஹ புராணத்திலும் காணப்படுகின்றது.

*த்வாரகேதி ச விக்யாதா புரீ தத்ர ஸ்திதாஉப$_4$வத்*
*யா ச தேவபுரீ ரம்யா விஸ்வகர்ம விநிர்மிதா*
*பஞ்ச யோஜன விஸ்தாரா $_3$தசயோஜன தமாயதா,*
*வஸாம்யத்ர வராரோஹே! சத பஞ்ச ஸமாஸ்த்தா* [5]

துவாரகா நகரம் ஐந்து யோஜனைகள் பரப்பளவும், பத்து யோஜனைகள் நீளமும் உடையது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. சில புராணங்கள் துவாரகா நகரம் 100 யோஜனைகள்

1. சிவபுராணம், கோடி ருத்ர ஸம்ஹித 42-4, ஸ்காந்த புராணம் 4-26-80
2. ஸ்காந்த புராணம், வைஷ்ணவ கண்டம் 8-1-64-67
3. வால்மீகி இராமாயணம் 1-5,6 விஷ்ணு தர்மோத்தர புராணம் 1-13
4. ஸ்காந்த புராணம், ப்ரபாஸ கண்டம், துவாரகா மாஹாத்மியம் 14-45
5. வராக புராணம் 149, 7-8

பரப்பளவுடையது என்கின்றன. இந்நகரின் நான்கு திசைகளிலும் த்வாரங்கள் (வாயில்கள்) இருப்பதால் துவாரகா என்ற பெயர் வந்தது என்று ஸ்காந்த புராணம் சொல்கிறது.

*சதுரர்ணாமபி வர்கா$_3$ணாம் யத்ர த்$_3$வாராணிஸர்வத:*
*அதோ த்வார வதீத்யுக்தா வித்$_3$வபி: தத்:வவேதி$_3$பி:* [1]

## புராணங்களின் ராஜ வம்சங்களைப் பற்றிய குறிப்பு

### அக்னி வம்ச அரசர்கள்

பாரத தேசத்தின் புராண இதிகாசங்கள் பாரத தேசத்தின் சரித்திரமாக உள்ளன. அவற்றில் சிருஷ்டியின் துவக்கத்திலிருந்து ஆறு மனுக்களின் காலத்தில் நடந்த சில முக்கியமான விஷயங்கள் சில சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது நடந்து வரும் ஏழாவது மனுவின் காலத்தில் கடந்த 28 மஹாயுகங்களிலும் இருந்த முக்கியமான ராஜவம்சங்கள், நடந்த முக்கிய விஷயங்களைப் பற்றி விரிவாகவும் கூறி, அக்காலத்தில் மக்களிடையே இருந்து வந்த ஆசாரங்கள், நடவடிக்கைகள், அரசர்களின் ராஜ நெறி, குடிமக்களின் நீதி வழிமுறைகள், நாகரிகம் இவை புராணங்களில் ஆங்காங்கே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றில் அரசர்களின் வரலாறு மட்டுமேயன்றி மக்களின் வரலாற்றினையும் காணலாம்.

### கலியுக ராஜ வம்சங்கள்

மஹத சாம்ராஜ்யத்தில் அரசாண்டு வந்த ராஜ வம்சங்களின் வரலாறு, மஹா பாரத யுத்தத்திற்குப் பின் அதாவது கலி ஆண்டுக்கு முன் 36ஆம் ஆண்டு (கி.மு. 3158) முதல் புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. பாரத யுத்தத்திற்குப் பிறகு அரசாண்ட ராஜ வம்சங்கள் அவர்களின் காலங்கள் – கலி பூர்வம் 36 ஆம் ஆண்டிலிருந்து (கி.மு. 3138 ஆம் ஆண்டிலிருந்து) கலி பூர்வம் 970ஆம் ஆண்டு (கி.மு. 2182) ஆண்டு வரை ஆண்ட வம்சங்கள்.

### பார்ஹத்ரத வம்சம்

*த்$_3$வாவிம்சதிர்ந்ருபா ஹ்யேதே ப$_4$விதாரோ ப்ருஹத்ர$_3$தா$_2$:*
*பூர்ணம் வர்ஷஸஹஸ்ரம் வை தேஷாம் ராஜ்யம் ப$_4$விஷ்யதி* [2]

ப்ருஹத்ரதுனி வம்சம் அவர்களின் 22 அரசர்கள் ஆயிரம் ஆண்டுகள் அரசாண்டனர் என்று புராணம் கூறுகின்றது.

ஒவ்வொரு அரசர்களின் ஆட்சிக் காலத்தைத் தனியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் மொத்தம் 1006 ஆண்டுகள் வருகிறது.

### ப்ரத்யோத வம்சம்

5 அரசர்கள் அரசாண்டனர். காலம் 138 ஆண்டுகள். கலிசகம் 976–1108 (கி.மு. 2132 – 1994)

*பஞ்ச ப்ரத்யோதனா இமே*
*அஷ்ட த்ரிம் சோத்தர சதம் போக்ஷயந்தி ப்ரதீவீம் ந்ருபா:* [3]

5 ப்ரத்யோத வம்சத்தினர் 138 ஆண்டுகள் அரசாண்டனர்.

1. ஸ்காந்த புராணம், காசீ கண்டம் 7-104 3. விஷ்ணுபுராணம், 12-2
2. வாயு புராணம், 271-29, 30

## சிசுநாக வம்சம்

*10 அரசர்கள் 362 ஆண்டுகள் அரசாண்டனர். கலிசகம் 1008–1468 (கி.மு. 1994–1634)*

***இத்யேதே ப$_4$விதாரோ வை சைசுநாகா$_3$ ந்ருபா த$_3$ச***
***சதானி த்ரீணி வர்ஷாணி த்$_3$விஷ்டயாப்யதி$_3$ கானிது*** [1]

சிசு நாகர்கள் 10 பேர் 362 ஆண்டுகள் என்று கூறப்பட்டாலும், தனித்தனியே கணக்கிடுகையில் 2 ஆண்டுகள் குறைகிறது. எனவே மொத்தம் 360 ஆண்டுகள் ஆண்டனர் எனலாம்.

## நந்தவம்சம்

*9 அரசர்கள் 100 ஆண்டுகள். கலிசகம் 1468–1568 (கி.மு. 1684–2514)*

***மஹாபத்ம: தத்புத்ராஸ்ச்ச, ஏகம் வர்ஷசதம் அவனிபயோ ப$_4$விஷ்யந்தி***

மஹாபத்ம நந்தன் அவனது குமாரர்கள் நூறு ஆண்டுகள் ஆண்டனர்.

## மௌரிய வம்சம்

*12 அரசர்கள் 316 ஆண்டுகள். கலிசகம் 1568–1884 வரை (கி.மு. 1584–1278)*

***த்$_3$வாத$_3$ சைதே மௌர்யா: சந்த்ர கு$_3$ப்தாத$_3$யோ மஹீம்,***
***சதானி த்ரீணி போ$_4$ கூஷ்யந்தி தஷாஷ்ட்ச ஸமா: கலௌ ****

சந்திர குப்தர்களான 12 மௌரிய அரசர்கள் 316 ஆண்டுகள் அரசாண்டனர்.

***இத்யேதே த$_3$சத்$_3$வாவேவ ச போ$_4$கூஷ்யந்தி வசுந்த$_4$ராம்***
***சதானித்ரீணி வர்ஷாணிதேப்$_4$ய: சுங்கா$_3$ன் க$_3$மிஷ்யதி***

டாக்டர். கிருஷ்ணமாசாரியாரிடம் உள்ள மத்ஸ்ய புராணத்தின் கையெழுத்துப் பிரதியில் இருந்து அவர் எழுதியபடி "12 மௌரிய அரசர்கள் 300 ஆண்டுகள் ஆண்ட பின்பு அவர்களிடமிருந்து ராஜ்யம் சுங்க அரசர்களிடம் செல்லும்."

## சுங்க வம்சம்

*10 அரசர்கள் ஆண்ட காலம் 300 ஆண்டுகள். (கலிசகம் 1884–2184) (கி.மு. 1218–918 வரை)*

***த$_3$சைதே சுங்க$_3$ராஜானோ போ$_4$கூஷ்யந்தீமாம் வசுந்தராம்,***
***சதம் பூர்ணம் சதே த்$_3$வே ச தேப்$_4$ய: கண்வான் க$_3$மிஷ்யதி***

*10 சுங்க அரசர்கள் 300 ஆண்டுகள் ஆண்டபின் ராஜ்ஜியம் கண்வ அரசர்கள் ஆட்சி புரிவர்.*

## கண்வ வம்சம்

*4 அரசர்கள் 85 ஆண்டுகள். கலிசகம் 2184–2269, (கி.மு. 918–833)*

***சத்வார ஏதே பூ$_4$பாலா: கண்வகோத்ர சமுத்ப$_4$வா:***
***த$_4$ர்மேண போ$_4$கூஷ்யந்தி மஹீம் பஞ்சாசீதிஸ்து வத்ஸரான்***

கண்வ கோத்திரத்தை சேர்ந்த 4 அரசர்களும் 85 ஆண்டுகள் தர்மப்படி ஆட்சி புரிவர்.

---

1. வாயு புராணம் 99-321

* 1) கலியுக ராஜவ்ருத்தாந்த 3 பாகம், அத்தியாயம் – 2,
2) டாக். எம். கிருஷ்ணமாசார்யுலு ஹிஸ்டறி ஆம் கிளாசிகல் லிட்ரேசர் மற்றும் நடிம்பல்லி ஜகன்னாத ராவின் மகாபாரத யுத்த காலம்

## ஆந்திர சாதவாஹன வம்சம்

*32 அரசர்கள் 506 ஆண்டுகள். கலிசகம் 2269–2775 (கி.மு. 833–327)*

***ஏதே த்$_3$வாத்ரிம் சதா$_3$ந்த்$_4$ராஸ்து போ$_4$க்ஷ்யந்தி வசுதா$_3$மிமாம்***
***சதானி பஞ்ச பூர்ணானி தேஷாம் ராஜியம் ப$_4$விஷ்யதி [1]***

32 ஆந்திர அரசர்கள் 500 ஆண்டுகள் ஆட்சி புரிவர். ஒவ்வொரு அரசர்கள் ஆண்ட காலத்தை தனித்தனியே கணக்கிட்டால் 506 ஆண்டுகள் வருகின்றன.

## குப்த அரசர்கள்

*8 பேர் 245 ஆண்டுகள். கலிசகம் 2775–3020 (கி.மு. 327–83)*

***போ$_4$க்ஷ்யந்தி த்$_3$வே சதே பஞ்ச சத்வாரின்சச்சவை சமா:***
***மாக$_3$தா$_4$நாம் மஹா ராஜ்யம் சி$_4$ன்னம் பி$_4$ன்னம் ச சர்வச:***
***சாகமேதைர் மஹா கு$_3$ப்த வச்யைர்யாஸ்யதி சம்ஸ்தி:***

5+7=12 பாகங்களாக சிதறிப் போன ஆந்திரர்களின் மகத சாம்ராஜ்யம் சிறு சிறு பகுதிகளாகி சிதைந்து மஹா குப்த அரசானது. அவர்கள் 245 ஆண்டுகள் அரசாண்டனர்.

| எண் | வம்சம் பெயர் | அரசர்கள் எண்ணிக்கை | அரசாண்ட ஆண்டுகள் பாரதப் போருக்குப் பின் | கலிசகம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1 | பார்ஹ த்ருத வம்சம் | 22 | 1006 | கலிசகம் முன்னர் 36 | கலி 970 |
| 2 | ப்ரத்யோத வம்சம் | 5 | 138 | கலி 970 | கலி1108 |
| 3 | சிசு நாகவம்சம் | 10 | 360 | கலி 1108 | கலி1468 |
| 4 | நந்த வம்சம் (தந்தையும் அவன் மகன்கள் எண்மர்) | 9 | 100 | கலி 1468 | கலி1568 |
| 5 | மௌர்ய வம்சம் | 12 | 316 | கலி 1568 | கலி 1884 |
| 6 | சுங்க வம்சம் | 10 | 300 | கலி 1884 | கலி 2184 |
| 7 | காண்வா வம்சம் | 4 | 85 | கலி 2184 | கலி 5569 |
| 8 | ஆந்திர வம்சம் | 32 | 506 | கலி 2269 | கலி 2775 |
| 9 | மஹாகுப்த வம்சம் | 8 | 245 | கலி 2775 | கலி 3010 |
| | | 105 | 3006 | கி.மு.36 | கலி 3020 |

1. கலியுக ராஜவ் ருத்தாந்தம் – ஸ்ரீகோடி வேங்கடாசலம் அவர்களின் கலி சக விஞ்ஞானமு இரண்டாம், மூன்றாம் பாகங்கள்

ஆந்திர அரசர்களின் மஹா சாம்ராஜ்யம் சிதைந்த பின் மஹாகுப்த அரசர்களில் முதல் அரசரான சந்தர குப்தன் மகத நாட்டை விடுத்து பாடலிபுத்திரத்தில் பட்டாபிஷேகம் செய்து கொண்டான். ஆனால் அவன் சக்ரவர்த்தியாக முடியாததால் சிற்றரசனாக மட்டுமே இருந்து வந்தான். ஆனால், அவனது குமாரன் சமுத்திர குப்தன் திக்விஜயம் செய்து அயோத்தியின் சக்ரவர்த்தியானான். ஆனால், அவன் காலத்திலேயே இராஜ்யம் கைமாறி சாமந்த அரசர்களிடம் சென்றது. பின்னர் இரண்டாம் சந்திர குப்தன், குமார குப்தன், ஸ்கந்த குப்தன் முதலானோர் பெயருக்கு மட்டுமே சக்ரவர்த்திகளாக இருந்தனர். அவர்கள் ஆட்சி காலம் முழுவதும் சக, ஹுண அரசர்களுடன் போராட்டத்திலேயே கழிந்தது. கடைசியில் கலி 3020 ஆம் ஆண்டு குப்த ராஜ்யமே மீண்டும் தோன்றியது. இவ்வாறிருக்கையில் அவந்தி அரசின் முக்கிய நகரமான உஜ்ஜயினியில் இருந்து குப்த அரசர்களின் எதிரிகளாய் இருந்து வந்த சக அரசர்கள் கலி 3020ஆம் ஆண்டு விக்ரமாதித்யன் என்ற அக்னி வம்ச அரசன் வெற்றி பெற்று சகுலர்களை தேசத்தினின்றே விரட்டி அடித்து விட்டான்.

கலி 3020ஆம் ஆண்டிலேயே உஜ்ஜயினியின் அரசனாக முடி சூட்டிக் கொண்டான். இதனால் கலி 3020ஆம் ஆண்டிலிருந்து நான்கு அக்னி வம்சத்தின் ஒன்றான “ப்ரமர” வம்சத்தை சேர்ந்த உஜ்ஜயினியில் அதிகாரம் வகித்து வந்த “சகஹந்த்” ஆன விக்ரமார்க்கன் காலத்திற்குப் பிந்தைய காலத்தை நாம் அடையாளம் காண வேண்டும். விக்ரமார்க்யனின் காலத்தைப் பற்றிய விவரம் இவ்வாறு காணப்படுகிறது.

*பூர்ணே த்ரிம்ஸச்சதே வர்ஷே கலௌ ப்ராப்தே ப$_4$யங்கரே*
*சகானாம்ச வினாசார்த$_2$மார்யதர்மவிவ்ருத்$_4$தயே*
*ஜாத: சிவாஜ்ஞாயா ஸோஉபி கைலாசாத்$_3$ குஹ்யகாலயாத்*
*விக்ரமாதித்ய நாமானாம் பிதா க்ருத்வா முமோத$_3$ஹ*
*நா பா$_3$லோऽபி மஹாப்ராஜ்ஞ: பித்ரு மாத்ரு ப்ரியங்கர:* [1]

கலியில் 3000 ஆண்டுகளுக்குப் பிறகு (கி.மு. 101) சகுலர்களை அழித்து ஆர்யதர்மத்தை வளர்ப்பதற்குச் சிவபிரானின் ஆணையால் (குஹ்ய காலம்) குகைக்குள் இருந்த ஆலயத்தினின்றும் ஒரு புருஷன் ப்ரமா வம்சத்தில் கந்தர்வசேவகன் என்ற மஹாராஜாவின் குமாரனாகப் பிறந்தான், இவனுக்கு விக்ரமாதித்யன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். இவன் மிகவும் புத்திசாலியாகவும் தாய் தந்தையரின் அன்புக்குப் பாத்திரமானவனாகவும் இருந்தான்.

விக்ரமாதித்யன் என்ற பெயர் அவன் தந்தை வைத்த பெயரே அன்றி அது அவனது விருது அல்ல.

கலி கி.மு. 3020 ஆம் ஆண்டு உஜ்ஜயினியில் விக்ரமாதித்யனின் காலத்திற்குப் பிறகான ஆண்டுகள் கணக்கிடுதல் வேண்டும்.

## ப்ரமர வம்சம்

கலி 3020 – 4295 (கி.மு. 82–கி.பி 1193 வரை) இந்த வம்சத்தில் 24 அரசர்கள் 1275 ஆண்டுகள் விக்ரமாதித்யனுக்குப் பின் அரசாண்டனர்.

1. பவிஷ்ய மஹாபுராணம் 3-1-7-14, 15, 16

## முஹம்மதீயர்கள், மஹாராஷ்டிரகூடர்கள், ஆங்கிலேயர்கள் என 753 ஆண்டுகள்

*கலிசகம் 4095–5048 (கி.பி. 1194–1947)*

*1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி கலிசகம் 504, சாலவாஹன சகாப்தம் 1869ஆம் ஆண்டு, ஸர்வஜித் ஆண்டு அதிக சிராவண மாதம் 20ஆம் தேதி வெள்ளிக்கிழமை – இந்தியா சுதந்திரம் அடைந்தது.*

*கலி பிரவேச காலத்திலிருந்து 'கலிசகம்' ஆரம்பத்திலிருந்து இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் பஞ்சாங்கத்தின்படி ஒவ்வொரு ஆண்டையும் கணக்கிட்டு சொல்வதற்கு முயற்சி செய்துள்ளோம். கலிசகம் ஆரம்பித்து இன்று வரை 5050 ஆண்டுகள் ஆயின. அதே போன்று கி.மு. 3102 ஆண்டில் ஆரம்பித்து இந்த ஆண்டு வரை கடந்த ஆண்டுகள்.*

| | |
|---|---|
| *கிறிஸ்துவிற்கு முன் கடந்த ஆண்டுகள்* | *3101* |
| *கிறிஸ்துவிற்குப் பின் கடந்த ஆண்டுகள்* | *2021* |
| *மொத்தம்* | *5122* |

*கலி பிரவேச காலம் கி.மு 3108 ஆண்டுகள் பிப்ரவரி 20 ஆம் தேதி இரவு 3–37–30.*

*இவ்வாறாக மிகவும் புராதனமான புராணங்களின் ஆதாரங்களை வைத்தே இந்திய தேசத்தின் ஸ்வரூபம், அறிவியல் விஷயங்கள், பர்வதங்கள், புண்ய நதிகள், தீர்த்தங்கள், மோட்ச புரிகள், அரச வம்சங்கள், அரசர்கள் இவர்களின் வரலாறுகள் முதலிய அம்சங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். புராணங்களின் மீது முழு நம்பிக்கை இல்லாவிட்டால் இந்த விஷயங்கள் நமக்குத் தெளிவாகத் தெரியாது. புராணங்களின் வழி நம் இந்திய நாட்டின் வரலாற்றினை நாம் அறியாவிட்டால் நமது வரலாற்று அறிவு பூஜ்யம் என்றே சொல்லிவிடலாம். எனவே புராணங்களை நிந்திக்க வேண்டாம். மதித்துப் போற்றுக!*

******

ஸ்வாமி புஷ்கரணியில் அஞ்ஜனாதேவி கேசரி தம்பதியர் புனித நீராடல்
புற்றில் இருந்து ஸ்வாமியின் தரிசனம்



# அத்தியாயம் - 2

# 2. ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் புராணேதிஹாஸ வசனங்கள்

தெலுங்கு மூலம்
பேராசிரியர் ஜானமத்தி ராமகிருஷ்ணா

தமிழாக்கம்
திரு. லக்ஷ்மி நரஸிம்மன்

*வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே*
*நமோ வை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம:*
*ச்ருதி ஸ்ம்ருதி புராணானாமாலயம் கருணாலயம்*
*நமாமி பகவத்பாதசங்கரம் லோக சங்கரம்.*

ஸநாதன தர்ம இலக்கியத்தில் புராண நூல்களுக்கு முக்கிய இடம் உண்டு. இந்திய கலாசாரம், மரபுகளுக்குக் கண்ணாடி போன்றவை புராணங்கள். எல்லையற்ற வேதங்களின் சாரம் நிறைந்தது புராணங்கள். 18 பெரிய புராணங்களும், 18 உப புராணங்களும் நம்மிடம் உள்ள பெரிய புதையல்கள். இப்புதையல்கள் நமக்கு சொந்தமானது நம்முடைய அதிர்ஷ்டமாகும்.

இருந்தபோதிலும், சிலர் இந்த புராணங்களைக் கொச்சையானதாகக் கருதுகின்றனர். ஒருவேளை, இதற்கு தவறான புரிதலே காரணமாக இருக்கலாம். மற்றவர்கள் இன்னும் ஒருபடி மேலே போய் *புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்* என்ற பழமொழியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றார்கள். இது அவர்களின் நிலைக்கு ஒரு ஆதாரம். ஒரு சொல் அல்லது வாக்கியத்தை விவரிக்கும் போது அதன் பொருளை நன்கு அறிந்து கையாள வேண்டும். அல்லது வறுமையைக் காரணம் காட்டி வாழ்க்கையை நடத்தக் கூடாது. இத்தகைய முயற்சியால் அவர்களால் உலகை ஏமாற்ற முடியாது. அதோடு நிற்காமல் ஆத்ம வஞ்சகர்களே ஆகிறார்கள். தங்களுக்கும் தங்கள் வாதத்திற்குச் சான்றாக அவர்கள் காட்டும் மேற்கூறிய வாக்கியத்தை பார்க்கலாம் – மகாகவி காளிதாஸரால் எழுதப்பட்ட “மாளவிகாக்னி மித்ரம்” என்கிற நாடகத்தின் ஒரு சுலோகப் பகுதி இது. ஸம்பூர்ண சுலோகம் இவ்வாறு உள்ளது.

*புராணமித்யேவ ந ஸாது ஸர்வம், ந சாபி காவ்யம் நவமித்யவத்யம்*
*ஸந்த: பரீக்ஷ்யான்யதரத்பஜந்தே மூட: பரப்ரத்யயனேயபுத்தி:* [1]

இங்கு சிறு விளக்கம் – மேற்கூறிய நாடகத்தின் முன்னுரையில் இந்த சுலோகம் ஸுத்ரதாரனின் முகத்திலிருந்து வெளிப்படுகிறது. இந்த வஸந்த விழாவின் போது காளிதாஸனால் எழுதப்பட்ட “மாளவிகாக்னி மித்ரம்” என்கிற நாடகத்தை காட்டப்படவேண்டும் என்று பெரியோர் கேட்டார்கள். ஆகையால் நாடகத்தை ஆரம்பிப்போம் என்கிறான் ஸுத்ரதாரன். நாடகத்தில் சகநடிகர் கூறுகிறார், “மதிப்புப் பெற்ற பாஸன், சௌமித்ரன், கவிபுத்திரன் முதலானவர்கள் எழுதிய

1. மாளவிகாக்னிமித்ரம் – பூர்வரங்கம் – 2

நாடகங்களைத் தள்ளிவைத்து புதியவனான காளிதாஸனின் நாடகத்தை நடத்துவதின் சம்பந்தம் என்ன? என்று கேட்கிறான். அப்போது அந்த சகநடிகனை எச்சரித்து ஸூத்திரதாரன் கூறுகின்ற சுலோகமிது. இதனுடைய பொருள் பழமையான எல்லா வஸ்துக்களும் சிறந்ததாகக் கருதக்கூடாது. இப்படியே புதியதான வஸ்துக்களின் விஷயத்தில் அவமதிக்கக் கூடாது. அறிஞர்கள் இவ்விரண்டையும் நன்கு ஆராய்ந்து நல்லதை மட்டுமே உணர்கின்றனர். இந்தப் பழமை – புதுமை வேறுபாடுகளை அவர்கள் காட்டுவதில்லை. இதுவே இந்த சுலோகத்தின் பொருள் – ஆகையால் இந்த சுலோகத்தில் புராணமென்றால் பழமையானது என்று பொருள்.

*புராணே ப்ரதன - ப்ரத்ன - புராதன - சிரந்தனா:*[1] என்கிறது அமரகோசம். பழமையானது என்கிற பொருளில் 1) புராணம் 2) பிரதனம் 3) ப்ரத்னம் 4) புராதநம் 5) சிரந்தனம் – என்கிற 5 பிரிவுகள் உள்ளன. அவ்வளவுதானே தவிர இந்த சுலோகத்தில் “புராணம்” என்றால் வேதவியாசரால் எழுதப்பட்ட புராணங்கள் அல்லது உப புராணங்கள் என்று உணர வேண்டும் என்பது அறியாமையின் உச்சம்.

சரி, தலைப்பிற்கு வருவோம். வியாசரால் எழுதப்பட்ட புராண வசனங்களை சிறந்த சிந்தனையாளர்கள் பலர் அவர்களின் கோட்பாடுகளுக்கான தரநிலைகளாகக் கருதுகின்றார்கள். புராணங்களின் மீது தங்களுக்கு உள்ள பக்தி – ச்ரத்தைகளை வெளிப்படுத்தினர். ஸ்ரீ சங்கர பகவத்பாதரும் கூட இந்த வகைக்குள் அடங்குவார். ச்ருதிபிரஸ்தானம், ஸ்மிருதி பிரஸ்தானம், நியாய பிரஸ்தானம் என்கிற இம்மூன்றையும் “பிரஸ்தான திரயம்” என்பர்கள். உபநிஷத்துக்களைச் சுருதி பிரஸ்தானம் என்றும், பகவத்கீதையை ஸ்மிருதி பிரஸ்தானம் என்றும், வேதாந்த ஸூத்திரங்களை நியாய பிரஸ்தானம் என்றும் கருதப்படுகின்றன.

இம்மூன்று பிரஸ்தானங்களுக்கும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர் பாஷ்யத்தை இயற்றினார். ஸ்ரீசங்கர பாஷ்யம் என்கிற பெயருடன் இவை பிரபலமாக அறியப்படுகின்றன. இந்த மூன்று பாஷ்யங்களிலே ஆசாரியர் தங்கள் கோட்பாடுகளுக்கு தரநிலைகளாக பல புராண வசனங்களை எடுத்துக்காட்டினார். இந்த பகுதிக்கு சம்பந்தமானதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## 1. உபநிஷத் பாஷ்யத்தில் புராண வசனங்கள்

கடோபநிஷத் – இரண்டாம் அத்தியாயத்தில் ப்ரதமவல்லி பாஷ்யத்தில் (பக்–279) லிங்கபுராண வசனம்,

*யச்சாப்னோதி யதாதத்தே யச்சாத்தி விஷயானிஹ*
*யச்சாஸ்ய ஸந்ததோ பாவஸ்தஸ்மாதாத்மேதி கீர்த்யதே*[2]

1. அமரகோச: – விஷேஷ்ய நிக்னைவர்க: – 77
2. லிங்க புராணம் 1–70–96

ஆத்ம சப்தத்தின் பொருளை விவரிக்கும் சுலோகமிது. எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறது, கிரஹிக்கிறது, லௌகீக விஷயங்களை அனுபவிப்பது மற்றும் எப்போதும் இருப்பது, அதனால்தான் இதற்கு "ஆத்மா" என்று பெயர். இந்த உபநிஷத்தில் த்ரிதீய வல்லி பாஷ்யத்தில் (பக்–336) விஷ்ணுபுராண வசனம்,

*அபூத ஸம்ப்லவம் ஸ்தானமம்ருதத்வம் விபாவ்யதே* [1]

அம்ருதத்வம் என்கிற சப்தத்தின் பொருளை விவரிக்கும் வசனமிது.

**மாண்டூக்யோபநிஷத்** – வைதத்ய ப்ரகரண பாஷ்யத்திலே (பக்–644) வியாஸ ஸ்மிதி வசனமாக இந்த சுலோகம் தெரிகிறது.

*தம:ச்வப்ரனிபம் த்ருஷ்டம் வர்ஷபுத்புதஸன்னிபம்*
*நாசப்ராயம் ஸுகாத்தீனம் நாரோத்தரமபாவகம்* [2]

த்வைதத்தின் அஸத்தியத்தை சொல்லும் வசனமிது. இந்த உலகம் துளி போன்று, ஒரு சொட்டு நீர்போன்று நாசத்தை அடைகிறது. முழுமையான சுகம் ஆகாதது மற்றும் அழிவுக்குப் பின் வெறுமை பெறுவது என்று பொருள்.

**ஐதரேயோபநிஷத்** – இரண்டாவது அத்தியாயத்தில் பிரதமகண்ட பாஷ்யத்தில் (பக்–875) ஹரிவம்சத்தில் வசனமிது. *பதிர்ஜாயாம் ப்ரவிசதி* [3]

தந்தையின் ஆன்மா மகனின் வடிவம் பெறும் என்கிற சந்தர்பத்தின் வசனமிது

**தைத்திரியோபநிஷத்** – சீக்ஷாவல்லீ பிரதம அனுவாக பாஷ்யத்தில் (பக்–916) கருட புராண வசனம்

*ஜ்ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத்பாபஸ்ய கர்மண:*
*யதாSSதர்சதலே ப்ரக்யே பஸ்யன்த்யாத்மானமாத்மனி* [4]

பாவங்கள் அழிந்த பிறகுதான் ஞானம் பிறக்கும். கண்ணாடி சுத்தமாக இருந்தால்தான் நம்முடைய முகம் நன்றாகத் தெரியும். அதேபோல் அந்த: கரணத்தில் மட்டுமே ஆத்ம ஸாக்ஷாத்காரமாகும்.

**ச்வேதாச்வதரோபநிஷத்** – பிரதமாத்யாய பாஷ்யத்தில் (பக்–1117–1118) சில புராண வசனங்கள்.

*அனூசானஸ்ததோ யஜ்வா கர்மன்யாசீ தத: பரம்*
*ததோ ஜ்ஞானித்வமப்யேதி யோகீ முக்திம் க்ரமால்லபேத்* [5]

*அனேகஜன்ம சம்சாரசிதே பாப சமுச்சயே*
*நாக்ஷீணே ஜாயதே பும்ஸாம் கோவிந்தாபிமுகே கதி:* [6]

---

1. விஷ்ணு புராணம் 2-8-95
2. வைதத்யப்ரகரணம் பாஷ்யம், பக்-644
3. ஹரிவம்ஸம் 3-73-31
4. கருட புராணம் 1-237-06
5. விஷ்ணுதர்மபுராணம் 98-20
6. பவிஷ்ய புராணம் 01-63-09

*ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞான ஸமாதிபி:*
*நராணாம் க்ஷீண பாபானாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே* [1]

*பாபகர்மாச்ரயோ ஹ்யத்ர மஹாமுக்திவிரோதக்ருத்*
*தஸ்யைவ சமனே யத்ன: கார்ய: ஸம்ஸாரபீருணா* [2]

*ஸுவர்ணாதி மஹாதான புண்யதீர்தாவகாஹனை:*
*சாரீரைச்ச மஹாக்லேசை: சாஸ்த்ரோக்தைஸ்தச்சமோ பவேத்* [3]

*தேவதாச்ருதிஸச்சா ஸ்த்ருச்ரவணை: புண்ய தர்சனை:*
*குருசுச்ரூஷணைச்சைவ பாபபந்த: ப்ரசாம்யதி* [4]

சித்தசுத்தி இல்லையெனில் மோக்ஷம் அடைய முடியாது என்கிற விஷயத்தை தெளிவு படுத்தும் விதமாக இச்சுலோகங்கள் உள்ளன. யோகி முதலில் வேதாத்யயனம் செய்து, பிறகு யோகானுஷ்டானம் பண்ணி, இந்த இண்டும் முடிந்த பிறகு கர்மங்களை கைவிடுகிறார். பிறகு ஞானம் பிறக்கும். இது முக்தி அடைவதற்கு ஒரு வரிசை. பல பிறவிகளில் செய்த கர்மங்களினால் ஏற்பட்ட ஸம்ஸாரம், அதனால் உண்டான பாபம் குறையும் வரை புத்தி பகவானிடம் செல்லாது. சில ஆயிரம் பிறவிகளுக்கு முன் பண்ணின தபம், அறிவு மற்றும் சமாதி வாயிலாக பாவம் குறைந்த பிறகே ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்தி ஏற்படும். பாப கர்மாக்களினால் வருகின்ற ஸம்ஸ்காரம் மோக்ஷத்திற்கு தடங்களாகும். ஆகையால் அந்த ஸம்ஸ்காரங்களை அணுகாமல் இருக்கவேணும். தங்க தானம், புண்ணிய ஸதலங்களில் நீராடுதல் போன்றவற்றால் துன்பம் நீங்கும். தெய்வ வழிபாடு, வேத சாத்திரங்களைக் கேட்பது, குருசேவை முதலியவற்றால் கூட பாவங்கள் நீங்கும்.

இந்த பிரதமாத்யாய பாஷ்யத்தில் (பக்–1123–1124) லிங்கபுராண சுலோகங்கள் இப்படி உள்ளன.

*ஜ்ஞானேனைதேன விப்ரஸ்ய த்யக்த ஸங்கஸ்ய தேஹின:*
*கர்தவ்யம் நாஸ்தி விப்ரேந்த்ரா:! அஸ்தி சேத்தத்வ வின்ன ச*
*இஹ லோகே பரே சைவ கர்தவ்யம் நாஸ்தி தஸ்ய வை*
*ஜீவன் முக்தோ யதஸ்து ஸ்யாத் ப்ரஹ்மவித்பரமார்தத:*
*ஜ்ஞானாப்யாஸரதோ நித்யம் விரக்தோ ஹ்யர்தவித்ஸ்வயம்*
*கர்தவ்யபாவ முத்ஸ்ருஜ்ய ஜ்ஞானமேவாதிகச்சதி*
*வர்ணாச்ரமாபிமானீ யஸ்த்யக்த்வா ஜ்ஞானம் த்விஜோத்தமா:*
*அன்யத்ர ரமதே மூட: ஸோஉஜ்ஞானி நாத்ர சம்சய:*
*க்ரோதோ பயம் ததோ லோபோ மோஹோ பேதோ மதஸ்தம:*

---

1. விஷ்ணுதர்மபுராணம் 68-112
2. விஷ்ணுதர்ம புராணம் 97-04
3. விஷ்ணு தர்மபுராணம் 97-05
4. விஷ்ணு தர்ம புராணம் 97-06

*தர்மாதர்மௌ ச தேஷாம் ஹி தத்வசாச்ச தனுக்ரஹ:*
*சரீரே ஸதி வை க்லேச: சோஉவித்யாம் ஸந்த்யஜேத்தத:*
*அவித்யாம் வித்யயா ஹித்வா ஸ்திதஸ்தஸ்யைவேஹ யோகின:*
*க்ரோதாத்யா நாசமாயாந்தி தர்மாதர்மௌ ச நச்யத:*
*தத்க்ஷயாச்ச சரீரேண ந புன: ஸம்ப்ரயுஜ்யதே*
*ஸ ஏவ முக்த: ஸம்ஸாராத்து:கத்ரய விவர்ஜித:* [1]

மகேஸ்வரனின் திருவசனங்கள் இவை – அந்தணர்களே ! அறிவினால் ஜீவன் சங்கரஹிதனாகிறான். அத்தகைய சங்கரஹிதனுக்கு கடமைகளும் இல்லை. ஒருவேளை கடமைகள் இருந்தால் அவர் தத்வ வாதியாக இருக்க மாட்டார். சங்கரஹிதனுக்கு இவ்வுலகில் கடமைகள் இருக்காது, உண்மையில் பிரம்மாவின் தத்துவத்தை அறிந்தவர் ஜீவன்முக்தன். பரமாத்மாவின் தத்துவத்தை அறிந்தவர் கடமைகளை தவிர்த்து ஞானத்தின் மீது கவனத்தை செலுத்துகிறார். வர்ணாச்ரமங்களின் மீது ஆர்வம் உள்ளவன் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தினால் முட்டாளே ஆவான். இது நிச்சயம். காமக்ரோதங்கள் என்கிற அரிஷட்வர்கங்களுக்கு உட்பட்டவன் மீண்டும் பிறக்கிறான். உடல் இருக்கும்போது துன்பம் தவறாது. ஆதலால் கல்வியால் அறியாமையை ஒழிக்க வேண்டும். அவனே யோகி என்பவன் ஆவான். யோகிகள் கோபத்திலிருந்து விடுபடுவார்கள். அவை அழியும்போது உடல் சம்பந்தம் அற்றவனாகி தாபத்ரயத்தை விட்டு முக்தனாகிறான்.இந்த சுலோகங்களுக்குப் பிறகு சிவதர்மோத்தர புராணத்திலிருந்து இரண்டு சுலோகங்களை மேற்கோளாகக் காட்டுகிறார் சங்கரர் (பக்–1124)

*ஜ்ஞானாம்ருதேன த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகின:*
*நைவாஸ்தி கிஞ்சித்கர்தவ்யமஸ்தி சேன்ன ஸ தத்த்வவித்*
*லோகத்வயோSபி கர்தவ்யம் கிஞ்சிதஸ்ய ந வித்யதே*
*இஹைவ ஸ விமுக்த: ஸ்யாத் ஸம்பூர்ண: சமதர்ஸன:* [2]

மேற்கூறிய இரண்டு சுலோகங்கள் கூட மேற்கூறப்பட்ட சுலோகங்கள் போலவே ஞானத்தின் பெருமையைத் தெளிவுபடுத்துகின்றன. யோகி ஞானாம்ருதத்தினாலே திருப்தியடைந்து க்ருதக்ருத்யனாவான். அவனுக்கு எந்த கடமையும் இல்லை. இருந்தால் தத்துவத்தை அறிந்தவனாக முடியாது. இம்மையிலோ அல்லது பரலோகத்திலோ கடமையற்றவனாகி பரிபூர்ணனாகி முக்தியைப் பெறுவான். இக்கருத்தை வலியுறுத்தும் லிங்கபுராண வசனங்கள் (பக்–1126) –

*ஜ்ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா*
*ஜ்ஞானின: ஸர்வகர்மாணி ஜீர்யந்தே நாத்ர சம்சய:*
*க்ரீடன்னபி ந லிப்யேத பாபர்நானாவிதைரபி* [3]

---

1. லிங்கபுராணம் 1–86–105–113   2. சிவதர்மோத்தரபுராணம் 7–22–11–51,52   3. லிங்கபுராணம் 1–86–118,119

அறிவு என்கிற அக்னி அனைத்து கர்மாக்களையும் சாம்பல் ஆக்கிவிடும். எந்தவிதமான பாவமும் ஞானிக்கு ஒட்டாது என்று பொருள். இதனையே குறிப்பிடும் "சிவ தர்மோத்தர புராணத்தின்" சில வசனங்களை இங்கே பார்க்கலாம் (பக்–1126–1127) – (தற்பொழுது கிடைக்கப்பெறும் புராண புத்தகங்களில் இந்த சுலோகங்கள் காணப்படுவதில்லை.)

*தஸ்மாத் ஜ்ஞானாஸினா தூர்ணமஸேஷம் கர்மபந்தனம்*
*காமாகாமக்ருதம் சித்த்வா சுத்தச்சாத்மனி திஷ்டதி*
*யதா வஹ்னிர் மஹான் தீப்த: சுஸ்கமார்ட்ரம் ச நிர்தஹேத்*
*ததா சுபாசுபம் கர்ம ஜ்ஞானாக்னிர்தஹதே க்ஷணாத்*
*பத்மபத்ரம் யதா தோயை: ஸ்வஸ்தைரபிந லிப்யதே*
*சப்தாதிவிஷயாம்போபிஸ்தத்வத் ஜ்ஞானீ ந லிப்யதே*
*யத்வன்மந்த்ரபலோ பேத: க்ரீடன் ஸர்பைர்ன தம்ஸ்யதே*
*க்ரீடன்னபி ந லிப்யேத தத்வதிந்த்ரிய பன்னகை:*
*மந்த்ரௌஷதி பலைர்யத்யஜ்ஜீர்யதே பக்ஷிதம் விஷம்*
*தத்வத்ஸர்வாணி பாபானி ஜீர்யந்தே ஜ்ஞானின: க்ஷணாத்*

யோகி விரும்பியோ, விரும்பாமலோ செய்த கர்மாக்களை ஞானம் என்ற வாளால் துண்டு துண்டாக உடைக்கப்பட்டு, தூய்மையுடையவனாகி ஆத்ம சிந்தனை செய்வான். எரியும் நெருப்பு காய்ந்த குச்சிகளை மட்டுமல்ல பச்சை குச்சிகளையும் எரிக்கும். அதேபோல் ஞானமென்கிற அக்னி நல்ல மற்றும் தீய செயல்களை நொடியில் எரித்துவிடும். தாமரை இலைகளின் மீது இருக்கும் நீர், ஒட்டாமல் இருப்பதுபோல் ஞானிக்கு எந்த விதமான சம்சார விஷயங்களும் ஒட்டாது. சர்ப மந்திரத்தை அறிந்தவன் எப்போதும் பாம்புகளுடன் இருப்பான். ஆனால், அவை அவனை கடிக்காது. அப்படியே புலன்கள் என்கிற பாம்புகள் ஞானிகளை ஒன்றும் செய்ய முடியாது. விஷத்தை உண்பவன் மந்திரத்தால் அல்லது மருந்தின் சக்தியால் விஷத்தை அகற்றுவான். அவ்வாறே ஞானியினுடைய பாவங்களெல்லாம் நொடியில் எரிக்கப்படும் என்று பொருள்.

இந்த சுவேதாச்வதரோபநிஷத்தில் பிரதமாத்யாய பாஷ்யத்தில் (பக்–1133–1135) சில புராண சுலோகங்கள்,

*தர்மாதர்மௌ ஜன்மம்ருத்யு ஸுகது:கேஷு கல்பனா*
*வர்ணாச்ரமாஸ்ததா வாஸ: ஸ்வர்கோ நரக ஏவ ச*

என்கிற சுலோகத்துடன் துவங்கி –

*கௌமாரதாருண்ய ஜராவியோக ஸம்யோகபோகானசனவ்ரதானி*
*இதீதமீத்ருக்விதயம் நிதாய தூஷ்ணீமாஸீன: ஸுமதிம் விவித்தி*

**"பிரம்ம சத்தியம், ஜகன் மித்யா"** என்ற வேதாந்த சித்தாந்தத்தை உறுதிப்படுத்தினார் ஸ்ரீபகவத்பாதர் அவர்கள். தர்மம் – அதர்மம், பிறப்பு– இறப்பு, சுகம் – துன்பம், வர்ணாச்ரமங்கள், சுவர்கம் – நரகம் ஆகியவை எந்த அம்சங்களும் யோகிக்குப் பொருந்தாது. குழந்தைப் பருவம், இளமை, முதுமை, இணைதல், வியோகம், போகங்கள், உண்ணாவிரதம், விரதங்கள் அனைத்தும் இயற்கை நிகழ்வுகள் என்று நினைத்த யோகி அமைதியாக இருப்பான். (இப்போது கிடைக்கும் புராண புத்தகங்களில் இந்த சுலோகங்கள் காணப்படவில்லை.)

இப்படியே இந்த சித்தாந்தத்திற்கு அனுகூலமான விஷ்ணுதர்மபுராணத்தில்.

*அனாதிஸம்பந்தவத்யா க்ஷேத்ரஜ்ஞோऽயமவித்யயா*
*யுக்த: பச்யதி பேதேன ப்ரஹ்ம தத்த்வாத்மனி ஸ்திதம்* [1]

என்கிற சுலோகத்தோடு ஆரம்பித்து (பக்–1136–1137).

*ஆத்மா க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞோ ஹி ஸம்யுக்த: ப்ராக்ருதைர்குணை:*
*தைரேவ விகத: சுத்த: பரமாத்மா நிகத்யதே* [2]

முதலான 14 சுலோகங்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டன. சம்சாரி காலம்காலமாக தன்னுள்ளே புதைந்து கிடைக்கும் அவித்தியையாலே ஜீவ – பிரம்மாக்களை வேறுபாட்டுடன் பார்க்கின்றான். க்ஷேத்ரஞ்ஜன் என்கிற பேரையுடைய ஜீவன் லௌகீக வாசனைகளுடன் இருப்பான். அவன் அப்படிப்பட்ட வாசனைகளுக்குத் தூரமானால்தான் பரமாத்மா ஆவான் என்று இந்த சுலோகங்களின் பொருள். அதன் பிறகு இதே ஜகன்மித்ய தத்வத்திற்கு தரநிலையாக விஷ்ணுபுராணத்தில்

*பரமாத்மா த்வமே வைகோ நான்யோऽஸ்தி ஜகத: பதே*
*தவைஷ மஹிமா யேன வ்யாப்தமேதச்சராசரம்* [3]

இந்த சுலோகம் முதலாக (பக்–1138–1142)

*இதீரிதஸ்தேன ஸ ராஜவர்யஸ்தத்யாஜ பரமார்தத்ருஷ்டி:*
*ஸ சாபி ஜாதி ஸ்மரணாப்தபோதஸ்தத்ரைவ ஜன்மன்ய பவர்கமாப* [4]

30 சுலோகங்கள் வரை உதாரணமாகக் காட்டினார். "ஓ ! ஜகத்ரக்ஷகா! நீ ஒருவன் மட்டுமே பரமாத்மா. உன்னைக் காட்டிலும் மேற்பட்டது எதுவும் இல்லை. இந்த சராசரமயமான உலகம் உங்கள் மகிமையால் நிறைந்துள்ளது. இது போன்ற அவதூத சொற்களால் ஸௌவீர தேசத்தின் மன்னன் ஆழ்நிலை தரிசனத்தைப் பெற்று ஜீவேச்வரர்களின் பேதபுத்தியை (பாகுபாட்டை)த் துறந்தான். அவனுடன் பண்டிதனும் கூட தத்துவ ஞானத்தால் முக்தியை அடைந்தான் என்பது

1. விஷ்ணு புராணம் 96-13
2. விஷ்ணு புராணம் 100-61
3. விஷ்ணு புராணம் 1-4-38
4. விஷ்ணு புராணம் 2-16-24

வரலாறு. இப்படியே லிங்கபுராணத்தில் 5 சுலோகங்களுடன் பராசரனாலே ஓதப்பட்ட 8 சுலோகங்களையும் பகவத்பாதர் காட்டினார்கள் (பக்.1142–1144)

முழுதும் ஒற்றுமையைக் காண வேண்டும். பேதபுத்தி தகாதென்று நிரூபிக்கத் தயாராக இருந்த ஸ்ரீசங்கரர் இதற்கு சான்றாக விஷ்ணு புராணத்தில் உள்ள வசனங்கள் எடுத்துக்கொண்டார்.

*யதேதத்த்ரு ஸ்யதே மூர்தமேதத் ஜ்ஞானாத்மனஸ்தவ*
*ப்ராந்திஜ்ஞானேன பஸ்யந்தி ஜகத்ரூபமயோகின:* [1]

*யே து ஜ்ஞானவித: சுத்தசேதஸஸ்தேऽகிலம் ஜகத்*
*ஜ்ஞானாத்மகம் ப்ரபஸ்யந்தி த்வத்ரூபம் பாரமேச்வரம்* [2]

*நிதாகோऽப்யுபதேசேன தேனாத்வைதபரோऽபவத்* [3]

*ஸர்வபூதான்யசேஷண ததர்ச ஸ ததாத்மன:*
*ததா ப்ரஹ்ம ததோ முக்திமவாப பரமாம் த்விஜ:* [4]

“இந்த முழு உலகமும் உங்கள் ஞானத்தின் வடிவமே. அறிவில்லாதவர்கள் இதனை உலகமாக நினைக்கிறார்கள். ஞானிகள் மட்டும் ஞானத்தின் வடிவமாக உன் வடிவமாக எண்ணுகிறார்கள். இந்தவிதமான உபதேசங்களால் நிதாகன் என்கிறவன் எல்லா உயிரினங்களையும் பரமாத்மாவாக நினைத்தான். இவ்வாறாக அவனுக்கு பிரம்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டது. எல்லாவற்றையும் ஆத்மாவின் வடிவமாக அறிந்து ஆத்மாவைக்காட்டிலும் மற்றது ஏதும் இல்லை – என்கிற அத்வைத கருத்தை அறிந்தவன் “பிரம்மபூதன்” என்று வேதசாத்திரங்கள் வலியுறுத்துகின்றன.

பகவான் ஒருவனே. அவனே பிரம்மா – விஷ்ணு – மகேச்வரன் என்கிற பெயர்களால் அழைக்கப்படுகிறான் என்று தெரியப்படுத்தும் விஷ்ணுபுராண வசனம் இந்த ச்வேதாச்வதரோபநிஷத் பாஷ்யத்தில் கீழ் இவ்வாறு உள்ளது (பக்–1166)

*ஸர்கஸ்தித்யந்தகரிணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம்*
*ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவானேக ஏவ ஜனார்தன:* [5]

திருப்தி ஒன்பது விதமாக உள்ளதென்றும், லௌகீக விஷயங்கள் மனிதனை ஆசைகளின் மீது திசை திருப்புமென்றும், போகங்களுக்குப் பழக்கப்பட்டால் திருப்தி எவ்விதத்திலும் இருக்காதென்றும், ஆசைகளை அடக்க வேண்டும் என்றும் ஸ்ரீமத்பாகவதம் கூட தெரியப்படுத்துகிறதென்று ஸ்ரீபகவத்பாதரின் நோக்கம். (பக்–1176) பாகவத வசனம் –

*ந ஜாது காம: காமானா முபபோகேன சாம்யதி*
*ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவா பூய ஏவாபிவர்ததே* [6]

1. விஷ்ணு புராணம் 1-4-39
2. விஷ்ணுபுராணம் 1-4-41
3. விஷ்ணுபுராணம் 2-16-19
4. விஷ்ணு புராணம் 2-16-20
5. விஷ்ணுபுராணம் 1-2-66
6. ஸ்ரீமத்பாகவதம் 9-19-14

ஜீவாத்மா – பரமாத்மா வெவ்வேறல்ல என்று தெரியப்படுத்தும் விஷ்ணுபுராண வசனங்களை எடுத்துக்காட்டினார் ஸ்ரீ சங்கரர் (பக்–1184) –

*பஸ்யத்யாத்மானமன்யம் து யாவத்வை பரமாத்மன:*
*தாவத்ஸம்ப்ராம்யதே ஜந்துர்மோஹிதோ நிஜகர்மணா* [1]

*ஸங்க்ஷீணசேஷகர்மா து பரம் ப்ரஹ்ம ப்ரபச்யதி*
*அபேதேனாத்மன: சுத்தம் சுத்தத் வாதக்ஷயோ பவேத்* [2]

தானும் பரமாத்மாவும் ஒன்றல்ல, வேறு வேறு என்கிற பாகுபாடு இருக்கும் வரையிலும் ஜீவன் கர்மாக்களுக்கு வசப்படுகிறான். கர்ம பந்தங்கள் குறைந்தபோது பரபிரம்மஸ்வரூபமாகிறான். ராஜா! ஜீவாத்மா – பரமாத்மா என்கிற வேறுபாடு அறிவற்றதால் வரும். இந்த அஞ்ஞானம் குறையும் நாளில் ஜீவன் – பரமாத்மா ஆகிறான் – என்பது இந்த புராணங்களின் கூற்று.

இதற்கு விஷ்ணுபுராண வசனங்கள் இவ்விதமாக உள்ளன (பக்–1184,1192)

*விபேதஜனகேऽஜ்ஞானே நாசமாத்யந்திகம் கதே*
*ஆத்மனோ ப்ரஹ்மணோ பேத மஸந்தம் க: கரிஷ்யதி* [3]

*ஜ்ஞானாத்மகஸ்யாமலஸத்த்யராசேர பேததோஷஸ்ய ஸதா ஸ்புடஸ்ய*
*கிம் வா ஜகத்யஸ்தி ஸமஸ்தபும்ஸாம ஜ்ஞாதமஸ்யாஸ்தி ஹ்ருதி ஸ்திதஸ்ய* [4]

ஜீவாத்மா – பரமாத்மா என்கிற பேத புத்திக்குக் காரணமான அஜ்ஞானம் நீங்கும் நாளில் இந்த வேறுபாடுகளுக்கு வாய்ப்பு இருக்காது என்பது இந்த வசனங்களின் பொருளாகும்.

தியானம் மற்றும் ஞானத்தின் பலனை விவரிக்கும் பொழுது சங்கரர் சிவதர்மோத்தர புராண வசனத்தை சான்றாகக் காட்டினார் (பக்–1204)

*த்யானாதைஸ்வர்யமதுலம் ஐஸ்வர்யாத் ஸுகமுத்தமம்*
*ஜ்ஞானேன தத்பரித்யஜ்ய விதேஹோ முக்திமாப்னுயாத்*

தியானத்தால் நிறைந்த செல்வம், அதனால் சிறந்த லௌகீக இன்பங்கள் கிடைக்கும். ஆனால், ஞானத்தினால் உடலின் மீது அபிமானம் விலகி மோக்ஷம் வருமென்பதும் இதன்பொருளாகும் (தற்போது கிடைக்கும் புராணங்களில் இந்த சுலோகம் காணப்படுவதில்லை.)

யோகி தன் ஸ்வரூபத்தை முழுமையாக எப்பொழுது உணர்கிறானோ, அப்பொழுதே அவன் ஜீவன் முக்தனாவான் என்கிற பொருளை தெரியப்படுத்தும் பிரம்மபுராண வசனங்களை ஆதாரமாகக் காட்டினார் (பக்–1206)

---

1. விஷ்ணு புராணம் 96-14
2. விஷ்ணு தர்ம புராணம் 96-15
3. விஷ்ணு புராணம் 6-7-96
4. விஷ்ணு புராணம் 5-7-32

*யஸ்மின் காலே ஸ்வமாத்மானம் யோகீ ஜானாதி கேவலம்*
*தஸ்மாத்காலாத் ஸமாரப்ய ஜீவன்முக்தோ பவேதஸௌ*
*மோக்ஷஸ்ய நைவ கின்சித் ஸ்யாதன்யத்ர கமனம் க்வசித்*
*ஸ்தானம் பரார்த்யமபரம் யத்ர கச்சந்தி யோகின:*
*அஜ்ஞானபந்தபேதஸ்து மோக்ஷா ப்ரஹ்மலயஸ்த்விதி*

யோகி எப்பொழுது ஆத்மாவை தூய்மையானதாக உணர்கிறானோ அந்த வேளையிலிருந்து அவன் ஜீவன் முக்தனாவான். உயர்ந்த இடத்தில் இருந்த யோகிக்கு மோக்ஷத்தைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானம் ஏதும் இருக்காது. அறிவின்மையால் ஏற்பட்ட பந்தங்களை நீக்கி பிரம்மத்தில் மூழ்குவதே முக்தி என்பது இதன் உட்பொருள் (தற்போது கிடைக்கும் புராணங்களில் இந்த சுலோகங்கள் காணப்படுவதில்லை.)

ஜீவன் முக்தனின் வடிவினை லிங்கபுராணம் இவ்வாறு குறிப்பிடுகின்றது (பக்–1206)

*இஹ லோகே பரே சைவ கர்தவ்யம் நாஸ்தி தஸ்ய வை* [1]

*ஜீவன் முக்தோ யதஸ்தஸ்மாத் பிரஹ்மவித் பரமார்தத:* [2]

இவ்வுலகிலும், பிற லோகங்களிலும் யாருக்கு கடமை இருக்காதோ அவன்தான் ஜீவமுக்தன். அவனே பிரம்ம ஜ்ஞானி, சிவதர்மோத்தர புராணமும் கூட இப்படியே வலியுறுத்துகிறது (பக்–1206)

*வான்சாத்யயோSபி கர்தவ்யம் கிஞ்சிதஸ்ய ந வித்யதே*
*இஹைவ ஸ விமுக்த: ஸ்யாத் ஸம்பூர்ண: ஸமதர்சன:*

ஏதாவது ஆசைகளிருந்தால் அவை எல்லாம் நிறைவேறின பிறகு யோகிக்கு எந்த கடமையும் இல்லை. எனவே அவன் பரிபூர்ணனாய் மோக்ஷத்துக்கு தகுதியுடையவனாவான் என்பது இதன் பொருள். (தற்போது கிடைக்கும் புராண சுலோகங்களில் இது காணப்படுவதில்லை.

யோகிகளினுடைய உள்கருத்தை வர்ணித்த சிவதர்மோத்தர புராண வசனங்களை ஸ்ரீசங்கரர் கூறுகிறார். (பக்.1209)

*சிவமாத்மனி பச்யந்தி ப்ரதிமாசு ந யோகின:*
*ஆத்மஸ்தம் ய: பரித்யஜ்ய பஹி:ஸ்தம் பஜதே சிவம்*
*ஹஸ்தஸ்தம் பிண்ட முத்ஸ்ருஜ்ய விஹ்யோத்கூர்பரமாத்மன:*
*ஸர்வத்ராவஸ்திதம் சாந்தம் ந பச்யந்தீஹ சங்கரம்*
*ஜ்ஞானசக்ஷுர் விஹீசினத்வாதந்த: சூர்யம் யதோதிதம்*
*ய: பச்யேத்ஸர்வகம் சாந்தம் தஸ்யாத் யாத் மஸ்தித: சிவ:*

1. லிங்க புராணம் 1-86-106
2. லிங்க புராணம் 1-86-107

*ஆத்மஸ்தம் யே ந பச்யந்தி தீர்தே மார்கந்தி தே சிவம்*
*ஆத்மஸ்தம் தீர்தமுத்ஸ்ருஜ்ய பஹிஸ்தீர்தாதி யோ வ்ரஜேத்*
*கரஸ்தம் ஸ மஹாரத்னம் த்யக்த்வா காசம் விமார்கதி*

யோகிகள் பரமாத்மாவை தரிசிப்பது சிலைகளில் அல்ல, ஆத்மாவில். தனக்குள் இருக்கும் பரமாத்மாவை விடுத்து தூரத்தில் உள்ளதை பரமாத்மா என்று நினைப்பவன் மூடன். குருடனால், உதிக்கும் சூரியனைப் பார்க்க இயலாது என்பது போல, எங்கும் நிறைந்த கடவுளை மூடனால் பார்க்க இயலாது. தங்களுக்குள் இருக்கும் பரமாத்மாவை தரிசிக்கும் பாக்கியம் இல்லாதவர்கள் தீர்த்த க்ஷேத்திரங்களில் அந்த பரமாத்மாவை தேடுகிறார்கள்.

கையில் இருக்கும் விலையுயர்ந்த ரத்தினத்தை விட்டு விட்டு தூரத்தில் இருக்கும் கண்ணாடித்துண்டை தேடுகிறார்கள். இது அறிவில்லாதவர்களின் இயல்பு என்பது இந்த சுலோகங்களின் பொருள். (தற்போது கிடைக்கும் புராண புத்தகங்களில் இந்த சுலோகங்கள் காணப்படுவதில்லை.)

சமாதி என்றால் என்ன? இந்த கேள்விக்கு விடையாக விஷ்ணுபுராணம் இப்படி கூறுகிறது. (பக்–1210).

*தஸ்யைவ கல்பனாஹீனஸ்வரூபக்ரஹணம் ஹி யத்*
*மனஸா த்யானனிஷ்பாத்யம் ஸமாதி: ஸோSபிதீயதே* [1]

தியானிப்பவன், தியானம், தியானிக்கப்படுவது – என்கிற வேறுபாடு பண்ணாமல் இந்த மூன்றிலும், நினைக்கப்படுவது (தியேயம்) என்கிற ஒரே நினைவு இருந்தால் அதையே "சமாதி" என்பார்கள் என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

பகவான் என்றால் "பகம்" உள்ளவன். "பகம்" என்றால் 1) நிறைந்த செல்வம் 2) தர்மம் 3) வெற்றி 4) செல்வம் 5) அறிவு 6) வைராக்யம் ஆகிய ஆறு அம்சங்களாகும். இந்த விஷயத்தை விஷ்ணுபுராணம் நமக்கு இப்படி கூறுகிறது. (பக்–1252)

*ஐஸ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ: ச்ரிய:*
*ஜ்ஞானவைராக்ய யோச்சைவ ஷண்ணாம் பக இதீரணா* [2]

"**கபிலோக்ரஜ**" என்கிற புராண வசனத்தை பின்தொடர்ந்து ஜ்ஞானயோகிகளில் முற்பட்டவன் கபிலன் என்று பகவத்பாதர் அவர்கள் சில சுலோகங்களை உதாரணமாகத் தந்தார். இவை எந்த புராணத்தில் இருப்பவை என தேடவேண்டி இருக்கிறது. இவ்வாறு ஸ்ரீசங்கரர் ச்வேதாச்வதரோபநிஷத்தில் பல புராண வசனங்களை நமக்களித்தார்.

---

1. விஷ்ணு புராணம் 6-7-92
2. விஷ்ணு புராணம் 6-5-74

ப்ருஹதாரண்யக உபநிஷத் – முதலத்யாயம் நான்காவது பிராமாணத்தில் ஆறாவது மந்திர பாஷ்யத்தில் *புராணே ச - ப்ரஹ்ம வ்ருக்ஷ: ஸனாதன:* என்னும் பத்தி உள்ளது (பக்–189). சம்சார வ்ருக்ஷ வர்ணனை கிரமத்திலே இவ்வாக்கியம் காணப்படுகிறது. இங்கே புராண பிராமாணியம் தெளிவாகிறது.

கர்மாவின் ஸ்வரூபம் அஞ்ஜானத்தால் நிறைந்தது. வித்யாஸ்வரூபம் ஞானத்தால் நிறைந்ததென்று வியாஸ மஹரிஷியின் வசனத்தை சிலர் கேட்காமலே கர்ம ஞானங்களின் பேதத்தை சில சுலோகங்களாலே கேள்வி பதில் வடிவில் பாஷ்யத்திலே விளக்கப்படுத்தினார்கள் (பக்–539–540). இந்த சுலோகங்கள் மஹாபாரதத்திலும் உள்ளன.

*யதிதம் வேதவசனம் குரு கர்ம த்யஜேதி ச*
*காம் கதிம் வித்யயா யாந்தி காம் ச கச்சந்தி கர்மணா* [1]

*ஏதத்வை ச்ரோது மிச்சாமி தத்பவான் ப்ர ப்ரவீது மே*
*ஏதாவன்யோன்ய வைரூப்யே வர்தேதே ப்ரதிகூலத:* [2]

*கர்மணா பத்யதே ஜந்துர்வித்யாச விமுச்யாதே*
*தஸ்மாத்கர்ம ந குர்வந்தி யதய: பாரதர்சின:* [3]

“கர்மாக்களை செய்” மற்றும் “கர்மாக்களை விடு” என்று வேதம் கூறுகிறது. கல்வியினால் என்ன வரும்? கர்மாவால் என்ன வரும்? இதனை அறிய நினைத்தேன், தயவு செய்து சொல். கர்மா மற்றும் ஞானம் இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் உடையவை. அதனால் தான் சந்தேகம் என்கிற கேள்வி. இந்த கேள்விக்கு பதில், கர்மாக்களால் ஜீவன் இந்த சம்சாரத்தில் பிணைக்கப் பட்டுள்ளான். ஞானத்தால் முக்தி பெறுகிறான். ஆகையாலேயே தொலைநோக்குப் பார்வையுள்ள மஹான்கள் கர்மாக்களை செய்வதில்லை என்பது இதன் பொருள்.

நான்காவது அத்தியாயம் 4வது பிராமாணத்தில் ஒன்பதாவது மந்திரபாஷ்யத்தில் (பக்–1073) சாந்திபர்வ சுலோகம்.

*அபுண்யபுண்யோபரமே யம் புனர்பவனிர்பயா:*
*சாந்தா: ஸன்ந்யாஸினோ யாந்தி தஸ்மை மோக்ஷாத்மனே நம:* [4]

பாவ புண்ணியங்கள் நீங்கின பிறகு மறுபிறவிக்கு பயப்படாதவர்களாய் எதிலும் மனநிம்மதியும், துறவும் அடைவார்களோ, அதுவே முக்தி, என்பது இதன் பொருள்.

நான்காவது அத்தியாயம் 5வது பிராம்மாணத்தில் (பக்–1153) சாந்தி பர்வ வசனம்.

*த்யாக ஏவ ஹி ஸர்வேஷா முக்தானமபி கர்மணாம்*
*வைராக்யம் புனரேதஸ்ய மோக்ஷஸ்ய பரமோSவதி:* [5]

---

1. மகாபாரதம் வன 2-70
2. மகாபாரதம் சாந்தி - 233-2
3. மகாபாரதம் சாந்தி 233-7
4. மகாபாரதம் சாந்தி - 47-36
5. மகாபாரதம் சாந்தி - 308-29

சாத்திரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்கள் அனைவற்றையும் விடவேண்டும். வைராக்கியமே முக்திக்கு வழி என்பது இதன் பொருள்.

சாந்தோக்ய உபநிஷத் – 5வது அத்தியாயத்தில் 10வது கண்ட பாஷ்யத்தில் (பக்–467) இவ்விதமாக உள்ளது – புராணங்கள் மற்றும் ஸ்ம்ருதிகளின்படி ஊர்த்வரேதஸ்ஸுக்களான நைஷ்டிக பிரம்மசாரிகளுக்கு ஸுர்ய ஸம்பந்தமான உயர்ந்த பாதை பிரஸித்தி உடையது.

*புராண ஸ்ம்ருதி ப்ராமாண்யா தூர்த்தவரேதஸாம்*
*ப்ரஹ்மசாரிணா முத்தரேணார் யம்ண: பந்தா: ப்ரசித்த:*

இங்கே சில பத்திகளுக்கு பின்வருமாறு உள்ளது. பௌராணிகர் இப்படி கூறுகிறார்கள்.
*ததா ச பௌராணிக:.............. இத்யாஹு:*

ஏழாவது அத்தியாயத்தில் 26வது கண்டத்தில் (பக்–761) ஸ்ரீ சங்கரர் இறைவனைப் பற்றி கூறும்போது விஷ்ணுபுராண சுலோகத்தை உதாரணமாகத் தந்தார்.

*உத்பத்திம் ப்ரளயம் சைவ பூதானாமாகதிம் கதிம்*
*வேத்தி வித்யாமவித்யாம் ச ஸ வாச்யோ பகவானிதி* [1]

பூதங்களின் உற்பத்தி, லயம், வருவது, போவது மற்றும் கல்வி, அக்கல்வியை அறிந்தவன் பகவான்.

இவ்விதமாக சில உபநிஷத்துக்களின் பாஷ்யத்தை ஆராயும் போது அவர்களின் கோட்பாடுகளுக்குத் தரமாக ஸ்ரீசங்கர பகவத்பாதர் முன்வைத்தார் என்பது தெளிவாகிறது.

## ஸ்ரீமத் பகவத்கீதா பாஷ்யத்தில் புராண வசனங்கள்

ஸ்ரீமத்பகவத்கீதை – மூன்றாவது அத்தியாயத்தில் 37 வது சுலோக பாஷ்யத்திலே விஷ்ணுபுராணத்தில் 2 சுலோகங்களை கிரஹித்தார். (பக்–102)

*ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ: ச்ரிய:*
*வைராக்யஸ்யாத மோக்ஷஸ்ய ஷண்ணாம் பக இதீரணா* [2]

“பக” சப்தத்தின் பொருளை விளக்கும் சுலோகமிது. பகவான் என்றால் செல்வம் உடையவன். பகமென்றால் 1) ஐச்வர்யம் 2) தர்மம் 3) வெற்றி 4) செல்வம் 5) ஞானம் 6) வைராக்கியம் என்கிற ஆறும் அடங்கியுள்ளவை என்பது இதன் பொருளாகும். இப்புராண ஆதாரத்தின்படி “பகவான்” என்கிற சப்தத்தின் விளக்கம் இப்படி உள்ளது.

*உத்பத்திம் ப்ரளயம் சைவ பூதானாமாகதிம் கதிம்*
*வேத்தி வித்யாமவித்யாம் ச ஸ வாச்யோ பகவானிதி* [3]

1. விஷ்ணுபுராணம் 6–5–78 2. விஷ்ணுபுராணம் 6–5–74 3. விஷ்ணுபுராணம் 6–5–78

பூதங்களின் உற்பத்தி, லயம், வருவது, போவது மற்றும் கல்வி, அக்கல்வியை அறிந்தவன் பகவான்.

இந்த இரண்டு சுலோகங்கள் ச்வேதாச்வதரோப நிஷத் பாஷ்யத்தில் கூட காணப்படுகிறது. ஆனால், முதல் சுலோகத்தில் சிறிய மாற்றம் உள்ளது.

15வது அத்தியாயத்தில் முதல் சுலோக பாஷ்யத்திலே புராணேச என்றும் 4 புராண சுலோகங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது, (பக்-365-366). 3 சுலோகங்கள் பிரம்மாண்ட புராணத்தில் காணப்படுகிறது. 4வது சுலோகம் சிறிய மாற்றத்துடன் மஹாபாரதத்தில் காணப்படுகிறது.

*அவ்யக்த மூலப்ரபவஸ்தஸ்யை வானுக்ரஹோத்தித:*
*புத்திஸ்கந்தமயச்சைவ இந்த்ரியாந்தர கோடர:* [1]

*மஹாபூதவிசாகச்ச விஷயை: பத்ரவாம்ஸ்ததா*
*தர்மாதர்மஸுபுஷ்பச்ச ஸுகது:கபலோ தய:* [2]

*ஆஜீவ்ய: ஸர்வபூதானாம் ப்ரஹ்மவ்ருக்ஷ: ஸனாதன:*
*ஏதத்ப்ரஹ்மவனம் சைவ ப்ரஹ்மாசரதி நித்யச:* [3]

*ஏதச்சித்வச பித்த்வா ச ஜ்ஞானேன பரமாஸினா*
*ததச்சாத் மரதிம் ப்ராப்ய தஸ்மான்னாவர்ததே புன:* [4]

ஸம்ஸார மரத்தை வர்ணித்த இந்த சுலோகங்களின் பொருள் "மறைமுக வடிவம் கொண்ட மூலத்திலிருந்து கருத்து பெறப்பட்டது, அதன் அனுக்கிரஹத்தினாலே வளர்ந்தது, தருமம்-அதருமம் என்கிற பூக்களை உடையது, இன்ப – துன்பங்கள் என்கிற பழங்களையுடையது, சகல பூதங்களை உஜ்ஜீவிக்கும்படியான சனாதன விருக்ஷமிது. இதையே பிரம்மவிருக்ஷம் என்பார்கள். இந்த மரத்தை ஜ்ஞான வாளாலே துளைக்கும் ஞானி ஆத்மாநந்தத்தை அடைந்து அங்கேயே இருப்பான்.

இவ்வாறு ஸ்ரீமத்பகவத்கீதாபாஷ்யத்தில் 3வது மற்றும் 15வது அத்தியாயங்களில் புராணவசனங்கள் காணப்படுகின்றது.

### பிரம்மஸூத்ர பாஷ்யத்தில் புராணவசனங்கள்

பிரம்மஸூத்ர பாஷ்யம் – இரண்டாவது அத்தியாயத்தின் முதல் அதிகரணத்திலே இந்த புராண வசனத்தை பகவத்பாதர் அவர்கள் மேற்கோளாகத் தந்தார் (பக்-434) வாயுபுராண சுலோகமிது.

*அதச்ச ஸங்க்ஷேபமிமம் ச்ருணுத்வம் நாராயண: ஸர்வமிதம் புராண:*
*ஸ ஸர்ககாலே ச கரோதி ஸர்வம் ஸம்ஹாரகாலே ச ததத்தி பூய:* [5]

---

1. பிரம்மாண்ட புராணம் 1-5-100
2. பிரம்மாண்ட புராணம் 1-5-101
3. பிரம்மாண்ட புராணம் 1-5-102
4. மகாபாரதம் அஸ்வமேத 47-14
5. வாயு புராணம் (பூர்வாத்தம்) 1-185

ஸனாதனனான ஸ்ரீமந்நாராயணன் அனைத்திலும் வியாபித்திருக்கிறான். அந்த மஹானே படைப்பவன் மற்றும் அழிப்பவன் என்பது இதன் பொருள்.

இதே அதிகரணத்தில் – "பௌராணிகர் இவ்விதமாகக் கூறுகிறார்கள்" (ததா சாஹு: பௌராணிகா:) என்றும் கீழ் சுலோகத்தை காட்டினார் (பக்–444) பிரம்மாண்ட புராண சுலோகமிது

*அசிந்த்யா: கலு யே பாவா: ந தாந்ஸ்தர்கேண யோஜயேத்*
*ப்ரக்ருதிப்ய: பரம் யச்ச ததஞ்சிந்த்யஸ்ய லக்ஷணம்* [1]

பிரம்ம பதார்த்தம் சப்த மூலமானது குதர்கத்திற்கு எட்டாதது. உபதேசத்தால் மட்டுமே தெரியத்தக்கது என்பது இதன் பொருள்.

இந்த சுலோகத்தை இந்த அதிகரணத்திலே மற்றொரு இடத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (பக்–476). ஆனால் இந்த வசனங்களை எந்த புராணத்திலிருந்து எடுத்தார் என்பது தெரியவில்லை.

இவ்விதமாக ஸ்ரீசங்கர பகவத்பாதர் தம் பிரஸ்தான திரய பாஷ்யத்தில் பல புராண வசனங்களை கொண்டு காட்டினார்.

ஒரு சிறிய விவாதம் – ஸ்ரீசங்கரர் அவர்கள் பாஷ்ய கிரந்தங்களிலே அந்தந்த சந்தர்பங்களைப் பொருத்து ச்ருதி, ஸ்மிருதி, புராண வசனங்களை எடுத்துக்காட்டினார். ச்ருதி, ஸ்மிருதி, புராண கிரந்தங்களிலேயே அல்லாமல் பல இடங்களிலே மஹா பாரதத்தின் சுலோகங்களையும் கூட சான்றுகளாகக் காட்டினார். மஹா பாரதம் இந்த மூன்றிலும் எந்த வகைக்கும் சேர்ந்ததல்ல. இதிஹாசமாக மட்டுமே விவஹாரத்தில் உள்ளது. பகவத்பாதர் அவர்களை "ச்ருதி – ஸ்ம்ருதி புராணானாமாலயம்" என்கின்றனரே தவிர 'இதிஹாசாலயம் எனக் கூறவில்லை. மஹாபாரத இதிஹாஸத்தில் உள்ள பல வசனங்களை சான்றாகக் காட்டியுள்ளார். ஆசாரியர் அவர்களை "இதிஹாசாலயம்" என்று விவகரிக்காமல் இருப்பது ஒரு குறை அல்லவா? என்கிற கேள்வி வரலாம்.

மேலே உள்ள கேள்விக்கு இரண்டு விதமான பதில்கள் உள்ளன. 1) ஸ்ரீசங்கரர் பல இடங்களில் மஹாபாரதத்தை ஸ்மிருதியாக வர்ணிக்கிறார். 2) ஒரு சப்தத்தை பயன்படுத்தப் படும்போது அதற்கு சம்பந்தப்பட்ட பொருளை நாம் உணர்கிறோம். இது அனைவருக்கும் அனுபவமே. ஆனால் அந்த சப்தத்தினால் மற்றொரு சப்தத்திற்கு சம்பந்தப்பட்ட பொருள் கூட விரும்பப்படும்போது "உபலக்ஷணத்தை" ஆச்ரயிப்பார்கள். இது சாத்திர சம்மதமாகும். "ஏகபதேன ததர்தான்யபதார்த கதனமுபல லக்ஷணம்" ஒரு சிறு உவமை – முற்றத்தில் அரிசியை உலர்த்தினேன். புறாவைச் சாப்பிட விடாதே என்று சொல்வது அவர்களின் நோக்கம், புறாக்கள் மட்டுமல்ல, மற்ற பறவைகளும். அல்லது விலங்குகள் கூட அவ்வாறே. இங்கும் "புராண"

1. பிரம்மாண்ட புராணம் 15–7

சப்தத்தினால் இதிஹாஸத்தையும் கூட கிரகிக்கும் விஷயத்தில் எந்த விதமான சந்தேகமும் தேவை இல்லை. புராணங்களின் முக்கியத்துவம் வியாசாதிகளால் எழுதப்பட்ட மஹாபாரதம் முதலான கிரந்தங்களுக்கும் கூட உள்ளது. எனவே *"இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுப ப்ருஹயேத்"* என்பது வசனம்.

இதனாலேயே "மஹாபாரதம்" ஆதாரமாக பகவத்பாதர் அவர்கள் நிகழ்த்திய சில சுலோகங்கள் இங்கு கொடுக்கப்படுகிறது.

**உபநிஷத் பாஷ்யத்திலே மகாபாரத வசனங்கள் :**

**ஈசாவாச்யோபநிஷத்** – மூன்றாவது மந்திர பாஷ்யத்தில் (பக்–30) சாந்தி பர்வோக்தி.

*த்வாவிமாவத பந்தானௌ யத்ர வேதா: ப்ரதிஷ்டிதா:*
*ப்ரவ்ருத்திலக்ஷணோ தர்மோ நிவ்ருத்தௌ ச சுபாஷித:* [1]

மனிதர்களின் முன்னேற்றத்திற்கு வேதங்கள் இரண்டு வழிகளைக் காட்டியுள்ளன. 1) பிரவிருத்தி தர்மம் 2) நிவ்ருத்தி தர்மம், ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் முதலிய அம்சங்களை பிரவிருத்தி தர்மம் உபதேசிக்கிறது. எப்படி இருக்கக் கூடாதோ, என்ன செய்யக் கூடாதோ முதலான அம்சங்களை உபதேசிப்பது நிவ்ருத்தி தர்மம். மஹாபாரத சாந்தி பர்வ வசனம் இது.

**கேனோபநிஷத்**

*பிரக்ஷாளநாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்சனம் வரம்* [2]

வனபர்வ வசனமிது (பக்–64)

கர்மாக்களைக் கடைபிடித்து, ஐயோ! இதைக் கடைப்பிடிக்காமல் ஜ்ஞானமார்க்கத்தைப் பற்றினால் நன்றாக இருக்குமே – என்கிற எண்ணத்துடன் துன்பப்படாமல் நேராக க்ஞான மார்க்கத்தையே பற்றுவது உத்தமம். சேறு மிதிப்பதேன்? காலை கழுவுவது ஏன்? என்பது இதன் பொருள்.

*கர்மணா பத்யதே ஜந்துர்வித்யயா ச விமுச்யதே*
*தஸ்மாத்கர்ம ந குர்வன்தி யதய: பாரதர்சின:* [3]

சாந்திபர்வத்தின் இந்த வசனம் கேனோபநிஷத்தில் உணர்த்தப்படுகிறது. (பக்–67) கர்மாக்களாலே ஜீவன் சம்சாரத்தில் பிணைக்கப்படுகிறான். ஞானத்தினால் முக்தனாவான். எனவே தொலைநோக்குப் பார்வையுள்ள மகான்கள் கர்மாக்களை செய்வதில்லை என்பது பொருள்.

*ஜ்ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத்பாபஸ்ய கர்மண:* [4]

1. மகாபாரதம் சாந்தி 233-6
2. மகாபாரதம் வன 2-47
3. மகாபாரதம் சாந்தி 233-7
4. மகாபாரதம் சாந்தி 197-8

சாந்திபர்வோக்தி. (பக்–191) செய்த பாபகர்மாக்கள் குறைந்தால் மட்டுமே ஜீவனுக்கு ஞானமுண்டாகும் என்பது இதன் பொருள்.

## பிரச்னோபநிஷத்

*“த்யஜேதேகம் குலஸ்யார்தே”* [1]

உத்யோக பர்வத்தில் ஓதப்பட்ட நியாயமிது (பக்–415)

வம்சத்தின் பிரதிஷ்டைக்காக தேவையானால் ஒருவரை விடவேணும். கிராமத்தின் நன்மைக்காக தன்னுடைய வம்சத்தை விடவேணும். தேசத்திற்காக கிராமத்தை விடவேணும். தனக்கு தேவையானால் இந்த மண்ணுலகத்தையே விடவேணும். இது இந்த சுலோகத்தின் கருத்து.

## முண்டகோபநிஷத்

*மநஸச்சேந்த்ரியாணாம் ச ஹ்யைகாக்ரியம் பரமம் தப:* [2]

சாந்திபர்வ சுலோகம். (பக்–533) மனதையும், புலன்களையும் அடக்குவதே சிறந்த தவம் என்பது இதன் பொருள்.

*சகுனீநாமிவாகாசே ஜலே வாநிசரஸ்ய ச*
*பதம் யதா ந த்ருஷ்யேத ததா ஜ்ஞானவதாம் கதி:* [3]

வானத்தே திரியும் பறவைகளின், நீர்வாழ் உயிரினங்களின் கால்தடங்கள் நமக்குத் தெரிவதில்லை. இவ்வாறே ஞானிகளின் போக்கினை நாம் பார்க்க முடியாது என்கிற பொருளை தெரியப்படுத்தும் இந்த வசனம் சாந்தி பர்வத்திலிருந்து கிரகித்தார் சங்கரர் (பக்–550)

## மாண்டூக்யோபநிஷத்

முண்டகோபநிஷத்திலே க்ரஹித்த சுலோகத்தினுடைய பொருள் சுமாராக மாண்டுக்யோபநிஷத்தில் இந்த கீழ் சுலோகத்திலேயும் காணப்படுகிறது. சிறு மாற்றங்களுடன் உள்ள இந்த சுலோகம் கூட சாந்திபர்வத்தில் உள்ளதே (பக்–800)

*ஸர்வ பூதாத்மபூதஸ்ய ஸர்வபூதஹிதஸ்ய ச*
*தேவா அபி மார்கே மஹ்யந்த்யபதஸ்ய பதைஷிண:* [4]

அனைத்து பூதங்களுக்கும் ஆன்மா போன்றவன், எல்லா உயிர்களுக்கும் நன்மை நினைக்கும் மகானின் வழிக்காக தேவர்கள் கூட வழித்தேடுகிறார்கள். வானத்தில் சுற்றித் திரியும் பறவைகளின் வழியைப் போல இந்த பாதை எளிதில் அறியப்படுவதில்லை.

---

1. மகாபாரதம் உத்யோக 37-16
2. மகாபாரதம் சாந்தி 242-4
3. மகாபாரதம் சாந்தி 174-19
4. மகாபாரதம் சாந்தி 254-32

**தைத்திரியோபநிஷத்** – சீக்ஷாவல்லீ நான்காவது அனுவாக பாஷ்யத்தில் (பக்–916) சாந்திபர்வத்தில் இக்கீழ் சுலோகம் எடுக்கப்பட்டது. இது கேனோபநிஷத்தில் கூட காட்டப்பட்டது.

*ஜ்ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத்பாபஸ்ய கர்மண:*
*யதாஉஉதர்சதலே ப்ரக்யே பச்யந்த்யாத்மனமாத்மனி* [1]

மனிதர்களின் பாவங்கள் தணிந்த பின்னரே ஞானம் உண்டாகிறது. கண்ணாடி சுத்தமாக இருந்தால் நம் முகம் நன்றாகத் தெரியும். இவ்வாறு தூய்மையான உள்ளுணர்வினால் மட்டுமே ஆத்மாவின் சாக்ஷாத்காரமாகும் என்பது இதன் பொருள்.

பிருகுவல்லியில் முதல் அனுவாகத்தில் (பக்–1076) சாந்தி பர்வத்தில் இந்த வசனம் கீழ் உள்ளபடி கேனோபநிஷத்திலும் கூட காட்டப்பட்டது.

*மனஸச்சேந்த்ரியாணாம் ச ஹ்யைகாக்ர்யம் பரமம் தப:*
*தஜ்ஜ்யாய: ஸர்வதர்மேப்ய: ஸ தர்ம: பர உச்யதே* [2]

மனதையும் புலன்களையும் அடக்குவதே சிறந்த தவம். அனைத்து தர்மங்களைக் காட்டில் இந்தப் புலன்களை அடக்குவதே சிறந்த தர்மம் என்பது இதன் பொருள்.

## ஸ்ரீமத் பகவத்கீதா பாஷ்யத்தில், மஹாபாரத வசனங்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை – இரண்டாவது அத்தியாயத்தில் (பக்–45) சாந்தி பர்வ வசனம்–

*த்வாவிமாவத பந்தானௌ யத்ர வேதா: ப்ரதிஷ்டிதா:*
*ப்ரவ்ருத்திலக்ஷணோ தர்மோ நிவ்ருத்தௌ சஸுபாஷித:* [3]

வேதங்கள் மனிதர்களின் முன்னேற்றத்திற்கு இரண்டு வழிகளை காட்டியுள்ளன. 1) பிரவிருத்தி தருமம் 2) நிவ்ருத்தி தர்மம். மனிதன் எப்படி இருக்கவேண்டும்? என்ன செய்ய வேண்டும்? முதலியவற்றை பிரவிருத்தி தர்மம் உபதேசிக்கிறது. எப்படி இருக்கலாகாதோ, என்ன செய்யக்கூடாதோ – முதலியவற்றை உபதேசிப்பது நிவ்ருத்தி தர்மம் என்பது இதன் பொருள் 13வது அத்தியாயத்தில் கூட இந்த சுலோகமுள்ளது.

இந்த அத்தியாயத்தில் ஸ்த்ரீபர்வ வசனம் (பக்–51).

*அதர்ச நாதாபதித: புனச் சாதர்சனம் கத:*
*நாஸௌ தவ ந தஸ்ய த்வம் வ்ருதா கா பரிதேவனா* [4]

புத்திரன் – நண்பர்கள் நாம் பிறப்பதற்கு முன்பே இருக்கிறார்கள். இருப்பினும் தோன்றவில்லை. பிறகு கூட தோன்றவில்லை. அவர்கள் உன்னுடையவர்கள் அல்ல. நீ அவர்களுடையவனல்ல. எனவே துக்கம் கூடாது (தகாது) என்பது இதன் பொருள்.

---

1. மகாபாரதம் சாந்தி 197–8
2. மகாபாரதம் சாந்தி 242–4
3. மகாபாரதம் சாந்தி 233–6
4. மகாபாரதம் சாந்தி 2–8

மூன்றாவது அத்தியாயத்தில் சாந்திபர்வ வசனம் (பக்–79).

*கர்மணா பத்யதே ஜந்துர்வித்யயா ச விமுச்யதே*
*தஸ்மாத்கர்ம ந குர்வஞ்தி யதய: பாரதர்சின:* [1]

கர்மாக்களினாலே ஜீவன் சம்சாரத்தில் இணைக்கப்படுகிறான். ஞானத்தினால் முக்தனாகிறான். எனவே தொலைநோக்குப் பார்வையுள்ள மகான்கள் சடங்குகளைச் செய்வதில்லை என்பது இதன் பொருள். இந்த அத்தியாயத்திலேயே (பக்–85) சாந்திபர்வத்தில் மற்றொரு வசனம்–

*ஜ்ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத் பாபஸ்ய கர்மண:* [2]

பாவங்கள் அடங்கிய பிறகே மனிதர்களுக்கு ஞானம் உண்டாகும் என்பது பொருள்.

ஆறாவது அத்தியாயத்தில் (பக்–173) சாந்தி பர்வத்தில் ஓதபட்டது.

*நைதாத்ருஷம் ப்ரஹ்மணஸ்யாஸ்தி வித்தம்*
*யதைகதா ஸமதா ஸத்யதா ச*
*சீலம் ஸ்திதிர்தண்டநிதானமார்ஜவம்*
*ததஸ்தச்சோபரம: க்ரியாப்ய:* [3]

சமத்வம், சத்தியம், நல் ஒழுக்கம், ஸ்திதி, அகிம்சை, நேராக இருக்கும் ஸ்வபாவம், கர்மாக்களை விடுவது இந்த அம்சங்களே பிராம்மணனுக்குச் செல்வம். இதற்கு மேற்பட்ட செல்வம் இருக்காதென்பது இதன் பொருள்.

ஆறாவது அத்தியாயத்தில் (பக்–174) மற்றொரு சாந்தி பர்வத்தில் ஓதப்பட்டது.

*காம! ஜானாமி தே மூலம் ஸங்கல்பாத்கில ஜாயஸே*
*ந த்வாம் ஸங்கல்பயிஷ்யாமி தேன மே ந பவிஷ்யஸி* [4]

ஆசைகளே! உன் மூலமாக எனக்குத் தெரியும். சங்கல்பமே ஆசைக்கு மூலமானது. நான் அந்த சங்கல்பத்தைச் செய்யமாட்டேன். ஆகையால் நீங்கள் என்னருகிலே வரமுடியாது என்பது பொருள்.

பன்னிரண்டாவது அத்தியாயத்தில் (பக்–296) சாந்தி பர்வ வசனம் –

*யேன கேனசிதாச்சன்னோயேன கேனாசிதாசித:*
*யத்ர க்வசன சாயீ ஸ்யாத்தம் தேவா ப்ரஹ்மணம் விது:* [5]

பிராம்மணன் என்றால் யார்? என்ற கேள்விக்கு பதில் இந்த சுலோகத்தின் பொருள் யாரோ ஒருவன் ஆடையளிப்பான், யாரே ஒருவன் உணவு தருவான். எங்கேயோ படுப்பான். தனக்கென்று

1. மகாபாரதம் சாந்தி 237-7
2. மகாபாரதம் சாந்தி 197-8
3. மகாபாரதம் சாந்தி 169-35
4. மகாபாரதம் சாந்தி 171-25
5. மகாபாரதம் சாந்தி 237-12

எதும் இருக்காது. இது போன்ற அம்சங்கள் உள்ளவனே பிராம்மணன் என்று தேவர்கள் கூறுகிறார்கள்.

பதின்மூன்றாவது அத்தியாய பாஷ்யத்தில் (பக்–301) சாந்திபர்வத்தில் ஓதப்பட்டது.

*சர்பான் குசாக்ராணி ததோதபானம் ஜ்ஞாத்வா மனுஷ்யா: பரிவர்ஜயந்தி*
*அக்ஞானதஸ்தத்ர பதந்தி கேசித் ஜ்ஞானே பலம் பச்ய ததா விசிஷ்டம்* [1]

பாம்பு, முள், குளம் இவற்றைக் கண்டால் மனிதன் கவனமாக இருக்கிறான். தப்பித்து விடுகிறான். தெரியாதவன் காயப்படுவான். இப்படியே அறிவு உடையவன் முக்தியின் பலனை அடைவான் என்பது பொருள்.

**பிரம்ம ஸூத்திர பாஷ்யத்தில் மஹாபாரத வசனங்கள்**

**1. "அந்தஸ்தத்தர்மோபதேசாத்"** *(1–1–20)* ஸூத்திர பாஷ்யத்தில் (பக்–196) சாந்தி பர்வ சுலோகம்

*மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மான் பஸ்யசி நாரத*
*ஸர்வபூதகுணைர்யுக்தம் மைவம் மாம் ஜ்ஞாதுமர்ஹஸி* [2]

ஓ நாரதா! நான் மாயையை உருவாக்கிவிட்டேன். நீ என்னை பார்க்க முடியும். அனைத்து பூதங்களின் குணங்களோடு இருக்கின்ற என்னை நீ அறிய முடியாது என்பது இதன் பொருள்.

இந்த சுலோகம் "தர்சயதி சாதோ அபி ஸ்ம்ர்யதே" *(3–2–17)* சூத்திரங்கள் (பக்.710) கூட உள்ளது.

**2. "சப்தாதேவ பிரமித:"** *(1–3–24)* சூத்ரபாஷ்யம் (பக்–315) வனபர்வத சுலோகம்.

*அத ஸத்யவத: காயாத் பாசபத்தம் வசம் கதம்*
*அங்குஷ்ட மாத்ரம் புருஷம் நிச்சகர்ஷ யமோ பலாத்* [3]

சத்யவானின் உடலிலிருந்து பாசத்தை நீக்கி கட்டைவிரல் அளவு உள்ள ஜீவனை எமன் இழுத்துச் செல்கிறான் என்பது பொருள்.

**3. "விரோத: கர்மணீதி சேத்"** *(1–3–27)* ஸூத்திர பாஷ்யத்தில் (பக்–320) சாந்தி பர்வ வசனம்.

*ஆத்மனோ வை சரீராணி பஹூனி பரதர்ஷப* [4]

*யோகி குர்யாத்பலம் ப்ராப்ய தைச்ச ஸர்வைர்மஹீம் சரேத்*
*ப்ராப்னுயாத்விஷயான் கைச்சித் கைச்சிதுக்ரம் தபச்சரேத்* [5]

---

1. மகாபாரதம் சாந்தி 194-14
2. மகாபாரதம் சாந்தி 326-43
3. மகாபாரதம் வன 281-16
4. மகாபாரதம் சாந்தி 289-26
5. மகாபாரதம் சாந்தி 289-27

ஓ பரதச்ரேஷ்டனே! ஆத்மாவுக்கு பல உடல்கள் இருக்கும். இந்த உடலைக் கொண்டு யோகி தனது சக்தியால் உக்ரமான தவம் செய்யமுடியுமென்பது பொருள்.

**4. "சப்த இதிசேன்ன"** *(1–3–28)* ஸூத்திர பாஷ்யத்தில் (பக்–322) சாந்தி பர்வ வசனம்

*அநாதி நிதனா நித்யா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம் புவா* [1] வாக்கு ஆதி, அந்தம் இல்லாதது. பிரம்மா உருவாக்கின இந்த வாக்கு முன்பு வேத ரூபமாகத் தோன்றியது. வேதத்தை ஆதாரமாகக் கொண்டே எல்லா தருமங்களும் வந்ததென்பது பொருள்.

**5. "ஸ்ம்ருத்யநவகாச தோஷ ப்ரஸங்க இதி சேத்"** *(2–1–1)* ஸூத்திர பாஷ்ய (பக்–435) சாந்திபர்வோக்தி.

*பஹூனாம் புருஷாணாம் ஹி யதைகா யோனிருச்யதே*
*ததா தம் புருஷம் விஷ்வமாக்யாஸ்யாமி குணாதிகம்* [2]

எல்லா மனிதர்களின் படைப்புக்கு மூலமானதொன்றே. குணங்களால் சிறந்தவனான அப்படிப்பட்ட புருஷனை விவரிக்கிறேன் என்பது இதன் பொருள்.

**6. "விபர்யயேணது க்ரமோஉத உப பத்யதேச"** *(2–3–14)* ஸூத்திர பாஷ்யத்தில் (பக்–597) சாந்தி பர்வ வசனம்.

*ஜகத்ப்ரதிஷ்டா தேவர்ஷே! ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே*
*ஜ்யோதிஷ்யாப: ப்ரலீயஸ்தே ஜ்யோதிர்வாயௌ ப்ரலீயதே* [3]

ஓ தேவரிஷி! பூமியில் ஜலம், அக்னியில் ஜலம், காற்றில் அக்னி, லீனமாகிறது. இது விபரீதமானது என்பது இதன் பொருள்.

**7. "தத்குண ஸாரத்வாத்து தத்வ்யபதேச: ப்ராஜ்ஞவத்"** *(2–3–29)* முதலிய ஸூத்திர பாஷ்யத்திலே (பக்–609) சாந்தி பர்வ வசனம்

*உபலப்யாப்ஸு சேத்கந்தம் கேசித் ப்ரூயுரனைபுணா:*
*வ்ருதி வ்யாமேவ தம் வித்யாத் அபோ வாயம் ச சஞ்ச்ரிதம்* [4]

பூமியில் நீர், வாயு கிடைத்தபோது, நீரினில் மணம் கிடைப்பது பெரியவிஷயமாகாது என்பது இதன் பொருள்.

**8. "க்ருதாத்யயேஉனுசயவான்"** *(3–1–8)* ஸூத்திர பாஷ்யத்தில் (பக்–670) சாந்தி பர்வோக்தி

*கதாசித் ஸுக்ருதம் கர்ம கூடஸ்தமிஹ திஷ்டதி*
*மஜ்ஜமானஸ்ய ஸம்ஸாரேயாவ து:காத் விமுச்யதே* [5]

1. மகாபாரதம் சாந்தி 224-55
2. மகாபாரதம் சாந்தி 338-25
3. மகாபாரதம் சாந்தி 326-28
4. மகாபாரதம் சாந்தி 224-40
5. மகாபாரதம் சாந்தி 338-25

ஒருமுறை செய்த புண்ணியம் இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மை மீட்டு விடும் என்பது பொருள்.

**9. "அபிச ஸம்ராதனே ப்ரத்யக்ஷானுமனாப்யாம்"** *(3-2-24)* ஸூத்திர பாஷ்யத்தில் *(பக்-722)* சாந்தி பர்வ வசனம்.

*யம் வினித்ரா ஜிதஸ்வாஸா: ஸந்துஷ்டா: ஸம்யதேந்த்ரியா:*
*ஜ்யோதி: பச்யந்தி யுஞ்ஜானாஸ்தஸ்மை யோகாத்மனே நம:*
*யோகினஸ்தம் ப்ரபஸ்யந்தி பகவந்தம் ஸனாதனம்* [1]

உறக்கம், காற்று, புலன்களை வென்றவர்கள் மற்றும் ஆனந்தமாக இருப்பவர்கள் அந்தராத்மாவை தரிசிக்கலாம். அத்தகைய யோகாத்மாவுக்கு நமஸ்காரம். யோகிகள் அப்படிப்பட்ட ஸனாதனனான பகவானை தரிசிக்கலாம் என்பது இதன் பொருள்.

**10. "ஸர்வாபேக்ஷாச யஜ்ஞாதி ச்ருதே ரச்வவத்"** *(3-4-26)* ஸூத்திர பாஷ்யத்தில் *(பக்-597)* சாந்தி பர்வோக்தி.

*கஷாயபக்தி: கர்மாணி ஜ்ஞானம் து பரமா கதி:*
*கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞானம் ப்ரவர்ததே* [2]

எல்லா கர்மங்களும் முதிர்ச்சி அடையும்போது ஜ்ஞானம் உண்டாகிறது என்பது இதன் பொருள். இவ்வாறு பிரஸ்தான திரய பாஷ்யத்தில் வழங்கப்பட்ட மஹாபாரத வசனங்கள் இதுவரை குறிப்பிடப்பட்டது.

ஸ்ரீ சங்கரரின் பிரஸ்தான திரய பாஷ்யத்தில் எனக்கு புலப்படும் வியாச மகர்ஷியின் புராண வசனங்கள் அல்லது மஹாபாரத வசனங்களை மட்டுமே சான்றாகக் காட்டப்பட்டது.

மேலும் வசனங்களும் உள்ளன. ஆனால் இதற்குமேலும் வியாசரின் வசனங்களை விவரித்துக் கூறினால் இக்கட்டுரை பெரியதாகிவிடும் என்கிற பயத்தினால் முடிக்க விரும்புகிறேன்.

புராணமென்கிற சொல்லுக்கு தங்களுக்குத் தோன்றின விதமாக சாத்திர சம்மதம் ஆகாத பொருள் கூறுவது நியாயம் ஆகாது. இவ்வாறே வியாச மஹஷிரி விஷயத்திலோ அல்லது சங்கர பகவத்பாதர் அவர்களின் விஷயத்திலோ தாங்களுக்கு பூஜ்ய பாவமுள்ளது.

ஆனால் வியாசரால் எழுதப்பட்ட புராணங்களில் எங்களுக்கு சம்மதமில்லை என்கிற நோக்கம் மன்னிக்க முடியாதது. குற்றமும் கூட. கொஞ்சம் அறிவாலே தாங்கள் எல்லாம்

1. மகாபாரதம் சாந்தி 47-35

2. மகாபாரதம் சாந்தி 262-36

அறிந்தவர்களாக நினைக்குமவர்களை பிரம்மதேவனாலும் வற்புறுத்த முடியாது என்று பர்த்ருஹரி கூறிய –

***அஜ்ஞ: சுகமாராத்ய: சுகதரமாராத்யதே விசேஷஜ்ஞ:***
***ஜ்ஞானலவதுர்விதக்தம் ப்ரஹ்மாபி நாம் ந ரஞ்ஜயதி*** [1]

என்கிற சுலோகம் அடிக்கடி நினைவுக்கு வருகிறது. அதனால் புராண இதிஹாஸ வசனங்கள் எப்போதும் நமக்கு ஆதரிக்கத்தக்கது. இந்த விஷயத்தில் மற்றொரு யோசனை பொருத்தமற்றது.

******

1. மகாபாரதம் 279-17

## திருமலை நடைபாதையில்
## அருளும் ஸ்ரீஆஞ்ஜநேயஸ்வாமி



## வேங்கடாத்ரியில் ஸ்ரீவராஹ ஸ்வாமியை அஞ்ஜனாதேவி கேசரி தம்பதியர் தரிசித்தல்



# அத்தியாயம் - 3

# 3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - சான்றுகள்

**தெலுங்கு மூலம்**
**டாக்டர். சமுத்ராால வேங்கட ரங்கா - ராமாநுஜாச்சார்யுலு**

**தமிழாக்கம்**
**திருமதி வி. உஷா**

திருமலையையும், திருவேங்கடவனையும் அவரின் வைபவங்களையும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள நூல்கள் மூன்று. அவை 1. வேங்கடாசல மாஹாத்மியம், 2. வேங்கடாசல இதிஹாச மாலை, 3. திருமலை ஒழுகு ஆகும். முதலில் கூறப்பட்ட நூலில் புராணங்களின் கதைகள் உள்ளன. இவ்வெளியீட்டில் உள்ள சில புராணக் கதைகள் பகவத் இராமாநுஜரால் வெளிப்படுத்தப்பட்டது. 1000 வருடங்களுக்கு முன் திருமலையில் ஸ்வாமி விஷயத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன. அப்பொழுது திருமலையில் எழுந்தருளிய மூர்த்தி ஸ்ரீநிவாசரே என்று உறுதிப்படுத்தப் புராண ஆதாரங்களைத் தேடினர். பகவத்ராமாநுஜர் வேதங்களையும் புராணங்களையும் ஆராயும் போது பல விஷயங்கள் புராணங்களில் கிடைத்தன.

இராமாநுஜரின் வாதத்தையும், எதிர்வாதிகளின் வாதங்களையும், அவர் கூறிய புராண ஆதாரங்களைப் பற்றியும் "வேங்கடாசல இதிகாச மாலை" என்ற நூலில் இராமாநுஜரின் சீடரான அனந்தாழ்வான் சிறப்பாக எழுதியுள்ளார். இராமாநுஜருக்கு கிடைக்கப்பெற்ற புராண ஆதாரங்கள் இதோ.

1. வாமன புராணம் 2. வராஹ புராணம் 3. பத்ம புராணம் 4. கருட புராணம் 5. பிரம்மாண்ட புராணம் 6. பவிஷ்யோத்தர புராணம் 7. பிரம்ம புராணம் 8. ஸ்காந்த புராணம் 9. மார்க்கண்டேய புராணம் 10. ஹரிவம்சத்தில் உள்ள சேஷதர்மம் ஆகியவை ஆகும். இவையனைத்தும் இதிகாச மாலையில் விரிவான கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. புராணங்களின் மூலம் பல விஷயங்களை இராமாநுஜர் யாதவ ராஜ சபையில் நிரூபித்தார். மேலும் திருமலையில் எழுந்தருளியுள்ள ஸ்வாமி ஸ்ரீநிவாசரே என்று உறுதிப்படுத்தினார்.

ஆனால் இங்கே ஒரு வினா எழுந்தது. ஒரு வேளை புராணங்கள் இல்லையென்றால் திருமலையில் எழுந்தருளியது ஸ்ரீநிவாசரே என்று தெரியாதா?"அராயிகாணே" இந்த வேதமந்திரமே அந்த விஷயத்தை நிரூபிக்கும் அல்லவா! இது உண்மை. ருக்வேதம் தசம மண்டலத்தில் உள்ள "அராயிகாணே" என்ற மந்திரம் ஸ்ரீநிவாசனுக்கே உரியது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இம்மந்திரம் ஸ்ரீநிவாசனுக்கே உரியது என்பதற்கு என்ன ஆதாரம்? என்ற கேள்வியும் உள்ளது. இதனை உறுதிபடுத்தப் புராணங்களை ஆராய்வதே நன்று. எவ்வாறென்றால் இந்த மந்திரத்தை முதன் முதலில் பயன்படுத்தியவை புராணங்களே என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

*ஆராயிகாணே விகடே கிரிம் கச்சேதி தம் விது:*
*ஏவம் வேதமய: சாக்ஷாத் கிரீம்ந்த்ர: பன்னகாசல:* [1]

என்று "பவிஷ்யோத்தர வசனம்" மந்திரத்தின் பொருளை விவரிக்கிறது. வாமன மற்றும் பல புராணங்களின் மேற்கோள்களை "வேங்கடாசல" விஷயத்தில் ஏற்றுக் கொள்ளாவிட்டால், இங்கே எந்த ஆகம சாம்பிரதாயத்தின்படி உள்ளதோ என்று நமக்குத் தெரியாது. ஆனால் புராணங்கள் இங்கு வைகானசாகம முறைப்படி உள்ளது என்று சொல்லியுள்ளன.

*கன்யாமாசங்கதே பாணௌ த்வதீயாயாம் ஜகத்பதே:*
*த்வஜாரோஹணமாதாய சாங்குரார்பணமேவ ச,*
*வைகாசமுனி ஸ்ரேஷ்டை: பூஜா மந்த்ரை: ப்ரகல்பிதா* [2]

இந்த சுலோகத்தில் வைகானசாகமம் மிகவும் பழமையானது என்று விவரித்துள்ளது.

இந்த புராணங்களின் உண்மைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் திருமலையில் எழுந்தருளியுள்ளது ஸ்ரீநிவாசன் என்றும், பத்மாவதி தேவியுடன் பரிணயம் ஆடியது ஸ்ரீநிவாசன் என்றும் உறுதிப்படுத்துவது மிகக் கடினம். இவற்றையெல்லாம் உறுதிப்படுத்த வேண்டுமென்றால் புராணங்களை விட சிறந்த ஆதாரம் வேறெதுவும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

பகவத் இராமாநுஜர் எவ்வளவோ கஷ்டப்பட்டு, திருமலை ஸ்ரீநிவாசனின் மஹாத்மியத்தை நிரூபித்தார். புராணச் செய்திகளையெல்லாம் ஒன்று சேர்த்து யாதவ ராஜாவின் சபையில் வெளிப்படுத்தினார். இவ்விஷயங்கள் எல்லாம் இதிகாசமாலை என்ற நூலில் அனந்தாழ்வான் இவ்வாறு எழுதியுள்ளார்.

*அத ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்ம்யபரிசீலன - தத்பர்வத - சாதாரணகதிபய - தர்மவிசேஷ - வ்யவஸ்தாபன - வ்ருத்தாந்த: உச்யதே. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்ய விஷய புராணபாகான் சமந்தத: பரிசீலயன் பகவான் ராமானுஜமுனி:* [3] என்று கூறியுள்ளார்.

"ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்" என்ற சொல்லைப் பல முறை கூறியுள்ளதால் இப்புராணம் "வேங்கடாசல மாஹாத்மியம்" ஆகப்பெயர் பெற்றது. இராமாநுஜருக்கு முன்னர் இப்புராணங்களைப் பற்றி யாரும் ஆராயவில்லை. இவருக்குப் பின்னரும், 5, 6 நூற்றாண்டுகள் வரை இப்புராணங்களின் மீது யாருடைய பார்வையும் படவில்லை. பின்னர் அதாவது சில நூற்றாண்டிற்குப் பிறகு இப்புராணங்களின் மீது சிறப்பு ஆய்வு மேற்கொண்டு பல வெளியீடுகளை உருவாக்கினர் என்று அறிய முடிகிறது.

இதற்கு ஆதாரங்கள் என்ன? என்று யாராவது கேட்டால் இவ்வுண்மைகளைக் கூறிய ஆசிரியர்களைப் பற்றிக் கூற வேண்டும். நம் முன்னோர்கள் தாம் எழுதிய நூல்களில் இருந்து பல உண்மைகள் வெளிவந்தன. அந்த நூல்கள் காலப்போக்கில் மறைந்துபோயின.

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராண தீர்த கண்டாந்தர்கதம் 4-21, 22) இரண்டாம் பாகம், பக்-294, தி.தி.தே வெளியீடு
2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராண தீர்த கண்டாந்தர்கதம் 4-21, 23) இரண்டாம் பாகம், பக்-437, தி.தி.தே வெளியீடு
3. ஸ்ரீ வேங்கடாசல இதிஹாசமாலை, அத்தியாயம் 7, பக்.184.

உதாரணமாக சங்கரபகவத்பாதர் தம் சூத்திரபாஷ்யத்தில் நம் முன்னோர்களின் வாதங்கள் உள்ளன. அவர்களில் பர்த்ரு ப்ரபஞ்சாச்சாரியர் ஒருவர். இவர் எழுதிய பிரம்ம பரிணாம வாதத்தைக் கூறியதாக சங்கரர் கூறுகிறார். இவருடைய வாதத்தை சுரேஸ்வராச்சாரியர் தம் நூலில் விவரித்துள்ளார். பர்த்ரு ப்ரபஞ்சாச்சாரியர் எழுதிய நூலைப் பற்றி யாராவது தவறாகப் பேசினால் அதைவிட துர்வார்த்தை வேறொன்று இல்லை என்று சொல்லப்படுகிறது.

அவ்வாறே இராமாநுஜர் தம் உரையில் டங்க – ட்ரமிட – பாருசி, கபர்தி முதலிய ஆசார்யர்களின் (குருக்களின்) பெயர்களையும் – டங்க – ட்ரமிடுல என்ற வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார். டங்க – ட்ரமிடுல என்பதை சங்கர பகவத்பாதரும் கூறியுள்ளார். ஆனால் அவருடைய நூல்கள் ஏதும் தற்போது கிடைக்கவில்லை. சங்கர்ஷகாண்டம், தைவத காண்டம் ஆகியவை நம் ஆசார்யர்கள் சங்கரர் – இராமாநுஜர் ஆகியோர் கூறிய சூத்திரங்கள் வார்த்தைகள், இன்றைய நூல்களில் சில கிடைத்தாலும் ஒரு சில கிடைக்காமலும் உள்ளன. அவர்களின் உரைகள் தவறானது என்று யாரும் சொல்லவில்லை. அவர்களின் உரைகளை சந்தேகப்பட்டால், அவர்களை சந்தேகப்படுவதற்கு இணையாகும்.

அவ்வாறே பகவத் இராமாநுஜர் யாதவராஜாவின் சபையில் எடுத்துக்காட்டாகக் கூறிய புராண உரைகள் அனைத்தும் தற்போதுள்ள நூல்களில் உள்ளன. அந்த புராணங்களிலுள்ள வேங்கடாசல நிலைய கதைகள் பிற்காலத்திலும் எடுத்துக்காட்டப்பட்டன. முக்கியமாக பத்மாவதி பரிணயத்தைப் பற்றி முதன் முதலாக புராணங்களில் வெளியிடப்பட்டது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் மட்டும் அல்லாமல், 5–6 நூற்றாண்டுகளுக்கு முன்னர், அன்னமய்யா, தரிகொண்ட வேங்கமாம்பா, வேங்கடாத்வரி போன்றோரால் எடுத்துக்காட்டப்பட்டன. இப்புராணக் கதைகளை உலகம் முழுவதும் ஆதரிக்கின்றன. ஆகையால் ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தைப் பற்றி நம் முன்னோர்கள் கூறிய ஐதீகங்களைப் புதிய முறையில் ஆராய்ந்து ஏதாவது சில அம்சங்கள் தற்போதுள்ள புராண நூல்களில் கிடைக்காவிட்டால், அவற்றை உறுதிப்படுத்த (மூலச்சேதி தவ பாண்டித்யப்ரகர்ஷ:) (இவை) வேங்கடாசல மாஹாத்மியம் என்னும் நூல் உபயோகப்படும்.

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் என்ற பெயரில் புராணங்களைப் பற்றிய ஆய்வு நடந்தது. டாக்டர் கே.வி. ராகவாச்சார்யர் இதன் மேல் விரிவாக ஆராய்ச்சி செய்து, மேலே கூறப்பட்டுள்ள புராணங்கள் அனைத்திலும் வேங்கடாசல மாஹாத்மியம் என்னும் நூல் மிகவும் தெளிவாக உள்ளன என்று அவர் கூறினார். மேலுள்ள புராண வரிசைகளில் ஸ்ரீமத்பாகவதமும் இணைக்கவேண்டுமென்று கூறினார்.

பாகவதத்தில் பலராமனின் தீர்த்தயாத்திரைப் படலத்தில், பலராமர் வேங்கடகிரியை தரிசித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

*ஸ்கந்தம் த்ருஷ்ட்வா யயௌ ராம: ஸ்ரீசைலம் கிரிசாலயம்*
*த்ரவிடேஷு மஹாபுண்யம் த்ருஷ்ட்வாத்ரிம் வேங்கடம் ப்ரபு:* [1]

1. பாகவதம் தசமஸ்கந்தம், உத்தர பாகம் 79-13

மேலும் மும்மூர்த்திகளின் குணநலன்களை சோதிக்கச் சென்ற பிருகு மஹரிஷியின் கதை ஸ்ரீபாகவத தசமோத்தரத்தில் உள்ள 89வது அத்தியாயம் விரிவாகக் கூறுகிறது. இப்பகுதி புராண வெளியீட்டில் சேரவில்லை. அதுமட்டுமல்ல வராஹபுராணத்தில் உள்ள சில பகுதிகளும் புராண வெளியீட்டில் சேராமல் உள்ளது என்று 2009ல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். தற்பொழுது உள்ள பிரதிகளில் கிடைக்கப் பெற்ற 5 அத்தியாயங்கள் வெளியீட்டில் இணைக்கவில்லை. பின்னர் அவற்றையும் இணைக்க வேண்டும் என்று எண்ணினார். தற்போது உள்ளவையே சில மறைந்து போகும் அவகாசம் உள்ளது என்றார். பகவத் இராமாநுஜருக்கு முன்னரே புராணங்களைப் பற்றி ஆராய்ந்தவர்கள் இருந்திருக்கலாம். அவர்களைப் பற்றி நமக்குத் தெரியாது. திருமலையில் எழுந்தருளியுள்ளவர் ஸ்ரீநிவாசரே என்று உறுதிப்படுத்தவும், இல்லை என்று கூறவும், ஸ்கந்தன் அல்லது மற்றொரு தெய்வம் என்றும் நினைத்திருந்த காலத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள சிலர் புராணங்களையே நாடி, தேடி இருக்கலாம்.

திருமலையில் உள்ள ஸ்வாமி, கந்தனே என்பதற்கு சிலர் புராணங்களில் உள்ள தகவல்களைக் கூறினர். அதனை மறுத்து இராமாநுஜர் அவ்விஷயங்களை விவரித்து எதிர் வாதிகளின் கருத்தை கண்டித்தார்.

இதனையொட்டி அவர் வாமன புராணத்தில் உள்ள செய்திகளை 30 இடங்களில் வெளிப்படுத்தினார். பின்னர் வராஹ புராணம், பவிஷ்யோத்தர, மார்க்கண்டேய புராணங்களையும் ஆராய்ந்து பல கருத்துகளைக் கூறியுள்ளார். இவ்வாறு முதன்முதலில் வேங்கடாசல மாஹாத்மியத்தை உலகிற்கு அளித்த பெருமை பசிண்டி வேங்கடத்துறைவர் என்ற இராமாநுஜய்யனையேச் சாரும். தாள்ளபாக்க அன்னமய்யா வாழ்ந்த காலத்திலேயே இவரும் வாழ்ந்தார்.

அன்னமய்யா வடமொழியில் "வேங்கடாத்ரி மாஹாத்மியம்" என்ற நூலை எழுதியுள்ளார். அவற்றில் பாகவதம், பிரம்மாண்ட, வாமன புராணங்களின் கதைகள் மட்டுமே உள்ளன.

தரிகொண்ட வேங்கமாம்பாவும் "வேங்கடாசல மாஹாத்மியம்" என்ற நூலை வருணித்துள்ளார்.

இதனையொட்டி பகவத் ராமாநுஜர் வெளிப்படுத்திய புராண விஷயங்களை இங்கே அறிந்து கொள்வோம்.

## வராஹ மூர்த்தியாக விஷ்ணு

ஸ்வாமி புஷ்கரணிக்கு தெற்கு பகுதியில் ஸ்ரீநிவாச மூர்த்தி வடிவில் உள்ள மஹாவிஷ்ணுவை குறித்தும் புராணங்கள் விவரித்துக் கொண்டு இருக்கையில், அவர் விஷ்ணுவே இல்லை என்று கூறிய எதிர் வாதத்தினரின் கருத்தை வராஹ புராணத்தில் சொல்லப்பட்ட செய்திகளால் மறுக்கப்பட்டது.

*ஏதேஷூ ப்ரவரா தேவி! ஸ்வாமி புஷ்கரிணீ சுபா*
*அஸ்யாஸ்து பச்சிமே தீரே நிவஸாமி த்வயா ஸஹ*

*அஸ்தேSஸ்யா தக்ஷிணே தீரே ஸ்ரீநிவாஸோ ஜகத்பதி:*
*கங்காத்யை: ஸகலைஸ்தீர்த்தை: ஸமா ஸா ஸாகராம்பரே* [1]

## புஷ்கரணிக்கரையில் ஸ்வாமி உள்ளார்

*வந்தமானாம் ஸமுத்வீக்ஷ்ய ப்ரீத்யுத்புல்லவிலோசன:*
*உத்த்ருத்ய தரணீம் தேவீம் ஆலிங்க்யாSத ஸ்வபாஹுபி:*

*ஆக்ராய தரணீ வக்த்ரம் வாமாங்கே ஸன்னிவேஸ்ய ச*
*ஆருஹ்ய கருடேசானம் ஜகாம வ்ருஷபாசலம்*

*முனீந்த்ரை: நாரதாத்யைச்ச ஸ்தூயமானோ மஹீபதி:*
*ஸ்வாமீபுஷ்கரணீதீரே பச்சிமே லோகபூஜிதே* [2]

மேலே கூறப்பட்டுள்ள வராஹபுராண சுலோகத்தில் ஸ்வாமி புஷ்கரணிக்கு தெற்கிலும், மேற்கிலும் எழுந்தருளியுள்ளார் என்று தெளிவாகிறது.

ஸ்ரீநிவாசர் லக்ஷ்மி வக்ஷஸ்தலவாசன் : ஸ்வாமியின் வக்ஷஸ்தலத்தில் லக்ஷ்மிதேவி கொலுவீற்றுள்ளார் என்று கருடபுராணம் கூறுகிறது.

*அருந்ததீ மஹாபாகா லக்ஷ்ம்யSSலிங்கிதவக்ஷஸம்*
*த்ருஷ்ட்வாஹரிம் வேங்கடேசம் ப்ரணநாம முதான்விதா* [3]

## சங்கு சக்ரதாரியே ஸ்வாமி

தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஸ்வாமி சதுர்புஜங்களுடனும், சங்கு சக்ரதாரியாகவும் காட்சியளித்தார் என்று பிரம்மாண்டபுராணம் கூறுகிறது.

*தன்மத்யேSஸௌ நீல ஜீமூதகல்பம் பத்மவாஸம் ஸம்ச்ரிதத்ராணஹேதும்*
*ஸ்ரீவத்ஸாங்கம் புண்டரீகாயதாக்ஷம் சங்கம் சக்ரம் தாரயந்தம் கராப்யாம்* [4]

இந்த செய்தியை மார்கண்டேய புராணம் கூட தெரிவிக்கிறது.

*தன்மத்யஸ்தம் திவ்யமூர்திம் வரேண்யம் சங்கம் சக்ரம் தாரயந்தம் கராப்யாம்* [5]

இந்த சுலோகம் குமாரஸ்வாமிக்கும் இதே வடிவில் காட்சியளித்ததாக மார்கண்டேய புராணச் சுலோகம் உறுதிப்படுத்துகிறது. கந்தன் ஸ்ரீநிவாசனின் பக்தர் என்று வாமன புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

*குமாரதாரிகா நாம தத்ர நிர்ஜரிணீ சுபா*
*மயூரவாஹகோ தேவி! தஸ்யாஸ்தீரே வஸத்யஹோ* [6]

---

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வராஹபுராண இரண்டாம்பாகாந்தர்கதம் 1-47, 48 ) முதல் பாகம், பக் - 137 தி.தி.தே. வெளியீடு
2. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வராஹபுராண இரண்டாம் பாகாந்தர்கதம் 1-88, 90 ) முதல் பாகம், பக் - 141 தி.தி.தே. வெளியீடு
3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (கருட புராணாந்தர்கதம் 63-41) முதல் பாகம், பக் - 294 தி.தி.தே. வெளியீடு
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்தகண்டாந்தர்கதம் 9-11 ) முதல் பாகம், பக் - 350 தி.தி.தே. வெளியீடு
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (மார்கண்டேய புராணம் தீர்தகண்டாந்தர்கதம் 2-15 ) முதல் பாகம், பக் - 383 தி.தி.தே. வெளியீடு
6. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வாமன புராணம் க்ஷேத்ர கண்டாந்தர்கதம் 24-97 ) முதல் பாகம், பக் - 441, தி.தி.தே. வெளியீடு

வேங்கடாத்ரியில் கலியுகம் முடியும் வரை நான் அங்கேயே இருப்பேன் என்று ஸ்வாமி கூறியுள்ளார். அதுமட்டுமின்றி பரமசிவனுக்கு திருமலையின் அடிவாரத்தில் ஓர் இடம் (அதாவது கபிலதீர்த்தம்) தரப்பட்டதாகவும், அங்கே பக்தர்கள் நீராடி மகிழ்வர் என்றும் வராஹ புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

*ஆகல்பம் ச வஸாமீஹ வேங்கடாஹ்வயபூதரே*
*த்வமப்யத்ர ம்ருடானீச! மஹாதேவ! வஸ ப்ரபோ!*
*உபத்யகாயாமஸ்யாத்ரே: சோசிஷ்கேசதிசீஸ்வர:* [1]

## தற்பொழுதுள்ள ஸ்வாமி அர்ச்சாமூர்த்தி சங்கராஜு தோற்றுவித்தார்

*தேனோக்தமார்கேண விதாய புண்யம் விரமானவர்யம் பிரதிமாம் ச புண்யாம்*
*ப்ரக்யாப்ய சங்கோ நரலோகஸம்கே ஜகாம விஷ்ணோ: பதமவ்யயம்ஸுபம்* [2]

தொண்டைமானின் மேல் கருணை கொண்டு ஸ்வாமி தன் சங்கு சக்கரங்களை அளித்தார். பிரம்ம புராணத்தில் இதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

*தர்சயன் பக்தவாத்ஸல்யம் யோ ததௌ ஹஸ்தகே சுபே*

*சங்கசக்ரே ந்ருபேந்த்ராய சக்ரவர்த்தீதி யம் விது:* [3]

அர்ச்சையில் சங்குசக்கரங்களை தரித்தல் வேண்டாம் என்று சக்ரவர்த்தி வேண்டினான்.

*மமாSSயுதப்ரதானஸ்ய க்யாத்யை தேவோத்தம ப்ரபோ*
*அர்சாபிம்பே சிலாபிம்பே சக்ரசங்கௌ நதாரய*
*இதி ஸம்ப்ரார்திதோ தேவோ ந ததார புனச்ச தௌ*
*அத்ருச்யௌ திஷ்டதச்சோ பௌ பார்ஸ்வத: சார்ங்கதன்வின:* [4]

## ஜடாதாரணம் தகுனு-நாகபூஷணமு தகுனு

பத்மாவதியை மணம் புரிய ஸ்வாமி எவ்வாறு சென்றார் என்று கீழேயுள்ள சுலோகங்களில் சொல்லப்பட்டுள்ளன.

*த்யாயேத்வராச்வகம் தம் வை தனுத்ராவ்ருதவிக்ரஹம்*
*ஸிதோஷ்ணீஷலலாடம் ச நாதிதீர்கஜடாதரம்* [5]

*நிஸ்சேஷபுவனானாம் ச த்யாதவ்யம் ச தராஸ்திதம்*
*அனந்தசய னாபூஷம் கல்பாந்தஹுுதபுக்ப்ரபம்* [6]

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராக புராணம் பிரதம பாகாந்தர்கதம் 49-39,40) முதல் பாகம், பக் - 70 தி.தி.தே. வெளியீடு
2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணாந்தர்கதம் 3-51) இரண்டாம் பாகம், பக் - 16 தி.தி.தே. வெளியீடு
3. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம புராணாந்தர்கதம் 7-7 ) இரண்டாம் பாகம், பக் - 24 தி.தி.தே. வெளியீடு
4. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம புராணாந்தர்கதம் 7-66,67) இரண்டாம் பாகம், பக் - 29 தி.தி.தே. வெளியீடு
5. ஸ்ரீசாத்வதஸம்ஹித 12-160
6. ஸ்ரீசாத்வதஸம்ஹித 12-164

*குங்குமாக்தஸுகந்தேன லிப்தோரோ பாஹுரஞ்ஜித:*
*கபரீக்ருதகேசேஷு ரக்தவஸ்த்ரம் ஸுவேஷ்ட்யச*

*லம்பிதை: புஷ்பஜாலைச்ச ஸ்கந்தகை: பரிபூஷித:*
*சுவர்ணரத்னஸம்பத்த பாதுகாகூஹிதாங்க்ரிக:* [1]

*மூர்தஜை: குஞ்சிதைச்சாபி நீலை: ம்ருதுதரைஸ்ததா*
*லம்பமானைர்விநிஸ்க்ராந்தை: கிரீடாத் ஸுபதர்சனாத்* [2]

குதிரையின் மீதேறியவர், தலையில் கவசத்துடன் வெள்ளை தலைப்பாகை அணிந்தவர், ஜடையை உடையவர், அனந்த சயன பூஷிதன், ஒளிமிகுந்தவர். இத்தகு ஸ்வாமியை அனைத்து உலகமும் தியானிக்க வேண்டும். சிவப்பு நிற வஸ்த்திரத்தை தலைமுடிக்குச் சூட்டிக் கொண்டவர். வலிமை மிக்க தோள்களை புஷ்ப மாலைகளால் அலங்கரித்துக் கொண்டவர், தங்கம் மற்றும் ரத்தினத்தால் அலங்கரிக்கப்பட்ட பாதுகைகளை உடையவர், கிரீடத்தில் இருந்து வெளியே வந்த கேசவன் (முடியை உடையவர்) பூலோகத்தில் நிவசிப்பவர் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

## ஆகாசராஜன் - நாகாபரணம் தந்தார்

ஆகாசராஜன் நாகாபரணத்தினை திருமணத்தின் போது ஸ்வாமிக்கு சமர்ப்பித்ததாக பவிஷ்யோத்தர புராணம் சொல்கிறது.

*நாகபூஷணயுக்மம் ச பாஹுபூராதிகாந்ஸ்ததா*
*இந்த்ரநீலமணிச்யாம ரமணீயாஹிபூஷணை:* [3]

## ஊர்த்வபுண்ட்ர நிர்ணயம்

ஸ்ரீநிவாசனின் ஊர்த்வ புண்ட்ர வடிவினை பாத்ம புராணம் குறிப்பிடுகின்றது.

*உத்யத்த்யுமணி பிம்பஸ்ரீ: சிகாமணி மஹாமஹ:*
*அஷ்டமீந்துகளாகார லலாடஸ்தோர்த்வ புண்ட்ரக:* [4]

இவ்வாறு ஸ்ரீநிவாசனுக்குரிய பல விஷயங்கள் பற்றிய செய்திகள் புராணங்களில் உள்ளன என்று தெளிவாகத் தெரியப்படுத்துகின்றன. இந்த புராணங்களின் வெளியீட்டு நூலே "வேங்கடாசலமஹாத்மியம்" என இன்று புகழ்பெற்று விளங்குகிறது.

******

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணாந்தர்கதம் 6-10,11) இரண்டாம் பாகம், பக் - 301 தி.தி.தே. வெளியீடு
2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வாமன புராணம் க்ஷேத்ரகண்டாதர்கதம் 34-31) முதல் பாகம் பக். 501 தி.தி.தே. வெளியீடு
3. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணாந்தர்கதம் 11-336) இரண்டாம் பாகம் பக். 404 தி.தி.தே. வெளியீடு
4. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பாத்ம புராணம் க்ஷேத்ரகண்டாதர்கதம் 27-44) முதல் பாகம் பக். 23 தி.தி.தே. வெளியீடு

ஹனுமத் வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை



## ஸ்ரீநிவாசரின் சேவையில் அஞ்ஜனாதேவி கேசரி தம்பதியர்



# அத்தியாயம் - 4

# 4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் மேலும் சில தகவல்கள்


**தெலுங்கு மூலம்**
**பேராசிரியர் விரிவெண்டி முரளீதர சர்மா**

**தமிழாக்கம்**
**திருமதி வி. உஷா**


இக்கட்டுரை தி.தி.தேவஸ்தானத்தினரால் 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "ஸ்ரீ வேங்கடேஸ்வர வைபவம் – ஜாதீய சதஸ்" என்ற புத்தகத்தில் உள்ள திரு. கோராட ராமகிருஷ்ணா அவர்களின் "கல்வெட்டுகளில் வேங்கடவன்", டாக்டர் கே.வி. ராகவாசார்யர் அவர்களின் "ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம்" என்ற ஆராய்ச்சி நூல் கட்டுரையில் இருந்து மற்றும் தி.தி.தேவஸ்தானத்தால் 2019 ல் வெளியிடப்பட்ட டாக்டர் கே.வி. ராகவாச்சாரியரின் "சங்ககால ஆந்திர இலக்கியங்களில் திருவேங்கடவன்" என்ற நூலிலுள்ள தகவல்களையும் காண்போம்!

பகவத் இராமாநுஜாசாரியர் காலத்தில் (1017–1137) திருமலையில் உள்ள திருவேங்கடவன் கந்தனா, சிவனா, சக்தியா எனும் விவாதம் உண்டாயிற்று. யாதவ இராஜ சபையில், இராமாநுஜர் திருமலையில் உள்ள ஸ்வாமி விஷ்ணு வடிவமே என்று பலவித புராணங்களை ஆராய்ந்து அதில் உள்ள திருவேங்கடவனின் வைபவத்தைக் கூறி பல ஆதாரங்களுடன் நிரூபித்தார். இத்தகவலை பகவத் ராமாநுஜரின் சீடரான அனந்தாழ்வான் "வேங்கடாசல இதிகாச மாலை"யில் குறிப்பிட்டுள்ளார். அன்றைய காலகட்டத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மாஹாத்மியம் புகழ்பெற்றது. பிற்காலத்தில் இந்நூல் தெளிவற்ற நிலையானது.

1491 ஆம் ஆண்டில் பசிண்டி வேங்கடத்துறைவர் (ஜீயர் இராமாநுஜய்யன்) என்ற வேங்கடமுடையானின் அர்ச்சகர் பல வண்ண மலர்களால் அழகாக மாலை தொடுப்பது போல இந்த 12 புராணங்களில் இருந்து ஸ்ரீ வேங்கடாசல க்ஷேத்திரம், தீர்த்தம், எம்பெருமானின் மகிமைகளை ஒன்று சேர்த்து வர்ணித்துப் பாடிய நூலை "ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம்" என்ற பெயரில் தொகுத்தார்.

சுயம்பு மூர்த்தியான ஸ்ரீநிவாசனின் அர்ச்சா அவதாரத்தின் புராண மூலத்தினையும், சிறப்பினையும் நிரூபிப்பதே பசிண்டி வேங்கடத்துறைவரின் நோக்கமாக இருந்தது. இவர் ஸ்வாமியின் சன்னிதியில், ஸ்வாமியின் மகிழ்வுக்காக ஸ்ரீவேங்கடேச மாஹாத்மியத்தை பாராயணம் செய்தது குறித்த தகவல் 27–6–1491 ஆம் தேதி கல்வெட்டு கூறுகிறது.

பசிண்டி வேங்கடத்துறைவரின் தமிழ் கல்வெட்டுகளில் கடைசி வாக்கியத்தில் இவ்வாறு உள்ளது. "திருவேங்கடமுடையான் இந்த திருவோலக்கம் கண்டருளுகிறபோது, இவர் விண்ணப்பம் செய்த திருவேங்கட மாஹாத்மியத்திற்கு அருளபாடிட்டு கேட்டருளக் கடவராகவும்"[1] என்பதைக் கூறியுள்ளது.

"திருவோலக்கம்" என்றால் ஆஸ்தானம் என்று பொருள். அக்காலத்தில் திருவேங்கடவன் கொலுவு நடைபெறும் போது திருவேங்கட மாஹாத்மியத்தை பாராயணம் செய்தார்கள்.

1. T.T.D. Inscriptions, Vol. II No. 95 1998,P:198

வேங்கடத்துறைவர் இப்பாராயண சேவை நிகழ்த்துவதற்கு ஸ்வாமி பாண்டாரத்திலிருந்து 2000 நற்பணத்தை மூலதனமாகச் செலுத்தினார். இவற்றின் மூலம் வரும் ஆதாயத்தை ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மிய பாராயண சேவை மற்றும் பிரசாத விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தில் கல்வெட்டுகளின் ஆய்வாளராகப் பணிபுரிந்த திரு.சாது சுப்ரமண்ய சாஸ்த்திரி அவர்கள் (1889–1981) தமிழ் கல்வெட்டுகள் "இவர் விண்ணப்பம் செய்த" என்ற கருத்தை மனதிற் கொண்டு ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் என்ற நூலினை வெளியிட்டவர் பசிண்டி வேங்கடத்துறைவர் என்பதை நிரூபித்தார். கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பெக்குரு பக்தர் வேங்கடாசல மாஹாத்மியம் பாராயண சேவைக்கு ஏற்பாடு செய்ததாக வரிசையாக 19–1–1545, 5–7–1545, 17–7–1546, 3–6–1547 [1] கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

திருப்பதியில் வாழ்ந்த பென்கொண்ட செட்டியின் மகன் காளத்தி செட்டி திருமலை திருவேங்கடவன் ஆலயத்தில் தை, மாசி மாதங்களில் தினசரி உத்ஸவங்களுக்கு ஏற்பாடு செய்தார். இதில் ஒரு பகுதியாக ஸ்ரீநிவாச புராண பாராயணத்திற்கு ஏற்பாடு செய்ததாக 31–12–1543 ஆம் நாளைய கல்வெட்டுகள் [2] தெரிவிக்கின்றது. இதன் வாயிலாக ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் நூலுக்கு திருவேங்கட மாஹாத்மியம், ஸ்ரீநிவாச புராணம் என்ற பெயர்கள் இருந்ததாகத் தெரிகின்றது.

இந்த வேங்கடாசல மாஹாத்மியத்திற்கு சம்பந்தப்பட்ட புராணக் கதைகள் கொண்ட வேங்கடேச சுப்ரபாதத்தை இயற்றிய பிரதிவாதி பயங்கர அண்ணன் ஸ்வாமிகள் (கி.பி. 1361–1453) அக்காலத்திலேயே வழக்கத்தில் இருந்ததாக சுப்ரபாதத்தில் சில சுலோகங்கள் கூறுகின்றன.

*ப்ரஹ்மாதயஸ்ஸுரவராஸ்ஸமஹர்ஷயஸ்தே*
*ஸந்தஸ்ஸநந்தன முகாஸ்த்வத யோகிவர்யா:*
*தாமாந்திகே தவ ஹி மங்களவஸ்துஹஸ்தா:*
*ஸ்ரீவேங்கடாசலபதே! தவ சுப்ரபாதம்*

என்ற இச்சுலோகம் வேங்கடாசல மாஹாத்மிய நூலில் உள்ள வராஹபுராணம் – முதல்பகுதியில் 47வது அத்தியாயத்தில் உள்ள "பிரம்மாதி தேவதல பகவான் மந்திர பிரவேசம்" என்ற கதையைக் கூறுகிறது.

*ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமீ புஷ்கரிணீதடே*
*ரமயா ரமமாணாய வேங்கடேசாய மங்களம்* [3]

திருவேங்கடவன் வைகுண்டத்தின் மீது வெறுப்பைக் கொண்டு, பூமிக்கு வருகை புரிந்து, ஸ்வாமி புஷ்கரணிக் கரையில் லஷ்மி சமேதரராக வலம் வந்து கொண்டிருக்கிறார் என்று இந்த சுலோகம் எடுத்துரைக்கிறது.

---

1. தி.தி.தே. கல்வெட்டுத் தொகுதி, 5–29,5–51,5–53, 5–71, 5–92.

2. தி.தி.தே. கல்வெட்டுத் தொகுதி, 5–10, பக்கம் 30.

3. ஸ்ரீவேங்கடேஸ்வர மங்களாசாசனம், 12.

*மாயாவீ பரமானந்த : த்யக்த்யா வைகுண்ட முத்தமம்*
*ஸ்வாமி புஷ்கரிணீதீரே ரமயா ஸஹ மோததே* [1]

*வைகுண்டாத்பரமோ ஹ்யேஷ வேங்கடாக்ய நகோத்தம :*
*அத்ரைவ நிவஸாம்யேவ ஸ்ரீபூமிஸஹிதோஹ்யஹம்* [2]

இத்திருவேங்கடம் வைகுண்டத்தை விட சிறந்தது. நான் இனி ஸ்ரீ பூதேவிகளுடன் இங்கேயே வீற்றிருப்பேன் என்று இச்சுலோகம் கூறுகிறது.

சுப்ரபாதத்தில் உள்ள 6, 9, 14, 15 ஆகிய ஸ்தோத்திரங்களில் உள்ள இரண்டாவது சுலோகத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்திற்குத் தொடர்புடைய கதையம்சங்கள் வர்ணிக்கப்பட்டு உள்ளன. அடுத்து கடைசி 3 சுலோகங்கள்

*விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத: ஸதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி*
*ஹரே! வேங்கடேச! ப்ரசீத ப்ரசீத ப்ரியம் வேங்கடேச! ப்ரயச்ச ப்ரயச்ச*
*அகம் தூரதஸ்தே பதாம்போஜயுக்ம ப்ரணாமேச்சயாSSகத்ய சேவாம் கரோமி*
*ஸக்ருத்ஸேவயா நித்ய சேவாபலம் த்வம் ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ! வேங்கடேச!*
*அஜ்ஞானினா மயா தோஷான் அஷேஷான் விஹிதான் ஹரே!*
*க்ஷமஸ்வ த்வம் க்ஷமஸ்வ த்வம் சேஷசைல சிகாமணே!* [3]

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் நூலில் உள்ள மார்கண்டேய புராண பாகத்தில், மார்கண்டேய மஹரிஷி ஸ்ரீநிவாசரை துதித்துப் பாடும் பாடல்களாக அமைந்துள்ளன. [4] இந்த ஆய்வின் மூலம் கி.பி.14 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே அதாவது சுப்ரபாதத்தை இயற்றுவதற்கு முன்பே வேங்கடாசலத்தின் மகிமையைக் கூறக்கூடிய புராணக் கதைகள் வழக்கத்தில் இருந்துள்ளன என்று தெளிவாகிறது.

ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் உள்ள ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தை புணரமைத்து, தாள்ளபாக்க சின்ன திருமலாச்சார்யர் (அன்னமாச்சார்யரின் பேரன் பெரிய திருமலாச்சார்யரின் மகன்) அவர்களால் நிறுவப்பட்ட 22–3–1540 ஆம் நாளைய தெலுங்கு மொழி கல்வெட்டில் ஸ்காந்த புராணோக்தமான ஸ்ரீ வேங்கடேஸ்வர மாஹாத்மியம் பற்றிய செய்தி உள்ளது. [5]

## அக்கல்வெட்டு இவ்விதமாக உள்ளது

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஜயாப்யுதய சாலிவாகன சகவசம்புலு அகுனேடி சாவரி சைத்ர சுத்த
2. சித்தா நக்ஷத்ர மந்து ஸ்ரீமத்வேதமார்க ப்ரதிஷ்டாபனாசார்ய ராமாநுஜ சித்தாந்த (ஸ்தா) பனாசார்ய

---

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (ஹரி வம்சாந்தர்கத சேஷதர்ம : 48-15) முதல் பாகம், பக் – 298, தி.தி.தே. வெளியீடு

2. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வராக புராணம் பிரதம பாகாந்தர்கதம் 35-12) முதல் பாகம், பக் – 9, தி.தி.தே. வெளியீடு

3. ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்திரம் 9,10,11

4 ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (மார்கண்டேய புராணாந்தர்கதம் 2-20,21,22) முதல் பாகம், பக் – 378, தி.தி.தே. வெளியீடு

5. தி.தி.தேவஸ்தான கல்வெட்டுத் தொகுதி, 4-144,1998

3. வேதாந்தாசார்ய கவிதார்கிககேசரி சரணாகத வஜ்ர பஞ்சருலைன ஸ்ரீ தாள்ளபாக்க பெத்ததிருமலய்யங்காரி
4. கொமருண்டு ஸ்ரீ சின்னதிருமலயங்காரு ஸ்காந்தபுராணோக்தமைன ஸ்ரீ வேங்கடாசல மஹாத்ம்ய(மு)
5. லோ விகல்யனதீதிமந்து ஸ்ரீரங்க மாஹாத்யம்லோனு தசாத்யாம் லோனு தேவளதீத தீர மந்து
6. தம (கைங்கர்யங்காணு) ஸவமாஸ்ய அக்ரஹாரமைன அலமேலுமங்கா புரமந்து ஜீர்னோத்தாரணங்கானு
7. ஸ்ரீ வேங்கடேச்வருலானு நாச்சிமாருனு அனந்தகருட விஷ்வக்ஸேனாதுலுனு பேரு
8. மாள்ளனு ஆள்வாருலானு உடையவருனு புவாசார்யுலானு அன்னமாசார்யுலைன தம ஆசார்யு
9. லானு திருபிரதிஷ்ட சேசி ஆயாள்வாருல ஸன்னிதிகி ப்ரொத்துக்ருந்தி அப்புடு நித்யானுஸந்தானாலு
10. மொதலைனதி அனுசந்திஞ்சி ஆசார்ய புருசுலு ஜீய்யரு...... ஸ்ரீ வைஷ்ணவுல...... ப்ரொ
11. த்துக்ருங்க்கின அப்புடு ஆரகிம்பு.......பலம் சந்தனகாபு ஸம –
12. பிஞ்சி இதிதனு புத்ர பௌத்ர பரம்பர ஆசந்த்ரார்கங்கானு ஸ்ரீ ஸ்ரீயதிராஜிய்ய –
13. ஸ்காரி சாதனு வ்ராயின்சின சிலாசாசனம் (11) 265, 266

## வராஹபுராணத்தில் உள்ள ஸ்ரீ வேங்கடாசல மஹாத்மியத்திற்குத் தெலுங்கில் பொருளுரை எழுதியவர்கள் பற்றிய குறிப்பு

1. ஸ்ரேஷ்டிலூரி வேங்கடார்யுடு – ஸ்ரீநிவாச விலாச சேவதி (த்விபத)
2. தரிகொண்ட வேங்கமாம்பா – வேங்கடாசலமாஹாத்மியம்
3. முலுபாக புச்சய்யா சாஸ்திரி – வேங்கடாசலமாஹாத்மியம்
4. தாமெர சின வேங்கடராயுடு – வேங்கடாசலமாஹாத்மியம்
5. சிஷ்ட கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரி – வேங்கடாசலமாஹாத்மியம்
6. கல்லூரி வேங்கட சுப்ரமண்ய தீக்ஷிதர் – (வசனம்)
7. பரவஸ்து வேங்கட ராமாநுஜ ஸ்வாமி – (வசனம்)
8. தூ. வேம். சூடாமணி – (வசனம்)

பசிண்டி வேங்கடத்துறைவர் ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தில், புராண கதைகளை எல்லாம் ஒன்றுபடுத்தி வெளியிட்ட அத்தியாயம், தற்போது கிடைக்கப் பெற்ற மூல புராண நூலில் காணவில்லை. ஆனால் தற்போது கிடைக்கப் பெற்ற வழக்கத்தில் உள்ள ஸ்காந்த மஹா புராணத்தில் இரண்டாவதான வைஷ்ணவ கண்டத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் 40 அத்தியாயங்களில் 2476 சுலோகங்களால் வர்ணிக்கப்பட்டுள்ளன. பசிண்டி வேங்கடத்துறைவர் வெளியிட்ட புராண பாகங்கள் மட்டுமின்றி இப்பொழுது வழக்கத்தில் உள்ள மஹாபாகவத தசமஸ்கந்தத்தில் 89 வது அத்தியாயம் கலியுகத்தில் ஸ்ரீநிவாசர் அவதாரத்திற்குக் காரணமான

பிருகுமஹரிஷி மும்மூர்த்திகளை சோதித்த கதையும் உள்ளது. மஹாபாரதத்தில் உள்ள பலராமர் தீர்த்த யாத்திரை படலத்தில், பலராமன் வேங்கடமலையையும், வேங்கடவனையும் தரிசித்ததாக தசமஸ்கந்தத்தில் உள்ள 79 வது அத்தியாயத்தில் – 13வது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது. பிருகு மஹரிஷியைப் பற்றி பத்ம புராணத்தில் உத்தர காண்டத்தில் 60 வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

கி.பி. 1491 முதல் திருமலை ஆலயத்தில் பாராயண நூலாக மதிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மிய நூல் ஓலைச் சுவடிகளாக கி.பி. 1884 வரை தேசம் முழுவதும் பரவியிருந்ததாகத் தெரிய வருகிறது. இந்த சமஸ்கிருத நூலுக்கு கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தெலுங்கு மொழியில் பொருளுரை எழுதப்பட்டது.

சமஸ்கிருத வேங்கடாசல மாஹாத்மிய நூலுக்குத் தெலுங்கு மொழியில் தி.தி.தே. விசாரணைக் குழு அதிகாரியான மஹந்த் பகவான் தாசு அவர்களால் (1880–1890) முதன் முதலாக சக ஆண்டு 1806 ஸ்ரீ தாரண ச்ராவண சுத்த திவிதியை அன்று (24–7–1884) வெளியிடப்பட்டது. தற்போது அந்த நூல் காணப்பட வில்லை.

இவ்வாறு வேங்கடாசல மாஹாத்மியத்திற்குத் தொடர்புடைய கதைகள் பல புராணங்களில் உள்ளதாக நிரூபிக்கக் கூடிய இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் உள்ளன.

******

ஹனுமத் வாகனத்தில் ஸ்ரீபத்மாவதி தாயார்,
திருச்சானூர்



ஆகாச கங்கைக்கு நேர்முகமாக அஞ்ஜனாதேவி தவம்புரிதல்



# அத்தியாயம் - 5

# 5. ஸ்ரீ வேங்கடாசல இதிஹாச மாலை
# ஸ்ரீ வேங்கடேஸ்வர தத்துவம்

**தெலுங்கு மூலம்**
**திரு ஈ.வி. சிங்கராசார்யுலு**

**தமிழாக்கம்**
**திருமதி வி. உஷா**

எந்த விஷயமாக இருந்தாலும், அதை நிரூபிக்க மூன்று ஆதாரங்கள் உள்ளன. அவை யாவை என்றால் 1. இலக்கியங்கள், 2. வரலாறுகள் 3. கல்வெட்டுகள் என்பவை ஆகும். திருவேங்கடவனின் தத்துவத்தை நிரூபிக்க பல இலக்கிய ஆதாரங்களுடன் இயற்றப்பட்ட நூலே "ஸ்ரீ வேங்கடாசல இதிஹாசமாலை" என்பதாகும். இதனை அனந்தாழ்வான் எழுதினார். இவர் இராமாநுஜரின் சீடராவர். இந்நூலில் உள்ள ஆதாரங்கள் அனைத்தும் கி.பி. 1050–1150 ஆண்டிற்கு இடைப்பட்ட காலங்களில் கிடைக்கப் பெற்றவை. இக்காலத்தில் உள்ள திருமலையைப் பற்றி பல தகவல்களை இந்நூல் தெரிவிக்கின்றது. இந்நூலில் 7 பகுதிகள் உள்ளன. இதற்கு சைபகாலனி என்று பெயர். இராமாநுஜரின் ஆணைப்படி திருமலைக்கு வந்து திருவேங்கடவனுக்கு புஷ்ப மாலை சமர்ப்பிக்கும் சேவையைப் புரிந்தவர் அனந்தாழ்வான். இச்சேவைக்காக இவர் திருமலையில் தெற்கு மாடவீதியில் ஒரு நந்தவனத்தைத் தோற்றுவிக்க ஒரு குளத்தை ஏற்படுத்தினார். இதனை தற்போதும் காணலாம்.

அனந்தாழ்வான் "ஸ்ரீ வேங்கடாசல இதிஹாச மாலை"யை எழுதுவதற்குத் துணை புரிந்த வரலாற்றுக் குறிப்புகளைக் காணலாம்.

ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீரங்கத்தில் ஆன்மீக செய்திகளைப் பிரச்சாரம் செய்து வந்தார். அச்சமயம் திருமலையை யாதவராஜா ஆட்சிபுரிந்தார். அப்பொழுது திருமலையில் எழுந்தருளிய திருவேங்கடவனைப் பற்றி பல எதிர்மாறான கருத்துக்கள் நிலவின. சைவர்கள் சிலபேர் மலை மீதுள்ள ஸ்வாமி குமாரஸ்வாமி என்றும், சிவன் என்றும் கூறினர். வைணவர்கள் விஷ்ணு வடிவம் என்று பிரச்சாரம் செய்வதாக, யாதவ ராஜாவிடம் கூறி இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்குமாறு கேட்டனர். யாதவராஜா இப்பிரச்சனையைத் தீர்க்க சரியானவர் இராமாநுஜரே என்று எண்ணி, அவரைத் திருப்பதிக்கு வரவழைத்தார். அச்சமயம் சைவர்களுக்கும் இராமாநுஜருக்கும் நடைபெற்ற வாதத்தில் இராமாநுஜர் தகுந்த புராண ஆதாரங்களுடன் திருமலையில் எழுந்தருளிய ஸ்வாமி விஷ்ணு வடிவமே என்று நிரூபித்தார். இவ்வாதத்தில் நடைபெற்ற விஷயங்களை எல்லாம் ஒன்று சேர்த்து "வேங்கடாசல இதிஹாசமாலை" என்ற நூலாக இயற்றினார். இந்நூலிலுள்ள சில விவரங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

1. தாரகாசுரனை அழித்ததனால் ஏற்பட்ட தோஷத்தை நீக்கிக் கொள்ள குமாரஸ்வாமி சிவனின் ஆணைப்படி வேங்கடாசலத்திற்கு வருகை புரிந்து, அங்குள்ள புஷ்கரணியின் தெற்குப் பகுதியில் நின்று தவம் புரிந்தார் என்றும், அதனால் அங்குள்ள புஷ்கரணிக்கு "ஸ்வாமி புஷ்கரணி" எனப் பெயர் ஏற்பட்டது என்று சைவர்களின் ஒரு வாதம். இதற்கு அவர்கள் வாமன புராணத்திலுள்ள

*''மமாபி தபஸோ யோக்யம் க்ஷேத்ரம் ப்ரூஹி ஸுபான்விதம்''*[1]– *''ஜகாம சிகிநா தஸ்மாத் குமாரோ வ்ருஷபாசலம்''*[2] முதலான சில வாக்கியங்களை உபயோகித்தனர்.[3] பீமசேனா சப்தத்தில் பீம சப்தம், சத்யபாமா சப்தத்தில் சத்ய சப்தம் உள்ளது போன்று, குமாரஸ்வாமி சப்தத்தில் ஸ்வாமி சப்தம் இங்கு கோனேரி பெயரில் வந்து "ஸ்வாமி புஷ்கரணி" எனும் பெயர் உண்டாயிற்று என்றும், ஆதலால் திருமலை க்ஷேத்திரம் சிவக்ஷேத்திரமேயன்றி விஷ்ணு க்ஷேத்திரம் அல்ல என்று வாதிட்டனர்.[4]

ஸ்ரீ ராமாநுஜர் அவ்வாதத்தை மறுத்து திருமலை கோனேரி "ஸ்வாமி புஷ்கரணி"யே என்பதற்கு வாமன புராணத்திலுள்ள

*''அஸ்தி வேங்கடாசலோ நாம ப்ரதித: பர்வதோத்த: ஸ்வாமி புஷ்கரிணீ நாம ஸரஸீ ஸர்வகாமதா, த்ரைலோக்ய வர்தினாம் ப்ரஹ்மன் தீர்தானாம் ஸ்வாமினீ ஹி ஸா, ஸ்வாமி புஷ்கரிணீத்யேதத் நாமதேயம் ச த க்ருதம்''*[5]

என்ற சுலோகத்தைக் கூறி "ஸ்வாமி புஷ்கரணி" என உருவாகக் காரணங்களையும் எடுத்துரைத்தார்.[6]

மேலும், வராஹபுராணம், ஸ்காந்த புராணம் போன்ற புராணங்களிலிருந்து பல உண்மைகளை வெளிப்படுத்தி நிரூபித்தார். மலைமீதுள்ள புஷ்கரணிக்குத் தெற்குப் பகுதியில் உள்ள ஸ்வாமி குமாரஸ்வாமி அல்ல என்றும் நிரூபித்தார். இம்மலை விஷ்ணு க்ஷேத்ரமே என்பதனை வராக, வாமன, பிரம்மாண்ட புராணங்கள் வாயிலாக பல உண்மைகளுடன் உறுதிப்படுத்தினார். ரிக்வேதத்தில் *''அராயி காணே விகடே கிரிம் கச்சஸதான்வே சிரிம்பிடஸ்ய ஸத்வபிஸ்தேபிஷ்ட்வா சாதயாமஸி''*[7] அராயி காணே எனும் ஒரு சூக்தத்தைக் கூட ஸ்ரீராமாநுஜர் விவரித்துள்ளார்.

இங்கே வேதபுருஷன் பல இன்னல்களுடன் உள்ள ஒரு மனிதரைப் பார்த்து இவ்வாறு உபதேசிக்கிறார். இன்னலுற்றிருக்கும் நீ பக்தர்களுடன் கலந்து ஸ்ரீநிவாசன் நிவாசமான திருமலைக்குச் சென்று உம் இன்னல்களை சமர்ப்பித்துக் கொள் உம் வேண்டுகோள் நிறைவேறும்.

இந்த "சிரிம்பிடஸ்ய" என்ற சொல்லுக்கு சாந்தஸ்வரூபம் என்று பொருள். "ஸ்ரீநிவாசனுடையதே" என்பது இதன் உட்பொருள். ஆகையால், இந்த க்ஷேத்ரம் விஷ்ணுக்ஷேத்ரம் என்று ஸ்ரீ இராமாநுஜர் நிரூபித்தார். வேங்கடாசல க்ஷேத்திரத்திற்கு சம்பந்தபட்ட விஷயங்கள் பவிஷ்யோத்தர புராணத்திலும்,

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வாமன புராணம் க்ஷேத்ரகண்டாந்தர்கதம் 21-2) முதல் பாகம், பக். 408 தி.தி.தே. வெளியீடு

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வாமன புராணம் க்ஷேத்ரகண்டாந்தர்கதம் 21-101) முதல் பாகம், பக். 418 தி.தி.தே. வெளியீடு

3. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.5

4. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை பக்.4, 5

5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வாமன புராண க்ஷேத்ர கண்டாந்தர்கதம் 44-11, 12, 17) முதல் பாகம், பக் - 556, 557, தி.தி.தே. வெளியீடு

6. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.21

7. ரிக் வேதம் 10-155-1

*அராயி காணே விகடே கிரிம் கச்சேதிதம் விது:*
*ஏவம் வேதமய: ஸாக்ஷாத் கிரீந்த்ர: பன்னகாசல:* [1]

எனும் சுலோகம் நிரூபிக்கின்றது என்று கூட தெரியப்படுத்துகிறார்.[2]

திருமலையில் உள்ள மூர்த்தி ஜடையை கொண்டு உள்ளதால் இந்த ஸ்வாமி தவம் புரியக்கூடிய நிலையில் உள்ள குமாரஸ்வாமி வடிவமே தவிர விஷ்ணு வடிவம் அல்ல என்று சைவர்கள் மற்றொரு வாதம் புரிந்தனர்.[3]

இதற்கு பதிலுரையாக இராமாநுஜர் பாஞ்சராத்ரத்தில் சாத்வதசம்ஹிதை முதற்கொண்டு பாகவதம் முதலான நூல்களிலிருந்து பல உண்மைகளை உதாரணமாகக் கூறி இவ்வாறு ஜடைகளை உடையவர் விஷ்ணுவே என்பதனை நிரூபித்தார். பத்மாவதி பரிணயம் கதையில் வேட்டைக்காரனாக ஸ்ரீநிவாசனின் வடிவத்தை வர்ணிக்கும் போது ***"சிதோஷ்ணீஷலலாடம் ச நாதிதீர்கஜடாதரம்"*** [4] என்பதனைக் குறிப்பிட்டு அந்த ஸ்வாமியும் ஜடையை தரிப்பவன் என்பதனை தெரிவிக்கின்றார்.[5]

வேங்கடாசலத்தில் உள்ள விக்ரகங்கள் நாகாபரணங்களைக் கொண்டவை. ஆகையால் இது விஷ்ணு வடிவமல்ல என்று சைவர்கள் மற்றொரு வாதம் புரிந்தனர்.[6]

இதற்குக் கூட இராமாநுஜர் பத்ம புராணம், பவிஷ்யோத்தர புராணம் ஆகியவற்றிலிருந்து பல ஆதாரங்களை சேகரித்து, எடுத்துக்காட்டி திருவேங்கடவன் மேனியில் நாகாபரணங்கள் இருப்பது சர்வசாதாரண விஷயமென்று தெரியப்படுத்தி சைவர்களின் வாதங்களை மறுத்தார்.

பத்ம புராணத்தில் பத்ம சரோவரத்தில் ஸ்ரீநிவாசர் தோன்றியதை வர்ணிக்கும் இடத்திலும் ***சங்கசக்ரகதாம்போஜராஜத் கரசதுஷ்டய:, நாகை (நவை) ரபினவைகல்பை: தபனீயமயாம் சுகை:*** [7] என்பதையும் பவிஷ்யோத்தர புராணத்தில் ஸ்ரீநிவாச பத்மாவதியின் கல்யாணத்தின் போது ஆகாசராஜன் ஸ்ரீநிவாசருக்கு நாகாபரணத்தை காணிக்கையாக வழங்கியதைத் தெரிவிக்கும் ***"நாகாபரணயுக்மம் ச பாஹுபூராதிகாம் ஸ்ததா"*** [8] என்கிற வசனத்தை இராமாநுஜர் விவரிக்கிறார்.[9]

(4) மலை மீது உள்ள அர்ச்சை வடிவில் கைகளில் சங்கு சக்கரங்கள் இல்லை. அதனால் இம்மூர்த்தி விஷ்ணு வடிவம் அல்ல, சிவ வடிவமே என்று சைவர்களின் மற்றொரு வாதம் [10]

---

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணம் தீர்தகண்டாந்தர்கதம் 4-21,22) இரண்டாம் பாகம், பக்.294, தி.தி.தே. வெளியீடு
2. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.18
3. ஸ்ரீவேங்கடேசல இதிஹாசமாலை, பக்.9
4. ஸ்ரீசாத்வதஸம்ஹித 12-161
5. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.56
6. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.9
7. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பாத்ம புராண க்ஷேத்ரகண்டாந்தர்கதம் 26-44,45) முதல் பாகம், பக்.223 தி.தி.தே. வெளியீடு
8. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்ர புராணதீர்தகண்டாந்தர்கதம் 11-346) இரண்டாம் பாகம், பக்.404 தி.தி.தே. வெளியீடு
9. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.64,65
10. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.9

இவ்வாதத்திற்கு ஸ்ரீராமாநுஜர் பிரம்மாண்ட புராணத்தில் தொண்டைமான் சக்கரவர்த்தியை உதாரணமாகக் காட்டி சைவர்களின் வாதத்தைத் தவிர்த்தார். தொண்டைமான் சக்ரவர்த்தி வேங்கடவனின் பக்தர். ஒரு முறை தன் பகைவர்களுடன் போர் புரிய வேண்டியதாயிற்று. அப்பகையாளிகள் மிகவும் வலிமையுடையவர்களாவர். அவர்களை வெற்றி பெற திருவேங்கடமுடையானை வணங்கி, ஸ்வாமியிடம் உள்ள சங்கு சக்கரங்களை உதவியாகப் பெற்று கொண்டார். அப்போரில் தொண்டைமான் வெற்றி பெற்றார். பின்னர் ஸ்வாமி தனக்கு உதவி புரிந்ததன் நினைவாக, ஸ்வாமி கரங்களில் சங்கு சக்கரங்களை தரிக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க திருவேங்கடவன் தன் கரங்களில் சங்கு சக்கரங்களை தரிக்காமல் உள்ளார். ஆகையால், மலைமீதுள்ள ஸ்வாமியின் கரங்களில் சங்கு சக்கரங்கள் இல்லை. இவ்வாறு இராமாநுஜர் செய்திகளைக் கூறி நிரூபித்தார்.

***"தர்மசயான் பக்தவாத்ஸல்யம் யோ ததௌ ஹஸ்தகே சுபே, சங்க சக்ரே ந்ருபேந்த்ராய சக்ரவத்தீதியம் விது: அத ஏவாரி சங்காப்யாம் த்ருச்யேதே ரஹிதௌ கரௌ"*** [1] எனும் பிரம்மபுராண வசனங்களையும் கூறினார்.[2]

அதுமட்டுமின்றி மலை மீதுள்ள விக்ரகத்தில் சங்கு சக்கரங்கள் உள்ளன என்ற விஷயத்தையும் இராமாநுஜர் ஆதாரப் பூர்வமாகச் சுட்டிக் காட்டினார். ஸ்ரீசடகோபன் எழுதிய "சஹஸ்ரகாதை"யில் உள்ள ஒரு பாசுரத்தையும் விளக்கினார். ஸ்ரீசடகோபன் எழுதிய "திருவாய்மொழி" (6–10–2) என்னும் நூல் மலை மீதுள்ள ஸ்வாமியின் வடிவினை ***"கூராய் நீராய் நிலனாகி கொடு வல்லசுரர் குலமெல்லாம் சீரா வெரியும் திருநேமி வலவா"*** [3] எனும் பாசுரத்தில் "கொடிய அசுரர்களை பஸ்மம் ஆக்கி, சுதர்ஷன சக்கரத்தை வலக்கையில் ஏந்திய ஸ்வாமியே என்று புகழ்ந்துள்ளார். இக்கருத்தால் மலை மீதுள்ள மூர்த்தி சங்கு சக்கரங்களைத் தரித்தவர் என்று புலனாகிறது. மற்றொரு பாசுரத்தில் மலைமீது ஸ்வாமி எழுந்தருளியுள்ளதை "அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியார் வாழ்மின் என் திருப்பாதங்களில் சேர்ந்து பக்தர்களே சரணடையுங்கள் என்பதையும் கவனித்தல் வேண்டும். இது "மத்பாதௌ சரணம் வ்ரஜ" என்பதையும் தெரியப்படுத்தப்படுகின்றது என்பதையும், இதனால் கூட ஸ்ரீநிவாசர் தன் கரங்களால் பாதங்களை காண்பித்து மலைமீதுள்ள ஸ்வாமியின் வடிவம் விஷ்ணுவே என்று தெளிவாகிறது என்று இராமாநுஜர் விளக்கினார்.[4] இவ்வாறு ஏழுமலையில் எழுந்தருளிய ஸ்ரீ ஸ்ரீநிவாசர் சாட்சாத் விஷ்ணு வடிவமே என்று நிரூபிக்க பகவத் இராமாநுஜர் பல்வேறு புராணங்களில் இருந்து பல ஆதாரங்களை சேகரித்தார். தற்போது உள்ள நூல்களில் சுலோகங்கள், ஆதாரங்கள் இல்லாமலும் இருக்கலாம்.

இராமாநுஜர் அன்று யாதவ ராஜா சபையில் நிரூபிக்க இந்த ஆதாரங்களை எவ்வாறு திரட்டி இருப்பார்? அப்பொழுது இந்த ஆதாரங்கள் புராணங்களில் கிடைத்திருக்கும். ஆகையால் தான் அவர் நிரூபித்தார். இந்த பொருத்தமான வாதமே பிரம்மாண்டாதி புராணத்தில் ஆஞ்சநேய ஸ்வாமி – பிறந்தத் தலத்திற்கு தொடர்புடைய ஆதாரங்களுக்கான தகவல்களுக்கு பொருந்தக் கூடியதாக விளங்குகிறது.

******

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம புராணாந்தர்கதம் 7-7,8) இரண்டாம் பாகம், பக்.24 தி.தி.தே. வெளியீடு

2. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.49. 3. திருவாய்மொழி 6-10-11. 4. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, பக்.47

ஆகாச கங்கைக்கு நேர்முகமாக அஞ்ஜனாதேவி தவம்புரிதல்



# அத்தியாயம் - 6

# 6. புராணச் சான்றுகள்

தெலுங்கு மூலம்
பேராசிரியர் விரிவென்டி முரளீதர சர்மா
பேராசிரியர் ராணி சதாசிவ மூர்த்தி

தமிழாக்கம்
திரு. ல. வெங்கடேசன்,
முனைவர். ஆ. அரங்கராஜன்

இந்திய இலக்கியங்களில் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தை உறுதி செய்வதற்குக் கிடைக்கும் பலவித ஆதாரங்களில் மிகவும் முக்கியமானது இலக்கியங்களைச் சார்ந்த ஆதாரங்களாகும். அவை இதிகாசம், புராணம், பிற்காலங்களில் வந்த பக்தி இலக்கியங்கள், கல்வெட்டுகளில் உள்ள எழுத்து ஆதாரங்கள் – முதலியவை. இவற்றில் தற்பொழுது இதிகாசம் மற்றும் புராணங்களில் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தை நிர்ணயிப்பது குறித்து இருக்கும் நிகழ்வுகளை நிரூபிப்பதற்கே இந்த முயற்சி.

திருவேங்கடமுடையான் புராண புருஷர். புராணங்களில் பிரீதி உடைவர். புராணங்களால் போற்றப்படுபவர். ஆதலால், ஸ்ரீநிவாஸரைப் பற்றி கூறுவதென்றால் வேதம் மற்றும் புராணங்களைக் காட்டிலும் மிகவும் தொன்மையான நூல்கள் வேறு எதுவும் கிடையாது எனலாம். இந்தப் புராணங்களில் ஆஞ்ஜனேயரின் பிறப்பு பற்றியும், ஹனுமனின் பிறப்பிடத்திற்கும் வேங்கட மலைக்கும் இருக்கும் தொடர்பு பற்றியும் பல தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன. இந்தத் தகவல்களை கதை மற்றும் புவியியல் என்று இரண்டு விதமாகப் பிரித்துக் கொள்ளலாம்.

ஹனுமனின் வாழ்க்கை வரலாறு குறித்து வேங்கடாசல மாஹாத்மியத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வேங்கடாசல மாஹாத்மியம் என்ற நூல் பல்வேறு புராணங்களிலிருந்து திருவேங்கடவனின் மகிமையைத் தெரிவிக்கும் தொகுப்பு நூலாகும். ஸ்காந்த, வராஹ, பிரம்மாண்ட புராணங்களிலிருந்து பலவிதமான விஷயங்களை எடுத்து தொகுத்த இந்நூல் ஆஞ்ஜனேய ஸ்வாமியின் பிறப்பைப் பற்றி தெரிவிக்கின்றது. மதங்க மஹரிஷி கூறியபடி அஞ்ஜனா தேவி வேங்கட மலைக்கு வருவது, அங்கு தவம் செய்வது, ஆஞ்ஜனேயரைப் பெற்றெடுப்பது, அதற்கு அனுகூலமாக அந்த மலைக்கு “அஞ்ஜனாத்ரி” என்று பெயர் வருவது, சூரியதேவனை பிடிப்பதற்காக பாலாஞ்ஜனேய ஸ்வாமி வேங்கட மலையில் இருந்து தாவுவது (மேலே பறப்பது), ஸ்ரீராமரின் தரிசனத்திற்குப் பிறகு சீதையைத் தேடும் பொழுது வேங்கடமலைக்கும் வருவது, அங்கு அஞ்ஜனா தேவியை மறுபடியும் தரிசிப்பது, வானர வீரர்கள் வைகுண்ட குகையில் நுழைவது என இப்படி அனேக விஷயங்கள் வேங்கடாசல மாஹாத்மியத்தால் தெரியவருகிறது. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் தெரிவிக்கின்ற விவரங்களோடு இந்த புராண விவரங்களை ஒப்பிடுவதன் மூலம் அவர் பிறந்த இடம் எதுவாக இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அதே போன்று பாரமார்த்திக உபநிஷத் பாஷ்யத்தில் மேற்கோள் காட்டப்பட்ட பத்ம புராணத்தின் பகுதிகளும் கூட இந்த விஷயத்தைத் தெரியப்படுத்துகின்றன.

இந்தப் புராண விஷயங்கள் எல்லாவற்றையும் முறையாக ஆராய்ந்தால் அவர் பிறந்த இடம் எது என்பது சரியாகத் தெரியவரும். ஸ்ரீநிவாஸனின் இருப்பிடமான வேங்கடாசலத்தைப் பற்றிய குறிப்பு மேல்வரும் 12 புராணங்களில் இருக்கின்றது.

## திருவேங்கடத்திற்கு இருக்கும் பல விதமான பெயர்கள்

திருவேங்கட மலைக்கு பல்வேறு காரணங்களால் எண்ணற்ற பெயர்கள் ஏற்பட்டன. அவ்வாறே காலமாற்றங்களாலும் இந்த பெயர் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மலைக்கு பலவித காரணங்களால் ஏற்பட்ட 12 பெயர்களை வராஹ புராணம் கூறுகின்றது.

*சிந்திதஸ்ய ச ஸித்த்யா து சிந்தாமணிமிமம் விது:*
*கேசித் ஜ்ஞானப்ரதத்வாச்ச ஜ்ஞானாத்ரிரிதி தம் விது:*
*ஸர்வதீர்தமயத்வாச்ச தீர்தாத்ரிம் ப்ராஹு ருத்தமா:*
*புஷ்கராணாம் ச பாஹுள்யாத் கிராவஸ்மிந் ஸரஸ்ஸு வை*

*புஷ்கராத்ரிம் ப்ரஸம்ஸந்தி முநயஸ்தத்வ தர்ஸின:*
*கிராவஸ்மின் ஸ்பஸ்தேபே தர்மோSஸ் வாபி விருத்தயே*
*தஸ்மாதாஹுர்வ்ருஷாத்ரிம் தம் முனயோ வேதபாரகா:*
*ஸாதகும்பஸ்வரூபத்வாத் கனகாத்ரிம் ச தம் விது:*

*த்விஜோ நாராயண : கஸ்சித்தப: க்ருத்வா மஹத்புரா*
*ஐச்சதஸ்ய ஸ்வநாம்னா ச வ்யபதேசம் முராரித:*
*தஸ்மான் நாராயணாத்ரிம் தம் விதுருத்தமபூருஷா:*
*வைகுண்டாதாகதத்வேன வைகுண்டாத்ரிரிதி ஸ்ம்ருத:*

*ஹிரண்யாக்ய விநாஸாய ப்ரஹ்லாதானுக்ரஹாய ச*
*நாரஸிம்ஹாக்ருதிர்ஜக்ஞே யஸ்மாதஸ்மாத் ஸ்வயம் ஹரி:*
*ஸிம்ஹாசல இதி ப்ராஹுஸ்தஸ்மாதேனம் முனீஸ்வரா:*
*அஞ்ஜனா ச தப: க்ருத்வா ஹனூமந்தமஜீஜனத்*

*ததா தேவஸ்ஸமாகத்ய தேவஸாஹாய்ய காரகம்*
*யஸ்மாத் புத்ர மஸூதா-ஸௌ ஜகுஸ்தஸ்மாதிமம் கிரிம்*
*அஞ்ஜனாத்ரிம் வராஹாத்ரிம் வராஹக்ஷேத்ர லக்ஷ்மத:*
*நீலஸ்ய வானரேந்த்ரஸ்ய யஸ்மாந்னித்ய மவஸ்திதி:*
*தஸ்மாந்நீல கிரிம் நாம்நா வதந்த்யேநம் மஹர்ஷய:* [1]

நினைத்தமாத்திரத்திலேயே இந்த மலை பலன் தருவதால் சிந்தாமணி என்று அழைக்கப்படுகிறது. வேறுசிலர் இந்த மலை ஞானத்தை அளிப்பதால் ஞானாத்ரி என்று சொல்லுகிறார்கள். மகிமை பொருந்திய தீர்த்தங்கள் இருப்பதால் இந்த மலையை தீர்த்தாத்ரி என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராணம் பிரதமபாகாந்தர்கதம். 36-20-30) முதல் பாகம், பக்கம் 13-14, தி.தி.தே. வெளியீடு

தத்வத்தை அறிந்தவர்களான முனிவர்கள், இந்த மலையில் உள்ள ஏரிகளில் தாமரை பூக்கள் அதிகமாக இருப்பதால் இந்த மலையை புஷ்கராத்ரி என்று அழைக்கிறார்கள். வேதங்களை முழுவதுமாக அறிந்த முனிவர்கள், ஒரு சந்தர்ப்பத்தில் தர்மன் கூட இம்மலையில் தவம் செய்ததால் வ்ருஷாத்ரி என்று கூறினார்கள். தங்கம் போன்று இருப்பதால் கனகாத்ரி என்று சொல்லுகிறார்கள். முன்பு நாராயணன் என்ற ஓர்அந்தணன் கடுந்தவம் இயற்றி தன்னுடைய பெயரினாலேயே அந்த மலை அழைக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதனால் பெருமாள் அவ்வாறே ஆகட்டும் என்று அருள் புரிந்தார். அதனால் இம்மலையை நாராயணாத்ரி என்று மகான்கள் கூறுகிறார்கள். திருவைகுந்தத்திலிருந்து கொண்டு வந்ததினால் வைகுண்டாத்ரி என்றும், இரண்யகசிபுவை வதம் செய்து, பிரகலாதனுக்கு அருள் புரிவதற்காக ஸ்ரீமன் நாராயணன் தானாகவே இங்கு நரசிம்ம வடிவில் அவதாரம் செய்ததனால் சிம்ஹாசலம் என்றும் முனிவர்கள் இம்மலையை அழைக்கிறார்கள். இம்மலையில் தான் அஞ்ஜனா தேவி தவம் இயற்றி ஆஞ்ஜனேயருக்கு பிறப்பை கொடுத்தருளினாள். ஆதலால் இம்மலைக்கு அஞ்சனாத்ரி என்றும், இது வராஹ க்ஷேத்ரமாகையால் அதனுடைய நினைவாக வராஹாத்ரி என்றும் கூறுகிறார்கள். இங்கு நீலன் என்ற பெயருடைய வானரத் தலைவன் நித்ய வாசம் செய்வதினால் நீலகிரி என்றும் இம்மலையை மஹரிஷிகள் கூறுகிறார்கள்.

*வேங்காரோSம்ருத பீஜஸ்து கடமைஸ்வர்ய முச்யதே*
*அம்ருதைச்வர்ய ஸங்கத்வாத் வேங்கடாத்ரிரிதி ஸ்ம்ருத:*
*யத: கதாசித் தேவானாம் ஸ்ரீநிவாஸ இஹா பபௌ*
*ஸ்ரீநிவாஸ கிரிம் ப்ராஹுஸ் தஸ்மா தேனம் திவௌகஸ:*

*ஆனந்தாத்ரி மிமம் ப்ராஹு: வைகுண்ட புரவாஸின:*
*ப்ராஹுர்பகவத: க்ரீடா ப்ராசுர்யாத்து ததா ஸுரா:*
*ஸ்ரீ ப்ரதத்வாத்ச்ச்ரியோ வாஸாத் சப்த சக்த்யா ச யோகத:*
*ரூட்யா ஸ்ரீசைல இத்யேவம் நாம சாஸ்ய கிரேரபூத்*

*பஹூனி சான்ய நாமானி கல்ப பேதாத் பவந்தி ஹி*
*யாவ துக்தா பகவத: கல்யாண குணராசய:*
*தாவன்தோSஸ்ய கிரேஸ்ஸந்தி குணா: பரம பாவனா:*
*அஸ்ய வேங்கட சைலஸ்ய மாஹாத்ம்யம் யாவதஸ்தி ஹி:*

*தாவத்வக்தும் ச கார்த்ஸ்யேன ந ஸமர்தஸ்ச்சதுர்முக:*
*சண்முகச்ச ஸஹஸ்ராஸ்ய பணீதேவா: பரேகிமு?*
*ச்ருத்வா ஸூதமுகாச்சைவம் முநயோ ஹ்ருஷ்ட மாநஸா:*
*ந த்ருப்தி மாயயுஸ்தே ஹி பூயா ச்ச்ரவண கௌதுகாத்* [1]

வேம் என்றால் அம்ருதத்தின் விதை என்றும், கட என்றால் ஐச்வர்யம் என்றும் பொருள். அதனால் வேங்கட என்றால் குறைவில்லாத செல்வங்களின் குவியலாக இருப்பதால் வேங்கடாத்ரி என்று அழைக்கப்படுகிறது.

---

1. வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராணம், பிரதமபாகாந்தர்கதம் 36-20-30) முதல் பாகம்,- பக்கம்-14-15. தி.தி.தே. வெளியீடு

ஒரு முறை தேவர்கள் அனைவருக்கும் ஸ்ரீநிவாஸன் இங்கு தரிசனம் கொடுத்ததினால் இம்மலையை ஸ்ரீநிவாஸகிரி என்று தேவர்கள் அழைக்கிறார்கள். வைகுண்ட வாசிகள் பெருமாளுடைய எண்ணற்ற லீலைகளை (விளையாட்டு) இந்த மலையில் காண்பதால் இதனை ஆனந்தாத்ரி என்று அழைக்கிறார்கள். அனைத்து செல்வங்களையும் கொடுப்பதனாலும், ஸ்ரீ லக்ஷ்மி தேவிக்கு இருப்பிடமாக இருப்பதனாலும், சொல் வளம், பொருள் வளம், இயற்கை வளம் நிரம்பி இருப்பதனாலும் இம்மலைக்கு ஸ்ரீசைலம் என்ற பெயர் வந்தது.

இவ்வாறாக கால மாற்றத்தினாலும் வேறுபாட்டாலும், ஏனைய காரணங்களினாலும் இம்மலைக்கு பல பெயர்கள் உள்ளன. பகவானுடைய கல்யாண குணங்கள் எப்படி எண்ணிக்கை அற்றதோ அப்படியே இம்மலைக்கு மிகுந்த பவித்ரமான பலவித குணங்கள் இருக்கின்றன. இந்த வேங்கடாசல மலைக்கு எந்தெந்த பெருமைகள் இருக்கின்றனவோ இந்த வேங்கடாத்ரி மலையினுடைய பெருமைகள் அனைத்தையும் கூறுவதற்கு நான்கு முகங்கள் உடைய பிரம்ம தேவனாலேயே முடியாது என்றால், ஆறுமுகங்களை உடைய முருகனுக்கும், ஆயிரம் முகங்களை உடைய ஆதிசேஷனுக்கும், மற்றைய தேவர்களுக்கும் முடியாது என்பது தனியாகச் சொல்ல வேண்டுமா!

என்று சூதர் சொல்ல, முனிவர்கள் மிகுந்த சந்தோஷத்தை அடைந்த மனதை உடையவர்களாய், மீண்டும் கேட்க வேண்டும் என்ற சந்தோஷத்தோடு மனநிறைவு அடையாதவர்கள் ஆயினர்.

அலங்கார மணிஹாரம் என்ற நூலில் கூறிய இருபது பெயர்கள் இவ்விதமாக உள்ளன.

*ஸ்ரீவேங்கட கிரிர் நாம க்ஷேத்ரம் புண்யம் மஹீதலே இத்யுபக்ரம்ய*
*அஞ்சனாத்ரிர் வ்ருஷாத்ரிச் ச வேதாத்ரிர் கருடாசல:*
*தீர்த்தாத்ரி: ஸ்ரீநிவாஸாத்ரி ஸ்சிந்தாமணி கிரிஸ்ததா*
*வ்ருஷபாத்ரிர் வராஹாத்ரிர் ஞானாத்ரி: கனகாசல:*
*ஆனந்தாத்ரிஸ்ச நீலாத்ரி:க்ரீடாத்ரி: புஷ்கராசல:*
*ஸிம்ஹாசலஸ்ச ஸ்ரீசைலஸ்ததா நாராயணாசல:*
*வைகுண்டாத்ரிஸ் சேஷசைல இதி நாமானி விம்சதி:* [1]

இதனால் இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்ரமான வேங்கடாத்ரி மலையே அஞ்ஜனாத்ரி, வ்ருஷாத்ரி, வேதாத்ரி, கருடாசலம், தீர்த்தாத்ரி, ஸ்ரீநிவாஸாத்ரி, சிந்தாமணிகிரி என்று அப்படியே வ்ருஷபாத்ரி, வராஹாத்ரி, ஞானாத்ரி, கனகாசலம், ஆனந்தாத்ரி, நீலாத்ரி, க்ரீடாத்ரி, புஷ்கராசலம் என்றும், அப்படியே சிம்ஹாசலம், ஸ்ரீசைலம், நாராயணாசலம், வைகுண்டாத்ரி, ஸ்ரீசைலம் எனப் பல பெயர்கள் இம்மலைக்கு இருக்கின்றன.

---

1. அலங்கார மணிஹாரா: முதல் பாகம், பக்கம் 25

(அஞ்ஜனாத்ரிர்வ்ருஷாத்ரிச்சா சேஷாத்திரிர் கருடாசல: தீர்த்தாத்ரி: ஸ்ரீநிவாசாத்ரிச்சிந்தாமணிகிரிஸ்த்ததா 21, வ்ருஸபாத்ரிர்வராஹாத்ரிர்அஞ்ஜநாத்ரி: கனகாசல: ஆனந்தாத்ரிச்ச நீலாத்ரி: சுமேரு சிகராசல: 22, வைகுண்டாத்ரி: புஷ்கராத்ரிரிதி நாமானி விம்ஸதி:) சுலோகங்கள் வேங்கடாசல மாஹாத்மியம் சதுர்த்த பாகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. இவற்றில் பதினாறு நாமங்களே உள்ளன. இது தவறான பாடம் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

*க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி த்ரேதாயாம் அஞ்ஜனாசலம்*
*த்வாபரே சேஷசைலேதி கலௌ ஸ்ரீ வேங்கடாசலம்* [1]

*அஞ்ஜனா ச தப: க்ருத்வா ஹனுமந்தமஜீஜனத்*
*ததா தேவாஸமாகத்ய தேவஸாஹாய காரகம்*
*யஸ்மாத் புத்ர மஸுதாSஸௌ ஜகு :தஸ்மாத்இமம் கிரிம்? அஞ்ஜனாத்ரிம்* [2]

வியாச மஹரிஷி இந்த மலையை க்ருத யுகத்தில் வ்ருஷாத்ரி என்றும், த்ரேதா யுகத்தில் அஞ்ஜனாசலம் என்றும், த்வாபர யுகத்தில் சேஷசைலம் என்றும், கலியுகத்தில் வேங்கடாசலம் என்றும் போற்றுகிறார். அதாவது அஞ்ஜனாதேவி மகனைப் பெற்ற மலை ஆகையால் இந்த மலை அஞ்ஜனாத்ரி ஆனது.

### அத புத்ரார்த்தம் அஞ்ஜனாகிருத தப :ப்ரகார: - ஸ்ரீ ஸுத உவாச

அஞ்ஜனாதேவி மகனைப் பெறுவதற்காகச் செய்த தபத்தின் முறை விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சூதமுனி கூறினார். குழந்தை இல்லாத காரணத்தினால் அஞ்ஜனாதேவி துயரத்துடன் ஆழ்ந்த தவத்தில் இருந்தாள். அப்படிப்பட்ட அவளை பார்த்த விஷ்ணுபக்தரான மதங்க மஹரிஷி தீவிர தவத்தில் உள்ள அஞ்ஜனாதேவியிடம் இப்படி சொன்னார். ஓ! அஞ்ஜனாதேவியே எழுந்திரு. எந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீ இப்படி தவம் செய்கிறாயோ சொல். அஞ்ஜனாதேவி இவ்வாறாகச் சொன்னாள். முனிஸ்ரேஷ்டரான மதங்க மஹரிஷியே தயவு செய்து என்னுடைய கோரிக்கையைக் கேளுங்கள். என்னுடைய தந்தை கேசரீ அவர் பரம சிவ பக்தர்.

*புத்ரஹீனாSஜனா பூர்வம் து:கிதா தபஸி ஸ்திதா*
*தாம் த்ருஷ்ட்வா முனிசார்தூலோ மதங்கோ விஷ்ணுதத்பர:*
*அஞ்ஜானாக்யாம் உவாசேதம் அத்யுக்ரே தபஸி ஸ்திதாம்*
*ஸமுத்திஷ்டாஞ்ஜனே! தேவி! கிமர்த்தம் தபஸி ஸ்திதா!*
*வத தேவி! மஹாவாகே! கார்யம் தவ வரானனே!* [3]

*மதங்க! முனிஸார்தூல! வசனம் மே ஸ்ருணுஷ்வஹ*
*பிதாமே கேஸரீ நாம ராக்ஷஸ: சிவதத் பர:* [4]

*சைவம் கோரம் தபச: சக்ரே புத்ராத்தம் து ஸுதுஷ்கரம்*
*பார்வதீ ஸஹித: ஸம்புர்வ்ருஷோபரி ஸம்ஸ்தித:*
*ப்ராதுராஸீத்ததா தேவோ ததௌ தஸ்மை வரம் ஸுபம்* [5]

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணாந்தர்கதம் 1-36-37) இரண்டாம் பாகம், பக்.363, தி.தி.தே.

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராகபுராணம் பிரதமபாகாந்தர்கதம் 38-28, 29) முதல் பாகம், பக்-14, தி.தி.தே. வெளியீடு.

3. ஸ்காந்த புராணம் வைஷ்ண கண்டம் 39-1, 2,3

4. ஸ்காந்த புராணம் வைஷ்ண கண்டம் 39-4-6

5. ஸ்காந்த புராணம் வைஷ்ண கண்டம் 39-7-23

ஆண் குழந்தை வேண்டி பரமசிவனை குறித்து கடுமையான தவம் செய்தார். அவருடைய தவத்தினால் மகிழ்ந்த பரமசிவன் பார்வதியுடன் விருஷப வாகனத்தில் அவருக்குக் காட்சியளித்து சுபமான வரத்தை அருளினார்.

**சம்புருவாச**

*ஸ்ருணு ராஜன்! ப்ரவக்ஷ்யாமி விதினா நிர்மிதம் தவ*
*அஸ்மின் ஜன்மந்யபுத்ரத்வம் ததாऽப்யன்யத் ததாமி தே*
*விஸ்ருத ஸர்வலோகேஷு புத்ரீ தவ பவிஷ்யதி*
*தஸ்யா: புத்ரோ மஹாபுத்திஸ்தவ ப்ரீதிம் கரிஷ்யதி*

*இதி தஸ்மை வரம் தத்வா தத்ரைவாந்தர்ததே ஹர:*
*மாம் லப்த்வா மத்பிதா விப்ர: க்ருதக்ருத்யோ பபூவ ஹ*
*தத: காலாந்தரே விப்ர: கேஸர்யாக்யோ மஹாகபி:*
*யயா சே மாம் தத ஸ்வேதி பிதரம் மே தத: பிதா*

*தஸ்மை மாம் தத்தவாம்ஸ்சைவ பாரி பர்ஹம் ததௌ ச ஸ:*
*கவாம் லக்ஷஸஹஸ்ராணி கஜலக்ஷம் மஹாமனா:*
*வாஜீனாமர்புதம் சைவ ரதானாமர்புதம் ததா*
*வஸ்த்ரரத்னான்யனேகானி தாஸதாஸீஸஹஸ்ரகம்*

*அந்த: புரசரீர்னாரீனாருத்ய கீத விஸாரதா:*
*ததௌ வாஸ: ஸஹஸ்ரம் ச மயா சாகம் மஹா மதே*
*பத்யா மே ரமமாணாயா பூயான் காலோ கதோ முனே*
*அபுத்ரா து: கிதா விப்ர! வ்ரதானி விவிதானி ச*

*க்ருதானி ச மயா தத்ர கிஷ்கிந்தாயாம் மஹாபுரி*
*மாகே மாஸி ச விப்ரேந்த்ர! வைஸாகே கார்த்திகே ததா*
*ஸ்நானதானவ்ரதாதீனி சாதுர்மாஸ்ய வ்ரதம் ததா*
*நமஸ்காரஸ்ததா விப்ர! ப்ரதக்ஷிணமனுத்தமம்*

*ஸாலக்ராமான்ன தானானி தீபதானம் ததைவ ச*
*கோதானம் திலதானஞ் ச வஸ்த்ர தானம் மஹாமுனே!*
*பூதானம் வாரிதானஞ்ச தத்வா புஷ்பாதிகம் முனே!*
*யானி யானி ச முக்யானி வைஷ்ணவானி வ்ரதானி ச*

*மயா க்ருதானி ஸர்வானி ஸத்புத்ரபலகாங்க்ஷயா*
*ஸ்ரவணாதிஷு யத்ப்ரோக்தம் வ்ரதம் விப்ரை மஹாத்மபி:*
*மயா க்ருதஞ்ச விபேந்த்ர! துஷ்ட்யர்த்தம் மதுவித்விஷ:*
*யானி யானி ச முக்யானி பலானி விவிதானி ச*

*மயா தத்தானி ஸர்வானி ஸத் புத்ர பல காங்க்ஷயா*
*மயா க்ருதான்யஸங்க்யானி வ்ரதானி விவிதானி ச*
*புத்ரம் ததாப்யலப்த்வாஹம் து:ஹிதா தபஸி ஸ்த்திதா*
*பவிஷ்யதி கதம் விப்ர! புத்ரஸ்த்ரை லோக்ய விஸ்ருத:*

*யாசேSஹம் து முனிஸ்ரேஷ்ட! ப்ரணதா ச தவாக்ரத:*
*வத த்வம் முனிஸார்தூல! தீனாSஹம் தபஸி ஸ்திதா* [1]

பரமசிவன் இவ்வாறு சொன்னார். ஏ அசுர ராஜனே! விதி நியமங்களுக்கு உட்பட்டு உனக்கு இந்த பிறவியில் ஆண் குழந்தையைப் பெறும் பாக்கியம் இல்லை. ஆனாலும் நான் உனக்கு வேறொரு வரம் அளிக்கிறேன். அனைத்து உலகங்களிலும் புகழைப் பெறும்படியான ஒரு பெண் குழந்தையை உனக்கு அளிக்கிறேன். அந்த பெண்ணிடம் பிறக்கும் ஆண் குழந்தை மகாபுத்திமானாக இருந்து உனக்கு மகிழ்ச்சியை ஏற்படச் செய்வான் என்று வரம் அளித்து விட்டு பரமேஸ்வரன் அங்கேயே மறைந்து போனார். அப்படி என்னை பெண்ணாகப் பெற்ற என்னுடைய தந்தை பெரும் பேற்றை அடைந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு கேசரி என்ற பெயருடைய ஒரு வானரவீரன் என்னை தனக்கு மனைவியாகக் கொடுக்கும்படி என்னுடைய தந்தையிடம் கேட்டார்.

பெரிய மனதுடையவரான என்னுடைய தந்தை அந்த வானர வீரனுக்கு என்னை கல்யாணம் செய்துவித்து காணிக்கையாகக் கோடிக்கணக்கான பசுக்களையும், ஒரு லக்ஷம் யானைகளையும், பத்துகோடி எண்ணிக்கையில் குதிரைகளையும் தேர்களையும், அனேக விதமான வஸ்த்ரங்கள் மற்றும் ரத்தினங்களையும், ஆயிரக்கணக்கான வேலைக்காரர்களையும், நாட்டியத்திலும் சங்கீதத்திலும் மிகவும் தேர்ச்சிப் பெற்ற அந்தப்புரத்து பெண்களையும், ஆயிரம் வஸ்த்ரங்களையும் கொடுத்தார். கணவருடன் இன்பமாக இருந்த எனக்கு அனேக வருடங்கள் ஆன பிறகும் குழந்தை பேறு பெறாத நான் கிஷ்கிந்தை மாநகரத்தில் பலவித விரதங்களை மேற்கொண்டேன்.

ஓ முனிவரே கிஷ்கிந்தை நகரத்தில் நான் மாக, வைசாக, கார்த்திகை மாதங்களில் புனித நதி நீராடல், தானங்கள், விரதங்கள், சாதுர்மாஸ்ய விரதங்கள், நமஸ்காரங்கள், ப்ரதக்ஷிணங்கள், சாளக்ராம தானங்கள், அன்னம், தீபம், பசு, எள், வஸ்த்ர தானங்கள், ச்ராவணம் முதலிய மாதங்களில் மகான்களால் உபதேசிக்கப்பட்ட விரதங்கள் முதலியவற்றை ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ரீதிக்காகச் செய்தேன். பூமி, தண்ணீர் மற்றும் புஷ்பங்கள் முதலிய எண்ணற்ற தானங்களைச் செய்தேன். நல்ல ஆண் குழந்தையைப் பெற வேண்டி விஷ்ணு சம்பந்தமான முக்கிய விரதங்களைச் செய்தேன்.

பலவிதமான, எண்ணற்ற, விதவிதமான விரதங்களைக் கடைபிடித்தேன். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ப்ரீதிக்காக முக்கியமான பலவித பழங்களை தானம் செய்தேன். நல்ல ஆண்மகனைப் பெற வேண்டி பல விதமான எண்ணற்ற விதவிதமான விரதங்களை அனுஷ்டித்தேன்.

1. ஸ்காந்த புராணம், ஸ்ரீவைஷ்ணவ கண்டம் 39-7-23

அப்படி அனுஷ்டித்த போதும் ஆண் குழந்தையைப் பெற முடியாமல் துக்கத்துடன் கடைசியில் தவம் செய்து கொண்டுள்ளேன். ஏ முனி புங்கவரே! மூன்று உலகங்களிலும் புகழைப் பெறும் ஆண் குழந்தை எனக்கு எப்படி கிடைப்பான். தவம் செய்து இறுதியாக உங்கள் முன் தலை வணங்கி பிரார்த்திக்கின்றேன். எனக்கு சொல்வீராக –

**ஶ்ரீஸூத உவாச**

*ஏவம் வதந்தீம் தாம் ப்ராஹ மதங்கோ முனிஸத்தம:*
*ஸ்ருணுமத்வசனம் தேவி! புத்ர பௌத்ர ப்ரதாயகம்*
*இதோ தக்ஷிண திக்பாகே தஸயோஜன தூரத:*
*கணாசல இதிக்யாதோ ந்ருஸிம்ஹஸ்ய நிவாஸ பூ:*

*தஸ்யோபரி மஹாபாகே ப்ரஹ்ம தீர்த்தம் மனோஹரம்*
*தஸ்யாபி பூர்வ திக்பாகே தசயோஜன மாத்ரத:*
*ஸுவர்ணமுகரீ நாம நதீனாம் ப்ரவரா நதீ*
*தஸ்யா ஏவோத்தரே பாகே வ்ருஷபாசல நாமத:*

*தஸ்யாக்ரே ஸரஸீ நாம்னா ஸ்வாமி புஷ்கரிணீ ஸுபா*
*கத்வா த்ருஷ்ட்வா ஸுபம் தோயம் மந: ஸுத்திம் கமிஷ்யஸி*
*தத்ர ஸ்னாத்வா விதானேன வராஹம் தம் ப்ரணம்ய ச*
*வேங்கடேஸம் நமஸ்க்ருத்ய ததோ கச்ச வரானனே*

*உத்தரே ஸ்வாமி தீர்த்தஸ்ய ஸிம்ஹஸார்தூல ஸம்யுதே*
*சூதபுன்னாக பனஸைர்பகுலாமலக: ஸுபை:*
*சந்தனாகருநிம்பைஸ்ச தாலஹிந்தாலகிம்ஸுகை:*
*கபித்தாஸ்வத்தபில்வைஸ்ச இங்குதைஸ்ச வரானனே*

*ஏதாத்ருசைர் மஹாபுண்யைர் வ்ருக்ஷைஸ்ச விவிதை: ஸுபை:*
*வியத்கங்கேதி விக்யாதம் தீர்த்தம் ஏகம் விராஜதே*
*தஸ்மின் தீர்த்தேऽஞ்ஜனே தேவி! ஸங்கல்ப விதி பூர்வகம்*
*ஸ்னாத்வா பீத்வா ஸுபம் தீர்த்தம் தீர்த்தஸ்யாபி முகீஸ்திதா*

*வாயும் உத்திஸ்ய ஹே தேவி! தப: குரு வரானனே*
*தேவைஸ்ச ராக்ஷஸைர் விப்ரைர்முனுஜைர்முனி ஸத்தமை:*
*ப்ருங்கை: பக்ஷிபிரஸ்த்ரைஸ்ச ஸஸ்த்ரைஸ்ச விவிதை: ஸுபை:*
*அவத்யோ பவிதா புத்ரஸ்தபஸ்யான்தே ந ஸம்ஸய:* [1]

துன்பமுடன் தன்னிடம் பிரார்த்தித்த அஞ்ஜனா தேவியிடம் அந்த முனிபுங்கவர் இப்படிச் சொன்னார். ஓ அஞ்ஜனா தேவி! மகன் மற்றும் பேரன்களை அருளும் நல்வார்த்தையைச் சொல்கிறேன் கேள்.

1. ஸ்காந்த புராணம், ஶ்ரீவைஷ்ணவ கண்டம் 39-24-35

இங்கிருந்து தெற்கு திசையில் பத்து யோஜனை தூரத்தில் (சுமார் 80 மைல்) நரசிம்ம ஸ்வாமியின் இருப்பிடமான "கணாசலம்" என்ற மலை உள்ளது. அதன் மேல் மிகவும் அழகான பிரம்ம தீர்த்தம் இருக்கின்றது. அந்த பிரம்ம தீர்த்தத்திற்கு கிழக்கு திசையில் 10 யோஜனை தூரத்தில் நதிகளில் உயர்ந்ததான "ஸுவர்ணமுகரீ" என்ற நதி ஒன்று உள்ளது. அந்த நதியின் வடக்கு திசையில் வ்ருஷபாத்ரி என்ற மலை உள்ளது.

அந்த மலையின் மேல் மங்களகரமான ஸ்வாமி புஷ்கரிணீ என்ற பெயருடைய குளம் (தீர்த்தம்) உள்ளது. அக்குளத்தின் தீர்த்தத்தை தரிசித்தாலே உன்னுடைய துன்பமெல்லாம் தொலைந்து சந்தோஷத்தை அடைவாய். அந்த புஷ்கரணியில் நீராடி அங்கிருக்கும் ஸ்ரீ வராஹப் பெருமாளையும், ஸ்ரீநிவாஸனையும் முறைப்படி வணங்கி, அந்த புஷ்கரணிக்கு வடக்கு திசையில் மா, ஜாதிக்காய், பலா, வேப்பமரம் முதலான மரக் கூட்டங்களோடு சிங்கம் முதலான விலங்குகள் வாழும் "ஆகாஸ கங்கை" என்ற தீர்த்தம் ஒன்று உள்ளது. ஓ அஞ்ஜனாதேவி! அந்த புண்ணிய தீர்த்தத்தில் முறைப்படி சங்கல்பம் செய்து நீராடி விட்டு, தீர்த்தத்தை பருகி (ஆசமனம் செய்து) அதற்கு எதிராக நின்று கொண்டு, வாயு தேவனை குறித்து தவம் செய். அந்த தவத்தின் பயனாக உனக்கு தேவ, ராக்ஷஸ, பிராம்மண, முனிவர்கள் மூலமாகவோ வண்டுகள், பறவைகள் மூலமாகவோ, பலவித அஸ்த்ரங்கள் மற்றும் ஆயுதங்கள் மூலமாகவோ யாராலும் கொல்ல இயலாத மகன் நிச்சயம் கிடைப்பான். என்னுடைய வார்த்தையில் உனக்கு எந்த விதமான சந்தேகமும் வேண்டாம்.

**ஸுத உவாச**

*இதி ப்ரோக்தாSஞ்ஜனா தேவீ தம் ப்ரணம்ய புந: புந:*
*பர்த்ரா ஸாகம் யயாவாஸு வேங்கடாசல ஸஞ்சகம்*
*காபிலம் தீர்த மாஸாத்ய ஸ்நாத்வா நிர்மலமானஸா*
*வேங்கடாத்ரிம் ஸமாருஹ்ய ஸ்வாமி புஷ்கரிணீம் யயௌ*

*ஸ்நாத்வா வராஹமானம்ய வேங்கடேச க்ருதா நதி:*
*மதங்கஸ்ய ருஷேர்வாக்யம் ஸ்மரந்தீ ச முஹுர் முஹு:*
*வியத்கங்காம் யயாவாஸு சாஞ்சனா மஞ்சு பாஷிணீ*
*ஸ்நாத்வா பீத்வா ஸுபம் தோயம் தீரே தஸ்ய ததுன்முகீ:*

*ப்ராண வாயும் ஸமுத்திஸ்ய தபஸ்சக்ரே யதவ்ரதா*
*பலாஹாரா ஜலாஹாரா நிராஹாரா தத: பரம்*
*ஸஹஸ்ராப்தம் தபஸ்சக்ரே ந்யஸ்த நாஸாக்ர த்ருஷ்டிகா*
*வயஸ்யா விபுலா நாம ஸுஸ்ரூஷா மகரோச்சுபா*

*வர்ஷானாம் ச ஸஹஸ்ராம தே வாயுர் தேவோ மஹாமதி:*
*ப்ராதுராஸீஸ்ததா தாம் வை பாஷமாணோ மஹா மதி:*
*மேஷஸங்க்ரமணம் பானௌ ஸம் ப்ராப்தே முனி ஸத்தமா:*
*பூர்ணிமாக்யே திதௌ புண்யே சித்ரா நக்ஷத்ர ஸம்யுதே*

*தவேப்ஸித மஹம் தாஸ்யே வரம் வரய ஸுவ்ரதே*
*இதி தத்வசனம் ஸ்ருத்வா தத: ப்ராஹாஞ்ஜனா ஸதீ*

*புத்ரம் தேஹி மஹா பாக! வாயோ! தேவ! மஹா மதே!*
*தஸ்யாஸ்தத் வசனம் ஸ்ருத்வா மாதரிஸ்வாப்ரவீதத:*

*புத்ரஸ்தேऽஹம் பவிஷ்யாமி க்யாதிம் தாஸ்யே ஸுபாநனே*
*இதி தஸ்யை வரம் தத்வா தத்ரைவாஸ்த மஹாபல:*
*ததா ப்ரஹ்மாதயோ தேவா இந்த்ராத்யா லோகபாலகா:*
*வஸிஷ்டாத்யா மஹாத்மான: ஸனகாத்யாச்ச யோகின:*

*வ்யாஸாதயஸ்ச விபேந்த்ரா லக்ஷ்ம்யா ஸாகம் ஜகத்பதி:*
*முனிபத்ன்யோ தேவ பத்ன்ய ருஷிபத்ன்ய ஸ்ததைவ ச*
*ஸ்வம் ஸ்வம் வாஹன மாருஹ்யதாரப்ருத்ய ஸுதாதிபி:*
*ஆகதாஸ்தே மஹாத்மனோ த்ருஷ்டும் தாம் தபஸிஸ்திதாம்*

*ஆஸ்சர்யமாஸ்சர்ய மிதி ப்ருவாணா ப்ரஹ்மா தயோ தேவ கணாச்ச ஸர்வே*
*ஆலோகயந்தோ திவி தூரதஸ்தே ஸ்திதாஸ்ததா ப்ரஹ்மமஹேஸ முக்யா:* [1]

ஸ்ரீ ஸுத முனிவர் இவ்வாறு சொன்னார். அப்படி மதங்க மஹரிஷியால் ஆணையிடப்பட்ட அஞ்ஜனாதேவி அந்த முனி புங்கவருக்கு பலமுறை நமஸ்காரங்கள் செய்து உடனே கணவருடன் வேங்கடமலைக்குப் பயணமானாள். அஞ்ஜனா தேவி கபில தீர்த்தத்தில் நீராடி விட்டு களங்கமற்ற மனத்துடன் வேங்கட மலை மீது ஏறி ஸ்வாமி புஷ்கரிணியை அடைந்தாள்.

ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி, முதலில் வராஹ ஸ்வாமியை வணங்கிவிட்டு ஸ்ரீநிவாஸரையும் வணங்கி மதங்க மஹரிஷி கூறிய வார்த்தையை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு, ஆகாஸ கங்கையை அடைந்தாள். ஆகாஸ கங்கையில் நீராடி அந்த தீர்த்தத்தைப் பருகி, அந்த தீர்த்தத்திற்கு எதிராக நின்று கொண்டு விதிமுறைப்படி முதலில் பழங்களையும் பிறகு தீர்த்தத்தையும் உணவாக எடுத்துக் கொண்டு, அதன் பிறகு எந்த வித உணவையும் எடுத்துக் கொள்ளாமல் வாயு தேவனைக் குறித்து ஆயிரம் வருடங்கள் தவம் செய்தாள்.

அந்த சமயத்தில் விபுல என்ற பெயருடைய தோழி அவளுக்கு எல்லா உதவியும் செய்தாள் ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு வாயு தேவன் அஞ்ஜனா தேவியின் முன் தோன்றி, சூரியன் மேஷ ராசியில் புகும் போது சித்ரா நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி அன்று நீ கேட்ட வரத்தை கொடுக்கிறேன் என்று கூறினார். இவ்வாறு வாயுதேவனின் வார்த்தையைக் கேட்ட அஞ்ஜனா தேவி வாயுதேவனிடம் கூறினாள்.

ஓ வாயுதேவனே! எனக்கு தயவு செய்து நல்ல ஆண் குழந்தையைக் கொடுப்பாயாக என்று பிரார்த்தனை செய்தாள். அவளின் கோரிக்கையைக் கேட்ட வாயுதேவன் அஞ்ஜனா தேவியே! நானே உனக்கு மகனாகப் பிறந்து உனக்கு புகழ் கிடைக்கும்படிச் செய்கிறேன் என்று கூறி மறைந்து போனார். அந்த சமயத்தில் பிரம்மாதி தேவர்கள், இந்த்ராதிதிக்பாலகர்கள், வஸிஷ்டாதி மஹா

---

1. ஸ்காந்த புராணம், ஸ்ரீவைஷ்ணவ கண்டம் 39-36-50

(மந்த்ராலயம் ஸ்ரீ ராகவேந்தரா மடத்தைச் சேர்ந்தவர்கள் வெளியிட்ட ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் நூலில் மதங்கர் அஞ்ஜனா தேவியிடம் "த்வாதஸாப்த க்ருதம் சர" என்றனர். இந்த நூலிற்கு இரண்டு வ்யாக்யானங்கள் உள்ளன. இவற்றை முடிந்தவரை படித்த போது அஞ்ஜனாதேவி 12 வருடங்கள் தவம் செய்ததாகத் தெரிகிறது, பக்கம் 77-87).

முனிகள், ஸனகாதி யோகிகள் தம் தம் மனைவி மக்கள் மற்றும் வேலைக்காரர்களுடன் தம் வ்யாஸாதி முனிவர்கள், லக்ஷ்மி ஸமேதனரான ஸ்ரீமஹா விஷ்ணு, முனிவர்களின் மனைவிகள், தேவர்களின் மனைவிகள், ரிஷிகளின் மனைவிகள் மற்றும் மஹாத்மாக்கள் தம்முடைய மனைவி மக்களுடன் தம் தம் வாகனங்களில் ஏறி தவம் செய்து கொண்டிருக்கும் அஞ்ஜனா தேவியைப் பார்ப்பதற்கு வந்தார்கள்.

அந்த ஆகாஸ கங்கை அருகில் அஞ்ஜனா தேவி தவம் செய்யும் இடத்திற்கு வந்து, ஆச்சர்யம்! ஆச்சர்யம்! என்று சொல்லிக் கொண்டு பார்த்தார்கள். பிரம்மாண்ட புராணத்தில் அஞ்ஜனா தேவி திருமலையில் 7 ஆயிரம் வருடங்கள் தவம் செய்ததாகச் சொல்லப்பட்டுள்ளது (பார்க்க பக்கம் – 68). தரிகொண்ட வேங்கமாம்பா எழுதிய ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தில் அஞ்ஜனா தேவி திருமலையில் 12 வருடங்கள் தவம் செய்ததாகச் சொல்லப்பட்டுள்ளது (பார்க்க, பக்கம் – 117).

**ஸ்ரீ ஸூத உவாச**

*அஞ்ஜனாSபி வரம் லப்த்வா பர்த்ரா ஸாகம் முமோதஹ*
*ப்ரஹ்மாதீநாகதாம் த்ருஷ்ட்வா விஸ்மயா விஷ்டமாநஸா*
*பத்யா ஸாகம் தத: ஸ்வஸ்தா சாஞ்ஜனாமஞ்சுபாஷினீ*
*ப்ரஹ்மாதிபிர் அனுஞ்யாதோ வ்யாஸோ வேதவிதாம்வர:*
*அஞ்ஜனாம் தாம்உவாசேதம் மேககம்பீரயாகிரா* [1]

இவ்வாறு வாயுதேவனால் மகனைப் பெறுவதற்கு வரம் பெற்ற அஞ்ஜனா தேவியும், அவளின் கணவனான கேசரியும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

தன்னுடைய தவத்தை காண வந்து தம் முன் காட்சியளித்த பிரம்மாதி தேவர்களைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு மகன் கிடைப்பான் என்ற சந்தோஷத்தால் பரவசமடைந்தாள். அதன் பிறகு பிரம்மாதி தேவர்களின் அனுமதியுடன் வியாச மஹரிஷி அஞ்ஜனா தேவியிடம் இடி முழக்கம் போன்ற கம்பீரமான குரலில் இப்படிச் சொன்னார். மந்த்ராலயம் ஸ்ரீ ராகவேந்த்ரா மடத்தைச் சேர்ந்தவர்கள் வெளியிட்ட ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் நூலில் மதங்கர் அஞ்ஜனா தேவியிடம் "த்வாதஸாப்த க்ருதம் சர" என்றனர். இந்த நூலிற்கு இரண்டு வ்யாக்யானங்கள் உள்ளன. இவற்றை முடிந்தவரை படித்த போது அஞ்ஜனா தேவி 12 வருடங்கள் தவம் செய்ததாகத் தெரிகிறது (பக்கம் 77–87).

**வியாச உவாச**

*அஞ்ஜனே! ஸ்ருணு மத்வாக்யம் சர்வ லோகோபகாரகம்*
*மதங்கஸ்ய ருஷேர் வாக்யம் ச்ருத்வா நிர்மல சேதஸா*
*யஸ்மாத்து வேங்கடங்கத்வா தப: க்ருத்வா ஸுதுஷ்கரம்*
*ப்ரஸூயதே த்வயா புத்ர: ஸூர: த்ரை லோக்யவிக்ரம:* [2]

---

1. ஸ்காந்த புராணம், ஸ்ரீ வைஷ்ணவ கண்டம் 40-1-3

2. ஸ்காந்த புராணம், ஸ்ரீவைஷ்ணவ கண்டம் 40-4, 5

இந்த வேங்கட மலைக்கு வந்து எவராலும் செய்ய முடியாத மிகவும் கடினமான தவத்தைச் செய்து, தவத்தின் பயனாக மூவுலகத்திலும் தன்னிகர் இல்லாத பராக்ரமம் பொருந்திய மகனுக்கு நீ பிறவியைக் கொடுப்பாய்.

## பிரம்மாண்ட புராணத்தில் தீர்த்த கண்டத்தில் தேவர்கள் அஞ்சனா தேவியைப் போற்றிய போது

*அஞ்ஜனே! த்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ்தஸ்த்வா ஸுதாருணம்*
*புத்ரம் ஸுதவதீ யஸ்மாத் லோகத்ரய ஹிதாயவை* [1]

ஓ அஞ்ஜனா தேவி! நீ இந்த சேஷபர்வதத்தில் உயர்ந்த தவத்தை செய்து மகனை அடைந்தாய். அதனால் உன்னுடைய தவமானது மூன்று லோகங்களையும் காக்கும் மகிமை பொருந்தியது. அதனால்,

*ப்ரஸித்திம் யாது ஸைலோயம் அஞ்ஜனே! நாம தஸ்தவ*
*அஞ்ஜனாசல இத்யேவ நாத்ரகார்யா விசாரணா* [2]

இம்மலையின் மகிமையைச் சொல்லி அஞ்ஜனா! நீ தவம் செய்து இந்த மலைக்கு மேலும் புகழைச் சேர்த்தாய். உயர்ந்த மகனைப் பெற்றாய். அதனால் இனிமேல் இந்த மலை உன்னுடைய பெயரால் புகழ் பெறும். இதில் எந்த சந்தேகமும் அடைய வேண்டாம் என்று தேவர்கள் கூறினர். மேலே சொல்லப்பட்ட பெயர்களில் வேங்கட மலைக்கு "அஞ்ஜனாத்ரி" என்று பெயர் வருவதற்குக் காரணமான கதை ஸ்காந்த புராணத்தில் சுருக்கமாகவும், பிரம்மாண்ட புராணத்தில் மிக விரிவாகவும் சொல்லப்பட்டுள்ளது. கதையின்படி அஞ்ஜனா தேவி தவம் செய்தது, ஆஞ்ஜனேயர் பிறந்தது, சூரியனை பிடிப்பதற்காக ஆகாயத்திற்கு தாவிய இடம் வேங்கட மலையே. பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டவைகளில் சில முக்கியமான விசேஷங்கள் இவ்வாறாக உள்ளது.

முன்பு த்ரேதா யுகத்தில் கேசரி என்ற பெயருடைய அசுரன் இருந்தான். அவன் சிவனைக் குறித்து தவம் செய்ததனால், அருள் புரிந்த சிவனிடம் மஹாபல பராக்ரமசாலியான ஆண் குழந்தையைக் கேட்க, அதற்கு உனக்கு ஒரு பெண் பிறப்பாள் என்று சிவன் அருள் புரிந்தார். அந்த பெண்ணே அஞ்ஜனா தேவி. அந்த பெண்ணிற்கு தகுந்த மண வயது வந்தவுடன் கேசரி என்ற பெயரை உடைய ஒரு வானர வீரன் அஞ்ஜனா தேவியின் தந்தையிடம் வந்து அஞ்ஜனையை தனக்கு விவாஹம் செய்து கொடுக்கும்படி கேட்டான். பலசாலியாகவும் தன்னுடைய பெயரையே உடையவனுமான அந்த வீரனை பார்த்து மகிழ்ச்சி அடைந்து, தன்னுடைய பெண்ணை அவருக்கு விவாஹம் செய்து கொடுத்தார் கேசரி. அவர்களுக்கு பல ஆண்டுகள் ஆன பிறகும் குழந்தை பிறக்கவில்லை. பலவித விரதங்களை செய்த அஞ்ஜனா தேவி ஒரு நாள் தன்னுடைய வீட்டிற்கு வந்த குறி சொல்பவளிடம் எனக்கு குழந்தை பாக்கியம் உண்டா என்று கேட்டாள். அப்போது அந்த குறிசொல்பவள்,

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-64) முதல் பாகம், பக்கம் 333 தி.தி.தே. பதிப்பு
2. வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-65) முதல் பாகம், பக்கம் 333 தி.தி.தே. பதிப்பு

*அபீஷ்டஸ்தவ புத்ரோ வை பவிஷ்யதி ந ஸம்ஸய:*
*மா ஸோகம் குரு கல்யாணீ! தர்மேண மம தே ஸபே* [1]

கல்யாணி! நீ கேட்டபடி புத்திரனை அடைவாய். துக்கம் வேண்டாம். இது என் சத்தியம்

*ஸ்ரீ வேங்கடகிரௌ ஸப்தஸாஹஸ்ரம் வத்ஸரான் புந:*
*தப: குரு தத: புத்ரமாவாப்ஸ்யஸி ஸுசோபனம்* [2]

வேங்கட மலையின் மீது 7 ஆயிரம் வருடங்கள் தவம் செய்; நீ உயர்ந்த மகனைப் பெறுவாய் என்று சொல்லிவிட்டு அந்த குறி சொல்பவள் சென்று விட்டாள்.

*இத்யுக்த்வா ஸா நிமித்தஞ்ஜா யதா கதமதோ யௌ*
*அஞ்ஜனா சிந்தயந்தீ தத்வாக்யம் தஸ்யா: மனோஹரம்*
*ப்ரசக்ரமே தபஸ்சர்த்தும் ஸ்ரீ வேங்கடகிரேதடே*
*ஆகாஸ கங்கா நிகடே சித்தசங்க நிஷேவிதே*
*வாய்வாஹாரான் ச வாயும் வை ஸமுத்திஸ்ய ஸுதாருணம்*
*தபஸ் சசார தாந்தேயம் ப்ரீணயந்தி வ்ரதைரிமம்* [3]

அந்த குறி சொல்பவள் கூறியபடி அஞ்ஜனா தேவி அவள் கூறிய அந்த மனோஹரமான வார்த்தையை நினைத்து,

வேங்கட மலைக்குச் சென்ற அஞ்ஜனா, ஆகாச கங்கை தீர்த்தத்தின் அருகில் சித்தர்களால் சேவிக்கப்படும் இடத்தில் தவம் செய்வதற்கு ஆரம்பித்தாள்.

அஞ்ஜனாதேவி காற்றை மட்டுமே உணவாகக் கொண்டு வாயுதேவனை குறித்து மிகத் தீவிரமான தவம் செய்தாள். வாயுதேவன் அஞ்ஜனா தேவிக்கு அருள் புரிந்து அனுதினமும் ஒரு பழத்தை கொடுத்து வந்தார். ஒரு நாள் அவர் சிவதேஜஸுடன் கூடிய பழத்தை அவளுக்குக் கொடுத்தார். அந்த பழத்தை சாப்பிட்ட அஞ்ஜனாதேவி கர்ப்பம் தரித்தாள். தெய்வ பிரசாதத்தினாள் கர்ப்பமடைந்த அவளிடம் அசரீரி சிவனின் தேஜஸுடன் உனக்கு பிறக்கப் போகும் குமாரன் உலகத்தைக் காப்பாற்றக் கூடிய வலிமையுடையவன். எதிர்காலத்தில் உலகத்திற்கு கொடுங்கோலன் மற்றும் இலங்கைக்கு அதிபதியான இராவணன் என்ற அசுர அரசனை கொல்வதற்காக ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்ரீராமச்சந்திரனாக அவதாரம் செய்யும் போது ஸ்ரீ ராமருக்கு உதவி செய்பவனாக உன் மைந்தன் புகழை அடைவான் என்று சொல்லிற்று.

*ததோ வை தசமே மாஸி ஸம்ப்ராப்தே நளினேக்ஷணா*
*அசூத புத்ரம் பலினம் உதயத்யஹிமத்விஷி*
*ஸ்ராவணே மாஸி நக்ஷத்ரே ஸ்ரவணே ஹரி வாஸரே*
*குண்டலோத்பாஸிகண்டாந்தமுபவீதிநமுஜ்வலம்*
*கௌபீனோத் பாஸிதம் சைவ தீப்ய மானமிவஸ்ரியா*

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-16) முதல் பாகம், பக்கம் 328 தி.தி.தே. பதிப்பு

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-17) முதல் பாகம், பக்கம் 329, தி.தி.தே. பதிப்பு

3. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-18-20) முதல் பாகம், பக்கம் - 329, தி.தி.தே. பதிப்பு

*பிப்ராணாம் வாணரானாம் வை ரூபமத்யத்புதம் மஹத்*
*ரக்தாஸ்ய புச்ச மூலம் து ஸுவர்ணஸத்ருஸத்யுதிம்* [1]

இப்படி வாயுதேவனிடம் புத்ர சந்தான வரத்தைப் பெற்ற பிறகு அஞ்ஜனா தேவி பத்தாவது மாதத்தில் மிகவும் பலசாலியான குழந்தையைப் பெற்றாள்.

ச்ரவண நட்சத்திரத்தில், ச்ரவண மாதத்தில் ஹரிவாஸரத்தில் (சனிக்கிழமையில்) சூரியோதய சமயத்தில் மஹாபலவானான ஆண் குழந்தையைப் பெற்றாள். அற்புதமான திவ்ய மகர குண்டலங்களுடன் பூணூல் தரித்து சிறிய கோமனத்துடன் பிரகாசிக்கும் அந்தக் குழந்தை அற்புதமான வானரம் வடிவில் இருந்தான். சிவந்த முகம் மற்றும் வாலின் நுனியில் தங்கமயமான ஒளியுடன் பிரகாசித்தான்.

வைசாக மாதம் க்ருஷ்ண பக்ஷ தசமி அன்று ஸ்ரீ ஹனுமனின் பிறந்த நாள். அதனால் திருமலையில் அன்று ஹனுமனுக்கு சிறப்பு பூஜை செய்கின்றனர். ஸ்ரீ ஹனுமனின் பிறப்பு வைசாக க்ருஷ்ண பக்ஷ தசமி சனிக்கிழமை பூரட்டாதி நட்சத்திரம் என்று நூலாசிரியர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். மூல நட்சத்திரம் என்று ஜோதிடமும், அனுஷ நட்சத்திரம் என்று பாஞ்சராத்ர ஆகம சாஸ்திரமும் கூறுகின்றது. ஆனால் மாதங்களைப் பற்றி குறிப்பிடவில்லை.[2] பிரதி வருடம் திருமலையில் வைசாக மாத க்ருஷ்ணபக்ஷ தசமியில் ஹனுமத் ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.[3]

## சூரியனை விழுங்க வானில் பறக்கும் பால ஹனுமன்

*அதோSயம் ஜாத மாத்ரோSபி நிதராம் து புபுக்ஷித:*
*உதயாசல ஸம்ரூடம் ததர்ஸ ரவிமண்டலம்*
*நிதாந்தரக்த வர்ணேன பல புத்திர பூத்ததா*
*பலவித்யேவ மன்வானோ ரவிம் பக்ஷிதும்உத்யத:*
*க்ரிஹீஷ்ஸ்யாமீதி நிஸ்சித்ய ஸ்ரீ வேங்கடகிரேஸ்தடாத்* [4]

*உததிஷ்டன் மஹாவேகாத் உதயாசல ஸேகரம்*
*க்ருஹீது முத்யதே தஸ்மிந் பிம்பம் ஸூர்யஸ்ய தத் பலாத்*
*ஹாஹா க்ருத மபூத்ஸர்வம் ஜகத்ஸ்தாவர ஜங்கமம்*
*தத: சதுர்முகோ ப்ரஹ்மா ஸ்வயமாகத்ய வேகத:* [5]

பிறந்த உடனேயே மிகுந்த பசியுடன் இருந்த ஹனுமன் உதய சூரியனைப் பார்த்து அது சிவப்பு பழம் என்று நினைத்து உண்பதற்காக அவர் திருவேங்கட மலையிலிருந்து சூரியனைப் பிடிப்பதற்காக உதயகிரி பக்கம் பறந்தார். அந்த சூரிய பிம்பத்தை பிடிப்பதற்கு ஆவல் கொண்டார். அதை பார்த்து லோகத்தில் உள்ள சராசரங்கள் அனைத்தும் சப்தமிட்டன. நான்முகபிரம்மா

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டாந்தர்கதம் 5-42-45 முதல், பாகம். பக்கம் 331, தி.தி.தே. பதிப்பு
2. ஸ்ரீவேங்கடேஸ்வர வைபவமு, பண்டித வேதாந்தம் ஜகந்நாதாசார்யுலு, பக்கம் 195.
3. ஸ்ரீநிவாஸ வைபவம், ஜுலகன்டி பாலசுப்ரமண்யம், பக்கம் 225.
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணம் தீர்த்தகண்டாந்தர்கதம் 5-45-49) முதல்பாகம், பக் - 331 தி.தி.தே. வெளியீடு.
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராண தீர்த்த கண்டாந்தர்கதம் - 5-64-67) முதல் பாகம், பக்கம் - 333 தி.தி.தே. வெளியீடு

வேகமாக தானே நேரில் வந்தார். அவ்வாறு வருகின்ற அஞ்ஜனா தேவியின் மகனை ஒரு அசுரனாக நினைத்து பிரம்மா, ஹனுமனின் மீது பிரம்மாஸ்த்திரத்தை ஏவினார். அதை அந்த சிறிய குழந்தை விளையாட்டாக தன்னுடைய வாலால் பக்கத்தில் தள்ளிவிட்டார். அப்பொழுது தேவர்கள் அனைவரும் உண்மையை அறிந்து கொண்டனர். தன்னுடைய வாலாலேயே பிரம்மாஸ்த்திரத்தை தள்ளிவிட்ட அந்த சிறிய வானரத்தினுடைய ஒவ்வொரு விளையாட்டும் தேவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. அந்த அஞ்ஜனாதேவியின் மகனுக்கு, தான் பார்த்தது பழம் இல்லை சூரிய பிம்பம் என்று தெரிந்தது. அப்பொழுது, பிரம்மாஸ்த்திரத்தின் வலியை அறிந்து உற்சாகம் இன்றி மிகுந்த களைப்புடன் பூமியின் மீது விழுந்தார். அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற தன்னுடைய மகனைப் பார்த்த அஞ்ஜனா தேவியினுடைய தாய்மனது பெரும் துயரத்தை அடைந்தது. அப்போது பிரம்ம தேவன் இவ்வாறு சொன்னார்.

*அஞ்சனேத்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ் தப்த்வா ஸுதாருணம்*
*புத்ரம் ஸுதவதீ யஸ்மால்லோகத்ரயஹிதாய வை*
*ப்ரஸித்திம் யாது ஸைலோSயமஞ்சனே! நாமதஸ்தவ*
*அஞ்சனாசல இத்யேவநாத்ரகார்யா விசாரணா*
*இதி தஸ்யை வரம் தத்வா தேவா ப்ரஹ்ம புரோகமா:*
*ஸ்வம்ஸ்வம் ஸ்தானம் ஸமுத்திஸ்ய யதாகத மதோயயு:*
*அஞ்சனா புத்ர மாதாய ஸ்ரீ வேங்கடகிரேஸ்தடம்*
*புநராகம்ய ஸாமோதமலம் சக்ரே நிஜாஸ்ரமம்* [1]

ஓ அஞ்ஜனா! நீ இந்த சேஷாத்ரியின் மேல் சிறந்த தவத்தைச் செய்து உலக நன்மைக்காக இந்த மகனைப் பெற்றாய். அதனால் இந்த வேங்கடமலை (சேஷாத்ரி) இனிமேல் உன்னுடைய பெயரில் அஞ்ஜனாத்ரி என்று புகழ் அடையும். இதில் எந்த சந்தேகமும் இல்லை என்று வரம் கொடுத்த பிரம்மா மற்றும் தேவர்கள் அனைவரும் அவரவர் லோகத்திற்குச் சென்று சேர்ந்தார்கள். அதன் பிறகு அஞ்ஜனா தேவி மகிழ்ச்சியுடன் தன்னுடைய மகனை எடுத்துக் கொண்டு திருவேங்கட மலையில் உள்ள தன்னுடைய ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தாள்.

*சதுர்ஷு மேருபார்ஸ்வேஷு ஹேமகூட ஹிமாஹ்வயே*
*நீலே ஸ்வேதநகே சைவ நிஷதே கந்தமாதனே* [2]

பிரம்மாண்ட புராணத்தில் ஹனுமனின் பிறப்பிடம் சுமேரு என்று சொல்லப்படுகிறது. அப்படியே இராமாயணத்தில் ஸ்ரீ ராமர் ஆவலுடன் அகஸ்தியரிடம் ஹனுமனின் பிறப்பைப் பற்றி கேட்டு தெரிந்து கொண்டார்.

*ஸூர்ய தத்தவரஸ்வர்ண: ஸுமேருர்நாம பர்வத:*
*யத்ர ராஜ்யம் ப்ரஸாஸ்தஸ்ய கேஸரீ நாம வை பிதா* [3]

---

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராண தீர்த்த கண்டாந்தர்கதம் - 5-64-67) முதல் பாகம், பக்கம் - 333 தி.தி.தே. வெளியீடு
2. பிரம்மாண்ட புராணம், மத்யம பாகம், 7-194
3. இராமாயணம், உத்தர காண்டம் - 35-19

பிரம்மாண்ட புராணம் மற்றும் இராமாயணத்தில் தெரிவிக்கப்பட்ட சுமேரு பர்வதம் வேங்கட மலையே என்று பிரம்ம புராணம் நிர்ணயம் செய்தது. “மேரு புத்ரம் மஹாபுண்யம், வேங்கடாசல ஸம்ஜ்ஞகம்”[1] மேரு பர்வதத்தின் மகன் வேங்கட மலை என்று சுமேரு என்ற பெயரை உடையவன். அந்த சுமேரு மலை சேஷனின் அம்சமாகப் பிறந்தான். மலையின் தோற்றம் ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும், முக்தர்களுக்கும் பொன்மயமாகத் தெரிகிறது என்று பிரம்ம புராணத்தின் உள்பகுதி ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் தெரிவிக்கின்றது. இந்த உண்மையை அன்னமய்யா எண்ணற்ற பாடல்களின் மூலம் தெரிவித்துள்ளார்.

### வராஹ புராணம் : தசரதர் குழந்தை பேற்றிற்காக திருமலைக்கு வருதல்

வெகுகாலம் வரை குழந்தை இல்லாத தசரத மஹாராஜா வசிஷ்ட முனிவரின் சொற்படி வேங்கட மலைக்கு வந்து தவம் செய்ததாக வராஹ புராணம் தெரிவிக்கின்றது.

*தஸ்மின் காலே து தர்மாத்மா! ராஜா தஸரத: ப்ரபு:*
*ஸஸாஸ மேதினீம் க்ருத்ஸ்னாம்! அயோத்யாயாம் மஹாயஸா:*
*வர்ணாச்ரமாசாரயுதா: ப்ரஜாதர்மேனபாலயந்*
*சிரகாலம் மஹீம் ராஜா புபுஜே பூரிவிக்ரம:*

*ந சாத்ராக்ஷீத் குமாரஸ்ய ஸுசிஸ்மேர முகாம்புஜம்*
*வஸிஷ்டமப்ரவீத்து:காத் ப்ரஹ்மரிஷிமமிதௌஜஸம்*
*புரோஹிதஸ்ய வம்ஸஸ்ய விசேஷேண பவாந் முனே*
*சிரம் லாலப்யமானஸ்ய நாSSஸீத்வம் ஸகரஸ்ஸுத:*

*பாபிநோ மமது ப்ரஹ்மன்! மயா பாபம் க்ருதம் பஹு*
*பாபஸ்ய நிஷ்க்ருதி: கஸ்மாத் கதம் புத்ரோ பவிஷ்யதி*
*இதி ப்ரோக்தோ வஸிஷ்டஸ்து க்ஷணம் த்யாத்வா ப்ரஸன்னதீ:*
*ப்ராஹ சைனம் ந்ருபம் தீரம் வஸிஷ்டோ பகவான் ரிஷி:*

*புண்யஸ்லோகஸ்ய பவத: கதம் பாபம் பவிஷ்யதி?*
*ததாSபி தவ ராஜேந்த்ர! புத்ரப்ராப்தி நிரோதக்ருத்*
*துஷ்க்ருதம் கிஞ்சிதஸ்தி இதி த்யானேன ப்ரதி பாதி மே*
*தஸ்ய பாபஸ்ய சாந்த்யர்த்தம் புத்ரானாம் ப்ராப்தயேத் ததா*

*ஸேவ்ய: ஸ்ரீ வேங்கடாதீஸ: க்ஷீராப்திதனயாபதி:*
*இத்யுக்த: ப்ராஹராஜாபி ப்ரஹ்மன்! குத்ர ஸ்ரீய: பதி:*
*இதானீம் வர்ததே விஷ்ணு: கதம் த்ருஸ்யோ மயா ப்ரபு:*
*இதி ப்ருஷ்ட: புன: ப்ராஹ வஸிஷ்டோSபி மஹாமுனி:*

*ஸ்ருணு ராஜன்! மஹாபாக! பாகீரத்யாஸ்ச தக்ஷிணே*
*வர்த்ததே வேங்கட: சைலோ யோஜனானாம் ஸதத்வயே*
*ஸுவர்ணமுகரீ தீராத் உத்தரே க்ரோஸ மாத்ரகே*
*அனேக புண்யதோயைஸ்ச புண்யேகஸ்சவை மஹாஹ்ருதை:*

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம புராணாந்தர்கதம் – 1– 36) இரண்டாவது பாகம், பக்கம் –5, தி.தி.தே. வெளியீடு

*அனேக கின்னரீபிஸ்ச ஸோபித: பர்வதோத்தம:*
*திவ்யோऽயம் பாரவதேந்த்ரஸ்து ந புன: ப்ராக்ருதோ கிரி:*
*ஸ்வரூபம் தஸ்ய சைலஸ்ய ந து ஜானந்தி மானுஷா:*
*நாராயணஸ்ய தேவஸ்ய வைகுண்டபுரவாஸிந:*

*ஸூர்ய வைகுண்ட நாகேப்ய: ப்ரியோ-யம் வேங்கடாசல:*
*தஸ்மின் ஹி ரமதே நித்யம் ஸ்ரீநிவாஸ: ஸ்ரீயாஸஹ:*
*தர்ஸனார்த்தம் ஹரேஸ்தத்ர யஜந்தே முநயோऽமலா:*
*யோகினஸ்த்ரிதசாஸ்சாபி தப: குர்வந்தி ஸந்ததம்*

*ப்ரயயௌ ச வசிஸ்டேன வேங்கடாக்யம் கிரிம் ப்ரதி*
*கங்காம் கோதாவரீம் ரம்யாம் கிருஷ்ணவேநீ மனந்தரம்*
*மலாபஹாரிணீம் பத்ராம் துங்காம் பம்பாம் மனோஹராம்*
*பவநாஸீம் ச ஸம்ப்ராப்ய ஸ்னாத்வா, ஸ்னாத்வா மஹாரத:*

*வேங்கடாத்ரிம் ததர்சாத துங்க ச்ருங்க ஸமன்விதம்*
*உத்யானம் நந்தனம் சைத்ர ரதம் ஸம்பூய திஷ்டதி*
*இத்யுத் ப்ரேக்ஷ்ய மனோஹாரி வ்ருக்ஷகுல்மலதா யுதம்*
*யுவானஞ்ச மஹாமேரு மிவ சக்ஷுஸ்பதம் கிரிம்*

*ஆருஹ்யநயநாநந்தம் ஹ்ருதயாஹ்லாத காரகம்*
*நிர்ஜரேஷு தடாகேஷு ஸரஸு ஸரஸீஸுச*
*நதீஷு தேவகாதேஷுததா புஷ்கரிணீஸு ச*
*ஸ்நாத்வா நிர்மல ஸர்வாங்க: சாலிதாகோமஹா பல:* [1]

அந்தக் காலத்தில் தர்மாத்மாவான தசரத மஹாராஜா அயோத்தியை தலைநகராகக் கொண்டு உலகம் முழுவதையும் ஆண்டு வந்தார். வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்து மக்களை தர்ம வழியில் ஆட்சி செய்து கொண்டு அதிக வீரத்துடன் வெகுகாலம் பூமியை ஆட்சி செய்தார்.

குழந்தை பாக்யம் இல்லாத காரணத்தினால் மிகுந்த வருத்தத்துடன் மிகுந்த தேஜஸ்ஸை உடைய பிரம்மரிஷியான வசிஷ்டரிடம், மகாமுனி! "என்னுடைய வம்சத்துக்கு தாங்களே குலகுரு ஆவீர்கள். எங்களுடைய வம்சத்தை தொடர்வதற்கு எனக்கு குழந்தை பேறு கிடைக்கவில்லை". ஓ பிரம்ம ரிஷியே நான் மஹாபாபி. நான் மஹாபாபங்களை செய்தவன். என்னுடைய பாபங்களுக்கு பரிகாரம் என்ன? எனக்கு குழந்தை பேறு கிடைப்பது எப்படி? என்று கேட்டார். தசரதனால் பிரார்த் திக்கப்பட்ட வசிஷ்ட மஹரிஷி தெளிந்த மனதுடன் சிறிதுநேரம் ஆலோசித்து வீரனான தசரத மஹா ராஜாவிடம் பின்வருமாறு கூறினார். புண்யாத்மாவான உனக்கு பாபம் எப்படி வரும். ஆனாலும் உனக்கு குழந்தை பேறு இல்லாமல் போனதற்கு நீ செய்த ஒரு தவறே காரணம் என்று தியானத்தின் மூலம் எனக்குத் தெரிந்தது. அந்த பாபத்திற்கு பரிகாரமாகவும், குழந்தை பேற்றுக்காகவும், வேங்கடமலைக்கு அதிபதியான லக்ஷ்மீபதி வணங்குவதற்கு தகுந்தவர் என்று சொன்னார். அதற்கு

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதமகாண்டாந்தர்கதம் - 44-33-54), முதல் பாகம், பக்கம் - 48-50. தி.தி.தே. வெளியீடு

தசரதர் வசிஷ்டரிடம் இப்பொழுது அந்த வேங்கடாசலபதி எங்கு இருக்கிறார்? அவரை நான் எப்படி தரிசிப்பது என்று கேட்டதற்கு வசிஷ்டர் சொன்னார். ஓ! மஹாராஜாவே கேள். கங்கை ஆற்றுக்கு தெற்கு திசையில் 200 யோஜனை தூரத்தில் வேங்கடாசலமலை உள்ளது. சுவர்ணமுகரீ நதியின் கரையில் இருந்து வடக்கு திசையில் க்ரோஸம் (2.41 கி.மி.) தூரத்தில் எண்ணற்ற புண்ய தீர்த்தங்களுடன் திகழ்கிறது என்று பதிலை கூறினார். இத்திவ்யமான வேங்கட மலை எண்ணற்ற கின்னரர்களுடன் திகழ்கின்ற பெரியமலை. இம்மலையினுடைய தோற்றம் மனிதர்களுக்குத் தெரியாது. ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கும் வைகுண்ட வாசிகளுக்கும் மட்டுமே தெரியும். சூர்ய, வைகுண்ட, சொர்க்க லோகங்களில் வசிப்பவர்களுக்கு வேங்கட மலையென்றால் மிகவும் பிடித்தமானது. அந்த வேங்கடமலையில் லக்ஷ்மியுடன் ஸ்ரீநிவாஸர் தினமும் வலம் வருகிறார். தினமும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய தரிசனத்திற்காக தூயவர்களான முனிவர்கள் யாகங்கள் செய்து கொண்டுள்ளார்கள்.

தேவர்கள் மற்றும் யோகிகள் இம்மலையில் தவம் செய்து கொண்டிருப்பார்கள். தசரத மஹாராஜா வசிஷ்டருடன் சேர்ந்து வழியின் நடுவில் கங்கா, கோதாவரி, கிருஷ்ணா நதி, பிறகு பாபங்களை போக்கடிக்கும் துங்கபத்ரா, மனோஹரமான பம்பா நதி முதலிய நதிகளில் நீராடி விட்டு, மேரு பர்வதம் போன்று சிறந்த வேங்கட மலையை தரிசித்தார். மனதுக்கு இனியதான செடி கொடிகளுடன் கண்ணுக்கு மஹா மேரு மலை போல் இருக்கும், மனதிற்கு ஆனந்தத்தை கொடுப்பதாகவும் கண்ணிற்கு விருந்தாகவும் உள்ள வேங்கடமலையின் மேல் ஏறி தசரதர் அங்குள்ள ஆறுகள் மற்றும் புஷ்கரிணிகளில் நீராடி தனது பாவங்களுக்குப் பரிகாரம் செய்தார்.

## வேங்கட மலைக்கு ஸ்ரீராமரின் வருகை

*வேங்கடாத்ரேஸ்து மஹாத்ம்யம் ஜனகர்ண ரஸாயனம்*
*ச்ருண்வதாம் நாஸ்தி த்ருப்திஸ்து முனீநாம் நோபுதோத்தம*
*பூய: கதயவ்ருத்தாந்தம் ச்ருதம் கிஞ்சித் த்வயாபுரா*
*இத்யுக்த ப்ராஹஸூதோ-பி ச்ருதம் ச முனி புங்கவான்* [1]

*புத்ரோ தஸரதஸ்யாஸீத் ராமோ ராஜீவ லோசன:*
*ஸ ஸர்வலக்ஷணோ பேத: ஸர்வ சாஸ்த்ரவிஸாரத*
*ராவணஸ்ய வதார்த்தாய புரா ஸௌமித்ரி நாஸ:*
*ஹனூமதா வேகவதா ஸுக்ரீவே மஹாத்மனா*

*ஸ: சைந்யார்யதா பம்பா தீரா சோதித பாதபாத்*
*நிர்ஜகாம ததா ராம: ஸுபே ஸ்ரீ வேங்கடாசலே*
*ஸ்வாமி புஷ்கரிணீ தீர்த்தே ஸ்நாத்வா பஸ்சாத்ரனேரிபும்*
*ராவணம் ஸகணம் ஹத்வா ஜய மாபேதிமேச்ருதம்*

*தத்ஸர்வம் கதயிஷ்யாமி ச்ரோதவ்ய மவதானத:*
*ருஸ்யமூகா சலாத்தஸ்மாத் வானரைர் பஹுபிர்க்ருத:*

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம், வராஹ புராணாந்தர்கதம் – 41–1,2, முதல் பாகம், பக்கம் 33, தி.தி.தே. வெளியீடு.

*ராவணஸ்ய வதார்தாய க்ருதோத்யோக: ஸகார்முக:*
*சேஷாசல ஸமீபே து யதாராம: ஸமாகத:* [1]

முனிவர்கள் ஸூதமஹரிஷியிடம் கூறும் போது ஓ ஸூத மஹரிஷி! வேங்கடாசல மாஹாத்மியம் மக்கள் கேட்பதற்கு ஆனந்தமயமானது. கேட்டுக் கொண்டிருக்கும் எங்களுக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை. முன்பு நீங்கள் கேட்டவற்றை எங்களுக்கு மீண்டும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு ஸூதமஹரிஷி முன்பு தான் கேட்ட விஷயங்களை முனிவர்களுக்கு பின்வருமாறு தெரிவிக்கிறார்.

### ஸ்ரீ ஸூத

தசரதனுக்கு எல்லா லக்ஷணங்களோடும் அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்தவனும், தாமரை போன்ற கண்களை உடையவனுமான இராமன் என்ற மகன் இருக்கிறான். முன்பு அவர் இராவணனை கொல்வதற்காக லக்ஷமணன், ஹனுமன், சுக்ரீவர்களுடன், சேனைகளுடன் கூடி உயர்ந்த ரக மரங்களுடன் கூடி இருக்கும் பம்பா நதிக்கரையிலிருந்து திருவேங்கடத்திற்குச் சென்றார். அங்குள்ள புஷ்கரிணியில் நீராடிய பிறகு சண்டையில் இராவணனையும், புத்ர பந்துக்கள் அனைவரையும் ஸம்ஹரித்ததாகக் கேட்டேன் இந்த விஷயங்களை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஒரு முகமாகக் கேட்கும்படி முனிவர்களுக்கு ஸூத மஹரிஷி கூறினார். அந்த ரூஷ்யமுக பர்வதத்தில் இருந்து இராமர் எண்ணற்ற வானர வீரர்களோடு இராவணனைக் கொல்வதற்காக விற்களையும், அம்புகளையும் தரித்து சேஷாசலத்திற்கு அருகில் வந்தார்.

### அஞ்ஜனாதேவி ஸ்ரீ இராமச்சந்திரனை தன்னுடைய ஆசிரமத்திற்கு வருமாறு பிரார்த்தித்தல்

அஞ்ஜனாதேவி குழந்தை பேற்றுக்காக மதங்க மஹரிஷியின் ஆணைப்படி கிஷ்கிந்தையிலிருந்து வேங்கட மலைக்கு வந்து, ஆகாஸ கங்கைக்கு எதிரில் தவம் செய்தாள். அதன் பலனாக ஹனுமனின் பிறப்பு பற்றி ஸ்காந்த, பிரம்மாண்ட புராணங்களில் இருக்கிறது. அதன் பிறகு அஞ்ஜனா இங்கேயே நிரந்தரமாக வசிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டதை இந்த வராஹ புராணத்தில் கீழ் உள்ள ஆதாரங்களினால் தெரிய வருகிறது.

*ததாஸத்யஞ்ஜனாதேவீ வாயுஸூனோர் மஹாத்மன:*
*ஜனனீ புரதோ கத்வா ராமம் ரக்தாந்த லோசனம்*
*நமஸ்க்ருத்ய மஹாபாகா வசனம் சேதமப்ரவீத்*
*ப்ருதீக்ஷன்தீ மஹா பாஹோ! த்வதாகமனமத்புதம்*

*திஷ்டாம் யஸ்மின்கிரௌ ராம! முனயோऽபிசகானனே*
*தப: குர்வந்தி ஸததம் த்வதாகமன காங்க்ஷயா*
*தான் ஸர்வான் ஸ மனுஞ்யாப்ய கந்து மர்ஹஸி ஸுவ்ரத!*
*இத்யுக்த: ப்ராஹ ராமோऽபி ஹனுமான் மாதரம் ப்ரதி* [2]

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராணாந்தர்கதம் – 41-3-8) முதல் பாகம், பக்கம் 33, தி.தி.தே. வெளியீடு

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராணாந்தர்கதம் – 41-9-12) முதல் பாகம், பக்கம் 34, தி.தி.தே. வெளியீடு.

பூஜிக்கத் தகுந்த ஹனுமனின் அன்னை பதிவ்ரதையான அந்த அஞ்ஜனா தேவி சிவந்த கண்களை உடைய ஸ்ரீ இராமச்சந்திரனுக்கு நமஸ்காரம் செய்து, ஸ்வாமி! அத்புதமான உங்களுடைய வருகைக்காக இந்த மலையில் எதிர்பார்த்து இருக்கின்றேன் என்று சொன்னாள். தங்களுடைய வருகையை எதிர்பார்த்திருக்கும் முனிவர்கள் கூட இந்த காட்டில் தவம் செய்து கொண்டு இருக்கிறார்கள். தாங்கள் அவர்கள் அனைவரையும் அன்புடன் பார்த்து விட்டு செல்ல வேண்டும் என்று அஞ்ஜனா தேவி இராமரிடம் வேண்டிக் கொண்டாள்.

### ஸ்ரீராமர்

*காலாத்யயோ பவேத்தேவி! மயி தத்ர ஸமாகதே*
*மமேதானீம் வராரோஹே! கார்யஸ்ய மஹதீத்வரா*
*புனராகமனே தேவி! ததாபவது ஸுந்தரி!*
*இத்யுக்தம் ராகவேநைதத்வாக்யம் ஸ்ருத்வா மஹாமதி:*

*ஹனுமான் ப்ரணதோ பூத்வா வாக்யம் சேததுவாச:*
*ஸ்தாதவ்யமத்ர பவதா யத்ர குத்ரா-பி ஸர்வதா*
*யஸ்மாச்ச்ராந்தா மஹா ஸேனா வானரானாம் தரஸ்வினாம்*
*அயம்ச மார்க ஏவாத்ரி: ஸதா புஷ்ப பலத்ரும:*

*பஹுப்ரஸ்ரவனோ பேதோ பஹுகந்தர ஸானுமாந்*
*ஸுஸ்வாது கந்தமூலோSயம் அஞ்சனாக்யோ மஹாகிரி:*
*மதூனி ஸந்தி விருக்ஷேஷு பஹுனி கிரீ கந்தரே*
*வேத்தஸர்வம் மஹாபாஹோ யதேச்சஸி ததா குரு*

*இத்யுக்தோ வாயுபுத்ரேன ஸ்ரீராம: ப்ரஸன்னசௌ*
*ஜானேSஹமஞ்ஜனாஸுனோ! ததாSபி வசனம் தவ*
*ச்ரோதவ்யம் ஹி மஹாபாஹோ! கச்சாக்ரே த்வம் ஹரீஸ்வர*
*இத்யுக்த்வா வாஹினீம்தாம் ச கர்ஷன் பர்வதமாயயௌ* [1]

அஞ்ஜனா தேவியின் பிரார்த்தனையைக் கேட்ட ஸ்ரீராமர் அவளிடம், அம்மா நான் இப்போது இங்கு வந்தேனானால் கால தாமதமாகும். என்னுடைய காரியத்தைச் செய்து முடிப்பதற்கு நான் விரைவாகச் செல்ல வேண்டி உள்ளது. நான் திரும்பி வரும் போது தவறாமல் வருகிறேன் என்று சொன்னார். அப்போது மஹா பண்டிதரான ஹனுமன் இராமரை வணங்கி இவ்வாறு சொன்னார். இராமா! தாங்கள் இப்போது எங்கோ ஓர் இடத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா; வேகமாக வந்ததால் வானர சேனைகள் உட்பட சிரமத்தில் உள்ளனர். இந்த மலை நாம் போக வேண்டிய வழியில் உள்ளதே. இந்த வழி எப்போதும் பல புஷ்பங்களோடு இருக்கும். நீர் நிலைகள், எண்ணற்ற குகைகள், மலைப் பாறைகளோடு இனிய கிழங்கு வகைகளோடும் இருக்கும் இந்த

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் - 41-13-20) முதல் பாகம், பக்கம் 34 -35, தி.தி.தே. வெளியீடு.

மலையை அஞ்ஜனாத்ரி என்பார்கள். இந்த மலைக் குகைகளில் உள்ள செடிகளில் தேன் கூடுகள் இருக்கின்றன. இது நாம் இருப்பதற்கு ஏற்ற இடம். இதன் பிறகு அனைத்தும் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. தங்களின் விருப்பப்படி செய்யவும் என்றார். ஹனுமன் இவ்வாறு கூறிய பிறகு ஸ்ரீராமர் புன்னகையுடன் எனக்குத் தெரியும். ஆனாலும் ஹனுமனே! உன்னுடைய வார்த்தைகள் கேட்கத் தகுந்தது. நீ முன்னதாகச் சென்று கொண்டிரு என்று சொல்லி ஸ்ரீராமரும் சேனைகளுடன் வேங்கடமலைக்கு வந்தார்.

## அஞ்ஜனாத்ரிக்கு ஸ்ரீராமரின் வருகை

*நாககேஸரமாலூரபுன்னாகதருஸோபிதம்*
*சம்பாகாஸோகவகுள சூதகிம்ஸுகராஜிதம்*
*மயூரஸாரிகாலாபை: கோகிலானாம் ஸ்வனைரபி*
*ஸுகமஞ்ஜுளநாதைஸ்ச கபோதஸ்வன ஹுங்க்ருதை:*

*ஸோபிதம் பலபுஷ்பைஸ்ச வேங்கடாக்யம் நகோத்தமம்*
*நிர்லோமா நாமத: கஸ்சித் விப்ரோ வேதவிதாம் வர:*
*ஸ்வயம்புவம் ஸமுத்திஸ்ய ப்ரஹ்ம லோகஜிகீஷயா*
*தபஸ்சகார தர்மாத்மா பர்வதோத்தரதேஸத:*

*ஆகத்ய பகவான் ப்ரஹ்மா தமாஹ த்விஜ ஸத்தமம்*
*ராமம் த்ருஷ்ட்வா ஸஸௌமித்ரம் ப்ரஹ்மலோகமவாப்ஸ்யஸி*
*இத்யுக்தோ ப்ரஹ்மணா பூர்வம்த்ருஷ்ட்வ ராமம் பராத்பரம்*
*பலமூலாஸனை: ஸம்யக் பூஜயித்வா தமப்ரவீத்*

*ஆத்ய மே ஸபலம் ஜந்ம த்வன்முகாம்போஜ தர்ஸனாத்*
*சிரகாலார்ஜிதம் ஸ்வாமின்! பலிதம் தபஉத்தமம்*
*அனுஞ்யாபய மாம்ராம! ப்ரஹ்மலோகம் ப்ரதீஸ்வர!*
*இத்யுக்த: ஸ து தர்மாத்மா "ததைவாऽசரபோத்விஜ"!*

*இத்யுக்வா தம் து விப்ரேந்த்ர மாருரோஹ நகோத்தமம்*
*ஸாபமோக்ஷஞ்சயக்ஷானாம் கேஸாஞ்சித் பர்வதோத்தமே*
*தத்வா ராமோऽஜ்ஜனா தேவ்யா ஆஸ்ரமம் புண்ய வர்தநம்*
*ஆகாசகங்கானிகடே ப்ரதிபேதே மஹாமனா:*

*தயா ஸ பூஜித: ஸம்யக் தஸ்யை தத்த்வ வரோத்தமம்*
*ஆப்ருச்ச்ய தாம் மஹாபாகாம் ஸ்வாமி புஷ்கரிணீம் யயௌ*
*தத்ர ராமோ மஹாதேஜா: ஸௌமித்ரிர்மாருதாத்மஜ:*
*ஸுக்ரீவச்சாங்கதச்சைவ ஜாம்பவான் நீல ஏவச*
*சக்ரு: ஸ்னானம் மஹாதீர்தே ஸர்வத்ர விஜயப்ரதே* [1]

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராக புராணம் ப்ரதம பாகாந்தர்கதம் 41-21-32) முதல்பாகம், பக்-35,36, தி.தி.தே. வெளியீடு.

ஸ்ரீ ராமர் சேனைகளை வழிநடத்திக் கொண்டு வில்வம், ஜாதிக்காய், புன்னைமரம், செண்பகம், மாமரங்கள் முதலிய மரங்களுடன், மயில்கள், குயில்கள், கிளிகள், புறாக்கள் முதலிய பறவைகளின் ஒலிகளால் எதிரொலிக்கின்ற, பழம் மற்றும் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வேங்கடம் என்ற பெயருடைய உயர்ந்த மலையில், வேத முறைகளின்படி உத்தமரான நிர்லோமன் என்ற பெயருடைய பிராம்மணன் பிரம்மாவை நோக்கி கடும் தவம் செய்து கொண்டிருந்தான். அங்கு வந்த பிரம்ம தேவன் அந்த பிராம்மண உத்தமரிடம் இவ்வாறு கூறினார். நீ லஷ்மணருடன் கூடிய ஸ்ரீ ராமச்சந்திரனை தரிசித்து விட்டு பிரம்மலோகத்தை அடைவாய் என்றார். இப்பொழுது அந்த நிர்லோமன் ஸ்ரீ ராமரை பார்த்து ஸ்ரீ ராமபிரானை துதித்து ஓ ஸ்ரீ ராமா! உன்னுடைய தாமரைப் போன்ற முக தரிசனத்தினால் இன்று என்னுடைய பிறவி பேறு பெற்றது. ஓ ஸ்வாமி! நெடுங்காலம் தவம் செய்து உயர்ந்த பலனை அடைந்தேன். ஓ ஸ்ரீராமா! பிரம்மலோகத்தை அடைவதற்கு எனக்கு அனுமதி தரவேண்டும் என்று நிர்லோமன் வேண்ட தர்மாத்மாவான ஸ்ரீராமன் அனுமதி வழங்கினார்.

அம்மலையிலேயே சாபம் பெற்ற சில யக்ஷர்களுக்கு ஸ்ரீராமர், சாப விமோசனம் செய்து மிக உயர்ந்த புண்யத்தைக் கொடுக்கக்கூடிய அஞ்ஜனாதேவி ஆசிரமத்தை அடைந்தார். அந்த ஆசிரமத்தில் அஞ்ஜனா தேவியின் பூஜையினை ஏற்ற ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அவளுக்கு வரமளித்தார். அதன் பின்னர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, லஷ்மணன், ஹனுமன், சுக்ரீவன், அங்கதன், ஜாம்பவான் மற்றும் நீலன் புஷ்கரணிக்குச் சென்று புனித நீராடினர்.

## வைகுண்ட குகையில் நுழைந்த வானரர்களின் வரலாறு

சூத மஹரிஷி வைகுண்ட குகைக்கு வானர்கள் நுழைந்த வரலாற்றை முனிவர்களுக்கு இவ்வாறு விவரித்து கூறினார். ஸ்ரீராமருடைய வானர சேனையில் சிலபேர் கஜன், கவாக்ஷன் முதலிய வானரவீரர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வடகிழக்கு (ஈசான்யம்) மூலையில் இருக்கின்ற வைகுண்ட குகைக்குள் நுழைந்தனர். (இந்த குகை இப்பொழுதும் உள்ளது. படத்தில் காணலாம்)

## ஸ்ரீ ஸுதர்

*ஸ்வாமி புஷ்கரிணீ யத்ர தத ஈசான்ய பாகத:*
*கஜோ கவாக்ஷோ கவய: சரபோ கந்த மாதந:*
*மைந்தஸ்ச த்விவிதஸ்ஸைவ ஸுஷேணஷ்ச மஹாமதி:*
*காஞ்சித்குஹாம் தமோருத்தாம் ப்ரவிஷ்டாஸ்தத்ர வானரா:*
*உன்நித்ரநேத்ரா: ஸர்வேSபிஸிம்ஹதுல்ய பராக்ரமா:*

*ஜக்முஸ்தே தமஸா விஸ்டாம் ஸுதூரம் தாம் குஹாம் ததா*
*தத்ருஸேSத்ர மஹாஜ்யோதி: ஸுர்ய கோடி ரிவோதிதா*
*ஜ்யோதிர்கணானாம் தடிதாம் விலிதாநாமி வாபபௌ*
*தத்ர காஞ்சித் புரீ ரம்யா தப்தஹாடகநிர்மிதா*

*கவாட தோரணத்புரீ ரம்யோத்யாந ஷதைர்யுதா*
*ஸ்படிகோ பலவச்சுத்த ஜலநத்யா ஸமாவ்ருதா*
*ரத்ன மாணிக்ய வைடூர்ய முக்தாநிர்மித கோபுரா*
*அநேக மண்டபைர்யுக்த ப்ரஸாத ஸதஸங்குலா*

*மஹாவீதி ஸதோபேதா ரதமாதங்க ஸம்யுதா*
*வரநாரீகணோபேதா ஸர்வ மங்கள ஶோபிதா* [1]

ஸ்வாமி புஷ்கரிணிக்கு ஈசான்ய மூலையில் (வடகிழக்கு) திசையில் கஜன், கவாக்ஷன், கவயன், ஸரபன், கந்தமாதனன், மைந்தன், த்விவிதன், சுஷேனன் முதலான வானரங்கள் அதிக இருள் மிகுந்த ஒரு குகைக்குள் நுழைந்தனர். சிங்கத்திற்கு சமமான வீரத்தை உடைய அந்த வானரர்கள் அனைவரும் அதிக இருள் நிறைந்த அந்த குகையின் உள்ளே வெகு தூரம் சென்றார்கள். கோடி சூரிய உதயத்தினால் உண்டாகும் அனேக விதமான பிரகாசத்துடன் கூடிய ஒரு பெரிய ஒளிகற்றைகளைக் கண்டனர். (அவ்வாறு ஒளி வீசுகின்ற ஒரு ஜோதியைக் கண்டனர்). அங்கு நன்கு காய்ச்சப்பட்டு (மெருகூட்டப்பட்டு) தங்கத்தினால் செய்யப்பட்ட கதவுகள் மற்றும் நுழைவு வாயில்களுடன் ஸ்படிகம் போன்ற சுத்தமான நதி, ரத்னங்கள், மாணிக்கம், வைடூர்யம், முத்துக்களால் கட்டப்பட்ட கோபுரத்தையும், நிறைய மண்டபங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட தேவபவனங்கள், பெரிய பெரிய வீதிகள், ரதங்கள், யானைகள் மற்றும் நிறைய பெண்கள் தனது கணவருடன் ஒன்று கூடி அனைத்து விதமான மங்கள வஸ்துக்களுடன் சிறந்து விளங்குகின்ற நகரத்தை வானரர்கள் கண்டார்கள்.

*சங்க சக்ர தராஸ்தத்ர ஸர்வேசைவ சதுர்புஜா:*
*சசுக்ல மால்யா வஸநா: ஸர்வாபரண பூஷிதா:*
*திவ்ய சந்தன லிப்தாங்கா: பரமானந்த பூரிதா:*
*தன்மத்யே ஸுமஹத்திவ்யம் விமானம் ஸூர்ய ஸன்னிபம்:*

*அத்யுன்னத மஹாமேரு ச்ருங்கதுல்யம் மனோஹரம்*
*பஹுப்ரகாச ஸம்பன்னம் மணிமண்டபஸம்யுதம்*
*பேரீம்ருதங்க பணவா மர்த்தலத்வனி சோபிதம்*
*ந்ருத்தவாதித்ர ஸம்பன்னம் கின்னரஸ்வன ஸம்யுதம்*

*தத்ருஸுஸ்தத்ர புருஷம் பூர்ண சந்த்ர நிபாணனம்*
*சதுர்பாஹு முதாராங்கம் ஸங்க சக்ர தரம் பரம்*
*பீதாம்பரதரம் ஸௌம்ய மாஸீநம் காஞ்சநா-ஸனே*
*பனாமணி மஹாகாந்தி விராஜித கிரீடினம்*

*போகி போகே ஸமாஸீனம் ஸர்வாபரண பூஷிதம்*
*ஆஸனோபரி வின்யஸ்த வாமேதர கராம்புஜம்*
*ப்ரஸார்ய தக்ஷிணம் பதாமுத்ருதே வாம ஜானுனி*
*ப்ரஸார்ய வாம ஹஸ்தாப்ஜம் ஸ்ரீ பூமிப்யாம் நிஷேவிதம்*

*ஸேவிதம் நீலயாதேவ்யா வைஜயந்த்யா விராஜிதம்*
*ஸ்ரீ வத்ஸ கௌஸ்துபோ ரஸ்கம் வனமாலா விபூஷிதம்*
*க்ருபார ஸதரங்கௌகபூர்ண நேத்ராம் புஜத்வயம்*
*ஸஸிப்ரபா ஸமச்சத்ரம் சாமரவ்யஜனே ஸுபே*

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் 42-1-8) முதல் பாகம், பக்கம் 37, 38, தி.தி.தே. வெளியீடு.

*ஹஸ்தாப்யாம் தாரயன்தீபி: நாரிபி: ஸேவிதம் முதா*
*த்ருஷ்ட்வா தே வானரா: ஸர்வே விஸ்மிதா: ஸுபலோசனா:*
*அத்ராந்தரே மஹா பாக: புருஷ: பரமாத்புத:*
*சதுர் புஜோ தண்ட ஹஸ்தோ த்ருஷ்ட்வா த்வரிதவிக்ரம:*

*தண்ட முத்யம்ய தான் ஸர்வான் பர்த்ஸயாமாஸ வைததா*
*தே ஸர்வே வானரா பீதாநிர்ஜக்முர்கிரிகஹ்வராத்*
*நிர்கத்ய ஸஹஸாதேப்ய: ப்ரோசுர் த்ருஷ்டம் யதாததா*
*ராவணஸ்து மஹாமாயீ காமரூபீச வஞ்சக:!*

*அன்யோவா ராவணோவாSத ஸோதனீய: ப்ரயத்நத:*
*இத்யுக்த்வா வானராஸ்தேச ஸர்வே ஸம்பூய ஸம்ப்ரமாத்*
*யத்ர பூர்வம் க்ருஹா த்ருஷ்டா தத்ரா கச்சன்வனௌகஸ:*
*நாபஸ்யன்ன கரீம் தத்ர சிஹ்னம் வா த்ருஷ்ட பூர்வகம்*

*ப்ரமாத்த மஞ்சஸா சைலம் விசிந்த்வந்தஸ்ச பர்வத:*
*ப்ரம இத்யேவ நிஸ்சித்ய தூஷ்னி மாஸன் வனௌகஸ:*
*தத:ப்ரபாதே விரதே ராமோ ராஜீவ லோசன:*
*லக்ஷ்மணேன ஸஹப்ராத்ரா வானரேந்ரேன தீமதா*

*ஸஹ சைன்யைர் மஹாதேஜா: ப்ரதஸ்-தே ரிஜிகீஸயா*
*ஜித்வா ச ராவணம் யுத்தே ப்ராப்ய ஸீதாம் மஹாபல:*
*அயோத்யாம் புநரப்யேத்ய ப்ராத்ருபி: ஸஹிதோ-நக:*
*ப்ராப்ய ராஜ்யம் ஸ்வயம் ராம: ஸ்வாமி தீர்த்தஸ்யவைபவாத்*
*இதி ச்ருதம் மயா பூர்வமப்ருவம் பவதா மஹம்* [1]

அங்கு இருந்த அனைவரும், சங்கு சக்கரங்களையும், நான்கு கைகளையும், வெண்மையான வஸ்திரங்களையும், வெண்மையான மாலைகளையும், அனைத்து விதமான ஆபரணங்களையும் அணிந்துள்ளனர். சந்தனம் பூசிக் கொள்வதினால் மிகுந்த ஆனந்தத்தை அடைவார்கள்.அந்த நகரம் நடுப்பகுதியில் சூரியனுக்கு ஒப்பான பிரகாசத்தோடு மேரு மலையைப் போன்று உயரமாக இருக்கின்றது.நன்றாக ஒளிவீசுகின்ற மணிமண்டபங்களோடு கூடி இருக்கின்றது மற்றும் பேரி, மிருதங்கம், தப்பட்டை, மத்தளம் முதலான வாத்தியங்களின் இனிமையான இசையுடன் சிறந்து விளங்குகின்றது.நாட்டிய வாத்யங்களோடு கூடிய கின்னரர்களோடு இருக்கின்ற அழகான வித்தியாசமான விமானத்தை வானரர்கள் கண்டார்கள்.

அந்த திவ்ய விமானத்தில் சந்திரனைப் போன்ற முகமுடைய ஒரு மஹா புருஷனை தரிசித்தார்கள். அந்த மஹா புருஷன் நான்கு கைகளை உடையவனாய், சங்கு, சக்ரங்களையும் பட்டு வஸ்திரங்களையும் அணிந்து தங்கமயமான ஆசனத்தில் வீற்றிருக்கிறார்.மணிகளின் ஒளிகளாலே சிறந்து விளங்குகின்ற அந்த மஹா புருஷன் ஆதிசேஷனின் மேல் அனைத்து விதமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறார்.ஆசனத்திலே அமர்ந்து கொண்டிருக்கின்ற ஸ்ரீ மஹாவிஷ்ணு வலது கையை நீட்டி இடது கால் முழங்காலின் மேலே ஸ்ரீ தேவி பூதேவி நீளா

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் 42-8-28) முதல் பாகம், பக்கம் 38,40, தி.தி.தே. வெளியீடு

தேவிகளாலே வணங்கப்படுகிறவர். அந்த மஹாபுருஷனுடைய கழுத்தில் வைஜெயந்தி மாலையும், திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்கிற மருவும் வனமாலையும் ஒளிவீசிக்கொண்டு இருக்கின்றன. கருணை பொழிகின்ற, தாமரைப்பூ போன்ற கண்களோடு இருக்கின்ற அந்த மஹாபுருஷனை வானரர்கள் அனைவரும் கண்டார்கள். சந்திர கிரணங்களுக்கு ஒப்பான பிரகாசத்தை உடைய குடைகளையும், வெண் சாமரத்தையும் பிடித்துக் கொண்டு பெண்கள் அந்த மஹா புருஷனை மிகுந்த மகிழ்ச்சியுடன் சேவிக்கிறார்கள். இக்காட்சியைக் கண்ட வானரர்கள் அனைவரும் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்தார்கள். அப்பொழுது அங்கு இருக்கின்ற மிகவும் உத்தமனான மஹாபுருஷர் நான்கு கைகளுடன், கைகளில் பெரிய பிரம்பை வைத்துக் கொண்டு மிகவும் வீரம் பொருந்திய ஒருவன் இந்த வானரங்களைப் பார்த்து அந்த பிரம்பினால், மிரட்டினார். வானரர்கள் அனைவரும் அச்சத்துடன் வெளியே வந்து நடந்த விஷயங்கள் அனைத்தையும் மற்ற வானரர்கள் அனைவருக்கும் தெரிவித்தார்கள்.

வானரர்கள் அனைவரும் இராவணன் மஹா மாயாவி. விருப்பத்திற்கேற்ப தனது உருவத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவன், மோசக்காரனாவான். மேலும் இராவணனா அல்லது வேறு ஒருவனா என்பதை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று குகையின் அருகில் சென்றார்கள்.அங்கு முன்பு சென்ற வானரர்கள் கூறிய விஷயங்கள் அனைத்தும் எதுவும் காணப்படாமையால் அதை ப்ரமை (கனவு) என்று நினைத்தார்கள். இது ப்ரமையே (கனவு) என்று முடிவு செய்து கொண்டு அமைதியாக, பின்வந்து விட்டார்கள். விடியற்காலையில் (பொழுது விடிந்தவுடன்) ஸ்ரீராமர் சகோதரனான லக்ஷ்மணனோடும், வானர அரசனான சுக்ரீவனோடும் மற்றும் சேனைகளோடும் இராவணன் மீது போர் தொடுப்பதற்குப் புறப்பட்டார். பிறகு மிகுந்த பலசாலியும் புண்யாத்மாவான ஸ்ரீ ராமன் போரில் இராவணனை வென்று சீதையை அடைந்து தனது சகோதரர்களுடன் அயோத்தி அடைந்தார். ஸ்வாமி புஷ்கரிணியின் பெருமைகளால் ஸ்ரீ ராமன் வெற்றி அடைந்து ராஜ்ஜியத்தைப் பெற்றார் என்று, முன்பு நான் கேட்டவைகளை உங்களுக்குக் கூறினேன் என்று, ஸுத மஹரிஷி, ஸௌனகர் முதலிய மஹரிஷிகளுக்குக் கூறினார்.

**வைகுண்ட குகையின் பெருமைகளை வர்ணித்தல் :**
**முனிவர்கள்**

*வைகுண்டாத்ரௌ குஹாத்ருஷ்டா காசித்வாநரஸத்தமை:!*
*இத்யுக்தம் பவதாஸுத! வேத வேதாங்க பாரக!*
*குஹாகா? வத நோ ப்ரஹ்மன்! ச்ரோதும் கௌதூஹலம் ஹி ந: [1]*

ஸௌனகாதி முனிவர்கள் ஸுத மஹரிஷியோடு பேசிக் கொண்டிருக்கும் போது, வேதம் வேதாந்தம் முதலிய சாஸ்த்திரங்களில் கரை கண்ட ஓ ஸுத மஹரிஷியே! வானரர்கள் வைகுண்டாத்ரியில் இருக்கின்ற ஒரு குகையில் நுழைந்தார்கள் என்று கூறினீர்கள் அல்லவா அந்த குகை எது? அந்த குகையைப் பற்றி எங்களுக்கு விவரித்துக் கூறுங்கள் என்று கேட்ட பொழுது, ஸுத மஹரிஷி முனிவர்களுக்கு இவ்வாறு கூறலானார்.

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் 42-29-36) முதல் பாகம், பக்கம் 40, தி.தி.தே. வெளியீடு

*ச்ரூயதாம் அபிதாஸ்யாமி தேவமாயா மயாஸ்ருதா*
*வைகுண்டாக்யா குஹாஸாது துர்க்ஞேயா முனியோகிபி:*
*துர்க்ஞேயா ஸாது தேவைஸ்ச மாயயா பரமாத்மன:*
*லீலயா விஷ்ணுனா பூர்வம் வானரானாம் ப்ரகாசிதா*

*தஸ்யாங்குஹாயம் ஏத்ருஷ்டா: சங்க சக்ரதரா-அபி*
*தேது முக்தாஸ்ததா நித்யா: பரமானந்த ரூபின:*
*புஞ்ஜதே ப்ராஹ்மமானந்த மாவிர்பூத குணாஸ்சதே*
*ஸஞ்சரந்த: காமரூபா லோகான் பகவதாஸ:*

*ஆனந்தரூபா: கைங்கர்யம் குர்வந்தோ ப்ரஹ்மநோஹிதே*
*வஸந்தி தத்ர ஸததம் ப்ரஹ்மணா பரமேஷ்டினா*
*யதா யதா கலி: காலோ யதாவா ஜனதா கிரௌ*
*ததா குஹாயாம் தஸ்யாந்து வஸிஸ்யந்தீதி ந ஹாஸ்ருதம்*

*ஏவம் ப்ரபாவ: சேஷாத்ரி: வஸத்யஸ்மின் ஜகன்மய:*
*க்ரீடதே லீலயா யுக்தோ நித்யைர் முக்தைஸ்ச ஸூரிபி:* [1]

அதை தேவமாயா என்று நான் கேட்டிருக்கிறேன். அந்த வைகுண்ட குகையைப் பற்றி முனிவர்களால் கூட அறிந்து கொள்ள இயலாதது. அறிந்து கொள்வதற்கு இயலாததான அந்த குகையை பரமாத்மாவினுடைய மாயையாலும், ஸ்ரீ மஹா விஷ்ணுவினுடைய லீலையாலும் முன்பு சென்ற வானரர்களால் பார்க்க முடிந்தது.அந்த குகையில் காணப்பட்ட சங்கு சக்கரத்தை தரித்தவர்கள் அனைவரும் நித்யர்கள், பரமானந்தத்தின் உருவங்களான முக்தர்கள். அவர்கள் ப்ரஹ்மானந்தத்தை அனுபவித்துக் கொண்டும், விரும்பிய தோற்றங்களை எடுத்துக் கொண்டும் பகவானோடு கூட பற்பல லோகங்களில் சஞ்சரித்து கொண்டு இருப்பவர்கள்.

ஆனந்தத்தின் உருவங்களான அவர்கள் பரமாத்மாவை இடைவிடாது சேவித்துக் கொண்டும், பிரம்மாவிற்கு மிகவும் நெருங்கியவர்களாகவும் இருந்து கொண்டு அந்த குகையில் பிரம்மாவோடு கூட நிரந்தரமாக வசித்துக் கொண்டு இருப்பார்கள். எப்பொழுதெல்லாம் கலியுகம் வருகிறதோ அப்பொழுது மக்கள் தொகை மிகுதியாக இருக்கும் பொழுது அவர்கள் அந்த குகையில் வசிப்பார்கள் என்று நாங்கள் கேட்டுள்ளோம்.சேஷாத்ரி மலையின் மகிமை இவ்வாறானது. இந்த மலையில் உலகத்திற்கு ஆத்மாவான பரமாத்மா லீலா ஸ்வரூபனாக நித்ய சூரிகளோடு விளையாடி கொண்டிருப்பான்.

*நீலமேக நிபம் ச்யாமம் நீலோத்பல விலோசனம்*
*நீலாத்ரி சிகரஸ்த்தம் தம் பஜாம் யத்ரைவஸுஸ்திதம்*
*குஹாஹ்யானம் ச்ருதம் கிம்வா? யுஷ்மாபிர்வீதகல்மஷை:*
*ச்ருண்வதா மிதமாஹ்யானம் கலிதோஷ மலாபஹம்*

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் 42-29-36) முதல் பாகம், பக்கம் 40, தி.தி.தே. வெளியீடு

*தன்யம் யஸச்ஸ்ய மாயுஸ்யம் புத்ர பௌத்ராபி வர்தனம்*
*இதீரத: சேஷகிரே: ப்ரபாவ: ஸ்ருதோ மயா யோகிநரேப்ய ஆதரா:*
*ஸமஸ்த ஜீவாத்ம ஸமஸ்டிரோபினோ ஹரே: ப்ரபாவோSபி கரீந்த்ர கோப்து:* [1]

நீல மேகம் போன்ற வர்ணத்தை உடையவன், கருப்பு அல்லி மலர் போன்ற கண்களை உடையவன் நீலாத்ரி என்ற மலையில் நித்ய வாஸம் செய்பவரான பரமாத்மாவிற்கு நான் நமஸ்காரம் செய்கின்றேன்.

ஓ முனிவர்களே! பாபம் அற்றவர்களான நீங்கள் இந்த குகையைப் பற்றி கேட்டீர்கள் அல்லவா! கலிதோஷத்தை போக்கடிக்கின்ற இந்த வரலாற்றை கேட்டவர்கள் உத்தமர்கள் ஆவார்கள். இந்த வரலாற்றை கேட்டதின் பயனாகப் புகழ், ஆயுள், வம்சத்தின் அபிவ்ருத்தி போன்றவைகள் ஏற்படுகின்றன. இவ்வாறாக சேஷாத்ரி மகிமைகளை நான் பக்தி ச்ரத்தையோடு யோகீந்தர்களிடமிருந்து கேட்டு அறிந்தேன். கஜேந்திரனின் ரக்ஷகனான வேங்கடாசலபதியின் மகிமையை மிகுந்த பக்தியோடு உங்களுக்கு கூறினேன் என்று ஸுத மஹரிஷி ஸௌனகர் முதலான முனிவர்களுக்குக் கூறினார்.

மேலும், திருவேங்கடமுடையானின் சேவையில் பாராயணம் செய்யப்படுகிற வேங்கடாசல மாஹாத்மியத்தில் இருக்கின்ற சுலோகங்களாலும், புராணத்தின் உடைய உண்மையான தத்துவத்தினாலும் உண்மையை நாம் அறிந்து கொள்ள முடியும்.

மேலும் ஆஞ்ஜனேய ஸ்வாமியினுடைய அவதாரத் தலமாகக் கூறப்படுகின்ற பாரத தேசத்தில் இருக்கின்ற வேறு சில க்ஷேத்திரங்களை நாம் ஆய்வு செய்தோமானால் அவற்றில் எங்கும் சான்றுகள் காண்பிக்கின்ற நிலை காணப்படவில்லை. திருமலை என்ற புண்யக்ஷேத்திரம் வைஷ்ணவ க்ஷேத்திரமாகப் புகழ் பெற்றுள்ளது. புராணங்கள் திருவேங்கடமுடையானின் மகிமைகளைப் புகழ்ந்து போற்றுகின்றன. பசின்டி வேங்கடத்துறைவர் என்ற மஹானுடைய காலத்தில் எழுந்தருளி இருந்த தாள்ளபாக்க அன்னமய்யா அவர்கள் (கி.பி. 1408 – 1503)

*ப்ரவிமல த்விபத ப்ரபந்த ரூபமுந*
*நவமுகா ராமாயணமு, திவ்யபாஷ*
*நா வேங்கடாத்ரி மாஹாத்ம்யமந்தயுனு*
*காவிஞ்சி, ருசுள ஸ்ருங்காரமஞ்சரியு*
*சதகமுல் பதிரெண்டு ஸகல பாஷலனு*
*ப்ரதி லேநி நாநா ப்ரபந்தமுல் சேஸி* [2]

சமஸ்க்ருத மொழியில் வேங்கடாத்ரி மலையின் பெருமைகளை எழுதியதாக அன்னமய்யாவின் பேரனான சின்னன்ன (சின திருவேங்கள நாதுடு) அன்னமாசார்ய சரித்திரம் என்ற இரட்டை காவியத்தில் கூறியுள்ளார். அன்னமய்யா எழுதிய வேங்கடாத்ரி மாஹாத்மியம் கிடைக்கவில்லை. அன்னமய்யா ஒரு ஸங்கீர்த்தனத்தில் பாகவதம், பிரம்மாண்ட புராணம், வாமன

---

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதம பாகாந்தர்கதம் 42-37-38) முதல் பாகம், பக்கம் 41, தி.தி.தே. வெளியீடு

2. அன்னமாசார்ய ஜீவித சரித்ரமு, பக்கம் 49

புராணங்களில் வேங்கடாத்ரியினுடைய மகிமைகளுக்கு சம்பந்தபட்ட கதைகள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

*ஸ்ரீ வேங்கடேசுடு ஸ்ரீபதியு நிதடே*
*பாவனபு வைகுண்ட பதியுனு நிதடே*
*பாகவதம்லோ ஜெப்பே பலராமு தீர்த்த யாத்ரா*
*நாக மோக்தமைன தைவ மாதடிதடே*

*பாகுகா ப்ரஹ்மாண்ட புராண பத்ததி யாத டீதடே*
*யோகமை வாமன புராணோக்த தைவமிதடே*
*விஎயு ஸப்தருஷுலு வெதகி ப்ரதக்ஷிணமு*
*லலர ஜேஸின தேவுடாத டீதடே*

*நெலவை கோநேடி பொந்த நித்யமு குமார ஸ்வாமி*
*கலிநி தபமு சேஸி கன்ன தேவுடீதடே*
*யெக்குவை ப்ரஹ்மாதுலு நெப்புடு நிந்த்ராதுலு*
*தக்கக கொளிசியுன்ன தத்வமீதடே*

*சக்க நாரதாதுல ஸங்கீர்த்தனகு ஜொக்கி*
*நிக்கின ஸ்ரீ வேங்கடாத்ரி நிலயுடு நீதடே* [1]

17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரேஸ்டலூரி வேங்கடாசார்யலு என்ற மகான் தான் எழுதிய “ஸ்ரீநிவாஸ விலாஸ ஸேவதி” என்ற காவியத்தில் புராணங்களில் உள்ள திருவேங்கடேச்வரனின் பெருமைகளைக் கூறியுள்ளார்.

## சேஷாசலத்தின் வைபவம்

*ப்ரகிடி தாளம் க்ருதாளம் க்ரியாஸ்பத வர்ணநலனு .........*
*வாராஹ வாமன ப்ரஹ்மாண்ட பாத்ம*
*காருட ஸ்கந்த மார்கண்டேய முக்ய*
*பஹு புராணோக்தி ஸம்பந்தம்பு வலன*
*காஹனமை பெனுகொன்ன கத சிக்கு தீர்ச்சி*

ஸ்ரீநிவாஸருடைய கதைகளை ஸ்ரீ வேங்கடாத்ரி மாஹாத்மியம் விவரித்ததைப் போலவே ‘ஸ்ரீநிவாஸ விலாஸ சேவதி’ கூட விவரிப்பதாக அதை எழுதிய ஸ்ரேஷ்டலூரி வெங்கடார்யர் சொல்லிக்கொண்டார்.....

******

1. தாள்ளபாக்க பதஸாஹித்யம், தொகுதி – 1, ஸங்கீர்த்தனை – 425, 1980.

## வாயுதேவன் அஞ்ஜனாதேவிக்கு பழத்தை வழங்குதல்



# அத்தியாயம் - 7

# 7. ஹனுமனின் பிறப்பிடம் திருமலை (புவியியல் ஆதாரங்களுடன்)

**தெலுங்கு மூலம்**
**பேராசிரியர் ராணி சதாசிவமூர்த்தி**

**தமிழாக்கம்**
**திரு. ல. வெங்கடேசன்,**
**முனைவர். ஆ. அரங்கராஜன்**

**பொருளடக்கம்**

1. ஹனுமனின் பிறப்பிடம் திருமலை அல்லது அஞ்ஜனாத்ரி என்பதற்கு புராண, பக்தி இலக்கியங்கள், காவியங்கள், கல்வெட்டு ஆதாரங்கள் இருக்கின்றன. இது போன்று ஹனுமனின் பிறப்பிடமாகக் கூறப்படுகின்ற வேறு எந்த இடத்திற்கும் இல்லை.
2. உலக புவியியல் அமைப்பில் இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் – திருமலை ஏழுமலைகள். கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் ஏழு மலைகள்: தென் பகுதி – நடுப்பகுதி – வடக்குப் பகுதி.
3. இந்த அஞ்ஜனாத்ரி அல்லது அஞ்ஜன மலை குறித்து ப்ரஹத் ஸம்ஹிதையில் உள்ள விசேஷங்கள்.
4. கதைப்படியும், புவியியல் படியும் புராண ஆதாரங்களின் வலிமை.
5. நவீன விஞ்ஞானிகளின் கூற்றுப்படி உலகளாவிய புவியியல் அமைப்பில் இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் – திருமலை ஏழுமலைகள்.
6. கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் சேஷாசலம் – வெளிகொண்ட மலைத்தொடரில் அமைந்துள்ளன.
7. புராண புவியியலில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.
8. மஹேந்த்ர மலைகள் – ஆந்திராவில் நதிகள், மலைகள், அந்த நதிகளில் சுவர்ணமுகி நதி, அந்த மலைகளில் திருமலை ஏழுமலைகள்.
9. ஆந்திராவில் கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகளுக்கு இடையே உள்ள இடங்கள்.
10. ப்ரஹத் ஸம்ஹிதையில் கூர்மப் பிரிவு–முழு விவரங்கள் இந்த பகுதியில் காணலாம்.

ஹனுமன் உலகம் முழுவதிலும் உள்ள இந்துக்கள் மற்றும் இந்து மதத்தை பின்பற்றுபவர்களின் பூஜிக்கத் தகுந்த கடவுள்.

ஸ்ரீ ராமரின் சேவகராகவுள்ள அவருக்கு எண்ணற்ற பெயர்கள் உள்ளன. மஹா வீரனாக அஷ்டமா சித்திகளை அடைந்தவராக அதிக மகிமை பொருந்தியவராக சிறந்த பெயர் உள்ளவர்.

பிறந்த உடனேயே பசியினால் உதய சூரியனையே பழம் என்று எண்ணி உண்பதற்காக ஆகாயத்தில் பறந்து சூரிய மண்டலத்திற்கு அருகில் சென்ற மஹா பலசாலி. அப்படிப்பட்ட ஹனுமன் இந்தியாவில் பிறந்தார் என்று இராமாயணம் மற்றும் எண்ணற்ற புராணங்கள் கூறும் தகவல். ஆனால், பாரத தேசத்தில் எங்கு பிறந்தார் என்ற விஷயத்தில் அவரவரது நம்பிக்கை அவர்களுக்கு உரியது. உத்திரபிரதேசத்தில் என்று சிலரும், மத்திய பிரதேசத்தில் என்று சிலரும், கர்நாடகாவில் என்று சிலரும் இப்படி அவரவர்களின் நம்பிக்கையைப் பொருத்து அந்தந்த இடங்களை ஹனுமனின் பிறப்பிடமாக தெரிவித்துக் கொண்டு பக்தி ச்ரத்தைகளுடன் கோயில்களை ஏற்படுத்தி சுற்றுலா இடமாகவும் விரிவுபடுத்தி உள்ளூர் வாசிகளுக்கும் வெளியூர்களிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கும் பக்தி மையங்களாக இவற்றை ஏற்பாடு செய்தார்கள். இவையெல்லாம் நம்பிக்கையின் மீதே ஆதாரப்பட்டவைகள்.

ஆனால், இவை அனைத்திற்கும் மாறாக திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரி ஹனுமனின் பிறப்பிடமாகச் சொல்வதற்கு புராண, பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆதாரங்கள் மற்ற இடங்களுக்கு இல்லை. இந்த கட்டுரையில் நவீன விஞ்ஞானிகளின் கூற்றுப் படியும், புராண – இலக்கிய ஆதாரங்களின் படியும், புவியியலின் படியும் அஞ்ஜனாத்ரியின் இருப்பை நிர்ணயம் செய்வது, அங்கு ஹனுமன் பிறந்தார் என்ற பிரம்மாண்ட புராணம் மற்றும் ஸ்காந்த புராணத்தில் உள்ள விவரங்களை தெரிவித்துள்ளோம்.

### கதையின் படியும், புவியியல் படியும் புராண ஆதாரங்களின் வலிமை

இந்திய இலக்கியத்தில் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தை உறுதிபடுத்தும் அனைத்து ஆதாரங்களில் இலக்கிய ஆதாரங்கள் மிக முக்கியமானவை. இவைகளில் பலமுறைகள் உள்ளன. இதிகாச புராணங்கள், பிற்காலத்தில் வந்த பக்தி இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் போன்றவை. இவற்றில் இந்து சமயத்தில் இதிகாச புராணங்களில் ஆஞ்ஜனேயரின் பிறப்பிடத்தைப் பற்றி உள்ள நிகழ்வுகளை இங்கு நிரூபிப்பதின் முயற்சியே இந்த கட்டுரை. திருவேங்கடமுடையான் புராண புருஷர், புராணங்களை கேட்பதில் பிரியமானவர், புராணங்களால் போற்றப்படுபவர். அதனால் ஸ்ரீநிவாஸரைப் பற்றி சொல்வதென்றால் வேதபுராணங்களைக் காட்டிலும் தொன்மையான நூல் வேறு எதுவும் இல்லை. இந்தப் புராணங்களில் ஹனுமனின் பிறப்பு முதல் ஹனுமனின் பிறப்பிடத்திற்கும் வேங்கடமலைக்கும் உள்ள தொடர்புகள் குறித்த விஷயங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இந்த விசேஷங்களை புவியியலின்படி இரண்டு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். இங்கு புவியியலின்படி ஆதாரங்களின் ஆராய்ச்சியை நவீன புவியியல் அறிஞர்களின் கூற்றுப்படி சொல்லப்படுகிறது.

### நவீன விஞ்ஞானிகளின் கூற்றுப்படி உலகலாவிய புவியியல் அமைப்பில் இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் திருமலை ஏழுமலைகள்

இந்திய தீப கற்பத்தின் கிழக்கு கடற்கரையைச் சுற்றி தனித்தனியாக அமைந்து உள்ள மலைத் தொடர்ச்சிகளுக்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகள் என்று பெயர். வடக்கே ஒரிசா, ஆந்திரா, தெலுங்கானா, கர்னாடகா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பரந்து இருக்கின்றது. இந்த

மலைத்தொடர்ச்சிகள் தனித்தனியாக இருப்பதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று இந்த மலைகளின் வழியாக பாய்கின்ற கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா, காவேரி இந்த வழியாக நிரந்தரமாகப் பாய்வதால் மலைகளில் உள்ள பூமியின் பாகங்களை அறுத்துக் கொண்டு பாய்வதே காரணம். இப்படி பாய்ந்து கடைசியில் இந்த நதிகள் அனைத்தும் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இப்போது உள்ள உலக வரைபடத்தில் உள்ள கண்டங்கள் பிரிவுக்கு முன்பே ரோபிலியா மஹா கண்டம் விடுபடும் சமயத்தில், கோண்ட்வானா மஹா கண்டம் ஏற்படும் சமயத்திற்கு சுமார் 20 முதல் 500 மில்லியன் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு முன்பே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஏற்பட்டன என்று புவியியல் விஞ்ஞானிகளின் கருத்து. 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே பிரிந்து பரந்த இந்த மலைத்தொடர்ச்சிகள் வங்காள விரிகுடா கடற்கரைக்கு இணையாக நீண்டு பரந்துள்ளன. இவற்றை தெற்கு பாகம், நடு பாகம் மற்றும் வடக்கு பாகம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

### தெற்கு பாகம்

கிழக்குத் தொடர்ச்சி மலையில் தெற்கு முனையின் கடைசி வரை இருக்கும் மலைகளை சிறுமலை, காரந்த மலை என்று சொல்வார்கள். இவை உயரம் குறைந்த சிறிய குன்றுகள் போல் காட்சியளிக்கின்றன. காவேரி நதிக்கு வடக்கில் உள்ள வடக்கு தமிழ் நாட்டில் கொல்லி மலை, பச்சை மலை, ஷெவராய் (சர்வாராயன்), கால ராயன், சித்தேரி, ஜவ்வாது, பாலமலை, மேட்டூர் மலை என்ற மலைகளின் வரிசைகள் இருக்கின்றன. இவை கிழக்குத் தொடர்ச்சியின் பாகங்களே. கர்நாடகா மாநிலத்தில் சாமராஜா நகர் மாவட்டத்தில் மாலே மஹாதேவே ஆலயம் கிழக்குத் தொடர்ச்சி மலையிலேயே உள்ளது. அவ்வாறே கேரள மாநிலத்தில், வயநாடு மாவட்டத்தில் உள்ள மற்றும் ஒரு மலைத் தொடர்ச்சி குரும்பல கோட்ட மலையும்கூட கிழக்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்ததே. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் சார்னோகைட், க்ரானைட் கற்கள் கொண்ட லைட்கள். மேட்டா மார்பிக் நீஸ்கள், க்வார்ஜ் கற்களோடு சேர்ந்து இருக்கும்.

கிழக்குத் தொடர்ச்சி மலை கட்டமைப்பு, த்ரஸ்ட்த், ஸ்ட்ரைக், ஸ்லிப் குகைகள் உள்ளன. கிழக்குத் தொடர்ச்சி மலைகளில், சுண்ணாம்புகள், பாக்சைட், இரும்பு தாதுக்கள் முதலியவை கிடைக்கின்றன.

### நடுப்பகுதி

பாலாற்றின் வடக்கே ஆந்திர பிரதேசத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையின் மத்திய பகுதியில் தோராயமாக வடக்கு மற்றும் தெற்கு திசையில் பரவியுள்ள இரண்டு இணைத்தொடர்கள் உள்ளன. கிழக்கே தாழ்வான வெலிகொண்டா மலைத் தொடர். மேற்கே உயர்ந்த பாலிகொண்டா, லங்கமல, நல்லமல மலைத்தொடர்கள் உள்ளன. இவை கோரமண்டல் கடற்கரைக்கு இணையாக சுமார் வடக்கு – தெற்கு சீரமைப்பில் கிருஷ்ணா மற்றும் பெண்ணா நதிகளுக்கு இடையே 430 கி.மீ. நீளத்தில் இருக்கின்றன. இவற்றிற்கு வடக்கு எல்லையில் சமானமான பல்னாடு படுகை உள்ளது. தெற்கு திசையில் திருப்பதி மலைகளுடன் இணைகிறது. மிகவும் பழமையான இந்த மலைகள் கால மாற்றத்தால் தட்பவெப்பநிலைகளுக்கு உள்ளாகி குறைந்து போயின. இன்று இவற்றின் சராசரி

உயரம் 520 மீட்டர் ஆகும். ஆனால், பைரவமலையின் அருகில் 1100 மீட்டர், குண்ட்லப்ரம்ஹேச்வரத்தின் அருகில் 1048 மீட்டர் உயரம் உள்ளது. ஏழு மலைகள் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் சேஷாசலம் வெலிகொண்டா தொடர்ச்சியில் இருக்கிறது.

பாலாறு நதி இந்தப்பகுதிகளை அரித்துக்கொண்டு செல்கிறது. வெலிகொண்டா தொடர்ச்சி கடைசியில் நெல்லூர் மாவட்டத்தின் வடக்கு பகுதியில் கரை அருகில் இறங்குகிறது. கர்னூலில் நல்லமல்ல மலைத்தொடர்ச்சி கிருஷ்ணா நதிவரை தொடர்கிறது.

கொண்டபள்ளி மலைகள் கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் நடுவில் இருக்கும் உயரம் குறைந்த மலைகளின் தொடர்ச்சி. இந்த மலைகள் ஆந்திர பிரதேசத்சில் உள்ள குண்டூர், கிருஷ்ணா, மேற்கு கோதாவரி மாவட்டங்கள் மற்றும் தெலுங்கானாவில் உள்ள கம்மம் மாவட்டம் வரை அமைந்து இருக்கிறது. கிருஷ்ணா நதி கிழக்குத் தொடர்ச்சியின் இந்த மலைகளைப் பிரிக்கிறது. பிரதான மலைத்தொடர்ச்சி நந்திகாமில் இருந்து விஜயவாடா வரை பரந்துள்ளது. இதையே கொண்டபள்ளி தொடர்ச்சி என்று அழைப்பார்கள். பாபிகொண்டலு என்ற மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலையில் ஆந்திர பிரதேசத்தில் கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி மாவட்டங்கள் மற்றும் தெலுங்கானாவில் கம்மம் மாவட்டம் வரை பரவியுள்ளது. இது ராஜ மஹேந்த்ரம் அருகில் முடிகிறது. மதுரவாடா டேம், விசாக பட்டினத்திற்கு வடக்கே உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலையில், கொண்டலைட் ஸுட், க்வாச் ஆர்கியன் பாறைகளால் டெக்டோனிக் சீரமைப்பின் மூலம் ஏற்பட்டது.

### வடக்குப் பகுதி

மாலியா மலைத்தொடர் கிழக்குத் தொடர்ச்சி மலையின் வடக்கு பகுதியில் இருக்கிறது. மாலியா மலை சுமார் 900–1200 மீ. உயரத்தில் இருக்கின்றது. அதன் சில சிகரங்கள் அதை விட உயரமானவை. இந்த மலைத்தொடர்ச்சியில் மிகவும் உயரமான சிகரம் மஹேந்த்ரகிரி (1501 மீ.) மாடுகுல மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலையின் வடக்கு பகுதியில் இருக்கின்றன. 1100–1400 மீ. உயரத்தில் அவை மாலியா மலைகளை விட உயரமானவைகளாகும். இந்த மலைகளில் முக்கியமான சிகரங்கள் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள அனைத்து சிகரங்களையும் விட மிகவும் உயரமான சிகரம் அர்மாமலை (1680 மீ.), காலி மலை (1643 மீ.), சிகரம் குட்ட (1620 மீ.).

ஒரிசா மாநிலத்தில் மிகவும் உயரமான மலைச்சிகரம் தேவமாளி (1672 மீ.) கிழக்குத் தொடர்ச்சி மலையில் தெற்கு ஒடிசாவின் கோராபுட் என்ற மாவட்டத்தில் இருக்கின்றது. இது சந்திரகிரி பொத்தங்கி மலைத் தொடரின் ஒரு பகுதி ஆகும். இப்பகுதி ஒரிசா மாநிலத்தின் மொத்த பகுதியில் நான்கில் மூன்று பங்கு இருக்கின்றது. புவியியல்படி இது இந்திய தீப கற்பகத்தின் ஒரு பகுதியாகும். இது மிகவும் பழைமையான கோண்ட்வானா லேண்ட் பூமி பகுதியில் ஒரு பாகமாகும். ஒரிசாவில் உள்ள முக்கிய நதிகள் அவற்றின் துணை நதிகளுடன் சேர்ந்து மிகவும் ஆழமான குறுகிய பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தின.

கர்ஜத் மலைத்தொடர் வடமேற்கு கிழக்குத் தொடர்ச்சி மலையின் விரிவாக்கமாகும். இது கிழக்கு பக்கத்தில் செங்குத்தாக உயர்ந்து, மேற்கு பக்கத்தில் மையார் பஞ்ஜ், மல்கான மலைக்கு

இடையில் உள்ள பீடபூமி வரையிலும் மெதுவாக இறங்குகிறது. ஒரிசாவில் உயரமான பகுதிகள் கர்ஜத் மலைகள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதியின் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 900 மீ. உயரத்தில் இருக்கின்றது. சிமிலிபால் மாஸிப் கிழக்குத் தொடர்ச்சி மலையின் வடகிழக்கு விரிவாக்கமாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் கிழக்கு கடற்கரை சமவெளிகளில் பாயும் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆறுகளின் பிறப்பிடம் கிழக்குத் தொடர்ச்சி மலைகளாகும்.

### கிழக்குத் தொடர்ச்சி மலைகள் வழியாக பாயும் ஆறுகள்

கோதாவரி, காவேரி, கிருஷ்ணா, மஹாநதி, துங்கபத்ரா நதிகள் இருப்பினும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள், ரிஷிகுள்யா, வம்சதார, பாலாறு, நாகாவளி, சம்பாவதி, கோஸ்தனி, சாரதாநதி, தாண்டவ, சபரி, சீலேரு, தம்மிவேரு, குண்ட்ல கம்மா, பொன்னியார், சுவர்ண முகி, குந்தூ, வெள்ளார், பென்னா.

இவ்விதமாக நவீன புவியியலாளர்களின் கூற்றுப்படி ஏழுமலைகள் மற்றும் அதன் அருகே ஓடும் சுவர்ணமுகி ஆறு இரண்டும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் நடுவில் 13.6781837 வ. மற்றும் 79.352188 கி. அட்சரேகையில் இருக்கின்றன.

### இதிகாசங்களில் புவியியலில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

18 புராணங்களில் புவியியல் மற்றும் புவனகோஸ அத்யாயங்களில் தற்போதைய கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இருக்கும் பெயர், கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஊர்களின் பகுதிகள், நதிகள் பற்றி அந்தக்காலத்தில் புராணங்களில் உள்ள, புழக்கத்தில் உள்ள பெயர்கள் பற்றி தெரிந்து கொள்வோம். இந்த கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு முன் காலத்திலிருந்து இன்று வரை கூட மஹேந்த்ர கிரி என்ற பிரபலமான பெயர் இருக்கின்றது. இந்த மஹேந்த்ர கிரியின் ஒரு பகுதியாகவே திருமலையை எல்லா புராணங்களிலும் வர்ணிக்கப்பட்டது. மஹேந்த்ர கிரியிலும் ஆந்திராவில் ஏழுமலைகளை ஒரு பகுதியாகவே சொல்லப்பட்டுள்ளது. எனவே இங்கு புராணங்களுடன் இராஜசேகரனின் காவிய மீமாம்ஸ, காளிதாஸரின் ரகுவம்ஸத்தில் இருந்து ஆரம்பித்து இராஜேந்திர சோழனின் நண்டூர் கல்வெட்டு, நாரத புராணம், இராமாயணம், மஹாபாரதம், ப்ரஹத் ஸம்ஹிதை போன்ற நூல்களில் உள்ள ஆதாரங்களுடன் மஹேந்த்ர மலைகள் – ஆந்திராவில் – ஆந்திர நதிகள் மற்றும் மலைகள், அந்த நதிகளில் சுவர்ணமுகி நதி, அந்த மலைகளில் ஏழுமலைகள், அவற்றின் புராணங்களில் உள்ள பெயர்கள், அவற்றில் அஞ்ஜனாத்ரி என்ற பெயர், அதனுடைய புகழ் எல்லாம் விவாதிக்கப்பட்டது.

### மஹேந்த்ர கிரி

பாரததேசத்தில் உள்ள ஸப்தகுல மலைகளில் இதுவும் ஒன்று.

*மஹேந்த்ரோ மலய: ஸஹ்யா:ஸுக்திமான் ருக்ஷபர்வத:*
*விந்த்யஸ்ச பாரியாத்ரஸ்ச ஸப்தைவாத்ர குலாசலா:* [1]

1. மார்கண்டேயபுராணம் – 57-10.

ராஜசேகரன் காவ்யமீமாம்ஸையில் பரத கண்டத்தில் குமாரி த்வீபத்தில் (விந்த்ய மலையின் தெற்கு பகுதி) இந்த மலை உள்ளதாக எழுதியுள்ளார். இதுவே சரியான புவியியல் இருப்பிடம்.

## குமாரி த்வீபம்

*விந்த்யஸ்ச பாரியாத்ரஸ்ச சுக்திமான் ருக்ஷபர்வத:*
*மஹேந்த்ரஸஹ்யமலயா: ஸப்தைதே குலபர்வதா:* [1]

அவர் தெற்கு பகுதியில் உள்ள மலைத்தொடர்களை இப்படி விவரித்தார்.

*விந்த்ய தக்ஷிணபாத மஹேந்த்ரமலயமேகல-*
*பாலமஞ்ஜரஸஹ்ய ஶ்ரீபர்வதாதய:, பர்வதா:* [2]

காளிதாஸர் ரகுவம்சத்தில் 4 மற்றும் 6வது ஸர்க்கத்தில் மஹேந்த்ரமலையை வர்ணித்துள்ளார்.

*ஸ ப்ரமஹேந்த்ரஸ்ய மூர்த்னி தீக்ஷ்ணம் ந்யவேசயத்தாபம்*
*அங்குஸம் த்விரதஸ்யேவ யந்தா கம்பீரவேதின:*
*ப்ரதிஜக்ராஹ காலிங்கஸ்தம ஸ்த்ரைர்கஜ ஸாதன:*
*பக்ஷச்சே தோத்யதம் சக்ரம் சிலாவர்ஷீவ பர்வத:* [3]

*க்ருஹீதப்ரதிமுக்தஸ்ய ஸ தர்மவிஜயீ ந்ருப:*
*ஶ்ரீயம் மஹேந்த்ர நாதஸ்ய ஜஹார நது மேதினீம்* [4]

அஸௌ மஹேந்த்ராதி ஸமானஸார: பதிர்மஹேந்த்ரஸ்ய மஹோததேஸ்ச
யஸ்ய க்ஷரத்ஸைந்ய கஜச்சலேன யாத்ராஸு யாதீவ புரோ மஹேந்த்ர: [5]

மஹேந்த்ர மலைகள் கலிங்கதேசத்துடன் ஸம்பந்தம் உள்ளவை. கலிங்க அரசர்கள் மஹேந்த்ர நாதர்கள். இந்த மலைகள் பாகவதபுராணத்தில் கங்கை கடலில் கலக்கும் இடத்திலிருந்து கோதாவரி நதிக்கரை வரை பரந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலராமனின் தீர்த்த யாத்திரை சமயத்தில் –

*கயாம் கத்வா பித்ரூனிஷ்ட்வா கங்காஸாகர ஸங்கமே*
*உபஸ்ப்ருஸ்ய மஹேந்த்ராத்ரௌ ராமம் த்ருஷ்ட்வாபிவாத்ய ச,*
*ஸப்தகோதாவரீம் வேணாம் பம்பாம் பீமரதீம் தத:* [6]

வளநாட்டு இராஜேந்த்ரசோழனின் நண்டுர் கல்வெட்டில் ஆந்திரத்தின் எல்லைகளைப் பற்றி கூறிய சமயத்தில் மஹேந்த்ரமலை, காளஹஸ்தி சிகரம் ஆலபர்வதங்கள் நடுவில் உள்ளதாகத் தெரிகிறது.

*மஹேந்த்ரோ மலயஸஹ்யோ தேவதாத்மா ஹிமாலய:*
*த்யேயோ ரைவதகோ விந்த்யோ கிரிச்சாராவளிஸ்ததா*

---

1. காவ்யமீமாம்ஸா 17வது அத்யாயம் – பக்கம் – 92
2. காவ்யமீமாம்ஸா 17 வது அத்யாயம் – பக்கம் – 93
3. ரகுவம்ஸம் – 4 – 39, 40
4. ரகுவம்ஸம் – 4 – 43
5. ரகுவம்ஸம் – 6– 54
6. பாகவத புராணம் – 10 – 79–11,12

நாரத புராணத்தில் உள்ள சப்தகுல பர்வதங்களின் ஒன்றே ஆயிரம் சிகரங்களை உடைய மலைத் தொடர்ச்சி மஹேந்த்ர கிரி. தெற்கில் இராமேஸ்வரத்தில் இருந்து வடக்கில் "கடக்" வரை மஹேந்திரகிரி பரந்து விரிந்து உள்ளது. இதற்கே தற்பொழுது கிழக்குத் தொடர்ச்சி மலைகள் என்று பெயர். இந்த மலைகள் சிறிய பிரிவுகளாகவும், தொடர்ச்சி மற்றும் துணை தொடர்ச்சிகளாகவும் காணப்படுகின்றன. இப்படி மஹேந்த்ர மலையாகப் போற்றப்படும் குலபர்வதங்களே இன்றைய கிழக்குத் தொடர்ச்சி மலைகள் என்று அறிய வேண்டும். இந்த மஹேந்த்ர மலைத்தொடர்ச்சிகளில் உள்ள ராஜ்யங்களில் ஆந்திர பிரதேசத்தைப்பற்றிய குறிப்பு ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத் மகாபாரதம் மற்றும் மார்கண்டேய புராணங்களில் தென்படுகிறது.

## ஆந்திராவில் கிருஷ்ணா கோதாவரி நதிகளின் நடுவில் உள்ள பகுதிகள்

தென் பழங்குடியினரில் ஆந்திரா, கேரளா, கொங்கண, கர்னாடகா, கோசள, காளிங்க, குந்தள, விதர்ப்ப தேசத்தைச் சேர்ந்தவர்கள் கௌரவர்களின் பக்கமும் மற்றும் சோழ, பாண்டிய அரசர்கள் பாண்டவர்கள் பக்கமும் நின்று போராடியதாக பீஷ்ம, த்ரோண, கர்ண பர்வங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

*அதா பரே ஜனபதா: தக்ஷிணா பத வாஸின:,*
*பாண்ட்யாஸ்ச கேரளாஸ்சைவ சோழா: குந்த்யாஸ் ததைவச*
*ஸைலூஷா மூஸிகாஸ்சைவ குமாரா வானவாஸகா:*
*மஹராஷ்ட்ரா மாஹிஸிகா: களிங்காஸ்சைவ ஸர்வஸ:,*
*அபீரா: ஸ: வைஸிக்யா அதக்யா ஸபராஸ்ச யே,*
*புளிந்தா விந்த்ய மாலேயா வைதர்பா தண்டகைஸ்ஸஹ:*
*பௌரிகா மௌளிகாஸ்சைவ அஸ்மகா போக வர்தனா:!,*
*மேஸிகா: குந்தளா ஆந்த்ரா அத்பிதா வனதாரகா:!* [1]

இங்கு தென்பழங்குடியினரில் புண்ட்ர, கேரள, கோலாங்கூள, ஸைலூஸி, மூஸிக, குஸுமம, வானக, மஹாராஷ்ட்ர, மாஹிஸ்ம, களிங்க, அபீர, புலிந்த, விந்த்ய, வைதர்ப, ஸௌரிக, மௌளிக, அஸ்மக, நைஸிக, குந்தளத்துடன் நாட்டுப்புற கதைகளில் ஆந்திர ஸப்தம் கூட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. வாத்ஸ்யாயனரின் காமஸூத்திரத்திற்கு உரை எழுதிய ஜய மங்களர் ஆந்திரபிரதேசம் கர்னாடக பகுதிகளின் கிழக்கே இருக்கிறது என்று கூறுகிறார்.

*நர்மதாயா தக்ஷிணேன தேஸோ தக்ஷிணாபத:,*
*தத்ர கர்னாட விஷயாத் பூர்வேணாந்த்ர விஷய:,*
*நர்மதா கர்னாட விஷயயோர் மத்யே மஹா ராஷ்ட்ர விஷய:,*
*கர்னாடக விஷயாத் தக்ஷிணேன த்ரவிட விஷய:,*
*கொங்கன விஷயாத் பூர்வேன வனவாஸ விஷய:* [2]

---

1. மார்கண்டேய புராணம் - 54-45-48
2. காம சூத்ரம், வாத்ஸ்யாயனர் - 2-5-28,30, 31 ஜயமங்கல உரை பக்கம் 289, 290

இரண்டாவது இராஜேந்திர சோழனின் நண்டூர் கல்வெட்டில் கிழக்கு சமுத்திரத்திற்கு, ஸ்ரீசைல மலைகளுக்கு, மஹேந்த்ர கிரிக்கு, காளஹஸ்தி மலைகளுக்கு நடுவில் உள்ள பூமியின் பாகம் ஆந்திரப்பிரதேசம் என்று எழுதப்பட்டுள்ளது. இங்கு விஷயம் என்றால் பிரதேசம் என்று பொருள்.

*பூர்வாம்போநிதி காளஹஸ்தி சிகரீ ஸ்ரீமந்மஹேந்த்ராசல*
*ஸ்ரீசைலேஸ்வர வலயீக்ருதாந் த்ரவிஷயம் ஸ்ரீராஜ ராஜன்வய:* [1]

## ப்ருஹத்ஸம்ஹிதையில் கூர்மபிரிவு

ஸ்ரீ வராஹமிஹிராசாரியார் எழுதிய ப்ருஹத்ஸம்ஹிதையில் இந்தியாவின் எல்லா பகுதிகளையும் ஆமையோடு ஒப்பிட்டு அந்த ஆமைக்கு உள்ள படியாக ஒன்பது திசைகளில் பாரததேசத்தில் உள்ள பலதரப்பட்ட மலைகள், நகரங்களை நினைவு கூர்ந்தார். அவற்றில் மத்திய தேசத்தின் பிரிவு – பாரத தேசம் ஒரு ஆமையைப்போல இருக்கிறது என்று அறிந்தால் அதில் உயரமான நடுப்பகுதியில் உள்ள மலை, நகரம், கிராமவாசிகளைப் பற்றிய குறிப்பு இங்கே சொல்லப்பட்டுள்ளது.

*பத்ராரிமேதமாண்டவ்ய ஸால்வ நீபோஜ்ஜிஹா நஸங்க்யாதா:,*
*மருவத்ஸகோஷயாமுனஸாரஸ்வதமத்ஸ்யமாத்ய மிகா:,*
*மாதுரகோபஜ்யோதிஷதர்மா ரான்யானி ஸூரஸேநாஸ்ச*
*கௌரக்ரீவோத்தேஹிகபாண்டுகுடாஸ்வதபாஞ்சலா:*
*ஸாகேத கங்ககுருகாலகோடிகுக்குராஸ்ச பாரியாத்ர நக:*
*ஔதும்பரகாபிஷ்டலகஜாஹ்வயாஸ்சேதி மத்யமிதம்* [2]

## கிழக்கு தேசப்பிரிவு

இங்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் ஆந்திரபிரதேசத்தைச் சேர்ந்த பகுதிகளிலிருந்து வடகிழக்கு இந்தியாவரை உள்ள பகுதிகள் வரை நினைத்தார். இந்த கிரமத்தில் முதன் முதலாக ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள அஞ்ஜனகிரி, விருஷபத்வஜ, பத்மகிரி மால்யவத் மலைகளை நினைவு கூர்ந்தார்.

*அத பூர்வஸ்யாம் அஞ்ஜன - வ்ருஷத்வஜ - பத்மா மால்யவத் கிரய:*
*வ்யாக்ரமுக - ஸுஹ்ய - கர்வட - சாந்த்ரபுரா: ஸூர்ப்பகர்ணாஸ்ச*
*கசமகதஸிவிரகிரிமிதில ஸமதடோந்ராஸ்வ வதன தந்துரகா:*
*ப்ராக்ஜ்யோதிஷ லௌஹித்ய க்ஷீரோத ஸமுத்ர புருஷாதா:,*
*உதயகிரி பத்ர கௌடக பௌண்ட்ரோத்கல காசீமேகலாம்பஷ்டா:,*
*ஏகபத தாம்ரலிப்தககோஸலகா வர்த்த மாநாஸ்ச* [3]

---

1. இரண்டாவது ராஜேந்திர சோழனின் நண்டூர் கல்வெட்டு – சுலோகம் – 68.
2. ப்ருஹத் ஸம்ஹிதை – 14 – 2,3,4
3. ப்ருஹத் ஸம்ஹிதை – 14–5,6,7

## தென்கிழக்கு திசையில் இருக்கும் பகுதிகளின் பெயர்கள்

அப்படியே தென்கிழக்கு திசையில் கிஷ்கிந்தையை நினைவு கூர்ந்தார்.

*ஆக்னேயாம் திஸி கோஸல களிங்க வங்கோ பவங்கஜடராங்கா:,*
*ஸௌளிக விதர்ப வத்ஸ்ஸாந்த்ரசே திகாஸ்ச்சோர்த்வ கண்டாஸ்ச.*
*வ்ருஷனாலி கேரசர்ம த்வீபா விந்த்யாந்த வாஸிந ஸ்த்ரீ புரி,*
*ஸமஸ்ருதர ஹேமகுட்ய வ்யாலக்ரீவா மஹாக்ரீவா:.*
*கிஷ்கிந்த கண்டகஸ்தல நிஷாதராஷ்ட்ராணி புரிகதா ஸார்ணா:,*
*ஸ: நக்ன பர்ணஸபரைராஸ்லேஷாத்யே த்ரிதே தேஸா:* [1]

## தெற்கு திசையில் இருக்கும் தேசங்களின் பெயர்கள்

தெற்கு திசையில் லங்காபுரி நினைவு வருகிறது. அதே வரிசையில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் தொடர்ச்சியான மஹேந்திர மலையின் தெற்கு மலை வரிசைகளும் குறிப்பிடப்படுகின்றன.

*அத தக்ஷிணேன லங்கா காலாஜின ஸௌரிகீர்ண தாலிகடா:,*
*கிரிநகர மலையதர்துர மஹேந்த்ர மாளிந்த்ய பருகச்சா:.*
*கங்கட கங்கன வனவாஸி ஸிபிகபணி காரகோம்க நாபீரா:,*
*ஆகார வேணா வர்த்தகத ஸபுரகோநர்த கேரளகா:.*
*கர்னாட மஹாட விசித்ர கூட நாஸிக்ய கோள்ள கிரிசோளா:,*
*க்ரௌஞ்சத் த்வீப ஜபாதர காவேர்யோ ரிஷ்ய மூகஸ்ச.*
*வைதுர்ய ஸங்கமுக்தாSத்ரிவாரி சரதர்ம பட்டன த்வீபா:,*
*கணராஜ்ய க்ருஷ்ணவேல்லரபி ஸிகஸூர்ப்பாத்ரிகுஸுமனகா:.*
*தும்பவன கார்மனே யகயாம்யோததி தாபஸாஸ் ரமா ருஷிகா:,*
*காஞ்சி மருசீ பட்டன சேர்யார்ய - கஸிம்ஹலா வ்ருஷபா:*
*பலதேவ பட்டனம் தண்டகாவன திம்கிலாஸனா பத்ரா:,*
*கசோSத குஞ்சரதரீ ஸதாம்ரபர்ணீதி விக்னேயா:,* [2]

## ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம்

திருமலையில் உள்ள ஏழுமலைகளின் பெயர்களில் அஞ்ஜனாத்ரி – அந்த பெயர் வருவதற்கு காரணம் பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. நவீன காலத்தில் திருமலையாகப் புகழ் பெற்ற திருவேங்கடமுடையானின் திவ்ய க்ஷேத்ரம் அனேக காரணங்களால் எண்ணற்ற திவ்ய நாமங்களால் அழைக்கப்படுகிறது. இந்த மலை அரசன் மேரு பர்வதத்தின் புத்திரனான சுமேருவின் சிகரம் என்று பல புராணங்கள் கூறுகின்றன. அவற்றில் பிரம்ம புராணத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் சொல்லும் போது ஜாம்பூநத நதியின் (ஸுவர்ணமுகி நதி) கரையில் உள்ள இந்த க்ஷேத்திரத்திற்கு உள்ள பலவித பெயர்களில்

1. ப்ருஹத் ஸம்ஹிதை – 14–8,9,10

2. ப்ருஹத் ஸம்ஹிதை – 14–11–16

வேங்கடமலை, நாராயண கிரி, வ்ருஷாத்ரி, வ்ருஷபகிரி, அஞ்ஜனாத்ரி, சேஷாத்ரி என்ற பெயர்கள் எப்படி வந்தன என்ற விஷயம் இப்படி விவரிக்கப்படுகிறது.

*ச்ருணு ராஜன் ப்ரவக்ஷ்யாமி வேங்கடாசல வைபவம்*
*தஸ்யாऽகதிம் ப்ரவக்ஷ்யாமி தேவஸ்யாபி மஹாத்மன: மேரோ:*
*புத்ரோ மஹானைஸலோ ஜாம்பூநத நதீ தடே*
*யோஜனத்ரய விஸ்தீர்ணம் த்ரிம்ஸத் யோஜனம் ஆயத:*
*வேங்கடேதி க்ருதம் நாம பித்ரா தஸ்ய மஹாத்மன:*

*அம்ருதஸ் யேந்தி - ராயாஸ்ச யதோ விஸ்தார காரக:*
*ஜீவனானாம் பாரதே வர்ஷே ததோऽயம் குணநாமக:*
*நிர்தோஷ விஷ்ணோரயணம் நாராயணமிமம் விது:*
*வ்ருஷஸ்ய பரணாத்வோஷாத்வருஸபம் சாபி தம் விது:*

*ப்ரஸவாதஞ்சனா தேவ்யா: விதுரஞ்சன ஸம்ஜ்ஞாகம்*
*ஸசேஷாக மனஸ்சாபி சேஷாத்ரிம் ப்ராஹுருத்தமா:* [1]

ஓ அரசனே ! வேங்கடாசல மாஹாத்மியத்தை சொல்கிறேன். ஒருமித்த மனதுடன் கேள். வேங்கடமலையின் அவதாரம் வேங்கடவனின் சாந்நித்யம் இவற்றை விவரிக்கிறேன். சுவர்ணமுகி நதிக்கரையில் மூன்று யோஜனை அகலம், 30 யோஜனைகள் நீளம் உள்ள மலை ஒன்று உள்ளது. அது மேருமலையின் ஒரு பாகம் (பையன்). பர்வத ராஜனான மேரு தன் குமாரனுக்கு “வேங்கடு” என்று பெயர் சூட்டினார். இந்த பேருக்கு தகுந்தவாறு இருக்குமாறு அதனுடைய எதிர் காலத்தை நினைத்து தந்தை தன்னுடைய மகனுக்கு அந்த பெயரை வைத்தார் என்று தெரிகிறது. வேங்கட சப்தத்திற்கு இந்த உலகத்திலும் மேல் உலகத்திலும் அருளைக் கொடுப்பவன் என்று பொருள். இதில் வேம் என்றால் அமுதம் என்றும், கட என்றால் செல்வம் என்றும் பொருள். இந்தியா முழுவதும் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தன்னிடம் பகவத் ஸாந்நித்யம் பரிபூர்ணமாக இருப்பதனால் இந்த மலையால் மக்களுக்கு இஹபர சுகங்களை கொடுக்க முடிந்தது. தந்தையினால் இடப்பட்ட பெயருக்கு தகுந்தாற்போல் திகழ்கிறது.

வேங்கடாத்ரியைப் போலவே இதர காரணப் பெயர்கள் எண்ணற்ற அளவில் இந்த மலைக்கு இருக்கிறது. ஸ்ரீமந்நாராயணனுக்கு இருப்பிடமாக ஆனதால் இதற்கு நாராயணாத்ரி என்று பெயர். இந்த மலையைச் சேவிப்பவர்களுக்கு தர்மபுத்தியை ஏற்படுத்துவதால் இந்த பகுதி முழுவதும் தர்மத்தின் இருப்பிடமாக ஆவதால் இதற்கு விருஷாத்ரி, விருஷபாத்ரி என்று கூட பெயர்கள் உள்ளன. விருஷ – விருஷப சப்தங்களுக்கு தர்மம் என்ற பொருள் பிரசித்தமானது. அப்படியே கேசரியின் பெண்ணான அஞ்ஜனாதேவி இந்த மலையில் இராமாயண வீரனான ஸ்ரீ ஆஞ்ஜனேயனைப் பெற்றெடுத்ததால் இந்த மலை அஞ்ஜனாத்ரி எனப்படுகிறது. அப்படியே இந்த மலை 1000 தலைகொண்ட ஆதிசேஷனால் சுற்றப்பட்டுள்ளதால் சேஷாத்ரி என்று அழைக்கப்படுகிறது.

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம புராணாந்தர்கதம் 1- 6 – 10) இரண்டாம் பாகம், பக்கம் – 206 தி.தி.தே. வெளியீடு.

## அஞ்ஜனாத்ரியைப் பற்றிய பலவித புராணங்கள்

ஏழுமலைகளுக்கு இருக்கின்ற பெயர்களில் அஞ்ஜனாத்ரி என்ற பெயரே முதல் பெயராகவும் புகழ்பெற்ற பெயராகவும், பல புராணங்களில் இருந்தாலும் உதாரணத்திற்கு பத்மபுராணத்தில் உள்ள இரண்டு சந்தர்ப்பங்கள் காட்டப்படுகின்றன. திருவேங்கட மலையை தரிசனம் செய்தவர்களில் முதலாவதாகச் சொல்லப்படக் கூடியவர் ஸ்ரீ சுகமகரிஷி. அவர் திருச்சுகனூரில் (இன்றைய திருச்சானூர்) பத்மாவதி தாயாரை சேவித்துக்கொண்டு அங்கிருந்து அழகான திருவேங்கட மலையை சேவித்தார் என்று சொன்னபொழுது, அதை அஞ்ஜனகிரி, அஞ்ஜனாசலம் என்று சொன்னார். இது கருத்தில் கொள்ள வேண்டியவையாகும். அப்படியே நாராயணாத்ரியாக வர்ணிக்கும் பொழுது இந்த மலையை அஞ்ஜனகிரி என்று சொல்லி இந்த அஞ்ஜனகிரி படுகையில் ஸ்வாமி புஷ்கரிணி இருப்பதாகவும், அங்கு நீராடியவர்களுக்கு கிடைக்கும் பலன்களையும் விவரித்தார்.

### பத்மபுராணத்தில்

*தஸ்ய ஸானுமத: ஸோऽபி பதானாஸ்ரித்ய ஸத்வர:*
*நிர்ஜரேஸ்வாப்லவம் குர்வன் விமலோத்வேஷ நந்யதீ:*
*அதந்ரிதோऽஞ்ஜனகிரிம் ப்ராப்ய விப்ரோபவேஷணம்* [1]

சுக முனிவர் நல்ல சரிவுகளை கொண்ட அஞ்ஜனாத்ரியை அடைந்து அங்குள்ள புனித நீரோடைகளில் நீராடி, களைப்பு இல்லாமல் மலை அடிவாரத்தில் வலம் வந்தார். சுகபுரியிலிருந்து சுகர் சேஷசைலத்திற்கு வருகைபுரிவது...

*தத்ர த்ரிஸவன ஸ்னானம் க்ருத்வா வ்யாஸோ ரஸோமுநி:*
*உஷித்வா த்ரிதினம் தத்ரோபாஸக: பராயண:*
*த்ரஷ்டுகாமோऽகிலாஸ்சர்யம் புனரபி அஞ்ஜனாசலே* [2]

வ்யாஸ புத்ரனான அந்த சுகமஹரிஷி த்ரிஸவனத்தில் நீராடி 3 நாட்கள் இருந்து உபாசனை செய்து காலம் கழித்தார். அந்த அஞ்ஜனாசலத்தில் உள்ள அற்புதங்களை பார்க்க எண்ணினார்.

### நாராயணாத்ரி வர்ணனையில்

*ப்ராசீனே தஸ்ய தேஸஸ்ய ஸ்திதோஞ்ஜனகிரேஸ்தடே*
*தருணாதித்ய ஸங்காஸாऽகிலா பீஷ்டதா* [3]

பழமையான அந்த இடத்தில் அஞ்ஜனகிரியின் படுகையில் உதய சூரியனின் ஒளிக்கு சமமான ஸ்வாமி புஷ்கரிணி விரும்பியதை கொடுப்பதாக உள்ளது.

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பத்மபுராண க்ஷேத்திரகாண்டாந்தர்கதம் - 24 - 35 - 39) முதல் பாகம், பக்கம் - 206 தி.தி.தே. வெளியீடு.

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பத்ம புராண க்ஷேத்திரகாண்டாந்தர்கதம் - 27 - 13 - 18) முதல் பாகம், பக்கம் - 208 தி.தி.தே. வெளியீடு.

3. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பத்ம புராணம் க்ஷேத்திரகாண்டாந்தர்கதம் - 32-7) முதல் பாகம், பக்கம் - 257, தி.தி.தே. வெளியீடு

*குஞ்சே அஞ்சனகிரே: ஸ்வாமி புஷ்கரிணியப்ஸு யோ நர:*
*க்ருதாப்லவ: ஸக்ருத் ஸத்யம் க்ருத க்ருத்யோ பவேந்நர:* [1]

அப்படிப்பட்ட அஞ்ஜன மலையில் ஸ்வாமி புஷ்கரிணியில் எவர் நீராடுகிறாரோ அவர்கள் தங்கள் காரியங்களில் வெற்றிகளை அடைவார்கள்.

ஸ்காந்த புராணத்தில் கூட இந்த கதை சுருக்கமாக உள்ளது.

இப்படி இந்தக் கட்டுரையில் உலக புவியியல்படி இன்றைய ஏழுமலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலையின் மையப்பகுதியில் இருக்கிறது என்று புராண, இதிகாச, சாஸ்திரங்களில் உள்ள புவியியலில் சொல்லியபடி பழைய காலம் முதல் இன்று வரை மஹேந்த்ர மலைகள் என்பது கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு உள்ள புகழ் பெற்ற பெயர் என்று, இந்த மஹேந்த்ர மலைகள் இருக்கும் பகுதிகளில் ஆந்திர பிரதேசமும் ஒன்று என்று இந்த ஆந்திர பிரதேசத்தின் ஒரு பகுதியே திருவேங்கடம் என்று, இதற்கே அஞ்ஜனகிரி என்ற ஒரு ப்ரசித்தமான பெயரும் உள்ளது என்று விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த சமயத்தில் பிரம்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீ ஆஞ்ஜனேயரின் பிறப்பு. பற்றிய வரலாறுகளை சுருக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே விஷயம் ஸ்ரீ ஸ்காந்த புராணத்தில் கூட இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இந்த ஆதாரங்களின்படி ஹனுமனின் பிறந்த இடம் எல்லாவகையிலும் ஏழுமலைகளில் உள்ள அஞ்ஜன மலை என்ற அஞ்ஜனாத்ரியே என்று சொல்லப்படுகிறது.

******

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பத்ம புராணம் க்ஷேத்திரகாண்டாந்தர்கதம் - 32-35) முதல்பாகம், பக்கம் - 260, தி.தி.தே. வெளியீடு.

## அஞ்சனாதேவி ஹனுமனை தன் திருக்கரங்களால் தூக்கி தாலாட்டுதல்



# அத்தியாயம் - 8

# 8. ஏழுமலைகள் - அஞ்ஜனாத்ரி - ஓர் தொல்பொருள் ஆய்வு

தெலுங்கு மூலம்
திரு. விஜய்குமார் ஜாதவ்,
துணை இயக்குனர் (ஓய்வு), மாநில தொல்பொருள்
மற்றும் அருங்காட்சியகத் துறை.

தமிழாக்கம்
திரு. வ.ஓ. சுரேஷ்

## ஏழுமலைகள்

உலகப் புகழ் பெற்ற கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் ஆலயம் புனிதமான ஏழுமலையில் அமைந்துள்ளது. இப்பகுதி நாள்தோறும் பக்தர்களின் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது.

இந்த ஏழுமலைகள் சேஷாசலம், வேங்கடாசலம், அஞ்ஜனாசலம் போன்ற பெயர்களால் ஸப்தகிரியாக [1] கிருத, திரேதா, துவாபர, கலியுகங்களிலும் மற்றும் புராணங்களிலும் வெவ்வேறு யுகங்களுக்கு ஏற்றாற்போல் அழைக்கப்பட்டன. ஆனால், ஸப்தகிரியாகப் பெயர் பெற்றிருந்தாலும் இதுவே அம்மலை என்பதற்கான எவ்வித வரலாற்று ஆதாரங்களும் இல்லை.

## புவியியல் அடிப்படையில் காலநிலை

இப்புனிதமான ஏழுமலை ஓர் அற்புதமான புவியியல் அடிப்படையில் [2] ஏற்பட்டுள்ளது. இதனை இந்தியப் புவியியல் சர்வே (ஜி.எஸ்.ஐ.) ஆய்வாளர்களால் முதலில் 1980 களில் ஆய்வு செய்து இவற்றில் இரு முக்கியமான அரிதாக நடைபெறக் கூடிய புவியியல் வடிவங்களின் அடையாளம் காணப்பட்டது. அவற்றில்...

1. சிலாத்தோரணம், 2.புவியியலாளர்கள் மொழியில் இது "எபார்சியன் அன்கன்பார்மிடி" [3] என்று அழைக்கப்படுகின்றது.

## சிலாத்தோரணம்

உலகிலேயே மிகவும் அரிதான இயற்கையாகவே ஏற்பட்ட கல்தோரணம் இந்தியாவிலேயே இந்த இடத்தில் மட்டும்தான் காண இயலும். புவியியலாளர்களின் ஆய்வின்படி இச்சிலாத்தோரணம் 160 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

1. (i) Tirupati Sri Venkateswara - page 10 ; (ii) Sri Venkateswara Vaibhavam – page 1
2. International Journal of Engineering Applied Sciences and Technology, 2020 Vol. 4, Issue 11, pages 224-231
3. "Eparchian Unconformity at Tirumalai – A Study

இச்சிலாத்தோரணம் 8 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலத்துடன் ஏழு மலையில் புனிதமான சக்கர தீர்த்தம் அருகில் அமைந்துள்ளது.

இந்த எல்லையற்ற பூமி சுமார் 460 கோடி ஆண்டுகளுக்கும் முன்னதாக ஏற்பட்டதாக புவியியலாளர்களின் கருத்து. இப்பூமி பல்வேறு நிலைகளில், அடுக்குகளில் பரிணாமம் பெற்று உருவாகியது. இந்த அறிவுசார் நிலைகளில் புவியியலாளர்கள் முக்கியமாக ஐந்து நிலைகளாகப் பிரித்தனர்[1]. அவை...

1) ஆர்கியன்யுகம் (முதல் நிலை ஆரம்பம் முதல் 2500 மில்லியன் ஆண்டுகளுக்கிடையில்)
2) புரொடெரோஜோயிக் நிலை (இரண்டாம் நிலை 2500 மில்லியன் ஆண்டுகள் முதல் 570 மில்லியன் ஆண்டுகளுக்கிடையில்)
3) பாலியோஜோயிக் நிலை (மூன்றாம் நிலை 570 மில்லியன் ஆண்டுகள் முதல் 245 மில்லியன் ஆண்டுகளுக்கு இடையில்)
4) மெசோஜோயிக் யுகம் (நான்காம் நிலை 245 மில்லியன் ஆண்டுகள் முதல் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு இடையில்)
5) செனோஜோயிக் யுகம் (ஐந்தாம் நிலை 66 மில்லியன் ஆண்டுகள் முதல் 0.01 மில்லியன் ஆண்டுகளுக்கு இடையில்)

ஏழுமலைகள் முக்கியமாக பிரிகாம்பிரியன் காலத்தைச் சார்ந்த வண்டல் பாறைகளின் குவார்ட்ஜைட் மற்றும் இன்டர்கலேடெட்ஷேல்ஷுடன் கூடியது. இதனை கடப்பா சூப்பர் குருப்பின் பகுதியான நகரி குவார்ட்ஜைட்டாகப் பரிந்துரைக்கின்றனர். இது புராண பாறைகளின் வரிசையில் துணைநிலையாகும். இது ஆர்கியன் சிலைகள் மீது இருக்கும். இந்தியாவில் புராதன சிலைகள் 4500 மில்லியன் ஆண்டுகள் வயதுடையவைகளாகக் கருதப்படுகின்றன. பிரீகாம்ப்ரியன் யுகத்தில் (3.8 பில்லியன் முதல் 540 மில்லியன் ஆண்டுகள்) ஏற்பட்டன.

புவியியலாளர்கள் திருமலையின் மலைவழிப் பாதையினை அவர்களின் மொழியில் எபார்சியன் அன் கன்பர்மிடி வடிவில் தேசிய ஜியோ ஹெரிடேஜ் நினைவு சின்னமாக அறிவித்தனர். இது ஸ்டாட் கிராபிக் முக்கியத்துவத்தின் முக்கிய நிறுத்தம். இது பூமி கிரஸ்டியின் பாறை அடுக்குகளில் 500 மில்லியன் ஆண்டுகளின் இடைவெளியைக் குறிக்கின்றது.

### திருப்பதி பார்சியன் அறிமுகம்

- நோடிபைட் நேஷனல் ஜியோ–ஹெரிடேஜ் மான்யுமெண்ட் என்பது மூலோபாய முக்கியத்துவத்தின் முக்கிய நிறுத்திவைத்தல்.

1. https://www.britannica.com/science/geologic-history-of-Earth

- இது பூமியில் புவியியல் வரலாற்றில் திடீரென சொல்லத் தகுதியுடைய அமைதி காலத்தினை குறிக்கின்றது.
- பூமியின் மேற்பாறை அடுக்குகள் நிர்மாணத்தில் மாற்றம் மற்றும் நிறுத்திவைத்தல். இது ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் திருமலை திருப்பதி மலைவழிச் சாலையில் செங்குத்தாக உள்ள இயற்கை வளங்கள், நெடுஞ்சாலையில் மச்சங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன.
- இந்தியாவின் பேசின் அடித்தளம் சுமார் 2500 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது! இது பழமையான அமைப்பாகும்
- கடப்பா பேசின் சுமார் 1700 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது மற்றும் நெகரா க்வார்ட்ஜைட் சிறிதளவு உள்ளது.
- சிறிய பருவ வயது சுமார் 1500 மில்லியன் ஆண்டுகள், அடுக்குகள் மற்றும் அவக்ஷேபண இடையில் இந்த நீண்ட இடைவெளிப் பாறைகளை எபார்கியன் அன்கன்பார்மிடி என்பர்.

## அஞ்ஜனாத்ரி என தீர்மானிப்பதில் தொல்லியல் ஆதாரங்களின் ஆய்வு

வரலாற்றாய்வாளர்களுக்கு தொல்லியல் ஒரு முதன்மை ஆதாரமாகும். தொல்லியல் ஆதாரங்கள் நேரடிச் சான்றுகள் மற்றும் நேரடி வளங்களாகும். ஏனெனில் அவற்றினை மானிடர்களால் மாற்ற இயலாது. தொல்லியல் ஆதாரங்களின் முதன்மை வளங்கள்– புவியியல் அதிர்வு, கல்வெட்டுகள் (பனை ஓலைகள், உலோக பிர்ச் மற்றும் காகிதம்), நினைவுச் சின்ன கட்டிடங்கள், நாணயங்கள், இலக்கியம் (இதிகாசம், புராணம்), கலைப்பொருட்கள் (கட்டமைப்புகள், வீடு, பானைகள், முத்திரைகள், கற்கள் அல்லது சுவர்களின் மீது எழுத்துக்கள் மற்றும் ஓவியம், கருவிகள், ஆபரணங்கள், எலும்புகள், எச்சங்கள், உலோகத் துண்டுகள்).

## சேஷாசல மலைகள்

தெற்கு ஆந்திர மாநிலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள் மணற்கற்கள் மற்றும் சுண்ணாம்பு கற்களுடன் ஷேல் கலந்து உள்ளன. இம்மலைத் தொடர்கள் மிகவும் நீளமான பள்ளத்தாக்குகளை கொண்டது. அவை மேற்கு மற்றும் வடமேற்கில் ராயலசீமா மேல்பகுதிகள் மற்றும் வடகிழக்கில் பாண்ட்ய பள்ளத்தாக்கு (குண்தேரு நதியால் ஏற்பட்டவை) எல்லைகளாய் அமைந்துள்ளன. சேஷாசல மலைகள் சுமார் 3000 சதுர மைல்கள் (8000 சதுர கிலோ மீட்டர்) வரை விரிந்துள்ளன. இவை பொதுவாக கிழக்கு–தென்கிழக்காக உள்ளது. சேஷாசல மலைகள், வடக்கில் உள்ள எர்ர மலைத்தொடரையும் சேர்த்து 1300 முதல் 4500 அடிகள் (400 முதல் 1370 மீட்டர்) வரை உயரம் கொண்டவை. குறைவான மழைப்பொழிவு காரணமாக குறைவான வனப்பகுதிகளை மட்டுமே கொண்டுள்ளன. பென்னா நதி துணை நதிகள் இப்பகுதியில் பாய்ந்தோடுகின்றன.

## தொல்லியல் ஆதாரங்கள்

கலைப்பொருட்கள், புராதன மேற்பரப்பு ஆதாரங்கள் சேகரித்தல், வரலாறு அடிப்படை கொண்ட பகுதிகளில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள், பழமையான கட்டமைப்புகள், ஆலயங்கள், பிற நினைவுச் சின்னங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள், புராதன மண் குன்றுகள் உண்மைகளை நிரூபிக்க சில முக்கியமான ஆதாரங்களாகும்.

ஆதிகாவியம் மற்றும் சிறந்த இதிகாசமாகப் புகழப்பெற்ற இராமாயணத்தில் மகாயோகி மற்றும் இராமச்சந்திர மூர்த்தியின் சிறந்த பக்தரான புராண புருஷரான ஹனுமனின் பிறப்பிடம் குறித்து அடையாளம் காண்பதற்கு வரலாற்றின் படியும், தொல்லியலின் படியும் ஆய்வுசெய்வது இங்கு முக்கிமானதாகும்.

சாதாரணமாக ஏதாவது சான்றுகள் தகவல் மற்றும் வரலாற்று உண்மைதனை கண்டறிவதற்கும், புணரமைப்பதற்கும் தொல்லியல் ஆதாரங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## திருமலை அஞ்ஜனாத்ரி பகுதிகளில் நவீன மனிதனின் பரிமாணம்

ஒரு பகுதி அல்லது நபரின் வரலாற்றினை தெரிந்து கொள்ள வேண்டுமெனில் அனைத்து இலக்கியம் மற்றும் தொல்லியல் ஆதாரங்களை ஆராய்தல் வேண்டும்[1]. பண்டைய இலக்கிய ஆதாரங்களின் அனைத்து மனித செயல்பாடுகளோடு தொல்லியல் ஆதாரங்கள் மற்றும் பழமையான பொருட்களோடு தொடர்புடையவற்றினையும் ஆராய்தல் வேண்டும். எனினும் வரலாற்றாய்வாளர்கள் திருமலை அடிவாரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சில ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## மிகப் பழமையான கற்காலத்தின் முதல் மனிதத் தடயங்கள்

பழமையான கற்காலம் முதல் திருமலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மனிதனின் இருப்பு – கற்கால்வாய் மேற்புரம் மிகப் பழமையான கற்காலத்தின் ஆதாரங்களை 1968ல் பேராசிரியர் எம்.எல்.கே. மூர்த்தி பிளேட் மற்றும் பூரின் தொழிற்சாலைக்கு தொடர்புடைய கற்கால்வாய் பிரவாகம் அருகில் கண்டறிந்தனர்.

## மொசோலிதிக் காலப் பாறை சித்திரம் - ருத்ரகல தீர்த்தம்

திருமலை தற்பொழுது அடர்ந்த காடுகள் மற்றும் தொடர்மரங்களால் அடர்ந்து காணப்படுகின்றன. ஆழமான பள்ளத்தாக்குகள், உயரமான மலைகள், புனிதமான தீர்த்தங்கள்

---

1. (i) Golden Research Thoughts Volume-4, Issue-10 (Pre and Proto Historic Evidences of Human Subsistence in the Talakona Valley)

   (ii) Early hunter, Gatherers adaptations in the Tirupati valley, 5-12 & 112.

2. Proceedings of the A.P.History Congress,19th Session (Evidences of Megalithic Art in Chittoor District) page no, 22-24

மற்றும் நீரோடைகள், பலவிதமான உயிரினங்கள் மற்றும் மரங்கள் முதலானவை மானிடர்களை கவர்ந்திழுக்கின்றன.

தனித்துவமான புவியியல் வடிவம் மற்றும் பகுதிகள் காரணமாக இப்பகுதியில் விரிவான முறையான சர்வே சாத்தியமின்மையால், சாகசக்காரர்கள் மற்றும் மலையேற்றக்காரர்களில் இளம் குழுவினர் வாயிலாக சிலவற்றினைக் காண முடிந்தது. பெட்ரோகிளிப் வடிவில் உள்ள வரலாற்றுக்கு முற்பட்ட பாறை சித்திரங்கள் மற்றும் பாறைகளின் கீழ் செதுக்கப்பட்டுள்ள சில விலங்குகளின் சித்திரங்கள் இப்பகுதியில் மானிட தடயங்களைக் காண்பிக்கின்றன. செதுக்கப்பட்டுள்ள காளை மற்றும் பிற சின்னங்கள் மற்றும் விலங்குகள் ருத்ர கல தீர்த்தம் அருகில் தலைக்கோனை மலைகள் மீது கண்டறியப்பட்டன. தலைக்கோனை வனப்பகுதிகளில் சில நீரோடைகளின் அருகில் மேற்பரப்பில் கல்வெட்டுகளும் காணப்பட்டன.

## மல்லய்யபள்ளியைச் சார்ந்த மெகாலிதிக் பில்லர்ட் டோல்மென் [2] (ப்ருஹத் சிலாயுகக் காலத்தைச் சார்ந்த நினைவுச் சின்னங்கள்)

சந்தரகிரி கோட்டையிலிருந்து 3 கி.மீ. தூரத்திலிருந்து ஒரு சிறிய கிரானைட் மலை மீது மெகாலிதிக் நினைவுச் சின்னம் தூண்களுடன் கூடிய டோல்மென் உள்ளது. இது 4000 பி.சி.ஏ. சார்ந்தது. பெரிய க்யாப்ஸடோன் எவ்வித பைண்டிங் ஏஜெண்ட் இல்லாமல் மேலே அமைக்கப்பட்ட பாறை 8 தூண்களுடன் அமைந்துள்ளது. இந்நினைவுச் சின்னங்களின் மற்றொரு சிறப்பு க்யாப் ஸ்டோன் கீழ் உள்ள பாறை சித்திரங்களாகும். பாறை சித்திரங்கள் மிச்ரப் சிலையுக காலத்திலிருந்து ப்ருஹத்சிலையுக காலம் வரை வண்ணச் சித்திர சிலைகள் நூற்றிற்கும் அதிகமாக உள்ளன.

## திருமலை வரலாற்று கால குறிப்புகள் - சங்க இலக்கிய குறிப்புகள் [1]

திருமலை வரலாறு மற்றும் திருவேங்கடமுடையானின் ஆலயத்தை நாம் ஒரு முறை ஆராய்ந்தாலே சங்க காலத்தின் ஆரம்பகால வரலாறு தமிழகத்தின் வடக்கே உள்ள இப்பகுதியினை வடவேங்கடமெனத் தமிழ் இலக்கியம் கூறுகின்றது. தமிழர்களின் பாரம்பரிய இலக்கியம், சங்க நூல்களில் தமிழகத்தின் வடக்கில் ஏற்பட்டுள்ள வேங்கடம் குறித்து சில குறிப்புகள் உள்ளன. பண்டைய காலம் முதல் வேங்கடம் மலைகள் மீதுள்ள திருவேங்கடமுடையான் குறித்து தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேங்கடம் என்ற சொல்லிற்கு பொருள் என்னவெனில், அளவிலா, அழிவிலாச் செல்வம் எனப் பொருள். மற்றுமொரு பொருள் இப்பகுதியினை தரிசித்தாலே மானிடர்களின் பாவங்கள் நசிந்து போகும் என்பதாகும். கணக்காயனார் மகனார் நக்கீரர் அகம் 27ல் வடவேங்கடம் மற்றும் பாண்டியர் வர்ணனையில் யானைகள் இவ்வனத்தினை ஆக்கிரமித்திருந்ததை குறிப்பிடுகின்றன.

1. Tirupati Sri Venkateswara, page 113-125

2. The Tirumala Temple - page 202

தமிழகம் வடக்கே வேங்கடம் அருகில் திருவிழாக்கள், ஆசாரங்கள், பண்டிகைகள் நடத்தும் வழக்கம் இருந்ததாகவும், அவர்களின் பழங்குடி தலைவர் புல்லி என்பவர் தலைமை வகித்த தகவலை தமிழ் சங்கத்தின் (கி.மு.3ஆம் நூற்றாண்டு) இலக்கியங்களில் உள்ளன.

அக்காலத்தில் இப்பகுதியினை "புலிக்குன்றம்" என்றழைத்தனர். சோழர்கள் காலத்தில் இப்பகுதி சோழ மண்டலமாக 24 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று வேங்கடகோட்டமாக அழைக்கப்பட்டு, பின்னர் கல்வெட்டுகளில் திருமலையாகக் குறிப்பிடப்பட்டது. திருமலை முதன்முதலாக 1013 ஆம் ஆண்டிற்குப்பின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆரம்ப கால குறிப்புகள் [2]

பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களாகும். பன்னிரு ஆழ்வார்களில் பதின்மர் வேங்கடம் குறித்து பாசுரமிட்டுள்ளனர். திருவேங்கட மங்களாசாசனம் கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் பல்லவர்களின் காலத்தில் இயற்றியுள்ளனர். ஆழ்வார்கள் இந்தியாவில் முதன்மையான வைணவத் திருத்தலங்கள் 108 திவ்ய தேசங்கள் மீதும் பாசுரமிட்டுள்ளனர். அவர்கள் வேங்கடத்தில் வீற்றிருக்கும் இறைவனின் வடிவம் குறித்து பாடல் பாடியுள்ளனரே தவிர ஆலயத்தைப் பற்றி குறிப்பிடவில்லை.

பாசுரத்தில் காணப்பட்டுள்ளபடி அங்கு ஒரு மண்டபம் மற்றும் ஒரு சின்னம் இருந்ததாகக் கருதலாம். நம்மாழ்வார் பிறப்பு, இறப்பு சம்மந்தப்பட்ட சம்சார வியாதியைப் போக்குவதற்கு வேங்கடவனே உண்மையான ஔஷதமாகக் குறிப்பிட்டுள்ளார். குலசேகராழ்வார் புனிதமான ஸ்வாமி புஷ்கரணியில் மீனாகவோ, மரமாகவோ, திருவேங்கடவன் வீற்றிருக்கும் பொன்மலையில் ஏதேனும் ஒன்றாகவோ பிறத்தல் வேண்டும் என்று பாசுரமிடுகிறார்.

### திருமலை ஆலயம் அமைப்பு மற்றும் வளர்ச்சி

திருமலையில் ஆலய நிர்மாணம் பல்லவர்களின் ஆட்சியின் இறுதியில் துவங்கப்பட்டு சோழர், பாண்டியர், யாதவர், விஜய நகர காலங்களிலும் தொடர்ந்தது. திருமலை ஆலயம் 16 ஏக்கர் நிலத்தில் 2 கோபுரங்கள் மற்றும் 3 பிராகாரங்கள் மற்றும் 4 மாட வீதிகளுடன், ஆலயம் மட்டுமே 2.5 ஏக்கர் மற்றும் புனிதமான புஷ்கரணி 1.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

திருமலை ஆலயம் வெவ்வேறு அரசுகளுக்கு உட்பட்டு இருந்திருந்தாலும், வெவ்வேறு அரசுகள் மற்றும் புரவலர்களால் புனரமைக்கப்பட்டது. திருமலை ஆலயத்தின் பரிணாமம் கீழே அளிக்கப்பட்டுள்ளது. 2 கோபுரங்கள், 2 பிராகாரங்கள், பல மண்டபங்கள், தூண்கள் கொண்ட சன்னதி, கல்யாண மண்டபம், கொல்ல மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் மற்றும் சிற்ப

1. (i) The Tirumala Temple - page no. 190

(ii) Vaikunta Guha video https://www.youtube.com/watch?v=GU5trlW_BMo&t=661s

| காலம் | வளர்ச்சி |
|---|---|
| சங்கம் | விக்ரகம் மட்டுமே இருந்தது. ஆலயம் கட்டுமான முறை இல்லை. |
| தொண்டைமான் | தற்காலிக கட்டுமானம். |
| பண்டைய பல்லவர்கள் | கற்களால் கிருஹ கட்டுமானம் |
| சோழர்கள் | முக மண்டபத்தில் கர்ப்பகிருஹ கட்டுமானம் |
| பாண்டியர்களின் நில பிரபுக்களான யாதவ அரசர்கள் | விமான கோபுரம், பள்ளியறை, ஸ்ரீராமர் மேடை, முக்கோட்டி பிராகாரம், விமான பிராகாரம், சம்பங்கி பிராகாரம், மஹா கோபுரம், வெள்ளி வாயில் கோபுரம். |
| விஜய நகர அரசர்கள் | திருமலகிரி மண்டபம், ரங்க நாயக மண்டபம், திருமலை ராய மண்டபம், கண்ணாடி மண்டபம், விமான பிராகாரம், சுற்றி கல்யாண மண்டபங்கள், பிற உள்கட்டமைப்புகள், ஆயிரம் கால் மண்டபம். |

வேலைபாடுகளுடன் அற்புதமான புராதன கட்டமைப்புகள் கீழ்க்காணும் அரசர்களின் ஆட்சியில் வளர்ச்சியடைந்தது.

## ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - வைகுண்ட குகை [1]

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் திரேதா யுக வைகுண்ட குகை குறித்து விவரிக்கப் பட்டுள்ளது. தற்பொழுது இது ஸ்வாமி புஷ்கரணிக்கு வடகிழக்கு திசையில், இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் கதலிவனம் அருகில் உள்ளது. ஹனுமனின் தாயார் அஞ்ஜனா தேவியின் கோரிக்கையின்படி சேஷாசலத்தில் தங்கிய வானர சேனை, இராவணனுடன் போர் புரியச் செல்லும்போது காட்டில் சுற்றித்திரிந்த வானரங்கள் எதிர்பாராமல் இந்த வைகுண்ட குகைக்கும் சென்றதாகக் கூறப்படுகிறது.

## தொல்லியல் ஆதாரங்கள்

தொல்லியல் ஆதாரங்கள் சாதாரணமாக பண்டைய காலத்தில் மானிடரால் செய்யப்பட்ட மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட பொருட்களாகும்.

## ஹனுமனின் சிலை பற்றிய குறிப்புகள்

நாட்டில் கி.பி. 4–5 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த ராக்–கட் ஆர்கிடெக்சரில் குப்தர்களின் காலத்தில் கற்சிலை வடிவில் முதல் ஹனுமன் வழிபாடுகள் காண முடிகின்றன. குப்தர்கள் கால

1. Sri Venkatachala Mahatyam - page no. 198-206

சக்ரவர்த்திகள் பெரும்பாலும் வைணவர்களாய் இருந்தனர். ஆதலால் நரசிம்மர், விஷ்ணு மற்றும் இராமாயண கதைகள் சிற்ப வடிவில் இவர்கள் அமைத்துள்ளதனை நாம் காண முடிகிறது.

முதல் ஹனுமனின் சிலை ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உண்டவல்லி கற்குகையில் கண்டறியப்பட்டன. இக்குகை கி.பி. 7ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கூறப்படுகின்றது. இது விஷ்ணு குண்டினஅரச காலத்தைச் சார்ந்தது (கி.பி. 420–620 சி.இ.). திருமலையில் ஆகாச கங்கா, குமாரதார தீர்த்தம், தும்புரு தீர்த்தம் முதலானவைகளும் உள்ளன.

## ஆகாச கங்கா

பல்வேறு புராணங்களில் கூறப்பட்டுள்ளபடி அஞ்ஜனாதேவி திருமலையில் உள்ள ஆகாச கங்கைக்கு மிக அருகில் உள்ள இப்பகுதியில் தவம் புரிந்ததாகவும், ஆதலால் இம்மலையை அஞ்ஜனாத்ரி எனவும் அழைக்கின்றனர் [1].

திருமலை திருவேங்கடமுடையானின் ஆலயத்திற்கு வடக்கு திசையில் மஹா விருக்ஷங்களுடன் பல விதமான மலர்களுடன் கூடிய உயரமான மலைகள் உள்ளன. அந்த அடர்ந்த வனத்தில், பள்ளத்தாக்குகளில் வன விலங்குகளும் இருந்தன. அம்மலையில் ஓரிடத்தில் கடல் மட்டத்திலிருந்து 2700 அடி உயரத்தில் இருந்து நீர் பாய்கிறது. அந்த நீர் வீழ்ச்சியே ஆகாச கங்கா என அழைக்கப்படுகிறது. இந்த நீர்வீழ்ச்சி மலையின் உட்பகுதியிலிருந்து பாய்ந்து பூமிக்குச் செல்கிறது. ஆதலால் ஆகாச கங்கா எனும் பெயர் பெற்றது. இத்தீர்த்தம் $13^0$–$14^0$ வடக்கு அச்சின் மீதும், $79^0$–$20^0$ கிழக்கு ரேகை அச்சின் மீதும் உள்ளது. இது முக்தியளிக்கும் சப்த தீர்த்தங்களில் ஒன்றாகும். ஆகாச கங்கா மிகவும் புனிதமான தீர்த்தமாகும். இத்தீர்த்தம்தான் திருவேங்கடமுடையானின் அபிஷேகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. இது திருவேங்கடவனின் ஆலயத்திலிருந்து 5.5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இத்தீர்த்தத்திற்கு மேஷ மாதத்தில் சித்தா நட்சத்திரத்தில் கூடிய பௌர்ணமி நாள் பருவ தினமாகும். அமிர்தம் எனும் பெயருக்கேற்றபடி இத்தீர்த்தம் பாய்ந்தோடுகிறது [1].

## பேடி ஆஞ்ஜநேயர்

இந்த வித்தியாசமான ஹனுமனின் சிலை கைகள் கட்டப்பட்டு நின்றபடி உள்ளது. இப்படி வித்தியாசமான சிலை வேறெங்கும் காணப்படவில்லை. இச்சிலை திருவேங்கடமுடையானின்

---

1. ஸ்ரீவேங்கடேஸ்வர வைபவம், பண்டித வேதாந்தம், ஜகன்னாதாசார்யுலு, பக்.136.

2. History of Tirupati – The Tiruvengadam Temples, Vol. II, page no. 458

3. (i) Proceedings of Srikantaya Centenary Seminar Early Vijayanagara Studies in its History and Culture (*Coins of the early period of Vijayanagara empire - A.V. Narasimha Murthy*)

   (ii) International Journal of Scientific and Research Publications, Volume 9, Issue 4 (Cultural importance of the Vijaya Nagara Coins - Dr. P. Bhaskara Rao) page no. 331

ஆலயத்திற்கு எதிரே அமைந்து உள்ளது. இது சாளுவ நரசிம்மராயர் காலத்தைச் சார்ந்தது. புராணங்களின்படி ஹனுமன் சிறு வயதில் மகரிஷிகளின் மூலம் பெற்ற வரங்களின் பலத்தினால் பல குறும்புகளைச் செய்பவர். பால ஹனுமன் செய்யும் குறும்புத் தனங்களை தடுப்பதற்காக அஞ்ஜனாதேவி ஹனுமனின் கைகளைக் கட்டி அங்கேயே இருக்கும்படி செய்ததாக ஐதீகம். இத்தகவல் ஹனுமனின் பிறப்பு இப்புனிதப்பகுதியே எனத் தெரிவிக்கின்றது.

### ஸ்ரீவியாச ராயர் [2]

விஜய நகர அரசன் சாளுவ நரசிம்மன் காலத்தில் பன்னிரு வருடங்கள் (1486–98) திருமலையில் நிர்வாகம் மற்றும் பூஜைகளை ஸ்ரீவியாச ராயர் மேற்பார்வையிட்டார். ஸ்ரீவியாச தீர்த்தர் பன்னிரு ஆண்டுகள் திருமலையிலேயே தங்கி இருந்து திருவேங்கடமுடையானுக்கு பூஜைகள் செய்ததாக அறிய முடிகிறது. இவர் விஜய நகர ஆட்சியில் பல்வேறு பகுதிகளில் சுமார் 700க்கும் மேற்பட்ட ஹனுமன் சிலைகளை பிரதிஷ்டை செய்து புகழடைந்தார். இந்தியாவிலும் ஹனுமன் வழிபாடு பிரபலம் அடைந்தது. பல கிராமங்களில் குறைந்தது ஒரு ஹனுமன் சிலையோ அல்லது பூஜை மந்திரமோ இருப்பதும் ஆச்சரியமில்லை. ஹனுமனை காக்கும் கடவுளாக வழிபடுவது இன்றளவும் உள்ளது. பல கோட்டைகள் கட்டமைக்கும்போது நுழைவு வாயிலில் ஹனுமனின் சிலைகளை வைத்தனர். இதனை சந்தரிகிரி கோட்டை, பெனுகொன்டா கோட்டை மற்றும் ஆந்திர மாநிலத்தில் பிற கோட்டைகளிலும் நாம் காண முடிகிறது.

### ஹனுமன் வடிவம் பொறித்த நாணயங்கள் [3]

பண்டைய கால அரசர்கள் பயன்படுத்திய நாணயங்கள் மீது அவர்களின் விருப்ப தெய்வங்களின் உருவம் இருக்கும். விஜய நகர காலத்தின் நாணயங்களில் ஹனுமனின் உருவம் பொறித்த நாணயங்களை நாம் காணலாம். விஜய நகர காலத்தில் ஹரிஹரர், புக்கர், வேங்கடபதிராயர் அரசர்கள் பயன்படுத்திய நாணயங்களின் மீது ஹனுமனின் உருவம் உள்ளது. இந்நாணயங்களில் ஹனுமன் கடலை கடக்கும் வடிவிலும் அல்லது அரக்கர்களை தண்டிக்க கைகளை தூக்கும் வடிவிலும் காண முடிகிறது.

### கல்வெட்டுகள் [1]

ஹனுமனைக் குறித்த முதல் கல்வெட்டு கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் ராயலசீமாவில் கடப்பா மாவட்டம், புலிவெந்தல தாலுக்காவில் காசனூரு கிராமத்திலிருந்து கிடைத்தது.

### முடிவுரை

ஏழு மலைகளில் உள்ள சேஷாசல மலைத்தொடரில் அஞ்ஜனாத்ரியாக ஹனுமனின் பிறந்த தலத்திற்கான வாதத்திற்கு பல ஆதாரங்கள் உள்ளன. அஞ்ஜனாத்ரி/செஹஸ்சலம் என்பது

1. Further sources of Vijaya Nagara History - Sastri Nilakanata. K.A and Venkata Ramanayya. N

தற்போது உள்ள நீரூற்றுகள், புனிதத் தீர்த்தங்கள், நீர் வீழ்ச்சிகள், மலைத்தொடர்கள், ஆழமான அடர்ந்த பள்ளத்தாக்குகள், அரிதான மரங்கள் மற்றும் விலங்கினங்கள் கூடிய அடர்ந்த காடாகும்.

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் – ஸ்ரீராமர் வானர சேனைகளுடன் சேஷாசலத்தில் உள்ள வைகுண்ட குகைக்கு வருகை புரிந்ததாகக் கூறுகின்றது. எனவே இச்சேஷாசல பகுதியில் உள்ள புராதன இடங்களை நாம் வேறுபடுத்த முடியாது. அஞ்ஜனாத்ரி உள்ள சேஷாசல தொடர்களில் புராதன சில வடிவங்களையும் மற்றும் பாறை மீது செதுக்கப்பட்ட பிக்டோக்ராப் போன்ற சிலை பழமையான பாறை வடிவங்கள் வரலாற்றுக்கும் முற்பட்டவை என இது போன்ற ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இப்பகுதி தற்பொழுது பாதுகாக்கப்பட்டிருந்தாலும், இப்பகுதியில் மானிடர்கள் இருப்பதாக நிச்சயமாகக் கூறலாம். தொல்லியியலாளர்களின் நுட்பமான முறையினால் நிர்வகிக்க இது முடியவில்லை. வனவிலங்கள் மற்றும் அரிதான செம்மரங்கள் கடத்தலிலிருந்து பாதுகாக்க காட்டில் கடினமான கண்காணிப்பு முறைகளும் செய்யப்பட்டுள்ளன.

சேஷாசல மலைத்தொடரில் ஹனுமனின் பிறப்பிடம் பற்றி பல புராணங்கள் மற்றும் வேங்கடாசல மாஹாத்மியத்தில் விவரிக்கப்பட்டுள்ளதால், இந்த இலக்கியங்களின் குறிப்புகள் நுட்பமான முறையில் அத்யயனம் செய்து, நம் லட்சயத்தைச் சாதிப்பதற்கு மேம்படுத்தப்பட்ட அறிவின் உதவியுடன் தொல்லியல் ஆய்வின் நோக்கம் எடுத்துச் செல்ல வேண்டும்.

ஹனுமனின் பிறப்பிடத்திற்கு தொடர்புடைய புராணங்களில் தற்பொழுது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை ஆய்விற்காக அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஆதாரமாகக் கொள்ளலாம். இந்தியாவில் பிற பகுதிகளில் முதன்மையாக ஐந்து இடங்கள் ஹனுமனின் பிறந்தத் தலமாகக் கூற, பிற இடங்கள் இராமாயணத்துடன் தொடர்புடைய இடமாகக் கருதப்பட்டாலும் அவை நம்பிக்கையை மட்டுமே சார்ந்து இருக்கின்றன. இலக்கியங்களின் வாயிலாகவோ அல்லது தொல்லியியல் வாயிலாகவோ நிரூபிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஆதாரங்கள் இல்லை.

ஹனுமன் புராண புருஷன், எனவே கல்வெட்டுகளோடு எந்த வரலாற்று ஆதாரங்களும் அவர் பிறந்தத் தலம் குறித்து குறிப்பிடப்படவில்லை. ஹனுமனின் பிறந்தத் தலம் அஞ்ஜனாத்ரியே என உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பகுதி. மேற்கூறப்பட்ட அனைத்து ஆதாரங்களும் முக்கியமாக புராணம், இலக்கியச் சான்றுகள் இறுதி மத்யயுக கல்வெட்டுகள் திருமலையிலுள்ள மலை அஞ்ஜனாத்ரி எனும் பெயரை அங்கீகரிக்கின்றன. ஹனுமனின் பிறந்தத் தலத்திற்காக இவற்றை நாம் ஆதாரங்களாகக் கருதலாம்.

******

அஞ்ஜனாதேவி தன் பணியில் மூழ்கியிருந்தபோது வேங்கடாத்ரியிலிருந்து ஹனுமன் பழமென நினைத்து சூரியனை நோக்கித் தாவுதல்



# அத்தியாயம் - 9

# 9. திருவேங்கடமுடையான் பக்தி இலக்கிய படைப்பில் அஞ்ஜனாத்ரி

**தெலுங்கு மூலம்**
**டாக்டர். ஆகெள்ள விபீஷண சர்மா**

**தமிழாக்கம்**
**திரு. கே.எம். மணிவண்ணன்**

எத்தனையோ பக்திக் கவிஞர்கள் ஹனுமனை வழிபட்டனர். குறிப்பாக புலவர்கள் திருத்தலங்களை பற்றிய பாடல்களை இயற்றினார்கள். தெலுங்கு கவிகளில் தாள்ளபாக்க அன்னமய்யா மற்றும் அவரது வம்சத்தவர்கள் அஞ்ஜனாத்ரி பற்றியும் மற்றும் ஹனுமனை திருவேங்கடமுடையானின் முதன்மையான சேவகனாகவும் குறிப்பிட்டுள்ளனர். தெலுங்கில் தாள்ளபாக்க சொற்களஞ்சியம் போலவே கன்னடத்தில் ஹரிதாச இலக்கியம் பிரபலமானது. ஹரிதாசர்களில் ஸ்ரீபாதராயர் முதல் இன்று வரை உள்ள அனைவரும் ஹனுமனை துதித்தவர்களே ஆவர். அவர்களுக்கு ஹனுமன் பிராண தேவர் (உயிர் கடவுள்) ஆவார். ஹரிதாசர்களில் புரந்தரதாசர் நான்கு லட்சத்திற்கும் அதிகமான கீர்த்தனைகளை இயற்றியதாகத் தெரிகிறது. அவர்களின் பக்தி கீர்த்தனைகளில் அன்னமய்யாவைப் போலவே க்ஷேத்ர கீர்த்தனைகள் சிறப்பு வாய்ந்தவை. ஹனுமந்தராய என்ற வார்த்தை கர்நாடகா மற்றும் ஆந்திரப் பகுதிகளில் புழக்கத்தில் அதிகமாக உள்ளது. அன்னமய்யாவின் பக்தி கீர்த்தனைகளில், மதங்காத்ரி, கலசாபுரா, மங்காம்புதி மற்றும் கீழ் நகரமான விஜயநகர ஹனுமத் க்ஷேத்திரம் ஆகிய கீர்த்தனைகள் முக்கியமாகப் புலப்படுகின்றன.

*க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி த்ரேதாயாமஞ்ஜநாசலம்*
*த்வாபரே சேஷசைலம் ச கலௌ ஸ்ரீ வேங்கடாசலம்* [1]

இந்த சுலோகம் திருமலையானது அந்தந்தக் காலத்திற்கு (யுகங்களிற்கு) தகுந்தாற்போல் எவ்வாறு புகழ்பெற்று வருகின்றதென்பதை குறிப்பிடுகின்றது. எனினும், யுக வித்தியாசத்திற்கு சம்பந்தமில்லாமல் எல்லாக்காலங்களிலும் ரிஷிகளாலும், தேவர்களாலும் இப்பெயர்களுடன் ஸ்தோத்திரம் செய்யப்படுவதே இந்த க்ஷேத்திரத்தினுடைய தனிச்சிறப்பு. இதற்குக் காரணம் முனிவர்களும் தேவர்களும் முக்காலமுமறிந்த ஞானமே ஆகும். அன்னமய்யா பொதுவாக தன்னுடைய பாடல்களில் ஹனுமனை 'அஞ்ஜனீபுத்ருடு' என்று குறிப்பிடுவதை விட வித்தியாசமாக 'அஞ்ஜனீதநயுடு' என்ற சொற்களைத்தான் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

*அஞ்ஜனாசலமு மீதநதடு ஸ்ரீவேங்கடேசுடஞ்ஜனீதனயுடா யனிலஜுடு....* [2]

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணாந்தர்கதம் 1-36, 37) இரண்டாம் பாகம், பக்.263, தி.தி.தே வெளியீடு
2. தாள்ளபாக்க பதசாகித்யம் தொகுதி-4, கீ-443

மேலும், அன்னமய்யாவினால் ஹனுமனுடைய அன்னை அஞ்ஜனாதேவியையே அஞ்ஜனீதேவியாகக் குறிப்பிட்டுள்ளார்.

*அஞ்ஜனீதேவி கொடுகு ஹனுமந்துடு*
*சஞ்சீவனி தெச்சிநாடு சாரெ ஹனுமந்துடு* [1]

அதேபோல் அன்னமய்யா அஞ்ஜனாத்ரியை பெரும்பாலும் 'அஞ்ஜனகிரி' என்றே குறிப்பிட்டார்.

*மிசிமினஞ்ஜனகிரி மீத வசந்தவேளனு வெச கல்பவிருக்ஷமு விருலிச்சிநட்லு* [2]

மேலும், திருமலையானை அஞ்ஜனகிரிராயுடு, அஞ்ஜனாத்ரீஸ்வருடு என்ற சொற்களால் அன்னமய்யா குறிப்பிடுகிறார்.

*அஞ்ஜனகிரிராயுடு வேங்கடபதி சஞ்சீவனி பருஷல கொதுவகனு* [3]

அதேபோல்,

*அலிகி சாதிஞ்சதகடஞ்ஜனாத்ரீஸ்வருநி கலிகி சூபுலநெ மதி கரகக சேசெதநு* [4]

மேலும், அன்னமய்யாவின் வம்சத்தினர் ஹனுமனுடைய பிறப்பு, குழந்தைப் பருவம், கல்வி முதலியவற்றை தாம் தரிசித்து, புகழ்ந்து, தாங்களும் அனுபவித்து நம்மையும் அனுபவிக்கச் செய்தார்கள்.

*பாலஹநுமந்துநி ரூபாந்நி ஜாதவர்ணுடு (4-83)*
*கநக குண்டலாலதோ கௌபீநமு தோட ஜயிஞ்சிநாடு (2-207)*
*புட்டு கௌபீநமு மஹாத்புத யஜ்ஞோபவீதமு (4-85)*
*ஸிருல பங்காரு காஸெ செலரேகிந ஸிங்காரமு (4-413)*

என்று வர்ணித்துள்ளார்.

ஹனுமனின் வாழ்க்கைப்போரில் முதல் கட்டமான இளம் சூரியனின் தரிசனம், பழமென்று கருதி உண்பதற்கு முயற்சி செய்தல் ஆகியவற்றை நன்றாக தரிசித்து, தன்னுடைய கீர்த்தனைகளில் நன்றாக வெளியிட்டார்.

*புட்டின நாடே புவனமுலெரகக - பட்டிதி சூர்யுனி பண்டனுசு (3-421)*
*அந்துகொனெ சூர்யபலமனி ஹனுமந்துடு (4-155)*
*கஞ்ஜாப்த பலஹஸ்த (3-522)*
*ஓ ரவி க்ரஹண (4-327)*

---

1. தாள்ளபாக்க பதசாகித்யம் தொகுதி-4, கீ-272, 499
2. தாள்ளபாக்க பதசாகித்யம் தொகுதி-13, கீ-107
3. தாள்ளபாக்க பதசாகித்யம் தொகுதி-13, கீ-107
4. தாள்ளபாக்க பதசாகித்யம் தொகுதி-29, கீ-478

அடுத்து அன்னமய்யா ஹனுமனுடைய கல்வி கற்கும் முறைதனை பலமுறை நினைவுக்கூர்ந்த விதம் அவருடைய கீர்த்தனைகளை ரசிக்க வைக்கின்றன.

*சதிவெ ஸூர்யுனி வெண்ட ஸாரெ மொகமு த்ருப்புசு*
*எதுட ஸீதனி மஹிமேமனி செப்பேமய்யா (4-509)*

*உதயாசலமு மீதி நொக்க ஜங்க சாசுகொனி*
*உதுடன நபராத்ரிநொக்க ஜங்க சாசுகொனி*

*துத ஸூர்யமண்டலமு தோடமோமு திப்புகொண்டா பெதவுலெத்தி சதிவே (4-470)*
*மோகி ஸூர்யுநி சே சாஸ்த்ரமுலு சதிவிநவாடு (4-525)*

எந்தத் திருமலை க்ஷேத்திரத்தில் சுப்ரபாதஸ்தோத்திரம் "கௌசல்யா சுப்ரஜா ராம" என்று ஒலிக்கிறதோ அங்கே 'ஸ்ரீமதகில மஹீமண்டல தரணீதர மண்டலா கண்டலஸ்ய' என்ற உரைநடையில் நித்யம் சேஷாசல, கருடாசல, நாராயணாசல, அஞ்ஜனாசலாதி..... என்று எதிரொலிக்கிறது. கன்னட தாசபக்தசிரோமணி புரந்தரதாஸர், ஸ்ரீபாதராயர், வியாசராயரைப் போலவே புகழ் பெற்றவர்.

இவர்களது பாடல்களில் திருமலையே அஞ்ஜனாத்ரி என்று போற்றிய முறை தெளிவாகத் தெரிகிறது.

## புரந்தர தாஸரின் திருமலைக் கீர்த்தனைகளில்...

புரந்தர தாசர் (1484–1515 கி.பி.) திருவேங்கடமுடையானையும், திருமலையையும் மிகவும் அழகாகப் போற்றினார். அங்குள்ள பால ஆஞ்ஜநேயரை தரிசித்தார். எனவே

*கூசின கண்டரா முக்ய ப்ராணன கண்டரா*
*பாலன கண்டரா பலவந்தன கண்டரா*

*அஞ்ஜனெ உதரதி ஜனிசிது கூசு*
*ராமர பாதக்கேரகிது கூசு*

*சீதகெ உங்கர கொட்டிது கூசு*
*லங்காபுரவனு சுட்டிது கூசு* [1]

என்று பாலாஞ்ஜனேயரைக் குழந்தையாகக் கண்டு பரவசமடைந்தாராம். அதேபோன்று அவருக்கு பின்பு வந்த மஹந்தும் தரிசித்தார். எனவேதான், அவர் ஹனுமத் உபாசனையால் நாடு முழுவதும் சுற்றி வந்தார், இந்த க்ஷேத்திரத்தில் ஹனுமனின் குழந்தை வடிவையும், தேஜஸ்ஸையும் தரிசித்தார்.

1. தாசகீர்த்தனலு, ஸ்ரீபாவஞ்சி குருராவு

திருபதி வேங்கட ரமண நினகேதகே பாரது கருண
நம்பிதே நின்னய சரண பரிபாலிஸ பேகோ கருண
அளகிரியிந்தலி பந்தஸ்வாமி அஞ்ஜனகிரியலி நிந்த
கொளலு த்வனியுதோ சந்தநம்ம குண்டலராய முகுந்த

பேடெயாடுத பந்த ஸ்வாமி பெட்டத மேலெ நிந்த
நீடுகார கோவிந்த அல்லி ஜேனு சக்குரெய திந்த
மூடலகிரியலி நின்த முத்து வேங்கடபதி பலவந்த
ஈடில்ல நினகெ ஶ்ரீகாந்த ஈரேளு லோக கனந்த

ஆதிதரெ ஸ்திரவப்ப அபத்த களாடலு ஒப்ப
பேடித வரகளிநிப்ப நம்ம மூடலகிரி திம்மப்ப
அப்பவு அதிரஸ மெத்த ஸ்வாமி அசுரர காலலி ஒத்த
ஸதிய கூடாடுதலித்த ஸ்வாமி ஸகல துர்ஜனரனு கெத்த

பகெ பகெ பக்ஷ்ய பரமான்ன நானா பகெய ஸகல ஸால்யான்ன
பகெ பகெ ஸொபகு மோஹன்ன நம்ம நகு முகத ஸுப்ரசன்ன
காசி ராமேச்வரதிந்த அல்லி காணிகெ பருவுது சந்த
தாஸர கூடெ கோவிந்த அல்லி தாரி நடெவுதெ சந்த

எல்லா தேவரகண்ட அவசில்லரெ தைவத மிண்ட
பல்லிதவரிகெ உத்தண்ட ஷிவ பில்ல முரித ப்ரசண்ட
காசு தப்பிதரே பட்டி பட்டி காசுபிடதே கண்டுகட்டி
தாஸனெந்தரெ பிட கட்டி நம்ம கேசக்கி திம்மப்ப செத்தி

தாஸர கண்டரெ ப்ராண தா தரெயொளதிக ப்ரவீண
த்வேசிய கண்டல காண நம்ம தேவகெ நித்ய கல்யாண
மோச ஹோகுவனல்லய்ய ஒந்து காசிகெ ஒட்டுவ கய்ய
ஏஸுமஹிமெ காரனய்ய நம்ம வாஸுதேவ திம்மய்ய

சித்தாவதான பராகு நின்ன சித்தத தய ஒந்தே சாகு
சத்யவாஹினி நின வாகு நீனு ஸகல ஜனரிகெ பேகு
அல்லல்லி பரிசெய கும்பு மத்தல்லல்லி தோபினதம்பு
அல்லல்லி சொகஸின சொம்பு மத்தல்லல்லி பரிமளதிம்பு

அல்லல்லி ஜனகள கூட மத்தல்லல்லி ப்ராம்மரஊட
அல்லலி பிடித கோலாட மத்தல் ஊரிக்கே ஓட
பாப விநாசினி ஸ்நான ஹறி பாதோதகவெ பான
கோப தாபகள நிதான நம்ம புரந்தர விட்டலன த்யான

இக்கீர்த்தனையில் திருப்பதி வேங்கட ரமணன் மேல் பாடிய கீர்த்தனையில் திருவேங்கடமுடையானை "அஞ்ஜனகிரி நாதர்" என்று குறிப்பிடுகிறார்.

*அகில லோகைக வந்த்ய ஹநுமந்துடா சீத-*
*சிகாமணி ராமுனிகி சேகொனி தெச்சிதிவி*

என்ற கீர்த்தனையில் ஹனுமனை வெற்றிக்கு இலக்காகக் கூறி "கடன அலமேல்மங்க காந்து, ஸ்ரீவெங்கடேசுகு, தடுகுன பண்டுவை, தரணி நில்சிதிவி" என்று சுவாமிக்கு எதிரில் நிற்கும் பேடி ஆஞ்சநேயரே என்று சொல்லாமலே சொல்கிறார் அன்னமய்யா என்று நாம் புரிந்துக் கொள்ளவேண்டும். திருமலையில் வசிக்கும் வேங்கடமுடையானே அஞ்ஜனகிரி ஸார்வபௌமன் என்று போற்றப்படுவதற்கு அன்னமய்யாவின் கீர்த்தனைகளே போதும். திருமலையே அமிர்தத்தின் வடிவான திருவேங்கடமுடையானின் உண்மையான இருப்பிடமாகச் சொல்லி, அனைத்துவிதமான நோய்களையும் போக்கடிப்பவனை இவ்விதமாகப் பாடியுள்ளார்.

*எடயக வொக காந்த எக்குவ உண்டினதி*
*கடலேனி யஞ்ஜனாத்ரி காருடமந்து*

என்று பகுப்பாய்வு செய்தார். அதேபோல் "அணுரேனு பரிபூர்ணமை ரூபமு" என்று வேதாந்திகள், யோகிகள், பிரம்மா முதலிய தேவர்களால் தரிசிக்கப்பட்ட பரப்பிரம்ம வடிவமான அத்திருவேங்கடமுடையான் இவ்விதமாக அஞ்ஜனாத்ரியின் மேல் அணிமாதி சித்திகளுக்கு ஆதாரமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார் என்று அவர் விளக்கினார். மேலும், அன்னமய்யா திருமஞ்சன கீர்த்தனையில் "பாவிஞ்சரே செலுலார பரமாத்முனி சேவதேரி சிகுருலோ சேகயை யுண்டெனு" என்ற கீர்த்தனையில் "அஞ்சல தட்டுபுணுகு அவதரிஞ்சே வேள, எஞ்சநஞ்ஜநாத்ரிபை ஏநுகைவுண்டெனு" என்று புனுகு (தைலக்காப்பு) சேவையில் திருமலையான் கரும் யானைப்போல் இந்த அஞ்ஜனாத்ரியின் மேல் வீற்றிருப்பதாகப் போற்றி குறிப்பிட்டார். மேலும், "கட்டெதுர வைகுண்டமு, காணாசைன கொண்ட" இவ்விதமாக தாள்ளபாக்க வம்சத்தினர் அவர்களின் தாசபக்தி கீர்த்தனைகளில் திருமலையை அஞ்ஜனாத்ரியாகப் போற்றப்பட்டு – புராணங்களில் கூறியபடி ஹனுமனின் உண்மையான அவதாரத்தலம் திருமலை அஞ்ஜனாத்ரியே என்று சுட்டிக்காட்டினார்கள்.

## ஸ்ரீ பிரசன்ன வேங்கடதாசர் (கி.பி. 1557-1680)

16ஆம் நூற்றாண்டில் வடக்கு கர்நாடகாவிலுள்ள பாகல் கோட்பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ பிரசன்ன வேங்கடதாசர், சாக்ஷாத் திருமலையானின் கைகளால் "பிரசன்ன வேங்கடேச" என்ற பீஜாக்ஷரங்களை தன்னுடைய நாவிலே எழுதிக்கொண்ட அதிர்ஷ்டம் பெற்றவர். பரம பக்தனான அவர், நீராஜனை கீர்த்தனையைப் பாடும் பொழுது "மங்கள அஞ்ஜனகிரி பதிகெ மங்களம்" என்று ஏழுமலையில் அஞ்ஜனாத்ரி வைபவத்தை கீர்த்தனை செய்தார். மேலும் இடஞ்சார்ந்த மகிமையை

வெளிப்படுத்தும் பொழுது திருமலையை அஞ்ஜனகிரியாக அவர் பக்தியுடன் கொண்டாடியதாக பேராசிரியர் சர்வோத்தமராவ் அவர்கள் பகுப்பாய்வு செய்தார் (வேங்கடேஸ்வரா வைபவம், பக்கம் எண் 152, திருமலை திருப்பதி தேவஸ்தானம், 2007).

## மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா (கி.பி.1730-1817)

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தில் முதல் பாகத்தில் வேங்கட மலைக்கு உள்ள பல பெயர்களை வர்ணிக்கும் போது இருபது பெயர்களில் அஞ்ஜனாத்ரியை ஒரு துதியில் வர்ணித்து ஹனுமனின் பிறப்பில் தேவர்களின் உதவி இருக்கிறதென்ற ரகசியத்தை மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா தெரிவித்துள்ளார்.

## அஞ்ஜனாத்ரி

*அஞ்ஜனா தேவி தபமு முன்னசடன் ஜேசி*
*பொஸங்க ஹனுமந்துடனு வர புத்ருன் காஞ்சே*
*நபுடு தேவதலெல்ல ஸாஹாய்யுலகுசு*
*நா கிரிகி நஞ்ஜனாத்ரி பேரமர நிடிரி* [1]

தரிகொண்ட வேங்கமாம்பா நான்காவது பகுதியில் அஞ்ஜனாசலம் புத்திர பாக்கியத்தை அருளும் கல்ப வ்ருக்ஷமாகப் புகழ்ந்தார். ஸௌநக ரிஷிக்கு ஸூதர் சொல்லிய ஸம்பாஷணை வடிவில் இந்த உண்மை தெரிகிறது.

*முனிநாத ! வ்ருஷபாத்ரி யனுதாநி கஞ்ஜனா*
*சலமனு பேரெட்லு கலிகே? நனின*
*நா சதானந்துன் டிட்லினியெங் கேஸரியுனு*
*வனசரோத்தமு பார்ய தனகு ஸூதுலு*

*கலுக குண்டங்க, மதங்க ருஷீஸ்வருனின் ஜேரி*
*ம்ரொக்கி யிட்லினியே நோ முனிவரேன்ய!*
*புத்ரஹீனுல கெந்துன் புண்யகதுலு கல்க*
*வனு வேத பூருஷுண்டந்து வலன*

*வரகுமாருண்டு நாகுன் காவலயு நந்து*
*கெடு தபமுன் ஜேது மீ ராணதீயுன் டனுசு*
*நஞ்ஜனா தேவி ப்ரார்த்திஞ்சி யடுகங்கானு*
*விநி கருண நதன் டப்பு டா வெலந்தி கனியே* [2]

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் – மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா 1–115

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் – மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா 4–33

வேங்கமாம்பா, அஞ்ஜனா தேவி தவம் செய்த விதத்தை மிக அழகாக வர்ணித்து ஹனுமனின் பிறப்புக் காட்சியைக் கண்ணுக்கெதிரே தெரியும்படி பாடியுள்ளார்.

### ஆஞ்ஜனேயரின் பிறப்பு

*தஸமமாஸம்பு வச்சே நத்தறி தரித்ரி*
*நஞ்ஜனா தேவி கர்பமம் தநகுண்டைந*
*புத்ருன் டுதயிம்பங்கான், ஜுசி புஷ்பவ்ருஷ்டி*
*ஸுரலு குரியின்சி சந்தோஷ பரிதுலைரி* [1]

அப்படி பிறந்த ஹனுமனின் அழகான வடிவினை வேங்கமாம்பா, மிகவும் அழகாக மதிமயக்கும்படி எழுதியுள்ளார்.

*கணவஜ்ராங்கமு, தீர்கவாலமு, லஸத் காந்துள், பலஸ்தைர்யமுல்*
*முனுலெள்ளம் கனி யாஞ்ஜனேயுடு மஹா முக்யுண்டகுண்தாத்ரிபை*
*நனி தீவிம்பு சு மாருதாத்மஜுன கம் தாஸக்திதோ நந்தருன்*
*ஹனுமந்துண்டனு நாமதேய மிடி ரத்யாஹ்லாத முப்பொங்கங்கண்* [2]

இப்படி த்ரேதா யுகத்தில் அஞ்ஜனா தேவி தவம் செய்து புத்திரனைப் பெற்றதால் திருமலை அஞ்ஜனாத்ரியாகப் புகழ் பெற்றது.

******

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் – மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா 4–33

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் – மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா 4–34

ஹனுமத் வாகனத்தில் ஸ்ரீகல்யாண
வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்



வேங்கடாத்ரியிலிருந்து தாவிக்கொண்டு சூரியனை நோக்கிச் செல்லும் ஹனுமன்



# அத்தியாயம் - 10

# 10. இலக்கிய ஆதாரங்கள்

தெலுங்கு மூலம்
பேராசிரியர் சங்கர நாராயணன்

தமிழாக்கம்
திரு. ல. வெங்கடேசன்,
முனைவர். ஆ. அரங்கராஜன்

எந்த விஷயமானாலும் இலக்கிய ஆதாரங்கள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டால் அவற்றிற்கு மதிப்பு கிடைக்கும். ஆஞ்ஜனேயர் பிறந்த இடம் அஞ்ஜனாத்ரி என்று புராணங்கள் ஒருமித்த குரலில் தெரிவிக்கின்றன. ஆதலால் வேங்கடாத்ரியே அஞ்ஜனாத்ரி என்று நிரூபிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் புத்தகங்களிலிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும் நாம் காண்பித்தால் புராண ஆதாரங்களுக்கு இந்த ஆதாரங்கள் மேலும் வலிமைக் கூட்டும்.

## இலக்கிய ஆதாரங்கள்

கம்பராமாயணம் தமிழ் மொழியில் கம்பரால் எழுதப்பெற்றதாகும். வால்மீகி இராமாயணத்திற்கு இது ஒரு அற்புதமான மொழி பெயர்ப்பு நூலாகும். இந்த மஹாகாவியமானது வராஹ புராணத்தில் சொல்லியபடியே சீதையைத் தேடிக் கொண்டிருக்கும் வானரர்கள் வேங்கடாத்ரிக்கு வந்தார்கள் என்ற தகவலைத் தெரிவிக்கிறது.

*அருந்ததிக்கு அருகு சென்று ஆண்டு அழகினுக்கு அழகு செய்தாள்*
*இருந்ததிக்கு உணர்ந்திலாதார் ஏகினார் இடையர் மாதர்*
*பெருந்ததிக்கு அருந்தேன் மாறும் மரகதப் பெருங்குன்றெய்தி*
*இருந்து அதில் தீர்ந்து சென்றார் வேங்கடத்து இறுத்த எல்லை எய்தி* [1]

அழகான சீதாதேவி இருக்கும் இடம் எது என்று தெரியாமல் அந்த வானர வீரர்கள் அருந்ததி மலைக்குச் சென்று, அங்கிருந்து மரகத மலைக்குச் சென்று, அதன் பிறகு வேங்கடாத்ரி மலையை அடைந்தார்கள். அப்படியே வேதாந்ததேசிகர் (ஸா. வருடம் – 1268–1369) தன்னுடைய ஹம்ஸதூதம் என்ற நூலில் வேங்கட மலையை அஞ்ஜனாத்ரி என்று தெரிவித்தார்.

*விஷ்ணோர்வாஸாதவனிவஹனாத்பத்தனை: ஸிரோபி:*
*சேஷஸ்ஸாகூஷதயமிதிஜனைஸ்ஸம்ய குன்யமான:*
*அப்ரைர்யுக்தோSகுபிசிரோன்முக்தநிர்மோக கல்பை:*
*அக்ரேபாவீஸபதிநயணே ரஞ்ஜயன் அஞ்ஜனாத்ரி:* [2]

தனது தலையின் மேல் விஷ்ணு இருப்பதாலும் மற்றும் இரத்னங்களை அணிந்திருப்பதனாலும் “இந்த மலை ஆதிசேஷனே” என்று மக்களால் புகழப்படுகிறது. அந்த அஞ்ஜனாத்ரி மேகங்களால் சூழப்பட்டு கண்களுக்கு ஆனந்தமாகத் தெரிகிறது.

---

1. கம்பராமாயணம், கிஷ்கிந்தா காண்டம் – 4732

2. ஹம்சதூதம் – 1–21

அவ்வாறே அவர் அருளிய தயா சதகத்தில் அஞ்ஜனாத்ரி என்ற பெயரை அனேக முறை பயன்படுத்தியுள்ளார்.

*அஞ்ஜனாத்ரீஸ்வர தயாமபீஷ்டௌமி நிரஞ்சனாம்:* [1]

அஞ்ஜனாத்ரியின் அதிபதியான திருவேங்கடவனின் நிஷ்கல்மஷமான கருணையைப் போற்றுகிறேன்.

*ஸஞ்சீவயது தயே மாம் அஞ்ஜனகிரி நாத ரஞ்சனீபவதி* [2]

அஞ்ஜனாத்ரியின் அதிபதியான வேங்கடவா ஓ! ஸ்வாமி உன் தயையால் என்னை மீண்டும் உயிர்பிப்பாயாக.

*அம்ருதாம்ஸ மவைமி திவ்யதேஹம் ம்ருத ஸஞ்சீவனம் அஞ்ஜனா சலேந்தோ:* [3]

அஞ்ஜனாத்ரிக்கு சந்திரனை போன்ற திருவேங்கடமுடையானின் அம்ருதம் போன்ற திவ்ய தேகத்தை சேவிக்கிறேன்.

*நித்யா பூர்வம் நிதி மிவதயே நிர்விஸந்த்யஞ்ஜனாத்ரௌ* [4]

ஓ! கருணையே, மஹான்கள் எப்போதும் மஹத்துவம் பொருந்திய அஞ்ஜனாத்ரியைப் பொக்கிஷமாகக் கருதி சேருகிறார்கள்.

*அஸேஷமவிஸேஷதஸ்த்ரி ஜகத் அஞ்சனாத்ரீசிது:* [5]

ஓ! கருணையே, அஞ்ஜனாத்ரிக்கு அதிபதியான திருவேங்கடமுடையானின் தாமரைப் போன்ற பாதங்களை எப்போதும் நீ பதியப் பெற்றுள்ளாய்.

“ப்ரதிவாதி பயங்கரம்” அண்ணன் ஸ்வாமி அருளிச் செய்த அஞ்ஜனாத்ரி (வருடம் 1361) காவியத்தில் அவர் அஞ்ஜனாத்ரி நாத ஸ்தோத்ரம் என்ற பெயரில் திருவேங்கடமுடையானைப் பாடி பரவசமடைந்தார்.

தாள்ளபாக்க அன்னமய்யா (வருடம் – 1408 – 1503) தனது சண்முகப்ரியா கீர்த்தனையில் வேங்கடாத்ரியை அஞ்ஜனாத்ரி என்றே பாடியுள்ளார்.

*அணுரேணு பரிபூர்ணமைன ரூபமு*
*அணிமாதிசிரி அஞ்ஜனாத்ரி மீதி ரூபமு*
*அஞ்ஜனாசலம் மீத நதடு ஸ்ரீவேங்கடேசு*
*டஞ்சனீ தனயூடாய அணிலஜூடு* [6]

என்று “அஞ்ஜனா சலம்”, “அஞ்ஜனாதநையுட”எனப் பாடியுள்ளது கூட சரியான சான்றேயாகும். பிறகு அவரே *“மிஸிமி நஞ்ஜனகிரி மீத வஸந்த வேலனு வ்யஸ கல்பவ்ருக்ஷமுவிருளிச்சினட்லு”* [7]

1. தயா சதகம் – 10
2. தயா சதகம் – 12
3. தயா சதகம் – 22.
4. தயா சதகம் – 44
5. தயா சதகம் – 85
6. தாள்ளபாக்க பதஸாஹித்யம் 4 – தொகுதி, 443 கீ
7. தாள்ளபாக்க பதஸாஹித்யம் 13 – தொகுதி, 107 கீ

என்று அஞ்ஜனாத்ரியை வர்ணித்தார். இப்படி அளவற்ற கீர்த்தனைகளில் அஞ்ஜனாத்ரி, அஞ்ஜனகிரி என்று அன்னமய்யா ஸ்வாமியைப் புகழ்ந்துப் பாடினார். 1484–1565ஆம் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மஹானான புரந்தரதாஸர் திருவேங்கடமுடையானைப் போற்றி எழுதிய கீர்த்தனையில்

*அலகிரி இன்தலிபந்த ஸ்வாமி அஞ்ஜன கிரியலிநிந்த*
*கொளல நூதுவ சந்த நம்ம குண்டல ராய முகுந்த*

அந்த ஸ்ரீநிவாசனின் இருப்பிடம் அஞ்ஜன மலையே என்று தெரிவித்தார்.

### வாமனபட்டாசார்யர் :

15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேம பூபாலனின் ஆஸ்தான கவியான வாமன பட்டபாணர் தன்னுடைய ஹம்ஸ ஸந்தேஸம் என்ற நூலில் அஞ்ஜனாத்ரியை இப்படி வர்ணித்தார்.

*ச்ருங்கா காடை: தபநதுரகாலீட தூர்வாப்ரவாலை ரம்ஹச்சேதீ ததனு பவதா த்ருச்யதாம் அஞ்ஜனாத்ரி: ஹேலா லோலம் விஹரதி ஸதா யத்ர போத்ரீ புராணோ யத்தம்ஸ்ட்ராக்ரே விஹ்ருதி மகரோத் புஷ்பதூலீவ பூமி:* [1]

ஓ ஹம்ஸமே! தன்னுடைய மலையின் உச்சியில் சூரியனுடைய குதிரைகள் மேய்ந்து விட்டுச் சென்ற தூர்வா என்னும் புற்களால் நிறைந்துள்ள அஞ்ஜனாத்ரியை நீ பார்ப்பாய். அங்கு கொலு வீற்றிருந்து ஒளிவீசிக் கொண்டிருக்கும் வராஹ மூர்த்தி இருப்பார். அந்த வராஹ மூர்த்தியின் பற்களின் நுனியில் பூ பந்து போல இந்த பூமி சுற்றிக் கொண்டு இருக்கும்.

### ஸ்ரீ வேங்கடேச்வர தாஸர்

1680ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் பாகல்கோட் என்ற ஊரில் பிறந்த ஸ்ரீ வேங்கடேச்வரதாஸர் *"மங்கள அஞ்ஜனகிரி பதிகே மங்களம்"* என்று பாடினார்.

### ஸ்ரீ ரங்கராமாநுஜாசார்யர்

ஸ்ரீ ரங்கராமாநுஜாசார்யர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மஹான். அந்த ஆசார்யர் தன்னுடைய கடோபனிஷத் பாஷ்யத்திற்கு மங்கள சுலோகமாக அஞ்ஜனாத்ரி நாதனை சேவித்து இவ்வாறு சொல்கிறார்.

*அதச் குச்ச ஸச்சாய மஞ்சிதோரஸ்த்ஸலம்ச்ரியா*
*அஞ்ஜனாசல ச்ருங்கார மஞ்சலிர் மம காஹதாம்* [2]

அகத்தி மலரைப் போன்ற அழகுடைய ஸ்ரீமஹாலக்ஷ்மி பதித்துள்ள அஞ்ஜனாத்ரிக்கே அலங்காரமான திருவேங்கடமுடையான் என்னுடைய வணக்கத்தை ஏற்பாறாக.

### பொட்டு செர்ல சினதிம்மைய

16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொட்டு செர்லசின திம்மைய தன்னுடைய ப்ரஸன்ன ராகவ நாட்ய பிரபந்தத்தில் திருவேங்கடவனை தரிசிக்க வந்த போது "அஞ்ஜனாத்ரீசு தீர்த்தயாத்ர" என்று எழுதினார்.

---

1. ஹம்ஸ ஸந்தேஸமு, வாமன பட்டபாணுடு – 35
2. கடோபநிஷத் ஸ்ரீரங்கராமானுஜ பாஷ்யம் தி.தி.தே. பதிப்பு – 1984

*குருவிலாஸ நாபீஸரோவர பவப்ர*
*பூத யுவனாம் புஜா துண்டுனை தனர்ச்சு*
*நஞ்ஜனாத்ரீசு தீர்த்த யாத்ரானு ரக்தி*
*குடேநீ பாரிஷதலு பென்கூட மிசட*
*“வா இந்து நந்தேல திருமல தாரவருண்டுனு திருமல*
*கொண்ட நேலு ஜேஜேஸ காடு பூஜிஞ்சு வாடை [1]*

என்று “நந்தியாலாவை திருமல ராயுலு (திம்ம ராஜு) ஆண்டு கொண்டிருக்கும் போது அஞ்ஜனாத்ரி நாதனான வேங்கடவனை தரிசிப்பதற்காக தீர்த்த யாத்திரையை முன்னிட்டு அஞ்ஜனாத்ரி பரிஷத்துக்கள் ராஜ சபையில் கூடினார்கள்” என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொட்டு செர்ல சினதிம்மைய தான் எழுதிய ப்ரசன்ன ராகவ நாட்யப்ரபந்தத்தில் திருவேங்கடவனை அஞ்ஜனாத்ரியின் அதிபதியாக வர்ணித்துள்ளார்.

### டேக்கு மல்ல ரங்கசாயி

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டேக்கு மல்ல ரங்கசாயி அவர்கள் எழுதிய வாணி விலாஸ வனமாலிக என்ற நூலில் அஞ்ஜனாத்ரியைப் பற்றி உள்ளது.

*அஞ்ஜனா தர குருடா ஹார்ய வ்ருசசைலா*
*நாராயணாத்ரி கணக சிகருலு*
*நீலாத்ரி சிந்தாமணிகிரி வைகுண்டாத்ரி*
*வாராஹ வ்ருசஸைல மேருகிருலு*
*சிம்ஹாத்ரி தீர்த்தாத்ரி சேஷாத்ரி புஷ்கரா*
*சல வேங்கடாத்ருல நெலமி ஸ்ரீநி*
*வாஸாத்ரி ஸ்ரீ சைல பாஷுர ஸஞ்சல*
*க்ருத நாமமுலு (கல்கு) கொட்ல கொலந்தி [2]*

### ஸ்ரீ வீரப்ரம்மேந்த்ர ஸ்வாமிகள்

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீர ப்ரம்மேந்த்ர ஸ்வாமிகள் தன்னுடைய “கோவிந்த” வாக்யங்களில் அஞ்ஜனாத்ரியைப் பற்றி இப்படியாக விவரித்துள்ளார்.

*அங்கனா மணியைன ஆதி லக்ஷ்மினி கூடி*
*ஆனந்த ஸ்வாமுலு வச்சேனி மா*
*அங்கஜ ஜனகுடு ஆனந்த முல சேத*
*அஞ்ஜனாத்ரிகி வச்சி சேரேணுமா [3]*

### தரிகொண்ட வேங்கமாம்பா

18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யோகினியான தரிகொண்ட வேங்கமாம்பா ஸ்ரீ வேங்கடாத்ரி மாஹாத்மியத்தை தெலுங்கில் மொழி பெயர்த்தார். அந்த புத்தகத்தில் கூட அஞ்ஜனாத்ரியான திருமலையில் ஆஞ்ஜநேயர் பிறந்த கதையை நாம் பார்க்கலாம்.

1. பிரசன்னராகவ நாட்டிய பிரபந்தம், 1-5,6.
2. வாணி விலாச வனமாலிக, பக்கம் - 88
3. கோவிந்த வாக்யாலு, பக்கம் - 318

அஞ்ஜனாதேவீ தபமு முந்துசட சேசி
போஸக ஹனுமந்துடனு வரபுத்ருகாஞ்சே
நபுடு தேவலெல்ல ஸஹாயுலகுசு
நகிரிகி நஞ்சனாத்ரி பேரமரனிடிரி [1]

## ஸ்ரீராமர் வேங்கடாத்ரிக்கு வந்தது

அஞ்ஜனா தேவீ ஸ்ரீ வேங்கடாத்ரி மீத
நுண்டி ராமுடு பஹுகபிதண்டமுலனு
கூடி வச்சட கணி பைடிகொண்ட டிக்கி
மொனஸி யதுரகஜனி ராகவுனகு ம்ரொக்கி

கனுடகு ராமுடு விஷ்ணும்
டனி மனமுன நிச்சயிஞ்சி யதிஸய பக்தின்
வினுதுலு ஸேயுசு நச்சட
நேன லேனி மதம்பு மீந நிட்லனி பல்கென்

ராம ஸுகீர்த்த காம பஹுராக்ஷஸ யூத விராம ஸத்குண
ஸ்தோம திநேந்த்ர வம்ஸ கனதோயந்தி ஸோம தஸாஸ்யபீம நீ
ஸ்ரீ மஹித ப்ரபாவமுநு சேஸுடு ஸன்னுதி சேயலேடுநே
நேமி நுதிம்பநேர்த்து ஜகதீஸ்வர ம்ரொக்கேத நந்நு காவவே

ஸ்ரீ வேங்கடாத்ரிபை நேனு வர்த்திம்புது
காவுந நாயந்து கருணனுஞ்சி
வேங்கடாத்ரிகி மீறு விச்சேயுடன விநி
ஸ்ரீ ராமுடிட்லனே வீர கபுல
தோட சீக்ரம் பைன தூர ப்ரயாணம்பு
கலிகியுன்னதி கார்ய கடனமைந
வெனுக நீவனி நட்ல வேங்கடாத்ரிகி வத்து
மனக தேவர தர்ஸனார்த மசட

காசியுண்ணாறு முனிவருள் காண வாரி
ஜுட ராவலே நனுசு நாசேடே பிலுசு
ஸமயமுன நாஞ்சனேய டச்சடிகி வச்சி
விநயமுந ம்ரொக்கி இட்லனி வின்ன விஞ்செ
தேவ மா தள்ளி யஞ்சனா தேவீ மனவி
சேஸினதி மீரு மன்னிஞ்சி சித்தகிம்ப
வலயு நெலன்ன கபுலெல்ள நலஸிநாரு
கனுக ஸ்ரீ வேங்கடாத்ரிகி ஜனுடயொப்பு

ஸ்ரீ யஞ்சனாஸ்ரம ஸித்த ஸ்தலமுனந்து
பலகும வ்ருக்ஷமுல் கலிகியுண்டு

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் தரிகொண்ட வேங்கமாம்பா 1 – 115

*கந்த மூலாதுலு கண புண்ய தீர்த்தம்பு*
*லந்துண்டு கனுக நேடசட நில்சி*
*யவல வோதகு நஞ்சனாத்ரி தூரமுகாது*
*மன ப்ரயாணமுநகு மார்க மதியெ*
*யட்டுகாண மாதள்ளி யந்து ஸத்க்ருப நுஞ்சி*
*யடகு ராவலே நிபு டனக ராம*

*சந்த்ருடப்ஜாப்தசுதுனி லக்ஷ்மணுனி ஜூசி*
*மந்த ஹாஸிதாஸ்துடை ஹனுமந்துடனுடா*
*வின்டிரே யண்ணவாரு பூவிபுனி ஜூசி*
*தேவ ஶ்ரீ வேங்கடாத்ரிகி போவ வச்சு*
*அனி இட்லு மனவி சேயக*
*வினி ராமுடு ஸம்மதிஞ்சி வேடுகக ந*
*யனிலத நூஜுனி நெனருன*
*கனு கொனி இட்லனியே ஜால கௌரவமொப்பன்*

*மாருத புத்ர நீ மனவி மாமதீ கிஷ்டமே யெய் யே நிப்புட*
*ஸாரத ராஞ்ச நாக்ய வரசைல ஸுமார்க முனந்தே போத: மா*
*தாரினி வாநராவலிகி தப்பகசூபு மடஞ்சு பல்கன*
*வீருடு ஸம்மதிஞ்சி கபி வீருல ல்சி முதம்பு மீரகண்*

*வேங்கடாத்ரி மார்க மங்கிதமுகா ஜூபி*
*ஹரி ஸமூஹ விபுனி யனு மதமுன*
*ராம லக்ஷ்மனுலனு ரஹிமீர புஜ முலம்*
*துஞ்சி கொனி பலம்பு வெஞ்சி நடிசே* [1]

ததனந்தரம்புந ராம சந்த்ருடு தத்பர்வதோத்தர மார்க்கம் புநன் பர்வதா ரோஹனம்பு சேயுசுண்டி, தன் மத்யம்புன யக்ஷ ஸாப மோக்ஷம்பு சேஸி வச்சி, கந்த மூல பல பரிதம்பைந யஞ்சனாஸ்ரமம் புனந்து நாகாஸ கங்க ஸமீபம்முநன் கபிஸ மோஹ முலதோட ராம லக்ஷ்மணுலு நிலிசி தத்தீர்த்தம்புன ஸ்நான ஸந்த்யாதி க்ருத்யம்புலு நெறவேர்ச்சி; ரஞ்சனா தேவீ பல புஷ்பம்புலு ஸமர்பிஞ்சி பூஜிம்பகா, ராமலக்ஷ்மனுலு ஸந்துஷ்டுலை யஞ்சனா தேவீ நாதரிஞ்சி வீட்கொனி[2]

ப்ரகாஸிஞ்சு சுன்ன நாராயணாத்ரி ப்ரதேஸம்புநந்துன் பரம பாவனியை யொப்பு சுன்ன ஸ்வாமி புஷ்கரிணிக நுத்தரம்பு காகி க்ரோஸமாத்ர தூரம்புனந்து ஆகாஸ கங்காப் ரவாஹம்புன்னதி. நீ வந்துன்சேரி த்ரிகால ஸ்நாம்புலாசரிஞ்சுசு த்வாதஸாப்தம்புலு தபம்புண் ஜேயுசுண்டு, மந்த ஸுதுண்டு தயஞ்சு, நனின, மஹா ப்ராதம்பனிம்ரொக்கி யம்முனி யாஞ்யா தாரிணியை நாரயணாத்ரின் ஜேரி ஸ்வாமி புஷ்கரிணிலோ ஸ்நாநம் புன்சேஸி தத்திராஸ்வத வ்ருக்ஷபுலகுன் ப்ரதக்ஷிணம்புலு சேஸி வராஹ ஸ்வாமிகி ம்ரொக்கி, சனி யாகாஸகங்க கரிகி

1. ஶ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம், தரிகொண்ட வேங்கமாம்பா 1-213-221

2. ஶ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம், தரிகொண்ட வேங்கமாம்பா 1-227

யெந்துன்ன மநுலகு நமஸ்கரிஞ்சி வாரி யாஞ்ய வடஸி, த்ரிகால ஸ்நாநம்புலு சேயுசு நிராஹாரிணியை யொக்க ஸம்வத்ஸரம்பு தபம்புன் சேயுசுண்டே; நந்த வாயுதேவுண்டு ப்ரஸன்னுன்டை ப்ரதி தினம்பு நொக்கொக்க மதுர பலம்பு நிச்சுசுண்ட, நதி பக்ஷிஞ்சுசு நத்தபஸ்வினி த்வாதஸ வர்சம்புலு பூர்த்திகான் தபம் பாசரிஞ்சே. அந்த நொக்கனான்டு பவனுன்டு ஸத்வீர்ய கர்பிதம்பைந பலம்பு நீயங்கா தானி புஜிஞ்சி யத்தரு நீமனி கர்பம்பு தரியஞ்சே நந்த.

*அஞ்ஜனா தேவீ கர்பமம் தனில தேவுன்*
*தொக்க நான்டு ப்ரவேஸிஞ்சுண்டி நடுல*
*ஸம்ய மீந்த்ருல கச்சோட ஸ்வப்நமையே*
*நந்துசே வாரு நிஸ்ஸம்ஸயாத்முலைரி.*

*தஸமமாம்ஸம்பு வச்சே நத்தறி தரித்ரி*
*நஞ்சனா தேவீ கர்பமம் தனகுண்டைந*
*புத்ருன் டுதயிம்பன்கான் ஜுசி புஷ்ப வ்ருஷ்டி*
*ஸுரலு குரியிஞ்சி சந்தோஸ பரிதுலைரி*

*கன வஜ்ராங்கமு தீர்க்க வாலமு லஸத் காந்துல்பலஸ்தைர்யமுல்*
*முனுலெள்லம் கனி 'யாஞ்சநேயுண்டு மஹா முக்யண்ட குண் தாத்ரிபை'*
*நனி தீவிஞ்சு சு மாருதாத்ம ஜுனகம் தா ஸக்தி தோநந்துறுன்*
*ஹனுமந்துண்டனு நாம தேய மிடி ரத்யாஹ்லாதமுப்பொங்கன்கன்*

*த்ரேதா யுகம்புனம் தஞ்ஜனா தேவீ இவ்விதம்புந தபம்புன் சேஸி புத்ர வதியைன*
*நிமிதம்புசேத நக்கிரி யஞ்ஜனாத்ரியன ப்ரஸித்தம்பையே* [1]

## ஸ்ட்ராட்டன் என்ற வித்வான்

ஸ்ட்ராட்டன் என்ற வித்வான் 1800ல் திருமலை ஆலயம் குறித்த தகவல்களை எல்லாம் தொகுத்து "சவால் ஏ ஜவாப்" என்ற புத்தகத்தை எழுதினார். அந்த புத்தகத்தில் அஞ்ஜனாத்ரி என்ற பதத்தைப் பற்றி எழுதும் போது, அஞ்ஜனா தேவிக்கு ஆஞ்ஜநேயர் பிறந்த இடமாதனால் அஞ்ஜனாத்ரி என்று சொல்லப்படுகிறது [2] என்று தெரிவித்துள்ளார்.

இது மட்டும் அல்லாமல் "அஞ்ஜனாத்ரி மாஹாத்மியம்" என்ற பதிப்பிக்கப்படாத நூல் ஒன்று லண்டனில் உள்ள இந்தியன் ஆபிஸ் நூலகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளார்கள். அந்த புத்தகத்தில் கூட வேங்கடாத்ரியிலேயே ஆஞ்ஜநேயர் பிறந்தார் என்று இருப்பதாக ந்யு கேட்டலாகஸ் கேட்டலோகாரம் விளக்குகிறது. அப்படியே 19ஆம் நூற்றாண்டிலிருந்து பலதரப்பட்ட ஆய்வாளர்களால் வெளியிடப்பட்ட பல வரலாற்று நூல்கள் திருவேங்கடவனின் வைபவங்களை தெரிவித்து அஞ்ஜனாத்ரியான திருமலையிலேயே ஆஞ்ஜநேயர் பிறந்ததாக உள்ள விவரத்தை வலியுறுத்துகின்றன.

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம், தரிகொண்ட வேங்கமாம்பா 4-31-35

2. An English translation of Swal - E - Jawab, Page, 3, V.R. Srinivasa Rao, The mythic society, Bangalore, 1950.

## 2. சாசன ஆதாரங்கள்

சாசனம் என்பது ஆனை, ஆட்சி அல்லது அரசர்கள் தானமாக எழுதிக் கொடுக்கப்பட்ட உரிமைப் பத்திரம் என்று பொருள். ஹாக்ஸ்போர்ட் அகராதியில் இதற்கு நினைவுச் சின்னம், நாணயம், கல், புத்தகம் போன்றவற்றில் பொறிக்கப்பட்ட வார்த்தைகள் என்று பொருள் உள்ளது.

### ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தின் நம்பகத் தன்மை

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் என்ற நூல் நம்பிக்கையானதே என்று சொல்வதற்கு இரண்டு கல்வெட்டுகள் திருமலை கோயிலில் உள்ளன. முதல் கல்வெட்டு 1491 ஜுன் 27ஆம் தேதியைச் சேர்ந்தது. இந்தக் கல்வெட்டு இரண்டாவது சுற்றில் தெற்கு நோக்கி உள்ளது. இந்த கல்வெட்டு தமிழ் மொழியில் உள்ளது. “திருவேங்கடமுடையான் இந்தத் திருவோலக்கம் கண்டருளுகிற போது இவர் விண்ணப்பம் செய்த திருவேங்கட மாஹாத்மியத்திற்கு [1] (திருவேங்கடமுடையானின் சன்னிதியில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தை பாராயணம் செய்வதற்காக கொடுத்தப் பரிசு என்று பொருள்) ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் திருவேங்கடமுடையான் சன்னிதியில் பாராயணத்தில் இருந்ததை இது தெரிவிக்கிறது. இரண்டாவது கல்வெட்டு 1545ஆம் வருடம் ஜுன் 27ஆம் தேதியைச் சேர்ந்தது. சதாசிவராயர் காலத்தைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு கூட பல்லவோத்ஸவம் நடைபெறும் போது ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தை பாராயணம் செய்தார்கள் என்ற விஷயத்தை ஆதாரமாகக் காட்டுகிறது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் பெருமாளின் பக்தர்கள் அனேகம் பேரை ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் பாராயணம் சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக வரிசையாக கி.பி. 5–7–1545, 17–7–1546, 8–6–1547 காலத்து கல்வெட்டுகள் [2] தெரிவிக்கின்றன. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய பாராயண சேவை, திருமலை வேங்கடவனின் ஆலயத்தில் மட்டுமல்லாமல் திருப்பதியில் உள்ள ஸ்ரீ கோவிந்த ராஜ ஸ்வாமி ஆலயம், அச்சுத பெருமாள் ஆலயம், திருச்சானூர் அழகிய பெருமாள் (ஸ்ரீ சுந்தர ராஜ ஸ்வாமி) ஆலயங்களில் கூட நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக 15–7–1545 [3] காலத்து கல்வெட்டு தெரிவிக்கின்றது. திருப்பதியைச் சேர்ந்த பெனுகொண்ட செட்டியின் குமாரன் காளத்தி செட்டி திருமலையில் திருவேங்கடமுடையானின் சன்னிதியில் தை, மாசி மாதங்களில் நித்யோத்ஸவங்களை ஏற்பாடு செய்தார்.

இதில் ஒரு பகுதியாக ஸ்ரீநிவாஸ புராண பாராயணம் ஏற்பாடு செய்யப்பட்டதாக கி.பி. 31–12–1543 ஆம் வருட கல்வெட்டு [4] மூலம் தெரிகிறது. இதனால் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய நூலிற்கு திருவேங்கட மஹாத்மியம் ஸ்ரீநிவாஸ புராணம் எனும் பெயர்களும் இருப்பதாகத் தெரிகிறது. திருமலை திருவேங்கடவனின் ஆலயத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய பாராயணம் விஜய நகர அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பின் பகுதியிலிருந்து நின்று

---

1. Tirumala Tirupati Devasthanam Inscriptions, Vol. II, Inscriptions of Saluva Narasimha's time, page 193.

2. தி.தி.தேவஸ்தானம் கல்வெட்டு தொகுதி, 5-51, 5-53, 5-71, 5-92.

3. தி.தி.தேவஸ்தானம் கல்வெட்டு தொகுதி, 5-53,

4. தி.தி.தேவஸ்தானம் கல்வெட்டு தொகுதி, 5-10, பக்கம் - 30.

போயிற்று. கி.பி. 2002ல் நடந்த பிரம்மோத்ஸவத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய பாராயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது முதல் பெருமாளின் பிரம்மோத்ஸவத்தில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

கி.பி. 1491ஆம் ஆண்டிற்குமுன் தேவஸ்தான கல்வெட்டுகளில் திருவேங்கட மாஹாத்மியத்தைத் பற்றிய தகவல் காணப்படாவிட்டாலும் பெருமாள் சன்னிதியில் புராணங்களைப் பாராயணம் செய்யும் "புராணபட்டர்" என்ற பணியாளர்கள் இருந்தார்கள் என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. 2–18 (கி.பி. 18–1–1464), 5–100 (கி.பி. 14–11–1547) கல்வெட்டு புராண பட்டர் (புராணம் படிப்பவர்) கைங்கர்யங்கள் குறித்தும், அவர்களின் சம்பளம் குறித்தும் தெரியப்படுத்துகிறது. இந்த புராணபட்டர் கைசிக புராணம், இராமாயணம், பாகவதம் முதலியவற்றோடு திருவேங்கடவனின் மகிமைகளைப் பற்றி வர்ணித்த அந்தந்த புராண பாகங்களைக் கூட பாராயணம் செய்தார்கள் என்று கருதலாம்.

ஸ்ரீநிவாஸ மங்காபுரத்தில் உள்ள ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தேவாலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து தாள்ளபாக்க சின்ன திருமலாசார்யலு (அன்னமய்யாவின் பேரன், பெத திருமலாசாரியரின் குமாரன்) செய்த கி.பி. 23–3–1540ஆம் ஆண்டு தெலுங்கு லிபி கல்வெட்டில்[1] "ஸ்காந்த புராணோக்தமாக ஸ்ரீ வேங்கடேச மாஹாத்மிய"த்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீவேங்கடேச மாஹாத்மியத்தைப் பற்றிய கதைகள் பல புராணங்களில் இருப்பதை நிரூபிக்கும் இலக்கியம் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.

கி.பி. 1491ல் இருந்து திருமலை ஆலயத்தில் பாராயண நூலாகப் போற்றப்பட்ட ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய நூல் ஓலைச்சுவடி வடிவில் கி.பி. 1884ஆம் ஆண்டு வரை உலகம் முழுவதும் புழக்கத்தில் இருந்தது. இந்த சமஸ்க்ருத நூலுக்கு கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தெலுங்கில் உரைகள் வெளியிடப்பட்டன. மொழி பெயர்த்தவர்களில் தெனாலி இராம கிருஷ்ணரின் மாப்பிள்ளை, பல காவியங்களை எழுதிய லிங்கம் குண்ட இராமகவி (கி.பி. 1520–1580) முதலாவதாக உள்ளார். இராமகவி எழுதிய ஸ்ரீவேங்கடமஹாத்மியம் கிடைக்கவில்லை.

விஜய நகர ராஜ வம்சத்தைச் சேர்ந்த பூசபாட்டி கொண்டராஜு (கி.பி.17ஆம் நூற்றாண்டின் முதல் பாகம்) எழுதிய ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் இரண்டாவது ஆகும். இதுவும் கிடைக்கவில்லை. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மிய ரசனையில் தாள்ளபாக்க அன்னமய்யா செய்த முயற்சியை, தெலுங்கில் ஸ்ரேஷ்டலூரி வேங்கடாசாரியர் செய்தார். இவர் தெனாலி இராமகிருஷ்ணருக்கும், சாரங்கு தம்மையா காலத்தைச் சேர்ந்தவர். வேங்கடாசாரியர் திருவேங்கடமுடையானின் பக்தர். அதனால் அந்த பெருமாளே பக்தனின் கனவில் தோன்றி பல புராணங்களில் சொல்லப்பட்ட சம்பந்தங்களால் ஆழமாக வேரூன்றி இருக்கும். அவரது கதையின் நுணுக்கங்களை ரத்தினத்திற்குப் பட்டை தீட்டுவது போல் காவியத்தை எழுதும்படிச் சொன்னார்."[2]

1. தி.தி.தேவஸ்தானம் கல்வெட்டு தொகுதி – 4, எண் – 144

2. ஸ்ரீநிவாஸ விலாச சேவதி – அ. 1 – 121 – 130 வரிசை.

ஸ்டேஷ்டலூரி வேங்கடாரியர் (கி.பி. 16ஆம் நூற்றாண்டு) ஸ்ரீ நிவாஸரின் புராண கதைகளில் உள்ள முன்பின் வேற்றுமைகளை நீக்கி சரிசெய்து "ஸ்ரீநிவாச விலாஸ சேவதி" என்ற காவியத்தை எழுதினார். வேங்கடாரியர், வராஹ, வாமன, பிரம்மாண்ட, பத்ம, கருட, ஸ்காந்த, மார்கண்டேய புராணங்களில் உள்ள கதைகளை ஆராய்ந்து புகழ் பெற்ற கதைகளாகத் தொகுத்து சர்வ சமாதான தொடரை ஒளிரச் செய்யும் விதமாக ஸ்ரீநிவாஸவிலாச சேவதி என்ற நூலை எழுதினார். [1]

## திருமலையே அஞ்ஜனாத்ரி என்று சொல்வதற்குறிய கல்வெட்டு ஆதாரங்கள்

ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒரு சிலா சாஸனம் ஸ்ரீரங்கநாதருடைய ஆலயம் அன்னியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. அந்த சமயத்தில் ஸ்ரீ ரங்கநாதருடைய உத்ஸவ விக்ரகத்தை கோயிலுக்கு வெளியே எடுத்துச் சென்றார்கள் என்றும், விஜயநகரத்தின் பிரதிநிதியான கோபனார்யன் என்பவர் இந்த உத்ஸவ விக்ரகத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்வித்தார் என்றும் சொல்கிறது.

*ஆநீயாநீலச்ருங்கத்யுதிரசிதஜகத்ரஞ்ஜநாதஞ்ஜநாத்ரே:*
*சேஞ்ச்யாமாராத்யகஞ்சித்ஸமயமதநிஹத்யோதனுஸ்கான் துலுஸ்கான்*
*லக்ஷ்மீக்ஷ்மாப்யமுபாப்யாம் ஸஹ நிஜநிலயேத்ஸாபயத்ரங்கநாதம்*
*ஸம்யக்வர்யாம் ஸபர்யாம் குருத நிஜயஸோதர்ப்பனே கோபனார்ய:* [2]

இக்கல்வெட்டு பந்து ப்ரியா சகாப்தம் என்றால் கடபயாதி எண்ணிக்கையின்படி கி.பி. 1371ஆம் வருடத்தை சேர்ந்தது. இக்கல்வெட்டு திருமலையே அஞ்ஜனாத்ரி என்று தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டில் உள்ள சுலோகம் வேதாந்த தேசிகர் எழுதியது என்று "கோயிலொழுகு" தெரிவிக்கின்றது. அப்படியே திருமலை கோயிலில் உள்ள மற்றுமொரு கல்வெட்டு திருவேங்கடமுடையானின் பெயரைக் குறிப்பிட்டு "அஞ்ஜனவெற்பன் நாயனார்" [3] என்று சொல்கிறது. வெற்பு என்றால் மலை என்று பொருள். அஞ்ஜனவெற்பு என்றால் அஞ்ஜனாத்ரி என்று பொருள்.

அஞ்ஜனாத்ரிநாதன் என்ற பெயரை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அஞ்ஜன வெற்பன் நாயனார் என்ற சொல் வழக்கமானது. இந்த சான்றின்படி அஞ்ஜனாத்ரி திருமலையே என்பதும், அஞ்ஜனாத்ரிநாதன் திருவேங்கடமுடையானே என்பதும் தெரியவருகிறது. எட்டூர் லக்ஷ்மீகுமார தாதாச்சாரியர் என்ற மஹான் கி.பி 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் எழுதிய "ஹனுமத்விம்சதி" என்ற ஸ்தோத்திரம் காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜர் கோயிலிலும், தாத்தாசாரியர்களால் கட்டப்பட்ட ஆஞ்ஜனேயக் கோயிலிலும் கல்வெட்டில் பொறித்துள்ளார்கள். அந்த ஸ்தோத்திரத்தில் உள்ள ஒரு சுலோகம்.

*ஸ்ரீசைல பூர்ணமவதிஸ்ம கடாம்புஹ்ருஷ்டோ*
*ய: பூர்வமஞ்ஜனகிரௌ ஸ புமான்னிதானீம்*

---

1. ஸ்ரீநிவாஸ விலாச சேவதி – அ. 1 – 137 – 144 வரிசை.

2. Epigrapia In ica, Vol. VI - Page 323

3. T.T.D. Inscriptions, Vol. I - early incriptions Page 205`

*ஸ்தித்வா ஸமீரபுவிபாதி ரமாகுமார*
*தாதாம்புராஸிமுதிதோ ஜநமைந்திரேயம்*

என்று அஞ்ஜனகிரியென்றால் வேங்கடமலையென்று தெரிவிக்கின்றது.



**ஹனுமத்விம்சதி கல்வெட்டு**

அப்படியே திருப்பதியில் கிடைக்கப்பெற்ற ஏராளமான ஆதாரங்கள் திருப்பதியில் ஆஞ்ஜனேயருக்கு உள்ள விசேஷமான ஆராதனைகளை குறித்து விவரிக்கின்றது. இப்படி இலக்கியம் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் எல்லாம் ஒருமித்த குரலில் அஞ்ஜனாத்ரியே வேங்கடமலையென்று சொல்லி இருப்பதால் ஆஞ்ஜனேயர் பிறந்த இடம் திருமலையே என்பது ஐயத்திற்கு இடமின்றி தெரிய வருகிறது.

******

ஹனுமத் வாகனத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி,
திருப்பதி



கீழ் இருந்து மக்களும், ஆகாயத்திலிருந்து தேவதைகளும் சூரியனை நோக்கித் தாவி வரும் ஹனுமனை அதிசயத்துடன் காணுதல்



# அத்தியாயம் - 11

# 11. வைணவ இலக்கியங்களில் - திருமலை - அஞ்ஜனாத்ரி

தெலுங்கு மூலம்
பேராசிரியர் சக்ரவர்த்தி அரங்கநாதன்

தமிழாக்கம்
திரு. ல. வெங்கடேசன்,
முனைவர். ஆ. அரங்கராஜன்

*ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸானுகம்பயா*
*இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா ஸர்க்கராயிதம்*

## வைணவ இலக்கியம் - ஆழ்வார்களின் அருளிச்செயல்

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் பூமியில் உள்ள மனிதர்களைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய பரிவாரங்களான அனந்த – கருட – விஷ்வக்சேனாதிகளையும் மற்றும் ஆயுத – ஆபரணாதிகளையும் பூலோகத்தில் அவதரிக்கச் செய்தார். இவ்விதமாக அவதரித்தவர்களே ஆழ்வார்களாகப் பிரசித்திப் பெற்றார்கள்.

*"கலௌ க$_2$லு ப$_4$விஷ்யந்தி நாராயணபராயணா:"* [1]

முதலான பாகவத சுலோகங்கள் இதற்குச் சான்றுகளாக உள்ளன. ஆழ்வார்கள் என்றால் பகவத் பக்தியில் ஆழ்ந்தவர்கள். அவர்கள் பன்னிருவர். அவர்களின் பெயர்களை தெரிவிக்கும் ஸங்க்ரஹ சுலோகம் ஸ்ரீ பராசரபட்டரால் எழுதப்பட்டுள்ளது.

*'பூ$_4$தம் ஸரஸ்ச மஹதா$_3$ஹ்வயப$_4$ட்டநாத$_2$*
*ஸ்ரீப$_4$க்திஸார குலசேக$_2$ரயோகி$_3$வாஹாந்*
*ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்ரமிஸ்ராந்*
*ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோSஸ்மி நித்யம்* [2]

பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசை ஆழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர், ஸ்ரீராமமிச்ரர் மற்றும் நம்மாழ்வாரையும் எப்பொழுதும் சேவிக்கிறேன்.

இந்த பன்னிரு ஆழ்வார்களும் தேவாதிதேவனான ஸ்ரீமந்நாராயணனிடம் மிகுந்த பக்தி கொண்டவர்களாய் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூப – ரூப – குணங்களை புகழ்ந்து பாடி அகஸ்த்ய முனிவரின் பாஷையான அழகிய தமிழ் மொழியில் 4000 பாசுரங்களை அருளிச்செய்தார்கள். இந்நூலுக்கு நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்று பெயர். வேதத்திற்கு நிகரான இந்த – திவ்யப்பிரபந்தம் 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களில் தினந்தோறும் பாராயணம் செய்யப்படுகிறது. இந்த 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களில் அர்ச்சா மூர்த்தியாய் எழுந்தருளி இருந்து பக்தர்களுக்கு அருள்புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான்களின் திவ்ய கல்யாண குணங்களையும், திருமேனியழகையும் தெளிவாகத் தெரிவிப்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

1. பாகவதம் 11-5-39  2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், தனியன் – 5

ஸ்ரீ விஷ்ணு தத்துவத்தை முதன்மையாக வைத்து ஆழ்வார்களுடைய திருவாக்கிலிருந்து வெளிவந்த இந்த திவ்யப்பிரபந்தங்களே ஸ்ரீ வைஷ்ணவ இலக்கியங்களுக்கு மூலமாகவும், முதன்மையானதாகவும் பிரசித்திப் பெற்று இருக்கின்றன. அதனால் வைணவ இலக்கியங்களுக்கு முதன்மையானவர்களாக மிகவும் கருதப்படுபவர்களே இந்த பன்னிரு ஆழ்வார்கள்.

ஸ்ரீரங்கம் முதல் பரமபதம் ஈறாக உள்ள திவ்யதேசங்கள் 108. இவைகளில் முக்கியமானவை 3 திவ்யதேசங்கள். 1.கோயில் – ஸ்ரீரங்கம், 2.திருமலை, 3. பெரிய கோயில் – காஞ்சிபுரம் இம்மூன்று திவ்யதேசங்களை சேவித்தால் எல்லா திவ்யதேசங்களையும் சேவித்த பலன் கிடைக்கும் என்பது பெரியோர்களின் கருத்தாகும். இவைகளில் நடுநாயகமாய்த் திகழ்வது திருமலை திவ்ய க்ஷேத்ரமாகும்.

## ஆழ்வார்களின் பாசுரங்களில் திருமலை

பகவத் பக்தியில் ஆழ்ந்தவர்களான பன்னிரண்டு ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் தவிர பத்து ஆழ்வார்கள் திருமலை க்ஷேத்ரவைபவத்தைப் பற்றியும், திருவேங்கடமுடையானின் மகிமைப் பற்றியும் அதியற்புதமாகப் பாசுரங்களை இயற்றியுள்ளார்கள். வேத – புராண–ஆகமாதிகளில் தெரிவிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடேச வைபவ விஷயங்கள், மனதைக் கவரக்கூடிய, மனதிற்கு ஆனந்தத்தை அளிக்கக்கூடிய விஷயங்கள் இந்தப் பாசுரங்களில் வருணிக்கப்பட்டுள்ளவைகள் வாயால் சொல்ல இயலாதவைகள்.

## திருமலை பாசுரங்கள்

ஆழ்வார்களினால் திருவேங்கடமுடையான் விஷயமாகவும், திருமலை க்ஷேத்ர வைபவ விஷயமாகவும் சொல்லப்பட்ட பாசுரங்களின் விபரம்.

| ஆழ்வார்கள் | | பாசுரங்கள் |
|---|---|---|
| 1. பொய்கை ஆழ்வார் | – | 10 |
| 2. பூதத்தாழ்வார் | – | 11 |
| 3. பேயாழ்வார் | – | 19 |
| 4. திருமழிசை ஆழ்வார் | – | 16 |
| 5. நம்மாழ்வார் | – | 48 |
| 6. குலசேகராழ்வார் | – | 11 |
| 7. பெரியாழ்வார் | – | 07 |
| 8. கோதாதேவி | – | 16 |
| 9. திருப்பாணாழ்வார் | – | 02 |
| 10. திருமங்கையாழ்வார் | – | 66 |
| மொத்தம் | = | 206 |

வித்வான்களின் மத்தியில் 200 என்றும், 206 என்றும் கருத்து வேறுபாடு உள்ளது. பாசுரங்கள் அனைத்தும் சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பப் பெற்றுள்ளன. இப்பாசுரங்களை

பாராயணம் செய்யும் பொழுதுதான் இவைகளுடைய மகிமைகள் தெரியவருகின்றன. இப்பாசுரங்களில் திருவேங்கடமுடையானைப் புகழ்ந்து ஆழ்வார்கள் பாடியவைகளைப் பார்ப்போம்.

### 1. பொய்கை ஆழ்வார் - முதல் திருவந்தாதி

புருஷோத்தமரான ஸ்ரீராமபிரானும் இந்தத் திருமலையில் வசித்ததாக இவ்வாழ்வார் அருளிச்செய்துள்ளார். ஸ்ரீசீதாதேவியின் பொருட்டு மாயமானான மாரீசனைப் பின்தொடர்ந்து பாணத்தால் அவனைக் கொன்ற ஸ்ரீராமபிரான் நித்யவாஸம் செய்யும் மலையாகையால் எல்லோரும் வந்து திருவேங்கடவனை ஆச்ரயிக்கலாம் என்று இப்பாசுரம் மூலமாகத் தெரிவிக்கிறார்.

*படையாரும் வாட்கண்ணார்.......... மான்மாய எய்தான் வரை* [1]

எந்தவித தத்வஞானமும் இல்லாத பெண்கள் கூட ஸர்வோத்ரகாலமான துவாதசி திதியில் வாடாத மலர்களால் கட்டப்பெற்ற மாலைகளை திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பித்த பிறகு, அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தூபத்தினால் ஆகாயத்தில் ஆங்காங்கே பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் கூட காணப்படவில்லை. அப்படிப்பட்ட பரம போக்கியமானது திருமலை. முன்பு மாரீசன் என்ற மாயாவியை அழிந்து போகும்படி பாணத்தால் அடித்த ஸ்ரீராமபிரான் அபிமானம் மற்றும் சந்தோஷத்துடன் நித்ய வாஸம் செய்கின்ற திவ்யதேசம் இது என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

### 2. பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி

திருவேங்கடவனே பர – வ்யூஹ – விபவ –அந்தர்யாமி – அர்ச்சா ரூபம் உடையவன்.

*மனத்துள்ளான் வேங்கடத்தான்................... மாவாய் பிளந்த மகன்* [2]

மனத்துள்ளான் – அந்தர்யாமி ரூபம், மாகடலான் – வ்யூஹரூபம், நினைப்பறிய நீள் அரங்கத்துள்ளான் – அர்ச்சாரூபம், தேவாதி தேவன் – பரரூபம், மாவாய் பிளந்த மகன் – விபவாவதாரம் என்று சொல்லப்படுகிறது.

திருமலையில் அனேக விதமான வானரங்களின் சஞ்சாரமும் பக்தியும் நிரூபிக்கப்படுகிறது.

*போதறிந்து வானரங்கள் ......... பேராய்ந்து* [3]

ஆழ்வார்கள் தங்களுடைய மனதை உத்தேசித்து உபதேசிக்கிறார்கள். “ஓ மனமே திருமலையில் விலங்கினங்கள் கூட பகவானின் கைங்கர்யத்தில் ஈடுபட்டு உள்ளன. எனவே நீ உதாசீனமாக இல்லாமல் சுவாமி கைங்கர்யத்திற்குத் தயாராகு என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

(ஓ) ஏ மனமே திருமலையில் உள்ள வானரங்கள் கூட பிரும்ம முகூர்த்தத்தை தெரிந்துக் கொண்டு, உடனே மலர்கள் பூத்திருக்கும் அருவிகளுக்குச் சென்று, அப்போது மலர்ந்த பூக்களைப் பறித்துக்கொண்டு வந்து பகவானை வழிபடுகின்றன. நீயும் சென்று ஸ்வாமியை துதி.

1. முதல்திருவந்தாதி – 82 2. இரண்டாம் திருவந்தாதி – 28 3. இரண்டாம் திருவந்தாதி – 72

திருவேங்கடவனின் நாமங்களை கீர்த்தனை செய். நீலமணிபோன்ற வடிவை உடைய வேங்கடவனின் மலர் போன்ற பாதங்களை மலர்களால் ஆராதனை செய் என்று உபதேசிக்கிறார்.

### 3. பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி

திருமலையில் திருவேங்கடவனுக்கு யானைகளும்கூட மிகவும் பக்தியுடன் செய்யும் கைங்கர்யங்களை இந்த பாசுரத்தில் விவரிக்கிறார்.

***புகுமதத்தால் வாய்.......... வணங்கும் களிறு*** [1]

யானைகளுக்கு மதம் பிடிப்பது சாதாரணமானதே. அந்த மத நீரானது தலையிலிருந்து கழுத்து வழியாக வாயில் விழும். அந்த நீரால் யானை வாயை சுத்தம் செய்து கொள்கின்றது. அதாவது ஆசமனம் செய்கின்றன என்று பொருள். அப்படியே மேலிருந்து கீழே விழும் மலை அருவியைப்போல் விழுகின்ற மதநீரால் காலை அலம்பிக்கொண்டு பிறகு மிகவும் மயக்கத்தை கொடுக்கும் தேனால் நிரம்பி உள்ள பூக்களைத் தனது துதிக்கையால் எடுத்து வந்து ஸ்ரீநிவாசனை சேவித்து நமஸ்காரம் செய்கின்றன. இவ்வாறாக பசு–பக்ஷிகள் எல்லாம் திருமலையின் புனிதத் தன்மையினால் பெருமாள் மீது பக்திகொண்டு அந்த ஸ்வாமியை ஆராதித்து பிறவிப்பயனை அடைகின்றன என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

### 4. திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி

வேங்கடாசலம் எல்லோருக்கும் புகலிடமாக விளங்குகிறது.

***நன்மணிவண்ணனூர்.......வேடுமுடைவேங்கடம்*** [2]

யாளிகளையும், பலமுடைய சிங்கங்களையும், பொன்மணிகளையும், முத்துக்களையும், அதிகமாகப் பூத்துள்ள மரங்களையும், பலவித ரத்னங்களையும், நீரோடைகளினால் நிறைந்த காடுகளையும், வானரங்களையும், வேடுவர்களையும் உடைய வேங்கடாசலமே இந்த்ர நீலரூபமான பெருமாள் நித்யவாஸம் செய்யுமிடம் என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

### 5. நம்மாழ்வார் - 4 பிரபந்தங்களும் 4 வேதங்களின் அங்கங்கள்

திருவாய்மொழி என்னும் திவ்யப்பிரபந்தத்தில் 1. ஒழிவில் காலம், 2. உலகமுண்ட பெருவாயா என்னும் 20 பாசுரங்கள் திருவேங்கடவனின் வைபவத்தைத் தெரியப்படுத்துகின்றன.

***வேங்கடங்கள்....... அது சுமந்தார் கட்கே*** [3]

பெருமாளுக்கு எந்தவித தடங்கலும் இல்லாமல் கைங்கர்யம் செய்வதற்கு உபாயம் எது என்றால் வேங்கடத்தில் நின்று கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸனுக்கு நமஸ்காரம் என்று சொல்வதே. இது பரம மகிமையான உபாயம். இதை ஒவ்வொருவரும் செய்யலாம். இது கடமையும் கூட. "நம:" என்று சொன்னதாலேயே இதை ஸர்வேஸ்வரன் மிகவும் பெரிதாக எண்ணி நம்முடைய முன்வினைகளையும், எதிர்வரும் வினைகளையும் முழுவதுமாகப் போக்கடிப்பார். இதுவே உண்மை என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

---

1. மூன்றாம் திருவந்தாதி – 70
2. நான்முகன் திருவந்தாதி – 47
3. திருவாழ்மொழி– 3.3.6

*அகலகில்லேன்.............அமர்ந்து புகுந்தேனே* [1]

மார்பில் அமர்ந்த மஹாலக்ஷ்மியுடன் கூடியவனான ஸ்ரீநிவாஸனிடம் முழுமையான சரணாகதியை தெரிவிக்கும் பாசுரம். இப்படியே திருவிருத்தம், பெரிய திருவந்தாதி பிரபந்தங்களில் திருவேங்கடமுடையானின் மகிமைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## 6. குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி

பெருமாள் திருமொழி என்னும் திவ்யப்பிரபந்தத்தில் 11 பாசுரங்களால் திருவேங்கடமுடையானை பாடியுள்ளார். இப்பொழுது கூட நாம் எல்லோரும் குலசேகரப்படி வரையிலும் சென்று தரிசனம் செய்து வருகிறோமே! கர்ப்பகிரஹம் முன்பு உள்ள படிக்கு குலசேகரப்படி என்று பெயர்வரக் காரணம் இந்த ஆழ்வாரின் பிரார்த்தனையே ஆகும். இச்செய்தி எந்த புராணத்திலும் காணப்படாது.

*செடியாய வல்வினைகள்.............பவளவாய் காண்பேனே* [2]

அநாதிகாலங்களில் செய்த பாபங்களையும், அதனால் ஏற்பட்ட சம்பந்தங்களையும் போக்கடித்து தீர்ப்பவனே! திருமலையில் வசிப்பவனே ஸ்வாமி! உன்னுடைய பக்தர்கள், தேவர்கள், தேவகன்னிகைகள் அனைவரும் சேர்ந்து சஞ்சரிக்கின்ற உன்னுடைய திவ்ய சன்னிதிவாசலில் அனைவருடைய காலினாலும் மிதிப்படுகின்ற படியாய் இருந்து பவழம்போன்ற பரமபோக்கியமாக இருக்கின்ற உன்னுடைய உதடுகளை எப்பொழுதும் சேவிக்கின்ற பாக்கியத்தை அடைபவனாக இருக்கவேண்டும் என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

## 7. பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி

*சென்னியோங்கு .......... என் திருக்குறிப்பே* [3]

ஆகாசம் வரையிலும் உயரமான சிகரங்களைஉடைய குளிர்ச்சியான திருமலையில் எழுந்தருளி இருக்கின்ற பெருமாளின் அனுக்ரஹம் பரிபூரணமாக இருக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

## 8. ஆண்டாள் - நாச்சியார் திருமொழி

*தையொரு திங்களும்............ வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே* [4]

ஓ மன்மதா! நான் திருவேங்கடமுடையானுக்கு கைங்கர்யம் பண்ணுவதற்கு உதவி செய்வாயாக.

## 9. திருப்பாணாழ்வார்

இரு பாசுரங்களால் திருவேங்கடமுடையானைப் பாடி உள்ளார். முதல் பாசுரத்தில் *விரையார் பொழில் வேங்கடவன்* என்றும், 3வது பாசுரத்தில் *மந்திபாய் வடவேங்கட மாமலை* [5] என்றும் பாசுரமிடுகிறார். இந்த திருமலையில் ஆயிரக்கணக்கான வானரங்கள் எப்போதும் விளையாடிக்கொண்டு இருக்கின்றன என்பது இப்பாசுரத்தின் பொருள்.

1. திருவாழ்மொழி– 6.10.10
2. பெருமாள் திருமொழி 4.9
3. பெரியாழ்வார் திருமொழி 5.4.1
4. நாச்சியார் திருமொழி 1.1
5. அமலனாதிபிரான்–1

**10-திருமங்கை ஆழ்வார் - 6 திவ்யப் பிரபந்தங்கள் :**

*பேசுமின் திருநாமம்....... திருவேங்கடம் அடைநெஞ்சமே*[1] ஏ மனமே அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டு அனைத்துலகுக்கும் திலகம்போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் திருமலையைப் புகலிடமாக அடைவாய் – இவ்வாறாக ஆழ்வார்களுடைய பிரபந்தங்களில் உள்ள திருமலை க்ஷேத்ர வைபவங்கள் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஆசார்யர்களின் ஸ்தோத்ர பிரபந்தங்களில் திருமலை

### திருவரங்கத்தமுதனார் - இராமாநுஜ நூற்றந்தாதி

1. நின்றவன் கீர்த்தியும் (76), 2. இருப்பிடம் வைகுந்தம் (106)

ஸ்ரீ வேங்கட நாதர் – ஸ்ரீ வேதாந்த தேசிகர் அதிகார சங்க்ரஹம் *"கண்ணனடியினை எமக்கு"*- பாசுரம் 43. இவ்வாறாக ஆழ்வார் ஆசார்யர்கள் திவ்யப்பிரபந்தங்களில் திருமலை க்ஷேத்திரத்தின் புகழையும், உயர்வையும், அழகையும், பறவை மற்றும் விலங்கினங்களுக்கு விரும்பிய இடமாகவும், திருவேங்கடவனின் அபார கருணை முதலான விஷயங்கள் நமக்குத் தெரிய வருகின்றது. பகவானுடைய நேரடிக் கட்டளையால் பகவானுடைய அம்சமாக அவதரித்த ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் வேங்கடாசலத்தின் பெருமைகளை கண்களாலே காணலாம்படி வர்ணனை செய்கின்றன. இவை அனைத்தும் அவனுடைய மகிமையும், லீலையும் ஆகும்.

| வ.எ | பிரபந்தத்தின் பெயர் | அருளிச் செய்தவர் | பாசுரம் எண் |
|---|---|---|---|
| 1. | பெருமாள் திருமொழி | குலசேகர ஆழ்வார் | தனமருவு–10–6 |
| 2. | ” | ” | தில்லைநகர்–10–11 |
| 3. | பெரியதிருமொழி | திருமங்கை ஆழ்வார் | முன்னோர்–2–2–3 |
| 4. | ” | ” | வாதமாமகன்–5–8–2 |
| 5. | ” | ” | ஓதமாக்கடலை–10–2–6 |
| 6. | ” | ” | எம்பிரானே–10–3–2 |
| 7. | ” | ” | மாத்தமாவதி–10–3–7 |
| 8. | திருக்குறுந்தாண்டகம் | ” | முன்பொலாவி – 15 |
| 9. | பெரியாழ்வார் திருமொழி | பெரியாழ்வார் | படங்கள் –3–5–7 |
| 10. | ” | ” | திக்குநிறை–3–10–9 |
| 11. | ” | ” | வாராரும்–3–10–10 |
| 12. | ” | ” | வெள்ளை–4–1–7 |

1. பெரிய திருமொழி – 1 – 8 – 9

நமக்கு மொத்தம் 12 பாசுரங்களில் மாருதி என்றும், ஹனுமன் என்றும், அஞ்ஜனை புத்திரன் என்றும் குறிப்பிட்டுள்ளது தெரிகிறது. சில ஆய்வாளர்கள் ஹனுமன் சீதாதேவியுடன் செய்த உரையாடலான 11 பாசுரங்கள் கூட மாருதிக்கே சேர்ந்தது என்றும், அவ்வாறே இலங்கையில் என்ன நடந்தது என்று இராமபிரானிடம் விண்ணப்பம் செய்த பாசுரங்கள் கூட ஹனுமனுக்கே சம்பந்தம் உடையது என்றும் கணக்கிட்டு சுமார் 34 பாசுரங்களாக நிர்ணயம் செய்துள்ளார்கள்.

## ஆசார்யர்களின் ஸ்தோத்திரங்களில் வேங்கடாசலம் - அஞ்ஜனாத்ரி

பகவத் இராமாநுஜர் – 9 புத்தகங்கள் – ஸ்ரீ பாஷ்யம் – மங்கள சுலோகம் ***அகிலபுவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே, விநத விவித பூதவ்ராத ரக்ஷைக தீக்ஷே, ச்ருதி சிரசி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாசே பவதுமம பரஸ்மின் சேமுஷீ பக்தி ரூபா***

1. திருமலை க்ஷேத்ர வைபவத்திற்கு முதன்மை காரணமான ஸ்ரீ பாஷ்யகாரர், வேதார்த்த சங்க்ரஹம் என்னும் புத்தகத்தை திருமலையில் உள்ள பேடி ஆஞ்ஜநேயர் சன்னிதியில் எழுதியதாகப் பெரியோரின் கூற்று.

2. புகழ்பெற்ற உரைஆசிரியரான ஸ்ரீ ரங்க ராமானுஜ முனிகள் அனேக உபநிஷதங்களுக்கு பாஷ்யம் எழுதினார். அதில் கடோபநிஷத்திற்கு பாஷ்யம் எழுதும் போது மங்கள சுலோகத்தில் திருமலை ஸ்ரீநிவாஸரை அஞ்ஜனாத்ரி நாதனாகப் போற்றி எழுதியுள்ளார்.

***அதசீகுச்ச ஸச்சாய மம்சிதோர: ஸ்தலம் ஸ்ரீயா***
***அஞ்ஜனாசல ச்ருங்காரமஞ்சலிர்மம காஹதாம்*** [1]

அகத்திப் பூவைப்போன்று பொன்னிறமாக நன்கு பிராகாசிக்கும் ஸ்ரீ லக்ஷ்மிதேவியுடன் கூடி அலங்கரிக்கப்பட்ட திருமார்புடன் விளங்குகின்றவனும், "அஞ்ஜனாத்ரி" என்ற மலைக்கு அலங்காரமாக ஒளிவீசுகின்றவனும், தேவர்களின் தேவனான (திருமலையப்பன்) என்னுடைய அஞ்சலியை (நமஸ்காரத்தை) ஏற்றுக்கொள்ள வேணும் என்பது இச்செய்யுளின் பொருளாகும்.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான ஸ்ரீநிவாசனின் திருமணியின் அம்சமாக அவதரித்த மஹான் ஸ்ரீ வேதாந்த தேசிகர்( கி.பி. 1268–1369) கவிதார்க்கிக ஸிம்ஹம் 120 நூல்களுக்கு மேல் இயற்றியுள்ளார். அவருடைய கண்டகாவ்யமான "ஹம்ஸ ஸந்தேசத்தில்" திருமலையை "அஞ்ஜநாத்ரி" யாக வர்ணித்துள்ளார்.

***அக்ரே பாவீ ஸபதி நயநே ரஞ்ஜயன் அஞ்ஜனாத்ரி:*** [2]

ஏ ஹம்ஸமே! "விஷ்ணுவின் வாசஸ்தலமாக ஆனதால், பூமியைத் தாங்கி ரத்தினங்களை அணிந்து உள்ளதாலும் இந்த மலை சேஷனா?" என்று ஜனங்கள் சந்தேகப்படும்படியான இந்த மலைமேல் நகர்ந்து கொண்டு இருக்கும் மேகங்கள் பாம்பினால் விடப்பட்ட சட்டையை(தோல்)ப் போன்று இருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்ரீநிவாசனுடைய அஞ்ஜனாத்ரி மலை உனது கண்ணுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும்.

1. கடோபநிஷத் – இராமானுஜ பாஷ்யம் – மங்கள சுலோகம்.

2. ஹம்ஸஸந்தேஸம் – 21

அபிநயதேஸிகராகப் பிரசித்திப் பெற்ற உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமிகள் இந்த வாக்கியத்திற்கு பொருள் கூறும் பொழுது "ஏ அன்னமே! ஹனுமனின் தாயார் அஞ்ஜனாதேவி இம்மலையில் தவம் செய்ததால் இம்மலைக்கு அஞ்ஜனாத்ரி என்ற பெயர் வந்தது. ஹனுமன் – உனக்கு அண்ணனைப் போன்றவர். அவருடை தாயார் அஞ்ஜனாதேவி உனக்கும் அன்னையே, அதனால் தாய் வீடான அஞ்ஜனாத்ரிக்கு நீ செல்வது உனக்கு ஆனந்தத்தை கொடுக்கும் என்று எழுதியுள்ளார்.

## ஸங்கல்பஸூர்யோதயம் - நாடகம்

ஸ்ரீ வேதாந்ததேசிகர் ஸங்கல்ப ஸூர்யோதயம் என்ற நாடகத்தில் –

*அத்யத்வே ஹனுமத்ஸமேன குருணா ப்ரக்யாபிதார்த: புமான்* [1] என்று ஹனுமனை மிக உயர்ந்த ஆசார்யனாகவே கொண்டாடினார்.

## தயாசதகம் ஸ்தோத்ரம்

ஸ்ரீ வேதாந்த தேசிகரின் 28 ஸ்தோத்ரங்களில் கலியுக கண்கண்ட தெய்வமான வேங்கடவனின் தயாகுணங்களை ஒரு தயாதேவியாக நிரூபித்து 108 சுலோகங்களில் பத்து விதமான சந்தஸ்ஸுகளுடன் ஒரு அற்புதமான ஸ்தோத்ரமாக தயாசதகம் விளங்குகிறது. அதுவே தயாசதகம். தயாகுணம்(கருணை) இல்லாவிட்டால் மற்ற குணங்கள் எத்தனை இருந்தாலும் பகவானிடம் சோபிக்காது. தயா நாயகன் ஆனதாலேயே தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் வேங்கடவனை தரிசனம் செய்கிறார்கள். சரணாகதி தத்துவத்தை ப்ரதானமாகவுடைய இந்த ஸ்தோத்திரத்தில் அஞ்ஜானாத்ரி குறித்து தெரியப்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

*அகின்சனநிதி₄ம் ஸூதிம் அபவர்க₃த்ரிவர்க₃யோ:*
*அஞ்னாத்₃ரீஸ்வரத₃யாம் அபி₄ஷ்டௌமி நிரஞ்ஜனாம்* [2]

அகாரத்தின் பொருளான பகவான் அஞ்ஜனாத்ரியில் இருந்துகொண்டு எல்லோரையும் அனுக்ரகித்துக்கொண்டு இருக்கிறான். ஏதும் அற்றவர்களுக்கு பொருளாக இருந்து, மோக்ஷத்திற்கு, தர்ம, அர்த்த, காமங்களுக்கு உற்பத்திகாரணமாகவும், தோஷம் இல்லாமல் இருக்கின்ற, அஞ்ஜனாத்ரி என்ற மலைக்கு அதிபதியான ஸ்ரீ வேங்கடநாதனின் தயையை ஸ்தோத்ரம் செய்கிறேன். அப்படியே இன்னுமொரு இடத்தில் –

*அஞ்ஜனகி₃ரி நாத₂ரஞ்ஜனீ ப₄வதி₂* [3]

என்று ஸ்தோத்ரம் செய்தார்.

"ஓ தயாதேவி அஞ்ஜனாத்ரி மலைக்கு அதிபதியான ஸ்ரீநிவாஸனின் குண சேஷ்டிதங்களால் மகிழ்விக்கும் நீ பலவிதமான பாபங்களால் பீடிக்கப்பட்ட என்னை காப்பாற்றும்படி பிரார்த்திக்கிறேன். அவரே இன்னமொரு இடத்தில் *மந்ருதஸஞ்ஜீவனமஞ்ஜனா சலேந்தோ:*[4] என்று ஸ்துதி செய்கிறார். இது ஒரு அற்புதமான கற்பனை, "ஓ தயாதேவி அஞ்ஜனாத்ரி என்ற திருமலையில் சந்திரனாகப் பிரகாசித்துக் கொண்டு இருக்கும் மரணித்தவர்களை உயிர்ப்பிக்கும் ஸ்ரீநிவாஸனுடைய திவ்யமங்கள விக்ரகத்தை உன்னுடைய அம்ருதாம்ஸமாகத் தெரிந்து கொண்டு இருக்கிறேன்.

1. சங்கல்ப ஸூர்யோதயம் – 1 –71
2. தயாசதகம் – 10
3. தயாசதகம் – 12
4. தயாசதகம் – 22

*நித்யாபூர்வம் நிதி₄மிவ தயே நிர்விஸந்த்யஞ்ஜனாத்ரௌ* [1]

அம்மா தயாதேவி எல்லாகாலத்திலேயும் அபூர்வமாக இருப்பது போல அந்த பரமாத்மாவினுடைய திவ்ய ஆத்ம ஸ்வரூபத்தை உன்னுடைய அனுமதியினால் இந்த பூமண்டலத்திலே அதிர்ஷ்டசாலிகளின் நிதியைப்போலே அஞ்ஜனாத்ரி எனப்படும் திருமலையில் ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

*அஸேஷமவிஸேஷத: த்ரிஜகத் அஞ்னாத்ரீஸிது:* [2]

த்ரிவிக்ரம அவதாரத்தில் தயாதேவி செய்த பேருதவியை வர்ணித்து, "அம்மா! தயாதேவி! அஞ்ஜனாத்ரி மலைக்கு அதிபதியான திருவேங்கடவனுடைய திருவடிகளால் அசையும் அசையா ரூபமான மூன்று உலகங்களையும் மிகுதி இல்லாமல் உயர்வு தாழ்வு இல்லாமல் பதித்தாற்போல் செய்தாய் அல்லவா. இவ்வாறு ஸ்ரீ வேதாந்ததேசிகரின் தயாசதக ஸ்தோத்ரத்தில் ஐந்து முறை அஞ்ஜனாத்ரியைப் பற்றிய குறிப்புகள் தெளிவாகக் காணப்படுவதால் திருமலைக்ஷேத்ரமே அஞ்ஜனாத்ரி என்று புகழப்படுவது என நடுநிலையாளர்கள் அறிந்துகொள்ளவும்.

## விச்வகுணாதர்ஸசம்பூ - வேங்கடாத்வரி வேங்கடகிரிவர்ணனம்

புகழ்பெற்ற வித்வானும் கவியுமான வேங்கடாத்வரி ஸ்வாமியின் காவ்யமான விச்வகுணாதர்ஸசம்பூ என்ற காவியத்தில் வேங்கடகிரிவர்ணனம் ப்ரகரணத்தில் 16 சுலோகங்கள் மூலம் திருமலை க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ராதிபதியையும் மிகவும் மனதை கவரக்கூடிய விதத்தில் அழகாக வர்ணித்துள்ளார். அதில்,

*கிமப்யுபாதா₃ய தி₃ஸன்னபீ₄ஷ்டம் க்ருத்ஸ்னம் ஜனேப்ய: பதிரஞ்ஜனாத்₃ரே:* [3]

அஞ்ஜனாத்ரி என்ற மலைக்கு பிரபுவான ஸ்ரீநிவாஸன் பக்தர்களிடமிருந்து சிறிது பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு பெருமளவு வேண்டியவற்றை அளிப்பதை போல் ஸ்ரீ கிருஷ்ணர் குசேலரிடத்தில் கொஞ்சமாகப் பெற்றுக்கொண்டு கோடீஸ்வரராக செய்ததைப்போல கலியுக கண்கண்ட தெய்வம் பக்தர்களை அருள்பாலிக்கிறார் என்பது இச்செய்யுளின் பொருளாகும்.

இப்படியே ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் ஸ்வாமிகளின் அஞ்ஜனகிரி ஸ்தோத்ரம், ஏடூர் லக்ஷ்மிகுமார தாதாச்சாரியார் ஸ்வாமிகளின் ஹனுமத் விம்ஸதி முதலான ஸ்தோத்ரங்களில் அஞ்ஜனகிரி சாக்ஷாத் புராணபிரசித்தமான சேஷபர்வதங்களில் தோன்றி உள்ளது என்று வைணவ இலக்கியங்களில் ஆசார்ய பெருமக்கள் தெளிவாகவும், உண்மையாகவும், பக்தியுடனும் தெரிவித்துள்ளார்கள். ஆதலால் திருமலை க்ஷேத்ரம் அஞ்ஜனாத்ரி என்று நிரூபிக்கபட்டது.

*ப்ரஸமிதகலிதோ₃ஷம் ப்ராஜ்யபோ₄கா₃னுப₃ந்தாம்₄*
*ஸமுதி₃தகு₃ணஜாதாம் ஸம்யகா₃சாரயுக்தாம்*
*ச்ரிதஜனப₃ஹுமாந்யாம் ஸ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ*
*ச்ரியமுபசினுநித்யம் ஸ்ரீநிவாஸ த்வமேவ*

******

1. தயாசதகம் – 44
2. தயாசதகம் – 85
3. விஷ்வகுணாதர்ம சம்பூ – 199

ஹனுமத் வாகனத்தில் ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி,
திருப்பதி



ஸ்ரீராமரின் அரசவையில் அகத்தியமாமுனி



# அத்தியாயம் - 12

# 12. ஏழுமலைகளில் அஞ்ஜனாத்ரியின் முக்கியத்துவம்

தெலுங்கு மூலம்
அர்சகம் ராமகிருஷ்ண தீக்ஷிதுலு

தமிழாக்கம்
திரு. ல. வெங்கடேசன்,
முனைவர். ஆ. அரங்கராஜன்

*ஸ்ரீவேங்கடாசலாதீஸம் ஸ்ரீயாத்யாஸிதவக்ஷஸம்*
*ஸ்ரீதசேதநமந்தாரம் ஸ்ரீநிவாஸமஹம் பஜே*

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகன், வேதவேத்யன், ஸ்ரீநிவாஸ பகவான் சுயம்புவாக அவதரித்த புனிதமான புண்ய தலம் திருமலை திவ்ய க்ஷேத்ரம். ஆதிசேஷனுடைய ப்ரதி வடிவான சேஷாசல மலைக்காடுகளின் உச்சியில் புனிதமான ஏழு மலைகள் அழகுடன் திகழ்கின்றன. திருவேங்கடவனை பக்தர்கள் மிகுந்த பக்தியுடன் "ஏழுமலையானே! வேங்கடரமணா! கோவிந்தா! கோவிந்தா!" என்று அழைத்துக் கொண்டு இருப்பார்கள். சாதாரண மக்கள் ஏழுமலையானே! என்று சொன்னால், வித்வான்கள் மற்றும் அர்ச்சகர்கள் "சப்தாத்ரீஸன்" என்று கூறுவார்கள். திருமலையில் பெருமாளுக்கு பன்னெடுங்காலமாக ஸ்ரீவைகானஸ பகவத்சாஸ்த்ர விதிப்படி அனைத்து வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. சன்னதியில் தினமும் நடைபெறும் பலவிதமான கைங்கர்ய சமயங்களிலும், விசேஷ சமயத்தில் நடைபெறும் ஹோமங்களிலும்

*ஸப்தாத்ரீஸாய வித்மஹே வேங்கடேஸாய தீ மஹி தன்ன: ஸ்ரீநிவாஸ ப்ரசோதயாத்* என்று ஸ்ரீநிவாச காயத்ரி மந்திரத்தால் பூஜிக்கிறார்கள். அப்படியே வைகானஸ ஆகமப்படி ஒவ்வொரு தேவதையையும் நான்கு பெயர்களால் அர்ச்சனை செய்வர். அவ்விதமாக பெருமாளையும் நான்கு பெயர்களால் வேங்கடேச, பக்தவத்ஸல, ஸப்தாத்ரீஸ, ஸ்ரீநிவாஸ என்று சொல்லப்பட்டுள்ளது. வேதமூலமான ஆகமங்களில் ஸப்தாத்ரீஸனாக போற்றப்பட்ட ஸ்ரீநிவாசன் பக்தர்களால் ஏழு மலையானாக அழைக்கப்படுகின்றார். இதன் வாயிலாக ஆதிகாலம் முதல் திருமலை என்பது ஏழுமலைகளாகக் கூடி இருப்பவையே என்ற விஷயம் தெரிகிறது. அந்த ஏழு மலைகள் என்னவென்று ஆராய்வோம்.

*ஸ்ரீசேஷசைல கருடாசல வேங்கடாத்ரி நாராயணாத்ரி வ்ருஷபாத்ரி வ்ருஷாத்ரி முக்யாம்*
*ஆக்யாம் த்வதீய வஸதே ரனிஸம் வதந்தி ஸ்ரீவேங்கடாசலபதே ! தவ ஸுப்ரபாதம்* [1]

என்று அனுதினமும் பெருமாளை சுப்ரபாத சேவையில் துதிக்கிறார்கள். இந்த சுலோகத்தில் ஸ்ரீசைலம், சேஷ சைலம், கருடாத்ரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, வ்ருஷபாத்ரி, வ்ருஷாத்ரி என்ற ஏழு பெயர்கள் "திருமலை"யைப் பற்றி தெரிவிக்கின்றன. இதில் சில பெயர்களே சொல்லப்பட்டுள்ளன. இன்னும் அனேக பெயர்கள் இருக்கின்றன என்று சுப்ரபாத ஸ்தோத்ரத்தை எழுதிய 14வது நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீமான் பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி தெரிவித்துள்ளார். ஆனால், ஏழுமலையில் அஞ்ஜனாத்ரி முக்கியத்துவத்தை உணர்ந்த அண்ணன் ஸ்வாமி அஞ்ஜனாத்ரியின் உயர்வை சொல்லும் விதமாக ப்ரத்யேகமாக அஞ்ஜனஸைல நாத ஸ்தோத்ரத்தில் [2] பெருமாளை போற்றிப்

1. ஸ்ரீ வேங்கடேசகாவ்ய கலாப: – பக்கம் – 5
2. ஸ்ரீ வேங்கடேசகாவ்ய கலாப: – பக்கம் – 49

புகழ்கிறார். *''வாதி பீதி கரார்யேண ரசிதா...''* என்று இந்த ஸ்தோத்திரத்தின் கடைசியில் தன் பெயரை தெரிவித்துள்ளார்.

திருமலையைப் பற்றியும், திருவேங்கடமுடையானைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் நம்மிடம் உள்ள முக்கியமான ஆதாரங்களில் 18 புராணங்களில், 12 புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் முதன்மையானது. இது ஒரு ஸங்க்ரஹ நூலாகும். இது முதன்முதலாக சாமன்யஸகம் 1491ல் திருமலை ஆலய வைகானச அர்ச்சகர் ஸ்ரீமான் பசிண்டி வேங்கடத்துறைவர் மூலமாக ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்று அப்பொழுது அனுதினமும் ஸ்ரீநிவாசரின் விருப்பத்திற்காக திருமலையப்பன் கொலுவு சேவையில் பாராயணம் செய்யப்பட்டது என்று ஆலய கல்வெட்டுகளில் சொல்லப்படுகின்றன.

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தின்படி திருமலை சுமார் 21 பெயர்களால் அழைக்கப்பட்டது என்று தெரிகின்றது. பவிஷ்யோத்தர புராணம்,

*க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி த்ரேதாயாம் அஞ்ஜனாசலம்*
*த்வாபரே சேஷ சைலேதி கலௌ ஸ்ரீவேங்கடாசலம்* [1]

என்று வர்ணிக்கப்படுவதால் இந்த ஏழுமலைகள் சேஷாத்ரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, கருடாத்ரி, வ்ருஷாத்ரி, வ்ருஷபாத்ரி, அஞ்ஜனாத்ரி என்று தெளிவாக அறியப்படுகிறது. இதில் அஞ்ஜனாத்ரி, அஞ்ஜனசைலம், அஞ்ஜனாசலம் என்ற மலையாக சிறப்புப் பெற்றது. த்ரேதா யுகத்தில் ஸ்ரீராம பக்தனான ஆஞ்ஜனேயரின் பிறப்பிடமாகப் புகழ் பெற்றது. ஆஞ்ஜநேயரை பற்றி நினைத்த அளவிலே

*கோஷ்பதீக்ருத வாராசிம் மஸகீக்ருத ராக்ஷஸம்*
*ராமாயண மஹாமாலா ரத்னம் வந்தே அனிலாத்மஜம்*

என்ற இச்சுலோகம் நினைவிற்கு வருகிறது. பெரிய பெரிய கடல்களை பசுவின் கால் குளம்பு அளவை தாண்டுவது போல் எளிதாகத் தாண்டியவனே, ராக்ஷஸ வீரர்களை கொசுக்களைப் போல எளிதாகக் கொன்று வெற்றிபெற்றவனே, இராமாயண கதை என்ற மாலையில் மணி போன்று ஒளிர்பவனான ஆஞ்ஜநேயரை நமஸ்கரிக்கிறேன்.

இராமாயணம் என்ற பெரிய மாலைக்கு ஹனுமன் ரத்தினம் போன்றவர் என்று இச்சுலோகம் சொல்கிறது. மாலையின் நடுவில் ரத்தினம் ஒளிரும், ஆதலால் உத்தர காண்டத்தையும் சேர்த்து இராமாயணம் மொத்தம் ஏழு காண்டங்களாகும். ஹனுமனைப் பற்றி முதலாவதாக கிஷ்கிந்தா காண்டத்தில் தெரிகிறது. கிஷ்கிந்தை 4வது காண்டம் இதற்கு முன்பு பால, அயோத்ய, ஆரண்ய காண்டங்கள். பிறகு சுந்தர, யுத்த, உத்தர காண்டங்கள் இருக்கின்றன. கிஷ்கிந்தா காண்டம் நடுவில் இருப்பதால் இராமாயண மஹாமாலையில் இரத்தினம் போன்றவர்.

*அனேக ராமாவதாரேஷு தேஷு முத்ரிகா:*
*சதுர்முக ப்ரார்தனயா சமர்ப்பிதா:* [2]

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பவிஷ்யோத்ர புராணாந்தர்கதம் 1 – 36) இரண்டாம் பாகம், பக். 263, தி.தி.தே. வெளியீடு.
2. ஸ்ரீநிவாச பக்த விஜயமு, ரொம்பிசர்ல பார்த்தசாரதி பட்டாசார்யுலு, தி.தி.தே. 1957-1958 புல்லட்டின், பக். 123.

இச்சுலோகத்தைப் பற்றி கேட்டவுடனேயே அழகான கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் ஹனுமன் இராமாவதாரத்தில் தனக்குக் கிடைத்த இராமாயண மஹாமாலாரத்னம் என்ற விருதுக்கு மிகவும் மகிழ்ந்து கொஞ்சம் அகங்காரம் கொள்கிறார். அதை அறிந்து கொண்ட ஸ்ரீராமபிரான் ஹனுமனை சோதிக்க எண்ணினார். ஹனுமனுக்கு வைத்த சோதனையை இந்த சுலோகம் தெரியப்படுத்துகிறது. 1950ஆம் வருடத்தில் சுமார் 40 வருடங்கள் திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தில் ஆஸ்தான பண்டிதராக சேவையாற்றிய ஸ்ரீமான் ரொம்பிசர்ல பார்த்தசாரதி பட்டாசாரியார் ஒரு சமயத்தில் இந்த சுலோகத்திற்கு விளக்கத்தை தெரிவித்தார்.

ஒரு நாள் ஸ்ரீராமர் ஒரு ஏரியின் கரையில் நடந்து கொண்டு இருந்த பொழுது அவருடைய விரலில் ராஜ முத்திரையுடன் இருந்த மோதிரம் ஏரியில் விழுந்து விட்டது. உடனே ஹனுமனைக் கூப்பிட்டு என்னுடைய மோதிரம் ஏரியில் விழுந்து விட்டது. அதை தேடி எடுத்து வா என்று சொன்னார். ஹனுமனும் உடனே அந்த ஏரியில் குதித்து மூழ்கி இராமருடைய மோதிரத்தை தேடினார். அப்பொழுது அவருக்கு நிறைய பொருட்கள் கிடைத்தன. கிடைத்த பொருட்களில் முடிந்த வரை வெளியே கொண்டு வந்து நதிக் கரையில் வைத்தார். அதில் ஸ்ரீராமருடைய மோதிரத்தைப் போன்றே நிறைய மோதிரங்கள் காணப்பட்டன. அவற்றினை ஸ்ரீராமருக்கு பக்தியுடன் சமர்ப்பித்து, இந்த மோதிரங்களில் உண்மையானது எது என்று கேட்டார். அப்பொழுது ஸ்ரீராமர் ஹனுமனிடம் நான் தசரதனுடைய மாளிகையில் பிறப்பது இது முதன்முறையல்ல.

நான் பலமுறை இந்த பூமியில் ஸ்ரீராமராக அவதரித்து ஒவ்வொரு முறையும் அவதாரத்தின் நோக்கத்தை நிறைவேற்றினேன். நான் பிறந்த ஒவ்வொரு முறையும் உன்னைப் போன்ற பக்தர்கள் எனக்கு உதவியாக சீதையைத் தேடி வந்தார்கள். அவ்வாறாக ஹனுமன்களை சோதிப்பதற்காக ஒவ்வொரு மோதிரத்தை ஒவ்வொரு முறையும் இந்த ஏரியில் போட்டு வந்தேன். நீ கொண்டு வந்த எல்லா மோதிரங்களைக் காட்டிலும் கணக்கிலடங்காத மோதிரங்கள் இந்த ஏரியில் உள்ளன. நான் ஸர்வக்ஞன் ஆனதால் எல்லா காலங்களிலும் எடுத்த அவதாரங்களில் நடந்தவை எனக்கு நினைவு உள்ளது என்று ஸ்ரீராமர் சொல்லவும் ஹனுமன் தன்னுடைய அறியாமையை மன்னிக்கும்படி வேண்டினார்.

இவ்வாறாக பெருமானுடைய அவதாரங்களுடைய லீலைகளும் எண்ணிலடங்காதவைகள். இதன்படி வேங்கடாசல மாஹாத்மியத்தில் குறிப்பிட்டுள்ளபடி திரேதா யுகத்தில் திருமலை அஞ்ஜனாத்ரியில் ஹனுமன் அவதரித்தார். ஏழுமலையில் அஞ்ஜனாத்ரி, அஞ்ஜனாசலம் என்ற பெயர்களால் அழைக்கப்படும் இந்த மலைக்கு ஒரு சிறப்பு உள்ளது. ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சிறிய திருவடி என்று அழைக்கப்படும் ஹனுமன் இந்த மலையில் அவதரித்தார் என்று இந்த ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் தெரிவிக்கின்றது. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் பவிஷ்யோத்தர, வராஹ, பிரம்ம, பிரம்மாண்ட புராணங்களில் அஞ்ஜனாத்ரியைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பிராண வாயுவை கொடுக்கும் வாயு தேவருக்கும், இந்த அஞ்ஜனாத்ரிக்கும் விசேஷ சம்பந்தம் உள்ளது. பிரம்ம புராணம் அஞ்ஜனாத்ரி என்ற சொல்லை இவ்வாறாக விவரிக்கிறது.

*வாயோராவேசனாச்சைவம் ப்ராஹூரம்ஜன ஸம்ஜ்ஞகம்* [1]

மேரு புத்திரனான வேங்கடாத்ரியில் வாயுதேவரின் சக்தி புகுந்ததால் வாயு தேவரின் வழக்குச் சொல்லான அஞ்ஜன என்ற பெயருடன் இந்த மலை அழைக்கப்படுகிறது. அப்படியே ஹனுமனின் தாயாரான அஞ்ஜனாதேவி திருமலையில் அஞ்ஜனாத்ரி மலையில் குழந்தை பேற்றுக்காக தவம் செய்த போது வாயுதேவன் குழந்தைபேறு அளிக்கும் ருத்ர தேஜஸ்ஸுடன் கூடிய பழத்தை அளித்தார். அதனால் இந்த மலைக்கு அஞ்ஜனாத்ரி என்று பெயர் ஏற்பட்டது.

பிரம்மாண்ட புராணம் திருவேங்கடவனின் க்ரீடாத்ரிக்கு அஞ்ஜனாத்ரி என்று பெயர் ஏற்பட்டதை வர்ணிக்கிறது.

*அஞ்ஜனே! த்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ்தப்த்வா ஸுதாருணம்.......*
*அஞ்ஜனாசல இத்யேவ நாத்ர கார்யா விசாரணா* [2]

அஞ்ஜனா! சேஷாசலத்தில் நீ தீவிரமான தவம் செய்து மூன்று உலகங்களுக்கும் நன்மை செய்வதற்காக உத்தம மகனைப் பெற்றாய். அதனால் இந்த மலை உன்னுடைய பெயரால் "அஞ்ஜனாசலம்" என்று சிறப்படையும். நீ இந்த விஷயத்தில் ஆலோசனை செய்ய வேண்டியதில்லை என்று பிரம்ம தேவன் அஞ்ஜனா தேவிக்கு வரம் கொடுத்தார். அஞ்ஜனாசலம் என்று பெயர் வரக் காரணமான அற்புதமான கதை பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது திரேதா யுகத்தில் நடந்த கதை. முன்பு கேசரி என்ற வானர அரசனும் அவனது மனைவி அஞ்ஜனா தேவியும் கிஷ்கிந்தா நகரத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு வெகு காலமாக சந்தான பாக்கியம் இல்லை. அஞ்ஜனா தேவி கவலையுடன் மதங்க மஹரிஷியிடம் தனக்கு ஆண் குழந்தை பிறப்பதற்கு மந்திர உபதேசம் செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள்.

மதங்க மஹரிஷி அவளின் பக்திக்கு சந்தோஷப்பட்டு, அஞ்ஜனா! பம்பா நதிக்கு கிழக்கு திசையில் 500 யோஜனை தூரத்தில் நரசிம்ம க்ஷேத்திரம் இருக்கின்றது. அதற்கு தென் திசையில் நாராயணாத்ரி என்ற மலை உள்ளது. அந்த மலையில் ஸ்வாமி தீர்த்தம் என்கிற திருக்குளம் உள்ளது. அந்த புண்ணிய தீர்த்தத்தில் நீராடி வாயு தேவனைக் குறித்து 12 வருடங்கள் தவம் செய். வாயுதேவரின் வரத்தால் உனக்கு மஹா குணவானனான சந்தான பாக்கியம் கிடைக்கும் என்று வாயு தேவரின் மந்திரமான *"மருத: பரமாத்மா..."* என்ற மந்திரத்தை உபதேசித்து ஆசிர்வதித்தார்.

உடனே அஞ்ஜனா தேவி கிஷ்கிந்தையில் இருந்து புறப்பட்டு வேங்கடாசலத்தில் உள்ள நாராயணகிரிக்குச் சென்று, நாராயணகிரியில் ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, வராஹ ஸ்வாமியை தரிசனம் செய்து கொண்டு ஆகாச கங்கை தீர்த்தத்திற்கு வந்து சேர்ந்தாள். பிறகு ஆகாச கங்கை தீர்த்தத்தில் நீராடி கடினமான தீக்ஷையுடன் வாயு தேவரைக் குறித்து தவம் இயற்றினாள். ஒரு வருடம் கழித்து வாயு தேவன் அஞ்ஜனாதேவி உண்பதற்காக தினந்தோறும் ஒரு பழம் கொடுத்து வந்தார்.

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணாந்தர்கதம் 1 – 51) இரண்டாம் பாகம், பக். 135, தி.தி.தே. வெளியீடு.

2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்மாண்ட புராணாந்தர்கதம் – 5 – 64, 65) முதல் பாகம், பக். 333, தி.தி.தே. வெளியீடு.

இப்படி நடந்து கொண்டு இருக்கையில் ஒரு நாள் வாயு தேவன் ருத்ர தேஜஸ்ஸுடன் நிறைந்த பழத்தை அஞ்ஜனா தேவிக்கு கொடுத்தார். தினசரி உண்பது போலவே அந்த பழத்தையும் சாதாரணமாக எண்ணி பசியுடன் இருந்த அஞ்ஜனாதேவி உண்டாள். இதன் பிறகு அஞ்ஜனா தேவி கரு உற்றாள். பத்து மாதங்கள் நிறைவடைந்த பின்னர் நற்குணங்கள் நிறைந்த குழந்தையைப் பெற்றெடுத்தாள். அஞ்ஜனாதேவி தவம் செய்து குழந்தையைப் பெற்றதால் இந்த மலைக்கு அஞ்ஜனாத்ரி என்னும் சிறப்பு பெயர் ஏற்பட்டது.

இந்த புராணங்களின் கருத்து நமக்கு அஞ்ஜனாத்ரி மலையின் ப்ரபாவத்தையும் மகிமைகளையும் தெரிவிக்கின்றது. மந்திர சித்திக்கும் காரிய சித்திக்கும் செய்யக்கூடிய உபாசனைகளை இந்த அஞ்ஜனாத்ரி மலையில் செய்தால் பலன் நிச்சயம் கிடைக்கும். இதே விஷயத்தை திருவேங்கடவனின் பரம பக்தையான ஸ்ரீதரிகொண்ட வேங்கமாம்பா தன்னுடைய வேங்கடாசல மாஹாத்மியம் என்ற கவிதையில் வர்ணித்துள்ளார்.

*அஞ்ஜனா தேவி தபமு முந்தசட சேஸி...*
*நாகிரிகி நஞ்ஜனாத்ரி பேரமர நிடிரி* [1]

ஏழுமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியின் பெருமையையும் முக்கியத்துவத்தையும் தெரிவித்து பிரம்மாண்ட புராணம் அஞ்ஜனா தேவி பிறப்பு, ருத்ராம்ஸம் உடையவரான ஹனுமனை குறித்து, சூரியனைப் பார்த்து பழம் என்று நினைத்து ஹனுமன் உண்பதற்கு முயற்சி செய்வது, பிரம்ம தேவன் பிரம்மாஸ்திரத்தை விடுவது, ஆஞ்ஜநேயருக்கு தேவர்கள் வரங்களை அளிப்பது முதலான விஷயங்களை விவரிக்கின்றது.

திருவேங்கடவனை எண்ணற்ற பக்த சிகாமணிகள் தவத்தினாலும், தியானத்தினாலும், அம்ருத மயமான தம்முடைய கீர்த்தனைகளைப் பாடியும் மகிழ்வித்து மகிழ்ந்தனர். இதில் பக்தி பாடகர்களுக்கு தனியிடம் உண்டு. பதக்கவிதையின் தந்தை என்று பெயர் பெற்ற தாள்ளபாக்க அன்னமய்யா ஸ்ரீநிவாச ஸ்வாமியை 32 ஆயிரம் கீர்த்தனைகளால் பாடி ஸ்வாமியின் அருளைப் பெற்றார். அன்னமய்யா, ஏழுமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியின் விசேஷத்தைப் பற்றி தம்முடைய

*அணுரேணு பரிபூர்ணமைன ரூபமு அணி மாதி ஸிரி*
*அஞ்ஜனாத்ரி மீதி ரூபமு* [2]

கீர்த்தனையில் தெரிவித்துள்ளார். இவ்வாறாக சில நூறு கீர்த்தனைகளால் அன்னமய்யா ஏழுமலையில் அஞ்ஜனாத்ரியின் முக்கியத்துவத்தை மிகவும் தெளிவாகப் பாடியுள்ளார். கன்னட தேசத்தின் ஹரி தாஸர்களில் அனேக மஹானுபவர்கள் திருவேங்கடமுடையானைப் பாடி அனுபவித்தனர். புரந்தர தாசர், ஸ்ரீபாதராயர், வியாச தீர்த்தர், கனக தாசர் முதலானோர்கள் இதில் புகழ் பெற்றவர்கள். இவர்களில் 16ஆம் நூற்றாண்டில் உத்தர கர்னாடகத்தில் பாகல்கோட் பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீபிரசன்ன வேங்கடதாசர், அவர் தனது நாவில் சாக்ஷாத் திருவேங்கடமுடையான் கையால் ஸ்ரீபிரசன்ன வேங்கடேச என்று எழுதிக் கொண்ட மஹாபக்தர். இவர் திருவேங்கடமுடையானுக்கு செய்யும் ஆரத்தி வைபவத்தை பாடும் பொழுது,

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் – மாத்ருஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா, 1 – 115

2. தாள்ளப்பாக்க பத சாஹித்யம் – தொகுதி 2 – 432

*மங்கள அஞ்ஜனகிரி பதிகே மங்களம்* [1]

என்று ஏழுமலையில் அஞ்சனாத்ரி வைபவத்தைப் பாடியுள்ளார்.

அஞ்ஜனாத்ரியின் வைபவம் மற்றும் முக்கியத்துவம் குறித்து ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் விவரிக்கபட்டாலும் ஸ்ரீநிவாசன் மனம் நிறைவு கொள்ளவில்லை என்று தினந்தோறும் மூன்று முறை அஞ்ஜனாத்ரி வைபவ நிகழ்வுகளை காதாரக் கேட்கிறார். இது எப்படியென்றால் திருவேங்கடமுடையான் சன்னிதியில் தினமும் காலைப் பொழுதில் ஆராதனையின் ஒரு பகுதியாக சுப்ரபாதம், தோமாலை சேவை, கொலுவு (தர்பார்) ஆன பிறகு பிரம்மாண்ட புராணத்தில் உள்ள "ஸ்ரீவேங்கடேஸ்வர ஸஹஸ்ர நாம"த்தில் [2] உள்ள 1000 நாமங்களை படிக்கும் போது துளசி தளங்களால் ஸ்வாமியின் திவ்ய சரணங்களுக்கு அர்ச்சனை நடைபெறுகிறது. இந்த ஸஹஸ்ர நாமத்தில் ஆஞ்ஜநேய – அஞ்ஜனாசலத்தை புகழும் 8 நாமங்கள் உள்ளன.

*240 ஓம் ஹனுமத் பரிதோஷிதாய நம:*

ஹனுமனின் கைங்கர்யத்தால் சந்தோஷத்தை பெற்ற இராமராக அவதரித்த விஷ்ணு பகவானின் அர்ச்சா ரூபமான திருவேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*245. ஓம் கபிஸம்வ்ருதாய நம:*

சுக்ரீவன், ஹனுமன் முதலான வானரர்களால் சூழப்பட்டுள்ள ஸ்ரீராமரின் வடிவான திருவேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*246. ஓம் வாயுஸூனுக்ருத ஸேவாய நம:*

வாயு புத்திரனான ஹனுமனால் பக்தி சிரத்தையுடன் சேவிக்கப்பட்ட திருவேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*838. ஓம் தீர்த்தஸ்நாத்ருஸௌக்ய ப்ரதர்ஸகாய நம:*

திருவேங்கடமலையில் உள்ள ஸ்வாமி புஷ்கரணி, ஆகாச கங்கை, பாபவினாசம் முதலிய தீர்த்தங்களில் நீராடிய பக்தர்களுக்கு நலத்தைக் கொடுக்கும் திருவேங்கடவனுக்கு நமஸ்காரம்.

(அஞ்ஜனா தேவி ஆகாச கங்கை தீர்த்தத்தில் தவம் செய்து புத்திரனைப் பெற்றாள்.)

*845. ஓம் கபிஸ்ஸ்வாமி மநோந்தஸ்தித விக்ரஹாய நம:*

ஹனுமனின் இதயத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கும் ஸ்ரீராமரின் வடிவத்தையுடைய அர்ச்சா வடிவான திருவேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*915. ஓம் அஞ்ஜனாக்ருத பூஜாவதே நம:*

அஞ்ஜனா தேவியால் பூஜிக்கப்பட்ட ஸ்வாமிக்கு நமஸ்காரம்.

*916. ஓம் ஆஞ்ஜநேய கரார்ச்சிதாய நம:*

ஸ்ரீஆஞ்ஜநேயரால் வழிபட்ட எம்பெருமானுக்கு நமஸ்காரம்.

---

1. தி.தி.தே. வைரவிழா மலர், 2008, பக். 126
2. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் தி.தி.தே. 2014, பக். 564 – 583

*917. ஓம் அஞ்ஜனாத்ரி நிவாஸாய நம:*

அஞ்ஜனாத்ரியில் வசிக்கும் ஸ்வாமிக்கு நமஸ்காரம்.

காலையில் ஸஹஸ்ர நாம அர்ச்சனையில் அஞ்ஜனாத்ரி வைபவத்தை கேட்ட பெருமாள் அத்துடன் நிற்காமல் உச்சிகால பூஜை மற்றும் இரவு பூஜையில் நடக்கும் ஸ்ரீவேங்கடேஸ்வர அஷ்டோத்திர சத நாமார்ச்சனையில்[1] கூட அஞ்ஜனாத்ரியின் வைபவத்தை தெரிவிக்கும் நாமங்களை கேட்கிறார்.

*5. ஓம் ஸதஞ்ஜன கிரீசாய ஸ்ரீவேங்கடேசாய நம:*

உயர்ந்ததான அஞ்ஜனாத்ரியின் அதிபதியான வேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*81. ஓம் அஞ்ஜனா கோத்ர பதயே ஸ்ரீவேங்கடேசாய நம:*

அஞ்ஜனாத்ரியின் அதிபதியான வேங்கடவனுக்கு நமஸ்காரம்.

*83. ஓம் அஞ்ஜநாஸுத தாத்ரே ஸ்ரீவேங்கடேசாய நம:*

அஞ்ஜனா தேவிக்குப் புத்திரனை அளித்த வேங்கடவனுக்கு நமஸ்காரம்.

இது மட்டும் அல்லாமல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் திருவேங்கடமுடையானுக்கு உச்சிக்காலை பூஜையின் பாகமாக திருப்பாவாடை சேவை நடைபெறுகிறது. இந்த சேவையில் சொல்லப்படும் ஸ்ரீநிவாச கத்யத்தில் கூட அஞ்ஜனாத்ரியை தோத்திரம் செய்யும் போது *"அஞ்ஜனா சலாதி சிகரி மாலா குலஸ்ய"* என்று சொல்வார்கள்.

ஆஞ்ஜநேயருடன் திருவேங்கடவனுக்கு உள்ள தொடர்பானது புராணங்கள், ஸ்தோத்திரங்கள், அர்ச்சனைகளால் மட்டுமே அல்லாமல் மற்றொரு விதமாகக் கூட தொடர்வது ஆஞ்ஜநேயரின் வைபவத்தை தெரிவிக்கிறது. தினமும் அர்ச்சகர்கள் ஆலயத்திற்குள் சென்று மூலவரை தொட்டு சேவித்தபிறகு, பெருமாளுடைய சிரமம் (ஓய்விற்காக) தீர ஆலவட்ட சேவை செய்வார்கள். இந்த விஞ்ஜாமர சேவையை ஆலய பரிபாஷையில் "திருவாலவட்ட கைங்கர்யம்" என்று கூறுவார்கள். விஞ்ஜாமரத்தை பெருமாளுக்கு வீசினால் குளிர்ச்சியான காற்று வீசும்.

வாயு மைந்தனின் தந்தையான வாயுதேவனை விஞ்ஜாமரத்தில் தினந்தோறும் "சாமரவ்ஜனேஷு வாயும் ஆவாஹயாமி" என்று ஆவாஹனம் செய்வார்கள். அதுமட்டுமில்லாது விஞ்ஜாமரை வீசும் ஒவ்வொரு தடவையும் சொல்லக் கூடிய மந்திரம் கூட ஆஞ்ஜனேய தேவதா மந்த்ரமான *மருத: பரமாத்மா பரமா கதி: பரம்ப்ரஹ்ம பரம் யோகம்*[2] என்று வைகானச ஆகமம் கூறுகிறது. இந்த திருவாலவட்ட கைங்கர்யத்தை, தோமாலை சேவை நடக்கும் பொழுது ஜீயர் ஸ்வாமிகள் செய்வார்கள். அப்படியே பெரிய ரதோத்ஸவம் மற்றும் ஸ்னபன திருமஞ்ஜன சமயத்தில், ஸ்ரீவைஷ்ணவ பரிசாரகர்களின் மூலம் திருவாலவட்ட கைங்கர்யம் செய்யப்படுகிறது.

---

1. ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (வராஹ புராண பிரதமபாகாந்தர்கதம் 61- 36,37 ) முதல் பாகம், பக். 125, தி.தி.தே. வெளியீடு.
2. ஸ்ரீமத் பகவதர்சா ப்ரகரணம் - ஸ்ரீ மான் ந்ருஸிம்ஹ வாஜபேயயாஜி - 128

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் சிறிய திருவடி பெயரை பொருளுள்ளதாக செய்து கொண்டு வாயுவின் குமாரனான ஆஞ்ஜனேய ஸ்வாமி, திருமலை பெருமாளுடைய ஒவ்வொரு கைங்கர்யத்திலும் சேவைகளை செய்து ஏழுமலையில் அஞ்ஜனாத்ரியின் முக்கியத்துவத்தை உறுதிபடுத்தியபடி மேற்கொண்ட கைங்கர்யங்களை பற்றி நாம் அறிந்துகொள்ளலாம்.

இப்படி ஏழுமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியின் வைபவம் மற்றும் புகழைப்பற்றி எவ்வளவு சொன்னாலும், வற்றாத ஜீவ நதியைப்போல மேன்மேலும் வந்து கொண்டே இருக்கும்.

*"கலௌ ஸ்ரீவேங்கட நாயக:"* என்று புராணங்கள் அனைத்தும் ஒருமித்த கருத்தை சொல்லி வருகின்றன. கலியுகத்தில் கூப்பிட்டால் பேசும் மகிமை பொருந்திய தெய்வம் திருவேங்கடமுடையான். இதுவரை நாம் சொல்லிய விஷயங்கள் வேத வியாசர் எழுதிய புராணங்கள் மூலம் தெரிந்து கொண்டோம். வசிஷ்டருக்கும் நாரத முனிவருக்கும் இடையில் நடந்த உரையாடலில் பிரம்மாண்ட புராணத்திலிருந்து ஸ்ரீவேங்கடேஸ்வர ஸஹஸ்ர நாமாவளி பெறப்பட்டது. ஸ்ரீவேங்கடேச அஷ்டோத்திர சதநாமாவளி ஆதிசேஷன் கபில மஹரிஷிக்கு உபதேசித்தார். கபில மஹரிஷி ஸூத மஹரிஷிக்கும், ஸூத மஹரிஷி சனகாதி மஹரிஷிகளுக்கும் உபதேசித்தார்.

பகவத் இராமாநுஜர் அக்காலத்தில் ஸ்ரீநிவாஸர் சிவனா? அல்லது விஷ்ணுவா? என்ற சந்தேகம் வந்தபோது ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்திலிருந்து சான்றுகளை எடுத்துக்காட்டி விஷ்ணுவே என்று வாதித்தார். இதில் சொல்லப்பட்ட அனைவரும் தெய்வாம்சம் நிரம்பப் பெற்றவர்கள். இங்கு நாம் சொல்லிய முக்கியமான விஷயங்கள் "ஸப்தகிரியில் அஞ்ஜனாத்ரி வைபவம்" வாயிலாக உருவானது தான். அதனால் அஞ்ஜனாத்ரியின் வைபவம் பற்றி இதை விட உயர்ந்த சான்று வேறு எதுவும் இல்லை.

******

## ஹனுமன் சூரியனை விழுங்கச் செல்லுதல்

### தூரத்தில் ராகு, அருகில் இந்திரன் வஜ்ராயுதத்தால் ஹனுமனைத் தாக்குதல்



# அத்தியாயம் - 13

# 13. ஹனுமனின் அவதாரத்தலம் குறித்து பலவிதமான மக்களின் மாறுபட்ட கருத்துகள்

பாரததேசத்தில் ஆஞ்ஜனேயர் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அதிகமாக உள்ளது. ஆஞ்ஜனேயரின் கோயில் இல்லாத கிராமமோ நகரமோ நம்முடைய தேசத்தில் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

ஹனுமனின் அவதாரத்தல விஷயத்தில் பாரததேசத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் மக்களின் இடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. அதில் கீழ்க்கண்டவைகள் முக்கியமானவைகள்.

**1. குஜராத்தில் உள்ள நவுசாரி மாவட்டம் :**

குஜராத்தில் உள்ள நவுசாரி மாவட்டத்தில் டாங் பகுதியில் உள்ள அஞ்ஜனி மலை, அஞ்ஜனி குண்ட் மற்றும் அஞ்ஜனிகுகை என்ற மூன்று இடங்களை உள்ளூர் வாசிகள் காண்பிக்கிறார்கள். இந்த ஊருக்கு அஞ்ஜனிகிராமம் என்ற பெயர் வழக்கத்தில் உள்ளது. இந்த இடத்திற்கு அருகாமையில் சபரி தாம், பம்பா சரோவரம் கூட இருக்கின்றன. இந்த டாங் என்ற ஊரை உள்ளூர் வாசிகள் தண்டகாரண்யம் என்றும் கூறுகிறார்கள். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. (அ) இந்த பகுதி அயோத்திக்கு மேற்கில் 1325 கிலோ மீட்டர்கள் அல்லது 822 மைல் தூரத்தில் $20.7695^0$ வ.–$73.1350^0$ கி. அட்சரேகைகளுக்கு இடையில் இருக்கின்றன. இராமாயணத்தின்படி அயோத்தியில் இருந்து ஸ்ரீராமரின் பயணவழி கிழக்கு திசையில் ஆரம்பமாகி ராமேஸ்வரம் வரை நடந்தது. ஸ்ரீ ராமரின் வழி முழுவதும் $78^0$ – $84^0$ அட்சரேகைகளுக்கு இடையில் மற்றும் $27^0$–$8^0$ அட்சரேகைகளுக்கு இடையில் நடந்தது. ஆதலால் இது இராமாயணத்திற்கு சரியாகாது.

(ஆ) புராணத்திலோ அல்லது இராமாயணத்திலோ எங்கும் இந்த குஜராத் (புராணங்களில் ப்ரபாஸ க்ஷேத்ரம்) பகுதியில் சபரி ஆசிரமம், பம்பா சரஸ் இருந்ததாகவோ, அஞ்ஜனாத்ரி இருந்ததாகவோ எங்கும் குறிப்பிடப்படவில்லை. இது மக்களின் வெறும் வார்த்தை மட்டுமே.

(இ) கர்நாடகத்தில் கிஷ்கிந்தையின் அருகில் பம்பா ஏரி இருக்கிறது என்ற விஷயம் உலக புகழ்பெற்றது. ஆனால் குஜராத்தில் நவுசாரி என்ற ஊரின் அருகில் கூட ஒரு பம்பா ஏரி இருக்கின்றது என்றால் குஜராத்தில் கிஷ்கிந்தை எங்கு உள்ளது? நவுசாரி மேற்கு கடற்கரைக்கு மிகவும் அருகில் உள்ளது. ஆனால் அங்கிருந்து இராமேஸ்வரம் வருவதானால் மிகவும் கடினமாகும். எனவே இந்த இடம் ஹனுமனின் அவதாரத்தலம் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. கர்நாடகாவில் உள்ள கிஷ்கிந்தையில் இருந்து 666 கிலோமீட்டர் தூரத்தில் இந்த இடம் உள்ளது.

### 2. இரண்டாவது இடம் கும்ளா

கும்ளா என்ற ஊர் ஜார்கண்டில் இருந்து 21 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இங்கு அஞ்ஜனா என்ற கிராமமும், அஞ்ஜனாதாம் என்ற இடமும் உள்ளது. இது அயோத்திக்கு தென்கிழக்காக 652 கிலோமீட்டர் தூரத்தில் 23.240$^0$ டிகிரியில் உள்ளது. கும்ளாவில் இருந்து கிஷ்கிந்தை 1240 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இப்பகுதிகளில் சபரி நிவாஸமோ, பம்பா ஏரியோ இல்லை. இராமாயணத்திலோ அல்லது புராணங்களிலோ இப்பகுதியைப் பற்றிய விவரங்கள் இல்லை. ஆகையால் இது ஹனுமனின் அவதாரத்தலம் என்பது ஊர் மக்களின் நம்பிக்கை மட்டுமே.

### 3. மூன்றாவது இடம் கயித்தால்

இந்த ஊர் ஹரியானா மாநிலத்தில் உள்ளது. திருவயோத்தியிலிருந்து 258 கிலோமீட்டர் தூரத்தில் வடமேற்கு திசையில் 29.8015$^0$ வ. – 76. 3996–84.3230$^0$ டிகிரியில் அட்சரேகைகளுக்கு இடையில் உள்ளது. கிஷ்கிந்தையில் இருந்து 1626 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இதற்கு கபிஸ்தல் என்ற பெயரும் உள்ளது. ஆஞ்ஜனேயர் வானரமாதலால் அவர் பிறந்த ஊர் இது என்று அங்குள்ள மக்களின் நம்பிக்கை. இங்கு அஞ்ஜனிதிலா என்ற ஊரில் அஞ்ஜனாதேவிக்கு கோயில் கூட உள்ளது. ஆனால் அங்கு கூட மக்களின் செவிவழிச்செய்தியாக உள்ளதே தவிர புராண இதிகாச ஆதாரங்கள் இல்லை.

### 4. நான்காவது இடம் அஞ்ஜநேரி

மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாஸிக் ஊருக்கு அருகில் உள்ளது. இது நாஸிக்கிலிருந்து த்ரயம்பக் வழியில் த்ரயம்பகேஸ்வரத்திற்கு 7 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அயோத்தியில் இருந்து 1379–கிலோமீட்டர் தூரத்தில் மேற்கு கடற்கரையில் 19.55$^0$ வ– 73.34$^0$கி. நடுவில் உள்ளது. இது கர்நாடகத்தில் உள்ள கிஷ்கிந்தைக்கு 616 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இது அஞ்ஜனாதேவியின் வசிப்பிடம் என்றும், ஆஞ்ஜனேயரின் அவதாரத்தலம் என்பதும் ஊர் மக்களின் நம்பிக்கை. இதற்கு இராமாயணம் புராணங்களில் ஆதாரங்கள் இல்லை.

இராமாயணம் மற்றும் புராணங்களின் ஆதாரம் மூலமாக ஸ்ரீராமருக்கு ஹனுமன் மற்றும் சுக்ரீவன் முதலானவர்களின் அறிமுகம், ஹனுமனின் அவதாரத்தலமான கிஷ்கிந்தையின் சிறப்புகள், அஞ்ஜனாத்ரியின் இருப்பிடம் இவை எல்லாம் தென்னிந்தியாவில் மட்டுமே உள்ளது. வட இந்தியாவில் இல்லை. ஆகையால் நவுசாரி, கும்ளா, கயித்தால், அஞ்ஜனேரி கணக்கில் வராது.

### 5. ஐந்தாவது இடம் ஹம்பி

கர்நாடகத்தில் உள்ள ஹம்பிக்கு அருகில் உள்ள கிஷ்கிந்தை – இது கர்நாடகத்தில் 15.334022$^0$ வ. – 76$^0$ 468536$^0$ கி. அட்சரேகைகளுக்கு இடையில் உள்ளது. இந்த கிஷ்கிந்தையை அனைவரும் கிஷ்கிந்தையே என்று ஒப்புகொள்கிறார்கள். ஆனால் ஹனுமனின் அவதாரத்தலம் என்பதற்கு தகுந்த ஆதாரங்களை, கிஷ்கிந்தையே ஹனுமனின் பிறந்த இடம் என்று சொல்பவர்கள் எவராலும் உறுதியாக சொல்லமுடியவில்லை. இது அயோத்தியில் இருந்து தெற்கு திசையில் 1699.4

கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இது சிறிது காலம் வாலியின் ஆட்சியிலும், சிறிது காலம் சுக்ரீவனின் ஆட்சியிலும், மீண்டும் வாலியின் ஆட்சியிலும், வாலி இறந்தபிறகு சுக்ரீவனின் ஆட்சியின் கீழும் வந்தது. ஆகையால் இந்த கிராமத்தில் ஆஞ்ஜனேயர் சுக்ரீவனின் அமைச்சனாக இருந்தற்கான இருப்பிடம் என்று சந்தேகம் இல்லாமல் கூறலாம். இராமாயணம் முதலான நூல்கள் இந்த கருத்தை ஆதரிக்கின்றன. ஆனால் அவதாரத்தலமாக அறிவிப்பதற்கு ஆதாரங்கள் இல்லை. இராமாயணத்தை ஆராய்ந்து பார்த்தால் கிஷ்கிந்தை, ருஷ்யமுகம், அஞ்ஜனாத்ரி என்பவை வேறு வேறு என்று சொல்லப்பட்டுள்ளது. முன் கட்டுரைகளில் விரிவாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 6. ஆறாவது இடம் திருமலை

திருமலை – அஞ்ஜனாத்ரி சித்தூர் மாவட்டத்தில் சேஷாசலமலைகளில் பிரதானமான ஏழுமலைகள் சேர்ந்தது திருமலை. இது $13.687^0$ வ – $79.3509^0$ கி. அட்சரேகைகளுக்கு இடையில் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனான ஸ்ரீநிவாஸனுடைய கலியுக வைகுண்டமாகத் திகழ்கிறது. இந்தத் திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறப்பிடம் என்று சொல்லுவதற்கு பலவித சான்றுகள் உள்ளன.

அ) 1000 வருடங்களுக்கு முன்பு ஆதிசேஷனின் அவதாரமாகப் புகழப்படுகின்ற ஸ்ரீ ராமாநுஜாசாரியரால் பல்வேறு புராணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் (பிரம்ம, பிரம்மாண்ட, பத்ம, வராஹ, கருட, வாமன, மார்கண்டேய, பவிஷ்யோத்தர முதலியவற்றின் தொகுப்பு).

ஆ) தனியாக ஸ்காந்தபுராணம்

இ) எண்ணற்ற வைகானஸ பாஞ்சராத்ர ஆகம புத்தகங்களில் ஸ்ரீபகவதார்ச்சனை கிரமத்தில் அஷ்டோத்தர ஸஹஸ்ர நாமார்ச்சனை முதலியவற்றில்.

ஈ) ஸ்ரீ வேதாந்ததேசிகர், ஸ்ரீ வேங்கடாத்வரி முதலானவர்களின் காவ்ய ஸ்தோத்ர புத்தகங்கள்.

உ) பலதரப்பட்ட அரசர்களின் காலங்களைச் சேர்ந்த கல்வெட்டுகள்.

ஊ) அன்னமய்யா, புரந்தர தாசர், தரிகொண்ட வேங்கமாம்பா முதலானவர்கள் பக்தி கீர்த்தனைகள்.

எ) திருமலையைச் சுற்றியுள்ள ஊர்களில் உள்ள ஆலங்களின் தலபுராணங்கள்.

ஏ) ஆழ்வார்களின் 4000 திவ்யப்ரபந்தம் முதலாக வைஷ்ணவ பக்தி காவியங்கள்.

எண்ணற்ற வெவ்வேறு ஆதாரங்களின் உதவியுடன் ஏழு மலைகளுக்கு உள்ள அனேக பெயர்களில் ஒன்றான "அஞ்ஜனாத்ரி" ஹனுமனின் பிறப்பிடம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் ஒரு பகுதியே அகில உலக இணையதளங்களின் கட்டுரைத் தொகுப்பு (இண்டர்நேஷனல் வெபினார்) இந்த புத்தகத்தினுடைய வரிசை இப்படியாக எழுதப்பட்டுள்ளது.

******

ஹனுமத் வாகனத்தில் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி, அப்பளாயகுண்டா



இந்திரனால் தாக்கப்பட்ட ஹனுமனை வாயுதேவன் தன்னுடைய திருக்கரங்களால் தூக்கிச் செல்லுதல்



# அத்தியாயம் - 14

# 14. ஸ்ரீ ஆஞ்ஜநேயர் சரித்திரத்தில் சில மிக முக்கியமான திருத்தலங்கள்

**தெலுங்கு மூலம்**
**பேராசிரியர் ராணி சதாசிவமூர்த்தி**

**தமிழாக்கம்**
**டாக்டர். வி.ஜி. சொக்கலிங்கம்**

*அதுலித பலதாமம் ஸ்வர்ண சைலாபதேஹம்*
*தநுஜவன க்ருஸானும் ஜ்ஞானிநாமக்ரகண்யம்*
*சகல குணநிதாநம் வானராணாமதீஸம்*
*ரகுபதிவர தூதம் வாதஜாதம் நமாமி* [1]

தன்னிகரற்ற வலிமை நிதியும், பொன் மலையான மேரு மலை போன்று திருமேனி நிறமும் உடையவன், அரக்கர்கள் என்னும் வனத்தை எரித்தவன், ஞானிகளில் உயர்ந்தவன், அனைத்து நற்குணங்களுக்கும் இருப்பிடமானவன், வானர சிரேஷ்டன், ரகு நாயகனின் சிறந்த தூதுவன் ஆன அந்த வாயு குமாரனை, ஆஞ்ஜநேயனை வணங்குகிறேன்.

ஸ்ரீமகாவிஷ்ணுவின் பூர்ணாவதாரமான ஸ்ரீராமச்சந்திரனின் தலைமை பக்தன் ஆஞ்ஜநேய ஸ்வாமி. உலகப் புகழ் பெற்றவர்களான அஸ்வத்தாமன், பலிசக்கரவர்த்தி, வியாச மகரிஷி, ஹனுமன், விபீஷணன், க்ருபன், பரசுராமன் என்னும் ஏழு சிரஞ்சீவிகளில் நடுநாயகமாய் சிறந்து விளங்கும் மூர்த்தி ஸ்ரீஆஞ்ஜநேய ஸ்வாமி திருவவதரித்தது முதல் இன்று வரை அநேக அற்புத திருலீலைகள் கொண்ட அமிழ்தக் கருவூலம் ஆஞ்ஜநேய ஸ்வாமி வரலாறு. நினைக்கும் மாத்திரத்தில் மனோவேகத்தில் எந்த லோகத்திற்கும் கணப்பொழுதில் செல்லக்கூடிய மகிமை பொருந்திய மூர்த்தி ஆஞ்ஜநேயர் என்றால் அது மிகையாகாது. அந்த ஆஞ்ஜநேயர் பூமண்டலம் முழுவதும், ஆகாய மண்டலம் முழுவதும் அனைத்து லோகத்தையும் சஞ்சரித்தவரானாலும் சில மிக முக்கியமான இடங்களில் அவருக்கு எவ்வளவோ சிறப்பு உள்ளது. அவை,

I) ஜன்ம க்ஷேத்திரமாக சுமேரு சிகராசலமான சேஷாசலப் பகுதியில் அமைந்துள்ள அஞ்ஜனாத்ரி

II) கல்வி க்ஷேத்திரமாக சூரியனின் பயணமார்கமான ஆகாயம் முக்கியமாக சுமேரு மலை

III) காரிய க்ஷேத்திரமாக கிஷ்கிந்தை

IV) சேவை க்ஷேத்திரமாக தன் பிரபுவான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஜன்ம ஸ்தலமான அயோத்தி

V) ஸ்ரீராமாவதார சமாப்தி முதல் இன்று வரை ஆஞ்ஜநேய நித்திய நிவாச ஸ்தலம் கந்தமாதனமலை

VI) இனி ஆறாவது பௌதிகமானது அன்று. ஸ்ரீராமபக்தர்களின் திருவுள்ளங்கள் எல்லாம் ஆஞ்ஜநேயனின் நிவாச தலங்களே.

---

1. ஸூக்தி சுதாகர், ஸ்ரீ ஹனுமன் ஸூக்தி – 37

## I) ஹனுமனின் திருவவதாரத் தலம் (ஜன்ம க்ஷேத்திரம்)

ஆஞ்ஜநேயரின் திருவவதாரத் தல விஷயத்தில் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் ஆஞ்ஜநேயர் மீது உள்ள பக்தியினாலோ, உள்ளூர் விஸ்வாசத்தாலோ எத்தனையோ பேர் எத்தனையோ விதமாகக் கூறினாலும் மகிமை பொருந்திய இராமாயணம், மகாபாரதம், புராணம் முதலான புகழ் பெற்ற இலக்கியச் சான்றுகள் அனைத்தும் ஆராய்ந்தால் ஏகைக ஆஞ்ஜநேய திருவவதாரத் தலம் திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரிதான்.

### அ) ஆஞ்ஜநேயர் திருவவதாரத் தலம் குறித்து ஸ்ரீமத்ராமாயணத்தில்...

ஆஞ்ஜநேயரின் திருவவதாரம் குறித்து ஸ்ரீமத் ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் கடலைக் கடக்கும் சமயத்தில் ஜாம்பவான் பேச்சில், சுந்தர காண்டத்தில் ஆஞ்ஜநேயர் சீதாதேவியிடம் நேரடியாகக் கூறுகையில், இதேபோன்று உத்தர காண்டத்தில் அகத்திய முனிவரின் கூற்றில் என மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1) கிஷ்கிந்தா காண்டத்தில் ஜாம்பவான் கடலைக் கடப்பதற்காக ஹனுமனை நினைத்து, ஹனுமனின் திருவவதார சரித்திரத்தை இவ்விதமாக தெரிவிக்கின்றார். ஓ ஆஞ்ஜனேயனே! உன் தாய் புஞ்சிகஸ்தல எனும் அப்சரஸை சாபத்தின் விளைவால் வானர வடிவம் எடுத்து அஞ்ஜனா எனும் பெயரில், கேசரி எனும் வானர வீரனுக்கு மனைவி ஆனாள். அவள் ஒரு முறை மலை உச்சியில் (*''அசரத் பர்வதஸ்யாக்ரே ப்ராவ்ருதடம் புதஸன்னிபே''* என்றனறே தவிர எந்த மலை என்று இவ்விடத்தில் கூறவில்லை) சஞ்சரித்த போது வாயு தேவன் அருளினால்.

*வீர்யவான் புத்திஸம்பன்னஸ்தவ புத்ரோ பவிஷ்யதி*
*மஹாஸத்த்வோ மஹாதேஜா மஹாபலபராக்ரம:*
*லங்கனே ப்லவனே சைவ பவிஷ்யதி மயாஸம:*
*ஏவமுக்தா ததஸ்துஷ்டா ஜனனீ தே மஹாகபே!*
*குஹாயாம் த்வாம் மஹாபாஹோ! ப்ரஜஞ்ஜே ப்லவகர்ஷப!* [1]

வீர்ய மிக்கவன், புத்திசாலி, மகா சத்வகுணமிக்கவன், மிகவும் ஒளி பொருந்தியவன், எல்லையற்ற வலிமை பராக்ரமம் பொருந்தியவனான ஒரு மகன் பிறப்பான் என்ற வரத்தைப் பெற்று, உன்னை அந்த மலைக் குகையில் ஈன்றெடுத்தாள் எனக் கூறினரே தவிர எந்த மலைக்குகையில் என்று குறிப்பிடப்படவில்லை.

2) சுந்தர காண்டத்தில் தன்னுடைய திருவவதார வரலாற்றினை ஹனுமனே சுயமாக சீதாதேவிக்கு தெரிவித்தான். சம்பசாதனன் எனும் அசுரனை வதைத்த கேசரி எனும் வானர வீரனின் மனைவி அஞ்ஜனைக்கு வாயுதேவன் அருளால் தான் அவதரித்ததாக ஹனுமன் தெரிவித்தார்.

*மால்யவான்னாம வைதேஹி! கிரீணா முத்தமோகிரி:*
*ததோ கச்சதி கோகர்ணம் பர்வதம் கேசரீஹரி:*
*ஸச தேவர்ஷிபிர்திஷ்ட: பிதா மம மஹாகபி:*
*தீர்தே நதீபதே: புண்யே ஸம்பஸாதனமுத்தரன்*

1. வால்மீகி இராமாயணம், கிஷ்கிந்தா காண்டம் 66-19,20

*யஸ்யாஹம் ஹரிண: க்ஷேத்ரே ஜாதோ வாதேன மைதிலி*
*ஹனூமானிதி விக்யாதோ லோகே ஸ்வேபினைவ கர்மணா:* [1]

இங்கும் கூட "மலைகளில் சிறந்ததான மால்யவந்தம் எனும் மலையிலிருந்து கேசரி எனும் மகா வானர ச்ரேஷ்டன், என் தந்தை கோகர்ண மலைக்குச் சென்று அங்குள்ள சாகர தீர்த்தத்தில் தேவதைகள், ரிஷிகளின் கோரிக்கைக்கு இணங்க சம்பசாதனன் எனும் அரக்கனை வதைத்தான். அச்சமயத்தில் கேசரி க்ஷேத்ரமான (க்ஷேத்ரம் என்றால் மனைவி என்று பொருள்) என் தாய்க்கு நான் ஆஞ்ஜநேயன் எனும் பெயரில் பிறந்தேன்" எனக் கூறினான். இங்கு கூட அவன் எந்தப் பகுதியில் பிறந்தான் எனக் கூறவில்லை. அங்கு குறிப்பிடப்பட்ட மால்யவந்த மலை இமாலயத்தின் மீது கிழக்குப் பகுதியில் மாலை வடிவில் உள்ள மலைத்தொடராகும். இது கேதுமாலா, இலாவ்ருத பகுதிகளை வேறுபடுத்துகின்ற சீமாமலை. நீலா, நிஷத மலைகள் வரை வியாபித்து (மால்யம் – மாலாகாரத வித்யதே அத்ர இதி மால்யவான். ஸச கேது மால–இலாவ்ருதவர்ஷயோ: சீமாபர்வத: – ஆனி பாஸ்யகாராசார்யரினி சித்தாந்த சிரோமணி) உள்ளது என மத்ஸ்ய புராணம், விஷ்ணு புராணம், மகாபாரதம், பாஷ்யகாராசார்யரின் சித்தாந்த சிரோமணி முதலானவை கூறுகின்றன. எனவே அங்கிருந்த கேசரி கோகர்ணத்திற்கு வந்தார் என அறிய வேண்டும். அது தவிர அந்த மால்யவந்த மலை ஆஞ்ஜநேயனின் பிறப்பிடம் என்பதற்கு தகுந்த ஆதாரம் இல்லை.

3) இனி, ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில், உத்தர காண்டத்தில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு அகத்திய முனிவர் ஹனுமனின் சரித்திரத்தை விவரித்துச் சொல்லும்போது மாமுனி கூறிய செய்தி இது.

*ஸூர்யதத்த வரஸ்ஸ்வர்ண: சுமேருர்நாம பர்வத:*
*யத்ர ராஜ்யம் ப்ரஸாஸ்த்யஸ்யகேசரீ நாமவைபிதா*
*தஸ்ய பார்யா பபூவேஷ்டா அஞ்ஜனேதி பரிச்ருதா*
*ஜனயாமாஸ தஸ்யாம் வை வாயுராத்மஜ முத்தமம்* [2]

சூரியனிடமிருந்து வரங்களைப் பெற்ற "சுமேரு" எனும் மலை ஒன்று உள்ளது. இது ஹனுமனின் தந்தையான கேசரியின் பரந்து விரிந்த இராஜ்ஜியத்தின் ஒரு பாகமாய் உள்ளது. இவற்றையும் கூட அவன் ஆட்சிப் புரிந்தான். அவனுக்கு மிகவும் பிடித்தவளான மனைவி 'அஞ்ஜனா' எனப் பெயர் பெற்றாள், அவளிடத்தே வாயுதேவன் தனது அம்சமாக உத்தமனான புத்திரன் உருவாக வரமளித்து அருள் புரிந்தான். அவனே ஹனுமன்.

இங்கு ஆர்வத்தைத் தூண்டும் விஷயம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்ட சுமேரு மலை வேங்கடாசலமே என்பதற்கு ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் உள்ள தலபுராணப் பகுதிகளில் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் உள்ள பிரம்ம புராண பாகத்தில் கூறியபடி ஒரு முறை வாயுதேவனுக்கும், ஆதிசேஷனுக்கும் நடந்த சண்டையின் விளைவாக மேரு புத்திரனான சுமேருவை

---

1. வால்மீகி இராமாயணம், சுந்தர காண்டம் 35-81,82,83

2. வால்மீகி இராமாயணம், உத்தரகாண்டம் 35-19,20

வாயு தன் வலிமையினால் சுவர்ணமுகி நதிக்கரை வரை ஆகாயம் வழியாக ஒரு லட்சம் யோசனை தூரத்துக்கு மேல் தூக்கிக் கொண்டு வந்தான். இந்த சுமேருவிற்கே வேங்கடவன் எனும் பெயர் உள்ளது. ஆகவே, இதற்கு வேங்கடாத்ரி, வேங்கடாசலம் எனப் பெயர் வந்தது.

இதோடு மட்டுமன்றி...

*அஞ்ஜனாத்ரிர்வ்ருஷாத்ரிச்ச சேஷாத்ரிர்கருடாசல:*
*தீர்த்தாத்ரி: ஸ்ரீநிவாசாத்ரிச் சிந்தாமணி கிரிஸ்ததா*
*வ்ருஷபாத்ரிர்வராஹாத்ரிர் ஜ்ஞாநாத்ரி: கநகாசல:*
*ஆனந்தாத்ரிச்ச நீலாத்ரிஸ்சுமேரு சிகராசல:* [1]

முதலான பிரம்ம புராணப் பகுதியில் உள்ள பெயர்களைப் பொறுத்து இவ்வேங்கடாத்ரிக்கு சுமேரு சிகராசலம் என்னும் பெயர் கூட உள்ளது எனத் தெளிவாகிறது.

## ஆ) மஹாபாரதத்தில்...

இனி மஹாபாரதத்தில் பார்த்தால் வனபர்வத்தில் ஹனுமன் பீமனோடு உரையாடும் சமயத்தில்

*"அஹம் கேசரிண: க்ஷேத்ரே வாயுனா ஜகதாயுஷா,*
*ஜாத: கமலபத்ராக்ஷ ஹனூமாந்நாம வானர:"* [2]

என்று தான் வாயுதேவனின் அருளினால் கேசரி க்ஷேத்திரத்தில் அதாவது கேசரி மனைவியான அஞ்ஜனைக்கு புத்திரனாகப் பிறந்ததாக ஹனுமன் சுயமாகக் கூறினான்.

இவ்விதமாக ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலும், வியாச மகாபாரதத்திலும் ஹனுமனின் பிறப்புப் பற்றிய வர்ணனை, வாயுதேவனின் குறிப்புக் கூட தெளிவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஹனுமனின் பிறப்பிடம் குறித்து குறிப்பு எங்குமில்லை. சூசகமாக சுமேரு சிகராசலம் என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. இந்த சுமேரு சிகரமே வேங்கடாத்ரி என்றும், வேங்கடாத்ரிக்கே அஞ்ஜனாத்ரி என்றும் மறுபெயர் உள்ளது. மேலே பிரம்ம புராணப் பகுதியிலிருந்து சான்றளிக்கப்பட்டுள்ளது.

## இ) புராணங்களில்...

மேலும், புராணங்களை ஆராய்ந்தால் ஸ்காந்த புராணத்தில் உள்ள வைஷ்ணவ கண்டத்தில் 39,40 அத்தியாயங்கள் இரண்டிலும் வெகு விரிவாக ஹனுமனின் ஜென்ம சரிதம் வர்ணிக்கப்பட்டுள்ளது. அது ஸ்காந்த புராணத்தினுடைய வட இந்தியா, தென் இந்தியா பிரதிகள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளன. அங்கு கூறப்பட்டுள்ளபடி ஹனுமனின் பிறப்பு இவ்வேங்கடாத்ரியில் அமைந்துள்ள ஆகாச கங்கை அருகே சம்பவித்தது. மதங்க மஹரிஷியின் ஆலோசனைப்படி இப்பகுதியில் அஞ்ஜனாதேவி தவம் செய்ததினால் ஹனுமன் இங்கு திருவவதரித்தான். எனவே பிரம்மாவின் வரத்தினாலும் இம்மலைக்கு அஞ்ஜனாத்ரி என்னும் பெயர் பிரச்சித்தி பெற்றது என இப்புராணம் குறிப்பிடுகின்றது.

1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், பிரம்ம புராண பாகம்,
2. மகாபாரதம், வனப்பர்வம் 147-27

இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. இந்த ஸ்காந்த புராணத்தின்படி அஞ்ஜனாதேவி தந்தை ஒரு அரக்கன். மகா வலிமை வாய்ந்தவன். அவனுடைய பெயர் கேசரி. அவளின் கணவன் ஒரு கபிவீரன். அவன் பெயரும் கேசரி. இவ்விஷயத்தைக்கீழ்க்காணும் சுலோகத்தில் பார்க்கலாம்.

*மதங்க! முனிசார்தூல! வசனம் மே ஸ்ருணுஷ்வஹ,*
*பிதா மே கேசரி நாம ராக்ஷச: சிவதத்பர:* [1]

ஓ முனிச்ரேஷ்டரே! மதங்க மாமுனி! என் தந்தை கேசரி என்னும் அரக்கர். அவர் பரமசிவபக்தர்.

*..........................................................................*
*தத: காலாந்தரே விப்ர: கேசர்யாக்யோ மஹாகபி:*
*யயாசேமாம் ததஸ்வேதி பிதரம் மேதத: பிதா*
*தஸ்மை மாம் தத்த வாம்ச்சைவ பாரி பர்ஹம் ததௌசச:*
*கவாம் லக்ஷசஹஸ்ராணி கஜலக்ஷம் மஹாமனா:*

பின்னர் கேசரி என்னும் பெயருடைய ஒரு வானர வீரன் என்னை மனைவியாக தனக்குக் கொடுக்கும்படி என் தந்தையிடம் கோரினார். பெரிய மனமுடைய என் தந்தை அந்த கபிவீரனுக்கு என்னை அளித்து மணம் முடித்துக் காணிக்கையாக கோடிக்கணக்கான எண்ணிக்கையில் பசுக்களையும், ஒரு லட்சம் யானைகளையும், பத்து கோடி எண்ணிக்கையில் குதிரைகள், ரதங்கள், அனேக வகையான வஸ்திரங்கள், இரத்தினங்களையும், ஆயிரக்கணக்கில் தாஸதாசி ஜனங்களையும், நாட்டிய சங்கீதத்தில் கைதேர்ந்த அந்தப்புரத்து மகளீரையும், ஆயிரம் வஸ்திரங்களையும் அளித்தார்.

இங்குக் கூறினப்படி அஞ்ஜனாதேவியின் தந்தை பெயர் கேசரி, அவள் கணவன் பெயரும் கேசரி. அவன் மாவீரன்.

இதே விஷயம் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் உள்ள பிரம்மாண்ட புராண பகுதியிலும் உள்ளது.

*“திரேதாயுகேஅசுர: கச்சித் கேசரீத்யேவ விச்ருத:...”* [2] திரேதாயுகத்தில் கேசரி எனும் அசுரன் மிகவும் பிரசித்திப் பெற்றவனாக இருந்தான்.

*“தத: கபிவர: கச்சித் கேசரி புவி விச்ருத:*
*அபிகம்ய யயாசே தாம் கன்யாம் யௌவனசாலினீம்”* [3]

அரக்கனான கேசரிக்கு சிவபெருமானின் வரத்தினால் பிறந்த பெண்பிள்ளை அஞ்ஜனாதேவி. இளமைப் பருவம் வந்த உடனே கேசரி எனும் பெயர் கொண்ட கபி ச்ரேஷ்டன்

---

1. ஸ்காந்த புராணம், ஸ்ரீவைஷ்ணவ கண்டம் 39-10,11

2. பிரம்மாண்ட புராணம், தீர்தகண்டம், ப்ருகு நாரத ஸம்வாத: 54வது சுலோகம்.

3. பிரம்மாண்ட புராணம், தீர்தகண்டம், ப்ருகு நாரத ஸம்வாத: 68வது சுலோகம்.

அவளை தனக்களித்து திருமணம் பண்ணும்படி அவள் தந்தையைக் கேட்டான். அவள் தந்தை ஒப்புதலோடு அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது.

இங்ஙனே இவ்விரு புராணங்களில் ஸ்காந்தம் சாக்ஷாத் புராணமே. பிரம்மாண்ட புராணம். ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் உள்ளவற்றில் இந்த சரித்திரம் மிகவும் பரந்துள்ளது. அப்படியே இவ்விரு நூல்களிலும் ஹனுமன் பிறந்த அஞ்ஜனாத்ரி திருமலையில் உள்ள வேங்கடாத்ரி தான் எனச்சொல்லப்பட்டது.

*அஞ்ஜனே த்வம் ஹி சேஷாத்ரௌ தபஸ்தப்த்வா சுதாருணம்*
*புத்ரம் ஸூதவதீ மஸ்மால் லோகத்ரயஹிதாய வை*
*ப்ரஸித்திம் யாது சைலோ யமஞ்ஜனே! நாமதஸ்தவ*
*அஞ்ஜனாசல இத்யேவ நாத்ர கார்யா விசாரணா*
*இதி தஸ்த்யே வரம் தத்வா தேவா ப்ரஹ்மபுரோகமா:*
*ஸ்வம் ஸ்வம் ஸ்தானம் ஸமுத்திஸ்ய யதாகதமதோ யயு:*
*அஞ்ஜனா புத்ரமாதாய ஸ்ரீவேங்கடரிகிரேஸ்தடம்*
*புனராகம்ய ஸாமோதமலஞ்சக்ரே நிஜாச்ரமம்* [1]

ஓ அஞ்ஜனா தேவி! "நீ இந்த சேஷாத்ரி மீது தவம் செய்து இந்தப் புத்திரனை உலக நன்மைக்காக ஈன்றெடுத்தாய். எனவே இந்த வேங்கடகிரி அல்லது சேஷாத்ரி இனிமேல் உன் பெயரால் அஞ்ஜனாத்ரி என்று பிரசித்தி பெற்று விளங்கும்" என்று கூறி பிரம்மா முதலான தேவதைகள் தம்தம் லோகங்களுக்குச் சென்றனர். பின்னர் அஞ்ஜனாதேவி ஆனந்தத்துடன் தன் குமாரனோடு திருவேங்கட மலையில் உள்ள தன் ஆசிரமத்தை அடைந்தாள்.

இங்ஙனே ஸ்ரீஸ்காந்தபுராணத்திலும், ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தின் பாகமாக உள்ள பிரம்மாண்ட புராண பகுதியிலுமுள்ள ஹனுமன் பிறப்பின் சரித்திரத்திலும், திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறப்பிடம் என்னும் விளக்கங்கள் ஸ்ரீஆஞ்ஜனேய ஸ்வாமி அவதாரத் தலம் அஞ்ஜனாத்ரி எனும் பெயரில் தி.தி.தேவஸ்தானம் வெளியிட்ட இந்நூலில் ஆறாவதாக உள்ள புராணச் சான்றுகள் எனும் கட்டுரையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் உள்ள ஸ்ரீவராக புராணப் பகுதியிலும் கலியுகத்தில் வேங்கடாத்ரியே திரேதாயுகத்தில் அஞ்ஜனாத்திரி எனச் சொல்லப்பட்டுள்ளது.

*க்ருதே வ்ருஷாத்ரிம் வக்ஷ்யந்தி த்ரேதாயாம் அஞ்ஜனாசலம்*
*த்வாபரே சேஷசைலேதி கலௌ ஸ்ரீ வேங்கடாசலம்*
*அஞ்ஜனா ச தப: க்ருத்வா ஹனூமந்தமஜீஜனத்*
*ததா தேவாஸ்ஸமாகத்ய தேவஸாஹாய்ய காரகம்*
*யஸ்மாத் புத்ர மஸூதா Sஸௌ ஜகு! தஸ்மாத் இமம் கிரிம் அஞ்ஜனாத்ரிம்* [2]

---

1. பிரம்மாண்ட புராணம் தீர்தகண்டம் ப்ருகு நாரத ஸம்வாத: 5-68

2. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், ஸ்ரீவராக புராணம் 36-28,29

எனக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது அஞ்ஜனை இங்கு மகனுக்குப் பிறப்பு அளித்ததனால் இம்மலை அஞ்ஜனாத்ரியானது. இது போன்ற உதாரணங்கள் பல்வேறு பழமை வாய்ந்த இதிகாச புராண நூல்களில் ஹனுமன் பிறப்பு தலமாகக் கூறுவதற்கு தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை. எனவே மேற்குறிப்பிட்ட சான்றுகளை வைத்து ஹனுமன் அவதாரத்தலம் வேங்கடாத்ரியில் உள்ள ஆகாச கங்கா பகுதியில் உள்ள அஞ்ஜனாத்ரியே என்று நிரூபித்துக் காட்டலாம்.

### ஈ) ஹனுமனின் குழந்தைப் பருவம் :

பிரம்மாண்ட புராணத்தில் கூறியபடி பிரம்மாதி தேவதைகள் ஹனுமனுக்கு அனேக வரங்களை அளித்து அஞ்ஜனா தேவியிடம் அவள் இங்கு தவம் செய்து ஹனுமனுக்குப் பிறப்பளித்த காரணமாக இந்த வேங்கடாத்ரிக்கு அஞ்ஜனாத்ரி எனும் பெயரும் பிரசித்தி பெறும் என்று சொல்லிச் சென்றனர். அதன் பின்னர்

*அஞ்ஜனா புத்ரமாதாய ஸ்ரீவேங்கடகிரேஸ்தடம்*
*புனராகம்ய ஸாமோதமலஞ்சக்ரே நிஜாச்ரமம்* [1]

அஞ்ஜனாதேவி தன் குமாரனை எடுத்துக் கொண்டு ஆனந்தமாக வேங்கட மலையில் உள்ள தன் ஆசிரமத்தை அடைந்தாள் என்று உள்ளது.

இவற்றை வைத்து ஆஞ்ஜனேயரின் பிறப்பு மட்டுமே அன்றி தன் தாயோடு ஆஞ்ஜனேயர் இம்மலையிலேயே மேலும் சிறிது காலம் இருந்த விஷயத்தை கிரகிக்கலாம்.

### உ) திருவேங்கடமலையில் உள்ள தீர்த்தங்களோடு ஆஞ்ஜநேயருக்குள்ள தொடர்பு :

ஹனுமனின் குழந்தைப் பருவத்திலேயே பிரம்ம புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி அங்கு உள்ள தீர்த்தங்களில் இரண்டு தீர்த்தங்கள் ஆஞ்ஜநேயரோடு நெருங்கிய தொடர்புக் கொண்டு உள்ளன.

*வாயவ்யாம் திசி தீர்தானி சோத்தரஸ்யாம் ததைவச*
*ருஷிதீர்தம் மஹாபுண்யம் ஸதானந்தம் ஸுதீக்ஷணகம்*
*வைபாண்டகம் மஹாபுண்யம் பில்வதீர்தமத: பரம்*
*அதஸ்தாதிவிஷ்ணுதீர்தம்ச புண்யம் மாருதிநிர்மிதம்* [2]

வேங்கடாத்ரி மீதுள்ள 68 தீர்த்தங்கள் பக்தி, வைராக்கியத்தை அளிக்க வல்லன. அவற்றில் வாயவ்ய, உத்தர திசைகளில் உள்ள ருஷி தீர்த்தம், ஸதானந்த தீர்த்தம், சுதீக்ஷண, வைபாண்டக, பில்வ தீர்த்தம் அடுத்த விஷ்ணு தீர்த்தத்தை ஆஞ்ஜனேய ஸ்வாமி நிறுவியதாக மேற்குறிப்பிட்ட பிரமாண வாக்யம் கூறுகின்றது.

*அஸ்தி தீர்தம் சாஞ்ஜநேயம் சுத்தோதகமத: பரம்...* [3]

---

1. பிரம்மாண்ட புராணம் தீர்த்த கண்டம், ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், அஞ்ஜனாசலாபிதானஹேதுகதனம், 5-68.

2. பிரம்மாண்ட புராணம், ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், பக்தி வைராக்ய ப்ரதாஷ்டக்ஷஸ்டி தீர்த நாம வைபவ கதனம் 5-16,17,18

3. பிரம்ம புராணம், ஸ்ரீவேங்காடசல மாஹாத்மியம், மன்வாத்யஷ்டோத்தரசததீர்த நாமானுவர்ணனம் 6 -9.

அவ்வாறே திருமலையில் உள்ள 108 புனித தீர்த்தங்களில் ஸ்ரீஆஞ்ஜனேய தீர்த்தமும் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்படி ஆஞ்ஜநேய ஸ்வாமி பிறப்பு மட்டுமின்றி குழந்தையிலும் கூட அங்கேயே வசித்து அங்குள்ள கிரி, தீர்த்த, வனங்கள் முதலானவற்றை சேவிப்பதோடு அங்கு பக்தி ஞான பிரதமான விஷ்ணு தீர்த்தம் என்னும் ஒரு தீர்த்தத்தை நிர்மாணித்ததாகத் தெரிகிறது. அங்ஙனே அஞ்ஜனாத்ரியில் உள்ள மேலும் 108 புண்ணிய தீர்த்தங்களில் ஸ்ரீஆஞ்ஜநேய தீர்த்தமும் இருப்பது கவனிக்கத் தக்கது. இந்தளவிற்கு மிகத்தெளிவாக ஹனுமனின் பிறப்பிட விஷயத்தில் பாரத தேசத்திலேயே பிற எந்த பிரசித்தி பெற்ற ஹனுமன் தலத்தையும் ஹனுமன் பிறந்தத் தலமாக இரண்டு இதிகாசங்களான இராமாயண, மகாபாரதங்களிலும், எந்தப் புராணங்களிலும் குறிப்பிடப்படவில்லை. எனவே திருமலை அஞ்ஜனாத்ரியே ஹனுமனின் பிறந்தத் தலம் என்பதற்கு புராணம் முதலான இதிகாச இலக்கியங்களில் ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

## II) கல்வித் தலம் :

இனி ஹனுமனின் கல்வித் தலம் எது என்று அறிய உற்சாகம் பிறக்குதல்லவா. இதற்கு பதில் நமக்கு ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் உள்ள உத்தர காண்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் சுலோகத்தில் தெரிய வருகின்றது. அங்கு குறிப்பிட்டுள்ளபடி அவருக்கு கல்வி குரு சாக்ஷாத் கண்கண்ட நாராயண மூர்த்தியான சூரிய பகவானே. இனி கல்வி க்ஷேத்திரம் உதயாசலத்திலிருந்து ஹஸ்தாசலம் வரையுள்ள நபோ(ஆகாய) மார்க்கமே, அவர் கல்வியைக் கற்ற முறை குறித்து மிகவும் ஆனந்தத்தையும் ஆச்சர்யத்தையும் அளிக்கின்றது.

இங்கு ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் உள்ள 36 சர்க்கத்தில் சில முக்கிய விஷயங்கள் கவனிக்கத்தக்கவை. இந்திரனின் வஜ்ராயுதத்தால் அடிப்பட்டு மயக்கம் கொண்ட ஹனுமனுக்கு மகிழ்ச்சியைத் தூண்ட பிரம்மா பல்வேறு தேவதைகள் மூலம் எத்தனையோ விசிஷ்ட சக்திகளை ஹனுமனுக்கு அளிக்க முனைந்தார். அவர்களில் முன்னவர் இந்திரன், அதன் பின் சூரியன் அளித்த வரங்களின் மகிமை தெரிந்து கொள்ள வேண்டியவை.

இந்திரன் தன் வஜ்ராயுதத்தினால் அடித்த அடியைத் தாங்கின வலிமை மிக்க தாடையை(அனுவு)க் கொண்டிருப்பதால் ஆஞ்ஜனேயன் ஹனுமன் எனும் பெயரினால் புகழ் பெறுவான். இனி மேல் ஹனுமனை தன் வஜ்ராயுதம் ஏதும் செய்யாது என வரமளித்தார்.

*மார்தண்டஸ்த்வ ப்ரவீத் தத்ர பகவாம்ஸ்தி மி ரிராபஹ:*

**தேஜஸோSஸ்ய மதீயஸ்ய ததாமி சதிகாம் கலாம்** [1]

அதன் பிறகு இருளைப் போக்கும் மார்த்தண்டன் (சூரியன்) என்னுடைய ஒளியில் 100 வது களையை (100 பாக ஒளியினை) ஹனுமனுக்கு அளிப்பேன்.

*யதா ச சாஸ்த்ராண்யத்யேதும் சக்திரஸ்ய பவிஷ்யதி:*

*ததாஸ்ய சாஸ்த்ரம் தாஸ்யாமி யேன வாக்மீ பவிஷ்யதி*

**ந சாஸ்ய பவிதா கச்சித் ஸத்ருச: சாஸ்த்ரதர்சனே** [2]

---

1. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-13 2. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-14

இந்த பாலகனுக்கு சாஸ்திரம் கற்பதற்கு தகுந்த சக்தி வந்த உடனே சாஸ்திரத்தை கற்பிக்கிறேன். அப்பொழுது இவன் சிறந்த வாக்சாதுர்யம் உடையவனாவான். சாஸ்த்ர அறிவில் இவனை எதிர் கொள்பவன் எவனும் இருக்க மாட்டான்" என்று கூறினான். அதன் பின்னர் ஹனுமனின் சிறு குறும்புகளைக் கண்டு முனிவர்கள் வெறுத்து சாபமிட்டனர்.

*ருஷிசாபாஹ்ருதபல ஸ்ததைவ கபிஸத்தம:*
**ஸிம்ஹ: குஞ்ஜரருத்தோ வா ஆஸ்தித: ஸஹிதோரணே** [1]

முனிவர்களின் சாபத்தினால் தன் பலம் எவ்வளவோ குறைந்து கபி வீரன் ஆஞ்ஜனேயர் யானைக்கு நேர் எதிர் நின்ற சிம்மம் போல் ஆனார்.

*பராக்ர மோத்ஸாஹமநதி ப்ரதாப*
*ஸௌசீல்யமாதுர்யநயாநயைச்ச*
*காம்பீர்ய சாதுர்யஸுவீர்யதைர்யை:*
**ஹனுமத: கோSப்யதி கே உஸ்தி லோகே** [2]

பராக்ரமத்தில், உத்சாகத்தில், பிரதாபத்தில், ஸௌசீல்யத்தில், மாதுர்யத்தில் நல்லது கெட்டதை நிர்ணயிப்பதில், காம்பீர்யத்தில், சாதுர்யத்தில், வீர்ய தைர்யங்களில் ஹனுமனை விட மேலானவர் உலகத்தில் யார் உள்ளார்?

*அஸௌ புனர்வ்யாகரணம் க்ரிஹீஷ்யன்*
*சூர்யோன்முக: ப்ரஷ்டுமனா: கபீந்த்ர:*
*உத்யத்கிரேரஸ்தகிரிம் ஜகாம*
**க்ரந்தம் மஹாத் தாரயண ப்ரமேய:** [3]

ஒப்பற்ற அறிவுத் திறனுடைய ஹனுமன் எதிராக நின்று கேள்விக்கணைகளை தொடுத்து உதயகிரியிலிருந்து ஹஸ்தகிரிவரை சூரியனோடு சமமாக ஆகாயத்தில் பயணித்து வியாகரணங்களை கற்றான்.

*ஸஸுத்ர வ்ருத்தயர்தபதம் மஹார்தம்*
*ஸஸங்க்ரஹம் ஸித்யதிவை கபீந்த்ர:*
*நாஸ்தயஸ்தி கச்சித் ஸத்ருசோஉஸ்ய சாஸ்த்ரே*
*வைசாரதே சந்தகதௌ ததைவ* [4]

சூத்திரம், வ்ருத்தி, அர்த்தம், பதம், சுருக்கப் பொருளுடன் கூடிய சாஸ்த்திரத்தின் மீது உள்ள பிடிப்பு கொண்ட அந்த கபீந்திரனோடு பாண்டித்யத்திலோ தன்னார்வ இயக்கத்திலோ ஒப்பிடுவதற்கு எவருமில்லை.

*ஸர்வாஸு வித்யாஸு தபோவிதானே*
*ப்ரஸ்பர்ததே உயம் ஹி குரும் சுராணாம்*

---

1. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-43
2. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-44
3. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-45
4. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-46

*சோ உயம் நவவ்யாகரணார்தவேத்தா*
**ப்ரஹ்மா பவிஷ்யத்யபி தே ப்ரஸாதாத்** [1]

அனைத்துக் கல்வியிலும், தவத்திலும் தேவ குருவோடு சமமானவர் இந்த நவ வியாகரண மேதையான ஹனுமன்தான். இவனே எதிர்காலத்தில் வரப்போகும் பிரம்மா.

*ப்ரவீவிவிக்ஷோரிவ சாகரஸ்ய*
*லோகான் தித க்ஷோரிவ பாவகஸ்ய*
*லோககூஷயேஷ்வேவ யதா ந்தகஸ்ய*
**ஹனூமத: ஸ்தாஸ்யதி க: புரஸ்தாத்** [2]

ஹனுமனுக்கு எதிர் நிற்பதென்றால் சமுத்திரத்திற்குள் நுழைவதாகும். உலகினையே எதிர்க்கக் கூடிய அக்னிக்கு எதிரே நிற்பதாகும். உலகை அழிக்கக் கூடிய யமனுக்கு எதிர் நிற்பதாகும்.

உதயகிரியிலிருந்து மேற்கு மலைகள் வரை அதாவது கிழக்குக் கனவாய்களாகப் போற்றப்படும் மகேந்திர மலையின் ஒரு பகுதியே ஸ்ரீவேங்கடாத்ரி. எனவே வேங்கடாத்ரியிலிருந்து புறப்பட்டு நபோவீதியில் சூரியனோடு சம வேகத்தில் பயணித்து கல்வியைக் கற்றார் இந்த ஹனுமன் எனக் கூறலாம். எவ்வளவு அற்புத நிகழ்வு இது. பூமியின் சுழற்சியின் காரணமாக சூரியன் பூமண்டலத்தில் கிழக்கு மேற்கு மலைகளின் மையத்திலும் எந்தவொரு பகுதியிலும் நிலையாகக் காணப்படும் வாய்ப்பு இல்லை. எனவே, பூமியின் சுழற்சிக்கு சம வேகத்தில் ஆகாயத்தில் பயணித்து சூரியனிடமிருந்து கல்வியைக் கற்பது என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். மூவுலகிற்கும் உயர்ந்தவனாய் உள்ள சூரியனால் சுயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வீரன் ஆஞ்ஜநேயன். எனவே நபோ மண்டலம் ஹனுமனின் கல்வித் தலமாக விளங்குகிறது.

## III) காரிய க்ஷேத்திரம் (செயல்பாட்டுத்தலம்)

இனி ஹனுமனின் காரிய க்ஷேத்திரம் என்றவுடனே நினைவிற்கு வருவது கிஷ்கிந்தை, ருஷ்ய மூகம். காரணம் ஸ்ரீமத்ராமாயணத்திலும், ஸ்ரீமஹாபாரதத்திலும் பீமன் ஆஞ்ஜனேயன் உரையாடலில் கூறப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் உள்ள உத்திரகாண்டத்தில் சூரியனிடம் கல்விப்பயின்று முடிந்தவுடனே சூரியனின் கட்டளைக்கிணங்க ஹனுமன் தன் குழந்தைப் பருவத்திலேயே சூரியனின் திருமகனான சுக்ரீவனோடு அக்னி சாட்சியாக நட்புகொண்டு நல்ல நண்பனாகவும், தோழனாகவும் ஆனான் என்று சொல்லப்படுகிறது.

*சுக்ரீவேண சமம் த்வஸ்ய அத்வைதம் சித்ரவர்ஜிதம்*
**ஆபால்யம் சக்யம பவதனிலஸ்யாகனினா யதா** [3]

---

1. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 36-47.

2. வால்மீகி இராமாயணம், உத்தரக்காண்டம் 36-48.

3. வால்மீகி இராமாயணம், உத்திரகாண்டம் 36-40.

சுக்ரீவனோடு ஹனுமனுக்கு உள்ள நட்பு கலங்கமற்றது. கருத்து வேறுபாடு அற்றது. அது எப்படி எனில் அக்னிக்கு வாயு (காற்று) துணையாவது போன்று ஒளிர்விடுவதாகும். இத்தகைய நட்பை அவ்விருவரிடையே ஏற்படுத்தியது சூரிய பகவானே என்று வால்மீகி ராமாயணத்தில் உள்ள உத்தர காண்டத்தில் வாலி சுக்ரீவ பிறப்பு சரிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாலி சுக்ரீவ பிறப்பு சரிதம் :**

முன்பொரு காலம் மேருமலை இடையே உச்சியில் உள்ள பிரம்மலோகத்தில் பிரம்மாவின் சபையில், பிரம்மா யோக தியானத்தில் உள்ளபோது அவருடைய கண்ணிலிருந்து திவ்யமான கண்ணீர்த் துளிகள் பிறந்தன. அதைக் கையில் பிடித்து பிரம்மா பூமி மீது விட, அதிலிருந்து ஒரு மகாவானரன் தோன்றினான். அந்த வானரன் திவ்யமான பிரம்ம லோக மலர் வனத்தில் வெகு தூரம் திரிந்து அவ்வனத்தில் உள்ள திவ்ய பழங்களை உண்டு, புஷ்பங்களில் உள்ள தேனினைப் பருகி, பின்னர் பிரம்மாவிடம் வருவது வழக்கம். அந்த வானரன் தான் கொண்டு வரும் திவ்ய புஷ்பங்களால் அப்பிரம்மதேவனை பூஜித்து வந்தான்.

இங்ஙனே காலம் செல்லச் செல்ல ஒரு முறை அம்மலர் வனத்தில் உலவும் அந்த வானர வீரனுக்கு அதிக தாகம் எடுத்தது. தன் தாகத்தைப் போக்கிக் கொள்வதற்காக அவன் மேற்கு சிகரத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு பொய்கையில் இறங்கினான். திவ்ய சுந்தர வானரப் பெண்ணாக மாறினான். காமரூபிணியான அப்பெண்ணின் தேஜஸ்ஸிற்கு திசைகளெல்லாம் பிரகாசிக்கத் தொடங்கின. அந்த சமயத்திலேயே அங்கு பிரம்மாவை அர்ச்சிப்பதற்காக வந்த தேவேந்திரனின் பார்வை அப்பெண்ணின் மீது விழுந்தது.

இந்திரனின் தேஜஸ் அவள் திருமடி மீது பட்டது. உடனே அங்கு ஒரு மகா வலிமை மிக்கவனான மகா வானரன் பிறந்தான். இந்திரனுடைய தேஜஸ் அவனின் திருமடி மீது படவே வாலி என அவனுக்குப் பெயர் சூட்டினர். அதே சமயத்தில் அங்கு சூரிய பகவானும் வந்தான். அந்த வானர சுந்தரியைப் பார்த்து மோகித்தான். அந்த சூரியனின் தேஜஸ் அந்த சுந்தரியின் கழுத்தின் மீது பட்டது. அதன் விளைவாக வாலிக்கு நிகரான வடிவம், பலம், பராக்ரமம் உடைய மற்றொரு வாலி பிறந்தான். கழுத்தின் மீது பட்ட சூரிய தேஜஸ்ஸின் மூலம் பிறந்ததனால் அவன் சுக்ரீவன் எனப் பெயர் சூட்டப்பட்டான். தன் மகனான வாலியின் பாதுகாப்பிற்கு திவ்ய சக்தி பொருந்திய காஞ்சன மாலையை அளித்து இந்திரன் சொர்க்கத்திற்குச் சென்றான்.

*"சூர்யோSபி ஸ்வசுதஸ்யைனம் நிரூப்ய பவனாத்மஜம்*
*க்ருத்யேஷு வ்யவஸாயேஷு ஜகாம ஸவிதாம்பரம்"* [1]

இந்திரன் வாலிக்கு காஞ்சன மாலையை அளித்ததைப் பார்த்த சூரியன் தன் புத்திரன் சுக்ரீவனுக்கு அனைத்து செயலிலும் உதவியாக இருக்கத் தகுந்த நண்பனாக தன்னிடம் சகல வித்தைகளையும் கற்றுக் கொண்ட ஹனுமனை நண்பனாக்கினான். எனவே ஹனுமன் சூரியன் மூலமாக சுக்ரீவனின் அரசவையில் செயல்வீரனாக கிஷ்கிந்தையிலும் ருஷ்ய மூகத்திலும்

1. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 37-47

இருந்தான். அப்பொழுது பிரம்மா அங்கு நடந்த நிகழ்வு அனைத்தையும் தெரிந்து கொண்டு அந்தப் பெண்ணை மறுபடியும் ஆண் வானரமாக மாற்றினார். அவனே வாலி சுக்ரீவனின் தந்தையான ருக்ஷரஜஸ்ஸு. பிரம்மாவின் கட்டளைபடி தன் புத்திரர்களான வாலி சுக்ரீவர்களோடு ருக்ஷரஜஸ்ஸு பூ மண்டலத்தில் உள்ள வானர வீரர்களுக்கு எல்லாம் தான் அரசனானான். பின்னர் வாலியை அரசனாக்கி சுக்ரீவனை இளவரசனாக்கி சொர்க்கம் எய்தினான். அதன் பின்னர் அண்ணன் தம்பிகளின் பிரிவினால் பூமண்டலத்தில் உள்ள வானர அரசாட்சியில் சிலர் வாலி அரசவையிலும், சிலர் சுக்ரீவன் அரசவையிலும் சேர்ந்தனர் என்பது சுருக்கமான இராமாயணக் கதைச் சுருக்கம்.

இவ்வகையில் சூரியனின் கட்டளையை அனுசரித்து ஹனுமன் சுக்ரீவனுக்கு நண்பனாகவும், செயல்வீரனாகவும் ஆனான். இவ்விஷயம் மகாபாரதத்திலும் கூட உள்ளது.

### மகாபாரதத்தில் ஹனுமன் சுக்ரீவ நட்பிற்கான சூழல் :

இவ்விஷயத்தில் மகாபாரத சூழல் சிறிது விரிவாக இங்ஙனே உள்ளது.

*அஹம் கேசரிண: க்ஷேத்ரே வாயுனா ஜகதாயுஷா*
*ஜாத: கமல பத்ராக்ஷ ஹனுமான்நாம வானர:* [1]

நான் கேசரி க்ஷேத்ரம் (அதாவது கேசரி பத்னியான அஞ்ஜனா தேவிக்கு வாயுதேவனின் அருளால் பிறந்தேன் என் பெயர் ஹனுமன்.

*ஸூர்யபுத்ரம் ச ஸுக்ரீவம் சக்ரபுத்ரம் ச வாலினம்*
*ஸர்வே வானரராஜானஸ்ததாவானரயூதபா:* [2]
*உபதஸ்துர்மஹாவீர்யா மம சாமித்ர கர்ஷண* [3]

அன்று திரேதா யுகத்தில் வானர சமுதாயம் அனைத்தும் சூரியப் புத்திரனான சுக்ரீவனையும், இந்திரப் புத்திரனான வாலியையும் அடிபணிந்து இருந்தனர்.

*"ஸுக்ரீவேணாபவாத் ப்ரீதிரனிலஸ்காக்னினாயதா* [4]

வாயுவிற்கு அக்னியுடன் நட்பு உண்டானது போன்று எனக்கு சுக்ரீவனிடம் நட்பு உண்டாயிற்று

*நிக்ருத: ச ததோ ப்ராத்ரா கஸ்மிஞ்ச்சித் காரணாந்தரே"* [5]

ஏதோ காரணத்தினால் சுக்ரீவன் தன் சகோதரன் வாலியால் விரட்டியடிக்கப்பட்டான்.

*ருஷ்யமூகே மயா ஸார்தம் ஸுக்ரீவோ ந்யவசச்சிரம்* [6]

என்னோடு சுக்ரீவனும் ருஷ்யமூக மலையின் மீது நீண்ட காலம் நிவசித்தான். ருஷ்யமூகம் கிஷ்கிந்தையிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ளது என்கிற தகவல் இராமாயணத்தில் கிஷ்கிந்தை காண்டத்தில் ஸ்ரீராமன், சுக்ரீவன் முதலானோர் ருஷ்யமூகத்திலிருந்து கிஷ்கிந்தைக்கு சென்றதை வர்ணித்தார்.

*"அத தாசரதிர்வீரோ ராமோ நாம மஹாபல:*
*விஷ்ணுர்மானுஷ ரூபேண சசரா வஸுதாதலம்*

---

1. மஹாபாரதம், வனப்பர்வம் 147-27
2. மஹாபாரதம், வனப்பர்வம் 147-28
3. மஹாபாரதம், வனப்பர்வம் 147-29எ
4. மஹாபாரதம், வனப்பர்வம் 147-29பி
5. மஹாபாரதம், வனப்பர்வம் 147-30எ
6. மஹாபாரதம், வனப்பர்வம் 147-30பி

*ஸ பிது: ப்ரிய மன்விச்சன் ஸஹபார்ய: ஸஹானுஜ:*
*ஸதனுர்தன்வினாம் ஸ்ரேஷ்டோ தண்டகாரண்ய மாச்ரித: [1]*

இராமன் என்கிற பெயருடைய தசரத புதல்வன் சாக்ஷாத் மனித வடிவம் கொண்டு பூமிக்கு வந்த ஸ்ரீமஹா விஷ்ணுவே. அந்த இராமச்சந்திரன் தந்தைக்கு நன்மை செய்ய வேண்டித்தன் மனைவி தன் தம்பியோடு வில்லேந்தி கானகம் திரிந்தான்.

*ஹ்ருததார: ஸஹ ப்ராத்ரா பத்னீம் மார்கன் ஸ ராகவ:*
*த்ருஷ்டவாயின்சைல சிகரே சுக்ரீவம் வானரர்ஷபம் [2]*

அவனுடைய மனைவியை அபகரித்ததனால் அவளைத் தேடிக் கொண்டு இந்த மலையில் (ருஷ்ய மூகமலை) வானரனான சுக்ரீவனைச் சந்தித்தான்.

*தேன தஸ்யபவத் ஸக்யம் ராகவஸ்ய மஹாத்மன:*
*ஸ ஹத்வா வாலினம் ராஜ்யே சுக்ரீவ மபீஷிக்தவான் [3]*

இராகவனுக்கு சுக்ரீவனோடு அங்கு நட்பு ஏற்பட்டது. இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனை வானர சாம்ராஜ்ஜியத்தின் அரசனாகப் பட்டாபிஷேகம் செய்வித்தான்.

*வானரான் ப்ரேஷயாமாஷ சததேSத ஸஹஸ்ரச: [4]*

இராமனால் இராஜ்ஜியத்தைப் பெற்ற சுக்ரீவன் நூறு, ஆயிரக்கணக்கான வானரர்களை சீதையைத் தேடுவதற்காக எல்லா திக்கிலும் அனுப்பினான்.

*ததோ வானரகோடீபி:ஸகிதோஉஹம் நரர்ஷப*
*ஸீதம் மார்கன் மஹாபாஹோ ப்ரயாதோதக்ஷிணாம் திசம் [5]*

அந்த வானரக் கூட்டத்தோடு நானும் சீதாப்பிராட்டியைத் தேடித் தென் திசையில் சென்றேன் எனக் கூறினான்.

## கிஷ்கிந்தா, ருஷ்யமூகத்தைக் காட்டிலும் அஞ்ஜன மலை வேறு

கிஷ்கிந்தை, ருஷ்யமூகம் அஞ்ஜனாத்ரியைக் காட்டிலும் வேறானது என்னும் விஷயமும் இராமாயணத்தில், சீதையைத் தேடுமாறு அந்தந்தப் பகுதிகளைக் குறிப்பிட்டு ***“அஞ்ஜனே பர்வதே சைவ யே வஸந்தி ப்லவங்கமா:”*** [6] அஞ்ஜனை மலையில் வசிக்கும் வானர வீரர்களையும் அழையுங்கள் என்று சொல்வதினால் அஞ்ஜன கிரி, கிஷ்கிந்தா, ருஷ்யமூகத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்று அறிய முடிகிறது. எனவே ஹனுமனின் பிறப்பிடம் அஞ்ஜனாத்ரி. கார்ய க்ஷேத்திரம் ருஷ்யமூகம் மற்றும் கிஷ்கிந்தை என்பது தெளிவாக அறிய முடிகிறது. இங்ஙனே தன்னுடைய கல்விகற்றல் முடிந்ததிலிருந்து கிஷ்கிந்தை, ருஷ்யமூகத்தில் சுக்ரீவனின் அரசவையைத் தன் கார்ய க்ஷேத்ரமாக செய்து கொண்டு, இராம இராவண யுத்தம் முடியும் வரை சுக்ரீவனின் அமைச்சனாகவே தன் கடமையை நிர்வகித்தான். எனவே ஹனுமனின் பிறப்பிடம் போன்றே அவனுடைய கார்ய க்ஷேத்ரமான கிஷ்கிந்தையும் ஹனுமனின் பக்தர்களுக்கு தரிசன வழிபாட்டுத் தலமேயாகும்.

---

1. மஹாபாரதம், வனப்பர்வம் 147-31,32 2. மஹாபாரதம், வனப்பர்வம் 148-1 3. மஹாபாரதம், வனப்பர்வம் 148-2
4. மஹாபாரதம், வனப்பர்வம் 148-3 5. மஹாபாரதம், வனப்பர்வம் 148-4 6. வால்மீகி இராமாயணம், கிஷ்கிந்தா காண்டம், 37-5

## IV) சேவா க்ஷேத்ரம் :

ஹனுமன் ஸ்ரீராமனை ருஷ்யமூகத்தில் பார்த்ததிலிருந்து இராமனைத் தன் தலைவனாகவும், தான் இராமனின் அடியவனாகவுமே பாவித்தான். அந்த பாவனை ஹனுமனின் மனதில் இன்றும், என்றும், நித்யமாய், சத்தியமாய் நிலைத்துள்ளது. இது குறித்தே

*"தேஹத்ருஷ்ட்யாது தாஸோஹம் ஜீவ திருஷ்ட்யா த்வதம்சக:*
*வஸ்துதஸ்து த்வமேவாஹமிதி மே நிச்சிதா மதி:* [1]

எப்பொழுதும் ஸ்ரீராமனை ஸேவிக்கும் பக்த சிகாமணி ஹனுமன். எனவே இராவண வதைக்குப் பின் ஸ்ரீராமனின் திருவடி நிழலில் அயோத்தியிலேயே ஸ்ரீராம சேவா பாக்கியத்தைப் பெற்றான் ஹனுமன். வால்மீகி ராமாயணத்தில் உத்தரகாண்டத்தின் இறுதியில் ஸ்ரீராம அவதாரம் முடியும் வேளையில் ஸ்ரீராமனுக்கும் ஹனுமனுக்கும் இடையே இங்ஙனம் உரையாடல் நடைபெற்றது.

*தமேவ முக்த்வாகாகுத்ஸ்தோ ஹனூமந்த மதாப்ரவீத்* [2]

விபீஷணனுக்குச் சொல்ல வேண்டிய இதத்தை போதித்து ஹனுமனிடத்தே இராமர் இவ்வாறு கூறினார்.

*ஜீவிதே க்ருதபுத்திஸ்த்வம் மா பிரதிஞ்ஜாம் வ்ருதாக்ருதா:*
*மத்கதா: ப்ரசரிஷ்யந்தி யாவல்லோகே ஹரீச்வர*
*தாவத் ரமஸ்ய ஸுப்ரீதோ மத்வாக்யமனுபாலயன்* [3]

ஓ கபி அரசனே! இவ்வுலகில் இராமர் கதை உள்ளளவும் சிரஞ்சீவியாக இருப்பேன் என்று வாக்களித்தாய். எனவே உறுதிமொழிக்கு கலங்கம் விளைவிக்காதே. அது வரை என் கட்டளையை கடைபிடித்து என் கீர்த்தனையில் ஆனந்தத்தைப் பெறுவாயாக.

*ஏவமுக்தஸ்து ஹனுமான் ராகவேண மஹாத்மனா*
*வாக்யம் விஞ்ஜாபயாமாஸ பரம் ஹர்ஷமவாப ச*
*யாவத் தவ கதா லோகே விசரிஷ்யதி பாவனீ*
*தாவத் ஸ்தாஸ்யாமி மேதின்யாம் தவாஞ்ஞாமனு பாலயன்* [4]

ஸ்ரீராமனின் பேச்சிற்கு அடிபணிந்து பதிலளித்து எவ்வளவோ ஆனந்தத்துடன் "ஓ பரம பாவன மூர்த்தி இராமச்சந்திரா!" உலகில் உன்னுடைய கதையை கீர்த்திக்கும் வரை நான் இப்பூமண்டலத்தில் உன் அடியவனாய் இருப்பேன் என்று பதில் அளித்தான். அங்ஙனே இராமாவதாரம் முடியும் வரை ஹனுமன் அயோத்தியிலேயே இருந்தான் என்கிற விஷயம் ஸ்ரீமத்வால்மீகி இராமாயணத்தில் உத்தர காண்டத்தில் சொல்லப்பட்டது. ஸ்ரீராமாவதாரம் முடிந்த உடனே ஹனுமன் அயோத்தியிலிருந்து கந்த மாதனத்திற்குச் சென்றான்.

## V) நிவாச க்ஷேத்ரம் :

அந்த இராமாவதாரம் முடிந்து திரேதா யுக இறுதி பகுதியிலிருந்து இன்று வரை கந்த மாதன மலையே ஹனுமனுக்கு நித்ய நிவாச ஸ்தலமாய் உள்ளது. ஸ்ரீமத்பாகவதம் முதலான

1. ஸூக்தி சுதாகர், ஹனுமத் ஸூக்தி 40.
2. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 108-32
3. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 108-33,34.
4. வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், 108-34,35,36

புராணங்களில் சொல்லப்பட்டபடி இந்த கந்தமாதன மலை இமாலயத்திற்கு மேற்கிழக்கில், ரோமகா நகரத்திற்கு மேல்வடக்காக உள்ளது. இது பத்ராஷ்வ, கேதுமால மலைகளுக்கு எல்லை மலையாக உள்ளது. இது நீலா–நிஷதா மலைகள் வரை வியாபித்துள்ளது. ஹனுமன் இங்கே உள்ளான் எனும் விஷயம் மகாபாரதத்தில் வன பருவத்தில் இங்ஙனே சொல்லப்பட்டது.

அது துவாபர யுகம். பாண்டவர்கள் வனவாசம் செய்யும் சமயம். அவர்கள் ஆங்காங்கே திரிந்து கொண்டு இந்த கந்தமாதன மலைப்பகுதிக்கு வந்தனர். இச்சுற்றுப்புறத்தில் காற்றலைகள் மூலம் மணம் வீசும் ஸௌகந்திகா புஷ்ப நறுமனத்தை உணர்ந்த திரௌபதி பாண்டவர்களிடம் தனக்கு தெய்வார்ச்சனைக்கு அப்பூ வேண்டும் என குறிப்பாக பீமனைக் கேட்டாள். மிகவும் வலிமை மிக்க பலசாலியான பீமசேனன் அப்புஷ்பத்திற்காக அலைந்து திரிந்து ஓடி கொண்டு இங்கு வந்தான். இப்பிரதேசத்தில் அச்சமயத்தில் ஒரு கதலிவனம் (வாழைத் தோட்டம்) இருந்தது.

அத்தோட்ட வழியில் ஒரு முதுமையான ஒரு வானரம் உட்கார்ந்திருந்தது. அதனை எழுப்பி அங்கிருந்து அனுப்ப வேண்டும் என பீமசேனன் எண்ணினான். ஆனால் முதுமை வானரம் எழுந்திருக்கவும் வில்லை/பயம் கொள்ளவும் இல்லை. ஒரு அடி கூட பக்கத்திற்கு நகர வில்லை. “வானரங்களின் வாலினை தாண்டுதல் கூடாது என்பதால் வழியில் இருந்து ஒதுங்கும் படி அவ்வானரத்தை பீமசேனன் கூறினான். அதற்கு அவ்வானரம் ஒப்புக் கொள்ளவில்லை. தான் வயதானவன். முடிந்தால் என்னை தூக்கிக் கொண்டு காலைப் பக்கத்தில் விட்டு முன்னுக்குச் செல்லும்படி பீமசேனனுக்கு கூறினான். பீமசேனனுக்கு அப்பேச்சு சிறிதும் பிடிக்கவில்லை. அவ்வானரத்தைப் பக்கத்திற்கு நகர்த்த அரும்பாடுபட்டான் இயலவில்லை. அப்பொழுது பீமசேனனுக்கு ஞானோதயம் பிறந்தது. அங்கு வானர வடிவில் இருப்பது சிவனோ, தேவதேவனோ அல்லது ஹனுமனோ என வியந்தான் பீமன். அதைக் காதில் கேட்டு இன்புற்ற ஹனுமன் தன் முதுமை வேடத்தை விடுத்து தன் உண்மை வடிவினை பீமனுக்குக் காட்டி, வரப்போகும் குருக்ஷேத்திர யுத்தத்தில் நான் அர்ஜுனன் தேர்க்கொடியில் உயிர் சின்னமாக விளங்குவேன் என வாக்களித்தான். பீமனும் தன் சகோதரனின் திவ்விய வடிவினை பார்த்து ஆனந்தப் பரவசமடைந்தான். அப்பொழுது அவ்விருவர் இடையே நிகழ்ந்த உரையாடலில் தான் எதற்கு இந்த கந்தமாதன மலையை தன் நிவாசமாக தேர்வு செய்தானோ அதை பீமனிடத்தே உரைத்தான்.

***சீதா ப்ரசாதாச்ச சதா மாமிஹஸ்த மரிந்தம***
***உபதிஷ்டந்தி மே திவ்ய (திவ்யாஹி) போகாபீம யதேப்சிதா:*** [1]

இராமனின் அன்போடும் சீதம்மாவின் அருளோடும் நான் இந்த கந்தமாதன மலைப் பகுதியில் நிவசிக்கின்றேன். பத்தாண்டு காலம் அயோத்தியை ஆண்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி வைகுந்தத்திற்கு புறப்பட்டு போனதிலிருந்து நான் இங்கேயே உள்ளேன்.

***தஸவர்ஷசஹஸ்ராணி தஸவர்ஷ ஸதானி ச***
***ராஜ்யம் காரிதவான் ராமஸ்தத: ஸ்வபவனம் கத:***
***ததிஹாப்சர ஸ்தாத கந்தர்வாச்ச சதானக***
***தஸ்ய வீரஸ்ய சரிதம் காயந்தோ ரமயந்தி மாம்*** [2]

---

1. . மஹாபாரதம், வனப்பர்வம் 148-18. 2. மஹாபாரதம், வனப்பர்வம் 148-19,20.

காரணம் அவர்கள் அருளால் எனக்கு இங்கு அனைத்து திவ்விய யோகங்களும் கிடைக்கின்றன. அதோடு இந்த கந்த மாதனத்தில் அப்சரஸ்ஸுகள், கந்தர்வர்கள் நித்தியமாய் அந்த ஸ்ரீராமச்சந்திரனின் திவ்ய வீர சரித்திரத்தை மனம் உருகப் பாடி என்னை ஆனந்தம் கொள்ள வைக்கின்றனர்.

*அயம் ச மார்கோ மர்த்யாநாமகம்ய: குரு நந்தன*
*ததோ஽ஹம் ருத்தவான்மார்கம் தவேமம் தேவசேவிதம்* [1]

இவ்வழி மானிடர்கள் செல்லக்கூடிய வழி அல்ல. அதனாலேயே உனக்கு உதவி செய்யவே இந்த தேவதைகள் உலாவும் வழியில் நீ செல்வதைத் தடுத்தேன் என்று ஆஞ்ஜநேய ஸ்வாமி பீமசேனனிடம் உரைத்ததை வைத்து பார்த்தால் திரேதா யுகத்தில் ஸ்ரீராமவதார முடிவிலிருந்து துவாபர யுகம் முடிவில் குருக்ஷேத்திர போர் ஆரம்பம் வரை ஹனுமன் கந்தமாதன மலைமேல் வாழ்ந்தான். குருக்ஷேத்திர போரில் அர்ஜுனனின் தேரில் தேர்க்கொடியாக இருந்து தன் கர்ஜனையில் பாண்டவர்களுக்கு வெற்றியை பிராசாதித்து மறுபடியும் கந்த மாதன மலைக்குச் சென்றான். இங்ஙனே கந்தமாதன மலை ஹனுமனின் நித்திய நிரந்தர நிவாசமானது.

இதனோடு "யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ரதத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம் மாருதிம் சமத ராக்ஷசாந்தகம்" என்று புகழ் பெற்ற மாருதி ஸ்தோத்திரத்தில் கூறியபடி எங்கெல்லாம் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் கீர்த்தனை ஒலிக்கிறதோ அங்கெல்லாம் தலைக் குனிந்து வணங்கி ஆனந்தக் கண்ணீரை பொழிந்துக் கொண்டிருக்கும் ஹனுமனுக்கு அஞ்சலி செலுத்துங்கள் என்னும் படியாக, ராமபக்த இல்லங்களில் நித்திய நிவாசி ஹனுமன் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு ஹனுமன் பிறந்தது முதல் இன்று வரை ஹனுமனுடைய திவ்விய சரித்திரத்தில்...

ஜன்ம க்ஷேத்திரம் திருமலையில் உள்ள அஞ்ஜனாத்ரி ஆனது. வித்யா க்ஷேத்திரம் அஞ்ஜனாத்ரி முதல் மேற்கு மலைகள் வரை ஆகாய மார்க்கம் மொத்தம் ஆனது. காரிய க்ஷேத்திரம் கிஷ்கிந்தை ஆனது. ஸ்ரீராமச்சந்திரனை ஹனுமன் சேவித்து வந்ததால் அயோத்தி சேவா க்ஷேத்திரம் ஆனது. ஹனுமனுடைய நித்திய நிவாச க்ஷேத்திரம் கந்தமாதன மலையானது.

இந்த ஐந்தில் ஹனுமான் பிறந்த அஞ்ஜனாத்ரி, காரிய க்ஷேத்திரமான கிஷ்கிந்தா ஸ்ரீராமச்சந்திரனை ஹனுமன் சேவித்த அயோத்தியும் மூன்றும் இன்றும் பக்த கோடிகளுக்கு கேட்ட வரங்களைக் கொடுக்கும் கற்பக விருக்ஷமாக விளங்கும் திவ்விய க்ஷேத்திரங்களாகத் திகழ்கின்றன. அனைவரும் தரிசித்தும் வருகின்றனர். ஆனால் வித்யா க்ஷேத்திரமான ககன மண்டலம், ஹனுமன் நித்திய நிவாச க்ஷேத்திரமான கந்தமாதன மலை மானிடர்கள் செல்ல இயலாதவை. எனவே திருமலை அஞ்ஜனாத்திரி, கிஷ்கிந்தா, அயோத்தியைப் பக்தர்கள் தரிசித்து பேரருள் பெறுவார்களாக.

******

1. மஹாபாரதம், வனப்பர்வம் 148-21.

அஞ்ஜனாதேவியின் திருக்கரங்களில் ஹனுமன் - பிரம்மாதி தேவதைகள் வரமளித்தல்



# அத்தியாயம் - 15

# 15. ஐயமும் - பதிலும்

1) கேள்வி : கர்நாடகத்தில் ஹம்பி க்ஷேத்திரத்தில் உள்ள மலையே அஞ்ஜநாத்ரி என்று கூறப்படுகிறது. ஹனுமன் இங்கேயே பிறந்தார் என்பது அங்குள்ள மக்களின் நம்பிக்கை. இதை எப்படி இல்லை என்று சொல்வீர்கள்?

பதில் :

1) வால்மீகி இராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் ஹனுமன் தன்னைப் பற்றி சீதாபிராட்டியிடம் சொல்லும் போது ***"தஸ்யாஹம் ஹரிண: க்ஷேத்ரே ஜாதோ வாதேன மைதிலீ"*** மால்யவான் என்ற பெயரை உடைய மலையிலிருந்து கோகர்ணம் என்ற ஊருக்குச் சென்ற என்னுடைய தந்தையான கேசரி தேவர்களாலும் முனிவர்களாலும் பிரார்த்திக்கப்பட்டவனாய், அந்த தீர்த்தத்தை அழித்துக் கொண்டு இருக்கும் "சம்பஸாதனன்" என்ற அசுரனைக் கொன்றார்.

இவ்வாறாக வனவாசத்தில் அவருடைய (கேசரி) மனைவியான(க்ஷேத்ரே) அஞ்ஜனா தேவிக்கு நான் பிறந்தேன் என்று கூறினார். இங்கு க்ஷேத்ரம் என்ற வார்த்தைக்கு மனைவி என்று கோவிந்த ராஜீய வ்யாக்யானத்தில் பொருள் சொல்லப்பட்டுள்ளது. அமரகோசம், மேதினீ கோசமும் இப்பொருளையே சொல்லுகிறது. சிலர் நம்பும்படி ஹம்பி க்ஷேத்ரம் இல்லை.

2) சீதையைத் தேடுவதற்காக சுக்ரீவன் தன்னுடைய மந்திரியான ஹனுமனிடம் எல்லா திசைகளிலிருந்தும் வானர வீரர்களை வரச் சொல், அப்படியே அஞ்ஜன மலையில் வசிக்கும் வானர வீரர்களையும் வரச் சொல் என்று ஆணையிட்டார். கிஷ்கிந்தா ராஜ்யமே அஞ்ஜன மலை என்றால் இவ்வாறாக ஆணையிடுவது பொருளற்றதாகும். ஆகையால் கிஷ்கிந்தை என்பது வேறு. அஞ்ஜன மலை என்பது வேறு.

3) கர்நாடகத்தில் ஹம்பி க்ஷேத்திரத்திற்கு அருகில் உள்ள மலைகள் எல்லாமே கிஷ்கிந்தை என்று புகழ் பெற்றதாகும். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின்படி ஹனுமன், ஸ்ரீராம லக்ஷ்மணர்களை இங்கேயே சந்தித்தார். ஆஞ்ஜநேயருடைய பிறந்தத் தலமாக மேலே சொல்லப்பட்ட (அழைக்கப்படுகிற) அனைத்து பிரதேசங்களைக் காட்டிலும் திருமலைக்கே "ஹம்பி" மிகவும் அருகில் உள்ளது. (363 கி.மீ.) ஆகையால் ஆஞ்ஜநேயர் தன்னுடைய பிறந்த பூமியான அஞ்ஜனாத்ரியில் இருந்து ஹம்பிக்குச் சென்றார் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

4) ஹம்பியில் உள்ள கன்னட பல்கலைக் கழகத்தில் இதனைப் பற்றி ஆய்வு செய்த முனைவர் வாசுதேவன் அவர்களிடம் இதைப் பற்றி பேசினோம். "ஹம்பி க்ஷேத்திரத்தில் உள்ள மலை அஞ்ஜனாத்ரி என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாகும். இதை நிரூபிப்பதற்கு எங்களுக்கு எந்தவிதமான ஆதாரங்களும் கிடைக்க வில்லை" என்று அவர் கூறினார். ஆய்வு செய்த நூல்களில் எங்கும் ஆஞ்ஜநேயரின் பிறப்பிடம் குறித்து எதுவும் எழுதப்படவில்லை.

2) இங்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஊர்கள் ஹனுமனின் பிறப்பிடங்களாகச் சொல்லப் பட்டுள்ளது அல்லவா? இவற்றை எவ்வாறு மறுப்பீர்கள்?

பதில்:

1) ஜார்க்கண்ட் மாநிலத்தில் கும்ளா மாவட்டத்திற்கு 21 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அஞ்ஜன என்ற கிராமத்தில் உள்ள குகையை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் சுற்றுப்பயணம் செய்து ஆஞ்ஜநேயரின் பிறப்பிடம் இங்கு ஏதும் இல்லை, ஸ்ரீ வேங்கடாசலத்தில் உள்ள "அஞ்ஜனாத்ரியே" என்று அங்கு புகழ் பெற்ற மஹந்தான சுவாமி கோபால ஆனந்த பாபாவிடம் எழுதிக் கொண்டு அங்குள்ள கைவாய சந்தேசம் என்ற பத்திரிகையில் (வருடம் 12, அங்கம் 5–6, மே, ஜுன் 2011) வெளியிட்டார்கள்.

2) குஜராத்தில் நவசாரி என்ற பகுதியில் "டாங்" என்ற ஊர் தண்டகாரண்யம் என்று பிரசித்தம். இங்குள்ள அஞ்ஜன மலையில் உள்ள அஞ்ஜனீ குகை.

3) ஹரியானாவில் உள்ள இப்போதைய கைத்தல் என்ற ஊர்.

4) மஹாராஷ்டிரா நாஸிக் மாவட்டத்தில், த்ரயம்பகேஸ்வரத்திற்கு ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் "அஞ்ஜனேரி" என்கிற மலைப் பிரதேசம்.

மேலே சொல்லப்பட்ட பிரதேசங்களில் ஹனுமன் பிறந்தார் என்பது மக்களின் நம்பிக்கை மாத்திரமே. ஆனால் இவற்றை ஆஞ்ஜநேயரின் பிறப்பிடங்களாக நிரூபிப்பதற்கு சரியான ஆதாரங்களோ, ஆவணங்களோ இல்லை.

| | | |
|---|---|---|
| 1) கும்ளா | – | ஹம்பியிலிருந்து 1240 கி.மீ. |
| 2) டாங் | – | ஹம்பியிலிருந்து 666 கி.மீ. |
| 3) கைத்தல் | – | ஹம்பியிலிருந்து 1626 கி.மீ. |
| 4) த்ரயம்பகேஸ்வரம் | – | ஹம்பியிலிருந்து 616 கி.மீ. |
| 5) திருமலை | – | ஹம்பியிலிருந்து 366 கி.மீ. |

******

அஞ்ஜனாதேவியின் மைந்தனான ஆஞ்ஜநேயனை கீர்த்தனையாளர்கள் போற்றுதல்



# பின் இணைப்பு-1

## பின் இணைப்பு-1 :: சவால் - ஏ - ஜவாப்

இது திருமலையில் உள்ள திருவேங்கடமுடையான் ஆலயம் குறித்து எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் கி.பி. 1801–2ல் இயற்றப்பட்டு திரு. வி.என். ஸ்ரீநிவாசராவ் அவர்களால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு 1950ல் அச்சிடப்பட்டது.

### INTRODUCTION

The first Collector of North Arcot was Mr. Stratton who was then styled the Collector, Western Poliams. He made very careful and exhaustive enquiries not only about the teritory entrusted to him but also about the history, tradition and resources of this temple. He asked a series of questions on all aspects of its administration and answers were furnished by those in actual management of the affairs of the temple and the information gathered from these questions and answers is locally known as "Sawal-e-Jawab" account. The arrangements he made for the management of the temple were mostly based on these reports. He constituted the country round Tirupati into a Taluk and the Tahsildar of Tirupati was in direct management of the temple which was expressed by the term "Amani" as against the previous practice of farming out the revenues to renters annually. The following questions and answers relating to the ***Sthalapurana*** of the temple.

The manuscript under translation is in the official style of the early nineteenth century and is undoubtedly genuine. The internal evidence in it shows that it was prepared in Falsi 1213, i.e., 1801-2 A.D.

**Q3. Which is the mountain going by the name of Tirumalai-Tirupati and Seshachalam?**

**Ans.** In the middle of the earth, which is (Panchasatkoti) five hundred crores of miles in extent, there is a great mountain called the Mahumeru which is golden in colour. One of the peaks of this Kind of mountains is known as Shesachalam, also as the son of Meru. **(Chapter 26 of Vamana Purana)**

**Q4. When and by whom was Seshachalam brought here from Mahameru ?**

**Ans.** Many years ago in Sri Vaikunta in the presence of the Lord a dispute arose between Vayu and the thousand-headed Adi Sesha as to who was more powerful. In the contest, Adi Shesha opened his thousand head and grasped tightly one of the peaks of mount Meru. In his attempt to blow Adi Sesha away together with the peak, Vayu raised a terrible tempest which shook the heavens. Indra and the other Devas prayed to Adi Sesha (Ananta), who is

the embodiment of satvaguna, to concede victory to the rude Vayu by releasing his hold of one of his hoods on the peak. On his doing so, a portion of the peak was blown away and falling here became Shesachalam.

**Q5. What is the extent of his range, north to south and east to west?**

**Ans.** According to **Brahmandapurana,** this range extends five thousand miles north to south and five hundred miles east to west.

**Q6. Why is this mountain range called Seshachalam ?**

**Ans.** The Lord intending to reside here sent Adi Sesha in advance and he was asked to remain here in the form of a mountain range. As Adi Shesha himself is here in the form of a mountain, the range is called Sheshachalam. **(Chapter 3 of Brahmandapurana.)**

**Q7. How did it aquire the name of Venkatachalam ?**

**Ans.** Once a Brahmin guilty of incest with a Chandala woman consulted Rishi Vasista as to the best mode of getting rid of the sin. On his advice he came here on a pilgrimage. No sooner than he reached the top of the hill, his body burst into flame like a cracker. Soon he was found standing uninjured but with a brighter and more handsome form than before. Only his sins had been consumed away in flames. The Devas and Rishis who witnessed this miracle, named the hill **Venkatadri** or the extinguisher of sins. This is stated in **chapter-1 of the Varaha Purana.**

**Q 8. What are the various names applied to this range and under what circumstances was each of them aquired ?**

**Ans.** Several names are given to this range in Brahmapurana and in chapter 4 and 5 of Brahmandapurana. Some among them are (1) Seshachalam (2) Vrishadri (3) Vrishabhadri (4) Venkatachalam (5) Narayanadri (6) Garudadri **(7) Anjanadri** and (8) Svarnadri.

All names of adries are justified with reasons.

***Vrishadri :*** As there are many sacred thirthams on this range it is called Vrishadri.

***Garudadri :*** As Garuda brought this hill from Sri Vaikunta for the sport of the Lord it is called Garudadri.

***Narasimhadri :*** As there is the shrine of Narasimha in the centre of this range it is known as Narasimhadri.

***Anjanadri :*** As Anjana Devi begot Anjaneya, the great general of Sri Rama, by performing penance here, it is called Anjanadri.

(Note : Explanation for Svarnadri not furnished. This peak is a part of the Golden Mountain - Mount Meru.)

**Q 22. What are the various sacred names of this Lord ? Who all worshipped the Lord and what objects had been attained by them?**

**Ans.** The most current names of this Lord are Sri Venkatesvara and Srinivasa. But His names are innumerable. Gods such as Brahma and sages such as Agastya, did great penance to Him and achieved their hearts' desires. King Dasharatha did penance for about ten thousand years and obtained sons. Anjanadevi worshipped Him and begot Anjaneya. Many Brahmins and Kings worshipped Him and attained their objects.

**Q 26. Did Sri Rama at any time visit this shrine ?**

**Ans.** In Kritayuga Sri Rama camped on this Hill for a night along with his monkey horde on his march to Ravana's kingdom. Then, Hanuman and other monkeys roaming about in neighbourhood entered the **Vaikunta cave** and seeing the splendour of a vision of Lord Srinivasa, came out in wonder and narrated their adventure to Sri Rama. Sri Rama, thinking that it did not behove him to admit that it was all due to his own power of maya, explained to the monkeys that the wonder was all due to the mountain itself. While returning along with Sita and Lakshmana, **after killing Ravana, Rama dwelt at Tirupati for sometime.** The temple of Kodandaramasvamy at Tirupati **commemorates this visit.** In this temple Sri Rama, Sita and Lakshmana stay in the form of idols and bless their devotees fulfilling their desires. This account is found here and there in several puranas and also in **Varahapurana.**

**Q 36. What are the original sources for the Venkatachala Mahatmyam ?**

**Ans.** It is said in the Upanishads that this Lord is the all pervading Vishnu present in Vaikunta, on the earth and everywhere. In the Taittiriyopanishad, in the fifth parva called 'Narayanam', it is stated that the Lord shines at the further end of the water, in the middle of this earthly region, and that He makes the other elements shine through His own light. This is quoted from the commentary of Vidyaranya on the said Upanishad. In the eighteen puranas, including the Mahabharata, the sanctity of this shrine has been recorded. It is said that the inscriptions on the temple walls also give such details.

******

ஹனுமத் வாகனத்தில் சீதா,லக்ஷ்மண சமேத
ஸ்ரீகோதண்டராமஸ்வாமி, ஒண்டிமிட்டா



## ஸ்ரீராம சுக்ரீவ நட்பு



# பின் இணைப்பு-2

# பின் இணைப்பு-2 :: கல்வெட்டுகள்

## INSCRIPTIONS OF SALUVA NARASIMHA'S TIME

உ ல அடைக்காயமுது ௱ இலையமுது உ௱ திருக்கொடித்திருநாள்
இரண்டு[க்கு] எழாந் திருநாளில் அமுதுசெய்தருளும் அப்பப்படி
உ க்கு அமுதுபடி

10 ச ५ நெய்யமுது ச வ சக்கரையமுது உ௱ ல மிளகமுது ௲ திரு-
வொலக்கத்தில் ப்ரஸாதிக்கச் சந்தனம் க ல அடைக்காயமுது உ௱
இலையமுது ச௱ ஆக இந்த [1]வகைப்படியள் ஸ்ரீபண்டாரத்திலெ விட்டு
அமுதுசெய்தருளக்கடவாராகவும் அமுதுசெய்தருளின ப்ரஸாதத்தில்
திருப்பாவாடை ப்ரஸாதம் உள்ளதும் திருவொலக்க[ம்*] மூன்றிலும்
விட்டவன் விழுக்காடு ப்ரஸாதம் அக்காளிப்ரஸாதம் உள்ளது ஸ்ரீ-
பண்டாரத்திலெ சமைகூலி இட்டு எடுப்பித்து கறிகாய் தயிர் [2]இலை-
யளும் பாக்கு து வெற்றிலை உது (ச்)சந்தனம் உல [3]ல-

11 மும் ஆகாசகங்கையிலெ கொண்டு பொய் ஸ்நானத்தார் முதலான எல்-
லாரும் பிரஸாதிப்படக்கடவதாகவும் நிக்கி நின்ற அப்பப்படி எட்டி-
லும் கொவிந்தராஜரு அமுதுசெய்தருளின திருவொலக்கத்திலும்
எழாந் திருநாளில் அப்பப்படி இரண்டிலும் விட்டவரு விழுக்காடு
ப்ரஸாதம் அப்பப்ரஸாதம் உள்ளது தாமெ பெறக்கடவாராகவும்
நிக்கி நின்ற ப்ரஸாதம் அப்பப்ரஸாதம் உள்ளது பூவ-த்தில்
அடைப்பிலெ பெறக்கடவொம்ஆகவும் திருவெங்கடமுடையான் இந்த
திருவொலக்கம் கண்டருளுகிறபொது இ-

12 வர் விண்ணப்பஞ் செய்த திருவெங்கட[4]மஹாத்மத்துக்கு அருளப்பாடு
இட்டு கெட்டருளக்கடவாராகவும் இப்படிக்கு [5]தம்மிட ஸந்தான-
பரம்பரை ஆசந்த்ரார்க்கவரை நடக்கக்கடவதாகவும் இப்படிக்கு ஸ்ரீ-
வைஷ்ணவர்கள் பணியால் கொயிற்கணக்கு திருநின்றவூருடையான்
எழுத்து இவை ஸ்ரீவைஷ்ணவரக்ஷை உ

### Translation

1. May there be prosperity! On the day[6] of Uttiraṭṭādi (Uttarābhādra) combined with Monday, being the 7th lunar day of the dark fortnight of the Mithuna month in the year Virōdhikṛit, corresponding with the Śaka year 1413, the *Sthānattār* of Tirumala registered the following stone record in favour of Pasiṇḍi Vēṅkaṭatturaivār alias Jiyar Rāmānujayyan, viz.,

1-3. *narpaṇam* 2000 is (the capital) which you paid this day into the *Śri-Bhaṇḍāram*, with the stipulation of propitiating, in your name, as your *ubhaiyam* (service), from the interest thereon,

Tiruvēṅkaṭamuḍaiyān with 1 *tiruppāvāḍai*, 2 *tiruvōlakkam* and 1 *tirukkaṇāmaḍai-tiruvōlakkam* on the day of repairing the path-way to the sacred water-fall (Ākāśagaṅgā), being the next day after the *Tiruvadhyayanam* of

1. Read} வகைப்படிகள்.
2. Read இலைகளும்.
3. Read இருபது பலமும்.
4. Read—மாஹாத்மியத்துக்கு.
5. Read தம்முடைய.

NOTE 6:—It corresponds to 27th June 1491 A.C.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. II - 95, Inscriptions of Saluva Narasimha's Time (From 1445 A.D. to 1504 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 195 ; T.T.D. Publications, year 1998 Reprint.

200 *palam* of jaggery and
1 *uḻakku* of pepper;

for distribution during the *tiruvōlakkam*

1 *palam* of sandal-paste,
200 areca-nuts and
400 betel-leaves.

In this manner shall the articles be supplied from the *Śrī-Bhaṇḍāram* and the offerings made.

10-11. The *prasādam, akkāḻi-prasādam*, etc., forming the share of the donor, out of the offered *prasādam* including the *tiruppāvāḍai-prasādam*, etc., and the three *tiruvōlakkam*, shall be carried to the Ākāśagaṅgā, the charges for such conveyance being paid from the *Śrī-Bhaṇḍāram*, together with vegetables and curds and 1000 areca-nuts, 2000 betel-leaves and 20 *palam* of *chandanam*, and shall be partaken of by the *Sthānattār* and all others (present there).

The *prasādam, appa-prasādam*, etc., belonging to the donor, out of the remaining 8 *appa-paḍi*, out of the 1 *tiruvōlakkam* offered to Gōvindarājan and out of the 2 *appa-paḍi* offered (to the latter deity) on the seventh festival days, you (the donor) will yourself be entitled to receive.

The remaining *prasādam, appa-prasādam*, etc., we (the *Sthānattār*) shall receive (for distribution) during the forenoon *aḍaippu*.

11-12. God Tiruvēṅkaṭamuḍaiyān will, while presiding at the said *tiruvōlakkam*, be graciously pleased to hear, after an honourable announcement made therefor, the TIRUVĒṄKAṬA-MĀHĀTMYAM[1] compiled and humbly presented by him (the donor).

In this manner shall (this arrangement) continue to be in force throughout the succession of your descendants till the lasting of the moon and the sun.

12. Thus is (this record) composed by the temple-accountant *Tiru-ninṟa-ūr-uḍaiyān*, under the orders of the Śrīvaishṇavas.

May these the Śrīvaishṇavas protect!

---

1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. II - Inscriptions of Saluva Narasimha's Time (From 1445 A.D. to 1504 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 198 ; T.T.D. Publications, year 1998 Reprint.

## INSCRIPTIONS OF SADASIVARAYA'S TIME

9 ......திருக்கைவழக்கத்துக்கு [பணம் ௬]...சங்கிறமத்துநாள் திருமஞ்ச-
னத்துக்கு......நெயி ௯ சந்தனம் பலம் க ஆ௳செய்யும் திருமஞ்சன-
படி திருப்பொனகம் க ஒ௶ஸாதிக்க அடைக்காய் ஈ இலெ உ௱
சந்தனம் ௰ [உ] களபத்துக்கு சந்தனம் பலம் [௬] மெநித்த
[சாத்துப்படி பலம் ௬]......

10 திருப்பொநகம் ரு க்கு பருப்புஅமுது......அப்பபடி உ......வடைப்படி உ
[அவல்ஆ௳ ௬ மரக்கால்] பொரி ௬ மரக்கால் தெங்காய் ஈ......

11 சக்கரைஅமுது விசை [௬] ஒ௶ஸாதிக்க சந்தனம் பலம் க அடைக்காய்-
அமுது ஈ இலெஅமுது உ௱ க்கும் பணம் உ௴ திருமுன்காணிக்கை
பணம் க சபையார் பணம் உ கைக்கொளர் பணம் க......மண்டபம்
விதானிக்க கைக்கொளர் [பணம் உ]......

12 ஹாறுக்கும்......உ௰௫ க ம்......அலகு கூடை ௫௰ க்கு பணம் [க]
திருவெங்கடமுடையான் கொவிந்தராசன் சன்னதியில் திருமஞ்சன-
காலவெளி கட்டளையில் சதாசிவராயமஹாராயற்கும் சிரங்கராஜ-
வுக்கும்

13 புண்ணியமாக பொட்டிலபாடித் திம்மராஜா கட்டளையிட்ட பணம் ௫௰......
அருளப்பாடு இட்டு திருவெங்கடமுடையான் ஸந்நிதியில் ஸெவிக்கும்
வடமாமலையன் குமாரர் வெ[ங்கடத்துறைவார்]-

14 க்கு மாதம் க க்கு சிவிதம் பணம் ௬ [ஆக ௵ க க்கு ரெகைபொன்
எ பணம் உ]......திருப்பதியில் ஸொவிந்தப்பெருமாள் சன்னதியில்
செவிக்கும்.........திருவெங்கட[யன்] குமாரன் அநந்தய்யங்கார்க்கு
[மாதம் க க்கு சிவிதம் பணம் ச]......இதுவும் திருப்பதியில் தின-
வழி திருமஞ்சனம்......

15 வரக்கடவாரகவும்......[ஆ௳செய்தருளின ஒ௶ஸாதத்தில்]......திருவெங்கட-
மஹாத்மம் செவிக்கும் [வெங்கடத்துறைவார்] பெறக்கடவாரகவும்......

16 தாகவும் அமுதுசெய்தருளின ஒ௶ஸாதத்திலும்.........பண்ணியாரத்திலும்
விட்டவன் விழுக்காடு முதலான......திருநந்தவனத்திலெ......திரு-
வெங்கட[முடையான்]......

17 பாதியும் நிற்வாகத்திலெ பாதியும் பெறக்கடவொமாகவும் தினவழி திரு-
மஞ்சனகாலவெளியில் அமுதுசெய்தருளும்......[கணக்கில்] விட்டவன்
ஹலிலொன்றும் திருவெங்கடமகாத்மம் செவிக்கும் அநந்தய்யன்
பெறக்கடவாரகவும்......நின்றது பூற்வத்தில் சந்திஅடைப்பிலெ பெறக்-
கடவொம்ஆகவும் [இப்படிக்கு]

18 [தம்பிட சந்தானபரம்பரை சந்திராதித்தவரை நடக்கக்கடவதாகவும்] இப்-
படிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பணியால் கொயில்கணக்கு திருநின்ற-
வூருடையான் எழுத்து இவை ஸ்ரீவைஷ்ணவ[ரக்ஷை உ]

77

1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 29, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 77 ; T.T.D. Publications, year 1998 Reprint.

1 paṇam for dāsanambimār (Śāttāda Śrīvaishṇavas),
6 paṇam for flowers for the decoration of the mantapam,
1 paṇam for Śippiyar (artisan)......
6 paṇam for tirukkai-vaḷakkam...... ;

1 uḷakku of gingelly oil and 1 palam of chandanam for tirumañjanam to be conducted for Śrī Gōvindarājan on the day of Makara-Saṅkramam, 1 tiruppōnakam to be offered as tirumañjana-paḍi; 100 areca-nuts, 200 betels and 1 palam of chandanam, 6 palam of chandanam for kaḷabham decoration, 6 palam of chandanam......for 5 tiruppōnakam......2 appa-paḍi ......2 vaḍai-paḍi, 6 marakkāl of flattened rice, 6 marakkāl of parched rice, 100 cocoanuts......and 6 vīsai of sugar ; 2 paṇam for 100 areca-nuts, 200 betels and 1 palam of chandanam for distribution during Āsthānam (Darbar) ; 1 paṇam for tirumunkāṇikkai, 2 paṇam for Sabhaiyār (temple-councillors), 1 paṇam for kaikkōḷar, 2 paṇam for kaikkōḷar for decorating the maṇṭapam,......and 1 paṇam for 50 baskets; 50 paṇam is the capital for conducting the daily tirumañjanam (holy bath), instituted by Poṭlapāḍi Timmarājā, for the merit of Sadāśivarāya Mahārāyar and Śrīraṅgarāja for Tiruvēṅkaṭamuḍaiyān at Tirumalai and Śrī Gōvindarājan in Tirupati ;

6 paṇam to be paid every month to Vēṅkaṭatturaivār, son of Vaḍamāmalai Ayyan for the recital of Tiruvēṅkaṭa-Māhātmyam in the divine presence of Śrī Vēṅkaṭēśa ; at this rate 7 rēkhai-pon and 2 paṇam to be paid yearly as his jīvitam (salary) from the temple-treasury ;

4 paṇam to be paid every month to Anantayyaṅgār, son of Tiruvēṅkaṭayyan......for the recital of Tiruvēṅkata-Māhātmyam in the divine presence of Śrī Gōvindarājan in Tirupati ;... ..

15–18. Out of the preparations offered......shall be delivered to Vēṅkaṭatturaivār who is engaged in reading the Tiruvēṅkaṭa-Māhātmyam..... the donor's quarter share of the prasādam and paṇyāram shall receive...... in flower garden.........Tiruvēṅkaṭamuḍaiyān......the first half of the prasādam shall be delivered to the 12 nirvāham of the Sthānattār and......the quarter share of the prasādam offered during tirumañjanam daily shall be delivered to Anantayyan who reads the above-said Māhātmyam......the balance of the prasādam shall be reserved for distribution during early aḍaippu.

In this manner this arrangement shall continue to be in force throughout the succession of your descendants till the lasting of the moon and the sun.

This record of charity is composed by the temple-accountant, Tiruninṟa-ūr-uḍaiyān under the orders of the Śrīvaishṇavas. May this the Śrīvaishṇavas protect !



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 29 Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 79 ; T.T.D. Publications, year 1998 Reprint.

திருவீதி எழுந்தருள கொடி குடை பந்தம் காளவிளக்கு பிடிக்கிற
கூலி ரெகைபொன் க எண்ணெமிடா ந க்கு ரெகைபொன் கூ ஆக
ஞள் ய க்கு ரெகைபொன் எ ஆக ஞள் ரு க்கு ரெகைபொன்
நயரு சாத்திஅருள பன்னீர்செம்பு ரு க்கு ரெகைபொன் [ரு]
தண்ணீரமுது மெதித்த கஸ்தூரி தூக்கம் க திருமுகமண்டலத்துக்கு
கற்பூரம் தூ[1] செவாதி.

9 வுதிமைக்கு[2] தெகஷிணைக்கு[3] விபரம் அனுபிராம்[4] பணம் உ அங்குரா[ர்பண]த்-
துக்கு செ[ஷ]வுதிமைக்கு பணம் ச [5]புணதீாகதெகஷிணை பணம் உ
புல்லுசமுதை பணம் ச [மயிலிறகு] பணம் ச மெத்தைக்கு பணம்
ச சற்வகெந்தம்[6] பணம் க வெண்பட்டு பச்சைவடம் க க்கு
ரெகைபொன் உ பணம் உ ஆசாரியஅலங்காரத்துக்கு பஞ்சாங்க-
பூஷணாத்துக்கு ரெகைபொன் உ பணம் உ [7]ரித்துக்கள் பெர் அ க்கு
அலங்காரத்துக்கு ரெகைபொன் எ பணம் ரு திருக்காப்புநூலுக்கு
ரெகைபொன் உ பணம் உ [8]எயாதிவுதிமை அ க்கு ரெகைபொன்
உ பணம் ச [9]வெமெவுதிமை க க்கு பணம் அ கெருடவுதிமை
க க்கு பணம் அ......

10 அரிதவுதிமை[10] க க்கு பணம் அ வருணவுதிமை அ க்கு ரெகைபொன்
க பணம் அ நவகிறகவுதிமை கூ ம் தகஷதவுதிமை க ஆக
வுதிமை ய க்கு ரெகைபொன் க பணம் [அ] ஆசாரியர் தெகஷிணை
ரெகைபொன் கூ ரித்துக்கள்[11] பெர் அ க்கு தெகஷிணை ரெகைபொன்
எ பணம் எ? [12]திற்வதெரிசநத்துக்கு [13]தொபிறுதத்துக்கு ரெகை-
பொன் உ கும்பஜபத்துக்கு பெர் ச க்கு ரெகைபொன் க பணம் உ
நெல்லு [ச வட்டிக்கு] ரெகைபொன் க பணம் உ? அமுதுபடி
[14]ரு பு க பு ரு ரெகைபொன் உ பணம் அ எள்ளு உ மரக்கா-
லுக்கு ரெகைபொன் க பணம் ரு......க க்கு பணம் ரு செலை
நயகூ க்கு ரெகைபொன் ரு பணம் ச பாகை......அடைக்காய்அமுது
சுா க்கு பணம் உ இலையமுது

11 சூஉா க்கு பணம் உ ஆக நம்பிமார் பெறும் வகை ரெகைபொன் கூயக
வெதபுராணத்துக்கு ரெகைபொன் க பணம் ரு திருவாய்மொழிக்கு

1. Read தூக்கம்= Paṇa-weight.
2. Read செஷாதிவுதிமைக்கு.
3. Read தெகஷிணைக்கு.
4. Read அநுக்ரஹம்.
5. Read புண்யாஹதெகஷிணை.
6. Read ஸர்வஸுகந்தம்.
7. Read ரித்விக்குகள்.
8. Read ஐயாதி-வுதிமை.
9. Read வெஹவுதிமை.
10. Read ஹரிதவுதிமை.
11. Read ரித்விக்குகள்.
12. Read பூர்வதெசநத்துக்கும்.
13. Read ஹோமஸ்தாநத்துக்கும்.
14. Read ஐந்துவட்டி-ஒரு-மரக்காலுக்கு.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 51, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 122 ; T.T.D. Publications, year 1998 Reprint.

பணம் ௨ திருவெங்கடமஹாத்மம்[1] படிக்கிற அநந்தயர் வெங்கடத்-
துறைவார் பணம் ௪ முகுற்தம்[2] இடுகிற யியூணி[3] அப்பனுக்கு பணம்
௧ ஆக பல்லவொற்சவதிருநாள் ௧ க்கு ஞள் ௫ க்கு செலவு
ரெகைபொன் [௬௱௯௰௨] ஆக நிற்றைப்படிக்கு[4] நாள் ௩௱௯௰௫ க்கு
ரெகைபொன் ௫௱அ ஆக சிலவு ரெகைபொன் ௲ இந்தப் பொந்
ஆயிரத்துக்கும் விட்ட நின்றைநாட்டில் சிர்மையில் பாலமங்கலம்
கிறமம் ௧ க்கு ரெகைபொன் ௫௱ பரணூர் கிறமம் ௧ க்கு ரெகை
பொன் ௨௱௫௰

12 பாளையச்சிர்மையில் வெணகத்தூர் கிறமம் ௧ க்கு ரெகை ௨௱௫௰ ஆக
கிறமம் ௩ க்கு ரெகைபொன் ௲ இந்த கிறமம் ௩ க்கு ரெகை
பொன் ௲ இது விளைந்த முதல் கொண்டு இந்த வகை எல்லாம்
ஸ்ரீபண்டாரத்திலெ விட்டுப்பொதக்கடவதாகவும் அமுதுசெய்தருளின
ப்ரஸாதம் பண்ணியாரம் விட்டவர் விழுக்காடு ஞலிலொன்றில் தம்-
பிட ஆசாரியர் கந்தாடை ஹாவஞசாரியர் குமாரர் சிங்காசாரியரெ
பெறக்கடவாகவும் நின்றது பூற்வத்தில் அடைப்பிலெ பெறக்-
கடவொ-

13 மாகவும் இப்படிக்கு தம்பிட சந்தாநபரம்பரை சந்திரஹதிதீவரை நடக்கக்-
கடவதாகவும் இப்படிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பணியால் கொயில்கணக்கு
திருநின்றவூருடையான் எழுத்து இவெ ஸ்ரீவெஷ்ணவரக்ஷை
௳ ஸ்ரீ

**Translation**

1–2. May it be prosperous, Hail! This is the śilāśāsanam issued by the Sthānattār (trustees) of Tirumalai temple in favour of Śrīman Mahā-maṇḍalēśvara Viṭṭhalēśvara Mahārāja, son of Āraviṭi Bukkarāja Rāmarāja Timmarājayyan of Ātrēya-gōtra and Āpastamba-sūtra, on Sunday,[5] combined with the star Rōhiṇī, being the 12th solar day of the dark fortnight of the Karkaṭaka (Āḍi) month in the year Visvāvasu, current with the Śālivāhana Śaka year 1467 while Śrīman Mahārājādhirāja Rājaparamēśvara Śrī Vīrapratāpa Śrī Vīra Sadāśivarāya Mahārāyar was ruling the kingdom, to wit,

2–12. since you have granted three villages, viz.,

(1) Pālamaṅgalam situated in Ninṟai-nāḍu-śirmai yielding an annual income of 500 rēkhai-pon (gold-coins),

(2) Paraṇūr yielding an annual income of 250 rēkhai-pon and

(3) Vāṇakattūr situated in Pāḷaiyam-śirmai, yielding an annual income of 250 rēkhai-pon,

---

1. Read திருவேங்கடமாஹாத்ம்யம்.
2. Read முஹூர்த்தம்.
3. Read ஈயுண்ணி.
4. Read நித்யப்படிக்கு.

NOTE 5 :—5th July 1545 A.D. is the equivalent English date.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 51, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 123 ; T.T.D. Publications, year 1998 Reprint.

(artisan), 1 paṇam for fibre, 1 paṇam for the Sabhaiyār (temple-councillors) as tirumun-kāṇikkai (cash-offering), 2 paṇam for Vaishṇavakāri, 1 paṇam for tirumaḍivaḷam, 1 paṇam for Anusandhānam, 1 paṇam for the Kaṅgāṇippān (supervisor), 6 rēkhai-pon for the 12 nirvāham of the Sthānattār, 2 rēkhai-pon and 2 paṇam for the 4½ vagai (officials), 3 paṇam for the tiruppaṇippiḷḷai (temple-repairers), 1 paṇam for Viṇṇappam-śeyvār, 7 paṇam for the Tēvaiyāḷ (temple-cooks), 7 paṇam for the Śiṅgamuṟai (fuel suppliers), 3 paṇam for potters, 1 rēkhai-pon for the bearers of flags, umbrellas and torches during the procession through the streets, 6 rēkhai-pon for 3 jars of oil for torches; at this rate 7 rēkhai-pon per day; altogether 35 rēkhai-pon for these 5 days; 5 rēkhai-pon for 5 rose-water vessels, 1 paṇa-weight of pure musk and 1 paṇa-weight of refined camphor;

the following is a list of dakshiṇā (presents) for Śēsha and other images :—

2 paṇam for blessings, 4 paṇam for Śēsha images to be worshipped on the day of aṅkurārpaṇam, 2 paṇam for puṇyāha-vāchanam, 4 paṇam for sacred grass and fuel, 4 paṇam for pecock feathers 4 paṇam for cushion, 1 paṇam for sarvagandham, 2 rēkhai-pon and 2 paṇam for silks and garlands, 2 rēkhai-pon and 2 paṇam for the pañchāṅga-bhūshaṇam, (ornaments) for the temple-priests, 7 rēkhai-pon and 5 paṇam as presents for 8 persons engaged as priests, 2 rēkhai-pon and 2 paṇam for tirukkāppu-nāṇ (thread for wrist), 2 rēkhai-pon and 4 paṇam for 8 images of Jayāti, 8 paṇam for 1 image of Brahmā, 8 paṇam for 1 image of Garuḍa,......8 paṇam for 1 image of Harita, 1 rēkhai-pon and 8 paṇam for 8 images of Varuṇa, 1 rēkhai-pon and 8 paṇam for 9 images of planates and 1 image of Star, 6 rēkhai-pon for priests as dakshiṇā, 7 rēkhai-pon and 7½ paṇam as presents for 8 Ṛitvik (high priests), 2 rēkhai-pon for dhruva-darśanam and gōpīnadam, 1 rēkhai-pon and 2 paṇam for 4 persons for the recitation of Kumbha-japam, 1 rēkhai-pon and 2½ paṇam for 4 vaṭṭi of paddy, 2 rēkhai-pon and 8 paṇam for 5 vaṭṭi and 1 marakkāl of rice, 1 rēkhai-pon and 5 paṇam for 2 marakkāl of sesame, 5 paṇam for 1......5 rēkhai-pon and 4 paṇam for 36 clothes,......for ball of thread, 2 paṇam for 600 areca-nuts and 2 paṇam for 1200 betels; altogether 61 rēkhai-pon shall be paid to the Nambimār (Archakas or temple-priests), 1 rēkhai-pon and 5 paṇam for the recitation of the Vēdas, 2 paṇam for the recitation of Tiruvāymoḷi, 4 paṇam for Anantayyan Vēṅkaṭattuṟaivār for reading the Tiruvēṅkaṭa-Māhātmyam and 1 paṇam for Yiyuṇṇi Appan for fixing the muhūrtam; thus in total 492 rēkhai-pon for the several items of expenditure (as detailed above) for conducting the Pallavōtsavam festival as your ubhaiyam; altogether 1000 rēkhai-



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 51, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 126 ; T.T.D. Publications, year 1998 Reprint.

## No. 53.

(No. 360—G. T.)

[On the west wall of the second prākāra of Śrī Gōvindarājasvāmi Temple in Tirupati.]

### Text

1 உ ஶுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமந்மஹாராஜாதிராஜ ராஜபரமேஸ்வர ஸ்ரீ-
வீரப்ரதாப ஸ்ரீவீர ஸதாசிவதேவமஹாராயர் ப்ருதுவிராஜ்யம்
பண்ணிஅருளாநின்ற ஸகாப்தம் ௲௪௱௭௰ மேல் செல்லாநின்ற
விஸ்வாவஸு ஸம்வத்ஸரத்து கற்கடகநாயற்று பூர்வபக்ஷத்து சத்த-
மியும் புதவாரமும் பெற்ற சித்திரைநக்ஷத்ரத்துநாள் திருமலையில்
ஸ்தானத்தாரோம் சதாசிவதேவமஹாராயற்கும் ராமராஜய்யனுக்கும்
புண்ணியமாக ஸ்ரீபண்டா..........ராஜயன் புத்ரர் திம்மராஜய்யனுக்கு
சிலாஸாஸநம் பண்ணிக்குடுத்தபடி தம்மிட உபயமாக......திருவெங்-
கடமுடையான் நாள்வழி அமுதுசெய்தருளும் திருப்பொனகம் ௧
[கொடைதிருநாள் உ௰ ல்] அமுதுசெய்தருளும் திருப்பொனகம் [உ௰]
......அதிரசப்படி க......அமுதுசெய்தருளும்......அழகப்பிரானார் திரு-
மஞ்சநகாலத்துக்கு திம்மராஜா

2 கட்டளையிட்ட திருவெங்கடமஹாத்ம்யம் கெட்டருளிறப்பொலெ நாள்வழி
அமுதுசெய்தருளும் பிளவு ௩௰ இலைஆடை ௱ சந்தணம் பலம் க
விளைகற்பூரம் பணவிடை உ? ராத்ரி அழ[க*]ப்பிரானார் திருப்ப[ள்*]ளி-
அறையிற் றிருமஞ்சத்துச் சுருளுக்கு பிளவு ௩௰ இலைஆடை ௱ சந்த-
ணம் பலம் க விளைக்கற்பூரம் பு வி[1] உ? ஏத்திரதகஅவசாம் அமுது-

1. Read பணவிடை=paṇa-weight.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 53, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 128 ; T.T.D. Publications, year 1998 Reprint.

produce raised thereby, the following supply of articles shall be made from the temple-store as detailed below :—

4 tiruppōnakam to be offered to Śrī Vēṅkaṭēśa daily in your name,

20 tiruppōnakam to be presented on the 20 days of Summer festival,......

1 atirasa-paḍi to be presented........50 areca-nuts, 100 betels, 1 palam of chandanam and 2½ paṇa-weight of refined-camphor to Śrī Vēṅkaṭēśa after hearing the recital of Vēṅkaṭāchala-Māhātmyam—a function instituted by Timmarājā—during Aḷagappirāṉār-tirumañjanam in Tirumalai temple every day in the morning; and 50 areca-nuts, 100 betels, 1 palam of chandanam and 2½ paṇa-weight of refined camphor to be presented at night while in bed-chamber,

1 tiruppōnakam, 50 areca-nuts, 100 betels and 2½ paṇa-weight of refined camphor to be offered to Periya-Perumāḷ (Śrī Vēṅkaṭēśa) after dadhyōdana-avasaram,

......to be presented to Achyuta-Perumāḷ enshrined in Tirupati,

......for areca-nuts and betels......

1 dadhyōdanam in the name of......5 tiruppōnakam in the name of Sabhaiyār (temple-councillors),......thus in total 1,460 daily tiruvōlakka-tiruppōnakam, 365 atirasa-paḍi, 365 palam of chandanam, 91,250 areca-nuts 1,82,500 betels, and 912½ units of refined camphor;

20 paruppuviyal (modern vaḍai-paruppu), 20 palam of chandanam, 1000 areca-nuts and 2000 betels to be offered to Tirukkoḍi-Āḷvān (Flag Garuḍa) while mounting to the top of the flag-staff during 10 Brahmōtsavam, celebrated at Tirumalai and

20 paruppuviyal, 20 palam of chandanam, 1000 areca-nuts and 200 betels to be presented to Flag-Garuḍa while descending the flag-staff, during the same Brahmōtsavam at Tirumalai;

......to be offered to Malaikuniyaninṛa-Perumāḷ and Nāchchimār ....... thus in total 18,250 areca-nuts, 36,500 betels, 912½ paṇa-weight of refined camphor;

30 nāyaka taḷigai to be offered to Śrī Vēṅkaṭēśa on the 30 days of Mārgaḷi month as Dhanurmāsa-pūjā,

4 dadhyōdana-taḷigai to be offered to Śrī Gōvindarājan daily,

1 atirasa-paḍi to be presented to Śrī Gōvindarājan during Ardha-jāmam worship,

1 iḍḍali-paḍi, 1 mōrkūn (pot of butter-milk) and 1 pañchāmṛita vaṭṭil in the name of Kṛishṇarāya Mahārāya during tiru-mañjanam,



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 53, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 134 ; T.T.D. Publications, year 1998 Reprint.

உ ரு ) திருநாள் திருமஞ்சநம் [1]நெ ஐ ஞெ சந்தனம் பலம் உ
உ ரு ) திருநாள் திருமஞ்சநம் கஸ்தூரி தூக்கம் வ கற்பூரம் தூக்கம் வ பன்னிர்-
களபம் பலம் ரு கஸ்தூரி தூக்கம் வ கற்பூரம் தூக்கம் வ பன்னிர்-
செம்பு க [2]ஓமத்துக்கு நெயி உ பாயசச்சரு க அமுதுசெய்தருளும்
திருமஞ்சநப்படி திருப்பொனகம் ச
10 தளிகை திருப்பொனகம் உய சிவிகைப்படி திருப்பொனகம் ய திருக்-
கணுமடை க அப்பபடி க சந்தனம் பலம் ரு அடைக்காயமுது
உாருய இலையமுது ருா மலைகுனியநின்றபெருமாள் ஆனைகம்பிரானிலும்
ஞச்சிமார் திருப்பல்லக்கிலும் திருவிதி எழுந்தருளி மிண்டு அமுது-
செய்தருளும் பட்டணம் தொசை பருப்புவியல் உ ஞள் ரு க்கு
திருக்கைவழக்கம் தானத்தார் நிற்வாகம் யஉ க்கு ளு ச பணம்
அ ) வகை ச ? க்கு ளு க பணம் ரு ? திருப்பதியார் திருமடி-
வளம் பணம் உ வைஷ்ணவகாரி பணம் உ சபையார் [3]மெனுயம் பணம்
க ) திருமுற்காணிக்கை ளு க பணம் ரு ஆக ளு அ பணம் க ?
நம்பிமார் திருப்பரிவட்டம் சாத்த பணம் உ அனுசந்தானம் பணம்
உ கங்காணிப்பான் பணம் உ தெவையாள் பணம் க......
11 ...[விண்ண]ப்பஞ்செய்வாங் பணம் க [4][சகஸ்ர]னுமத்துக்கு [5]திவஃராகம்
[யஉ க்கு] பணம் சு [6]திருவெங்கடமாஹாற்மம் படிக்கிற அனந்த-
[அ*]ய்யங்கார் வெங்கடத்துறைவார் பணம் க திருக்கல்லியாணத்துக்கு
திருமாமணிமண்டபம் விதானிக்கவும் கைக்கொளர் பணம் ரு சிப்பியர்
பணம் க ? ஞர்னுல் பணம் க ஞலு விதியிலும் ஞலு டமக்கம்
கொடி பிடிக்க திருப்பணிப்பிள்ளைக்கு ளு க பணம் உ கைக்கொளர்
பணம் உ சிப்பியர் பணம் க ஞர்னுல் பணம் ? ஞள் ரு க்கு
மண்டபத்துக்கு திருப்பளித்தாமத்துக்கு ரெகைப்பொன் க திருக்-
கல்லியாணம் [பொரிக்கு] பணம் ரு உஞ்சல் மண்டபத்தடி திரு-
மெழுகு சாத்தவும் [7]முக்கிடவும் பணம் க ஞச்சியார்திருமொழி
பணம் க சிங்கமுறை பணம் உ குசவற்கு பணம் க [8]மெகறைசுரு-
பம் பணம் க திருமங்கலியத்துக்கு [பெருமாளும்]ஞச்சிமாரும் உஞ்சலில்
[எழுந்தருளும்பொது]
12 தெக்ஷிணை[9] [ரெகைப்பொன் உ]......ஸ்ரீபண்டா[ரத்துக்கு] வருமலை.....
பணம் க [10]முகுற்தம் இடுகிற [11]யியுணி அப்பயனுக்கு பணம் க ஞள்
ரு க்கு பந்தம் பிடிக்கிற கூலி ரெகைப்பொன் ரு ஞள் ரு க்கு திரு-
விதிபந்தத்துக்கு [12]நெலை ரு [13]பு யரு ௳ க்கு [ரெகைப்பொன் சு]

1. Read நெல்லெண்ணை-உழக்கு-ஆழாக்கு.
2. Read ஹோமத்துக்கு.
3. Read மெனுயம்=மேல்நாயகம்.
4. Read ஸஹஸ்ரநாமத்துக்கு.
5. Read திவ்ஃராஹம்.
6. Read திருவேங்கடமாஹாத்ம்யம்.
7. Read முக்கிடவும்=கோலமிடவும்.
8. Read மேகஸ்வருபம்.
9. Read தக்ஷிணை.
10. Read முஹூர்த்தம்.
11. Read யியுணி=ஈயுண்ணி.
12. Read நெல்லெண்ணை.
13. Read ஐந்து-வட்டி-பதினைந்து மரக்-காலுக்கு.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 71, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 182 ; T.T.D. Publications, year 1998 Reprint.

rose-water vessel; 1 nāḷi of ghee and 1 pot of pāyasa-charu-prasādam for hōmam;

4 tirumañjana-paḍi tiruppōnakam, 20 taḷigai tiruppōnakam, 10 tiruchchivikai-paḍi tiruppōnakam, 1 tirukkaṇāmaḍai, and 1 appa-paḍi to be offered along with 5 palam of chandanam, 250 areca-nuts, and 500 betels for distribution; 2 palam of chandanam, 100 areca-nuts, and 200 betels to be distributed among the Sumaṅgalis (married women);

2 paṭṭaṇam-dōśai paruppuviyal-paḍi to be offered after the night-procession while Śrī Malaikuniyaninṟa-Perumāḷ on Hamsa-vāhanam and His two consorts in palanquin seated on the 4th day of the Marriage festival;

[E. List of articles for the fifth day of Marriage festival]:—

1 uḷakku and 1 āḻākku of oil and 2 palam of chandanam for tirumañjanam to be conducted on the 5th day of the festival, 5 palam of chandanam for kaḷabham decoration, ¼ paṇa-weight of musk, ¼ paṇa-weight of refined camphor and ½ rose-water vessel; 1 nāḷi of ghee and 1 pot of pāyasa-charu for hōmam;

4 tirumañjana-paḍi tiruppōnakam, 20 taḷigai-tiruppōnakam, 10 palanquin-paḍi-tiruppōnakam, 1 tirukkaṇāmaḍai, and 1 appa-paḍi to be offered along with 5 palam of chandanam, 250 areca-nuts and 500 betels;

2 paṭṭaṇam-ḍōśai paruppuviyal-paḍi to be offered after the night-procession while Śrī Malaikuniyaninṟa-Perumāḷ on Ānai-nambirān (elephant vehicle) and His two consorts in palanquin seated on the 5th day of Marriage festival;

[F. List of Sundry expenses for the Marriage festival]:—

4 rēkhai-pon and 8 paṇam to be paid to the 12 nirvāham (management) of the Sthānattār (temple trustees) and 1 rēkhai-pon and 3½ paṇam to the 4½ vagai (officials of the trustees) during these 5 days of Marriage festival, 2 paṇam for tirumaḍi-vaḷam services rendered by the residents of Tirupati, 2 paṇam for Vaishṇavakāri, 1 paṇam for Mēlnāyakam (superintendent of the Sthānattār) and 1 rēkhai-pon and 5 paṇam for tirumun-kāṇikkai (cash-offering); altogether 8 rēkhai-pon and 1½ paṇam; 2 paṇam to Nambimār (Archakas or temple priests) for Pari-vaṭṭa-samarpaṇai, 2 paṇam for Anusandhānam, 2 paṇam for Kaṅgāṇippān, 1 paṇam for Tēvaiyāḷ (temple cooks), ...... 1 paṇam for Viṇṇappam-śeyvār, 6 paṇam to the 12 nirvāham of the Sthānattār for conducted Sahasra-nāmārchanā (worship with 1000 appellations of God), 1 paṇam to Vēṅkaṭatturaivār, son of Anantayyaṅgār, engaged in reading Tiruvēṅkata-Māhātmyam, 3 paṇam for the kaikōlar (temple servants) for the decoration of Tirumāmaṇi-maṇṭapam (where the Marriage festival takes place) 1½ paṇam for Śippiyar (artisan), 1 paṇam for fibre, 1 rēkhai-



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 71, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 188 ; T.T.D. Publications, year 1998 Reprint.

அறைக்கு சந்தனம் பலம் கூ அடைக்காய்அமுது கூா இலைஅமுது கூா திருநந்தாவிளக்கு [1]நெ கூ முன்னாழிக்கு பணம் ஆறெழுக்கால் சாத்துமுறை[கள்] பெரியபெருமாள் அமுதுசெய்தருளும் திருப்பாவாடை க க்கு திருப்பொனகம் உா க்கு ரெகைபொன் யக பெரியவுயகதளிகை க க்கு ராசான்த்திருப்பொனகம் உயச க்கு ரெகைபொன் [உ பணம் ச] வகைப்படி அப்பபடி க அதிரசப்படி க வடைபடி க கொதிபடி க இட்டலி க சுகியன்படி க ஆகப்படி கூ க்கு ரெகைபொன் ச அவல்அமுது ய மரக்காலுக்கு ரெகைபொன் க பொரிஅமுது பத்து மரக்காலுக்கு பணம் எ ? பயறு க மரக்காலுக்கு பணம் க கடலை க மரக்காலுக்கு பணம் க எள்பருப்பு க மரக்காலுக்கு பணம் க மணிப்பருப்பு க மரக்காலுக்கு பணம் க மெல்படைக்க பஞ்சதாரை விசை க க்கு பணம் உ தயிர் சட்டி கூ க்கு பணம் கூ வெண்ணை க மரக்காலுக்கு பணம் ச பால்குழம்பு க மரக்காலுக்கு பணம் ச மொர்கூர் கூ க்கு பணம் கூ கறிஅமுது மெல்வெச்சம் ரெகைபொன் க பணம் ரு பாகுசெர்க்க வெல்லம் விசை கூ க்கு பணம் [கூ] பானககூர் கூ க்கு பணம் [ச ?] கரும்பு ருய க்கு பணம் க வாழைப்பழம் ருய க்கு பணம் க தெங்காயி உய க்கு பணம் க பிறவார்திக்க சஙூம் பலம் உய க்கு பணம் ச ஆூஆூ உா ம் பிளவு ா க்கும் பணம் க இலைஆூ கூா க்கு பணம் க விளெய்கற்பூரம் நூடை ? க்கு பணம் க உலகமுண்டான் திருனந்தவகவாசலில் அமுதுசெய்தருளும்

5 வடைப்படி கூ க்கு ரெகைபொன் உ பணம் க குமாரதாத்தய்யங்கார் மண்டபத்தில் அதிரஸப்படி கூ க்கு ரெகைபொன் உ பணம் ச உடையவர் சன்னதியில் இட்டலிப்படி கூ க்கு ரெகைபொன் க பணம் அ பந்தத்துக்கு நெல்லெண்ணை மிடா ச க்கு ரெகைபொன் உ பணம் அ தாகத்தார் [2]நிற்வாகம் யஉ க்கு [ரெகைபொன் உ பணம் ச] [3]ஸ்ரீவயிஷ்ணவகாரி பணம் உ [4]மெனுயம் பணம் உ நம்பிமார் பணம் உ அனுசந்தானம் பணம் உ கங்காணிப்பான் பணம் [உ] திண்ணைப்பஞ்செய்வார் பணம் க சபையார் திருச்சைக்கும் சாத்துமுறைனள் வைகுண்டவிமானத்துக்கும் ரெகைபொன் க பச்சடிக்காறன் பணம் க [5]ஸகஸ்ரனுமாற்ச்சினை பணம் கூ தெவை பணம் அ சிங்கமுறை பணம் [க] பணிமுறை பணம் க மெகறைசருபம்[6] ரெகைபொன் க கும்மாசருபம் பணம் கூ மண்டபகொத்தர் பணம் க [7]திருவெங்கடமஹாதமகன்தய[ன்*] வெங்கடத்துறைவார் பணம் உ

1. Read நெல்லெண்ணை.
2. Read நிவஹாகம்.
3. Read ஸ்ரீவைஷ்ணவகாரி.
4. Read மெனுயம்=மேல்நாயகம்.
5. Read ஸஹஸ்ரநாமார்ச்சனை.
6. Read மேகறை-ஸ்வரூபம்.
7. Read திருவேங்கடநாதாதீம்—அநந்தய்யன்.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 92, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 252 ; T.T.D. Publications, year 1998 Reprint.

(நாளது) [1]கொவுந்தராசர் பிறகெ ஸ்ரீபாஷ்யக்காறரை இரண்டு பொழுதும் எழுந்தருளப்பண்ண ஞள் யஉ க்கு ரெகைபொன் க பணம் அ திறத்தவாரிக்கு எழுந்தருளப்பண்ண பணம் உ ஆக கைக்கொளர் பெறும் ரெகைபொன் யக பணம் ங சிப்பியர் பலமண்டபத்துக்கும் விதானிக்க பணம் ரு திருத்தெர் ங க்கு ரெகைபொன் க பணம் ரு ஆக ரெகைபொன் உ தாஸநம்பிமார் தெர் ங க்கு [2]முகூடு பந்தல் பூங்கொவில் வைகுண்டவிமானம் லக்ஷ்மிதெவி மண்டபம் திறத்தவாரி விடாயாற்றி தூக்கனுக்கும் வால் சுத்தவாளுக்கும் ரெகைபொன் உ பணம் ச ம் திருப்பளித்தாமத்துக்கு தெர் ங க்கும் முத்தும்பந்தல் பூங்கொவில்

13 வைகுண்டவிமானம் திறத்தவாரி விடாயாற்றிமண்டபங்களு(க்)க்கும் பூவு-
க்கு ரெகைபொன் ரு வெடுபரி தலையாரி பணம் க வாஹனங்கள்
சொப்பன்இட [3]வன்றதளவாடத்துக்கும் ரெகைபொன் க பணம் ரு
பெட்டிலு ஸாணம் ரெகைபொன் க பணம் உ கௌர்குழி கெல்ல-
வும் சாந்து இடவும் துறக்கவும் பணம் அ தண்ணிர் வாற்க......
அகமுந்தெ......க்கு பணம் உ ஆக ரெகைபொன் உ ஞள் யஉ க்கு
உடையவர்க்கு திருப்பரிவட்டம் சாத்தவும் சிங்காசனத்தில் எறிஅருள-
பண்ணவும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு [பணம்] உ திறத்தவாரிக்கு நம்மாழ்-
வார் கொயில் சொப்பன் இட பணம் உ கொலண்டை ஸந்திக்-
கொம்பு பணம் ரு தெர் ங க்கு [4]அட்டுவெறும் வன்றதளவாடத்-
துறும் ரெகைபொன் ருய திருஞள் கணக்கு விண்ணப்பம் [5]செயிகிற
கங்காணிப்பானுக்கு பச்சைவடத்துக்கு ரெகைபொன் க பந்தம்
கொடி குடை காளவிளக்கு கூலிக்கு ரெகைபொன் எய ? [6]திரு-
வெங்கடமஹாதீர்[ம்*] அனந்தய்யங் திருவெங்கடத்துறைவங் பணம் ச
திருக்கல்யாணத்துக்கு கொவிந்தராசன் ஞச்சிமார் [7]செந்திரிக்கவி
பச்சைவடம் க ம் செலை உ க்கும் ரெகைபொன் ரு ஆக மாசி-
திருக்கொடி [8]திருஞள்ளுக்கு ரெகைபொன் கூாருய வைகாசி ஆனி
திருஞள் உ க்கு திருக்கொடிஆழ்வான் எறிஅருளும்பொது பருப்பு-
வியல் ச ம் இறங்கும்பொது பருப்புவியல் ச ஆக அ க்கு ரெகை-
பொன் க பணம் கூ திருமாளிகைவாசலில் ரு ம் திருஞள் உ க்கு
[9]இஷ்ண இட்டலிப்படி உ க்கு ரெகைபொன் க பணம் உ கூ ம்
திருஞள் அதிரஸப்படி உ ஆக திருஞள் உ க்கு திருத்தெர் அதி-
ரஸப்படி உ ம் கூ ம் திருஞள் உ க்கு திருவகன்தல் அதிரஸப்படி

1. Read கொவிந்தராஜன்.
2. Read முத்துபந்தல்.
3. Read வண்-ஆதளவாடத்துக்கும்.
4. Read அட்டுவைக்கும்.
5. Read செய்கிற.
6. Read திருவேங்கடமஹாதீர்த்தம்.
7. Read அங்கிகைகாவி—
8. Read திருஞளுக்கு.
9. Read க்ருஷ்ணன்.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 92, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 259 ; T.T.D. Publications, year 1998 Reprint.

6 palam of chandanam, 300 areca-nuts and 600 betels to be presented while seated in bed-chamber; 3 nāḻi of oil for lights to be maintained in bed-chamber; thus in all 6¾ paṇam is the cost for this function;

11 rēkhai for 1 tiruppāvāḍai-taḷigai comprising 200 tiruppōnakam taḷigai to be presented to Periya-Perumāḷ (Śrī Vēṅkaṭēśa) on the day of Śāttumuṟai of the said Pallavōtsavam; 2 rēkhai and 4 paṇam for 1 periya-nāyaka-taḷigai comprising 24 rājāna-tiruppōnaka-taḷigai, 4 rēkhai for 6 vagai-paḍi, viz., 1 appa paḍi, 1 atirasa-paḍi, 1 vaḍai-paḍi, 1 gōdhi paḍi, 1 iḍḍali-paḍi and 1 sukhiyan-paḍi; 1 rēkhai for 10 marakkāl of aval, 7½ paṇam for 10 marakkāl of pori, 1 paṇam for 1 marakkāl of green gram, 1 paṇam for 1 marakkāl of bengal gram, 1 paṇam for 1 marakkāl of sesame, 1 paṇam for 1 marakkāl of select dal, 2 paṇam for 1 vīsai of refined sugar for sprinkling, 3 paṇam for 3 pots of curds, 4 paṇam for 1 marakkāl of butter, 4 paṇam for 1 marakkāl of milk, 3 paṇam for 3 pots of butter-milk, 1 rēkhai and 5 paṇam for sundry expenses for vegetables; 3 paṇam for 3 vīsai of jaggery, 4½ paṇam for 3 pots of pānakam, 1 paṇam for 50 sugar-canes, 1 paṇam for 50 plantains, 1 paṇam for 20 cocoanuts, 4 paṇam for 20 palam of chandanam for distribution, 1 paṇam for 200 areca-nuts and 100 piḷavu (uncut-areca-nuts), 1 paṇam for 600 betels and 1 paṇam for ½ paṇa-weight of camphor;

2 rēkhai and 1 paṇam for 3 vaḍai-paḍi to be offered in front of the Ulagamuṇḍān flower-garden at Tirumalai, 2 rēkhai and 4 paṇam for 3 atirasa-paḍi while seated in the maṇṭapam of Kumāra-Tāttayyaṅgār, 1 rēkhai and 8 paṇam for 3 iḍḍali-paḍi to be offered while seated in front portion of the shrine of Śrī Rāmānujan at Tirumalai; 2 rēkhai and 8 paṇam for 4 jars of oil for torches, 2 rēkhai and 4 paṇam for 12 nirvāham of Sthānattār, 2 paṇam for Vaishṇavakāri, 2 paṇam for Mēlnāyakam, 2 paṇam for Nambimār, 2 paṇam for Anusandhānam, 2 paṇam for Kaṅgāṇippān, 1 paṇam for Viṇṇappam-officer, 1 rēkhai for Sabhaiyār for carrying the Tiruchchi-vehicle and Vaikuṇṭha-vimānam on the day of Śāttumuṟai, 1 paṇam for distributors, 3 paṇam for Sahasra-nāmārchanā, 8 paṇam for Tēvai, 6 paṇam for Siṅgamuṟai, 1 paṇam for paṇimuṟai, 1 rēkhai for mēgarai-svarūpam, 6 paṇam for kummara-svarūpam, 1 paṇam for maṇṭapakkottār, 2 paṇam for Vēṅkaṭat-tuṟaivār, son of Anantayyan for the recital of Tiruvēṅkaṭa-Māhātmyam, 2 paṇam for Iyuṇṇi Appayyan for fixing the muhūrtam, 8 paṇam for tiruppaṇippiḷḷai for cleaning the path-way and for the erection of pandal in front of the maṇṭapam, 4 paṇam for Kaikkōḷar for the decoration of the maṇṭapam, 2 paṇam for Śippiyar (artisan), 1 paṇam for fibre, 1 rēkhai and



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 92, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 264 ; T.T.D. Publications, year 1998 Reprint.

Tīrtham on the day of Tīrthavāri festival, 5 paṇam for the servants engaged in rendering the easy running of the car, 50 rēkhai for colours and other painting materials for the 3 temple cars, 1 rēkhai for garlands to be honoured the Kaṅgāṇi officer engaged in counting the accounts during Brahmōtsavam, 70½ rēkhai for the bearers of torches, flags and umbrellas, 4 paṇam to be paid to Anantayyan Vēṅkaṭatturaivān, reciting the Vēṅkaṭāchala-Māhātmyam during the said Brahmōtsavam and 5 rēkhai for silks and garlands intended for Śrī Gōvindarājan and His consorts ; altogether 6;0 rēkhai-pon is the estimated sum for Māsi-Brahmōtsavam ;

1 rēkhai and 6 paṇam for 8 paruppviyal-paḍi, viz., 4 paruppuviyal-paḍi to be offered to Tirukkoḍi-Āḷvān (Flag-Garuḍa or Garuḍāḷvān) while ascending the Flag-staff during Vaikāsi and Āni Brahmōtsavam and 4 paruppuviyal-paḍi to be presented to the same Garuḍāḷvān while decending from the Flag-staff during the said Vaikāsi and Āni-Brahmōtsavam in Tirupati ;

1 rēkhai and 2 paṇam for 2 iḍḍali-paḍi to be presented to Śrī Kṛishṇan in front of your house in Tirupati on the 5th festival days of Vaikāsi and Āni-Brahmōtsavam ;

16 rēkhai for 20 atirasa-paḍi, viz., 2 atirsa-paḍi on the 2 days of 6th festival during Vaikāsi and Āni Brahmōtsavam, 2 atirasa-paḍi on the 2 days of car festival during Vaikāsi and Āni-Brahmōtsavam, 2 atirasa-paḍi on the 2 days of Śēshavāhanam festival during the said 2 Brahmōtsavam, 1 atirasa-paḍi to be presented to Śrī Āṇḍāḷ (Śrī Gōdādēvī), enshrined in Tirupati temple on the day of car festival during Mārgaḷi Utsavam celebrated for Her, 12 atirasa-paḍi to be offered to Śrī Rāmānuja in front of your house on the 12 days of Adhyayanōtsavam, celebrated for Him and 1 atirasa-paḍi to be presented to Śrī Periya-Raghunādhan in front of the Gōpuram of the shrine of Śrī Tirumalai-Nambi while returning to His temple after the car-procession during Paṅguni Brahmōtsavam ; and

2 paṇam for 1 paruppuviyal-paḍi to be presented to Śrī Kṛishṇan while seated in the shrine of Hanūmān in the temple of Śrī Gōvindarājan on the same day of car-festival, celebrated for Āṇḍāḷ (Śrī Gōdādēvī).

14–16. Śrīnivāsayyaṅgār (the donor of this record) is hereby authorised to distribute the following offered prasādam and paṇyāram among the devotees and temple officials freely, thus :—

13 paruppuviyal-prasādam offered to Śrī Vēṅkaṭēśa and Śrī Rāmānuja in Tirumalai temple on the 13 day of the star Svāti, occuring in every year, being the monthly birth-star of Śrī Tirumalai-Nambi,



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 92, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 271 ; T.T.D. Publications, year 1998 Reprint.

தம்முடைய உபையமாக தையமாவாசை
3 [திருவேங்]கடமுடையானுக்கு தம்முடைய உபையமாக தையமாவாசை வரைக்கு மாசம் ஒன்றுக்கு
பாட்டியம்னாள் முதல் மாசிஅமாவாசை வரைக்கு மாசம் ஒன்றுக்கு
னாள் கூய க்கு திருமஞ்சனகாலவெளியில் பெரியபெருமாள் அமுது-
செய்தருளும் இட்டலிப்படி க ஆக னாள் கூய க்கு இட்டலிபடி கூய
[இந்த இட்டலி]-
4 [ப்படி] கூய க்கு பணம் ஈருய னாள் க க்கு அடைக்காயமுது[1] ா இலையமுது[2] உா
னாள் கூய க்கு காள் க க்கு சந்தனம் பலம் உ ஆக னாள் கூய
க்கு சந்தனம் பலம் கூய [க்கும்] ரெகை [உ] ஞானப்பிரான் அமுது-
செய்தருளும் னாள் கூய க்கு பருப்புவியல் கூய க்கு பணம் [யரு]
ஸ்ரீநிவாசபுராணம்
5 படிக்கிற ஃபிராம்மணனுக்கு[3] மாதம் க க்கு [ரெகை க] திருத்வாதெசி
னாள் தாலத்திலெ மலைகுனியநின்றபெருமாளும் னாச்சிமாரும் திருவீதி
எழுந்தருளி ஞானப்பிரான் சனதி முன்மண்டபத்தில் எறியருளி திரு-
மஞ்சனங் கொ-
6 ண்டருள திருமஞ்சனத்துக்கு நெல்லை[4] ரூ சந்தனம் பலம் [கூ] பால்
உரி தென் உரி தயிர் உரி சந்தனம் பலம் [ய] கஸ்தூரிக்காப்பு கற்-
பூரக்காப்பு நிராட [வஸ்த்ரம்] ரெகை உ திருமஞ்சனப்படிக்கு தத்தி-
யொதனம் [தளிகை] யஉ திருவொலக்கம் கூ [வகைபடியும்]
7 [அடைக்காயமுது ா இலையமுது உா] சந்தனம் பலம் ச க்கு [பணம் உ]
......தட்டு ா [க்கு பணம் உ] [செல்லை ா க்கு] பணம் உ அவல்
உ ப க்கு பணம் க பொரி உ ப க்கு பணம் உ தெங்காய் ருய
க்கு பணம் கூ [கரும்பு] ருய க்கு பணம் [க?] வாழைப்பழம் ா
க்கு பணம் [க?]......தொட்டப்பாய் கூ அலகுகூடை
8 ஆக இவ்வகைக்கு திருத்திற[5] கூலிக்கு [பணம் உ] தாசத்தார் [நிற்வாகம்
யஉ க்கு பணம் க] வகை ச ? க்கு பணம் ச ? திருமுன்காணிக்கை
பணம் க தெலவயாள் பணம் உ வைஷ்ணவ[கா]ரி பணம் க அனுசந்-
தானம் பணம் க
9 கங்காணிப்பான் பணம் க விண்ணப்பஞ்செய்வான் பணம் க பூவுக்கு
பணம் உ [திருப்பணிப்பிள்ளை] பணம் க சிப்பியர் பணம் க [னர்]
ஊல் [முங்கல் பணம் ?] ஆக பணம் ருா......கொடி குடை பிடிக்க
கூலிக்கு ரெகை க......ஆக [இந்த வகையெல்லாம்]
10 [தம்பிட]பொலியூட்டாக நடப்பித்து ஸ்ரீபண்டாரத்துக்கு ஒடுக்கின நற்
பணம் அஅய்டு இப்பணம் ஆயிரத்து எண்பத்தஞ்சும் திருவிடை-
யாட்ட ஃராமங்களில் எரிகால்வாயளில் இட்டு இதில் விளைந்த முதல்
கொண்டு திருவெங்கடமுடையா-

1. Read அடைக்காயமுது.
2. Read இலையமுது.
3. Read ப்ராஹ்மணனுக்கு.
4. Read நெல்லெண்ணை இருநாழி.
5. Read திருத்துகிற.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 10, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 28 ; T.T.D. Publications, year 1998 Reprint.

## INSCRIPTIONS OF SADASIVARAYA'S TIME

11 னும் ஞானப்பிரானும் [அமுதுசெய்ய] ஆக இந்த வகை எல்லாம் ஸ்ரீ-
பண்டாரத்திலெ விட்டுப்பொதக்கடவதாகவும் அமுதுசெய்தருளின
ஆராதத்தில் இட்டலிப்படி ௱௫௰ பருப்புவியல் ௰௫ அடைக்கா-
யமுது [௱] இலை ௨௱ [சுஆ] சந்தனம் பலம் [௨௰] புராணம்
கெட்கிறவற்கு சிற்வ-

12 ருக்கும் தொன்மையாக ஆராதிக்க[க்கடவதாகவும்] விட்டுப்பொதக்கடவ-
தாகவும் விட்டவன் [நிக்கி நின்ற] பருப்புவியல் பன்னிரண்டு நிற்-
வாகத்திலும் பெறக்கடவொமாகவும் நின்றது பூற்வத்திலெ பெறக்-
கடவொமாகவும்

13 [திருத்துவாதெசி படியில் விட்டவன்]......திருப்பண்ணியாரம்......பெறக்-
கடவொமாகவும் இப்படிக்கு தம்முடைய சந்தானபரம்பரை சஷூரா-
தித்தவரை நடக்கக்கடவதாகவும் இப்படிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பணியால்
கொயில்கணக்கு திருநின்றவூருடையான் எழுத்து இவை ஸ்ரீவை-

14 ஷ்ணவரக்ஷை ௳

### Translation

1-2. Hail, Prosperity! This is the śilāśāsanam issued by the Sthānattār (trustees) of Tirumalai temple in favour of Kāḷatti-Śeṭṭi, son of Peṅgāṇḍai Śeṭṭi alias Tiruvēṅkaṭamuḍaiyān of Peṇṇakka-gōtram, one of the merchants residing in Tirupati, on Monday,[1] combined with the star Uttiraṭ-ṭāḍi, being the 5th solar day of the bright fortnight of the Makara (Tai) month in the year Śōbhakṛit, current with the Śālivāhana Śaka year 1465 while Śrīman Mahārājadhirāja Rājaparamēśvara Śrī Vīrapratāpa Śrī Vīra Sadāśiva-rāya Mahārāyar was ruling the kingdom, to wit,

3-10. the money paid by you into the Śrī-Bhaṇḍāram (temple-treasury) for the following offerings to be made on the stipulated days as your ubhaiyam, is 1085 naṟ-paṇam:—

150 paṇam is the sum required for the 30 iḍḍali-paḍi to be offered to Tiruvēṅkaṭamuḍaiyān (Śrī Vēṅkaṭēśa) during tiru-mañjanam (holy both) on 30 days commencing from the first lunar day of the bright fortnight in the month of Tai and ending with the new-moon day, occurring in the month of Māśi, at the rate of 1 iḍḍali-pali per day; along with this, 100 areca-nuts, 200 betels and 2 palam of chandanam to be presented for distribution during these 30 days, for which 2 rēkhai-pon is the estimated sum;

15 paṇam for 30 paruppuviyal to be offered to Gnānappirān (Śrī Varāhasvāmi) on these 30 days,

1 rēkhai-pon for a Brāhmaṇan engaged in reading the Śrīnivāsa-purāṇam,

2 nāḻi of oil, 3 palam of chandanam, 1 uri of milk, 1 uri of honey and 1 uri of curds for tirumañjanam; 10 palam of

NOTE 1 :—31st December 1543 A.D. is the equivalent date of Christian era.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 10, Inscriptions of Sadasivarahya's Time (From 1541 A.D. to 1574 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 29 ; T.T.D. Publications, year 1998 Reprint.

## No. 144.

(No. 429—G. T.)

[On the right door-jamb wall of the entrance of Śrī Kalyāṇa Vēṅkaṭēśasvāmi Temple at Maṅgāpuram village (Near Chandragiri).]

### Text

1 స్వస్తిశ్రీ జయాభ్యుదయ శాలివాహన శకవర్షంబులు ౧౪౫౩ అగునేటి శార్వరి చైత్ర శుద్ధ

2 ౧౫లు చిత్తానక్షత్రమందు శ్రీమద్వేదమార్గ ప్రతిష్ఠాచార్య శ్రీరామానుజ సి(ం)ద్ధాంత[స్థా]పనాచార్య

3 వేదాంతాచార్య కవితార్కిక కేసరి శరణాగతవజ్రపంజరులైన శ్రీతాళ్లపాక పెదతిరుమలయ్యంగారి

4 కొమారుండు శ్రీచిన్నతిరుమలయ్యంగారు స్కందపురాణోక్తమైన శ్రీవేంకటేశమాహాత్మ్య[ము]-

5 లో విశల్యానదీతీరమందు శ్రీరంగమాహాత్మ్యంలోను దశాధ్యాయంలోను దేవళతీర్థతీరమందు

6 తమ [కైంకర్యంగాను]సర్వమాన్య అగ్రహారమైన అలమేలుమంగపురమందు జీర్ణోద్ధారణంగాను

7 శ్రీవేంకటేశ్వరులాను నాచ్చియారును అనంతగరుడవిష్వక్సేనాదు లాను............పెరు-

8 మాళ్లను ఆళ్వారులాను వుడైయవరును పూర్వాచార్యులాను .అన్నమా చార్యులైన తమ ఆచార్య



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 4, Inscriptions of Achyutaraya's Time (From 1530 A.D. to 1542 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 266 ; T.T.D. Publications, year 1998 Reprint.

9 లాను తిరుప్రతిష్ఠ చేశి ఆయాళ్వారుల సన్నిధిని ప్రొద్దుగ్రుంకి అప్పుడు
నిత్యానుసంధానాలు

10 మొదలైనది అనుసంధించి ఆచార్యపురుషులు జీయ్యరు......శ్రీవైష్ణవుల
............ప్రొ-

11 ద్దుగ్ర్రుంక్కిన అప్పుడు ఆరగింపు............ఫలం చందనకాపు సమ-

12 ర్పించి ఇది తను పుత్రపౌత్రపరంపర ఆచంద్రార్కంగాను శ్రీ............
శ్రీయతిరాజయ్య-

13 ంగారి చాతను వ్రాయించిన శిలాశాసనం [ ॥ * ]

**Translation**

1–3. Hail! Prosperity! Śrī Chinna Tirumalaiyangāru, son of Tāḷḷapāka Śrī Peda Tirumalaiyaṅgāru, entitled Śrīmad-Vēdamārga pratishṭhāchārya Śrī Rāmānuja siddhānta-sthāpanāchārya Śrī Vēdāntāchārya Kavitārkika-kēsari and Saraṇāgata-vajra-pañjara, made the following charity to be conducted as long as the moon and the sun shine, throughout the succession of his sons and grandsons, on the day of the star Chittā,[1] being the 15th lunar day of the bright fortnight in the month of Chaitram in the year Śārvari corresponding with the Śālivāhana Śaka year 1463:—

4–8. the donor reconstructed the ruined temple and reinstalled old images of Śrī Kalyāṇa Vēṅkaṭēśvarasvāmi, Nāchchiyār (Divine consort) Ananta, Garuḍa, Vishvaksēna......Perumāḷ, Āḷvārs, Uḍaiyavar (Śrī Rāmānuja), Pūrvāchāryas (Kūrattāḷvān, Śrī Vēdāntadēśika and others) Annamāchārya (his own grandfather and preceptor) at Alamēlumaṅgāpuram,—situated (in Chandragiri) on the bank of the river Vikalyā and near Devaḷatīrtam, a holy tank the sanctity of which mentioned in 'Vēṅkaṭāchala-māhātmyam' and 'Daśādhyāya' a part of Śrī Raṅgamāhātmyam,—which was granted to the Tāḷḷapakam family by the emperors of Vijayanagara as sarvamānya-agrahāra (tax free land).

9–13. With the income derived from this village Alamēlumaṅgāpuram, daily offerings in every evening in the shrine of the 12 Āḷvārs and Āchāryas, shall be made after the recital of the Āḷvār's prabandham and prasādam, nuts and chandanam shall be distributed among the Jīyars, Āchārya-purushas, Śrīvaishṇava devotees and pilgrims as his ubhaiyam.

In this manner this deed of charity is engraved by Śrī Yatirājayyaṅgār.

---

NOTE 1:—22nd March 1540 A.D. is the English equivalent date.



1. Tirumala Tirupati Devasthanams, Inscriptions Vol. V - 4, Inscriptions of Achyutaraya's Time (From 1530 A.D. to 1542 A.D.) Edited by V. Vijayaraghavacharya, page no. 266 ; T.T.D. Publications, year 1998 Reprint.

ஸ்ரீ பேடி ஆஞ்ஜநேயஸ்வாமி - திருமலை



திருமடியில் சாத்தியபடி பால ஹனுமனுடன் அஞ்ஜனாதேவி - வேங்கடாத்ரியில் ஆகாச கங்கை அருகே குகையில் - அருள்புரியும் ஸ்வாமியுடன் கருடன்



# துணை நூற்பட்டியல்

# துணைநூற்பட்டியல்

## 1. புராணங்களின் பழமையும் சான்றுகளும்

1. அக்னி புராணம், சௌகண்ட சம்ஸ்க்ருத ப்ரதிஷ்டான், தில்லி, 2014
2. கலியுக ராஜ விருத்தாந்தமு, ஸ்ரீகோட வேங்கடாசலம், விஜயவாடா, 1950
3. கருட புராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி, 1984
4. நாரதபுராணம், ராஷ்டிரிய சம்ஸ்க்ருத ஸம்ஸ்தானம், நாக் பப்ளிகேஷன்ஸ், தில்லி, 2002
5. ந்யாயதர்சனம், வாத்ஸ்யாயன பாஷ்யம், ந்யாயாசார்ய ஸ்ரீபத்மப்ரசாத சாஸ்திரி மற்றும் நியாயாசார்ய ஸ்ரீ ஹரிராம சுக்ல, ஸ்ரீ நாராயண மிஸ்ர, சௌகம்ப பப்ளிகேஷன்ஸ், வாரணாசி, 2007
6. பத்ம புராணம், ராஷ்டிரிய சம்ஸ்க்ருத சம்ஸ்தானம், நாக் பப்ளிகேஷன்ஸ், தில்லி, 1984
7. புராண விமர்ஸ், பேராசிரியர் பலதேவ உபாத்யாய, சௌகம்பா வித்யா பவன், வாரணாசி 2002
8. ப்ருஹதாரண்யகோபநிஷத்து, அனுவாத சங்கர பாஸ்யம் சமேத கீதா பிரஸ் கோரக்பூர்
9. பவிஸ்ய புராணம், சௌகம்பா சம்ஸ்க்ருத பிரதஷ்டான் தில்லி, 2017
10. பிரம்ம புராணம், சௌகம்பா சம்ஸ்க்ருத சம்ஸ்தான், தில்லி, 1997
11. மத்ஸ்ய புராணம், ஈஸ்டர்ன் புக் லிங்கர்ஸ் (ஆங்கிலம் மொழிபெயர்ப்பு) தில்லி, 2009
12. மகாபாரதம், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி 2018
13. மார்கண்டேய புராண் ஏக் சம்ஸ்க்ருதிக அத்யயன், வாசுதேவசரண் அக்ரவால், இந்துஸ்தானி அகாடமி, இலஹாபாத், 1961
14. மார்கண்டேய புராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி 2002
15. வராக புராணம், ஸ்ரீ ருஷிகேஷ் சாஸ்திரி, சௌகம்பா அமர பாரதி ப்ரகாசம், வாரணாசி, 1982
16. வாயு புராணம், சிவஜித் சிங்ஹ (வ்யாக்ய), சௌகம்பா வித்யா பவன், வாரணாசி, 2013
17. விஷ்ணு புராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி
18. விஷ்ணு தர்மோத்தர புராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி, 1985
19. சாரீரிக பாஷ்யம், சௌகம்பா கிருஷ்ணதாஸ் அகாடமி, வாரணாசி 2013
20. சிவபுராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி, 1986
21. ஸ்ரீமத்பாகவதம், சௌகம்பா சம்ஸ்க்ருத பிரதிஷ்டான், தில்லி, 2013
22. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி, 2010
23. ஸ்காந்த மகா புராணம், நாக் பப்ளிசர்ஸ், தில்லி, தொகுதி –2, 1986, தொகுதி–4, 1987, தொகுதி – 5, 1986, தொகுதி –7, 1987
24. History of Classical literature – டாக்டர் எம். கிருஷ்ணமாசார்யுலு

## 2. ஸ்ரீசங்கர பாஷ்யத்தில் புராணேதிகாச வசனங்கள்


1. அமரகோசம், அமரஸிங்ஹுடு, சௌகம்பா சம்ஸ்க்ருத பிரதிஷ்டான், தில்லி, 1985
2. ஈசானாதி நௌ உபனிசத் (சங்கர பாஷ்ய சமேதமு) (ஈசா வாஸ்ய – கேன–கட–பிரச்ன–முண்டக–மாண்டூக்ய–ஐதரேய–தைத்திரீய–ஸ்வேதாச்வேத ரோபனிஷத்துக்கள் உடையது)
3. காளிதாச க்ரந்தாவளி (மாலவிகாக்னி மித்ரம்), காளிதாசு, காசீ ஹிந்து பல்கலைக்கழகம், வாரணாசி, 1976
4. சாந்தோக்யோபனிஷத் (சங்கர பாஷ்ய சமேதமு) கீதா பிரஸ், கோரக்பூர், 1995
5. ப்ருஹதாரண்யகோபனிஷத் (சங்கர பாஷ்ய சமேதமு) கீதா பிரஸ், கோரக்பூர், 1995
6. பவிஷ்ய புராணம், வியாசமகர்ஷி, ஸ்ரீ வேங்கடேஸ்வரா ஸ்ட்ரீம் பிரஸ், மும்பாய், 2015
7. விஷ்ணு புராணம், வியாச மகர்ஷி, மகர்ஷி யூனிவர்சிடி ஆப் மேனேஜ்மெண்ட், வேதிக் லிடரேசர் கலெக்சன் (http://vedicreserve.miu.edu/upapurana/vishnudharma-Purana.pdf)
8. வாயு புராணம், வியாச மகர்ஷி, நாக் பப்ளிசர்ஸ், தில்லி
9. ஸ்ரீ கருட மகா புராணம், வியாச மகர்ஷி, சௌகம்பா சம்ஸ்க்ருத சம்ஸ்தான், வாரணாசி, 1998
10. ஸ்ரீ பிரம்மாண்ட மகாபுராணம், வியாச மகர்ஷி, மோதிலால் பனாரசிதாஸ், தில்லி, 1973
11. ஸ்ரீ மத்பாகவத மகா புராணம், வியாச மகர்ஷி, கீதா பிரஸ் கோரக்பூர்
12. ஸ்ரீ லிங்க மகா புராணம், வியாச மகர்ஷி, நாக் பப்ளிசர்ஸ், தில்லி
13. ஸ்ரீ விஷ்ணு மகாபுராணம், வியாச மகர்ஷி, நாக் பப்ளிசர்ஸ், தில்லி
14. சுபாஷிதத்ரிசதி, பத்ருஹரி, நிர்ணயசாகர் பிரஸ், மொம்பாய், 1957
15. ஹரிவம்சம் , வியாச மகர்ஷி, கீதா பிரஸ், கோரக்பூர்
16. The Mahabharata (Critically Edited) - Vishnu S. Suktankar and S.K. Balvalkar - Bhandarkar Oriental Research institute - Poona 1961


## 3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - சான்றுகள்


1. ஸ்ரீமத்பாகவத மகாபுராணம், வியாச மகர்ஷி, சௌகம்பா சம்ஸ்க்ருத பிரதிஷ்டான், தில்லி, 2013
2. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (முதல் பாகம்) திருமலை திருப்பதி வேதஸ்தானம், திருப்பதி, 1959
3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்), திருமலை திருப்பதி வேதஸ்தானம், திருப்பதி, 1961
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (நான்காம் பாகம்), வித்வான் தெ. கம். கோபாலாசார்யா ஸ்வாமி (ஆய்வு), டி.வி. சூடாமணி (தெலுங்கு மொழிபெயர்ப்பு) ஜீயர் எஜுகேஷனல் டிரஸ்ட், சீதா நகரம், 2007

5. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, அனந்தாழ்வான், என்.சி.வி. நரசிம்மாசார்யா (தெலுங்கு மொழிபெயர்ப்பு) திருமலை திருப்பதி வேதஸ்தானம், திருப்பதி, 2012
6. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, அனந்தாழ்வான், என்.சி.வி. நரசிம்மாசார்யா (மொழிபெயர்ப்பு) , திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி, 2009
7. சாத்த்வதஸம்ஹிதை, வ்ரஜவல்லப த்விவேதி, சம்பூர்ணாணந்த சம்ஸ்க்ருத பல்கலைக் கழகம், வாரணாசி, 1982


## 4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - மேலும் சில தகவல்கள்


1. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (முதல் பாகம்) திருமலை திருப்பதி வேதஸ்தானம், திருப்பதி, 1959
2. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்), திருமலை திருப்பதி வேதஸ்தானம், திருப்பதி, 1961
3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (நான்காம் பாகம்), வித்வான் தெ. கம். கோபாலாசார்யா ஸ்வாமி (ஆய்வு), டி.வி. சூடாமணி (தெலுங்கு மொழிபெயர்ப்பு) ஜீயர் எஜுகேஷனல் டிரஸ்ட், சீதா நகரம், 2007
4. ஸ்ரீவேங்கடேஸ்வரா வைபவம் – ஜாதிய சதஸ்ஸு (பரிசோதன பத்ர சங்கலனம்), பி.எஸ். ரெட்டி (ஸம்), தி.தி.தே. வெளியீடு, 2007
5. பிராசீனாந்ரசாகித்யம்லோ ஸ்ரீவேங்கடேஸ்வருடு, டாக். கெ.வி. ராகவாசார்யா, தி.தி.தே. வெளியீடு, 2019
6. Tirumala Tirupati Devasthanams inscriptions (Volumes 2,4,5), V. Vijayaraghavacharya (Ed) T.T.D., Tirupati, 1998


## 5. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை - ஸ்ரீ வேங்கடேஸ்வர தத்துவம்


1. ருக்வேதம், (தசம மண்டலம் உத்தரார்த்தம்) லோக பாரதி, இலஹாபாத், 2017
2. திருவாய்மொழி, நம்மாழ்வார், ஸ்ரீ சிங்கம் செட்டி–யதீந்த்ருலு செட்டி சாரிடீஸ், மிண்ட் தெரு, சென்னை, 2011
3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (முதல் பாகம்) தி.தி.தே., திருப்பதி, 1959
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்) தி.தி.தே., திருப்பதி, 1961
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (நான்காம் பாகம்), வித்வான் தெ. கம். கோபாலாசார்யா ஸ்வாமி (ஆய்வு), டி.வி. சூடாமணி (தெலுங்கு மொழிபெயர்ப்பு) ஜீயர் எஜுகேஷனல் டிரஸ்ட், சீதா நகரம், 2007

6. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, அனந்தாழ்வான், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி, 2009
7. ஸ்ரீவேங்கடாசல இதிஹாசமாலை, அனந்தாழ்வான், என். சி.வி. நரசிம்மாசார்யா (மொழிபெயர்ப்பு) தி.தி.தே., திருப்பதி, 2012
8. சாத்த்வதசம்ஹித, வ்ரஜவல்லப த்விவேதி, சம்பூர்ணாணந்த சம்ஸ்க்ருத பல்கலைக் கழகம், வாரணாசி, 1982

## 6. புராணச் சான்றுகள்

1. அலங்கார மணிஹார:, ஸ்ரீகிருஷ்ணப்ரம்மதந்த்ர பரகால சம்யமீந்த்ர, எல். ஸ்ரீநிவாசாசார்யா (ஸம்), அரசு கீழ்த்திசை நூலகம், மைசூர், 1917
2. பிரம்மாண்ட மஹாபுராணம் (பூர்வார்தம்) சௌகாம்பா சம்ஸ்க்ருத சீரிஸ், வாரணாசி, 2016
3. ஸ்ரீமத்ராமாயணம் (உத்தரகாண்டம்) வால்மீகி மகர்ஷி, சமுத்ரால லஷ்மணய்யா (பரிஷ்கர்தா), தி.தி.தே. திருப்பதி, 2016
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (முதல் பாகம்) தி.தி.தே. திருப்பதி, 1959
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்) தி.தி.தே. திருப்பதி, 1961
6. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (நான்காம் பாகம்), வித்வான் தெ. கம். கோபாலாசார்யா ஸ்வாமி (ஆய்வு), டி.வி. சூடாமணி (தெலுங்கு மொழிபெயர்ப்பு) ஜீயர் எஜுகேஷனல் டிரஸ்ட், சீதா நகரம், 2007
7. ஸ்ரீவேங்கடேஸ்வர வைபவம், பண்டித வேதாந்தம் ஜகன்னாதாசார்யுலு, தி.தி.தே. திருப்பதி, 1999
8. ஸ்ரீநிவாசவைபவம், ஜுலகண்டி பாலசுப்ரமணியம் தி.தி.தே., திருப்பதி, 2005
9. ஸ்கந்த் புராணம், இரண்டாம் பாகம் (வைஷ்ணவ கண்டம்) வியாச மகர்ஷி, நாக் பப்ளிகேஷன்ஸ், தில்லி.
10. ஸ்காந்த புராணம், இரண்டாம் பாகம் (வைஷ்ணவ காண்டம்) வியாச மகர்ஷி, சௌகாம்பா சம்ஸ்க்ருத சீரிஸ், வாரணாசி

## 7. ஹனுமனின் அவதாரத்தலம் திருமலை

### (புவியியல் ஆதாரங்களுடன்)

1. காம சூத்ரம், வாத்ஸ்யாயனர், ஜயமங்கள வ்யாக்ய, சௌகம்பா சம்ஸ்க்ருத பவன், வாரணாசி, 2003.
2. காவ்யமீமாம்சை, ராஜசேகரன். சி.டி. தலால், பண்டிட் ஆர். ஏ.சாஸ்திரி(ஸம்), ஓரியண்டல் இன்ஸ்டிடூட், பரோடா, 1934.

3. ப்ரஹத்ஸம்ஹிதை, வராக மிஹிரர், பேராசிரியர் ராமகிருஷ்ணா பட்(ஸம்), மோதிலால் பெனார்சீதாஸ், தில்லி, 1991
4. மார்கண்டேய புராணம், வியாச மகர்ஷி, ஜோஷி. கெ. எல் சாஸ்திரி(ஸம்), பரிமள் பப்ளிகேஷன்ஸ்,தில்லி, 2009
5. ரகும்சம், காளிதாசு, நாராயண ராம ஆசார்யா (ஸம்), நிர்ணயசாகர் அச்சகம், பாம்பே, 1948
6. ஸ்ரீமத் பாகவத மகாபுராணம், வியாச மகர்ஷி, சௌகம்பா சம்ஸ்க்ருத பிரதிஷ்டான், தில்லி, 2013
7. ஸ்ரீவேங்கடேஸ்வர மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்), ஸ்ரீவேங்கடேஸ்வர ப்ராச்யபரிசோதன சமஸ்த, திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, 2006
8. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், ஆகுலமன்னாடு பண்டித ஆர். பார்த்தசாரதி பட்டாசார்யர் (தெலுங்கு மொழிபெயர்ப்பு), தி.தி.தே., திருப்பதி, 2008
9. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், இந்தி மொழிபெயர்ப்பு (இரண்டு பாகம்), ஸ்ரீ அனந்த கிருஷ்ண ஸ்ரீ சாஸ்திரி, கேசரிகாந்த் ஜி. சர்மா, பண்டித ஸ்ரீ லஷ்மிதர் ஜி பாடக் (ஸம்), ஸ்ரீ ஸ்வாமி மஹந்த் ப்ரயாகதாஸ் ஜி. 1929

## 8. ஏழுமலைகள் - அஞ்ஜனாத்ரி - ஓர் தொல்பொருள் ஆய்வு

1. Ananda Gruge: The Society of the Ramayana, Abhinav Publications, New Delhi, 1991
2. Chatterji, Suniti Kumar, The Ramayana, Its Character, Genesis, History Expansion And Exodus; A Resume, Prajna, Calcutta, 1978
3. Subasri, R. (Chennai) The Art of Administration as depicted in Valmiki Ramayana, Proceedings of the 20th International Conference on Ramayana, 22nd - 24th August, 2004, Tirupati.
4. Srimad Valmiki Ramayayan - A Critical edition with the Commentary of Sri Govindaraja edited by T.R. Krishnamacharya of Kumbakonam
5. "Srimad Valmiki Ramayana" by Maharshi Valmiki, Gita Press, Gorakhpur - Eight Edition 2012
6. The Tirumala Temple by N. Ramesan. Tirumala Tirupati Devasthanams, 1981, Retrieved 20 September 2009
7. Sadhu Subrahmanya Sastri, Tirupati Sri Venkateswara, T.T.D Religious Publication Series no. 107. 2014
8. Proceedings of Sri Venkateswara Vaibhavam - Jatiya Sadassu Parisodana Patra Sankalanam Tirumala Tirupati Devasthanams, 2007
9. International Journal of Engineering Applied Sciences and Technology, 2020 Vol.4, Issue 11, ISSN NO. 2455-2143

10. Golden Research Thoughts ISSN 2231-5063, Volume-4 Issue-10, April-2015
11. Proceedings of the A.P. History Congress, 19th Session, Anantapur
12. Sri Venkatachala Mahatyam, R. Partha Saradhi Bhattacharya, T.T.D., Tirupati, 2012
13. History of Tirupati - The Tiruvengadam Temple (Vol.3), T.K.T. Viraraghava Acharya, T.T.D., Tirupati, 2014
14. Proceedings of Srikantaya Centenary Seminar Early Vizhayanagara Studies in its History and Culture Published by Bm Sri Smaraka pratistana
15. International Journal of Scientific and Research Publication, Volume 9, Issue 4, April. 2019 ISSN 2250-3153

## 9. திருவேங்கடமுடையான் பக்தி இலக்கிய படைப்பில் அஞ்ஜனாத்ரி

1. தாள்ளபாக்க பதஸாகித்யம் தி.தி.தே. வெளியீடு, 1998
2. தாசகீர்த்தனலு, ஸ்ரீபாவஞ்சி குருராவு, மத்வசித்தாந்த கிரந்தாலயம், உடுபி
3. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் – ஸ்ரீ தே. கம். கோபாலாசார்ய ஸ்வாமி, திரிதண்டி ஸ்ரீமந்நாராயண ஸ்வாமி டிரஸ்ட் வெளியீடு, 1972
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (முதல் பாகம்) தி.தி.தே. திருப்பதி, 1959
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் (இரண்டாம் பாகம்) தி.தி.தே. திருப்பதி, 1961
6. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா, தி.தி.தே. திருப்பதி, 2004

## 10. இலக்கிய ஆதாரங்கள்

1. கம்பராமாயணம், வை.மு. கோபாலகிருஷ்ணமாசார்யா, உமா பப்ளிகேஷன்ஸ், 1952
2. தயா சதகமு, வேதாந்ததேசிகலு, தி.தி.தே. 2016
3. ப்ரசீனாந்த்ர ஸாகித்யமுலோ ஸ்ரீவேங்கடேஸ்வருடு, டாக்டர், கே.வி. ராகவாசார்யா, தி.தி.தே. 2019
4. வாணி விலாச வனமாலிக, டேகுமல்ல ரங்கசாயி, பிரபுத்துவ ப்ராச்யலிகித க்ரந்தாலயம், மத்ராஸு 1953.
5. வேங்கடாத்ரி (திருமலை) க்ஷேத்ர வைபவம், டாக்டர். கே.வி. ராகவாசார்ய, திருவேங்கடவன் வேதப்பல்கலைக்கழகம், திருப்பதி, 2008.
6. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா, தி.தி.தே. திருப்பதி, 2004
7. ஸ்ரீவேங்கடேஸ்வர வைபவம் – ஜாதிய சதஸ்ஸு, பி.எஸ். ரெட்டி (ஸம்), தி.தி.தே. திருப்பதி, 2007
8. ஹம்ஸ தூதமு, வாமன பட்டபாண, ஜிதேந்த்ர பீமால் சௌதரி, 1941
9. ஹம்சஸந்தேச:, வேதாந்ததேசிகலு, சௌகம்பா கிருஷ்ணதாச அகாதமி, வாரணாசி, 2004

10. Epigraphia Indica, Vol. VI, Archelogical Survey of India, 1901

11. Tirumala Tirupati Devasthanams Inscriptions, Vol. 11 Inscriptions of Salva Narashimha's time, V. Vijayaragavacharya (Ed), Tirumala Tirupati Devasthanams, Tirupati, 1998

12. Tirumala Tirupati Devasthanams Inscriptions, Vol.1, Early Inscriptions, V. Vijayaraghavacharya (Ed), Tirumala Tirupati Devasthanams, Tirupati, 1998

## 11. வைணவ இலக்கியங்களில் திருமலை - அஞ்ஜனாத்ரி

1. ஆழ்வார்களின் மங்களாசாசன பாசுரங்கள், ஸ்ரீமான் டி.கே.வி.என். சுதர்சனாசார்ய ஸ்வாமி, தி.தி.தே. வெளியீடு, 1956
2. ஸ்ரீவேங்கடேச திவ்ய ஸாஹிதீ, டாக்டர். சிங்கராசார்யுலு, தி.தி.தே. வெளியீடு, 2008
3. ஸ்ரீமத்பாகவதம், கீதாபிரஸ், கோரஹ்பூர், 2006
4. நாலாயிர திவ்யப் பிரபந்தம், கிரி டிரேடர்ஸ், சென்னை, 2017
5. ஸ்ரீபாஸ்யம், ஸ்ரீ உ.வே. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி செஞ்சுரி டிரஸ்ட், சென்னை, 2002
6. ஹம்ச ஸந்தேசம், ஸ்ரீ உ.வே. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி செஞ்சுரி டிரஸ்ட், சென்னை, 2002
7. விஷ்வ குணா தர்சசம்பூ, வேங்கடாத்ரி, சௌகம்பா சுரபாரதீ பிரகாசனம், புது தில்லி, 1992
8. தயாசதகம், கோளியாலம் சடகோபாசார்ய ஸ்வாமி, தி.தி.தே. திருப்பதி, 2016
9. கடோபநிஷத், ஸ்ரீ உ.வே. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி செஞ்சுரி டிரஸ்ட், சென்னை, 2002

## 12. ஏழுமலைகளில் அஞ்ஜனாத்ரியின் முக்கியத்துவம்

1. வைர விழா மலர், தி.தி.தே. , 2008
2. ஸ்ரீவேங்கடேச காவ்யகலாப:, தேசிக திருமலை தாதாசார்ய, தி.தி.தே. திருப்பதி–1943
3. ஸ்ரீநிவாச பக்த விஜயமு, ரொம்பிசர்ல பார்த்தசாரதி பட்டாசார்யுலு தி.தி.தே. திருப்பதி, 1957–1958, புல்லடின்
4. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா, தி.தி.தே. திருப்பதி, 2004
5. தாள்ளபாக்க பதசாகித்யம், (இரண்டாம் தொகுதி), தி.தி.தே. திருப்பதி, 1998
6. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், தி.தி.தே. திருப்பதி, 2006
7. ஸ்ரீமத்பகவதர்சாப்ரகரணம், ஸ்ரீமான் ந்ருஸிம்ஹவாஜ பேயயாஜி, துவாரகா திருமலை தேவஸ்தானம் வெளயீடு

## 14. ஸ்ரீ ஆஞ்ஜநேயர் சரித்திரத்தில் சில மிக முக்கியமான திருத்தலங்கள்


1. ஸ்ரீமந் மகரிஷி – வேதவ்யாச ப்ரனித, மஹாபாரதம், வேதவியாச மகரிஷி, கீதா பிரஸ், கோரக்பூர் 1978.
2. ஸ்ரீமந் மகரிஷி வால்மீகிப்ரனித ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம், வால்மீகி மகரிஷி, கீதா பிரஸ், கோரக்பூர் 1978.
3. சித்தாந்த சிரோமணி, பாஷ்யகாராசார்ய, பண்டிட் முரளிதர்ஸ, இ. ஜே. லாஜரஸ் அண்ட் கம்பெனி, மெடிகல் ஹால் பிரஸ், பெனர் காண்ட், 1917.
4. ஸூக்தி சுதாகர், கீதா பிரஸ், கோரக்பூர், 1978.
5. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம், தி.தி.தே. வெளியீடு.
6. சங்க்சிப்த ஸ்கந்த புராண, வியாச மகரிஷி, கீதா பிரஸ், கோரக்பூர், 1972
7. பிரம்மாண்ட புராணம், வியாசமகரிஷி, கீதா பிரஸ், கோரக்பூர், 1978


******

## ஸ்ரீஹனுமனுக்கு ஸ்ரீ சீதாராம தரிசனம்



# நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள்



ஆகாசகங்கை அருகே அஞ்ஜனாதேவிக்கும் பால ஹனுமனுக்கும் ஆலயத்தில் பாலாபிஷேகம்



பாலாபிஷேகத்தில் உள்ள பாலஹனுமனை ஸ்தோத்திரம் செய்யும் அர்ச்சக ஸ்வாமிகள்



ஆகாசகங்கை அருகே உள்ள அஞ்ஜனாதேவி ஸமேத பாலஹனுமன் ஆலயத்திற்கு வருகைப் புரிந்த புஷ்பகிரி பீடாதிபதி



"ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி அவதாரத்தலம் - திருமலை" தேசிய வெபினாரில் சிறப்பு விருந்தினராக தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள்



“ஸ்ரீ ஆஞ்ஜனேயஸ்வாமி அவதாரத்தலம் - திருமலை” தேசிய வெபினார் துவக்க விழா பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர். கே.எஸ். ஜவஹர் ரெட்டி அவர்கள்



தேசிய வெபினாரினை துவக்கி வைக்கும் பேராசிரியர் வி.முரளீதர ஸர்மா அவர்கள், துணைவேந்தர் ராஷ்டீரீய சமஸ்க்ருத பல்கலைக்கழகம், திருப்பதி மற்றும் பண்டித பரிஷத் உறுப்பினர்கள்



21.04.2021 ஸ்ரீராமநவமி அன்று திருமலையில் நாத நீராஜன அரங்கில் அன்றைய மேதகு தமிழக ஆளுனர் பன்வாரிலால்புரோஹித் அவர்கள் முன்னிலையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் அதிகாரிகள் மற்றும் பண்டிதர்கள்



21.04.2021 ஸ்ரீராமநவமி அன்று நாத நீராஜன மேடையில் "ஸ்ரீஆஞ்ஜனேயஸ்வாமி அவதாரத்தலம் - திருமலை" என்பதற்கான முதல் அறிக்கையை வெளியிட்டபோது



21.04.2021 ஸ்ரீராமநவமி அன்று அஞ்ஜனாத்ரி ஹனுமனின் அவதாரத்தலமாக ஆதாரங்களுடன் விவரிக்கும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர். கே.எஸ். ஜவஹர் ரெட்டி அவர்கள்



இரண்டு நாட்கள் ராஷ்டீரீய வெபினாருக்குப் பிறகு திருப்பதியில் ராஷ்டீரீய பல்கலைக்கழகத்தில் நடைப்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றும் துணைவேந்தர் பேராசிரியர் வி. முரளிதர ஸர்மா அவர்கள்



ஸ்ரீ கோதண்டராமஸ்வாமியுடன்
ஸ்ரீராமபக்த ஹனுமன், திருமலை

## ஸ்ரீஆஞ்சநேய அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் ஆஞ்சநேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் அனுமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் தத்வஜ்ஞாநப்ரதாய நம:
ஓம் சீதாதேவீமுத்ராப்ரதாயகாய நம:
ஓம் அசோகவநிகாசேத்ரே நம:
ஓம் சர்வமாயாவிபஞ்ஜநாய நம:
ஓம் சர்வபந்தவிமோக்த்ரே நம:
ஓம் ரக்ஷோவித்யம்சகாரகாய நம: (10)

ஓம் பரவித்யாபரீஹாராய நம:
ஓம் பரசௌர்யவிநாசநாய நம:
ஓம் பரமந்த்ர நிராகர்த்ரே நம:
ஓம் பரயந்த்ர ப்ரபேதகாய நம:
ஓம் சர்வ க்ரஹவிநாசினே நம:
ஓம் பீம சேன ஸஹாயக்ருதே நம:
ஓம் சர்வ து:கஹராய நம:
ஓம் சர்வ லோகசாரிணே நம:
ஓம் மனோஜவாய நம:
ஓம் பாரிஜ்தாத்ருமூலஸ்தாய நம: (20)

ஓம் சர்வ மந்த்ரஸ்வரூபவதே நம:
ஓம் சர்வ தந்த்ர ஸ்வரூபிணே நம:
ஓம் சர்வ யந்த்ராத்மகாய நம:
ஓம் கபீஸ்வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் சர்வ ரோகஹராய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பலசித்திகராய நம:
ஓம் சர்வ வித்யாஸம்பத்ரபதாயகாய நம:
ஓம் கபிஸேநாநாயகாய நம: (30)

ஓம் பவிஷ்யச்சதுராநநாய நம:
ஓம் குமாரப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ரத்னகுண்டல தீப்திமதே நம:
ஓம் சஞ்சலத்வாலஸந்நத்தலம்ப மான
சிபோஜ்வலாய நம:
ஓம் கந்தர்வவித்யாதத்வஜ்ஞாய நம:
ஓம் மஹாபலபராக்ரமாய நம:
ஓம் காராக்ருஹவிமோக்த்ரே நம:
ஓம் ச்ருங்கலாபந்தமோசகாய நம:
ஓம் ஸாகரோத்தாரகாய நம:
ஓம் ப்ராஜ்ஞாய நம: (40)

ஓம் ராமதுதாய நம:
ஓம் ப்ரதாபவதே நம:
ஓம் வானராய நம:
ஓம் கேசரிசுதாய நம:
ஓம் சீதா சோக நிவாரணாய நம:
ஓம் அஞ்சனாகர்பஸம்பூதாய நம:
ஓம் பாலார்க்ஸத்ருசாநநாய நம:
ஓம் விபீஷண ப்ரியகராய நம:
ஓம் தசக்ரீவகுலாந்தகாய நம:
ஓம் லக்ஷ்மணப்ராணதாத்ரே நம: (50)

ஓம் வஜ்ரகாயாய நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் சிரஞ்சீவிணே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் தைத்யகார்ய விகாதகாய நம:
ஓம் அக்ஷஹந்த்ரே நம:
ஓம் காஞ்சநாபாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் மஹாதபசே நம:
ஓம் லங்கிணி பஞ்ஜநாய நம: (60)

## ஸ்ரீஆஞ்சநேய அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் சிம்ஹிகாப்ராணபஞ்ஜநாய நம:
ஓம் கந்தமாதநசைலஸ்தாய நம:
ஓம் லங்காபுர விதாஹகாய நம:
ஓம் சுக்ரீவசசிவாய நம:
ஓம் தீராய நம:
ஓம் சூராய நம:
ஓம் தைத்யகுலாந்தகாய நம:
ஓம் சுரார்சிதாய நம:
ஓம் மஹாதேஜசே நம: (70)

ஓம் ராமசூடாமணிப்ரதாய நம:
ஓம் காமரூபாய நம:
ஓம் பிங்களாக்ஷாய நம:
ஓம் வார்திமைனாகபூஜிதாய நம:
ஓம் கபளீக்ருதமார்தாண்டமண்டலாய நம:
ஓம் விஜிதேந்த்ரியாய நம:
ஓம் ராமசுக்ரீவஸந்தாத்ரே நம:
ஓம் மஹாராவண மர்தநாய நம:
ஓம் ஸ்படிகாபாய நம:
ஓம் வாகதீசாய நம: (80)

ஓம் நவவ்யக்ருதி பண்டிதாய நம:
ஓம் சதுர்பாஹவே நம:
ஓம் தீனபந்தவே நம:
ஓம் மஹாத்மனே நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் சஞ்சீவனநகாஹர்த்ரே நம:
ஓம் சுசயே நம:
ஓம் வாக்மினே நம:
ஓம் த்ருடவ்ருதாய நம:
ஓம் காலநேமிப்ரமதநாய நம: (90)

ஓம் ஹரிமர்கட மர்கடாய நம:
ஓம் தாந்தாய நம:
ஓம் சாந்தாய நம:
ஓம் ப்ரசந்நத்மனே நம:
ஓம் சதகண்டமதாபஹ்ருதே நம:
ஓம் யோகினே நம:
ஓம் ராமகதாலோலாய நம:
ஓம் சீதாந்வேஷணபண்டிதாய நம:
ஓம் வஜ்ரதந்ட்ஷ்ராய நம:
ஓம் வஜ்ரநகாய நம: (100)

ஓம் ருத்ரவீர்ய ஸமுத்பவாய நம:
ஓம் இந்த்ரஜிதப்ரஹிதாமோக
ப்ரஹ்மாஸ்த்ர நிவாரகாய நம:
ஓம் பார்த்த த்வஜாக்ர
ஸம்வாசினே நம:
ஓம் சரபஞ்ஜரபேதகாய நம:
ஓம் தசபாஹவே நம:
ஓம் லோக பூஜ்யாய நம:
ஓம் ஜாம்பவத்ப்ரீதி வர்தநாய நம:
ஓம் சீதா சமேத ஸ்ரீராமபாதசேவா
துரந்தராயன நம: (108)



ஸ்ரீஆஞ்சநேய அஷ்டோத்ர சதநாமாவளி சமாப்த:

விலை மதிப்பற்றது




Published by Sri A.V. Dharma Reddy, I.D.E.S., Executive Officer,
Tirumala Tirupati Devasthanams, Tirupati and Printed at T.T.D. Press, Tirupati.
Website : www.tirumala.org